# பகுதி II

# பகுதி II

## இலங்கை மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்

பக்கம்


| | |
|---|---|
| 1. கணக்குகளும் நிதியும் | 1 |
| 2. வங்கி மேற்பார்வை | 59 |
| 3. வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம் | 61 |
| 4. தொடர்பூட்டல் | 62 |
| 5. நாணயம் | 63 |
| 6. திணைக்கள மட்டத்திலான பிரதேச அலுவலகங்கள் | 65 |
| 7. உள்நாட்டுத் தொழிற்பாடுகள் | 66 |
| 8. பொருளாதார ஆராய்ச்சி | 70 |
| 9. ஊழியர் சேம நிதியம் | 73 |
| 10. செலாவணிக் கட்டுப்பாடு | 78 |
| 11. வசதிகள் முகாமைத்துவம் | 79 |
| 12. நிதித் திணைக்களம் | 79 |
| 13. நிதியியல் உளவறிதல் பிரிவு | 81 |
| 14. நிதியியல் துறை ஆராய்ச்சி | 82 |
| 15. மனித வளங்கள் | 83 |
| 16. தகவல் தொழில்நுட்பம் | 88 |
| 17. உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம் | 89 |
| 18. பன்னாட்டுத் தொழிற்பாடுகள் | 90 |
| 19. சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களம் | 93 |
| 20. கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் | 93 |
| 21. கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்பு | 95 |
| 22. பொதுப்படுகடன் | 96 |
| 23. பிரதேச அபிவிருத்தி | 98 |
| 24. இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் | 102 |
| 25. செயலகம் | 106 |
| 26. பாதுகாப்புப் பணிகள் | 106 |
| 27. அலுவலர் பணிகள் முகாமைத்துவம் | 107 |
| 28. புள்ளிவிபரவியல் | 108 |
| 29. நுண்பாக நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் | 111 |
| 30. வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை | 112 |
| 31. பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களம் | 115 |

1. கணக்குகளும் நிதியும்

# இலங்கை மத்திய வங்கி

### முகாமைத்துவக் கூற்று

### 2015 திசெம்பர் 31இல் முடிவடைந்த காலப்பகுதிக்குரியது

### இலங்கை மத்திய வங்கியின் குறிக்கோள்களுடன் தொடர்பான பொறுப்புடைமையும் நிதிச் செயலாற்றமும்

இலங்கை மத்திய வங்கியானது இலங்கையின் நாணய, நிதி மற்றும் கொடுப்பனவு முறைமையின் நிர்வாகம், கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டிற்கு பொறுப்பான நிறுவனமாக நாணய விதிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டது. இச் சட்டத்திற்கிணங்க, வங்கியானது பிரதானமான குறிக்கோள்களான பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டையும் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டையும் பேணுகின்ற பொறுப்பை ஏற்றுள்ளது.

ஆதலால், மத்திய வங்கி மற்றும் அதன் தொழிற்பாடுகளின் வெற்றிகரத் தன்மைக்கான பொறுப்பபுடைமையின் அடிப்படையானது அதன் பிரதான குறிக்கோள்களை அடையப் பெறுவதை முன்னிட்டான அதன் கொள்கைகள் மற்றும் தொழிற்பாடுகள் நற்பயன் தொடர்பாகவேயன்றி அதன் இலாபகரத்தன்மை தொடர்பில் அத்தியாவசியமானதாயிராது. இக் குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்கள் ஏனைய தனியார் மற்றும் அரச நிறுவனங்களிலிருந்து மத்திய வங்கியை பிரித்துக் காட்டுகின்ற சிறப்புத் தன்மையைக் கொண்ட அடிப்படைப் பண்புகளாக உள்ளன. இதற்கிணங்க மத்திய வங்கிக்கு வட்டி வீதத்திலும் செலாவணி வீதத்திலும் செல்வாக்குச் செலுத்தக்கூடிய அதன் நாணயக் கொள்கைச் செயற்பாடுகளினூடாக அதற்கே உரியதான இலாபத்தை உருவாக்கிக் கொள்ளும் சிறப்புமிக்க ஆற்றல் அதற்குள்ள போது, இலாபகரத் தன்மையுடன் தொடர்புடைய அணுகுமுறைகள் கடைப்பிடிக்கப்படும் பட்சத்தில் அதன் பெறுபேறாக பிரதானமான குறிக்கோள்களை விட்டுக் கொடுத்து இலாபத்தைப் பின்தொடர்ந்து செல்ல வேண்டிய நிலை உருவாகும். ஆதலால் தற்காலிகமானதாக அல்லது புலமை வாய்ந்ததாக மட்டும் இருந்தாலன்றி மத்திய வங்கியின் குறிக்கோள்களான பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டையும் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டையும் பேணுதல் சிறப்புமிக்கதாகவும் தனியே இலாபத்தைப் பெறும் குறிக்கோள்களிலிருந்து விலகியதாக இருத்தலும் அவசியமாகின்றது.

இப் பின்னணியில், மத்திய வங்கியின் நிதிக் கூற்றுக்களில் அதன் நாணயக் கொள்கைத் தொழிற்பாடுகள், செலாவணி வீத முகாமைத்துவம், நாணயங்களை வெளியிடல் ஆகியவற்றை அமுலாக்குகின்ற போது உருவாகின்ற இலாபம் மற்றும்/ அல்லது நட்டம் உணர் பெறுமதியில் பதிவு செய்யப்படுவதால், இக் கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டுள்ள நிதிச் செயலாற்றுகையானது இச் சூழலமைவிற்கிணங்க வரைவிலக்கணம் அளிக்கப்படுதலும் புரிந்து கொள்ளப்படுதலும் அவசியமாகும்.

வங்கியானது, நாணய விதிச் சட்டத்தின் 42 மற்றும் 43ஆம் பிரிவுகளின் கீழ் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வெளிவாரிக் கணக்காய்வுக்கு உள்ளாக்கப்படுகின்றது. இதற்கமைய பன்னாட்டு நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்கியொழுகுதலை உறுதி செய்யும் பொருட்டு பன்னாட்டு கணக்காய்வு நியமங்களின் கீழ் கணக்காய்வை மேற்கொள்வதற்கு எர்னஸ்ற் அன்ட் யங் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் சேவையை கணக்காய்வாளர் தலைமை அதிபதி பெற்றுள்ளார். உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் நடைமுறை மீளாய்வுகள் ஆகிய இரண்டிலும் மேற்கொள்ளப்படும் இக் கணக்காய்வுகள் நிதி அறிக்கையிடலுடன் தொடர்புடையதாகும்.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல. பீஏஎப்/எச்/சீபீஎஸ்எல்/1/15/1
My No.

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி 2016 ஏப்ரல் 19
Date

கௌரவ அமைச்சர் தேசியகொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள்

## இலங்கை மத்திய வங்கியின் (இ.ம.வங்கி) 2015 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது நாணய சட்ட அதிகாரச்சட்டத்தின் (அத்தியாயம் 422) 42(2) ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

இலங்கை மத்திய வங்கியின் ("வங்கி") 2015 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று, அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான வருமானக்கூற்று, விபரமான ஏனைய வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளித்தல் குறிப்புக்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் நாணய சட்ட அதிகாரச்சட்டத்தின் (அத்தியாயம் 422) 42(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இக்கணக்காய்வை மேற்கொள்கையில், சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கமைய பரீட்சிப்பதற்கு பொதுச் சேவையிலுள்ள பட்டய கணக்காளர் நிறுவனமொன்றின் உதவி பெறப்பட்டது.

### நிதிக்கூற்றுக்களுக்கான நாணயச் சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பவற்றிற்கு நாணயச்சபை ("சபை") பொறுப்பாகவுள்ளது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக, முறையான கணக்கீட்டுக் கொள்கைகளை தெரிவு செய்து பிரயோகித்தல் மற்றும் அச்சூழ்நிலைகளிற்கு காரணமாகவிருக்கின்ற கணக்கீட்டு மதிப்பீடுகளைச் செய்தல் என்பன ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலிற்கு அவசியமானதென வடிவமைத்தல், அமுலாக்கல் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை இப்பொறுப்பு உள்ளடக்குகின்றது.

### கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் வங்கியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில் கொள்ளவில்லை. சபையால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவு பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### அபிப்பிராயம்

இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றலினையும் அதன் காசுப்பாய்ச்சலினையும் சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, . - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

# இலங்கை மத்திய வங்கி

## நிதியியல் நிலைமைக் கூற்று
## 2015 திசெம்பர் 31இல் உள்ளவாறானது

| | குறிப்பு | 2015 ரூ.000 | 2014 ரூ.000 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | |
| காசு நிலுவையும் காசுக்குச் சமமானவையும் | | **557,474,685** | 487,070,771 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் | 5 | **35,779,665** | 61,495,307 |
| விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீடுகள் | 5 | **352,054,482** | 408,189,500 |
| பெறுதி நிதியியல் கருவிகள் | 6 | **4,145** | 1,580,237 |
| ப.நா. நிதியத்துடன் தொடர்பான சொத்துக்கள் | 7 | **83,636,350** | 79,816,029 |
| ஏனைய பெறத்தக்கவைகள் | | **5,075** | 7,105,914 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | **1,028,954,402** | 1,045,257,758 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | 8 | **102,866,967** | 124,443,452 |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | 9 | **151,131,671** | 143,897,971 |
| வங்கிகளுக்கான கடன்கள் | 10 | **886,357** | 1,489,372 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களில் செய்யப்பட்ட பங்குரிமை முதலீடுகள் | 11 | **41,095** | 41,095 |
| ஏனைய சொத்துக்கள் | 12 | **11,164,452** | 10,019,985 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | **266,090,542** | 279,891,875 |
| **மொத்த நிதியியல் சொத்துக்கள்** | | **1,295,044,944** | 1,325,149,633 |
| **வெளிநாட்டு நாணய நிதியல்லாச் சொத்துக்கள்** | | | |
| தங்கம் | 13 | **97,723,836** | 100,190,635 |
| **நிதியல்லாச் சொத்துக்கள்** | | | |
| இருப்புக்கள் | 14 | **3,419,964** | 3,620,480 |
| ஏனைய பெறத்தக்கவைகள் மற்றும் மீள்கொடுப்பனவுகள் | | **14,347,811** | 27,375,394 |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் கருவிகள் | 15 | **15,422,315** | 14,686,696 |
| அருவச் சொத்துக்கள் | 16 | **240,610** | 306,084 |
| **மொத்த நிதியல்லாச் சொத்துக்கள்** | | **131,154,536** | 146,179,289 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **1,426,199,480** | 1,471,328,922 |
| **பொறுப்புக்களும் உரிமை மூலதனமும்** | | | |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | 17 | **12,048,241** | 11,678,483 |
| பெறுதி நிதியியல் கருவிகள் | 6 | **24,280,308** | 19,207,822 |
| ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம் | 18 | **68,887,459** | 57,230,304 |
| ப.நா.நிதியம் | 19 | **251,644,344** | 308,011,133 |
| ஏனையவை | 20 | **217,924,142** | 72,146,159 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | **574,784,494** | 468,273,901 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | |
| வங்கிகள், நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | 21 | **181,726,732** | 161,009,323 |
| அரச மற்றும் அரச முயற்சிகளிலுள்ள வைப்புக்கள் | 22 | **428,142** | 311,950 |
| மீள்கொள்வனவின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 23 | **105,465,000** | 328,252,000 |
| ஊழியர்கள் நன்மைகள் திட்டத்திலுள்ள மீதிகள் | 24 | **7,212** | 2,209,782 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | 25 | **491,699,948** | 416,895,362 |
| ஏனைய செலுத்தத்தக்கவைகள் | 26 | **6,850,998** | 8,867,823 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | **786,178,032** | 917,546,240 |
| **மொத்த நிதியியல் பொறுப்புக்கள்** | | **1,360,962,526** | 1,385,820,141 |
| **ஏனைய பொறுப்புக்கள்** | | | |
| பிற்போடப்பட்ட கொடைகள் | 27 | **106** | 515 |
| ஓய்வூதியம் மற்றும் ஏனைய தொழிலுக்குப் பின்னரான நன்மைகள் திட்டங்கள் | 44 | **10,942,541** | 3,599,035 |
| பல்வகைப் பொறுப்புக்களும் ஒன்றுசேர்ந்தவையும் | 28 | **199,325** | 197,380 |
| **மொத்த ஏனைய பொறுப்புக்கள்** | | **11,141,972** | 3,796,930 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **1,372,104,498** | 1,389,617,071 |
| **உரிமை மூலதனம்** | | | |
| மூலதன நிதியம் | | **50,000,000** | 50,000,000 |
| ஒதுக்குகள் | | **4,094,982** | 31,711,851 |
| **மொத்த உரிமை மூலதனம்** | | **54,094,982** | 81,711,851 |
| **மொத்த பொறுப்புக்கள் மற்றும் உரிமை மூலதனம்** | | **1,426,199,480** | 1,471,328,922 |

நாணயச் சபையின் சார்பில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும் முதன்மைக் கணக்காளரும் 2016 ஏப்பிரல் 04ஆம் திகதியில் வெளியிடுவதற்காக இந்நிதியியல் கூற்றுக்களை அங்கீகரித்துள்ளனர்.

லக்ஷ்மன் அர்ஜுன மகேந்திரன் - ஆளுநர் பி.ஏ. விஜயரட்ன - முதன்மைக் கணக்காளர்

(பகுதி *II* - 7) தொடக்கம் (பகுதி *II* - 58)ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் நிதிக் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.

# இலங்கை மத்திய வங்கி

**வருமானக் கூற்று**

**2015 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

| | குறிப்பு | 2015 ரூபா 000 | 2014 ரூபா 000 |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு வருமானம்** | | | |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வருமானம்** | | | |
| வட்டி வருமானம் | 31 | **13,047,314** | 22,221,503 |
| தேறல் செய்யப்படாத விலை மீள் மதிப்பீடுகளிலிருந்தான இலாபம்/ (நட்டம்) | | **(34,853,795)** | (7,966,791) |
| தேறல் செய்யப்பட்ட விலை மாற்றங்களிலிருந்தான இலாபம் | | **6,686,252** | 12,626,457 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான மொத்த வருமானம்** | | **(15,120,229)** | 26,881,169 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான செலவுகள்** | | | |
| வட்டிச் செலவு | 32 | **(3,622,737)** | (3,103,257) |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான மொத்தச் செலவு** | | **(3,622,737)** | (3,103,257) |
| தேறிய வெளிநாட்டுச் செலாவணி மீள் மதிப்பீட்டு இலாபம்/ (நட்டம்) | | **10,589,267** | (32,266,690) |
| **வெளிநாட்டு நாணய முதலீட்டு வருமானம்/ (நட்டம்)** | | **(8,153,699)** | (8,488,778) |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வருமானம்** | | | |
| வட்டி வருமானம் | 31 | **9,323,553** | 4,616,684 |
| வட்டிச் செலவு | 32 | **(8,919,984)** | (17,748,037) |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான மொத்த வருமானம்**/ (செலவு) | | **403,569** | (13,131,353) |
| ஏனைய வருமானம் | 33 | **1,577,442** | 1,367,666 |
| **மொத்த தேறிய தொழிற்பாட்டு வருமானம்/ (நட்டம்)** | | **(6,172,688)** | (20,252,465) |
| **தொழிற்பாட்டுச் செலவுகள்** | | | |
| ஆளணிச் செலவுகள் | 34 | | |
| - சம்பளங்களும் கூலிகளும் | | **(4,201,583)** | (3,256,096) |
| - கட்டாய பகிர்ந்தளிப்புத் திட்டச் செலவு | | **(629,357)** | (457,274) |
| - தொழிலுக்குப் பின்னரான நன்மைகள் திட்டச் செலவிற்கான பங்களிப்பு | | **(1,329,578)** | (1,289,040) |
| | | **(6,160,518)** | (5,002,410) |
| பெறுமானத் தேய்வும் கடன் பதிவழிப்பும் | | **(557,158)** | (396,811) |
| பொருட்பட்டியல் செலவு (புதிய நாணயங்களை வெளியிடுவதற்கான செலவு) | | **(3,311,761)** | (1,829,350) |
| நிர்வாகம் மற்றும் ஏனைய செலவுகள் | 35 | **(1,611,537)** | (4,050,858) |
| **மொத்தத் தொழிற்பாட்டுச் செலவுகள்** | | **(11,640,974)** | (11,279,429) |
| **வருமான வரிக்கு முந்திய இலாபம்/ (நட்டம்)** | | **(17,813,662)** | (31,531,894) |
| பிடித்துவைத்தல் வரி | 36 | **(1,788,157)** | (777,496) |
| **இவ்வாண்டிற்கான தேறிய இலாபம்/ (நட்டம்)** | | **(19,601,819)** | (32,309,390) |

# இலங்கை மத்திய வங்கி

**அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்று**

**2015 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

| | 2015 ரூபா 000 | 2014 ரூபா 000 |
|---|---|---|
| ஆண்டுக்கான தேறிய இலாபம்/ (நட்டம்) | **(19,601,819)** | (32,309,390) |
| **ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்** | | |
| **தொடர்ந்துவரும் காலப்பகுதியில் இலாபம்/ (நட்டம்) இற்கு மீள்வகைப்படுத்துவதற்கான ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்** | | |
| விற்பனைக்குள்ள பிணையங்களுக்கான தேறிய சந்தைப் பெறுமதி இலாபம்/ (நட்டம்) | **(624,957)** | 9,229,796 |
| **தொடர்ந்து வரும் காலப்பகுதியில் இலாபம்/ (நட்டம்) இற்கு மீள்வகைப்படுத்தப்படாத ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்** | | |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொழிலுக்குப் பின்னைய நன்மைகள் திட்டத்தின் செலவு | **(7,257,078)** | 1,487,603 |
| மொத்த அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்/ (நட்டம்) | **(27,483,854)** | (21,591,991) |

7 தொடக்கம் 58ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் முழு நிதிக் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.

## இலங்கை மத்திய வங்கி

**உரிமை மூலதன மாற்றக் கூற்று**

**2015 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

| | பங்களிக்கப் பட்ட மூலதனம் ரூபா 000 | மூலதனமாக ஒதுக்கப்பட்ட ஒதுக்குகள் ரூபா 000 | மீள் மதிப்பீட்டு ஒதுக்கங்கள் ரூபா 000 | ஏனைய ஒதுக்கங்கள் (குறிப்பு 29) ரூபா 000 | திரட்டிய இலாபங்கள் ரூபா 000 | மொத்தம் ரூபா 000 |
|---|---|---|---|---|---|---|
| **2014 சனவரி 1இல் உள்ளவாறு** | 15,000 | 34,985,000 | 5,986,602 | 68,306,848 | 5,613,763 | 114,907,213 |
| தேறிய நட்டம் | - | - | - | - | (32,309,390) | (32,309,390) |
| அதேநேர மொத்தத் தீர்ப்பனவின் கடன் கரைப்பு நிதியத்திற்கான மாற்றல் | - | - | - | 212,124 | (212,124) | - |
| பொது ஒதுக்கிற்கான மாற்றல் | - | - | - | 1,511,182 | (1,511,182) | - |
| எனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொழிலுக்குப் பின்னைய நன்மைகள் திட்டத்தின் செலவு | - | - | - | - | 1,487,603 | 1,487,603 |
| தேறிய வெளிநாட்டு நாணயமாற்று மீள் மதிப்பீட்டு இருப்பின் மாற்றல் | - | - | - | (32,266,690) | 32,266,690 | - |
| இலங்கை மத்திய வங்கி விசேட ஒதுக்கிற்கான மாற்றல் | - | - | - | - | (103,198) | (103,198) |
| விற்பனைக்குள்ள பிணையங்களுக்கான தேறிய சந்தைப் பெறுமதி இலாபம்/ (நட்டம்) | - | - | - | 9,229,796 | - | 9,229,796 |
| அடகு முற்பணம் தொடர்பான கொடுகடன் உத்தரவாதத் திட்ட நிதியத்திற்கு மாற்றல் | - | - | - | (500,000) | 500,000 | - |
| இலங்கை மத்திய வங்கி ஊழியர் மற்றும் ஓய்வூதியக்காரர் அனர்த்த நிவாரண நிதியத்திற்கான மாற்றல் | - | - | - | - | (173) | (173) |
| மத்திய வங்கியின் மூலதனத்தை மேம்படுத்துவதற்காக பொது ஒதுக்கிலிருந்தான நிதிய மாற்றல்கள் | - | 15,000,000 | - | (15,000,000) | - | - |
| இலங்கை மத்திய வங்கியின் மூலதன மேம்படுத்தல் | 49,985,000 | (49,985,000) | - | - | - | - |
| மீதி இலாபத்தினை அரசிற்கு மாற்றல் - 2013 | - | - | - | - | (3,000,000) | (3,000,000) |
| இடைக்கால இலாபத்தினை அரசிற்கு மாற்றல் - 2014 | - | - | - | - | (8,500,000) | (8,500,000) |
| **2015 சனவரி 1இல் உள்ளவாறு** | **50,000,000** | **-** | **5,986,602** | **31,493,260** | **(5,768,011)** | **81,711,851** |
| தேறிய நட்டம் | **-** | **-** | **-** | **-** | **(19,601,819)** | **(19,601,819)** |
| அதேநேர மொத்தத் தீர்ப்பனவின் கடன் கரைப்பு நிதியத்திற்கான மாற்றல் | **-** | **-** | **-** | **256,478** | **(256,478)** | **-** |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொழிலுக்குப் பின்னைய நன்மைகள் திட்டத்தின் செலவு | **-** | **-** | **-** | **-** | **(7,257,078)** | **(7,257,078)** |
| தேறிய வெளிநாட்டு நாணயமாற்று மீள்மதிப்பீட்டு இலாபத்தின் மாற்றல் | **-** | **-** | **-** | **10,589,267** | **(10,589,267)** | **-** |
| இலங்கை மத்திய வங்கி விசேட ஒதுக்கிற்கான மாற்றல் | **-** | **-** | **-** | **-** | **(132,839)** | **(132,839)** |
| விற்பனைக்குள்ள பிணையங்களுக்கான தேறிய சந்தைப் பெறுமதி இலாபம்/ (நட்டம்) | **-** | **-** | **-** | **(624,957)** | **-** | **(624,957)** |
| இலங்கை மத்திய வங்கி ஊழியர் மற்றும் ஓய்வூதியக்காரர் அனர்த்த நிவாரண நிதியத்திற்கான மாற்றல் | **-** | **-** | **-** | **-** | **(176)** | **(176)** |
| புதிய ஓய்வூதியத் திட்டத்தினை நிறுவுவதற்காக ஓய்வூதிய நிதியத்திலிருந்து நிதிகளை மாற்றல் | **-** | **-** | **-** | **(2,000,000)** | **2,000,000** | **-** |
| **2015 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **50,000,000** | **-** | **5,986,602** | **39,714,048** | **(41,605,668)** | **54,094,982** |

7 தொடக்கம் 58ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் முழு நிதிக் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.

## இலங்கை மத்திய வங்கி
### காசுப்பாய்ச்சல் கூற்று
### 2015 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

| | குறிப்பு | 2015 ரூபா 000 | 2014 ரூபா 000 |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள்** | | | |
| **பெறுகைகள்:** | | | |
| பெறப்பட்ட வட்டி - வெளிநாட்டு நாணயம் | | **14,641,329** | 25,984,366 |
| பெறப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் - மற்றையவை | | **600,046** | 530,779 |
| திரவ முகாமைத்துவமும் வர்த்தக வருமானமும் | | **6,686,252** | 12,626,457 |
| தேறல் செய்யப்பட்ட செலாவணி இலாபம்/(நட்டம்) | | **(13,838,368)** | (553,996) |
| பெறப்பட்ட ஏனைய வருமானம் | | **1,570,072** | 1,360,447 |
| | | **9,659,331** | 39,948,053 |
| **பகிர்ந்தளிப்புக்கள்:** | | | |
| செலுத்தப்பட்ட வட்டி - வெளிநாட்டு நாணயம் | | **3,740,805** | 3,406,299 |
| செலுத்தப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் | | **10,967,407** | 15,828,575 |
| ஊழியர்களுக்கான கொடுப்பனவு | | **6,267,998** | 4,729,643 |
| வழங்குநர்களுக்கான கொடுப்பனவு | | **6,645,579** | 5,601,065 |
| செலுத்தப்பட்ட வரி | | **1,817,747** | 929,097 |
| | | **29,439,536** | 30,494,679 |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான/ (பயன்படுத்தப்பட்ட) தேறிய காசுப்பாய்ச்சல்** | 37 | **(19,780,205)** | 9,453,374 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | | |
| **பெறுகைகள்:** | | | |
| ஏனைய உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலான தேறிய (அதிகரிப்பு)/குறைவு | | **(823,124)** | (790,741) |
| ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களிலிருந்தான முதல் தொகை அறவீடுகள் | | **1,523,438** | 1,490,027 |
| ஆதனம், பொறி, கருவிகளின் விற்பனை | | **749** | 940 |
| மீள விற்பதற்கான உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் தேறிய அதிகரிப்பு/(குறைவு) | | **(222,787,000)** | 243,651,000 |
| | | **(222,085,937)** | 244,351,226 |
| **பகிர்ந்தளிப்புக்கள்:** | | | |
| வெளிநாட்டு நாணயப் பிணையங்களிலான தேறிய அதிகரிப்பு/(குறைவு) | | **(89,998,376)** | 31,566,311 |
| ஏனைய வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலான தேறிய அதிகரிப்பு/(குறைவு) | | **(289,309)** | (746,122) |
| ஏனைய வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்களிலான தேறிய அதிகரிப்பு/(குறைவு) | | **(139,352,884)** | (26,570,161) |
| ஏனைய உள்நாட்டு வைப்புக்கள் மற்றும் கொடுபடத்தக்கவையிலான தேறிய அதிகரிப்பு/(குறைவு) | | **2,274** | (375) |
| கொடைகள் தவிர்ந்த ஆதனம், பொறிகள் மற்றும் கருவிகளின் கொள்வனவுகள் | | **1,206,040** | 835,014 |
| அருவச் சொத்துக்களின் கொள்வனவு | | **21,627** | 290,656 |
| குத்தகைச் சொத்துக்களின் கொள்வனவு | | **14,361** | 2,640 |
| தங்க இருப்பிலான தேறிய அதிகரிப்பு/ (குறைவு) | | **(5,124,212)** | 1,348,440 |
| ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களும் முற்பணங்களும் | | **920,424** | 1,604,003 |
| | | **(232,600,055)** | 8,330,406 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்** | | **10,514,118** | 236,020,820 |
| **நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | | |
| **பெறுகைகள்:** | | | |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயங்களை வெளியிடுதல் | | **(504,508,531)** | (431,825,813) |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயங்களை மீளப்பெறல் | | **579,313,118** | 508,950,194 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயங்களின் தேறிய வழங்கல் | | **74,804,587** | 77,124,381 |
| **பகிர்ந்தளிப்புக்கள்:** | | | |
| அரச கொடுக்கல்வாங்கல் தொடர்பில் சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் தேறிய வெளியிடுதல்/ (மீளப்பெறல்) | 38 | **(23,208,921)** | 139,339,459 |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுடனான கொடுக்கல்வாங்கல் தொடர்பில சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வெளியிடுதல்/ (மீளப்பெறல்) | 39 | **(20,944,825)** | (12,199,430) |
| சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வெளியிடுதல்/ (மீளப்பெறல்) | | **(44,153,746)** | 127,140,029 |
| **சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் தேறிய அதிகரிப்பு/ (குறைவு)** | | **118,958,333** | (50,015,648) |
| **பகிர்ந்தளிப்புக்கள்:** | | | |
| வெளிநாட்டு நாணய தவணைப் பொறுப்புக்களின் மீள் கொடுப்பனவு | | **68,788,313** | 93,842,868 |
| ஏனைய நிதியங்களுக்கான கொடுப்பனவுகள் | | **175** | 173 |
| திரட்டிய நிதியத்திற்கான இலாப மாற்றல் | | **-** | 11,500,000 |
| | | **68,788,488** | 105,343,041 |
| **நிதியியல் நடவடிக்கையிலிருந்தான/ (பயன்படுத்தப்பட்ட) தேறிய காசுப்பாய்ச்சல்** | | **50,169,845** | (155,358,689) |
| **காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு/ (குறைவு)** | | **40,903,760** | 90,115,505 |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றின் மீதான செலாவணி வீதத் தாக்கம் | | **29,500,154** | (28,721,497) |
| ஆண்டின் தொடக்கத்தில் உள்ளவாறு காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | | **487,070,771** | 425,676,763 |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறு காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்** | 40 | **557,474,685** | 487,070,771 |

7 தொடக்கம் 58ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் முழு நிதிக் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.

## இலங்கை மத்திய வங்கி

## 2015 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களின் விளக்கக் குறிப்புகள்

### 1. அறிக்கையிடும் நிறுவனம் மற்றும் நியதிச் சட்டத் தளம்

திருத்தப்பட்டவாறான இலங்கையின் 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலங்கை நாணய விதிச் சட்டத்தினால் நிறுவப்பட்ட இலங்கை மத்திய வங்கி (வங்கி அல்லது இ.ம.வங்கி) இலங்கையின் நாணய, ஒழுங்குவிதிகள், நிதியியல் மற்றும் கொடுப்பனவு முறைமைகள் என்பனவற்றின் நிருவாகம், மேற்பார்வை மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு பொறுப்பான அதிகாரசபையாக இருக்கின்றது. இலங்கை மத்திய வங்கியானது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்குள் நிரந்தரமாக நிறுவப்பட்டுள்ளதோடு இல.30 சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01இல் அமைந்துள்ளது.

மேற்படி நிதிக்கூற்றுக்களை வெளியிடுவதற்கு ஆளுநராலும் முதன்மைக் கணக்காளராலும் 2016 ஏப்பிரல் 04ஆம் திகதி நாணயச் சபையின் சார்பில் அதிகாரமளிக்கப்பட்டது.

### 2. கணக்கீட்டுக் கொள்கைகள்

#### 2.1 தயாரிப்பிற்கான அடிப்படை

இந்நிதிக்கூற்றுக்கள், கீழே குறித்துரைக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளினால் அடையாளம் காணப்பட்டவாறு, காணி, கட்டடம், தங்கம் மற்றும் ஒரு சில நிதிச் சொத்துக்கள் தவிர்ந்த ஏனையவை நியாயமான பெறுமதியில் அளவிடப்பட்டு வரலாற்றுச் செலவின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

#### 2.1.1 அறிக்கையிடல் படிவம்

வங்கியானது நிதிச் சொத்துக்களையும் நிதிப் பொறுப்புக்களையும் அவற்றுடன் இணைந்த வருமானத்தையும் செலவினத்தையும் வெளிநாட்டு நாணய மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகளிடையே வேறுபடுத்தி வெளிப்படுத்துகிறது. நிதி நிலைமை பற்றிய கூற்றில் சொத்துக்களும் பொறுப்புக்களும் குறிப்பிட்ட வகைகளின் திரவத்தன்மை ஒழுங்கு வரிசையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கையிடும் அணுகுமுறை குறிப்பு 4இல் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ளவாறு, வங்கியின் நடவடிக்கைகளை பொருத்தமான முறையில் அறிக்கையிடுவதாக வங்கி கருதுகின்றது.

#### 2.1.2 இணக்கக் கூற்று

2015 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் இந் நிதிக்கூற்றுக்கள் பன்னாட்டு நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்கத் தயாரிக்கப்பட்டுள்ளன. நாணய விதிச் சட்டத்திற்கு அமையத் தயாரிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் நாயகத்தினால் கணக்காய்வு செய்யப்பட்டு சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டுள்ளவாறு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்களின் ஒரு சில தேவைப்பாடுகளின் காரணமாக, வகைப்படுத்தல் மற்றும் அதனுடன் தொடர்புடையதான எண்தொகைகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களை விட இந் நிதிக்கூற்றுக்களில் வித்தியாசமானதாக அமையலாம்.

#### 2.1.3 சமர்ப்பித்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட நாணயம்

வேறு விதமாக கூறப்பட்டிருந்தாலொழிய அனைத்துத் தொகைகளும் இலங்கை ரூபாவின் ஆயிரத்திற்கு கிட்டிய தொகையில் தரப்பட்டுள்ளன.

#### 2.2 முக்கியமான கணக்கியல் தீர்ப்புகளும் மதிப்பீடுகளும்

வங்கியின் நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பு, வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பனவற்றின் அறிவிக்கப்பட்ட தொகைகளின் மீதும் இணைந்த வெளிப்படுத்துகைகள் அதேபோன்று எதிர்பாராத பொறுப்புக்களின் மீதும் தாக்கத்தினை ஏற்படுத்தும் தீர்ப்புக்கள், மதிப்பீடுகள் மற்றும் இக்கருதுகோள்கள் மற்றும் மதிப்பீடுகளின் நிச்சயமற்ற தன்மையானது எதிர்காலத்தில் பொருண்மிய சீராக்கத்தினை தேவைப்படுத்தும் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களின் கொண்டு செல்லும் பெறுமதியில் தாக்கத்தினை விளைவிக்கக்கூடும்.

#### 2.2.1 விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீடுகளின் பெறுமதி இழப்பு

சந்தைப் பெறுமதியானது அதன் கிரயத்திற்கு கீழே கணிசமானளவு அல்லது நீண்ட காலப் போக்கில் வீழ்ச்சியடையும் போது வங்கியானது, விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீடுகளின் பெறுமதி இழப்புக்களை நிர்ணயிக்கிறது. குறிப்பிடத்தக்க அல்லது நீண்ட காலப் போக்கு எது என்பதை நிர்ணயிப்பதற்கு திறனாய்வுகள் அவசியமாகின்றன.

#### 2.2.2 ஓய்வூதியமும் தொழில்நிலைக்குப் பின்னரான ஏனைய நலத் திட்டங்களும்

குறித்துரைக்கப்பட்ட நலத் திட்டங்களின் செலவு ஆயுட்கால மதிப்பீட்டைப் பயன்படுத்தித் தீர்மானிக்கப்படுகின்றது. ஆயுட்கால மதிப்பீடானது, கழிவு வீதங்கள், எதிர்கால இழப்பீட்டுக் கொடுப்பனவுகளின் அதிகரிப்பு, இறப்பு வீதங்கள் மற்றும் எதிர்கால ஓய்வூதிய அதிகரிப்புகள் ஆகியவற்றின் கருதுகோள்களின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றது. இத் திட்டங்களின் நீண்டகால இயல்பின் காரணமாக மேற்படி மதிப்பீடுகள் கணிசமான அளவு நிச்சமற்ற நிலைமைக்கு உட்படுகின்றன. பயன்படுத்தப்பட்ட கருதுகோள்கள் குறிப்பு 44இல் தரப்பட்டுள்ளன.

#### 2.2.3 நிதியியல் சாதனங்களின் சந்தைப் பெறுமதி

நிதியியல் நிலைமைக் கூற்றில் பதிவு செய்யப்படும் நிதியியல் சொத்துக்கள் மற்றும் நிதியியல் பொறுப்புக்களின் சந்தைப் பெறுமதிகள் செயற்படும் சந்தைகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட முடியாவிடின் அவை கணித ரீதியான மாதிரிகளை உள்ளடக்கும் வேறுபட்ட மதிப்பீட்டு முறைகளைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றன. இம்மாதிரிகளுக்கான உள்ளீடுகள் சாத்தியமான இடங்களில் அவதானிக்கக்கூடிய சந்தைத் தரவுகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்றன. ஆனால் இத்தரவுகள் கிடைக்கத்தக்கதாக இல்லாதவிடத்து, சந்தைப் பெறுமதிகளைக் கணிப்பதற்கு திறனாய்வான முடிவு தேவைப்படுகின்றது. திறனாய்வான முடிவு, திரவத்தன்மையைக் கவனத்திலெடுத்தல் மற்றும் நீண்ட கால பெறுதிகளுக்கான தளம்பல்கள் போன்ற மாதிரி உள்ளீடுகளை உள்ளடக்கியிருக்கும்.

#### 2.3 விடுக்கப்பட்டும் இன்னமும் நடைமுறைப்படுத்தப்படாத நியமங்கள்

விடுக்கப்பட்டும் வங்கியின் நிதியியல் கூற்றுக்களின் வழங்கல் திகதி வரை நடைமுறைக்கிடப்படாத நியமங்கள் மற்றும் விளக்கங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. இவை நடைமுறைக்குவரும் பொழுது, ஏற்புடைத்தானவிடத்து வங்கி இந்நியமங்களை பின்பற்ற எண்ணுகிறது.

#### 2.3.1 பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 நிதியியல் சாதனங்கள்

2014 யூலையில் ப.க. நியமச் சபையானது நிதியியல் சாதனங்களினது செயற்றிட்டத்தின் அனைத்துக் கட்டங்களையும் பிரதிபலிக்கின்ற பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 நிதியியல் சாதனங்களின் இறுதிப் பதிப்பினை வெளியிட்டதுடன் ப.க நியமம் 39 நிதியியல் சாதனங்கள் நீக்கப்படுகிறது. நியமமானது, வகைப்படுத்தல் மற்றும் அளவீடு, பெறுமதியிழப்பு மற்றும் பாதுகாப்புக் கணக்கீடு என்பனவற்றிற்கான புதிய தேவைப்பாடுகளை அறிமுகப்படுத்துகிறது. பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 அனுமதிக்கப்பட்ட உரிய நேரத்திற்கு முன்னர் பிரயோகத்துடன் 2018 சனவரி 1 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ தொடங்குகின்ற வருடாந்தக் காலப்பகுதிக்கு நடைமுறைப்படுத்தப்படும். பின்னோக்கிய பிரயோகங்கள் தேவைப்படுத்தப்படுகின்ற போதும், ஒப்பீட்டு அடிப்படையிலான தகவல்கள் கட்டாயமானவையல்ல. ஆரம்பப் பிரயோகத் திகதி 2015 பெப்புருவரிக்கு முன்னதாக இருப்பின் பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 இன் முன்னைய பதிப்பினை (2009, 2010 மற்றும் 2013) உரிய நேரத்திற்கு முன்னர் பிரயோகித்தல் அனுமதிக்கப்படும். பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 இனைப் பின்பற்றுவது வங்கியின் நிதியியல் சொத்துக்களை வகைப்படுத்தல் மற்றும் அறவிடலின் மீது தாக்கமொன்றினைக் கொண்டிருக்குமெனினும் வங்கியின் நிதியியல் பொறுப்புக்களின் வகைப்படுத்தல் மற்றும் அளவீட்டில் தாக்கமெதனையும் கொண்டிருக்காது.

### 2.3.2 பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 14 ஒழுங்குமுறைப்படுத்தல் பிற்போடப்பட்ட கணக்குகள்

பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 14, பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்களை முதன் முதலில் பின்பற்றுவது வரை ஒழுங்குமுறைப்படுத்தல் பிற்போடப்பட்ட கணக்கு நிலுவைகளுக்காக அதன் ஏற்கனவேயுள்ள பெரும்பாலான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தொடர்ந்தும் பிரயோகிப்பதற்கான தர விதிகளுக்கு உட்பட்ட நடவடிக்கைகளைக் கொண்டுள்ள நிறுவனமொன்றின் தேர்விற்குரிய நியமங்களை அனுமதிக்கின்றது. பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 14இனை பின்பற்றுகின்ற நிறுவனங்கள் நிதியியல் நிலைமைக் கூற்றின் மீது தனிப்பட்டதொரு விடயமாக ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட பிற்போடப்பட்ட கணக்காகக் காட்டுதல் வேண்டும் என்பதுடன் இக்கணக்கு நிலுவைகளின் அசைவுகளை இலாபம் அல்லது நட்ட கூற்றுக்களிலும் மற்றைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்திலும் தனிப்பட்டதொரு விடயமாகக் காட்டுதல் வேண்டும். இதன் தன்மை தொடர்பான அதனுடன் தொடர்பான இடர்நேர்வுகளையும் நிறுவனத்தின் தர ஒழுங்குவிதிகளையும் அத்துடன் இதன் நிதியியல் கூற்றுக்கள் மீதான அத்தர ஒழுங்குவிதியின் தாக்கமும் வெளிப்படுத்தப்பட வேண்டுமென நியமம் தேவைப்படுத்துகின்றது. பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 14, 2016 சனவரி 1ஆம் நாளன்றோ அல்லது அதற்குப் பின்னரோ தொடங்குகின்ற ஆண்டில் நடைமுறையிலிருக்கும். இக்கணக்கீட்டு நியமத்தைப் பின்பற்றுவது, வங்கியின் மீது தாக்கமெதனையும் கொண்டிருக்காதென எதிர்பார்க்கப்படுகின்றது.

### 2.3.3 பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 15 வாடிக்கையாளருடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம்

பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 15, 2014 மேயில் விடுக்கப்பட்டதுடன் புதிய ஐந்து - படிமுறை மாதிரிகளையும் உருவாக்கியுள்ளதுடன் இது வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்து தோன்றுகின்ற வருமானத்திற்கு பிரயோகிக்கத்தக்கதாக இருக்கும். பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 15இன் கீழ், வருமானமானது நிறுவனமொன்று வாடிக்கையாளருக்குப் பொருட்களையும் பணிகளையும் மாற்றல் செய்வதற்கான பரிவர்த்தனையில் உரித்துடையதாக இருக்குமென எதிர்பார்க்கப்படும் நிறுவனமொன்றின் பரிசீலனையினைப் பிரதிபலிக்கின்ற தொகையினை அங்கீகரிக்கின்றது. பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 15இல் உள்ள கோட்பாடுகள் வருமானத்தினை அளவிடவும் அங்கீகரிக்கின்றதுமான மிகுந்த அமைப்பியல் வாய்ந்த அணுகுமுறையொன்றினை வழங்குகிறது. புதிய வருமான நியமம் அனைத்து நிறுவனங்களுக்கும் ஏற்புடைத்தானதாக இருப்பதுடன் பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமத்தின் கீழ் தற்போதைய அனைத்து வருமான அங்கீகரிப்புத் தேவைப்பாடுகளும் நீக்கப்படும். ஒன்றில் முழுமையான அல்லது திருத்தப்பட்ட பின்னோக்கிய விண்ணப்பம் உரிய நேரத்திற்கு முன்னர் பின்பற்றுவதற்கான அனுமதியுடன் 2017 சனவரி 1 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ தொடங்குகின்ற ஆண்டு காலப்பகுதிக்கு தேவைப்படுத்தப்படுகின்றன. இவை நடைமுறைக்குவரும் பொழுது வங்கி இந்நியமங்களைப் பின்பற்றும். விபரமான மீளாய்வுகள் நிறைவடையாமல் இருக்கும் பொழுது நிதியியல் தாக்கங்கள் நியாயமான மதிப்பீடுகளாக இருக்கமாட்டாது. இந்நிதியியல் கூற்றுக்களின் வெளியீட்டுத் திகதியில் உள்ளவாறு நிதியியல் தாக்கத்தினை நியாயமான முறையில் மதிப்பிடமுடியாது.

## 3. முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம்

### 3.1 வெளிநாட்டு நாணய மாற்றுவீதங்கள்

வங்கியின் நடைமுறை மற்றும் சமர்ப்பண நாணயம் இலங்கை ரூபாவாகும். வெளிநாட்டு நாணயங்களிலான கொடுக்கல்வாங்கல்கள், அவை இடம்பெற்ற நாளுக்கு ஏற்புடையதான நடைமுறை நாணயத்திலேயே பதிவு செய்யப்பட்டன. வெளிநாட்டு நாணயங்களில் குறித்துரைக்கப்பட்ட நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் அறிக்கையிடல் திகதியில் ஏற்புடையதாகவிருந்த செலாவணி வீதத்திற்கேற்ப இலங்கை ரூபாவுக்கு மாற்றப்பட்டன. அனைத்து வேறுபாடுகளும் வருமானக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இம் மாற்றங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட முக்கிய நாணயங்களுக்கான இலங்கை ரூபா செலாவணி வீதங்கள் பின்வருமாறு:

| நாணயம் | 2015<br>ரூபா | 2014<br>ரூபா |
|---|---|---|
| 1 அவுஸ்திரேலிய டொலர் | **105.3888** | 107.3616 |
| 1 கனேடிய டொலர் | **103.7278** | 113.0558 |
| 1 யூரோ | **157.4097** | 159.2568 |
| 1 யப்பானிய யென் | **1.1970** | 1.0962 |
| 1 சிறப்பு எடுப்பனவு உரிமை (சி.எ.உ) | **199.6310** | 189.8640 |
| 1 ஸ்டேர்லிங் பவுண் | **213.5508** | 204.1803 |
| 1 ஐக்கிய அமெரிக்க டொலர் | **144.0623** | 131.0486 |
| 1 சீன யுவான் (கரைகடந்த) | **21.9285** | 21.0483 |

நிதியல்லாத விடயங்கள் ஆரம்பக் கொடுக்கல்வாங்கல் நடைபெற்ற திகதியன்று உள்ளவாறான செலாவணி வீதத்தைப் பயன்படுத்தி, வெளிநாட்டுச் செலாவணியின் வரலாற்றுச் செலவின் அடிப்படையில் அளவிடப்பட்டுள்ளது.

### 3.2 சந்தைப் பெறுமதி அளவுகள்

வங்கி ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் வெளிநாட்டுப் பிணையங்கள், பெறுதிகள் போன்ற நிதியியல் சாதனங்களையும் காணி, கட்டடம் போன்ற நிதியல்லாச் சொத்துக்களையும் சந்தைப் பெறுமதியில் அளவிடுகின்றது. அத்துடன், பதிவழிப்புச் செலவில் அளவிடப்பட்ட நிதியியல் சாதனங்களின் சந்தைப் பெறுமதி குறிப்பு 45இல் வெளிப்படுத்தப்பட்டன.

சந்தைப் பெறுமதி என்பது அளவிடுகின்ற திகதியில் சொத்தொன்றினை விற்பது தொடர்பில் பெறப்படுகின்ற அல்லது சந்தைப் பங்கேற்பாளர்களுக்கேயான கொடுக்கல்வாங்கல்களின் பொருட்டு பொறுப்பொன்றினை மாற்றல் செய்வதற்கான கொடுப்பனவு எனப் பொருள்படும். சந்தைப் பெறுமதி அளவீடு சொத்துக்களை விற்றல் அல்லது பொறுப்புக்களை மாற்றல் செய்தல் தொடர்பாக பின்வரும் இடமொன்றில் இடம்பெறும் கொடுக்கல்வாங்கல்களின் ஊகங்களை அடிப்படையாகக் கொண்டதாகும்.

- சொத்து அல்லது பொறுப்பிற்கான முதன்மைச் சந்தை, அல்லது
- முதன்மைச் சந்தை இல்லாத போது சொத்து அல்லது பொறுப்பிற்கு மிக அநுகூலம் நிறைந்த சந்தை

முதன்மை அல்லது மிக அநுகூலம் நிறைந்த சந்தை வங்கியினால் அணுகப்படக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

சொத்தொன்றின் அல்லது பொறுப்பொன்றின் சந்தைப் பெறுமதியானது சந்தைப் பங்கேற்பாளர்கள் பொருளாதாரத்தில் கொண்டுள்ள சிறந்த ஈடுபாடுகளில் அவர்களது ஊகங்களில் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களை விலையிடும் பொழுது பயன்படுத்தப்படுகிறது. நிதியல்லாச் சொத்தொன்றின் சந்தைப் பெறுமதி சொத்தினை மிக உயர்ந்த விதத்தில் சிறந்த முறையில் பயன்படுத்துவதன் மூலம் அல்லது சொத்தினை மிக உயர்ந்த விதத்தில் சிறந்த முறையில் பயன்படுத்தக்கூடிய இன்னொரு சந்தைப் பங்கேற்பாளருக்கு விற்பதன் மூலம் பொருளாதார நன்மைகளை உருவாக்கக்கூடிய சந்தைப் பங்கேற்பாளர்களின் இயலாற்றலைக் கணக்கில் கொண்டு அளவிடப்படுகிறது.

வங்கி சூழ்நிலைக்குப் பொருத்தமான மதிப்பீட்டு நுணுக்கங்களைப் பயன்படுத்துவதுடன் இதற்காகத் தொடர்பான அவதானிக்கத்தக்க உள்ளீடுகளை உச்சப்படுத்துகின்றதும் அவதானிக்கப்பட முடியாத உள்ளீடுகளை மிகக் குறைப்பதுமான சந்தைப் பெறுமதிகளை அளவிடுவதற்குப் போதுமான தரவுகள் கிடைக்கத்தக்கதாகவுள்ளன.

நிதியியல் கூற்றுக்களில் அளவிடப்பட்ட அல்லது வெளிப்படுத்தப்பட்ட சந்தைப் பெறுமதிகளுக்கான அனைத்துச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சந்தைப் பெறுமதிகளின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டு பொதுவாக சந்தைப் பெறுமதியின் அளவிடலுக்குப் போதுமானதாக விளங்கும் குறைந்த மட்டத்தின் அடிப்படையில் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளன.

மட்டம் 1 - ஒரே மாதிரியான சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களுக்கான செயற்படுகின்ற சந்தையில் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட (சீராக்கப்படாத) சந்தை விலைகள்.

மட்டம் 2 - பெறுமதியிடல் நுணுக்கங்களுக்கான சந்தைப் பெறுமதியினை அளவிடுவதற்கு குறிப்பிடத்தக்கதாக விளங்கும் குறைந்தமட்ட உள்ளீடு நேரடியாகவோ மறைமுகமாகவோ அவதானிக்கப்படுதல்.

மட்டம் 3 - பெறுமதியிடல் நுணுக்கங்களுக்கான சந்தைப் பெறுமதியினை அளவிடுவதற்குக் குறிப்பிடத்தக்கதாக விளங்கும் குறைந்தமட்ட உள்ளீடு அவதானிக்கப்பட முடியாதவை.

மீண்டெழும் அடிப்படையில் நிதியியல் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்காக வங்கியானது ஒவ்வொரு அறிக்கையிடும் காலப்பகுதியின் முடிவிலும் மாற்றல்கள் வகைகளின் மீள்மதிப்பீட்டின் மூலம் (பொதுவாக சந்தைப் பெறுமதி அளவீட்டிற்கு குறிப்பிடத்தக்கதாக விளங்கும் குறைந்தமட்ட உள்ளீடுகளின் அடிப்படையில்) ஒழுங்கமைப்பிலுள்ள மட்டங்களுக்கிடையில் நிகழ்ந்திருக்கின்றன.

### 3.3 நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும்

வங்கியானது, நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களையும் அத்துடன், இணைந்த வருமானம் மற்றும் செலவுகளையும், வெளிநாட்டு நாணய மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகளை வேறுபடுத்திக் காட்டுவதன் மூலமே சமர்ப்பிக்கின்றது. வெளிநாட்டு நாணய நடவடிக்கைகள் முக்கியமாக வங்கியின் வெளிநாட்டு ஒதுக்குகளின் முகாமைத்துவத் தொழிற்பாட்டிலிருந்தே உருவாகின்றன. உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் முக்கியமாக நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தல், ரூபா நாணயங்களின் வெளியீடு மற்றும் வங்கித்தொழில் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களைப் பிரதிபலிக்கின்றன.

இந் நடவடிக்கைகளைத் தனித்தனியாக விளக்குவதன் மூலம் வங்கியின் நிதி நிலைமை, நிதிச் செயலாற்றுகை மற்றும் இடர்நேர்வுத் தோற்றப்பாட்டினை சிறந்த முறையில் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நாணயங்களின் நடவடிக்கைகளை இணைந்து அறிக்கையிடுதல் நிதிக் கூற்றுக்களின் தகவல் பெறுமதியை நலிவுறச் செய்யுமென வங்கி கருதுகின்றது.

அனைத்து முதலீடுகளும் ஆரம்பத்தில் செலவு நியதிகளில் இனங்காணப்பட்டதுடன் இச்செலவு முதலீட்டுடன் இணைந்த கொள்வனவுக் கட்டணங்கள் உட்பட செலுத்தப்பட்ட நியாயமான பெறுமதியினையும் உள்ளடக்கியுள்ளது. ஆரம்ப இனங்காணலின் பின்பு, தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட அளவீட்டுத் தளங்கள் கீழே விபரிக்கப்படுகின்றன. நிதிச் சொத்துக்களின் அனைத்து கிரமமான வரியிலான கொள்வனவுகள் மற்றும் விற்பனைகள் முறையே வர்த்தகம் நடைபெற்ற திகதியைக் கொண்டு இனங்காணப்படுகின்றன. கிரமமான வரியிலான கொள்வனவுகள் மற்றும் விற்பனைகள் என்பன பொதுவான ஒழுங்குவிதிகளில் அல்லது சந்தையின் மரபுவரி முறைகளினால் நிறுவப்பட்ட கால வரையறையினுள் சொத்துக்களின் விநியோகத்தைத் தேவைப்படுத்தும் நிதிச் சொத்துக்களின் கொள்வனவுகள் அல்லது விற்பனைகளாகும்.

#### 3.3.1 இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள்

வர்த்தகப்படுத்தக் கூடிய நிதிச் சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள "பிணையங்கள் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சந்தைப் பெறுமதியிலான பிணையங்கள்" வகையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. பின்னர் மேற்படி பிணையங்கள் விலைக்குறிப்பீடு செய்யப்பட்டு சந்தை விலைகளில் பெறுமதியிடப்படுகின்றன. சந்தைப் பெறுமதியிலான மாற்றங்கள் நிதி நிலைமை பற்றிய கூற்றில் வர்த்தகப்படுத்தக்கூடிய பிணையங்கள் பெறுமதியில் அதிகரிப்பொன்றாகவோ அல்லது வீழ்ச்சியொன்றாகவோ காட்டப்படுகின்ற அதேநேரம் இதன் மூலம் எழும் இலாபங்களும், நட்டங்களும் வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

பிணையம் வங்கிக்குச் சொந்தமாக இருக்குமிடத்து இலாபம் அல்லது நட்டம் "விலை மீள் பெறுமதியிடலிலிருந்து பெறப்படாத இலாபமாக / (நட்டமாக)" அறிக்கையிடப்படும். இலாபமோ அல்லது நட்டமோ பெறப்படுமிடத்து (பிணையத்தினை விற்பதன் மூலம்) அது விலை மாற்றங்களிலிருந்து பெறப்பட்ட இலாபமாக / (நட்டமாக) அறிக்கையிடப்படும்.

#### 3.3.2 வெளிநாட்டு நாணயத்திலான விற்பனைக்குள்ள முதலீட்டுப் பிணையங்கள்

வெளிநாட்டு நாணயத்திலான விற்பனைக்குள்ள முதலீட்டுப் பிணையங்கள் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட சந்தை விலைகளில் மதிப்பீடு செய்யப்படுகின்றன. சந்தைப் பெறுமதியிலான மாற்றங்கள் நிதி நிலைமை பற்றிய கூற்றில் ஒதுக்குகளின் கீழ் பிணையங்களின் விற்பனைக்காகவுள்ள பெறுமதியின் அதிகரிப்பொன்றாகவோ அல்லது வீழ்ச்சியொன்றாகவோ அடையாளம் காணப்படும்.

வெளிநாட்டு நாணயத்திலான விற்பனைக்குள்ள முதலீட்டுப் பிணையங்களின் சந்தைப் பெறுமதியில் ஏற்பட்ட மாற்றங்களிலிருந்து எழும் இலாபமும் நட்டமும் முதலீடுகள் விற்கப்படும் வரை அல்லது சேகரிக்கப்படும் வரை அல்லது வேறு விதமாக இதனை அகற்றும் வரை அல்லது முதலீட்டினை இல்லாதொழிப்பது என தீர்மானிக்கப்படும் வரை உரிமை மூலதனப் பங்கின் (நிதி நிலைமை பற்றிய கூற்றில் ஏனைய ஒதுக்குகளின் கீழ் காட்டப்பட்டுள்ள) தனியொரு கூறாக இனங்காணப்படுகிறது. அவ்வாறான சந்தர்ப்பத்தில் முன்னைய உரிமை மூலதனப் பங்காக அறிவிக்கப்பட்ட ஒன்று சேர்ந்த இலாபம் அல்லது நட்டம் வருமானக்கூற்றில் உள்ளடக்கப்படும்.

#### 3.3.3 நிதிப் பெறுதிக் கருவிகள்

வங்கி, பெறுதிகளான குறுக்கு நாணய பரஸ்பர பரிமாற்றல், முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி ஒப்பந்தங்கள், வட்டி வீத பரஸ்பர பரிமாற்றல் என்பவற்றை இடர்நேர்வு முகாமைத்துவ நோக்கங்களுக்காக பயன்படுத்துகின்றதேயொழிய ஊக நோக்கங்களுக்காக அல்ல. அத்தகைய நிதிப் பெறுதிக் கருவிகள் நியாயமான பெறுதியில் குறிப்பிடப்படுவதுடன், நியாயப் பெறுமதி நேர்க்கணியமாக இருக்குமிடத்தில் சொத்தாகவும், எதிர்கணியமாக இருக்குமிடத்தில் பொறுப்பாகவும் கொண்டு செல்லப்படும் நிதிப்பெறுதிக் கருவிகளின் நியாயப் பெறுமதியில் ஏற்படுகின்ற மாற்றங்கள் "தேறல் செய்யப்படாத விலை மதிப்பீட்டிருந்தான இலாபத்தில்/ (நட்டத்தில்)" உள்ளடக்கப்படுகின்றன.

#### 3.3.4 "1 நாள்" வேறுபாடு

கொடுக்கல்வாங்கல் விலையானது அதே சாதனத்தின் இன்னொரு அவதானிக்கக்கூடிய நடைமுறைச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களின் சந்தைப் பெறுமதியிலிருந்து அல்லது அவதானிக்கக்கூடிய சந்தைகளிலிருந்தான திகதியை மட்டும் கொண்டிருக்கும் மாறிகளை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீட்டு முறைகளிலிருந்து வேறுபடுமாயின், வங்கியானது உடனடியாக கொடுக்கல்வாங்கல் விலைக்கும் சந்தைப் பெறுமதிக்கும் இடையிலான வேறுபாட்டை (ஒரு நாள் வேறுபாடு) "தேறாத விலை மீள்மதிப்பீடுகள் இலிருந்தான 'இலாபம்/ (நட்டம்)" ஆக இனங்காணும் அவதானிக்க முடியாத தரவுகளைப் பயன்படுத்தி சந்தைப் பெறுமதியானது தீர்மானிக்கப்படும் சந்தர்ப்பங்களில், கொடுக்கல்வாங்கல் விலைக்கும் மாதிரிப் பெறுமதிக்குமிடையிலான வேறுபாடு, உள்ளீடுகள் அவதானிக்கக்கூடியதாக மாறும் போது, அல்லது சாதனத்தின் பதிவு நீக்கப்படும் போது மட்டுமே வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

#### 3.3.5 பன்னாட்டு நாணய நிதியத்துடன் (ப.நா.நி.) தொடர்புடைய நிலுவைகள்

வங்கியானது இலங்கை அரசின் முகவராக செயற்படுவதனை காட்டிலும் அதன் சொந்த உரிமையுடன் பன்னாட்டு நாணய நிதியத்துடன் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்றது. அந்த அடிப்படையில், ப.நா. நிதியத்துடனான வங்கியின் அனைத்து கொடுக்கல்வாங்கல்களும் இந் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ப.நா. நிதியத்துடனான அனுமதிப் பங்கு ஒரு சொத்தாக வங்கியினால் பதிவு செய்யப்படுவதுடன், அனுமதிப் பங்கிற்காக ப.நா. நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய தொகை வங்கியின் பொறுப்பாகப் பதிவு செய்யப்படுகிறது. ப.நா. நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒன்று சேர்ந்த ஒதுக்குகள் பொறுப்பாகக்

கணிக்கப்படுகின்றன. ப.நா. நிதியத்தினால் வெளியிடப்பட்டவாறு அறிக்கையிடல் திகதியிலுள்ள செலாவணி வீதத்தினைப் பிரயோகித்து பன்னாட்டு நாணய நிதியச் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் மீள்பெறுமதியிடலிலிருந்து எழும் செலாவணி இலாபங்களும் நட்டங்களும் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளன.

ப.நா. நிதியத்துடனான நிலுவைகள் தொடர்பான ஏனைய அனைத்துக் கட்டணங்களும் வட்டியும் வருமானக் கூற்றில் உடனடியாகப் பதிவு செய்யப்படுகின்றன.

### 3.3.6 காசும் காசுக்குச் சமமானவைகளும்

காசும் காசுக்குச் சமமானவைகளும் வெளிநாட்டு வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிலுள்ள காசு மற்றும் குறுங்கால வைப்புக்களையும் உள்ளடக்கியுள்ளன.

உள்நாட்டு நாணயங்களினது நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்டதொரு வருமானத்தினை உருவாக்குவதுடன் செலவுகளையும் ஏற்கின்ற போதிலும் இவை காசின் நகர்வுடன் தொடர்புபட்டவையல்ல. இந் நடவடிக்கைகள் குறிப்பிட்ட சொத்துக்களையும் பொறுப்புக்களையும் தோற்றுவிப்பதுடன், முக்கியமாக இலங்கை அரசாங்கத்துடனான கொடுக்கல்வாங்கல்களையும் உள்நாட்டு வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுடனான கொடுக்கல்வாங்கல்களையும் உள்ளடக்குகின்றன. அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் ஏலத்தில் கோரப்படாத பகுதியின் கொள்வனவு உட்பட அரசாங்கத்துடனான கொடுக்கல்வாங்கல்கள் நிதிக் கொள்கைப் பொறிமுறையாக வங்கியினால் பிரயோகிக்கப்படுகிறது. அத்தகைய கொள்வனவுகள், விற்பனைகள் மற்றும் அவற்றின் மீதான வட்டி என்பன இலங்கை மத்திய வங்கியின் பதிவுகளில் தனியே ஏட்டுப் பதிவுகளாகப் பிரதிபலிக்கப்படுகின்றன. இவை இந் நிதிக்கூற்றில் 37, 38 ஆம் இலக்கக் குறிப்புகளில் தனித்தனியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

தனி அதிகாரம் கொண்ட சட்டபூர்வமான நிறுவனமாக விளங்கும் இலங்கை மத்திய வங்கியானது நாணய விதிச் சட்டத்திற்கிணங்க பொதுமக்களுக்கான நாணயத்தினை வழங்குகின்றது. மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நாணயம் உடமையாளரின் பெயரில் மத்திய வங்கியின் மீதான கோரலாக இருப்பதனைப் பிரதிபலிக்கிறது. இது மத்திய வங்கியின் பொறுப்பொன்றாக இருக்கின்ற அதேநேரம் உடமையாளரின் கையிலுள்ள காசாகவும் இருக்கின்றது. சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் அசைவு, காசுப்பாய்ச்சல் கூற்றுக்களை சமர்ப்பித்தலில் மத்திய வங்கிகளிடையே காணப்படும் தற்போதைய தொழிற்துறை நடைமுறைகளுடன் இசைந்துசெல்லும் விதத்தில் நிதியிடல் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக உள்ளடக்கப்படுகின்றது.

இலங்கை மத்திய வங்கி காசு/கொடுப்பனவுக் கட்டளைகள் ஊடாக நாணயத் தாள்கள் மற்றும் குத்திகள் அல்லது மத்திய வங்கியின் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் என்பன வடிவில், பெறப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகளுக்காக வழங்குநர்கள் மற்றும் ஊழியர்கள் என்போரை உள்ளடக்கிய பல்வேறுபட்ட பணம் கொடுபட வேண்டியோருக்கு காசு பகிர்ந்தளிக்கிறது. இது ஒன்றில் சுற்றோட்டத்திலுள்ள நாணயப் பொறுப்புடன் அல்லது வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களினால் வைத்திருக்கப்படும் வைப்புக்களுடன் சேர்க்கப்படுகின்றது. இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு நோக்கங்களுக்கான நாணயப் பயன்பாட்டின் அத்தகைய வடிவங்கள் இலங்கை மத்திய வங்கியின் காசு வெளிப்பாய்ச்சலில் ஒரு பகுதியை உருவாக்குகிறது.

காசுப்பாய்ச்சல் கூற்று நோக்கத்திற்காக, காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள் மேலே வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு, காசு/வெளிநின்ற கொடுப்பனவுக் கட்டளைகள் நீங்கலான, காசு மற்றும் காசிற்குச் சமமானவற்றை உள்ளடக்கியுள்ளன.

### 3.3.7 மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள்

மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் நிதி நிலைமை பற்றிய கூற்றில் சொத்துக்களாகத் தொடர்ந்தும் பதிவு செய்யப்படுகின்றன. மீள்கொள்வனவு செய்வதற்கான கடப்பாடு (மீள்கொள்வனவு செய்வதற்கான உடன்படிக்கையின் கீழ் விற்கப்பட்ட பிணையங்கள்) பொறுப்பொன்றாகக் காட்டப்பட்டுள்ளது. மீள்கொள்வனவுகள் கொடுக்கல்வாங்கல்களில் விற்பனை விலைக்கும் மீள்கொள்வனவு விலைக்குமிடையேயான வேறுபாடும் நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களில் கொள்வனவு விலைக்கும் விற்பனை விலைக்குமிடையேயான வேறுபாடும் முறையே செலவினத்தையும் வருமானத்தையும் பிரதிபலிப்பதுடன் இது வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் வைத்திருக்கப்படும் பிணையங்கள் (மீள்விற்பனை செய்வதற்கான உடன்படிக்கைகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்) நிதி நிலைமை பற்றிய கூற்றில் ஒரு சொத்தாகப் பதிவு செய்யப்படுகின்றன. மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு ஆகிய இரண்டும், ஒன்று சேர்ந்த வருமானம் அல்லது செலவினம் ஏதுமிருப்பின் அவற்றை உள்ளடக்கி கொடுக்கல்வாங்கல் பெறுமதியில் பதிவு செய்யப்படுகின்றன.

### 3.3.8 துணைநில் வைப்பு வசதி

2014 பெப்புருவரி 1ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் துணைநில் வைப்பு வசதியானது (முன்னர் துணைநில் மீள்கொள்வனவு வசதி) பிணை ஒதுக்கங்கள் இல்லாத “தூய வைப்புக்கள்” ஆக மாற்றப்பட்டன. எனவே, பங்கேற்கின்ற நிறுவனங்கள் அவற்றின் மிகையான நிதியங்களை தூய வைப்புக்களாக துணைநில் வைப்பு வசதி வீதத்தில் நாளாந்த அடிப்படையில் முதலிடலாம்.

துணைநில் கடன் வழங்கல் வசதியின் நடைமுறைகள் (முன்னர் துணைநில் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி) துணைநில் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியினை ஒத்ததாகவே காணப்படுகின்றது.

### 3.3.9 இலங்கை மத்திய வங்கிப் பிணையங்கள்

வங்கியானது அதன் நாணயக் கொள்கைத் தொழிற்பாடுகளின் கீழ் சந்தையிலுள்ள மேலதிகத் திரவத் தன்மையை உள்ளீர்த்துக் கொள்ளும் பொருட்டு காலத்திற்குக் காலம் இ.ம.வ. பிணையங்களை வழங்குகின்றது.

வழங்கப்படும் பிணையங்கள் பொறுப்புகளாகப் பதிவு செய்யப்படுகின்றன. வழங்கப்பட்ட விலைக்கும் முகப்புப் பெறுமதிக்குமிடையிலான வித்தியாசம் வருமானக் கூற்றில் செலவாகப் பதிவு செய்யப்படுகின்றது.

### 3.3.10 இலங்கை அரச பிணையங்கள்

வங்கியின் முதலீட்டுப்பட்டியல் இலங்கை அரசிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்களை உள்ளடக்குகின்றது. இவை இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட கடன்களையும் பிரதிநிதித்துவப்படுத்துவதனால் நிதி நிலைமை பற்றிய கூற்றில் இச் சொத்துப்பட்டியல் கடன் தீர்ப்பனவுக் கிரயச் செலவில் பதியப்படுகிறது.

### 3.3.11 அரசிற்கான முற்பணங்கள்

1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் திருத்தப்பட்டவாறான பிரிவு 89இன் கீழ் இலங்கை அரசிற்கு வழங்கப்பட்ட நேரடி தற்காலிக முற்பணங்களை அரசிற்கான கடன்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. இவை தொடர்ச்சியாக கடன் தீர்ப்பனவுக் கிரயச் செலவில் பதியப்படுகின்றன.

### 3.3.12 ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள்

ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் கடன் தீர்ப்பனவுக் கிரயச் செலவில் கொண்டு செல்லப்படுவதுடன் அறவிடமுடியாத தொகை ஏதுமிருந்தால் அதைக் கழித்த பின்பு இனங்காணப்பட்டு, பேணப்படுகின்றது. வரவேண்டிய எல்லாத் தொகையையும் சேகரிப்பதற்கு வங்கியினால் முடியாத தன்மைக்கு போதிய சான்று காணப்படுமிடத்து ஐயக்கடன் (பெறமுடியாத கடன்கள்) ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கொடுப்பனவுத் தொகையானது புத்தகத்திலுள்ள தொகைக்கும் மதிப்பிடப்பட்ட மீளப் பெறப்படத்தக்க தொகைக்குமிடையிலான வேறுபாடாகும். அறவிடமுடியாக் கடன்கள் அடையாளம் காணப்படும் போது பதிவழிக்கப்படுகின்றன.

**3.3.13 பிணையங்களின் கடன்பாடுகளும் பிணையங்களின் கடன் வழங்குதலும்**

வங்கி அதன் நாணயக் கொள்கை தொழிற்பாடுகளுக்காக காலத்திற்குக் காலம் முக்கிய நிறுவன ரீதியான முதலீட்டாளர்களிடமிருந்து அரச பிணையங்களைக் கடன்படுகிறது. இவ்வாறு கடன்பட்ட பிணையங்கள் சந்தையில் காணப்படும் மிகையான திரவத்தன்மையினை ஈர்ப்பதற்காக மீள்கொள்வனவு தொழிற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

பிணையங்களின் கடன்பாடுகள் என்பது வங்கியிடமிருந்து அப் பிணையங்களை திருப்புவது, இணங்கப்பட்ட கட்டணத்தினை செலுத்துவது, வழங்கலின் போது ஏதேனும் தவறு இடம் பெறும் சந்தர்ப்பத்தில் சந்தை வீதங்களில் இழப்பீட்டினைச் செலுத்துவது (வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் முதனிலைச் சந்தை பங்கேற்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்ட சந்தை வீதங்களின் படி) என்பனவற்றிற்காக வங்கியிடமிருந்து பெறப்படும் நிபந்தனையற்ற பூரணமான உத்தரவாதமெனப்படும்.

கடன்பட்ட பிணையங்கள் மற்றும் குறிப்பிட்ட நேரத்தில் மீள்கொள்வனவு தொழிற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படாத பிணையங்களினதும் சந்தைப் பெறுமதி எதிர்பாராத பொறுப்புக்களாக பதிவு செய்யப்படுகின்றன. தரகு ஒன்று சேர்ந்த அடிப்படையில் செலவிடப்படுகின்றன.

கடன் வழங்கும் கொடுக்கல்வாங்கல்களின் கீழ் இணைத்தரப்பினருக்கான பிணையங்களின் மாற்றல், சொத்தாண்மையின் இடர்நேர்வும் வெகுமதியும் மாற்றம் செய்யப்பட்டால் மட்டுமே நிதிக்கூற்றில் பிரதிபலிக்கப்படும்.

**3.3.14 பணியாளர்களுக்கான கடன்கள்**

வங்கியின் பணியாளர்கள் சலுகை வட்டி வீதத்தின் கீழ் கடன் வசதிகளைப் பெறுவதற்கு உரித்துடையவர்களாவர். மேற்படி 2008ஆம் ஆண்டிலிருந்து கடன்கள் ப.க.நி. 39இன் பிரகாரம் கழிவிடப்பட்ட காசுப்பாய்ச்சலைப் பயன்படுத்தி நியாயமாகப் பெறுமதியிடப்பட்டுள்ளன.

கழிவு வீதம் - மேற்படி வீதமானது இ.ம.வ. யின் (பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினால்) ஐ.அ.டொலர் வர்த்தக வட்டி வீதத்துடன் வங்கிக் கணக்காய்வுக் குழுவினால் இணங்கப்பட்டவாறு 1 சதவீத இடர்நேர்வுத் தவணைத் தொகையையும் சேர்த்து நீண்டகாலப் பணவீக்க இலக்கின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டு கழிவு வீதமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதோடு, கடன் காலத்தைப் பொறுத்து இது வேறுபடுகின்றது.

ஆண்டின் இறுதிக்கும் ஆண்டின் ஆரம்பத்திற்கும் இடையிலுள்ள பணியார்களுக்கான கடன்களின் தற்போதைய பெறுமதியின் வித்தியாசமானது, சலுகை வீதத்தில் மேற்படி கடன் வழங்கப்படுவதால் வங்கிக்கு ஏற்க நேரிடுகின்ற செலவைப் பதிவதற்காக வருடாந்தம் கடன்தீர் நிதியாக தீர்க்கப்படும் என்பதோடு, சந்தை வீதத்தில் இக் கடன் வழங்கப்பட்டிருப்பின் வங்கியினால் ஈட்ட முடியுமாயிருக்கும் வருமானத்தைப் பதிவு செய்யும் பொருட்டு, அதற்குச் சமமான தொகை ஏனைய வருமானத்தில் பதியப்படும்.

**சந்தைப் பெறுமதியைக் கணிப்பிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் கருதுகோள்கள்**

- பணியாளர்களுக்கான கடன்கள் வழங்கப்பட்ட திகதியாக சனவரி 01 ஆம் திகதியைக் கருதுதல்.
- மேற்படி கடன்களில் எவ்விதத் திருத்தமும் அல்லது முன்கூட்டிய தீர்ப்பனவு எதுவும் செய்யப்படவில்லை எனக் கருதுதல்.

**3.3.15 நிதிச் சொத்துக்களின் பெறுமதி இழக்கக்கூடிய தன்மை**

ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் ஒரு நிதிச் சொத்து பெறுமதி இழக்கக்கூடியதா என வங்கி மதிப்பிடுகிறது.

**3.3.16 கடன்தீர் கிரயத்திலுள்ள சொத்துக்களின் பெறுமதி இழப்பு**

கடன் மீதான நட்டத்தின் தேய்வடையக்கூடிய தன்மை மற்றும் கடன்தீர் நிதிக் கிரயத்தின் பெறுகைகள் எடுத்துச் செல்லப்படுதல் ஏற்பட்டு, ஒரு புற உண்மைச்சான்று இருக்குமானால் அந்த நட்டத் தொகையானது சொத்துக்கள் எடுத்துச் செல்லும் தொகைக்கும் மதிப்பீடு செய்யப்பட்ட நிதிச் சொத்துக்களின் அசல் தாக்குமிகு வட்டி வீதத்தில் கழிவு கொடுக்கப்பட்டுள்ளது. எதிர்கால காசுப்பாய்ச்சலின் தற்கால பெறுமதிக்கும் (ஏற்படாத எதிர்காலக்கடன் நட்டங்கள் உள்ளடங்கப்படவில்லை) இடைப்பட்ட வித்தியாசமாக அளவிடப்படுகிறது. (பயனுறு வட்டி வீதம் ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்பட்டளவில் கணிக்கப்பட்டுள்ளது) சொத்தின் எடுத்துச் செல்லும் தொகையானது ஒன்றில் நேரடியாகவோ அன்றேல் படிகளின் கணக்கை உபயோகிப்பதன் ஊடாகவோ குறைக்கப்படும் வருமானக் கூற்றிலே நட்டத் தொகை இனங்காணப்படும்.

தனிப்பட்ட முறையில் முக்கியத்துவம் வாய்ந்த நிதிச்சொத்துகளுக்காக தனிப்பட்ட முறையிலுள்ள முடக்கத்தின் புறவுண்மைச் சான்றுகளாக, தனிப்பட்ட முறையில் முக்கியத்துவம் பெறாத நிதிச் சொத்துக்களுக்காக தனிப்பட்ட முறையில் அல்லது கூட்டாக உள்ள முடக்கத்தின் புறவுண்மைச் சான்றுகளா என முதலில் வங்கி மதிப்பிடுகிறது. முக்கியமானதோ இல்லையோ, தனிப்பட்ட முறையில் மதிப்பீடு செய்யப்பட்ட ஒரு நிதிச் சொத்துக்கு முடக்கம் இருப்பதற்கான புறவுண்மைச் சான்றுகள் இல்லையென அது தீர்மானிக்குமிடத்து, அச்சொத்தானது ஒத்த கடன் இடநேர்வுக் குண அம்சங்களைக் கொண்ட நிதிச் சொத்துக்களின் குழுவில் உள்ளடக்கப்படுகிறது. அத்துடன் நிதிச் சொத்துக்களின் குழுவானது முடக்கத்துக்கு உள்ளானது என கூட்டாக மதிப்பிடப்படுகிறது. முடக்கத்திற்காக தனிப்பட்ட முறையில் மதிப்பிடப்பட்ட சொத்துக்களானவை அவைகளுக்கு முடக்க இருப்பு இருப்பின் அல்லது இனங்காணப்பட்டவையாகத் தொடர்ந்து இருப்பின் முடக்கத்தின் கூட்டு மதிப்பீட்டிற்குள் அவைகள் உள்ளடக்கப்படமாட்டாது.

தொடர்ந்து வந்த ஒரு காலப்பகுதியில் தேய்வடையக்கூடிய இழப்பின் தொகை வீழ்ச்சி அடைந்தால் அந்த வீழ்ச்சியை புறவுண்மை ரீதியாக முடக்கம் இனங்காணப்பட்டதன் பின்பாக கடந்த ஒரு நிகழ்வுடன் தொடர்புபடுத்த முடியும். முன்னதாக இனங்காணப்பட்ட முடக்க இழப்பும் நீக்கப்படும். அதைத் தொடர்ந்து வந்த முடக்க இழப்பின் நீக்குதலும் சொத்தின் எடுத்துச் செல்லும் பெறுமதி, அதனுடைய கடன்தீர் நிதிக் கிரயத்தை அந்த நீக்குதல் திகதியில் விஞ்சிவிடாது இருக்கும் அளவிற்கு வருமானக் கூற்றிலே இனங்காணப்படுகின்றது.

**3.3.17 விற்பனைக்குள்ள முதலீடுகளின் பெறுமதி இழப்பு**

விற்பனைக்குத் தயாராகவுள்ள ஒரு சொத்து முடக்கப்படுமாக இருந்தால் அதனுடைய கிரயத்திற்கும் (எந்தவொரு முதன்மைக் கொடுப்பனவும் கடன்தீர் நிதியும் நீங்கலாக) அதன் தற்போதைய நியாயப் பெறுமதிக்குமிடையிலான வித்தியாசத்தை உள்ளடக்கிய தொகையானது, இலாபத்திலோ நட்டத்திலோ முன்னதாக இனங்காணப்பட்ட எந்தவொரு முடக்க இழப்பையும் கழித்து, நிகரச் சொத்துக்களின் பெறுமதியிலிருந்து வருமானக் கூற்றிற்கு மாற்றப்படுகிறது. விற்பனைக்குத் தயாராகவுள்ளதாக வகைப்படுத்தப்பட்ட நிதிச் சொத்துக்களின் கருவிகள் சம்பந்தமான நீக்குதல்கள் இலாபத்தில் இனங்காணப்படுவதில்லை. கடன் கருவிகளின் மீதான முடக்க நட்டங்களின் நீக்குதலானது இலாபம் அல்லது நட்டத்தினூடாக நீக்கப்படுகிறது. அந்தக் கருவியின் நியாயப் பெறுமதியில் அதிகரிப்பு ஏற்படுவதானது புறவுண்மை ரீதியாக இலாபம் அல்லது நட்டத்தில் முடக்க நட்டம் இனங்காணப்பட்ட பின்பாக இடம்பெறும் நிகழ்வோடு தொடர்புடையதாக இருக்க முடியும்.

**3.3.18 வெளிநாட்டு நாணய நியமத்திலான பொறுப்புக்கள்**

வெளிநாட்டு நாணய நியதியிலான பொறுப்புக்கள், கடன் தீர்ப்பனவுக் கிரயச் செலவில் பதிவு செய்யப்படுகின்றன. இப் பொறுப்புக்களின் பெறுமதியில் ஏற்படுகின்ற மாற்றங்கள் நிதி நிலைமை பற்றிய கூற்றின் நியதிப் பொறுப்புக்களின் பெறுமதியின் அதிகரிப்பொன்றாகவோ அல்லது வீழ்ச்சியொன்றாகவோ இனங்காணப்படுகிறது. வெளிநாட்டு நாணய நியதியிலான பொறுப்புக்களின் பெறுமதியில் ஏற்படுகின்ற மாற்றத்தின் விளைவாகத் தோன்றும் வருமானமும் நட்டமும் உடனடியாகவே வருமானக் கூற்றில் செலவுகளாக இனங்காணப்படுகின்றது.

பொறுப்பு இன்னமும் செலுத்தப்பட வேண்டியிருக்குமிடத்து இலாபமோ அல்லது நட்டமோ விலை தேறல் செய்யப்படாத மீள்பெறுமதியிடலிலிருந்தான இலாபமாக/ (நட்டமாக) பதிவு செய்யப்படும்.

இலாபமோ அல்லது நட்டமோ பெறப்பட்டிருக்குமிடத்து (பொறுப்பின் மீள்கொடுப்பனவின் ஊடாக) அது விலை மாற்றங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட இலாபமாக/ (நட்டங்களாக) பதிவு செய்யப்படுகிறது.

**3.3.19 ஏனைய நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும்**

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நாணயத் தாள்கள், காசு வைப்புக்கள் மற்றும் குறுங்கால முற்பணங்கள் என்பன வர்த்தகம் செய்யப்படும் நாளில் இனங்காணப்படுகின்றன.

**3.4 ஏனைய சொத்துக்களும் பொறுப்புக்களும்**

**3.4.1 தங்கம்**

பன்னாட்டு ஒதுக்கத்தின் உள்ளடக்கத்தினைக் குறித்துரைக்கின்றதான நாணய விதிச் சட்டத்தின் 67(1) ஆம் பிரிவு மேற்படி ஒதுக்கத்தின் ஒரு பகுதியாக இ.ம.வ. தங்கத்தை வைத்திருக்கலாம் எனக் குறிப்பிடுகின்றது. ஆதலால், 2015 திசெம்பர் 31ஆம் திகதியன்று உள்ளவாறு வங்கியானது அதன் பன்னாட்டு ஒதுக்குகளின் ஒரு பகுதியாக ரூ.109.51 பில்லியனை (ஒதுக்கப்பட்டது ரூ.97.72 பில்லியன் மற்றும் ஒதுக்கப்படாதது ரூ.11.79 பில்லியன்) தங்கத்தில் வைத்திருந்தது. மேற்படி தங்கமானது பன்னாட்டு ஒதுக்குகளின் ஒரு பகுதியாக இருந்தமையால் பொதுவான வர்த்தக நடவடிக்கைகளின் போது ஒரு வர்த்தகப் பண்டமாகப் பயன்படுத்தப்படவில்லை என்பதோடு, தங்கமானது நியாயமான பெறுமதியில் மதிப்பிடப்பட்டு இலாபங்கள் அல்லது நட்டங்கள் வருமானக் கூற்றுகளுக்கு மாற்றப்பட்டன. இலாப ஒதுக்கீடுகளுக்கு முன்னர் தங்கத்திலிருந்தான தீர்க்கப்படாத இலாபங்கள் அல்லது நட்டங்கள் தொடர்புபட்ட ஒதுக்குக் கணக்குகளுக்கு மாற்றப்பட்டன.

**3.4.2 இருப்புக்கள்**

**3.4.2.1 நாணய இருப்பு**

வங்கியின் இருப்புக்களானது, சுற்றோட்டத்திற்கு இன்னும் வெளிப்படாத புதிய நாணயங்களை உள்ளடக்கியுள்ளது. புதிய நாணயத்தாள்கள் மற்றும் குத்திகளின் உற்பத்தி மற்றும் வடிவமைப்புடன் தொடர்பான செலவுகள் ஆரம்பத்தில் கிரயத்தில் அளவிடப்படுகின்றன. சுற்றோட்டத்தில் வெளியிடப்பட்டுள்ள புதிய நாணயத்தாள்கள் மற்றும் குத்திகளிற்கான செவானது நிறையேற்றப்பட்ட சராசரி அடிப்படையில் நிர்ணயிக்கப்படுவதுடன், வெளியிடப்படும் வேளையில் வருமானக் கூற்றில் பதியப்படுகின்றது. மெதுவாக அசையும் இருப்புக்களுக்கு ஏற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது.

**3.4.2.2 ஏனைய இருப்புக்கள்**

ஏனைய இருப்புக்கள் கிரயச் செலவு மற்றும் தேறிய விற்றுப் பெறக்கூடிய பெறுமதி இவற்றில் குறைவான பெறுமதியில் வைத்திருக்கப்படுகின்றது. கிரயச் செலவானது நிறையேற்றப்பட்ட சராசரி அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றது.

**3.4.3 ஆதனங்களும் பொறிகளும் உபகரணங்களும்**

ஆதனம், பொறி, உபகரணம், நாளாந்தப் பராமரிப்புச் செலவுகளைத் தவிர்த்து பெறுமானத் தேய்வு ஏற்பாடு மற்றும் பெறுமதி முடக்கத்தை ஒன்று சேர்த்துக் கழித்துக் கிரயத்தில் கூறப்பட்டுள்ளது. இனங்காணல் விடயத்தை பூர்த்தி செய்வதற்காக இந்த ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பகுதிகளை மாற்றீடு செய்யும் போது ஏற்படும் செலவீனங்களையும் இந்தக் கிரயம் உள்ளடக்கியிருக்கிறது. காணியும் கட்டடங்களும் கட்டடம் மீதான பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டு மீள்பெறுமதியிடல் திகதியை தொடர்ந்தான முடக்கம் அறவிடப்பட்டு நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டுள்ளது.

சொந்தக் காணி நீங்கலாக, பின்வரும் மதிப்பிடப்பட்ட பயன்மிக்க இருப்புக்காலத்தைப் பயன்படுத்தி தேய்மானம் நேர்கோட்டு முறையில் கணிக்கப்பட்டிருக்கிறது.

| சொத்தின் வகை | பயனுள்ள இருப்புக் காலம் |
|---|---|
| சொந்தக் காணியிலுள்ள கட்டடங்கள் | 50 வருடங்களுக்கு மேல் |
| குத்தகைக் காணிகளிலுள்ள கட்டடங்கள் | குத்தகைக் காலத்திற்கு மேல் |
| பொறியும் பொறியின் முக்கிய பகுதிகளும் | 20 வருடங்கள் |
| தளபாடங்கள் மற்றும் கருவிகள் | 10 வருடங்கள் |
| உந்து ஊர்திகள் | 5 வருடங்கள் |
| 2014 இலிருந்து பெறப்பட்ட உந்து ஊர்திகள் | 10 வருடங்கள் |
| கணனி வன்பொருள் | 4 வருடங்கள் |
| ஏனையவை | 3 வருடங்கள் |

நிகழ்வுகள் அல்லது சூழ்நிலை மாற்றங்கள் எடுத்துச் செல்லும் பெறுமதியானது மீளப்பெற முடியாதென சுட்டிக்காட்டும் பொழுது பொறிகளினதும் உபகரணங்களினதும் எடுத்துச் செல்லும் பெறுமதிகள் முடக்கத்திற்காக மீளாய்வு செய்யப்படுகின்றன. கிரயத்தின் ஆரம்ப இனங்காணலைத் தொடர்ந்து, காணி மற்றும் கட்டடங்கள் மீள்மதிப்பிடப்பட்ட தொகையில் எடுத்துச் செல்லப்படுகின்றன. இது மீள் மதிப்பீடு செய்யப்பட்ட திகதியில் நியாயப் பெறுமதியாக உள்ள பொழுது, கட்டடங்கள் மீதான பின் தொடர்ந்து வந்த ஒன்று சேர்க்கப்பட்ட பெறுமானத் தேய்வுகளும், பின்தொடர்ந்து வந்த ஒன்று சேர்க்கப்பட்ட முடக்க நட்டங்களும் கழிக்கப்பட்டு இருக்கும்.

வங்கியின் காணி மற்றும் கட்டிடம் என்பனவற்றை மீள்மதிப்பிடுவதற்கான கொள்கை யாதெனில் குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுக்கொரு தடவை அல்லது குறிப்பிடத்தக்க பெறுமதிச் சீராக்கம் தேவையென தெரியவரும் பொழுது ஏதேனும் குறுகிய காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதாகும்.

எந்த மீள்மதிப்பீடு மிகையும் நிதி நிலைமை பற்றிய கூற்றின் நிகரச் சொத்துப் பிரிவில் உள்ளடக்கப்பட்டு, மீள்மதிப்பீட்டு ஒதுக்கில் செலவு வைக்கப்படுகிறது. வருமானக்கூற்றிலே முன்னதாக இனங்காணப்பட்ட அதே சொத்தின் மீள்மதிப்பீட்டு வீழ்ச்சியானது, மறுதலையாகாத அளவில், இருக்கும் போது அந்த அதிகரிப்பானது வருமானக்கூற்றிலே இனங்காணப்படுகிறது. அதே சொத்தின் மீதான நேரடியாக குறைநிரப்பும், ஒரு முந்திய தொகையின் பற்றாக்குறையானது மீள்மதிப்பீட்டு ஒதுக்கின் மிகைக்கு எதிராக நேரடியாக மிகை நிரப்புவது தவிர்ந்த நிலைமைகளில், ஒரு மீள்மதிப்பீட்டுப் பற்றாக்குறை வருமானக்கூற்றிலே இனங்காணப்படுகிறது. அகற்றும் நிலையில், குறிப்பிட்ட விற்கப்படுகின்ற சொத்தோடு தொடர்புடைய எந்த மீள்மதிப்பீட்டு மிகையும், தக்கவைத்துக் கொள்ளும் வருவாய்களுக்கு மாற்றப்படுகின்றது. ஒரு ஆதனம், பொறி மற்றும் உபகரணம், அகற்றுகையின் போது அல்லது அதன் பாவனை அல்லது அகற்றுகையின் மூலம் எதிர்கால பொருளாதார நன்மைகளை வழங்காது என எதிர்பார்க்கப்படும் போது அதன் இனங்காணல் முடிவடைகிறது.

அச்சொத்தின் இனங்காணல் முடிவடைவதன் மூலம் உருவாகின்ற ஏதாவது இலாபம் அல்லது நட்டம் (தேறிய அகற்றுகை வருமானத்துக்கும் சொத்தின் எடுத்துச் செல்லும் தொகைக்கும் இடையிலான வித்தியாசமாகக் கணிக்கப்பட்டது) சொத்து இனங்காணப்படல் முடிவடைந்த வருடத்தின் வருமானக்கூற்றில் உள்ளடக்கப்படுகிறது. மிகுதியாகவுள்ள சொத்தின் பெறுமானங்கள் பயனுள்ள இருப்புக் காலங்கள் மற்றும் முறைகள் மீள்பார்வை செய்யப்படுவதுடன் பொருத்தமாய் இருப்பின் கிரமமாகத் தக்கவாறு அமைத்துக் கொள்ளப்படுகிறது.

**3.4.4 அருவச் சொத்துக்கள்**

கணனி வன்பொருள்களில் முழுமையாக உள்ளடங்காதுள்ள கணனி மென்பொருட்கள் அருவச் சொத்துக்களாகக் காட்டப்பட்டு கிரயச் செலவில் இனங்காணப்பட்டுள்ளன. ஆரம்ப இனங்காணலைத் தொடர்ந்து 4 வருட கால பயனுள்ள ஆயுட்கால அடிப்படையில் திரண்ட கடன்தீர் நிதி எவையேனும் இருப்பின் கழிக்கப்பட்டு கிரயச் செலவில் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது.

**3.4.5 ஏனைய சொத்துக்கள்**

ஏனைய சொத்துக்கள் எதிர்பார்க்கப்பட்ட பெறத்தக்க பெறுமதியில் முன்கொண்டு செல்லப்படுகிறது.

### 3.4.6 நிதிசாராச் சொத்துக்களின் பெறுமதியிழப்பு

சூழ்நிலைகளின் நிகழ்வுகள் அல்லது மாற்றங்கள் முன்கொண்டு செல்லும் பெறுமதியில் முடக்கத்தை உண்டுபண்ணலாம் என்பதைக் காட்டுகின்றனவா என்பதையும் நிதிசாரா சொத்துக்கள் முடக்கப்படலாம் என்பதற்கான அறிகுறிகள் உள்ளதா என்பதையும் அறிக்கை செய்யும் ஒவ்வொரு திகதியிலும் வங்கி மதிப்பிடுகின்றது. அத்தகைய அறிகுறிகள் காணப்படின், சொத்துக்களின் மீளப் பெறக்கூடிய தொகையின் மதிப்பீடொன்றை வங்கி மேற்கொள்ளும். ஒரு சொத்தின் தேய்வடைந்ததாகக் கருதப்படின் அதன் மீளப்பெறக்கூடிய தொகைக்கு குறைத்தெழுதப்படும்.

### 3.4.7 ஏற்பாடுகள்

கடந்த கால நிகழ்வொன்றின் விளைவாக, வங்கி தற்போதைய கடப்பாடொன்றினை (சட்ட ரீதியான அல்லது அமைப்பு ரீதியான) கொண்டிருக்குமிடத்து ஏற்பாடுகள் இனங்காணப்பட்டு அக் கடப்பாட்டைத் தீர்ப்பதற்காக பொருளாதார நன்மைகளை உள்ளடக்கியிருக்கும் வளங்களின் வெளிப்பாய்ச்சல் தேவைப்படுவதுடன், இக் கடப்பாட்டுத் தொகையை நம்பத் தகுந்த மதிப்பீடொன்று மூலம் அறிய முடியுமாயின் ஏற்பாடுகள் இனங்காணப்படுகின்றன. ஏற்பாடொன்று மீளளிக்கப்படும் என வங்கி எதிர்பார்க்குமிடத்து அந்த மீளளிப்பு இறுதியில் நிச்சயமாக ஏற்படும் வேளையில் மட்டும் தனியான சொத்தாக மீளளித்தல் இனங்காணப்படுகிறது.

### 3.4.8 சுற்றோட்டத்திலுள்ள நாணயம்

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நாணயம் அதனை வைத்திருப்பவரின் சார்பாக வங்கி மீதான கோரலலைக் கொண்டிருப்பதனைக் காட்டுகின்றது. சுற்றோட்டத்திலுள்ள நாணயத்துக்கான பொறுப்பு நிதி நிலைமை பற்றிய கூற்றில் முகப்புப் பெறுமதியில் பதியப்பட்டுள்ளது.

### 3.4.9 ஓய்வூதியம் மற்றும் தொழில்நிலைக்குப் பிந்திய ஏனைய நலத்திட்டங்கள்

வங்கியால் கையாளப்படும் ஊழியர் நிலைக்குப் பிந்திய ஓய்வூதியம் மற்றும் ஏனைய நலத்திட்டங்கள் குறிப்பு 44இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

### 3.4.10 நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டங்கள்

ஓய்வூதியம், விதவைகள் மற்றும் அநாதைகளுக்கான ஓய்வூதியம், விதுரர் மற்றும் அநாதைகளுக்கான ஓய்வூதியம், இளைப்பாற்றுப் பணிக்கொடை மற்றும் வேலைக் காலத்திற்குப் பிந்திய மருத்துவ நலன்கள் போன்ற குறித்துரைக்கப்பட்ட நலத்திட்டங்களை வங்கி செயற்படுத்துகின்றது. முதல் மூன்று திட்டங்களையும் பொறுத்தவரையில் வங்கியும் தகுதியுள்ள பயனாளியும் பிறிதாக நிர்வகிக்கப்படும் நிதியங்களுக்குப் பங்களிப்பினைச் செய்கின்றனர். எறிவு செய்யப்பட்ட அலகு கொடுகடன் ஆயுட்கால மதிப்பீட்டு முறையை உபயோகித்து, ஒவ்வொரு திட்டத்திற்கும் குறித்துரைக்கப்பட்ட திட்டங்களின் கீழ் நன்மை வழங்கும் செலவு நிர்ணயிக்கப்படுகின்றது.

### 3.4.11 நிர்ணயிக்கப்பட்ட உதவுதொகைத் திட்டங்கள்

ஊழியர்கள், ஏற்புடைய நியதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க ஊழியர் சேம நிதியப் பங்களிப்புக்களுக்கும் ஊழியர் நம்பிக்கை நிதியப் பங்களிப்புக்களுக்கும் தகுதியுடையவர்களாவர். வங்கியானது ஊழியர்களின் மொத்தச் சம்பளத்தில் ஊழியர் சேம நிதியத்திற்கு 24 சதவீதத்தினையும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 3 சதவீதத்தினையும் பங்களிப்புச் செய்கிறது. இவை தனித்தனியாக நிருவகிக்கப்பட்டு வரும் நிர்ணயிக்கப்பட்ட உதவுதொகைத் திட்டங்களாகும்.

### 3.4.12 கொடைகள்

கொடைகள் (பெறப்படும் அத்துடன் அவற்றுடன் இணைந்த நிபந்தனைகள் ஏதுமிருப்பின் இணங்கி ஒழுகப்படும் என்பதற்காக உறுதிப்பாடு இருக்குமிடத்து) அவற்றின் நியாயமான பெறுமதியில் இனங்காணப்பட்டு, உரிமை மூலதனத்தின் கீழ் காட்டப்படும். கொடைகள் செலவு விடயங்களுடன் தொடர்பானதாக இருக்கும் பொழுது, ஒழுங்குமுறையானதொரு அடிப்படையில் இழப்பீடு செய்வதற்கெனக் கருதப்பட்ட செலவினங்களுக்கு அவற்றை ஈடுசெய்வதற்குத் தேவையான காலப்பகுதிக்கு வருமானக் கணக்குக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளது. கொடைகள் சொத்தொன்றுடன் தொடர்பானதாக இருக்குமிடத்து, நியாயப் பெறுமதி பிற்போடப்பட்ட அரச கொடைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு ஏற்புடைய சொத்தின் எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டுக் காலம் வரை, ஏற்புடைய சொத்தின் தேய்மானக் கொள்கையுடன் இசைந்த விதத்தில் ஒழுங்குமுறையான அடிப்படையில் வருமானக்கூற்றுக்கு விடுவிக்கப்படும்.

### 3.4.13 ஆளணிச் செலவுகள்

ஆளணிச் செலவுகள் அனைத்து அலுவலர் நன்மைகளினதும் முழுச் செலவினையும் உள்ளடக்குகின்றது. சம்பளங்கள் தொடர்பான செலவுகள் மற்றும் ஆண்டின் இறுதியில் ஒன்று சேரும் விடுவிப்புக்கள் என்பன மற்றைய உள்ளூர் கொடுபடத்தக்கனவற்றுள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 3.4.14 தொழிற்படு குத்தகைகள்

வங்கி, குத்தகைதாரராக இருக்குமிடத்து தொழிற்படு குத்தகைகள் மீது செலுத்தத்தக்க வாடகைகள் குத்தகைக்கு எடுக்கப்பட்ட சொத்துக்களிலிருந்து பெறப்படும் எதிர்பார்க்கப்பட்ட நன்மைகளுடன் இசைந்து செல்லும் அடிப்படையில் குத்தகையின் தவணையைக் கருத்திற் கொண்டு வருமானக் கூற்றில் இனங்காணப்படுகிறது.

### 3.4.15 வரி விதிப்பு

வங்கியின் வருமானமானது, திருத்தப்பட்டவாறான 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 118ஆம் பிரிவின் கீழ் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. மேலும், வங்கியானது 2013ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க பொருளாதார பணிகள் விதிப்புச் (திருத்தப்பட்ட) சட்டத்தின்படி, பொருளாதார பணிகள் விதிப்பு விலக்களிக்கப்பட்டதுடன், 2013ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க பெறுமதிசேர் வரி (திருத்தப்பட்ட) சட்டத்தின்படி நிதியியல் பணிகள் வழங்கல்கள் மீது பெறுமதிசேர் வரியானது விலக்களிக்கப்பட்டது.

### 3.4.16 வருமானங்களும் செலவினங்களும்

வங்கிக்குப் பொருளாதார நன்மைகளை பெரும்பாலும் கொண்டு வரக்கூடியதாகவும் அவ் வருமானத்தினை நம்பகமான முறையில் அளவிடக்கூடியதாகும் உள்ள போது வருமானமானது இனங்காணப்படுகின்றது. மேற்கொள்ளப்பட்ட செலவிற்கும் வருமானத்தின் குறித்துரைக்கப்பட்ட விடயங்களின் வருவாய்க்குமிடையிலான நேரடி இணைப்பொன்றின் அடிப்படையில் வருமானக்கூற்றில் செலவுகள் இனங்காணப்பட்டுள்ளன. வியாபாரத்தைக் கொண்டு நடத்துவது தொடர்பாகவும் ஆதனம், பொறி, உபகரணங்களை வினைத்திறனுள்ள விதத்தில் பேணுவதற்காகவும் மேற்கொள்ளப்பட்ட அனைத்து செலவினங்களும் ஆண்டிற்கான இலாபத்தினைக் கணிக்கும் போது வருமானத்தில் கழிக்கப்படுகின்றன.

வருமானத்தையும் செலவினத்தையும் இனங்காண்பதற்கு முன்னர் பின்வரும் குறித்துரைக்கப்பட்ட பிரமாணங்கள் நிறைவேற்றப்பட வேண்டும்:

#### 3.4.16.1 வட்டி

சேகரித்தல் ஐயத்திற்கிடமில்லாதவிடத்து உண்மைக் கொள்வனவு விலையை அடிப்படையாகக் கொண்ட பயன்தரு விளைவு முறையைப் பயன்படுத்தி ஒன்று சேர்ந்த அடிப்படையின் மீது அனைத்து வட்டி உழைக்கும் கருவிகளுக்குமான வட்டி வருமானமும் செலவினங்களும் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளது. வட்டி வருமானமானது, நிலையான முதலீடு மற்றும் வர்த்தகம் செய்யப்படுகின்ற பிணையங்கள் என்பன மீதான வட்டி வருவாய்களையும் கொடுபட வேண்டிய கழிவுகளையும் திறைசேரி உண்டியல் மற்றும் ஏனைய கழிவிடப்பட்ட கருவிகளின் வட்டங்களையும் உள்ளடக்குகிறது. கடன்களின் சேகரிப்பு ஐயத்திற்கிடமாகும் பொழுது வட்டி வருமானம் இடைநிறுத்தப்படுகிறது. அத்தகைய வருமானம் பெறப்படும் வரை வட்டி வருமானத்திலிருந்து நீக்கப்படுகிறது.

#### 3.4.16.2 பங்கிலாபங்கள்

பங்குடமையாளர்கள் கொடுப்பனவைப் பெறுவதற்கான உரிமை நிறுவப்பட்டதுடன் பங்கிலாப வருமானம் இனங்காணப்படுகிறது.

3.4.16.3 பல்தரப்பட்டவை

பல்தரப்பட்ட வருமானமும் செலவினங்களும் ஒன்று திரண்ட அடிப்படையில் இனங்காணப்பட்டுள்ளன.

ஆதனம், பொறி, உபகரணங்களின் விற்பனை மீதான வருமானத் தன்மையின் தேறிய இலாபங்களும், நட்டங்களும் விற்பனை மூலம் பெற்ற பெறுகைகளிலிருந்து சொத்து கொண்டுள்ள பெறுமதியையும் அது சார்ந்த விற்பனைச் செலவுகளையும் கழித்த பின்பு வருமானக்கூற்றில் காட்டப்பட்டுள்ளன.

தற்செயலான நடவடிக்கை மற்றும் முக்கிய வருமானத்தை உருவாக்குகின்ற நடவடிக்கைகள் என்பனவற்றிலிருந்து எழும் இலாபங்களும், நட்டங்களும் மற்றும் குறிப்பிடத்தக்களவில் இல்லாத கொடுக்கல்வாங்கல் தொகுதியிலிருந்து எழும் நட்டங்களும் தேறிய அடிப்படையில் திரட்டப்பட்டு அறிக்கையிடப்பட்டு வெளிப்படுத்தப்படுகிறது.

3.4.17 எதிர்பாரா பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள்

படுகடன்களின் அனைத்து உத்தரவாதங்கள், முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் ஏனைய கடப்பாடுகள் நிதி நிலைமை பற்றி கூற்றுக்கு வெளிவாரியான விடயங்களாக இனங்காணப்பட்டு எதிர்பாராத பொறுப்புக்கள் மற்றும் மூலதனக் கடப்பாடுகளாகிய உரிய தலைப்புகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன. தேவைப்படுமிடத்து அவ்வாறான தொகைகள் மிகச் சிறந்த மதிப்பீடுகளில் அளவிடப்படுகின்றது.

## 4. நடவடிக்கைகளின் தன்மையும் அளவும்

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க திருத்தப்பட்ட நாணய விதிச் சட்டத்தின் கீழ் எடுக்கப்படும் அல்லது பின்பற்றுவதற்கு அங்கீகாரமளிக்கப்படும் கொள்கைகளை அல்லது நடவடிக்கைகளை நிர்ணயிப்பதற்கு மேலதிகமாக மத்திய வங்கியின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் தொழிற்பாடுகள் என்பன ஒப்படைக்கப்பட்டதுடன் பொதுவாக வங்கியின் முகாமை, தொழிற்பாடுகள் மற்றும் நிர்வாகம் என்பவற்றிற்கும் பொறுப்பாக இருக்கும். வங்கி, இலங்கையின் நாணய, நிதி மற்றும் கொடுப்பனவு முறை என்பவற்றின் நிர்வாகம், மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் என்பவற்றுக்கு முக்கிய பொறுப்பாக இருப்பதுடன், அரசாங்கத்தின் இறை முகவராண்மையாகவும் தொழிற்படுகிறது. வங்கியின் நடவடிக்கைகள் முக்கியமாகப் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கும்.

- நாணய மற்றும் செலாவணி வீதக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துதல்
- நாணய வெளியீடு
- நிதி முறையில் சுதந்திரமான போட்டியையும் உறுதிப்பாட்டையும் ஏற்படுத்துதல்
- வரைவிலக்கணப்படுத்தப்பட்ட நிதி நிறுவனங்களுக்கு உரிமம் வழங்கலும் மேற்பார்வையிடலும்
- வங்கிகளுக்கிடையிலான தீர்ப்பனவு முறையினை ஒழுங்கு செய்தலும், முகாமைப்படுத்தலும், மற்றும் கொடுப்பனவு முறையின் சுமூகமான தொழிற்பாட்டினை மேம்படுத்துதலும்
- பல்வேறுபட்ட வசதிகளின் கீழ் அரசாங்கம், வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்குக் கடன்களையும் முற்பணங்களையும் வழங்குதல்
- அரசுடனும் அரசின் சார்பில் தொழிற்படுகின்ற முகவர்களுடனும் குறித்துரைக்கப்பட்ட ஒழுங்குகளின் கீழ் அரசின் வைப்பாளராகத் தொழிற்படும்.

இலங்கையின் உற்பத்தியாக்க மூலவளங்களின் அபிவிருத்தியினை ஊக்குவித்து மேம்படுத்துகின்ற நோக்கத்துடனும் அதன் பொருளாதாரம், விலை மற்றும் நிதியியல் முறை உறுதிப்பாடு ஆகிய குறிக்கோள்களை எய்தும் நோக்கத்துடனும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை வெளிநாட்டு நாணய மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் என பரந்தளவில் வகைப்படுத்திக்கொள்ள முடியும். மேற்படி நடவடிக்கைகளின் பெறுபேறுகள் வருனாக்கூற்றில் தொழிற்பாட்டு நடவடிக்கைகளாக உள்ளடக்கப்பட்டுள்ளன.

4.1 வெளிநாட்டு நாணய நடவடிக்கைகள்

வெளிநாட்டு நாணயத் தொழிற்பாடுகள் முக்கியமாக, மத்திய வங்கியின் வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவத் தொழிற்பாடுகளின் கீழான இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களை வைத்திருப்பதன் மூலமாக ஏற்படுகின்றது. வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவ சொத்துப்பட்டியல் வெளிநாட்டுச் செலாவணி தலையீட்டு நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படும் வெளிநாட்டு நாணயங்களையும் வர்த்தக நோக்கங்களுக்காக வைத்திருக்கப்பட்ட ஏனைய வெளிநாட்டு நாணயச் சொத்துக்களையும் உள்ளடக்குகிறது.

வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள் பல்வேறு நாணயங்களில் வைத்திருக்கப்படுகின்றன. முக்கியமான நாணயங்களாக ஐக்கிய அமெரிக்க டொலர், அவுஸ்திரேலிய டொலர், யூரோ, ஸ்டேர்லிங் பவுண் யப்பானிய யென் மற்றும் நியூசிலாந்து டொலர் என்பன காணப்பட்டன. இவ் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களில் வைத்திருக்கப்பட்ட நிதிக் கருவிகள், முக்கியமாக வேறு நாடுகளினது பிணையங்கள், நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களின் கீழ் வைத்திருக்கப்படும் பிணையங்கள் அல்லது ஏனைய மத்திய வங்கிகள், வர்த்தக வங்கிகள் மற்றும் கட்டுக்காப்பு நிறுவனங்களுடன் வைத்திருக்கப்படும் நிலுவைகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

இலங்கை மத்திய வங்கி காலத்திற்குக் காலம் உள்நாட்டுச் சந்தைத் தொழிற்பாடுகளிலிருந்து எழும் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் கூட வைத்திருக்கின்றது.

4.2 உள்நாட்டு நாணய நடவடிக்கைகள்

உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் பின்வருமாறு தோன்றுகின்றன.

(i) திரவத்தன்மை முகாமைத்துவத் தொழிற்பாடுகள்: திரவத்தன்மை முகாமைத்துவமானது வங்கித்தொழில் முறைக்கு நிதியங்களை முற்பணமாக வழங்குதல் மூலம் அல்லது வங்கித்தொழில் துறையிலிருந்து நிதியங்களை மீளப் பெறல் மூலம் அரசுக்கான நாளாந்த தேறிய பாய்ச்சல்களையும் அல்லது அரசிடமிருந்து தேறிய நாளாந்தப் பாய்ச்சல்களையும் இலங்கை மத்திய வங்கி நாளாந்தம் எதிரீடு செய்வதுடன் பெருமளவிற்கு தொடர்புடையதாகவுள்ளது. இத் தொழிற்பாடுகளில் பெரும்பாலானவை நாளாந்த திறந்த சந்தைத் தொழிற்பாடுகளூடாக மேற்கொள்ளப்படுகின்றன.

(ii) சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் பொறுப்பிற்கு உதவுவதற்கான இலங்கை அரசாங்கத்தின் பிணையங்களை உள்ளடக்கியதாக முதலீட்டுப் பட்டியலொன்று வைத்திருக்கப்படுகின்றது. வர்த்தக நோக்கத்திற்கன்றி நாணயத் தொழிற்பாடுகளுக்காக இம் முதலீடுகளை வைத்திருப்பதே வங்கியின் கொள்கையாகும்.

4.3 நம்பிக்கை மற்றும் கட்டுக்காப்பு நடவடிக்கைகள்

கட்டுக்காப்பு மற்றும் நிர்வாக ஒழுங்குமுறைகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் நிர்வகிக்கப்பட்ட தொகை, அவை வங்கியின் நிதிக்கூற்றுக்களின் ஆக்கக் கூறுகளில் ஒரு பகுதியாக அமையாததால் இந் நிதிக்கூற்றில் உள்ளடக்கப்படவில்லை.

## 5. வெளிநாட்டுப் பிணையங்களிலான முதலீடுகள்

| | 2015 ரூபா 000 | 2014 ரூபா 000 |
|---|---|---|
| இலாபம் அல்லது நட்டத்தினூடான சந்தைப் பெறுமதியிலான பிணையங்கள் | **35,779,665** | 61,495,307 |
| விற்பனைக்குள்ள முதலீடுகள் | **352,054,482** | 408,189,500 |
| **மொத்த நிதியியல் சொத்துக்கள்** | **387,834,147** | 469,684,807 |

## 6. பெறுதி நிதியியல் சாதனங்கள்

(அ) கீழேயுள்ள அட்டவணை, சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களாக அவற்றின் பெயரளவுத் தொகையுடன் சேர்த்து பதிவு செய்யப்பட்டுள்ள பெறுதி நிதியியல் சாதனங்களின் சந்தைப் பெறுமதியினைத் தருகின்றது. மொத்தமாகப் பதிவு செய்யப்பட்ட பெயரளவுத் தொகை, பெறுதித் தொகை, சொத்துக்கள்

தொடர்பான வீதங்களை அல்லது சுட்டெண்ணினை சுட்டுகின்றதாக இருந்ததுடன் பெறுதிகளின் பெறுமதிகளில் ஏற்படும் மாற்றங்களை அளவிடுமொன்றாகவும் காணப்பட்டது. பெயரளவுத் தொகை ஆண்டின் இறுதியில் வெளிநின்ற கொடுக்கல்வாங்கல்களின் அளவினை எடுத்துக்காட்டியதுடன் இது சந்தை இடர்நேர்வுகளையோ அல்லது கொடுகடன் இடர்நேர்வுகளையோ எடுத்துக்காட்டவில்லை.

| | 2015 | | | 2014 | | |
|---|---|---|---|---|---|---|
| | சொத்துக்கள் | பொறுப்புக்கள் | பெயரளவு தொகை | சொத்துக்கள் | பொறுப்புக்கள் | பெயரளவு தொகை |
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| நாணய பரஸ்பர பரிமாற் றல்கள் | - | **13,989,728** | **379,377,271** | 1,579,560 | 2,758,093 | 285,044,665 |
| முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி | **2,259** | **169** | **4,725,243** | 630 | - | 425,908 |
| உள்ளடக்க ப்பட்ட பெறுதிகள் - நாணயத் தெரிவுகள் | - | **10,290,162** | **157,782,073** | - | 16,449,303 | 159,213,437 |
| வட்டி வீத பரஸ்பர பரிமாற்றல்கள் | **1,886** | **249** | **1,440,623** | 47 | 427 | 1,310,486 |
| மொத்தம் | **4,145** | **24,280,308** | **543,325,210** | 1,580,237 | 19,207,822 | 445,994,496 |

(ஆ) நாணய பரஸ்பர பரிமாற்றல்கள், நாணயத் தெரிவுகள், முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி ஒப்பந்தங்கள் மற்றும் வட்டிவீத பரஸ்பர பரிமாற்றல்கள் போன்றவற்றை உள்ளடக்கிய மேற்படி பெறுதிகள், பன்னாட்டு ஒதுக்குகளை பேணுவதற்கான நியதித் தேவை நோக்கங்களை வசதிப்படுத்துவதற்காக வங்கிகளால் பேணப்படும் பன்னாட்டு ஒதுக்குகளின் சந்தை மற்றும் திரவத்தன்மை இடர்நேர்வுகளை முகாமை செய்யும் நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுகின்றன. மேலும், வங்கியானது நாட்டின் நிதியியல் முறைமையினை வலுப்படுத்துவதற்காகவும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளை நீண்ட காலத்திற்கு வெளிநாட்டு நிதியங்களை கொண்டு வருவதற்கு ஊக்குவிப்பதற்காகவும் இலங்கை ரூபாவின் பன்னாட்டு உறுதித்தன்மையினைப் பேணுவதற்காக வெளிநாட்டு ஒதுக்குகளின் மட்டத்தினை உயர்த்தும் பொருட்டு அவ்வங்கிகளுடனான பரஸ்பர பரமாற்றல் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுகிறது.

(இ) பெறுதிகள் என்பது வட்டிவீதங்கள், நிதியியல் சாதனங்களின் விலைகள், பண்ட விலைகள், வெளிநாட்டுச் செலாவணி வீதங்கள், கொடுகடன் இடர்நேர்வு மற்றும் சுட்டெண்களில் ஏற்படும் மாற்றங்களுக்கு பதிலிறுத்தும் விதத்தில் அவற்றின் பெறுமதியினைப் பெற்றுக்கொள்ளும் நிதியியல் உடன்படிக்கைகளாகும்.

(ஈ) வங்கியின் பெறுமதிகளினது சொத்துப்பட்டியலின் குறிப்பிடத்தக்க பகுதி குறுங்கால திரவத்தன்மை தேவைப்பாடுகளை முகாமைப்படுத்துவதற்கானதொரு உபாயமாக மேற்கொள்ளப்பட்ட நாணய பரஸ்பரபரிமாற்றத்தினை உள்ளடக்குகின்றது. நாணய பரஸ்பர பரிமாற்றலில் வங்கியானது இணங்கப்பட்ட வீதங்களில் மற்றொரு நாணயத்தின் பரிவர்த்தனையில் வேறுபட்ட நாட்களில் நாணயத்தின் குறிப்பிட்ட தொகையினை செலுத்துகிறது/ பெறுகிறது.

(உ) வெளிநாட்டுச் செலாவணி முன்னோக்கிய ஒப்பந்தத்திலிருந்து, வங்கியானது இணங்கப்பட்ட எதிர்காலத்திகதியொன்றில் இணங்கப்பட்ட வீதமொன்றில் வெளிநாட்டு நாணயத்தின் குறிப்பிட்டதொரு தொகையினை வாங்குவதற்கு அல்லது விற்பதற்கான கடப்பாடுகளை பெற்றிருக்கிறது.

(ஊ) வட்டிவீத பரஸ்பர பரிமாற்றத்தில் வங்கி தொடர்பான வீதமொன்றிற்கு (இலண்டன் வங்கிகளுக்கிடையிலான வழங்கல் வீதம் + இலாப எல்லை) சுட்டெண்படுத்தப்பட்ட மிதக்கும் வீதத்தினைப் பெறுகின்ற வேளையில், இணைத்தரப்பினருக்கு (பரஸ்பர பரிமாற்றல் வீதம்) நிலையான வீதத்தைச் செலுத்துகின்றது.

(எ) பெறுதி உடன்படிக்கைகளுக்கு வங்கியின் வெளிப்படுத்துகைத் தன்மையானது, அத்தகைய பெறுதிகளிலிருந்து எதிர்பார்க்கப்படும் நன்மைகள் வங்கிக்கு திடமான தன்மை கொண்டவை என்பதனை உறுதிப்படுத்துவதற்காக வங்கியின் ஒட்டு மொத்த இடர்நேர்வு முகாமைத்துவத்தின் ஒரு பகுதியாக நெருக்கமாகக் கண்காணிக்கப்படுகிறது.

## 7. ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள்

| | 2015 ரூபா 000 | 2014 ரூபா 000 |
|---|---|---|
| சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் உடமைகள் | **970,272** | 1,199,895 |
| ப.நா.நிதிய அனுமதிப் பங்கு | **82,527,455** | 78,489,778 |
| ப.நா.நிதியத்துடனான வைப்புக்கள் | **138,623** | 126,356 |
| மொத்த ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | **83,636,350** | 79,816,029 |

### (அ) சிறப்பு எடுப்பனவு உரிமை உடமைகள்

சிறப்பு எடுப்பனவு உரிமைகளைக் (சிஎஉ) கொண்டிருத்தலென்பது, ப.நா.நி. அங்கத்தவர்களுக்கு எவ்விதத் தடைகளுமின்றிப் பயன்படுத்தக் கூடியதாயுள்ள நாணய வகைகளுக்கான நிலையான உரிமையாகும். அதாவது சிஎஉ வைத்திருப்பவர்களால் இந் நாணயங்களுக்காக சிஎஉ வைப் பரிமாறிக் கொள்ள முடியும். இவ்வங்கத்தவர்கள் இந் நாணயங்களுக்காக சிஎஉ வைத்திருப்பதற்கும் ஏற்றுக் கொள்வதற்கும் கடப்பாடுடையவர்களாதலாலும் அத்துடன் சிஎஉ முறைமையின் நெறிப்படுத்தல்களுக்கு ஏற்புடையதான நானாவிதப் பொறுப்புகளுக்கு மதிப்பளிப்பதற்கு கடப்பாடுடையவர்களாதலாலும் ஒதுக்குச் சொத்தாக சிஎஉ முக்கியத்துவம் வாய்ந்ததாயுள்ளது. தடையின்றிப் பயன்படுத்தக்கூடியதான நாணயத்தின் மீது சிஎஉ இற்குள்ள உரிமைக்கு இரண்டு விதத்தில் மதிப்பளிப்பதை ப.நா.நி. உறுதி செய்கின்றது. அதாவது, பலவீனமான வெளிநாட்டு நிலைமைகளிலுள்ள அங்கத்தவர்களிடமிருந்து சிஎஉ வைக் கொள்வனவு செய்வதற்குப் பலம் வாய்ந்த வெளிநாட்டு நிலைமையிலுள்ள அங்கத்தவர்களைப் பெயரிடுவதன் மூலமும் மற்றும் முகாமைக்குட்படுத்தப்பட்ட சந்தையினுள் அங்கத்தவர்களிடையே தாமாக முன்வந்து பரிமாற்றிக் கொள்வதன் மூலமுமாகும். மேற்குறிப்பிடப்பட்ட அறிக்கையிடல் தினங்களில் வங்கி வைத்திருந்த மொத்தத் தொகை மேலே காட்டப்பட்டுள்ளது.

### (ஆ) ப.நா. நிதிய அனுமதிப் பங்கு

அங்கத்துவ நாடுகளிலிருந்து கிடைக்கின்ற ப.நா.நிதிய அனுமதிப் பங்கானது (மூலதன உதவுதொகை) ப.நா.நிதியத்தின் வளங்களுக்கான முதன்மை மூலமாகும். பரந்தளவில் ஒரு நாட்டின் ஒப்பிட்டளவிலான பொருளாதார நிலைமை கருத்தில் கொள்ளப்பட்டு ஒவ்வொரு நாட்டினதும் அனுமதிப் பங்கு தீர்மானிக்கப்படுகின்றது. ப.நா. நிதியத்தில் இணைகின்ற சந்தர்ப்பத்தில் ஒரு நாடு அதற்குரிய அனுமதிப் பங்குத் தொகையில் நூற்றுக்கு 25 வீதத்தினை பரவலாக ஏற்றுக்கொள்ளப்படுகின்ற வெளிநாட்டு நாணயத்தின் மூலம் அல்லது சிஎஉ யில் செலுத்துதல் வேண்டுமென்பதோடு, எஞ்சிய 75 வீதத்தினையும் தம் நாட்டுப் பணத்தின் மூலம் செலுத்துதல் வேண்டும். வங்கியொன்றின் ப.நா. நிதியத்துடனான அதன் கொடுக்கல்வாங்கல்கள், ப.நா.நிதியத்தின் உறுப்புரையின்படி, அரசாங்கத்தின் சார்பில் அதன் சொந்தக் கணக்கின் மீது இடம்பெறுவதனால் ப.நா.நிதியத்தின் அனுமதிப் பங்கு வங்கியின் சொத்துக்களைப் பிரதிபலிக்கிறது. ப.நா. நிதியத்தின் அனுமதிப் பங்கு தொடர்பில் செலுத்தப்படத்தக்க தொகை குறிப்பு 19இல் அனுமதிப் பங்கு பொறுப்பு என்ற தலையங்கத்தின் கீழ் காட்டப்படுகிறது. உறுப்பினரொருவரின் அனுமதிப் பங்கு பின்வருவன உட்பட ப.நா. நிதியத்துடனான நாட்டின் நிதியியல் மற்றும் நிறுவன ரீதியான தொடர்புகளை நிர்ணயிக்கின்றது.

(i) **சந்தாக்கள்:** ப.நா. நிதியத்திற்கான அங்கத்தவரின் பங்களிப்பானது அங்கத்தவரின் அனுமதிப் பங்குக்குச் சமமாகும். அதன் மூலம் அங்கத்தவர் ப.நா. நிதியத்திற்கு வழங்குவதற்கு கடப்பாடுடைய கூடியபட்ச நிதி வளங்களின் தொகை தீர்மானிக்கப்படுகிறது. அங்கத்தவர் பங்களிப்பை முழுமையாகச் செலுத்துதல் வேண்டும். 25 சதவீதத்தினை ப.நா.நிதியம் தீர்மானிக்கின்ற ஒதுக்குச்

சொத்துக்களிலிருந்தும் (சிஎஉ அல்லது பயன்படுத்தக்கூடிய நாணயங்களில்) மற்றும் எஞ்சிய தொகையை அங்கத்தவரின் நாணயத்தின் மூலமும் செலுத்துதல் வேண்டும்.

**(ii) வாக்களிக்கும் அதிகாரம்:** ப.நா.நிதியத்தின் தீர்மானங்களின் போது அங்கத்தவரின் வாக்களிக்கும் அதிகாரமானது அனுமதிப் பங்கின் மூலம் தீர்மானிக்கப்படுகிறது. ஒவ்வொரு ப.நா.நி. அங்கத்தவரும் அடிப்படை வாக்குகளுடன், அனுமதிப் பங்கின் ஒவ்வொரு சிஎஉ 100,000 க்கு ஒரு மேலதிக வாக்கு வீதமும் உரித்துடையவராவர். 2008 சீர்திருத்தமானது மொத்த வாக்குகளின் 5.51 சதவீதத்தில் அடிப்படை வாக்குகளின் எண்ணிக்கையினை நிர்ணயித்துள்ளது.

**(iii) நிதியிடலை பெறுவதற்கான வசதி:** அங்கத்தவரால் ப.நா. நிதியத்திடமிருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய நிதி வசதிகளுக்கு (வசதியின் எல்லை) அங்கத்தவருடைய அனுமதிப் பங்கு அடிப்படையாய் அமைகிறது. துணைநில் ஒழுங்குவிதிகள் மற்றும் விஸ்தரிக்கப்பட்ட திட்டங்களுக்கேற்ப அங்கத்தவரால் தற்காலத்தில் வருடாந்த அனுமதிப் பங்கின் 200 சதவீதமும் திரண்ட ரீதியில் 600 சதவீதம் வரையிலும் கடன் பெறலாம். அசாதாரணமான சந்தர்ப்பங்களிலும், குறிப்பிட்ட பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டும் இவ் வசதி இதை விட அதிகரிக்கலாம்.

**(iv) சிஎஉ ஒதுக்கல்:** அங்கத்தவருடைய அனுமதிப் பங்குகளின் விகிதாசாரப்படி இவர்களுக்கான சிஎஉ ஒதுக்குத் தொகை தீர்மானிக்கப்படுகிறது.

**(இ) ப.நா. நிதியத்துடனான வைப்புக்கள் - பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கை நிதிய வைப்பு**

பன்னாட்டு நாணய நிதியத்தில் நிர்வகிக்கப்படும் விசேட எதிர்பாரா நிகழ்வுக் கணக்கு-2 (எ.நி.கணக்கு-2) இற்குப் பிந்திய கணக்கில் இலங்கையின் வைப்பிலிருந்து சிஎஉ 788,783 மில்லியனை மாற்றுவதன் மூலம் 2000 ஏப்பிறல் 21ஆம் திகதி இலங்கை அரசாங்கத்திற்கும் பன்னாட்டு நாணய நிதியத்திற்குமிடையில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் கீழ் பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கைப் பொறுப்பு வைப்பு மேற்கொள்ளப்பட்டது. எ.நி. கணக்கை முடிவுறுத்துவதற்கு பன்னாட்டு நாணய நிதியத்தினால் தீர்மானிக்கப்பட்ட போது, இலங்கைக்கெதிராக எ.நி. கணக்கில் வைக்கப்பட்டிருந்த மீதியை மாற்றுவதன் மூலம் பன்னாட்டு நாணய நிதியத்தின் வழிகாட்டலின் கீழ் இந்தக் கணக்கு உருவாக்கப்பட்டது. எ.நி. கணக்கிற்குப் பிந்திய கணக்கிலுள்ள மீதிகளை முழுமையான நன்கொடையாக அல்லது பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி கடனுக்கு மானியம் வழங்கும் ஒரு வழியாக பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கைப் பொறுப்புக்கு வழங்குவதற்கு கவனத்தில் கொள்ளுமாறு அந்தக் கணக்கில் மீதிகளைக் கொண்டிருந்த நாடுகளை பன்னாட்டு நாணய நிதியம் கேட்டுக் கொண்டது. அதற்கிணங்க இலங்கை அரசாங்கம், எ.நி. கணக்கிற்குப் பிந்திய கணக்கிலுள்ள நிதிகளை முழுமையான நன்கொடையாகவன்றி 2018 வரையிலான வட்டியில்லா வைப்பாக பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கைப் பொறுப்புக் கணக்குக்கு மாற்றுவதற்கு இணங்கியது.

## 8. இலங்கை அரச பிணையங்கள்

அரச பிணையங்களின் பட்டியலானது நாணய விதிச்சட்டத்தின் 90 (2) பிரிவின் கீழ், நாணய விதிக்கொள்கையை அமுல்படுத்துவதற்காக திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் நோக்கில் கொள்வனவு செய்யப்பட்டு பேணப்படுகின்றது.

## 9. அரசுக்கான தற்காலிக முற்பணங்கள்

இவை நாணய விதிச் சட்டத்தின் 89ஆவது பிரிவின் கீழ் இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட முற்பணங்களைக் குறிக்கின்றன. இது திரண்ட நிதியத்திலிருந்து உறப்படுவதற்காக, அங்கீகரிக்கப்பட்ட நிதியியல் செலவுகளுக்கான முற்பணங்களின் ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டதாகும்.

## 10. வங்கிகளுக்கான கடன்கள்

இக்கடன்களானது நாணய விதிச் சட்டத்தின் பாகம் V பகுதி III ‘ஏ’ இற்கிணங்க, உற்பத்தித்திறன் தேவைகளுக்காக வழங்கப்பட்டுள்ளது.

| | 2015 ரூபா 000 | 2014 ரூபா 000 |
|---|---|---|
| நடுத்தர மற்றும் நீண்டகால கொடுகடன் திட்டம் | | |
| - தொடர்புபட்ட தரப்பினர்கள் | **33,534** | 35,729 |
| சுசகன சுனாமி கடன் திட்டம் கட்டம் I மற்றும் II | | |
| - தொடர்புபட்ட தரப்பினர்கள் | **10,665** | 54,270 |
| மாகாண அபிவிருத்திக் கொடுகடன் திட்டம் - தொடர்புபட்ட தரப்பினர்கள் | **233,867** | 598,273 |
| சௌபாக்யா கடன் திட்டம் | | |
| - தொடர்புபட்ட தரப்பினர்கள் | **175,296** | 251,191 |
| - ஏனையவர்கள் | **47,864** | 65,106 |
| கிழக்கின் பொருளாதார நடவடிக்கைகளை மீளமைத்தல் கடன்திட்டம் | | |
| - தொடர்புபட்ட தரப்பினர்கள் | **212,265** | 311,186 |
| - ஏனையவர்கள் | **76,984** | 101,090 |
| வடக்கு மற்றும் கிழக்கில் பாதிக்கப்பட்ட வீடுகளின் திருத்தல் | | |
| - தொடர்புபட்ட தரப்பினர்கள் | **36,267** | 42,250 |
| வடக்கின் எழுச்சிக் கடன் திட்டம் (மீள்நிதியிடல் கட்டம் II) | | |
| - தொடர்புபட்ட தரப்பினர்கள் | **84,140** | 54,978 |
| - ஏனையவர்கள் | **2,778** | 2,601 |
| **கழிக்குக:** | | |
| ஐயத்திற்குரிய பெறத்தக்கவைகளுக்கான ஏற்பாடு | **(27,302)** | (27,302) |
| **தேறிய பெறத்தக்கவை** | **886,357** | 1,489,372 |

ஐயத்திற்குரிய கடன்களுக்கான ஏற்பாட்டிலுள்ள அசைவு

| | 2015 ரூபா 000 | 2014 ரூபா 000 |
|---|---|---|
| ஆண்டின் ஆரம்பத்தில் | **27,302** | 27,302 |
| ஐயக்கடன்களின் பதிவழிப்பு | - | - |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **27,302** | 27,302 |

## 11. நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான பங்குரிமை முதலீடுகள்

நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 105 “ஏ” ற்கு அமைய, இம்முதலீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப் பிரிவின கீழ் நாணயச் சபையின் கருத்துப்படி வங்கித்தொழில் மற்றும் நிதித் துறையில் மனிதவள மூலவளங்களையும் தொழில்நுட்ப அபிவிருத்தியையும் முன்னேற்றுவதற்கும் மேம்படுத்துவதற்கும் அல்லது இலங்கையில் தொழிற்படுகின்ற வர்த்தக வங்கிகளுக்கிடையே கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவினை வசதிப்படுத்துவதற்குமாக ஏதாவது கம்பனி நிறுவப்படுமிடத்து அக்கம்பனிகளிலிருந்து பங்குகளைக் கொள்வனவு செய்து வைத்திருப்பதற்கு வங்கிக்கு வலுவளிக்கப்பட்டுள்ளது.

(i) முதலீட்டு நிலைமை

| கம்பனி | வியாபாரத்தின் தன்மை | கொண்டிருக்கும் உடமை % 2015 | 2014 |
|---|---|---|---|
| லங்கா கிளியர் (பிறைவேட்) லிமிடெட் | தன்னியக்கத் தீர்ப்பனவு | **19.66** | 19.66 |
| பிட்ச் ரேட்டிங்ஸ் லங்கா லிமிடெட் | கொடுகடன் தரமிடல் | **10** | 10 |
| வரையறுக்கப்பட்ட லங்கா நிதிச் சேவைகள் பணியகம் | தன்னியக்க நிதிய மாற்றல் | **7.5** | 7.5 |
| வரையறுக்கப்பட்ட இலங்கை கொடுகடன் தகவல் பணியகம் | கொடுகடன் தகவல் வழங்கல் ஏற்பாடு | **19.3** | 19.3 |

(ii) முதலீடுகளின் கொண்டு செல்லும் பெறுமதி

| கம்பனி | 2015 ரூபா 000 | 2014 ரூபா 000 |
|---|---|---|
| வரையறுக்கப்பட்ட இலங்கை கொடுகடன் தகவல் பணியகம் | **5,845** | 5,845 |
| லங்கா கிளியர் (பிறைவேட்) லிமிடெட் | **29,500** | 29,500 |
| பிட்ச் றேட்டிங்ஸ் லங்கா லிமிடெட் | **3,500** | 3,500 |
| வரையறுக்கப்பட்ட லங்கா நிதிச் சேவைகள் பணியகம் | **2,250** | 2,250 |
| **மொத்த முதலீடுகள்** | **41,095** | 41,095 |

## 12. ஏனைய சொத்துக்கள்

| | 2015 ரூபா 000 | 2014 ரூபா 000 |
|---|---|---|
| உள்ளக நிதியங்களின் முதலீடு | **4,302,590** | 3,430,085 |
| தீர்ப்பனவுச் செலவில் அலுவலர் கடன்கள் | **4,234,875** | 3,648,436 |
| திறைசேரி மற்றும் ஏனைய அமைச்சுக்களிலிருந்து பெறத்தக்கவை | **1,378,695** | 1,399,832 |
| பிரதேச அபிவிருத்தி திணைக்களத்திடமிருந்து பெறத்தக்கவை | **311,572** | 490,318 |
| தீர்ப்பனவுச் செலவில் தொகுதிக் கடன்களில் முதலீடு | **10,564** | 9,328 |
| ஏனைய பெறத்தக்கவைகள் | **27,131** | 21,922 |
| | **10,265,427** | 8,999,921 |
| நிதியல்லாச் சொத்துக்கள் | | |
| அலுவலர் கடன் தொடர்பான பிற்போடப்பட்ட சொத்து | **899,025** | 1,020,064 |
| | **11,164,452** | 10,019,985 |

தொகுதிக் கடன்களில் செய்யப்பட்ட முதலீடுகள், ஒடுக்கிவிடும் செயற்பாடுகள் நிலையிலுள்ள மோர்கன்ரைல் கிறடிட் லிமிடெட்டினால் 1988 காலப்பகுதியில் பெறப்பட்டு, 2011இல் பதிவழிக்கப்பட்ட மீள்நிதியிடல் கடன்களின் பகுதித் தீர்ப்பனவாக வங்கியினால் பெறப்பட்ட தொகுதிக் கடன்களை பிரதிபலிக்கிறது.

வங்கியினால் இலங்கை சேமிப்பு வங்கியின் ரூ.10,839,500 மொத்தப் பெறுமதி கொண்ட தொகுதிக் கடன்கள் பெறப்பட்டதுடன் அது தீர்ப்பனவுச் செலவில் குறிப்பிடப்படுகிறது. தொகுதிக் கடனின் 10 ஆண்டுகள் பிணைகளற்றவையாகவும், மீட்கப்படக் கூடியவையாகவும் மற்றும் கீழ்நிலைப்படுத்தப்பட்டவையாகவும், ஆண்டொன்றிற்கு 5 சதவீத வட்டியை அல்லது ஓராண்டு திறைசேரி உண்டியல் விளைவு வீதத்தினை இதில் எது குறைவானதோ அத்தொகை வருடாந்தம் ஒன்றுசேர்ந்து வைக்கப்படும்.

## 13. தங்கம்

நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 67(1) மற்றும் பிரிவு 67(2) இன்படி, தங்கம் வங்கியின் பன்னாட்டு ஒதுக்குகளின் ஒரு பகுதியாக வைத்திருக்கப்படுகிறது. நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 67(2) இன்படி, நாணயச் சபை, மத்திய வங்கியால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவே இலகுவாக தங்கமாக மாற்றக்கூடிய குறைந்ததொரு அணு ஒதுக்காவது தங்க வடிவிலோ அல்லது நாணய வடிவிலா வைத்திருப்பதற்கு முயல வேண்டும்.

## 14. இருப்புக்கள்

| | 2015 ரூபா 000 | 2014 ரூபா 000 |
|---|---|---|
| சுற்றோட்டத்திலுள்ள நாணயத் தாள்கள் | 2,179,294 | 1,675,897 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயக் குத்திகள் | 961,716 | 1,553,451 |
| வழங்குனரிடமிருந்தான இடைப்போக்கிலுள்ள நாணயக்குத்திகள் | 143,336 | 165,110 |
| வழங்குனரிடமிருந்தான இடைப்போக்கிலுள்ள நாணயத் தாள்கள் | 128,026 | 231,380 |
| | 3,412,372 | 3,625,838 |
| **கழிக்குக:** மெதுவாக அசையும் இருப்புக்களுக்கான ஏற்பாடு | (45,000) | (45,000) |
| | 3,367,372 | 3,580,838 |
| எழுதுகருவிகளும் சில்லறை பொருட்பட்டியல்களும் | 52,259 | 39,331 |
| மருந்துவ நிலைய இருப்புக்கள் | 333 | 311 |
| **கிரயச் செலவு அல்லது பெறத்தக்க தேறிய பெறுமதி இவற்றில் குறைவான பெறுமதியில் மொத்த இருப்புக்கள்** | 3,419,964 | 3,620,480 |

## 15. ஆதனங்கள், பொறிகள் மற்றும் கருவிகள்

| கிரயம் | காணியும் கட்டடமும் | இயந்திரங்கள், இயந்திரப் பொறிகள் | தளபாடங்களும் கருவிகளும் | உந்து ஊர்திகள் | கணனி | ஏனையவை வாசிப்புப் பொருட்கள் | ஏனையவை நடைபெற்று வரும் கட்டுமானம் | 2015 மொத்தம் | 2014 மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| **சனவரி 1ஆம் நாள் உள்ளவாறு** | 13,207,653 | 1,237,954 | 808,029 | 454,475 | 793,714 | 51,892 | 869,047 | **17,422,764** | 16,701,909 |
| மேலதிக சேர்ப்பனவுகள் | 161,748 | 45,534 | 427,781 | 35,000 | 37,307 | 1,115 | 1,118,265 | **1,826,750** | 2,071,625 |
| நீக்கப்பட்டவை/ மாற்றல்கள் | - | - | (5,309) | - | (20,447) | - | (620,709) | **(646,465)** | (1,350,770) |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறு** | 13,369,401 | 1,283,488 | 1,230,501 | 489,475 | 810,574 | 53,007 | 1,366,603 | **18,603,049** | 17,422,764 |

| தேய்மானம் | காணியும் கட்டடமும் | இயந்திரங்கள், இயந்திரப் பொறிகள் | தளபாடங்களும் கருவிகளும் | உந்து ஊர்திகள் | கணனி | ஏனையவை வாசிப்புப் பொருட்கள் | ஏனையவை நடைபெற்று வரும் கட்டுமானம் | 2015 மொத்தம் | 2014 மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| **சனவரி 1ஆம் நாள் உள்ளவாறு** | 477,388 | 655,431 | 593,381 | 289,017 | 688,283 | 32,568 | - | **2,736,068** | 2,472,994 |
| ஆண்டிற்கான தேய்மானம் | 185,105 | 63,003 | 118,105 | 51,828 | 50,273 | 1,360 | - | **469,674** | 377,786 |
| மீள்வகைப்படுத்தல் | - | - | - | - | - | - | - | **-** | (1,452) |
| அகற்றல்கள் | - | - | (4,674) | - | (20,334) | - | - | **(25,008)** | (113,260) |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறு** | 662,493 | 718,434 | 706,812 | 340,845 | 718,222 | 33,928 | - | **3,180,734** | 2,736,068 |
| **தேறிய ஏட்டுப் பெறுமதி** | 12,706,908 | 565,054 | 523,689 | 148,630 | 92,352 | 19,079 | 1,366,603 | **15,422,315** | 14,686,696 |

காணிகள் கட்டடங்களுக்கான கொண்டு செல்லும் பெறுமதி சந்தைப் பெறுமதியில் குறிப்பிடப்படுகின்றது. மிக அண்மைக்கால சுயாதீனமான மதிப்பீடு திரு. பி.பீ. கலுகலகெதர (பட்டயம் பெற்ற மதிப்பீட்டாளர்) அவர்களால் 2012 மாச்சு 31இல் மேற்கொள்ளப்பட்டதோடு, அது 2012 ஏப்பிறல் 30இல் உள்ளவாறாக குறிப்பிடப்பட்டுள்ளது.

நிதியாண்டுப் பகுதியில் வங்கியினால் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்களின் காசு வடிவிலமைந்த மொத்தச் செலவு ரூ.1,206.04 மில்லியன்களாகும். (2014 - ரூ.835.01 மில்லியன்)

2015 திசெம்பர் 31இல் உள்ளவாறு இன்னும் பயன்பாட்டிலிருக்கும் முழுமையாகத் தேய்வடைந்த சொத்துக்களின் பெறுமதி ரூ.1,897.17 மில்லியனாக இருந்தது. (2014 - ரூ.1,783.22 மில்லியன்)

காணி, கட்டடங்களின் உள்ளடக்கம்

| | ஏட்டுப் பெறுமதி 2015 ரூபா 000 | ஏட்டுப் பெறுமதி 2014 ரூபா 000 |
|---|---|---|
| சொந்த உரிமைக் காணி | **5,689,063** | 5,643,100 |
| சொந்த உரிமைக் காணிகளிலுள்ள கட்டடங்கள் | **6,935,388** | 7,002,418 |
| குத்தகைக் காணிகளிலுள்ள கட்டடங்கள் | **82,457** | 84,748 |
| | **12,706,908** | 12,730,266 |

மீள் பெறுமதியிடப்பட்ட காணிகள் மற்றும் கட்டடங்களின் தேய்மானங்கள் கழிக்கப்பட்ட கிரயச் செலவு எடுத்துச் செல்லல் பெறுமதியாக நிதிக் கூற்றுக்களில் புகுத்தப்பட்டிருப்பின் இது ரூ.9,998.75 மில்லியனாகும். (2014 - ரூ.10,011.91 மில்லியன்)

## 16. அருவச் சொத்துக்கள்

| | 2015 ரூபா 000 | 2014 ரூபா 000 |
|---|---|---|
| **கணனி மென்பொருட்கள்:** | | |
| **கிரயச் செலவு:** | | |
| சனவரி 1இல் உள்ளவாறு | **927,022** | 638,020 |
| மேலதிக சேர்ப்பனவு | **21,626** | 290,657 |
| அகற்றல்கள் | **-** | (1,655) |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு | **948,648** | 927,022 |
| பதிவழிப்பு மற்றும் பெறுமதியிழப்பு | | |
| சனவரி 1இல் உள்ளவாறு | **620,938** | 602,422 |
| ஆண்டுக்கான பெறுமானத் தேய்வுக் கட்டணம் | **87,100** | 20,136 |
| அகற்றல்கள் | **-** | (1,620) |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **708,038** | 620,938 |
| **தேறிய ஏட்டுப் பெறுமதி** | | |
| சனவரி 1இல் உள்ளவாறு | **306,084** | 35,598 |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு | **240,610** | 306,084 |

நிதியாண்டுப் பகுதியில் வங்கி காசுக் கொள்வனவு செய்த அருவச் சொத்துக்களின் மொத்தச் செலவு ரூ.21.63 மில்லியனாகும் (2014 - ரூ.290.66 மில்லியன்)

## 17. வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள்

| | 2015 ரூபா 000 | 2014 ரூபா 000 |
|---|---|---|
| வெளிநாட்டு வங்கிகளுக்குச் செலுத்த வேண்டியவை | **11,524,984** | 11,365,076 |
| ஏனைய வெளிநாட்டு நிதியியல் நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டியவை | **523,257** | 313,407 |
| | **12,048,241** | 11,678,483 |

## 18. ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம்

ஆசிய தீர்ப்பனவு ஒன்றியமானது, 1974ஆம் ஆண்டில் பங்குபற்றும் நாடுகளின் மத்திய வங்கிகளுக்கிடையே கொடுப்பனவுகளைத் தீர்ப்பனவு செய்கின்ற நிறுவனமாக, ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்தின் பொருளாதார மற்றும் சமூக அலுவல்கள் ஆணைக் குழுவின் அனுசரணையின் கீழ் நிறுவப்பட்டது. இலங்கை, பங்களாதேஸ், ஈரான், நேபாளம், பாக்கித்தான், இந்தியா, பூட்டான், மியன்மார் மற்றும் மாலைதீவு ஆகியன பங்குபற்றும் நாடுகளாகும். இது பங்குபற்றும் நாடுகளுக்கிடையே நடைமுறைப் பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல்களைப் பல்தரப்பு அடிப்படையில் தீர்த்து வைப்பதற்கான தீர்ப்பனவு வசதியொன்றாகும். ஒவ்வொரு மாத இறுதியிலுமுள்ள தேறிய நிலையை இரண்டு மாத கடன் கால கட்டத்தின் பின்னர் தீர்த்து வைத்தல் அல்லது பெற்றுக்கொள்ளல் நடைபெறுகிறது. தேறிய கடன்படுநர்களால் 0.02 சதவீதத்திற்கும் 0.23 சதவீதத்திற்குமிடையிலான வட்டி அமெரிக்க டொலரிலும், (2014இல் 0.03 சதவீதம் மற்றும் 0.07 சதவீதம்) 0.00 சதவீதத்திற்கும் 0.00 சதவீதத்திற்குமிடையிலான வட்டி யூரோவிலும் (2014இல் 0.00 சதவீதம் மற்றும் 0.12 சதவீதம்) இவ் வசதிக்காகச் செலுத்தப்படுவதுடன் இது, தீர்த்து வைக்கும் நாட்களுக்கிடையே தேறிய கடன்படுநர்களின் நாளாந்த மொத்த மீதிகளுக்கு மாற்றப்படுகிறது. மேற்படி மீதிகளின் மூலம், குறிப்பிட்ட அறிக்கையிடல் திகதியில் ஆசிய தீர்ப்பனவுக் ஒன்றியத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய தொகை காட்டப்படுகிறது.

## 19. பன்னாட்டு நாணய நிதியம்

| | 2015 ரூபா 000 | 2014 ரூபா 000 |
|---|---|---|
| வட்டியுடனான கடன்கள் - நடைமுறையல்லாதவை | **34,386,440** | 94,841,815 |
| வட்டியுடனான கடன்கள் - நடைமுறை | **65,334,236** | 68,678,555 |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒதுக்கு | **78,946,116** | 75,083,657 |
| ப.நா. நிதியத்துக்குச் செலுத்த வேண்டிய ஏனைய தொகை | **47,512,222** | 47,039,094 |
| அனுமதிப் பங்குப் பொறுப்பு | **25,465,330** | 22,368,012 |
| | **217,257,904** | 213,169,318 |
| ப.நா.நி. தொடர்பான மொத்தப் பொறுப்புகள் | **251,644,344** | 308,011,133 |

(அ) 2014இலிருந்து இது ப.நா.நிதியத்திடமிருந்து பெற்ற துணைநில் ஒழுங்கை உள்ளடக்கியிருந்தது.

(ஆ) **துணைநில் ஒழுங்குகளானது** கடன்பெறும் நாடுகளின் பேரண்டப் பொருளாதார முகாமைத்துவத்தின் மீதான குறிப்பிட்ட நிலைமைகள் தொடர்பாக, பன்னாட்டு நாணய நிதியத்தால் வழங்கப்படுகின்ற சென்மதி நிலுவைக்கு உதவும் நிதியியல் வசதியாகும். ப.நா. நிதியம் சென்மதி நிலுவைக்கு உதவியாக இலங்கைக்கு 2009 யூலையில் சிஎஉ 1.65 பில்லியனுக்கு (ஐ.அ.டொலர் 2.60 பில்லியன்) ஒப்புதலளித்தது. துணைநில் ஒழுங்குகள் 2012 யூலையில் இறுதித் தொகுதியை பெற்றுக்கொண்டதுடன், 2012இல் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டது. இக்கடன் வசதி 5 ஆண்டுகளுக்குள் மீளச் செலுத்தப்பட வேண்டியதுடன் மீள் கொடுப்பனவுகள் 2012 ஒத்தோபரில் தொடங்கப்பட்டன. துணைநில் ஒழுங்குவசதிகளின் வட்டி வீதம், தீர்ப்பனவுக் கட்டணம் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட இலாபம் ஆகிய இரண்டு கூறுகளை உள்ளடக்கியதாகும். தீர்ப்பனவுக் கட்டணம் சிஎஉ வட்டி வீதத்தினை அடிப்படையாகக் கொண்டு வாராந்தம் கணிக்கப்படுகிறது. நிர்ணயிக்கப்பட்ட இலாபம் ப.நா. நிதியத்துடனான அனுமதிப் பங்கில் 300 சதம் வரையிலான வெளிநின்ற கடன் தொகையில் ஆண்டிற்கு ஒரு சதவீதமாக இருக்கும். வெளிநின்ற கடன் தொகை அனுமதிப்பங்கான 300 சதவீதத்தினை விஞ்சும் பொழுது 300 சதவீதத்தினை விஞ்சிய வெளிநின்ற தொகை மீது ஆண்டிற்கு 2 சதவீதமான மேலதிகக் கட்டணம் விதிக்கப்படும். முதலாவது மீள்கொடுப்பனவான சிஎஉ 25.80 மில்லியன், 2012 ஒத்தோபர் 25ஆம் நாளன்று செலுத்தப்பட்டது. சிஎஉ 292.83 மில்லியன், சிஎஉ 473.69 மில்லியன் மற்றும் சிஎஉ 361.73 மில்லியன் மொத்தத் தொகையைக் கொண்ட மீள்கொடுப்பனவுகள் முறையே 2013,

2014 மற்றும் 2015 ஆகிய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டன. 2015 திசெம்பர் 31இல் உள்ளவாறான வெளிநின்ற மீதி சிஎஉ 499.53 மில்லியனாக விளங்கியது.

12 மாத காலப்பகுதிக்கு முன்பும் பின்பும் அதன் பின்னர் தீர்ப்பதற்கு எதிர்பார்க்கப்படும் வட்டியுடன் கூடிய கடன் தொகைகள் பின்வருமாறு:

| | செல்லுபடியாகும் வட்டி வீதம் % | முதிர்ச்சி | 2015 ரூ. 000 | 2014 ரூ. 000 |
|---|---|---|---|---|
| நடைமுறை | | | | |
| து.நி.ஒ | 1.05 | | **65,334,236** | 68,678,555 |
| | | | **65,334,236** | 68,678,555 |
| நடைமுறையற்ற | | | | |
| து.நி.ஒ | 1.05 | 2017 | **34,386,440** | 94,841,815 |
| | | | **34,386,440** | 94,841,815 |
| **வட்டி உழைக்கும் மொத்தக் கடன்கள்** | | | **99,720,675** | 163,520,370 |

இ) **சிறப்பு எடுப்பனவு உரிமை (சிஎஉ)** என்பது கைவசமுள்ள ஒதுக்கச் சொத்துக்களுக்கு குறைநிரப்பாக நீண்டகால உலகத் தேவைப்பாடுகளை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு ப.நா. நிதியத்தால் நிறுவப்பட்டுள்ள ஒதுக்குச் சொத்தாகும். அங்கத்துவ நாடுகளுக்கு அவற்றின் ப.நா.நி. அனுமதிப் பங்கின் பிரகாரம் சிஎஉ ஒதுக்கப்படுகின்றது. ப.நா. நிதியத்தின் சிஎஉ திணைக்களத்தில் (ப.நா. நிதியத்தினுள் அமைந்துள்ள கணக்குப் பிரிவு) பங்குபற்றுகின்ற நாடுகளுக்கு மாத்திரம் சிஎஉ ஒதுக்கலாம். ப.நா. நிதியத்திற்கு உரித்தாயுள்ள தங்கம், வெளிநாட்டுச் செலாவணி மற்றும் ஒதுக்குகளின் நிலைமைகளுக்குக் குறைநிரப்பாக ப.நா. நிதியத்தால் சிஎஉ உருவாக்கப்பட்டது. வங்கியினால் இலங்கை அரசு சார்பாக கைச்சாத்திடப்பட்டுள்ள உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு சில நிபந்தனைகளின் பிரகாரம் ப.நா. நிதியத்தால் அங்கத்தவர்களுக்கு அவர்களுடைய அனுமதிப் பங்குத் தொகைக்கேற்ப சிஎஉ ஒதுக்கப்படலாம். ப.நா. நிதியத்தால் சிஎஉ ஒதுக்கப்படுவதன் மூலம் ஒவ்வொரு அங்கத்தவருக்கும் கிரயச் செலவற்ற சொத்தொன்று உருவாவதுடன், அதற்காக வட்டி உழைக்கப்படுவதோ அல்லது செலுத்தப்படுவதோ கிடையாது. சிஎஉவை இரத்துச் செய்வதற்குக் கூட உடன்படிக்கையின் நிபந்தனைகள் மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள போதிலும் இற்றைவரை இவ்வேற்பாடுகள் செயற்படுத்தப்படவில்லை. சிஎஉ ஒதுக்குதல்கள் அதிகரிக்கப்படுவதன் மூலம் 7 ஆவது குறிப்பில் காட்டப்பட்டுள்ளவாறு சிஎஉ வைத்திருத்தல் அதிகரிக்கிறது. அதன் தேறிய ஒதுக்குதலுக்குச் சமமான தொகையையும் அது சிஎஉ திணைக்களத்தின் தொழிற்பாடுகளில் பங்குபற்றியதன் காரணமாக ப.நா. நிதியம் சிஎஉ திணைக்களத்தை முடிவுறுத்துகின்ற அல்லது ஒழிக்கின்ற போது செலுத்த வேண்டியதாயுள்ள ஏனைய ஏதேனும் தொகைகள் இருப்பின் அவற்றையும் ப.நா. நிதியத்திற்குச் செலுத்துவதற்கு அங்கத்தவர்கள் கடப்பாடுடையவர்களாயிருப்பர்.

(ஈ) **ப.நா. நிதியத்திற்குச் செலுத்தப்படத்தக்க ஏனைய தொகைகள்:** தொழிற்பாட்டு மற்றும் நிர்வாகக் கொடுக்கல்வாங்கல்கள் சார்பாக வங்கியானது ப.நா. நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய தொகைகள் இதன் மூலம் காட்டப்படுகிறது.

(உ) **அனுமதிப் பங்குப் பொறுப்புக்கள்:** 7ஆம் இலக்கக் குறிப்பில் விளக்கப்பட்டுள்ளவாறான ப.நா. நிதிய அனுமதிப் பங்கிற்காகச் செலுத்தப்பட்ட தொகை அனுமதிப் பங்குப் பொறுப்புக்கள் தலைப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

## 20. ஏனையவை

| | 2015 ரூபா 000 | 2014 ரூபா 000 |
|---|---|---|
| இஸ்ரோ உடன்படிக்கையின் கீழ் சீன அபிவிருத்தி வங்கிக்குச் செலுத்த வேண்டிய தொகை (அ) | **1,413,418** | 8,017,222 |
| மொரககந்த அபிவிருத்திச் செயற்றிட்டக் கடன்கள் (ஆ) | **11,957,787** | 14,046,678 |
| திறைசேரி துணைச் செயலாளர் (தி.து.செ.) சீன அபிவிருத்தி வங்கி (ஐ.அ.டொ.) - வறுமைக் குறைப்பு மற்றும் வளர்ச்சி III (இ) | **21,701,612** | 34,106,960 |
| திறைசேரி துணைச் செயலாளர் (தி.து.செ.) சீன அபிவிருத்தி வங்கி (ஐ.அ.டொ.) - வறுமைக் குறைப்பு மற்றும் வளர்ச்சி III கட்டம் II (ஈ) | **14,406,230** | 13,104,860 |
| தி.து.செ. சிறப்பு டொலர் க/கு சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி மற்றும் பசுமை வலு உலகளாவிய கடன் திட்டம் (உ) | - | 1,222,595 |
| தி.து.செ. சிறப்பு யூரோ க/கு சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி மற்றும் பசுமை வலு (ஊ) | **7,483.465** | - |
| தி.து.செ. சிறப்பு டொலர் க/கு அம்பத்தல் நீர்வழங்கல் மேம்பாட்டுத் திட்டம் (எ) | **720,312** | - |
| சார்க் பரஸ்பர பரிமாற்றல் வசதியின் கீழ் இந்திய ஒதுக்கு வங்கியிடமிருந்து வரவேண்டிய தொகை (ஏ) | **158,468,530** | - |
| ஏனைய வெளிநாட்டுப் பொறுப்புக்கள் | **1,772,788** | 1,647,843 |
| | **217,924,142** | 72,146,159 |

(அ) **இஸ்ரோ உடன்படிக்கையின் கீழ் சீன அபிவிருத்தி வங்கிக் கூட்டுத்தாபனத்திற்கு வரவேண்டிய தொகை**

சீன அபிவிருத்தி வங்கிக் கூட்டுத்தாபனத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்குமிடையில் வசதி உடன்படிக்கையொன்று ஐ.அ.டொலர் 500 மில்லியன்களாக 2011 மாச்சு 31ஆம் நாளன்று கையெழுத்தானது. இவ்வுடன்படிக்கையின் நிதியானது முதன்மை வீதிகளின் அபிவிருத்திக்கும் புனரமைப்பிற்கும் பயன்படுத்தப்படுகிறது. வசதி உடன்படிக்கையின்படி இஸ்ரோ முகவராக, இக்கடன்களை வைப்புச் செய்யும் ஒரே நோக்கத்திற்கான இலங்கை மத்திய வங்கியில் இஸ்ரோ கணக்கொன்று திறக்கப்பட்டது. இக்கணக்கானது இவ்வுடன்படிக்கையினைத் தொடரும் விதத்தில் கடன் வழங்குநராலும் (சீன அபிவிருத்தி வங்கி) கடன்பெறுநராலும் (இலங்கை அரசாங்கம்) கூட்டாகத் தொழிற்படுத்தப்படும்.

இஸ்ரோ நிதியத்தின் முதற்றொகுதியான ஐ.அ.டொலர் 326 மில்லியன் 2011 யூன் 29ஆம் திகதி பெறப்பட்டதுடன் இரண்டாவது தொகுதியான ஐ.அ.டொலர் 174 மில்லியன் 2011 ஒத்தோபர் 28ஆம் நாள் பெறப்பட்டது.

இஸ்ரோ கணக்கிற்கு அனுப்பிய ஒப்புதல் அறிவித்தலொன்றின் மூலம் பகிர்ந்தளிப்புக் கோரிக்கையில் குறித்துரைக்கப்பட்ட கணக்கிற்கு இஸ்ரோ நிதியத்தினை வழங்குமாறு கடன் வழங்குநர் இஸ்ரோ முகவருக்கு அறிவுறுத்தினார்.

சீன அபிவிருத்தி வங்கியிடமிருந்து ஒப்புதல் அறிவித்தல் கிடைக்கப்பெற்ற பின்னர் ஐ.அ.டொலர் 1.77 மில்லியன் கொண்ட தொகை முதலாவது பகிர்ந்தளிப்பு 2011 ஒத்தோபர் 18ஆம் நாள் மேற்கொள்ளப்பட்டது.

சீன அபிவிருத்தி வங்கியின் வேண்டுகோளுக்கிணங்க, 2011 மற்றும் 2012 காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 157.50 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டது. 2013, 2014 மற்றும் 2015 காலப்பகுதியில் முறையே ஐ.அ.டொலர் 118.52 மில்லியன், 161.01 மில்லியன மற்றும் ஐ.அ.டொலர் 51.37 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டது. 2015 திசெம்பர் 31இல் நிலுவையாக ஐ.அ.டொலர் 9.81 மில்லியன் காணப்படுகிறது.

**(ஆ) மொரககந்த அபிவிருத்திச் செயற்றிட்டக் கடன்கள்**

ஐ.அ.டொலர் 214.20 கொண்ட இவ்வுடன்படிக்கை சீன அபிவிருத்தி வங்கிக்கும் (கடன் வழங்குநர்) இலங்கை அரசாங்கத்திற்கும் (கடன் பெறுநர்) 2012 யூன் 28ஆம் நாளன்று கையெழுத்தானது. இக்கடன் உடன்படிக்கையின் நோக்கம், மொறககந்தையிலுள்ள நீர்மின் வலு நிலையத்தின் கட்டுமானத்திற்கு நிதியிடுவதற்கு வசதியளிப்பதேயாகும். இத்திட்டம் நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் அமைச்சினால் நடைமுறைப் படுத்தப்பட்டது. இலங்கை மத்திய வங்கி இவ்வுடன்படிக்கையின் வங்கியாளராக வங்கியின் பொதுப் பேரேட்டில் "நிதி திட்டமிடல் அமைச்சு - சீன அபிவிருத்தி வங்கி மொரககந்த அபிவிருத்தி செயற்றிட்டக் கணக்கொன்றினை" வெளிவாரி மூலவளங்கள் திணைக்களத்தின் கோரிக்கையின்படி திறப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தது. நீர்ப்பாசன மற்றும் நீர் மூலவள முகாமைத்துவ அமைச்சினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கிணங்க, அத்தகைய பணம் வரவு வைக்கப்பட்டுள்ள கணக்குகளின் தொழிற்படுத்துநராக மத்திய வங்கி விளங்கியது. 2012 யூன் 29ஆம் நாளன்று ஐ.அ.டொலர் 214.20 மில்லியன் கொண்ட தொகை சீன அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் ஐ.அ.டொலர் 64.34 மில்லியன் கொண்ட முதலாவது பகிர்ந்தளிப்பு 2012 ஓகத்து 24ஆம் நாளன்று மேற்கொள்ளப்பட்டது. 2013 - 2014 காலப்பகுதியில், ஐ.அ.டொலர் 42.66 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டது.

2015ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 24.18 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன் 2015 திசெம்பர் 31இல் உள்ளவாறு எஞ்சிய மீதி ஐ.அ.டொலர் 83.00 மில்லியனாகக் காணப்பட்டது.

**(இ) முன்னுரிமை வீதிச் செயற்றிட்டம் III இன் கீழ் சீன அபிவிருத்தி வங்கியிலிருந்து வரவேண்டிய தொகை**

இவ்வசதி உடன்படிக்கையானது சீன அபிவிருத்தி வங்கிக்கும் (கடன் வழங்குநராக) இலங்கை அரசாங்கத்திற்குமிடையில் (கடன்பாட்டாளராக) 2014 மாச்சு 11ஆம் நாளன்று ஐ.அ.டொலர் 300 மில்லியனுக்காக கையெழுத்தானது. இக்கடனின் நோக்கம் யாதெனில் முன்னுரிமை வீதிச் செயற்றிட்டம் III - கட்டம் I இன் மேம்பாட்டிற்கும் புனரமைப்பு வேலைகளுக்கும் ஏற்படும் செலவிற்கு நிதியிடுவதேயாகும். வசதி உடன்படிக்கையின்படி, வங்கியானது இலங்கை அரசாங்கத்திற்கான வங்கியாளராக நியமிக்கப்பட்டிருக்கிறது. இதன்படி, கடன் தொகையினை வைப்புச் செய்வதற்கும் அவ்வாறு பெறப்பட்ட பணத்தினை வீதி அபிவிருத்திக்கு பகிர்ந்தளிப்பதற்குமான ஒரே நோக்கத்திற்காக அதன் பேரேட்டில் கணக்கொன்று திறக்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட கணக்கிற்கு 2014 மாச்சு 28ஆம் நாளன்று ஐ.அ.டொலர் 300 மில்லியன் பெறப்பட்டது. 2014 மற்றும் 2015 காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 149.36 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன் 2015 திசெம்பர் 31இல் எஞ்சிய மீதி ஐ.அ.டொலர் 150.64 மில்லியன் காணப்பட்டது.

**(ஈ) முன்னுரிமை வீதிச் செயற்றிட்டம் III கட்டம் II**

இவ்வுடன்படிக்கையின் கட்டம் II 2014 நவெம்பர் 24ஆம் நாளன்று ஐ.அ.டொலர் 100 மில்லியன் பெறப்பட்டது.

**(உ) சிறிய நடுத்தர தொழில்முயற்சிகளும் பசுமை வலு உலகளாவிய கடன் திட்டமும்**

இது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஐரோப்பிய முதலீட்டு வங்கிக்குமிடையில் 2013 நவெம்பர் 13ஆம் நாள் இடம்பெற்ற நிதியியல் ஒப்பந்தமாகும். வசதி உடன்படிக்கை என்ற ரீதியில் இலங்கை அரசாங்கத்தின் வங்கியாளராக வங்கி நியமிக்கப்பட்டிருக்கிறது. இதன்படி, கடன் தொகையினை வைப்புச் செய்வதற்கும் அவ்வாறு பெறப்பட்ட பணத்தினை செயற்றிட்டத்திற்குப் பகிர்ந்தளிப்பதற்குமான ஒரே நோக்கத்திற்காக அதன் பேரேட்டில் கணக்கொன்று திறக்கப்பட்டது. 2014 ஒத்தோபர் 6ஆம் திகதியன்று மேற்குறிப்பிட்ட கணக்கிற்கு ஐ.அ.டொலர் 21.13 மில்லியன் பெறப்பட்டது. 2014ஆம் ஆண்டுப் பகுதியில் ஐ.அ.டொலர் 11.80 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன் 2014 திசெம்பர் 31ஆம் திகதி எஞ்சியுள்ள நிலுவை ஐ.அ.டொலர் 9.33 மில்லியன் காணப்பட்டது. 2015ஆம் ஆண்டுப்பகுதியில் செயற்றிட்டத்தில் காணப்பட்ட எஞ்சியதொகை பகிர்ந்தளிக்கப்பட்டது.

மேற்குறிப்பிட்ட சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளும் பசுமைவலு உலகளாவிய கடன்திட்டத்தினதும் இரண்டாவது தொகுதி யூரோ நாணயத்தில் 2015 யூலை 09 ஆம் நாளன்று பெறப்பட்டது. இதன்படி, அக்கடனை வைப்புச் செய்து, அத்தகைய பெறப்பட்ட பணத்தினை செயற்றிட்டத்தின் பகிர்ந்தளிக்கும் ஒரே நோக்கத்திற்காக இலங்கை மத்திய வங்கியின் பொதுப்பேரேட்டில் திறக்கப்பட்டிருக்கிறது. மேற்குறிப்பிட்ட கணக்கு முறையே யூரோ 26.68 மில்லியனும் யூரோ 46.87 மில்லியனும் முறையே 2015 யூலை 09ஆம் நாளும் 2015 திசெம்பர் 23ஆம் நாளும் பெறப்பட்டிருந்தது. 2015ஆம் ஆண்டுப்பகுதியில் யூரோ 26.01 பில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன் 2015 திசெம்பரில் எஞ்சிய மீதி யூரோ 47.54 மில்லியனாகக் காணப்பட்டது.

**(ஊ) திறைசேரிக்கான துணைச் செயலாளர் சிறப்புக் கணக்கு 45020 அம்பத்தல நீர்வழங்கல் மேம்பாட்டுச் செயற்றிட்டம்**

இக்கொடுகடன் வசதி உடன்படிக்கையானது கடன்வழங்குனரான ஏஜென்ஸ் பிரான்கைஸ் டி டெவலப்பெமன்றிற்கும், கடன்பாட்டாளரான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்குமிடையில் 2014 செத்தெம்பர் 29 அன்று கையொழுத்தானது. இக்கடனைப்பெற்று பகிர்ந்தளிக்கும் நோக்கத்திற்காக திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கிணங்க இவ்வுடன்படிக்கையில் வங்கியாளர் என்ற முறையில் வங்கி அதன் பேரேட்டில் கணக்கொன்றினைத் திறந்துள்ளது. 2015 செத்தெம்பர் 14ஆம் நாளன்று மேற்குறிப்பிட்ட கணக்கிற்கு ஐ.அ.டொலர் 5 மில்லியன் பெறப்பட்டது.

**(எ) சார்க் பரஸ்பரபரிமாற்றல் வசதியின் கீழ் இந்திய ஒதுக்கு வங்கியானது வரவேண்டிய தொகை**

2011 செத்தெம்பர் 25ஆம் நாளன்று வாசிங்டன் டிசியில் நடைபெற்ற சார்க் நிதி ஆளுநர்கள் மாநாட்டில் சார்க் நாடுகளுக்கான நாணய பரஸ்பர பரிமாற்றல் ஒழுங்குகளுக்கான கட்டமைப்பிற்கான அதன் இணக்கத்தினை வழங்கியது. இப்பரஸ்பர பரிமாற்றல் உடன்படிக்கையானது சார்க் நாடுகளுக்கு இவ்வொழுங்குகள் வழங்கப்பட்ட நாளிலிருந்து 3 ஆண்டு காலப்பகுதிக்கு செல்லுபடியாகும். இவ்வொழுங்குகளின்படி இந்திய ஒதுக்கு வங்கியும் இலங்கை மத்திய வங்கியும் இருபுடை பரஸ்பர பரிமாற்றல் உடன்படிக்கையொன்றினை செய்து கொண்டன.

உடன்படிக்கை செல்லுபடியாகும் காலப்பகுதியில் பல்வேறு தொகுதிகளாக எடுப்பனவு செய்வதற்கு அனுமதிக்கப்படலாம். ஒவ்வொரு எடுப்பனவும் மூன்று மாதங்களுக்கானதாக இருப்பதுடன் இன்னொரு மூன்று மாத காலப்பகுதிக்கு புதுப்பிப்பதற்கும் அனுமதிக்கப்படும். எடுப்பனவிற்கு ஏற்புடையதான வட்டிவீதம் ஒவ்வொரு எடுப்பனவு திகதியிலும் நிலவுகின்ற 3 மாத ஐ.அ.டொலர் லண்டன் வங்கிக்கிடையிலான எடுப்பனவு வீதத்துடன் 200 அடிப்படைப்புள்ளிகள் கூட்டியதாக இருக்கும்.

ஐ.அ.டொலர் 400 மில்லியன் கொண்ட முதல் எடுப்பனவு 2015 ஏப்பிறல் 30ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டதுடன் இது மற்றொரு 3 மாத காலப்பகுதியில் 2015 யூலை 30ஆம் நாள் புதுப்பிக்கப்பட்டது. புதுப்பிக்கப்பட்ட காலம் முடிவடைகையில் ஐ.அ.டொலர் 402.32 மில்லியன் 2015 ஒத்தோபர் 30ஆம் நாளன்று இந்திய ஒதுக்க வங்கிக்கு செலுத்தப்பட்டது.

ஐ.அ.டொலர் 1.10 பில்லியன் கொண்ட இரண்டாவது தொகுதி 2015 செத்தெம்பர் 3ஆம் நாள் வழங்கப்பட்டதுடன் இவ்வசதியும் இன்னொரு 3 மாதகால பகுதிக்கு 2015 திசெம்பர் 3ஆம் நாள்வரை புதுப்பிக்கக்கூடியதாக இருந்தது. இதன்படி மீள்கொடுப்பனவு 2016 மாச்சு 3ஆம் திகதியாக இருக்கும்.

**21. வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள்**

இவை நாணய விதிச் சட்டத்தின் 93ஆம் பிரிவின் கீழ் நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்யும் நோக்கத்திற்காக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் பேணப்படும் வைப்புக்களாக இருப்பதுடன்

உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், அரச பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்கள், ஊழியர் சேம நிதியம் மற்றும் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைகளின் பங்கேற்பாளர்கள் ஆகியோரினால் நாணய விதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வங்கிகளினால் தொழிற்படுத்தப்படும் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் கீழான கொடுப்பனவுகளை கௌரவிப்பதற்காக பேணப்படும் வைப்புக்களாகவும் காணப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ், அரசாங்கத்தினால் முழுமையாக பிணையிடப்பட்ட வட்டியற்ற ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி, தீர்ப்பனவு முறைமையின் சுமூகமான தொழிற்பாட்டிற்கு வசதியளிப்பதற்காக ஒரு நாளுக்குள்ளேயான கொடுப்பனவுக் கடப்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக பங்கேற்பாளர்களுக்குக் கிடைக்கச் செய்யப்படுகிறது. இவ்வைப்புக்கள் தொடர்பான தரப்பினராலும் (அதாவது அரசிற்குச் சொந்தமான வங்கிகள் மற்றும் நிறுவனங்கள்) மற்றவர்களினாலும் வைப்புக்கள் போன்ற கணக்கீட்டு வெளிப்படுத்துகைத் தேவைப்பாட்டு நோக்கங்களுக்காக வகைப்படுத்தப்பட்டு தொடர்பான நியதி ஒதுக்கு வீதங்களில் பேணப்பட்டு வருகின்றதேயன்றி அவ்வரச நிறுவனங்களுடனான வங்கியின் குறித்துரைக்கப்பட்ட வியாபாரத் தொடர்புகளுக்காகவல்ல.

| | 2015 ரூபா 000 | 2014 ரூபா 000 |
|---|---|---|
| **வங்கிகளினால் செய்யப்பட்ட வைப்புக்கள்** | | |
| - தொடர்பான தரப்பினர்கள் | **89,340,293** | 84,976,155 |
| - ஏனையவை | **92,380,448** | 76,028,176 |
| | **181,720,741** | 161,004,331 |
| **நிதியியல் நிறுவனங்களால் செய்யப்பட்ட வைப்புக்கள்** | | |
| - தொடர்பான தரப்பினர்கள் | **729** | 167 |
| - ஏனையவை | **5,262** | 4,825 |
| | **5,991** | 4,992 |
| **வங்கிகளினாலும் ஏனைய நிதியியல் நிறுவனங்களினாலும் செய்யப்பட்ட மொத்த வைப்புகள்** | **181,726,732** | 161,009,323 |

**22. அரச மற்றும் அரச நிறுவனங்களின் வைப்புக்கள்**

| | 2015 ரூபா 000 | 2014 ரூபா 000 |
|---|---|---|
| அரச வைப்புக்கள் | **174,871** | 166,583 |
| அரச முகவராண்மைகளும் நிதியங்களும் | **253,271** | 145,367 |
| | **428,142** | 311,950 |

வங்கி, அரச மற்றும் / அல்லது அரச முகவர்களின் அல்லது நிறுவனங்களின் வைப்புக்களுக்கான அலுவல்சார் வைப்பாளராக இருப்பதனால் நாணய விதிச் சட்டத்தின் 106 (1)ஆம் பிரிவின் நியதிகளில் இவ்வைப்புக்கள் பேணப்படுகின்றன.

**23. மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள்**

| | 2015 ரூபா 000 | 2014 ரூபா 000 |
|---|---|---|
| அரச பிணையங்கள் | **23,650,000** | 21,220,000 |
| துணைநில் வைப்பு வசதிகள் (குறிப்பு 3.3.8) | **81,815,000** | 7,032,000 |
| | **105,465,000** | 328,252,000 |

நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தலின் ஒரு பகுதியாக, நாணய விதிச் சட்டத்தின் பிரிவுகள் 90 மற்றும் 91 இன் கீழ் மீள்கொள்வனவு உடன்படிக்கைகளானவை, பணச்சந்தையின் திரவத்தன்மையை ஒழுங்குபடுத்தும் பொருட்டு திறந்த சந்தை நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்படுகின்றன. இம்மீள்கொள்வனவு உடன்படிக்கைகளானவை காலத்திற்குக் காலம் வங்கியால் தீர்மானிக்கப்படுகின்ற திரவத்தன்மை முகாமைத்துவக் கொள்கைக்கு அமைவாக ஓரிரவு அல்லது தவணை முறையில் அரச பிணையங்களில் ஈடுபடுத்தப்படுகின்றன.

**24. ஊழியர் நன்மைத் திட்டங்களிலுள்ள நிலுவைகள்**

வங்கியானது பொதுவான அலுவல்களின் ஒரு பகுதியாக அதன் ஊழியர் நன்மைத் திட்டங்களின் வங்கியாளர் என்ற ரீதியில் செயற்படுகின்றது. வங்கியின் தனியாக நிருவகிக்கப்படுகின்ற ஊழியர் நன்மைத் திட்டங்களில் வரவு வைக்கப்பட்டுள்ள தொகைகள் பின்வருமாறு:

| | 2015 ரூபா 000 | 2014 ரூபா 000 |
|---|---|---|
| இ.ம.வ சேம நிதியம், ஓய்வூதியத் திட்டங்கள் மற்றும் விதவைகள்/ விதுரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் என்பவற்றின் மீதிகள் | **7,212** | 2,209,782 |
| | **7,212** | 2,209,782 |

**25. சுற்றோட்டத்திலுள்ள நாணயம்**

இலங்கையின் நாணயத்தை வெளியிடும் தனி அதிகாரம் வாய்ந்த நிறுவனமென்ற ரீதியில் மத்திய வங்கியானது தொடர்ச்சியாக சட்டத்தின் பிரகாரம் செல்லுபடியாகும் நாணயத்தை வெளியிடுகின்றது. குறிப்பிட்ட வங்கியினால் வெளியிடப்பட்டு அறிக்கையிடல் திகதிகளில் சுற்றோட்டத்தில் உள்ளவாறான நாணயத் தரவுகள் பின்வருமாறு:

| பெறுமதி | 2015 ரூபா 000 | 2014 ரூபா 000 |
|---|---|---|
| **குத்திகள்:** | | |
| சதம் 1 | **3,631** | 3,631 |
| சதம் 2 | **5,703** | 5,703 |
| சதம் 5 | **23,247** | 23,247 |
| சதம் 10 | **39,208** | 39,208 |
| சதம் 25 | **120,558** | 120,558 |
| சதம் 50 | **185,371** | 185,564 |
| ரூபா 1 | **794,975** | 734,733 |
| ரூபா 2 | **1,155,840** | 1,048,861 |
| ரூபா 5 | **3,473,827** | 3,130,691 |
| ரூபா 10 | **3,345,748** | 2,252,507 |
| ஞாபகார்த்த நாணயக் குத்திகள் | **582,423** | 577,523 |
| | **9,730,531** | 8,122,226 |
| **தாள்கள்:** | | |
| ரூபா 1 | **4,981** | 4,981 |
| ரூபா 2 | **26,696** | 26,697 |
| ரூபா 5 | **37,194** | 37,194 |
| ரூபா 10 | **1,449,773** | 1,519,817 |
| ரூபா 20 | **4,882,579** | 4,121,289 |
| ரூபா 50 | **4,671,924** | 4,273,372 |
| ரூபா 100 | **18,979,404** | 17,029,514 |
| ரூபா 200 | **131,246** | 132,526 |
| ரூபா 500 | **31,656,334** | 28,205,681 |
| ரூபா 1000 | **133,243,521** | 127,258,019 |
| ரூபா 2000 | **38,973,585** | 67,438,978 |
| ரூபா 5000 | **247,912,180** | 158,725,070 |
| | **481,969,417** | 408,773,136 |
| சுற்றோட்டத்திலுள்ள மொத்த நாணயங்கள் | **491,699,948** | 416,895,362 |

**26. ஏனைய கொடுபடத்தக்கவை**

| | 2015 ரூபா 000 | 2014 ரூபா 000 |
|---|---|---|
| கொடுபடத்தக்க உள்நாட்டு வட்டி | **26,006** | 2,120,819 |
| ஏற்பாடுகளும் கட்டணங்களும் | **556,337** | 733,824 |
| பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் வைப்புக்கள் | **2,314,645** | 2,688,215 |
| பெறப்பட்ட கைவிடப்பட்ட சொத்துக்களுக்கெதிரான பொறுப்பு | **3,221,244** | 2,655,909 |
| ஏனைய கொடுபடத்தக்கவை | **732,766** | 669,056 |
| | **6,850,998** | 8,867,823 |

கொடுபடத்தக்கவை 2009ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் கைவிடப்பட்ட சொத்துக்களை அடையாளம் காணல், அறிக்கையிடல், மாற்றல் செய்தல் மற்றும் பேணுதல் தொடர்பான வழிகாட்டலின் கீழ் உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட கைவிடப்பட்ட சொத்துக்கள் தொடர்பானவையாக இருந்தன. கைவிடப்பட்ட சொத்துக்கள் மீது ஏதேனும் மேலதிகக் கோரல்கள் காணப்படும் சந்தர்ப்பத்தில் வங்கிகள் அவ்வாறு சேகரிக்கப்பட்ட வைப்புக்களை வட்டியுடன் செலுத்துவதற்குப் பொறுப்புடையனவாகும். எனவே, சேகரிக்கப்பட்ட மொத்த வைப்புக்கள் நிறையேற்றப்பட்ட சராசரி திறைசேரி உண்டியல் வீதங்களில் கணிக்கப்பட்ட வட்டி வீதங்களுடன் சேர்த்து வங்கிகளின் பொறுப்பாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**27. பிற்போடப்பட்ட கொடைகள்**

| | 2015 ரூபா 000 | 2014 ரூபா 000 |
|---|---|---|
| சனவரி 1 இல் உள்ளவாறு | **515** | 1,449 |
| இவ்வாண்டின் கடன் தீர்ப்பனவு | **(409)** | (934) |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு | **106** | 515 |

பிற்போடப்பட்ட வருமானம் அத்தகைய சொத்துக்களின் தேய்மானத்துடன் பொருந்தத்தக்க விதத்தில் இக் காலப்பகுதியில் தீர்ப்பனவு செய்யப்பட்டன. இது, எந்தவித கரிசனைகளுமில்லாது வங்கியால் பெற்றுக்கொள்ளப்பட்ட சொத்துக்களை உள்ளடக்குகின்றது. சொத்துக்களின் சந்தைப் பெறுமதி பிற்போடப்பட்ட கொடைக் கணக்கொன்றில் செலவு வைக்கப்படுவதுடன், தொடர்பான சொத்துக்களின் தேய்மானக் கொள்கைகளின்படி அச்சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் முழுவதற்குமுரிய ஏனைய வருமானமாகக் கொள்ளப்படுகிறது.

**28. பல்வகைப் பொறுப்புக்களும் அட்டுறுக்களும்**

பல்வகைப் பொறுப்புக்களும் அட்டுறுக்களும் கொடுப்பனவு செய்யத்தக்க கணக்குகளிலுள்ள கொடுபடத்தக்க மீதிகள், ஒப்பந்த ரீதியான பிடித்துவைத்தல்கள், மீட்கத்தக்க விலைக்கோரல் வைப்புக்களாக எடுக்கப்பட்ட வைப்புக்கள் மற்றும் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் கொடுபடத்தக்க தண்டங்கள் என்பனவற்றை உள்ளடக்குகிறது.

**29. பங்குரிமை மூலதனம்**

**(அ) பங்குரிமை மூலதன விடயங்களின் தன்மை**

**மூலதன நிதியம்**

பங்களிப்பு மூலதனம் - நாணய விதிச் சட்டத்தின் 6ஆவது வாசகத்தின் பிரகாரம் மூலதனக் கணக்கிலுள்ள வங்கியின் மூலதனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. 2014ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் (திருத்தப்பட்டது) 6ஆம் பிரிவின்படி, வங்கியின் மூலதனம் ரூ.50 பில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது. இதன்படி, வங்கி, 2014 செத்தெம்பரில் நிதி அமைச்சரின் சம்மதத்துடன் அதன் ஒதுக்கங்களை மூலதனமாக்கியதன் மூலம் மூலதனத்தினை ரூ.50 பில்லியனுக்கு அதிகரித்தது.

**(ஆ) நிலையான சொத்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்**

ப.க.நி 16 இன் படி இவ்வொதுக்கானது ஆதனம், பொறி மற்றும் கருவிகளின் மீள்மதிப்பீட்டு மிகையை உள்ளடக்கியுள்ளது.

**(இ) ஏனைய ஒதுக்கங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளன:**

(i) **பன்னாட்டு மீள் மதிப்பீட்டு ஒதுக்கம்** - மீள் மதிப்பீடு செய்யப்பட்டதன் மூலம் உருவாகிய பன்னாட்டு ஒதுக்கம் என்பது, நாணய விதிச் சட்டத்தின் 41ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவப்பட்டுள்ளதொரு ஒதுக்கமாகும். இதன் பிரகாரம், தங்கம் மற்றும் வெளிநாட்டு நாணயங்களின் மூலம் மத்திய வங்கியின் தேறிய சொத்துக்களும் பொறுப்புக்களும் மீளக் கணிப்பிடப்படுவதன் ஊடாக உருவாகின்ற உண்மையிலேயே ஈட்டப்படாத இலாபம் அல்லது நட்டம் வங்கியின் தேறிய இலாபத்தைக் கணிப்பதற்காக கவனத்திற் கொள்ளப்படலாகாதென்பதுடன், அதற்குப் பதிலாக இவ்விலாபம் அல்லது நட்டம் மீளக் கணிப்பிடப்படுகின்ற பன்னாட்டு ஒதுக்கத்திற்கு மாற்றப்படுதல் வேண்டும்.

(ii) **சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்** - வெளிநாட்டு நிதியியல் சொத்துக்களின் சந்தைப்படியான விலைகளின் மோசமான தாக்கத்திற்கு வழிவகுக்கின்ற பன்னாட்டுச் சந்தைகளின் தளம்பல்களின் ஏதேனும் மோசமான தாக்கத்தினை ஈடுசெய்யும் பொருட்டு வெளிநாட்டுச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதியிலிருந்து கிடைக்கும் விலைப் பெறுமதி இலாபங்களை மாற்றல் செய்வதற்காக 2003 சனவரி 30ஆம் நாளன்று நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின்படி சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் ஏற்படுத்தப்பட்டது. நாணயச் சபையானது இந்த ஒதுக்கினை இலங்கை மத்திய வங்கியின் மொத்த வெளிநாட்டு ஒதுக்கில் உயர்ந்தபட்சம் 10 சதவீதத்திற்கு உயர்த்துவதற்கு தீர்மானித்தது.

(iii) **ஏனைய ஒதுக்குகள்** - பொது ஒதுக்கு, கட்டட ஒதுக்கு மற்றும் கொடுகடன் உத்தரவாத ஒதுக்கு என்பவற்றை உள்ளடக்குகிறது. பொது ஒதுக்கு, நாணயச் சபையினால் பிடித்துவைக்கப்பட்டிருக்கும் வருவாய்களிலிருந்து வேறாக வைத்திருக்கப்படும் தொகையினை உள்ளடக்குகின்றது.

(iv) **விற்பனைக்குள்ள பிணையங்கள் மீதான தேறிய சந்தைப் பெறுமதி இலாபம்/(நட்டம்)** - விற்பனைக்குள்ள பிணையங்கள் மற்றும் அலகு முதலீடு என்பனவற்றை மீளமதிப்பிடப்பட்டதன் மூலம் உருவாகிய தேறல் செய்யப்படாத இலாபம் அல்லது நட்டம் இவ்வொதுக்கத்திற்கு மாற்றப்பட்டது.

(v) **அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறை கடன்கரைப்பு நிதியம்** - அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையைப் பயன்படுத்துவதில் பங்குபற்றுகின்றவர்களிடமிருந்து சேகரிக்கப்படுகின்ற கட்டணங்களைக் கொண்டு இந் நிதியம் உருவாக்கப்பட்டுள்ளது. இந் நிதியமானது திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளில் முதலீடு செய்வதற்கு மாத்திரம் மட்டுப்பட்டதாயிருக்கும்.

(vi) **ஓய்வூதிய நிதிய ஒதுக்கம்** - வெளியக இடர்நேர்வுகளின் காரணமாக வங்கியின் வருமானம் ஈட்டும் ஆற்றலில் ஏற்படும் வடுக்களால் ஓய்வூதிய நிதியத்தில் ஏதேனும் குறைபாடுகள் உருவாகுமாயின் அதனை ஈடுசெய்யும் பொருட்டு 2007ஆம் ஆண்டின் வருமானத்திலிருந்து மேலதிகமாக ரூ. 3 பில்லியன் மாற்றப்பட்டதன் மூலம் இவ்வொதுக்கம் உருவாக்கப்பட்டுள்ளது. 2015 யூனில் ரூ. 2 பில்லியன் ஓய்வூதிய நிதிய ஒதுக்கிலிருந்து, புதிய ஓய்வூதிய பொறுப்புக் கணக்கிற்கு, நாணயச் சபை பத்திர இலக்கம் எம்பீ/எச்ஆர்/11/12/2015 இன்படி புதிய ஓய்வூதியத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக மாற்றல் செய்யப்பட்டது.

(vii) **தொழில்நுட்ப மேம்பாட்டு ஒதுக்கம்** - குறிப்பாக தொழில்நுட்ப மேம்பாட்டுத் தேவைப்பாடுகள், நவீனமயமாக்கல் அல்லது இ.ம.வங்கியினால் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்ற பொதுப்பேரேடு, அ.நே.மொ. தீர்ப்பனவு முறை, திறைசேரி முகாமைத்துவ முறைமை மற்றும் பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறை ஆகிய தகவல் தொழில்நுட்ப முறைமையைத் தரமுயர்த்துதல் ஆகியவற்றுக்காகப் பயன்படுத்தும் பொருட்டு இவ்வொதுக்கம் 2007 ஆம் ஆண்டின் இலாபத்திலிருந்து உருவாக்கப்பட்டது.

(viii) **மாகாண அபிவிருத்தி கொடுகடன் திட்டம்** - 2010ஆம் ஆண்டுப் பகுதியில், வங்கி இலாபத்திலிருந்து உருவாக்கிய நிதியத்தின் மூலம் அபிவிருத்தி நோக்கங்களுக்காக மாகாணங்களுக்கு ரூ.2.90 பில்லியன் கொண்ட நடுத்தர கால மற்றும் நீண்ட கால மீள்நிதியிடல் இலங்கை வங்கியூடாகவும் மக்கள் வங்கியூடாகவும் வழங்கப்பட்டன.

(ix) **சிறப்புக் கொடுகடன் உத்தரவாதத் திட்ட ஒதுக்கம்** - இவ்வொதுக்கானது நடுத்தர மற்றும் நீண்ட கால கொடுகடன் நிதியத்திலிருந்து ரூ.2 பில்லியனை மாற்றல் செய்ததன் மூலம் 2014இல் ஏற்படுத்தப்பட்டது. இதில் ரூ.1 பில்லியன் வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும் சௌபாக்கியா கடன் திட்டம், வடக்கின் எழுச்சிக் கடன் திட்டம் (கட்டம் II), கிழக்கில் பொருளாதார நடவடிக்கைகளை மீளத் தொடங்குதல் (கட்டம் II) மற்றும் வடக்கு, கிழக்கில் சேதமடைந்த வீடுகளைத் திருத்தல் என்பனவற்றின் மீளமைத்தலுக்கு ஆதரவளிப்பதற்காக ஒதுக்கப்பட்டது. மற்றைய ரூ.1 பில்லியன் வர்த்தக வங்கிகளின் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான கடன் வழங்கலுக்கு உதவியளிப்பதற்கான சிறப்புக் கொடுகடன் உத்தரவாதத்திட்டத்தினை நடைமுறைக்கிடுவதற்காக ஒதுக்கப்பட்டது.

ஏனைய ஒதுக்கங்களிலான அசைவுகள் பின்வருமாறு:

| | நடுத்தர கால, நீண்ட கால கொடுகடன் ஒதுக்கம் | சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | ஏனைய ஒதுக்கம் | சிறப்புக் கொடுகடன் உத்தரவாதத் திட்ட ஒதுக்கம் | அ.நே. மொ. தீ. கடன் கரைப்பு நிதியம் | பன்னாட்டு மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | விற்பனைக்குள்ள பிணையங்களின் தேறிய சந்தைப் பெறுமதி இலாபம்/(நட்டம்) | ஓய்வூதிய நிதிய ஒதுக்கம் | தொழில் நுட்ப மேம்பாட்டு ஒதுக்கம் | மாகாண அபிவிருத்திக் கொடுகடன் திட்ட நிதியம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| 2015 சனவரி 01இல் உள்ளவாறு | **2,925,000** | **4,650,806** | **2,489,920** | **2,000,000** | **1,076,150** | **8,567,855** | **1,883,529** | **4,000,000** | **1,000,000** | **2,900,000** | **31,493,260** |
| அ.மொ.தீ. நிதியத்திற்கு வருமானத்தை மாற்றல் | - | - | - | - | **256,478** | - | - | - | - | - | **256,478** |
| தேறிய வெளிநாட்டுச் செலாவணி மீள்மதிப்பீட்டு இலாபத்தினை மாற்றல் | - | - | - | - | - | **10,589,267** | - | - | - | - | **10,589,267** |
| விற்பனைக்கு கிடைக்கத்தக்க பிணையங்கள் மீதான தேறிய சந்தைப்பெறுமதி நட்டம் | - | - | - | - | - | - | **(624,957)** | - | - | - | **(624,957)** |
| புதிய ஓய்வூதிய நிதியத்தின் நிதியியல் மாற்றல் | - | - | - | - | - | - | - | **(2,000,000)** | - | - | **(2,000,000)** |
| 2015 திசெம்பர் 31இல் உள்ளவாறான | **2,925,000** | **4,650,806** | **2,489,920** | **2,000,000** | **1,332,628** | **19,157,122** | **1,258,572** | **2,000,000** | **1,000,000** | **2,900,000** | **39,714,049** |

## 30. இலாபப் பகிர்ந்தளிப்பு

நாணய விதிச்சட்டத்தின்படி நாணயச் சபை இலங்கை மத்திய வங்கியின் இலாப பகிர்ந்தளிப்பிற்கு ஒப்புதலளித்து (2015 இலிருந்து நடைமுறைக்குவரும்) பகிரத்தக்க இலாபத்தினைப் பெறும் விதத்தில் ப.நி.அறிக்கையிடல் சட்ட இலாபத்திற்கு/ (நட்டத்திற்கு) பின்வரும் சீராக்கங்கள் செய்யப்பட்டன.

(அ) செலாவணிவீத இலாபம்/ (நட்டத்தினை) நீக்குதல் (நாணய விதிச்சட்டத்தின் 41ஆம் பிரிவு)

(ஆ) தேறல் செய்யப்படாத விலை மீள் மதிப்பீடுகளிருந்தான இலாபத்தினை நீக்குகிறது (தேறல் செய்யப்படாத சந்தைப்படியான இலாபங்கள்) எனினும் தேறல் செய்யப்படாத விலை மீள்மதிப்பீடுகளிலிருந்தான நட்டங்களை விதிக்கிறது. (தேறல் செய்யப்படாத சந்தைப்படியான நட்டங்கள்) (இலாப பங்கீட்டு கொள்கையின்படி)

(இ) நாணயச்சட்டத்தின் 39ஆம் பிரிவிலிருந்து எழும் வேறு ஏதேனும் சீராக்கங்கள்.

மேலும், கணக்கீட்டு நியமங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களினால் தேவைப்படுத்தப்பட்டவாறு வேறு ஏதேனும் சீராக்கங்கள் பகிரத்தக்க இலாபத்தினைப் பெறும் விதத்தில் சீராக்கப்பட்டன.

மேற்குறிப்பிட்ட சீராக்கங்களின் அடிப்படையில், 2015 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான பகிரத்தக்க இலாபம் பின்வருமாறு:

| விடயம் | 2015 (ரூ. 000) |
|---|---|
| ப.நா.க. நியமம் இலாபம்/ (நட்டம்) | (19,601,819) |
| **கழிக்குக:** | |
| நாணயவிதிச்சட்டத்தின் படி பன்னாட்டு மீள்மதிப்பீட்டு ஒதுக்கிற்கான செலாவணி வீத இலாபத்தை மாற்றல் | 10,589,267 |
| தொடர்பான நிதியத்திற்கு உள்ளக நிதியங்களின் மீதான வட்டி வருமானத்தின் மாற்றம் | 389,544 |
| ஏனையஅனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்திற்கான விதிப்பு (ப.க.நி 19-ஊழிய நன்மைகளின்படி) | 7,257 ,078 |
| **கூட்டுக:** | |
| புதிய ஓய்வூதியத் திட்டத்தினை நிறுவதற்காக ஓய்வூதிய நிதியத்திலிருந்து பிடித்து வைக்கப்பட்ட வருமானங்களுக்கான நிதிய மாற்றல் | 2,000 ,000 |
| **நாணய விதிச்சட்டம், மற்றும் பகிர்ந்தளிப்பு கொள்கை மற்றும் ஏனைய சீராக்கங்கள் - தேறல் செய்யப்பட்ட இலாபம்/ (நட்டம்) என்பவற்றின் படியான பங்கிடத்தக்க இலாபம்/ (நட்டம்)** | (35,837,708) |
| ஒதுக்கிற்கான மாற்றல் (நாணய விதிச் சட்டத்தின் பிரிவு-38) | - |
| திரட்டிய நிதியத்திற்கு செலவுவைக்கப்பட்ட தொகை மற்றும் வெளிநாட்டில் இலங்கை அரசின் கடப்பாட்டின் அறவிடல் (நாணயவிதிச் சட்டத்தின் பிரிவு 39) | - |

2015ஆம் ஆண்டிற்கான பகிரத்தக்க இலாபம் எதிர்மறையாக இருந்தமையின் காரணமாக ஒதுக்குகளுக்கான மாற்றல்களும் அரசகடப்பாடுகளின் அறவிடல்களும் அதேபோன்று நாணய விதிச்சட்டத்தின் படியான திரட்டிய நிதியத்திற்கான மாற்றல்களும் மேற்கொள்ளப்படவில்லை.

31. நிதிச் சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானம்

| | 2015 ரூபா 000 | 2014 ரூபா 000 |
|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானம்** | | |
| காசு மற்றும் குறுங்கால வைப்புக்கள் | **1,464,525** | 3,209,460 |
| நிதியியல் சொத்துக்கள் | **6,635,778** | 6,853,354 |
| பெறுதிகள் | **4,947,011** | 12,158,689 |
| **வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக் களிலிருந்தான மொத்த வட்டி வருமானம்** | **13,047,314** | 22,221,503 |
| **உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக் களிலிருந்தான வட்டி வருமானம்** | | |
| இலங்கை அரச பிணையங்கள் | **8,749,944** | 4,085,660 |
| ஏனைய கடன்களும் முற்பணங்களும் | **573,609** | 531,024 |
| **உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக்களிலிருந்தான மொத்த வட்டி வருமானம்** | **9,323,553** | 4,616,684 |
| **நிதிச் சொத்துக்களிலிருந்தான மொத்த வட்டி வருமானம்** | **22,370,867** | 26,838,187 |

32. நிதிப் பொறுப்புக்கள் மீதான வட்டிச் செலவு

| | 2015 ரூபா 000 | 2014 ரூபா 000 |
|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள் மீதான வட்டிச் செலவு** | | |
| ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்துக்குச் செலுத்தப்பட வேண்டிய தொகை | **38,009** | 13,854 |
| பன்னாட்டு நாணய நிதியம் தொடர்பான பொறுப்புக்கள் | **1,394,723** | 2,546,454 |
| பெறுதிகள் | **341,117** | 525,898 |
| ஏனைய வெளிநாட்டு செலுத்த வேண்டியன | **1,848,888** | 17,051 |
| **வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள் மீதான மொத்த வட்டிச் செலவினம்** | **3,622,737** | 3,103,257 |
| **உள்நாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள் மீதான வட்டிச் செலவு** | | |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | **4,067,059** | 15,919,782 |
| துணைநில் வைப்பு வசதி | **4,582,318** | 1,198,254 |
| முறிக் கடன்பாடுகள் | **82,711** | 467,432 |
| கைவிடப்பட்ட ஆதனம் | **187,896** | 162,568 |
| **உள்நாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள் மீதான மொத்த வட்டிச் செலவு** | **8,919,984** | 17,748,037 |
| **நிதிப் பொறுப்புக்கள் மீதான மொத்த வட்டிச் செலவு** | **12,542,721** | 20,851,293 |

சந்தையில் காணப்பட்ட மிகையான திரவத்தன்மையினை ஈர்த்துக் கொள்ளும் நடவடிக்கையின் பொருட்டு பணநிரம்பலைக் கட்டுப்படுத்துவதற்காக ஏற்பட்ட செலவாக ரூ.4,354.36 மில்லியன் (2014இல் ரூ.5,831.44 மில்லியன்) தேறிய செலவு/ (இலாபம்) வங்கியால் உறப்பட்டது. பண நிரம்பலைக் கட்டுப்படுத்துவதற்கான செலவானது கீழே காட்டப்பட்டுள்ளவாறு மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள், முறிகளின் கடன்பாடு மற்றும் துணைநில் வசதி ஆகியவற்றின் மீதான வட்டிச்செலவுகளிலிருந்து, இலங்கை அரச பிணையங்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் வட்டி வருமானம் மற்றும் வெளிநாட்டு நிதியியல் சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானத்தில் உள்ளடக்கப்பட்டவாறான ஐ.அ.டொலர்/ இல. ரூபா பெறுதிகளின் இலாபம் என்பனவற்றைக் கழிப்பதன் மூலம் பெறப்பட்ட தேறிய தொகையை உள்ளடக்கிறது.

| | 2015 ரூபா 000 | 2014 ரூபா 000 |
|---|---|---|
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் மீது ஏற்பட்ட வட்டிச் செலவு | **4,067,059** | 15,919,782 |
| முறிக் கடன்பாட்டின் மீது செலுத்தப்பட்ட கட்டணம் | **82,711** | 467,432 |
| துணைநில் வைப்பு வசதி மீதான வட்டிச் செலவினம் | **4,582,318** | 1,198,254 |
| கழி: | | |
| மீள்விற்பனை செய்வதற்கான உடன்படிக்கையின் கீழ் பிணையங்களின் கொள்வனவு மீது உழைக்கப்பட்ட வட்டி வருமானம் | **(16,317)** | (3,438) |
| ஐ.அ.டொலர்/இல.ரூபா பெறுதிகள் இலாபம் | **(4,361,415)** | (11,750,595) |
| | **4,354,356** | 5,831,435 |

33. ஏனைய வருமானம்

| | 2015 ரூபா 000 | 2014 ரூபா 000 |
|---|---|---|
| பங்கிலாப வருமானம் - தொடர்புபட்ட நபர்கள் | **31,214** | 22,014 |
| - ஏனையோர் | **1,050** | 1,055 |
| ஆதனங்கள் பொறிகள் மற்றும் கருவிகளின் அகற்றல் மீதான இலாபம் | **2** | 21,884 |
| பிற்போடப்பட்ட கொடைகளின் கடன் தீர்ப்பனவு | **409** | 934 |
| நிதியியல் நிறுவனங்களின் உரிமக் கட்டணம் | **490,350** | 399,100 |
| வாடகை வருமானம் | **381,491** | 306,818 |
| அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைப் பங்கேற்பாளர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட கட்டணங்கள் | **128,768** | 144,143 |
| பல்வகை வருமானம் | **544,158** | 471,718 |
| **மொத்த ஏனைய வருமானம்** | **1,577,442** | 1,367,666 |

பல்வகை வருமானம் ரூ.1.24 மில்லியன் கொண்ட இலங்கை சேமிப்பு வங்கி லிமிடட்டின் தொகுதிக் கடன் மீதான கடன் தீர்ப்பனவு இலாபம் (2014 - ரூ.1.09 மில்லியன்) எஞ்சிய 3 ஆண்டு காலப்பகுதியில் ப.நா. நிதியத்துடனான சிஎஉ ரூ.788,783 கொண்ட வறுமைக்குறைப்பு வளர்ச்சி வசதிப்படுத்தலின் பதிவளிப்பு இலாபமான ரூ.5.73 மில்லியனையும் (2014 - ரூ.5.35 மில்லியன்) உள்ளடக்குகிறது. (குறிப்பு 07)

34. ஆளணிச் செலவுகள்

| | 2015 ரூபா 000 | 2014 ரூபா 000 |
|---|---|---|
| கூலிகளும் சம்பளங்களும் | **4,201,583** | 3,256,096 |
| குறித்துரைக்கப்பட்ட பங்களிப்புத் திட்டச் செலவுகள் | **629,357** | 457,274 |
| தொழில் நிலைக்குப் பிந்திய குறித்துரைக்கப்பட்ட நன்மைத் திட்டங்களின் செலவு | **1,329,578** | 1,289,040 |
| **மொத்த ஆளணிச் செலவுகள்** | **6,160,518** | 5,002,410 |

## 35. நிர்வாகம் மற்றும் ஏனைய செலவுகள்

| | 2015<br>ரூபா 000 | 2014<br>ரூபா 000 |
|---|---|---|
| திருத்தங்களும் பேணல்களும் | **680,000** | 734,555 |
| றொயிட்டர், புலூம்போக் மற்றும் சுவப்ற் மற்றும் ஏனையவற்றுக்கான தொழிற்பாட்டுச் செலவினங்கள் | **154,937** | 129,918 |
| பயணம் | **97,552** | 133,778 |
| வாடகைச் செலவுகள் | **5,106** | 5,126 |
| அச்சிடல் | **26,476** | 37,113 |
| கணக்காய்வுக் கட்டணம் | **7,768** | 7,568 |
| நாணயச் சபை உறுப்பினர்களுக்கான ஊதியங்கள் | **1,084** | 954 |
| இ.ம.வ சேம நிதியம் மீதான வட்டி உதவுதொகை | **-** | 63 |
| விளம்பரச் செலவு | **73,073** | 149,676 |
| ஆலோசனை, தொடர்பூட்டல், மதியுரை மற்றும் தொழில்சார் நிபுணத்துவக் கட்டணங்கள் | **219,502** | 2,050,619 |
| அடகுபிடித்தல் முற்பணங்கள் மீதான கொடுகடன் உத்தரவாதத் திட்டம் | **-** | 500,000 |
| பல்வகைச் செலவினம் | **346,038** | 301,488 |
| **மொத்த நிர்வாக மற்றும் ஏனைய செலவுகள்** | **1,611,537** | 4,050,858 |

## 36. பிடித்துவைத்தல் வரி

2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உள்நாட்டரசிறை (திருத்தச்) சட்டத்தின் பிரிவு 7b (xvi) இன் படி இலங்கை மத்திய வங்கி வருமான வரி செலுத்தப் பொறுப்புடையதல்ல என்பதுடன் வங்கியால் செலுத்தப்படும் பிடித்துவைத்தல் வரி உள்நாட்டரசிறைத் திணைக்களத்திற்கு வங்கி செலுத்தும் இறுதி வரியாகவும் கருதப்படுகிறது. 2013இலிருந்து மத்திய வங்கி பொருளாதாரப் பணிகள் கட்டணத்தைச் செலுத்தப் பொறுப்புடையதல்ல.

2007ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டத்தின் (திருத்தப்பட்ட) ஏற்பாடுகளின் பிரகாரம் பங்கிலாபம் அல்லது வட்டி செலுத்தப்படுகின்ற போது அல்லது செலவு வைக்கப்படுகின்ற போது 10 சதவீதம் தடுத்து வைத்தல் வரிக்கு உட்பட்டதாயிருக்கும். அரச பிணையங்களின் வட்டி வருமானத்தின் மீது தடுத்து வைத்தல் வரியானது, அண்மிய முதனிலை ஏலத்தின் எடையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதத்தில் முதிர்ச்சித் திகதிக்குச் சீர்செய்யப்பட்ட அடிப்படையில் தீர்க்கப்படுகிறது.

அத்தகைய பிடித்துவைத்தல் வரி தொடர்பில் ரூ.1,788.16 மில்லியன் (2014இல் ரூ.777.50 மில்லியன்) செலவிடப்பட்டதுடன் செலுத்தத்தக்க வட்டி வருமானம் ரூ.8,859.71 மில்லியனாக (2014இல் ரூ.2,677.62 மில்லியன்) காணப்பட்டதுடன் பங்கிலாப வருமானம் ரூ.6.21 மில்லியனாக (2014இல் ரூ. 1.05 மில்லியன்) விளங்கியது.

## 37. தொழிற்பாட்டு இலாபங்களை தொழிற்பாட்டு காசுப் பாய்ச்சலுடன் இணைக்கப்படுத்தல்

| | 2015<br>ரூபா 000 | 2014<br>ரூபா 000 |
|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து அறிவிக்கப்பட்ட தேறிய இலாபம்/ (நட்டம்)** | **(19,601,819)** | (32,309,390) |
| **கூட்டுக /(கழிக்குக) காசல்லா விடயங்கள்** | | |
| தேய்மானம் மற்றும் பதிவழிப்பு | **557,158** | 396,811 |
| பெறப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் - முதலீட்டுச் சொத்துப்பட்டியல் | **(8,749,944)** | (4,085,660) |
| மொத்தத் தேறாத வெளிநாட்டுச் செலாவணி (இலாபம்)/நட்டம் | **(26,557,419)** | 21,166,521 |
| நிலையான சொத்து விற்பனை மீதான இலாபம் | **(1,236)** | (1,091) |
| ஏனைய ஏற்பாடுகள் | **(89,185)** | 1,633,532 |
| பிற்போடப்பட்ட கொடைகள் | **(409)** | (934) |
| வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கை நிதிய வைப்பின் பதிவழிப்பு | **(5,726)** | (5,351) |
| நிலையான வருமானப் பிணையங்களின் பதிவழிப்புச் செலவினம் | **845,385** | 3,233,923 |
| ஒன்றுசேர்ந்த பதிவழிப்பு | **-** | 157 |
| **ஏனைய தொழிற்படு மூலதன விடயங்களின் அசைவு கூட்டுக/ (கழிக்குக)** | | |
| இருப்புக்களின் (அதிகரிப்பு)/குறைவு | **200,516** | (517,198) |
| பெறத்தக்க வட்டியின் (அதிகரிப்பு)/குறைவு | **775,068** | 528,694 |
| பல்வகைப் பொறுப்புக்களின் அதிகரிப்பு/ (குறைவு) | **(2,029,813)** | (620,067) |
| கொடுபடத்தக்க வட்டியில் அதிகரிப்பு/ (குறைவு) | **(2,165,490)** | 1,616,420 |
| ஏனைய பெறத்தக்கவற்றின் (அதிகரிப்பு) / குறைவு | **59,130** | (95,958) |
| **கூட்டுக/ (கழிக்குக) முதலீடு மற்றும் நிதியிடல் நடவடிக்கைகள்** | | |
| தேறிய தேறல்செய்யப்படாத சந்தைப் பெறுமதி மாற்றங்கள் | **36,983,579** | 18,512,965 |
| **தொழிற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்** | **(19,780,205)** | 9,453,374 |

## 38. அரச கொடுக்கல் வாங்கல்களின் மீதான சுற்றோட்ட நாணயத்தின் வெளியீடு/(மீளப்பெறல்)

| | 2015<br>ரூபா 000 | 2014<br>ரூபா 000 |
|---|---|---|
| இலங்கை அரச பிணையங்களின் கொள்வனவு | **(21,450,406)** | 107,185,340 |
| பெறப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் - இலங்கை அரச பிணையங்கள் | **(8,876,023)** | (2,681,061) |
| இலங்கை அரசுக்கான முற்பணங்களின் அதிகரிப்பு/(குறைவு) | **7,233,700** | 34,730,900 |
| அரச, அரச நிறுவனங்களுடனான நிலுவைகளின் (அதிகரிப்பு)/குறைவு | **(116,192)** | 104,280 |
| | **(23,208,921)** | 139,339,459 |

## 39. வங்கி மற்றும் நிதியியல் நிறுவனங்களின் கொடுக்கல்வாங்கல்கள் மீதான சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வெளியீடு/(மீளப்பெறல்)

| | 2015<br>ரூபா 000 | 2014<br>ரூபா 000 |
|---|---|---|
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்களிலான (அதிகரிப்பு)/குறைவு | **(20,944,825)** | (12,199,430) |
| | **(20,944,825)** | (12,199,430) |

## 40. இறுதியிலுள்ள காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்

| | 2015<br>ரூபா 000 | 2014<br>ரூபா 000 |
|---|---|---|
| **வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள்** | | |
| வெளிநாட்டு வங்கிகளுடனான காசு நிலுவைகள் | **557,474,685** | 487,070,771 |
| | **557,474,685** | 487,070,771 |

## 41. நிதியிடலின் திரட்சி

ஆண்டின் இறுதியில் வங்கியின் முக்கியமான நிதியிடலின் திரட்சியானது பின்வருமாறு:

| 2015 திசெம்பர் 31இல் உள்ளவாறு | மொத்தம்<br>ரூ.000 | இலங்கை அரசு<br>ரூ.000 | இலங்கை பொதுமக்கள்<br>ரூ.000 | இலங்கை வர்த்தக வங்கிகள்<br>ரூ.000 | பல்தேசிய நிதியியல் நிறுவனங்கள்<br>ரூ.000 | ஏனையவை<br>ரூ.000 |
|---|---|---|---|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | **12,048,241** | **-** | **-** | **-** | **175,949** | **11,872,292** |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | **24,280,308** | **-** | **-** | **24,280,059** | **-** | **249** |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | **68,887,459** | **-** | **-** | **-** | **-** | **68,887,459** |
| ப.நா.நிதியம் | **251,644,344** | **-** | **-** | **-** | **251,644,344** | **-** |
| ஏனையவை | **217,924,142** | **49,479,048** | **-** | **1,124,395** | **643,303** | **166,677,396** |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | **574,784,494** | **49,479,048** | **-** | **25,404,454** | **252,463,596** | **247,437,396** |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | **181,726,732** | **-** | **-** | **181,720,741** | **-** | **5,991** |
| அரச, அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | **428,142** | **428,041** | **101** | **-** | **-** | **-** |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | **105,465,000** | **-** | **-** | **105,465,000** | **-** | **-** |
| ஊழியர் நலத் திட்டங்களின் நிலுவைகள் | **7,212** | **-** | **-** | **-** | **-** | **7,212** |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | **491,699,948** | **-** | **491,699,948** | **-** | **-** | **-** |
| ஏனைய செலுத்தத்தக்கவைகள் | **6,850,998** | **48,135** | **-** | **182,000** | **-** | **6,620,863** |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | **786,178,032** | **476,176** | **491,700,049** | **287,367,741** | **-** | **6,634,066** |
| **மொத்த நிதியியல் பொறுப்புக்கள்** | **1,360,962,526** | **49,955,224** | **491,700,049** | **312,772,195** | **252,463,596** | **254,071,462** |
| **ஏனைய பொறுப்புக்கள்** | | | | | | |
| பிற்போடப்பட்ட கொடைகள் | **106** | **-** | **-** | **-** | **-** | **106** |
| ஓய்வூதியம் மற்றும் ஏனைய தொழிலுக்குப் பின்னரான நன்மைகள் திட்டங்கள் | **10,942,541** | **-** | **-** | **-** | **-** | **10,942,541** |
| நானாவித பொறுப்புக்கள் மற்றும் அட்டுறுக்கள் | **199,325** | **26,364** | **-** | **-** | **-** | **172,961** |
| **மொத்த ஏனைய பொறுப்புக்கள்** | **11,141,972** | **26,364** | **-** | **-** | **-** | **11,115,608** |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | **1,372,104,498** | **49,981,588** | **491,700,049** | **312,772,195** | **252,463,596** | **265,187,070** |

2014 திசெம்பர் 31இல் உள்ளவாறான ஒப்பீட்டுத் தொகைகள் பின்வருமாறு:

| 2014 திசெம்பர் 31இல் உள்ளவாறான | மொத்தம் ரூ.000 | இலங்கை அரசு ரூ.000 | இலங்கை பொதுமக்கள் ரூ.000 | இலங்கை வர்த்தக வங்கிகள் ரூ.000 | பல்தேசிய நிதியியல் நிறுவனங்கள் ரூ.000 | ஏனையவை ரூ.000 |
|---|---|---|---|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | 11,678,483 | - | - | - | 305,160 | 11,373,323 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 19,207,822 | - | - | 19,180,954 | - | 26,868 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | 57,230,304 | - | - | - | - | 57,230,304 |
| ப.நா.நிதியம் | 308,011,133 | - | - | - | 308,011,133 | - |
| ஏனையவை | 72,146,159 | 22,063,900 | - | 805,214 | 837,539 | 48,439,506 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | 468,273,901 | 22,063,900 | - | 19,986,168 | 309,153,832 | 117,070,001 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | 161,009,323 | - | - | 161,004,331 | - | 4,992 |
| அரச, அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | 311,950 | 311,832 | 118 | - | - | - |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 328,252,000 | - | - | 328,252,000 | - | - |
| ஊழியர் நலத் திட்டங்களின் நிலுவைகள் | 2,209,782 | - | - | - | - | 2,209,782 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | 416,895.362 | - | 416,895,362 | - | - | - |
| ஏனைய செலுத்தத்தக்கவைகள் | 8,867,823 | 26,190 | - | 182,000 | - | 8,659,633 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | 917,546,240 | 338,022 | 416,895,480 | 489,438,331 | - | 1 0,874,407 |
| **மொத்த நிதியியல் பொறுப்புக்கள்** | 1,385,820,141 | 22,401,922 | 416,895,480 | 509,424,499 | 309,153,832 | 127,944,408 |
| **ஏனைய பொறுப்புக்கள்** | | | | | | |
| பிற்போடப்பட்ட கொடைகள் | 515 | - | - | - | - | 515 |
| ஓய்வூதியம் மற்றும் ஏனைய தொழிலுக்குப் பின்னரான நன்மைகள் திட்டங்கள் | 3,599,035 | - | - | - | - | 3,599,035 |
| நானாவித பொறுப்புக்கள் மற்றும் அட்டுறுக்கள் | 197,380 | 37,928 | - | - | - | 159,452 |
| **மொத்த ஏனைய பொறுப்புக்கள்** | 3,796,930 | 37,928 | - | - | - | 3,759,002 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | 1,389,617,071 | 22,439,850 | 416,895,480 | 509,424,499 | 309,153,832 | 131,703,410 |

## 42. இடர்நேர்வு முகாமைத்துவம்

இலங்கை மத்திய வங்கி, பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாடு மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு ஆகிய இரு சட்ட நியதிக் குறிக்கோள்களை கொண்டிருக்கிறது. மத்திய வங்கியிடம் அதன் குறிக்கோள்களை எய்தும் விதத்தில் பொருளாதார மற்றும் நிதியியல் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான பரந்தளவு சட்ட அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இலங்கை மத்திய வங்கியினை ஆளும் சபையான நாணயச் சபை வங்கியின் முகாமைத்துவம், தொழிற்பாடுகள் மற்றும் நிருவாகம் என்பன தொடர்பான அனைத்துக் கொள்கைத் தீர்மானங்களையும் மேற்கொள்ளுவதற்குப் பொறுப்பானதாகும்.

இலங்கை மத்திய வங்கியின் தொழிற்பாடுகளும் கொள்கைகளும் இலாபத்தினை உருவாக்குவதனை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை. எனினும் வங்கி அதன் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் காலப்பகுதியில் பல்வேறு இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மை காணப்படுகின்றது. இடர்நேர்வுகளின் இரண்டு முக்கிய பரிமாணங்களாக நிதியியல் இடர்நேர்வு மற்றும் நிதியியலல்லா இடர்நேர்வு என்பன காணப்பட்டன. நிதியியல் இடர்நேர்வு சந்தை இடர்நேர்வு (வட்டி வீத இடர்நேர்வு மற்றும் வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வு), கொடுகடன் இடர்நேர்வு மற்றும் திரவத்தன்மை இடர்நேர்வு என்பனவற்றை உள்ளடக்குகிறது. நிதியியலல்லா இடர்நேர்வு, சட்ட இடர்நேர்வு, இணங்குவிப்பு இடர்நேர்வு, மனித வள இடர்நேர்வு, மோசடி இடர்நேர்வு, உபாய மற்றும் கொள்கை இடர்நேர்வு, ஏனைய தொழிற்பாட்டு இடர்நேர்வுகள் போன்றவற்றை உள்ளடக்குகிறது. இவ்வனைத்து இடர்நேர்வுகளும் இறுதியில் வங்கியின் கீர்த்தி இடர்நேர்வுகளேயாகும். ஆகவே, இடர்நேர்வுகளுக்குள்ளாகக் கூடிய தன்மையினை மதிப்பிடவும் கண்காணிக்கவும் முகாமைப்படுத்தவும் எல்லா நேரங்களிலும் வலுவானதும் காத்திரமானதுமான இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாட்டு முறைமைகள் இடம்பெற்றிருப்பதனை வங்கி முகாமைத்துவம் உறுதிப்படுத்துகிறது.

வங்கியின் இடர்நேர்வுகளை அடையாளம் கண்டு கட்டுப்படுத்துவது நாணயச் சபையின் பொறுப்பாகும். காத்திரமான முகாமைத்துவம் மற்றும் இடர்நேர்வுகளின் கட்டுப்படுத்தல் என்பனவற்றை உறுதிப்படுத்தும் நோக்குடன் சபையானது இப்பணியினை பல்வேறு திணைக்களங்களுக்கும் குழுக்களும் வழங்கியது. ஆகவே இடர்நேர்வு முகாமைத்துவம் வங்கியிலுள்ள கொள்கை தீர்மானங்களை மேற்கொள்ளும் அனைத்து மட்டங்களிலுள்ளவர்களினதும் பொறுப்பும், இன்றியமையாத விடயங்களுமாகும். எனவே, சுயாதீனமான இடர்நேர்வு முகாமைத்துவத் தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்காக 2015இல் இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் உருவாக்கப்பட்டமையுடன் "மூன்று மட்டப் பொறுப்பு" மாதிரி ஆரம்பிக்கப்பட்டது.

இதன்படி, "முதல் மட்டப் பாதுகாப்பு"ப் பொறுப்பு தொடர்பான திணைக்களங்களிடம் விடப்பட்டிருக்கிறது. "முதல் மட்டப் பாதுகாப்பு" இன் கீழ்வரும் இடர்நேர்வுகள் தொழிற்பாட்டு ரீதியான தன்மையினைக் கொண்டிருப்பதனால் அத்தகைய இடர்நேர்வுகள் அவை ஆரம்பிக்கப்படுகின்ற இடத்திலேயே திணைக்களங்களினால் கண்காணிக்கப்பட்டு கட்டுப்படுத்தப்படுகின்றன. "முதலாவது மட்டப் பாதுகாப்பு" பொருத்தமான உள்ளக இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகளையும் கட்டுப்பாடுகள் நடைமுறையிலுள்ளமையினையும் உறுதிப்படுத்தும். "இரண்டாவது மட்டப் பாதுகாப்பாக" உள்ள இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் நிதியியல் இடர்நேர்வுகளை மதிப்பிடவும் கண்காணிப்பதற்கும் சுயாதீனமாக ஆளுநருக்கு அறிக்கையளிக்கவும் பொறுப்புடையதாகும். அவ்வாறிருப்பதனால் இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் பன்னாட்டு ஒதுக்கு முதலீடுகளுடன் தொடர்பாக நிதியியல் இடர்நேர்வு முகாமைத்துவத் தொழிற்பாடுகள், இலங்கை மத்திய வங்கியினால் முகாமைப்படுத்தப்படும் உள்ளக நிதியங்களின் முதலீடுகள், நாணயத் தொழிற்பாடுகள், பொதுப்படுகடன் முகாமைத்துவம் மற்றும் ஊழியர் சேம நிதியத்தின் முதலீடுகள் என்பன இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களத்தினால் மனித வளங்களின் கிடைப்பனவு மற்றும்

தேவையான உட்கட்டமைப்பு என்பனவற்றிற்குட்பட்டு கட்டம் கட்டமாகப் பொறுப்பேற்றுக்கொள்ளும். உள்ளக கணக்காய்வுத் திணைக்களத்திடம் "மூன்றாவது மட்டப் பாதுகாப்பு" இனை இடர்நேர்வு உத்தரவாதத் தொழிற்பாடாக மேற்கொள்வதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் அது ஆளுநருக்கு நேரடியாகவும் அறிக்கையளிக்கிறது.

நிதியியலல்லா இடர்நேர்வுகளைக் கண்காணிப்பது வேலை நடைமுறைகள், விதிகள் மற்றும் வழிகாட்டல்கள் அதேபோன்று முழு வங்கியினதும் பொருத்தமான இடர்நேர்வு ஆளுகை என்பனவற்றின் இடர்நேர்வு இணங்குவிப்பினை உறுதிப்படுத்தும். இதனைக் கருத்திற் கொண்டு நிதியியலல்லா இடர்நேர்வுகளை மேற்பார்வை செய்வதற்கான கட்டமைப்பொன்றினைக் கொண்டிருக்கும் பொருட்டு, 2015 ஒத்தோபரில் நிதியியலல்லா இடர்நேர்வு முகாமைத்துவக் குழு ஏற்படுத்தப்பட்டது. குழுவானது ஆளுநரைத் தலைவராகக் கொண்டிருப்பதுடன் ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த இடர்நேர்வுகளுக்குள்ளாகக்கூடிய தெரிந்தெடுக்கப்பட்ட முக்கிய திணைக்களங்கள் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும். நிதியியலல்லா இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவின் பிரதான நோக்கம் வங்கியின் கீர்த்தியினைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டும் ஏதேனும் இழப்புக்கள் மற்றும் சேதங்களை தணித்துக் கொள்ளும் பொருட்டும் வங்கியில் நிதியியலல்லா இடர்நேர்வினை அடையாளம் கண்டு, மதிப்பீட்டு கண்காணிக்கின்ற நாணயச் சபையின் பொறுப்புக்களை நிறைவேற்ற உதவியளிப்பதேயாகும். குழுவும் இடர்நேர்வு முகாமைத்துவத் திட்டம் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறைகள் என்பனவற்றின் தரம், ஒருங்கிணைப்பு மற்றும் காத்திரமான தன்மை என்பனவற்றை மீளாய்வு செய்து மதிப்பிடுகிறது.

மத்திய வங்கி உள்ளாகக்கூடிய இடர்நேர்வுகளாக கொடுகடன் இடர்நேர்வு, வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வு, வட்டி வீத இடர்நேர்வு மற்றும் திரவத்தன்மை இடர்நேர்வு என்பன காணப்பட்டன. இவ்விடர்நேர்வுகளின் குறிப்பிடத்தக்கதொரு விகிதம் வங்கியின் வெளிநாட்டு ஒதுக்குகளின் முகாமைத்துவத்திலிருந்து தோன்றுகின்றது. எனவே, வங்கியின் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் வெளிநாட்டு நாணயச் சொத்துப்பட்டியலை முகாமை செய்கின்ற வேளையில் பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்தில் மத்திய அலுவலகம் வங்கியின் வெளிநாட்டுச் சொத்துப்பட்டியல் தொடர்பான நிதியியல் இடர்நேர்வுகளைக் கண்காணிப்பதற்கும் முகாமைப்படுத்துவதற்கும் பொறுப்புடையதாகும். பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் மத்திய அலுவலகத்தினால் கையாளப்பட்ட நிதியியல் இடர்நேர்வு முகாமைத்துவத் தொழிற்பாடு வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவக் குழுவினால் ஒப்புதலளிக்கப்பட்டவாறு 2015 திசெம்பர் 30ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களத்திற்கு மாற்றல் செய்யப்பட்டிருக்கிறது.

நாணயச் சபையினால் நியமிக்கப்பட்ட வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவக் குழு, வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவத் தொழிற்பாடுகள் காத்திரமான முறையிலும் வினைத்திறனுடனும் மேற்கொள்ளப்படுகின்றன என்பதனை உறுதிப்படுத்துவதற்கான பொறுப்பினைக் கொண்டிருக்கிறது. இடர்நேர்வு முகாமைத்துவம் தொடர்பானவை உட்பட அனைத்துக் கொள்கை வழிமுறைகளும் வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டு நாணயச் சபைக்கு விதந்துரைக்கப்படுகின்ற இடர் தணிப்புக் கொள்கைகளை உள்ளாக்கிய விரிவான வழிகாட்டல்களின் தொகுதியொன்று ஒதுக்கு முகாமைத்துவத் தொழிற்பாடுகளுடன் தொடர்புபட்ட வணிகர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

முதலீடுகள் மற்றும் இணைத்தரப்பினர்களின் கொடுகடன் தரமிடலை அடிப்படையாகக் கொண்ட வெளிநாட்டு சொத்துப்பட்டியலின் கொடுகடன் இடர்நேர்வினை முகாமைப்படுத்துவதற்கு பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தினால் இணைத்தரப்பு கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவ முறைமை பயன்படுத்தப்பட்டது. இணைத்தரப்பு இடர்நேர்வு மதிப்பீடுகள், இணைத்தரப்புக் கொடுகடன் தரமிடல் முகாமைத்துவ முறைமை வழிகாட்டல்களின் கீழ் மதிப்பிடப்பட்டன.

வட்டி வீத இடர்நேர்வு அல்லது வட்டி வீதங்களில் ஏற்படும் அசைவுகளுக்கான வங்கியின் வெளிநாட்டுச் சொத்துப்பட்டியலின் வெளிப்படுத்துகை சொத்துப்பட்டியலின் காலப்பகுதியில் செய்யப்படும் பொருத்தமான சீராக்கங்களின் மூலமாகவும் அதேபோன்று 10 நாட்களைக் கொண்ட நேர எல்லை மற்றும் 99 சதவீதமான தன்னம்பிக்கை என்பனவற்றிற்கான பொருத்தமான சீராக்கங்களினூடாக முகாமைப்படுத்தப்பட்டன. செலாவணி வீதத் தளம்பல்களின் விளைவாக ஏற்படுகின்ற செலாவணி வீத இடர்நேர்வு அல்லது மூலதன இழப்புக்கள் முதலீட்டு நாணயங்களை பன்முகப்படுத்துவதனூடாக முக்கியமாக முகாமைப்படுத்தப்படுகின்றன. திரவத்தன்மை இடர்நேர்வினைத் தணிக்கும் பொருட்டு, சொத்துக்களின் வகுப்புக்களை மட்டுப்படுத்துதல், பிணையங்களின் வழங்குநர்களினால் வழங்கப்பட்ட மொத்தத் தொகை தொடர்பில் உயர்ந்தபட்சக் கொள்வனவுகளை மட்டுப்படுத்தல் என்பன சொத்து ஒதுக்கீட்டுச் செயன்முறையில் பரிசீலனையில் கொள்ளப்பட்டன. வெளிநாட்டு ஒதுக்குகளின் முகாமைத்துவத்தில் திரவத்தன்மை இடர்நேர்வுகளைக் குறைப்பது காத்திரமான வெளிநாட்டுச் செலாவணி தலையீட்டு இயலாற்றல் தன்மையொன்றைப் பேணுவதற்கு முக்கிய பரிசீலனையில் கொள்ளப்படுகிறது. கொடுகடன், வட்டி வீதங்கள் வெளிநாட்டுச் செலாவணி மற்றும் திரவத்தன்மை இடர்நேர்வு என்பனவற்றை முகாமைப்படுத்துவதற்கான கொள்கைகள் முறையே 42.1, 42.2, 42.3 மற்றும் 42.4 ஆகிய பிரிவுகளில் காட்டப்பட்டுள்ளன.

உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவச் செயன்முறைகள் என்பன வங்கியின் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தினால் ஆண்டுதோறும் கணக்காய்வு செய்யப்படுகின்றன. இது நடைமுறைகளின் போதுமாந்தன்மையினையும் நடைமுறைகளுக்கு வங்கியின் இணங்குவிப்புக்களையும் பரீட்சிக்கின்றது. அனைத்துத் திணைக்களங்களும் காலாந்தர உள்ளகக் கணக்காய்வு மீளாய்விற்கு உட்படுகின்றன. உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம் ஆளுநருக்கு நேரடியாக அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதுடன் இது கண்டறிந்த விடயங்களையும் விதந்துரைப்புக்களையும் நாணயச் சபை மதியுரை கணக்காய்வுக் குழுவிற்கு அறிவிக்கின்றன.

நாணயச் சபை மதியுரை கணக்காய்வுக் குழுவிற்கு நாணயச் சபையின் நியமன உறுப்பினர் தலைமை தாங்குகின்றார். நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வுக் குழு வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் மற்றும் அதிலுள்ள ஏதேனும் இடைக்காலத் திருத்தங்கள், வெளிவாரிக் கணக்காய்வாளர்களினால் வழங்கப்பட்ட முகாமைத்துவக் கடிதங்களுக்கான முகாமைத்துவப் பதிலிறுப்பு, வெளிவாரி மற்றும் உள்ளகக் கணக்காய்வில் கண்டறியப்பட்டவற்றையும் முகாமைத்துவத்தினால் இணங்கப்பட்ட விதந்துரைப்புக்களும் நடைமுறைப்படுத்துவதனை கண்காணித்தல், இணங்குவிப்பு அலுவலரினால் அறிக்கையிடப்பட்ட இணங்காமைகள், கொள்கை வடிவமைத்தல் மற்றும் கணக்காய்வுடன் தொடர்பான ஏதேனும் விடயங்கள் தொடர்பான விடயங்கள்/பிரச்சனைகள் பற்றிய கணக்காய்வுத் திணைக்களத்தின் தலைவர்களுக்கான மதியுரை போன்ற வங்கியின் கணக்காய்வுகள் தொடர்பான கொள்கை மற்றும் பிரச்சனைகள் மீதான நாணயச் சபையின் மதியுரை கணக்காய்வுக் குழு நாணயச் சபைக்கு மதியுரைகளை வழங்குகிறது. நாணயச் சபை மதியுரை கணக்காய்வுக் குழு அதன் விதந்துரைப்புக்களையும் செயலாற்றங்களையும் தேவையானவிடத்து பரிசீலனைக்காக காலாண்டு அடிப்படையில் நாணயச் சபைக்கு அறிக்கையளிக்கிறது.

நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 42 மற்றும் 43இன் கீழ் வங்கி கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்விற்கு உட்படுதல் வேண்டும். அதன் காரணமாக கணக்காய்வாளர் நாயகம் ப.நி.அ நியமங்களுக்கிணங்கி ஒழுகுவதை உறுதிப்படுத்துவதற்காக ப.க நியமங்களின் கீழ் கணக்காய்வினை மேற்கொள்வதற்காக பட்டயக் கணக்காளரான ஏனஸ்ட் அன்ட் யங் நிறுவனத்தின் பணியினைப் பெற்றுக் கொண்டிருக்கின்றார்.

**42.1 கொடுகடன் இடர்நேர்வு**

**(அ) வங்கியின் ஆண்டின் இறுதியிலுள்ளவாறான குறிப்பிடத்தக்க கொடுகடன் இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மையின் திரட்சி புவியியல் பிரதேசங்களுக்கேற்ப (நாணயக் கூறுக்குரிய நாட்டை அடிப்படையாகக் கொண்டு) பின்வருமாறு:**

| புவியியல் பிரதேசங்களுக்கேற்ப கொடுகடன் இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மையின் திரட்சி | 2015 ரூபா 000 | 2014 ரூபா 000 |
|---|---|---|
| இலங்கை | **266,095,014** | 281,434,233 |
| ஐக்கிய அமெரிக்கா | **314,591,946** | 247,455,622 |
| யப்பான் | **47,722,367** | 82,055,393 |
| பிரித்தானியா | **170,829,879** | 164,344,228 |
| ஐரோப்பா | **101,096,757** | 93,737,444 |
| பல்தேசிய நிதியியல் நிறுவனங்கள் | **336,791,479** | 222,580,690 |
| ஏனையவை | **57,917,502** | 233,542,023 |
| **மொத்த நிதியியல் சொத்துக்கள்** | **1,295,044,944** | 1,325,149,633 |

**(ஆ) கொடுகடன் இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மையின் திரட்சி**

வங்கியின் ஆண்டு இறுதியில் குறிப்பிடத்தக்க கொடுகடன் இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மையின் திரட்சி நிறுவனங்களுக்கேற்ப வருமாறு:

| | 2015 ரூபா 000 | 2014 ரூபா 000 |
|---|---|---|
| அரசு | **903,134,670** | 769,681,320 |
| பல்தேசிய நிதியியல் நிறுவனங்கள் | **336,791,480** | 222,580,690 |
| வெளிநாட்டு வங்கிகளும் நிதியியல் நிறுவனங்களும் | **48,696,315** | 324,625,536 |
| இலங்கை வங்கிகளும் நிதியியல் நிறுவனங்களும் | **909,033** | 3,041,059 |
| ஏனையவை | **5,513,446** | 5,221,028 |
| **மொத்த நிதியியல் சொத்துக்கள்** | **1,295,044,944** | 1,325,149,633 |

**(இ) கொடுகடன் தரமிடல் மூலம் கொடுகடன் இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மை**

பின்வரும் அட்டவணை ஸ்டான்டர்ட் அன்ட் புவர்ஸ் மற்றும் பிச் றேட்டிங்ஸ் கொடுகடன் தரமிடல்களின் அடிப்படையில் குறிப்பிட்ட நிதிச் சொத்துக்களின் அல்லது வெளியீடுகளின் கொடுகடன் தரமிடல்களை காட்டுகின்றது. ஸ்டான்டர்ட் அன்ட் புவர்ஸ் தரமிடல்களுக்கும் பிச் றேட்டிங்ஸ் தரமிடல்களுக்கும் ஏற்ப AAA குறியீடுகள் அதியுயர் கொடுகடன் தரத்தினைக் கொண்ட தரமிடுதல்களையும் மிகக் குறைந்த கொடுகடன் இடர்நேர்வு எதிர்பார்ப்பினையும் காட்டுகின்றது. நிதிக் கடப்பாடுகளை உரிய நேரத்தில் கொடுப்பனவு செய்யக்கூடிய சிறப்பான பலம் பொருந்திய நிலை உள்ளதென்பதை இது காட்டுகிறது. AA குறியீட்டின் மூலம் உயர் தரமிடுதல் காட்டப்படுவதோடு மிகக் குறைந்த கொடுகடன் இடர்நேர்வு எதிர்பார்ப்பினைக் காட்டுகின்றது. A குறியீட்டின் மூலம் உயர் மத்திய தரம் காட்டப்படுவதோடு குறைந்த கொடுகடன் இடர்நேர்வு எதிர்பார்ப்பினைக் காட்டுகிறது. BBB குறியீட்டின் மூலம் கீழ்மட்ட முதலீட்டுத் தரமிடுதலும் கொடுகடன் இடர்நேர்வு தொடர்பில் நடைமுறையில் குறைந்த எதிர்பார்ப்பு உள்ளதென்பதும் காட்டப்படுவதோடு, பாதுகாப்பு அளவீடுகளின் தேவையை வலியுறுத்துகிறது. AAA குறியீட்டுக்குக் குறைவான தரங்களை பிரதானமான வகைகளுக்கு இடையிலுள்ள நிலைகளைக் காட்டும் பொருட்டு + அல்லது - அடையாளத்தின் மூலம் வகைப்படுத்திக் காட்டலாம். NR குறியீட்டின் மூலம் நிறுவனம், ஸ்டான்டர்ட் அன்ட் புவர்ஸ், பிச் றேட்டிங்ஸ் மற்றும் மூடிஸ் தரமிடலுக்கு உள்ளாக்கப்படவில்லையென்பது காட்டப்பட்டுள்ளது.

| கொடுகடன் தரமிடல் மூலம் கொடுகடன் இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை | கொடுகடன் தரமிடல் | 2015 ரூபா 000 | % | 2014 ரூபா 000 | % |
|---|---|---|---|---|---|
| **காசு மற்றும் காசுக்குச் சமமானவை** | | | | | |
| பெடரல் ரிசேர்வ் வங்கி - ஐ.அமெரிக்கா/ரிசர்வ் வங்கி - அவுஸ்திரேலியா/ பன்னாட்டுத் தீர்ப்பனவுக்கான வங்கி/ யப்பான் வங்கி/ டியூச் புண்டெஸ் வங்கி/ இங்கிலாந்து வங்கி/ சுவேரிஸ் ரிக்ஸ் வங்கி/ கனடா வங்கி/ நியூசிலாந்து றிசேர்வ் வங்கி | | **553,410,725** | **42.73%** | 209,580,134 | 15.82% |
| | AA | **3,435** | **0.00%** | - | 0.00% |
| | AA- | **-** | **0.00%** | 81,692,163 | 6.16% |
| | A+ | **2,127,405** | **0.16%** | 162,072,232 | 12.23% |
| | A | **1,531,225** | **0.12%** | 33,555,560 | 2.53% |
| | A- | **1,734** | **0.00%** | - | 0.00% |
| | BBB+ | **202,837** | **0.02%** | - | 0.00% |
| | BBB | **-** | **0.00%** | 28,002 | 0.00% |
| | BBB- | **1,325** | **0.00%** | - | 0.00% |
| | NR | **195,999** | **0.02%** | 142,680 | 0.01% |
| | | **557,474,685** | **43.05%** | 487,070,771 | 36.76% |
| **வெளிநாட்டு நாணய விற்பனை/ விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள பிணையங்கள்** | | | | | |
| பன்னாட்டுத் தீர்ப்பனவுக்கான வங்கி/ பெடரல் ரிசேர்வ் வங்கி - ஐ.அமெரிக்கா/ ரிசேர்வ் வங்கி - அவுஸ்திரேலியா/ யப்பான் வங்கி/ டியூச் புண்டெஸ் வங்கி/ இங்கிலாந்து வங்கி/ சுவேரிஸ் ரிக்ஸ் வங்கி/ கனடா வங்கி/ நியூசிலாந்து றிசேர்வ் வங்கி | | **11,714,884** | **0.90%** | 10,855,885 | 0.82% |
| | AAA | **180,207,061** | **13.92%** | 170,800,992 | 12.89% |
| | AA+ | **117,813,693** | **9.10%** | 160,197,811 | 12.09% |
| | AA | **922,677** | **0.07%** | 3,537,900 | 0.27% |
| | AA- | **15,356,209** | **1.19%** | 15,507,080 | 1.17% |
| | A+ | **22,574,134** | **1.74%** | 24,255,977 | 1.83% |
| | A | **-** | **0.00%** | 1,051,456 | 0.08% |
| | A- | **-** | **0.00%** | 739,460 | 0.06% |
| | BBB- | **-** | **0.00%** | 2,455,004 | 0.19% |
| | NR | **27,452,563** | **2.12%** | 63,486,285 | 4.79% |
| | | **376,041,221** | **29.04%** | 452,887,850 | 34.18% |
| இலாப நட்டங்களினூடான சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் | AA- | **-** | **0.00%** | 16,796,957 | 1.27% |
| | A | **11,792,926** | **0.91%** | - | 0.00% |
| | | **11,792,926** | **0.91%** | 16,796,957 | 1.27% |
| **பெறுதி நிதியியல் சாதனங்கள்** | | | | | |
| பெடரல் ரிசேர்வ் வங்கி - ஐ.அமெரிக்கா/ ரிசேர்வ் வங்கி - அவுஸ்திரேலியா/ பன்னாட்டுத் தீர்ப்பனவிற்கான வங்கி/ யப்பான் வங்கி/ டியூச் புண்டெஸ் வங்கி/ இங்கிலாந்து வங்கி/ சுவேரிஸ் ரிக்ஸ் வங்கி/ கனடா வங்கி/ நியூசிலாந்து றிசேர்வ் வங்கி | | **99** | **0.00%** | - | 0.00% |
| | AA- | **-** | **0.00%** | 37,832 | 0.00% |
| | A+ | **-** | **0.00%** | 1,616 | 0.00% |
| | A | **49** | **0.00%** | - | 0.00% |
| | A- | **1,886** | **0.00%** | 47 | 0.00% |
| உள்நாட்டு ரீதியாகத் தரமிடப்பட்டவை | AAA | **-** | **0.00%** | 268,877 | 0.02% |
| | AA+ | **1,652** | **0.00%** | 461 | 0.00% |
| | AA | **460** | **0.00%** | 802,792 | 0.06% |
| | AA- | **-** | **0.00%** | 301,005 | 0.02% |
| | A- | **-** | **0.00%** | 167,607 | 0.01% |
| | | **4,145** | **0.00%** | 1,580,237 | 0.12% |
| ப.நா.நி. தொடர்புடைய சொத்துக்கள் | AAA | **83,636,350** | **6.46%** | 79,816,029 | 6.02% |
| | | **83,636,350** | **6.46%** | 79,816,029 | 6.02% |
| **ஏனைய பெறத்தக்கவைகள்** | | | | | |
| | AAA | **344** | **0.00%** | 364 | 0.00% |
| | AA- | **-** | **0.00%** | 426 | 0.00% |
| | A+ | **-** | **0.00%** | 2,153,902 | 0.16% |
| | A | **2,370** | **0.00%** | 2,238,138 | 0.17% |
| | A- | **-** | **0.00%** | 2,713,084 | 0.20% |
| | BBB- | **4** | **0.00%** | - | 0.00% |
| உள்நாட்டில் தரமிடப்பட்டவை | AAA | **2,357** | **0.00%** | - | 0.00% |
| | | **5,075** | **0.00%** | 7,105,914 | 0.54% |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | **1,028,954,402** | **79.45%** | 1,045,257,758 | 78.88% |

| | கொடுகடன் தரமிடல் | 2015 ரூபா 000 | % | 2014 ரூபா 000 | % |
|---|---|---|---|---|---|
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | B+ | **102,866,967** | **7.94%** | 124,443,452 | 9.39% |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | B+ | **151,131,672** | **11.67%** | 143,897,971 | 10.86% |
| வங்கிகளுக்கான கடன்கள் | AA+ | **503,989** | **0.04%** | 980,578 | 0.07% |
| | AA | **6,328** | **0.00%** | 8,611 | 0.00% |
| | AA- | **14,715** | **0.00%** | 79,003 | 0.01% |
| | A+ | **32,314** | **0.00%** | - | 0.00% |
| | A- | **33,101** | **0.00%** | 41,988 | 0.00% |
| | BBB+ | **-** | **0.00%** | 222,340 | 0.02% |
| | BBB | **6,835** | **0.00%** | 4,675 | 0.00% |
| | BB+ | **85,759** | **0.01%** | 108,788 | 0.01% |
| | B+ | **1,422** | **0.00%** | - | 0.00% |
| | B | **4,860** | **0.00%** | - | 0.00% |
| | NR | **197,034** | **0.02%** | 43,390 | 0.00% |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான உரிமை முதலீடுகள் | NR | **41,095** | **0.00%** | 41,095 | 0.00% |
| ஏனைய சொத்துக்கள் | B+ | **5,671,536** | **0.44%** | 4,830,722 | 0.36% |
| | B | **10,000** | **0.00%** | - | 0.00% |
| | NR | **5,482,915** | **0.42%** | 5,189,262 | 0.39% |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | **266,090,542** | **20.55%** | 279,891,875 | 21.12% |
| **மொத்த நிதியியல் சொத்துக்கள்** | | **1,295,044,944** | **100.00%** | 1,325,149,633 | 100.00% |
| **(ஈ) பிரதானமான கொடுகடன் வகைப்படுத்தலின்படி வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்களின் சாராம்சம்** | | | | | |
| ஐக்கிய அமெரிக்காவின் பெடரல் ரிசேர்வ் வங்கி, அவுஸ்திரேலியாவின் றிசேர்வ் வங்கி/ பன்னாட்டு தீர்ப்பனவுக்கான வங்கி/ யப்பான் வங்கி/ டியூச் புண்டெஸ் வங்கி/ இங்கிலாந்து வங்கி/ சுவேரிஸ் ரிக்ஸ் வங்கி/ கனடா வங்கி/ நியூசிலாந்து றிசேர்வ் வங்கி | | **565,125,708** | **43.64%** | 220,436,019 | 16.63% |
| ப.நா. நிதியம் தொடர்பான சொத்துக்கள் | | **83,636,694** | **6.46%** | 79,816,393 | 6.02% |
| | AAA | **180,207,061** | **13.92%** | 170,800,992 | 12.89% |
| | AA+/- | **134,096,014** | **10.35%** | 277,770,169 | 20.96% |
| | A+/- | **38,031,730** | **2.94%** | 228,781,472 | 17.26% |
| | BBB+/- | **204,166** | **0.02%** | 2,483,006 | 0.19% |
| | NR | **27,648,561** | **2.13%** | 63,628,965 | 4.80% |
| உள்நாட்டு ரீதியாக தரமிடப்பட்டவை | AAA | **2,357** | **0.00%** | 268,877 | 0.02% |
| | AA+ | **1,652** | **0.00%** | 461 | 0.00% |
| | AA | **459** | **0.00%** | 802,792 | 0.06% |
| | AA- | **-** | **0.00%** | 301,005 | 0.02% |
| | A- | **-** | **0.00%** | 167,607 | 0.01% |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | **1,028,954,402** | **79.45%** | 1,045,257,758 | 78.88% |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | AA+ | **503,989** | **0.04%** | 980,578 | 0.07% |
| | AA | **6,328** | **0.00%** | 8,611 | 0.00% |
| | AA- | **14,715** | **0.00%** | 79,003 | 0.01% |
| | A+ | **32,314** | **0.00%** | - | 0.00% |
| | A- | **33,101** | **0.00%** | 41,988 | 0.00% |
| | BBB+ | **-** | **0.00%** | 222,340 | 0.02% |
| | BBB+ | **6,835** | **0.00%** | 4,675 | 0.00% |
| | BB+ | **85,759** | **0.01%** | 108,788 | 0.01% |
| | B+ | **259,671,597** | **20.05%** | 273,172,145 | 20.61% |
| | B | **14,860** | **0.00%** | - | 0.00% |
| | NR | **5,721,044** | **0.44%** | 5,273,747 | 0.40% |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | **266,090,542** | **20.55%** | 279,891,875 | 21.12% |
| **மொத்த நிதிச் சொத்துக்கள்** | | **1,295,044,944** | **100.00%** | 1,325,149,633 | 100.00% |

42.2 வட்டி வீத இடர்நேர்வு

(அ) வெளிநாட்டு நாணய வட்டி வீதக் கூருணர்திறன்

**வட்டி வீத இடர்நேர்வு என்பது வட்டி வீதங்களில் ஏற்படும் மாற்றங்களிலிருந்து எழுகின்ற நட்டங்களின் இடர்நேர்வாகும்.**

நிலையான வருமானப் பிணையங்கள் பட்டியலின் வட்டி வீத கூருணர் திறனானது, வட்டி வீதம் 10 அடிப்படைப்புள்ளிகளினால் அதிகரிப்பதன் காரணமாக உருவாகக் கூடிய இழப்புக்களின் அடிப்படையில் அளவிடப்படுவதோடு, கீழே தரப்பட்டுள்ள நிலையான வருமானப் பிணையங்கள் பட்டியல் கூறுகளைப் பயன்படுத்தி வங்கியானது இடர்நேர்வுக் கூருணர்திறனை அளவிடுகின்றது:

| பட்டியல் பிரிவு | நிகழக்கூடிய இழப்பு (ஐ.அ.டொ. மில்.) | |
|---|---|---|
| | 2015 | 2014 |
| வர்த்தகம் மற்றும் விற்பனைக்குள்ளவை | **8.35** | 12.76 |

பின்வரும் உபாய முறைகளைப் பயன்படுத்தி இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் வெளிநாட்டுச் சொத்துக்கள் பட்டியலின் வட்டி வீத இடர்நேர்வினை முகாமை செய்கின்றது.

(i) வெளிநாட்டுச் சொத்துப்பட்டியல் மீதான வட்டி வீத மாற்றங்களின் தாக்கத்தினை வட்டி வீத கூருணர்திறன் அளவிடுகின்ற அதேவேளை, வட்டி வீதத்தினையும் அதேநேரம் முதலீட்டுக் காலவரையறையையும் கவனத்திலெடுக்கின்றதான மாற்றப்பட்ட காலவரையறையை வட்டி வீத இடர்நேர்வினை அளவிடுவதற்காக வங்கி பயன்படுத்துகின்றது. மாற்றப்பட்ட காலவரையானது வழங்கப்பட்டுள்ள வட்டி வீதத்திலான மாற்றத்திற்கான (விளைவு) பிணையங்களின் விலையிலான மாற்றத்தை அளவிடுகின்றது. உயர்ந்தளவு மாற்றப்பட்ட காலவரையறையானது உயர்ந்தளவு இடர்நேர்வினைக் குறிக்கின்றது. ஆதலால் வங்கியானது நிதிச் சந்தையிலான அபிவிருத்தி, சொத்துப் பட்டியலின் பண்புகள் மற்றும் வங்கியின் இடர்நேர்வு விருப்பினைக் கவனத்திற் கொண்டு காலத்திற்குக் காலம் பொருத்தமான மாற்றப்பட்ட காலவரையறையை விதிக்கின்றது. வெளிநாட்டுச் சொத்துக்கள் பட்டியலின் மாற்றப்பட்ட காலவரையறை பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

மாற்றப்பட்ட காலவரையறை

| முதலீட்டுப் பிரிவு | மாற்றப்பட்ட காலவரையறை | |
|---|---|---|
| | 2015 | 2014 |
| மூலதனச் சந்தை (நிலையான வருமானப் பிணையங்கள்) | **3.28** | 3.76 |

(ii) மாற்றப்பட்ட காலவரையானது விலையிலான அதிகளவு மாற்றத்தினைக் கணிப்பிடாததால், வெளிநாட்டு ஒதுக்குப் பட்டியலின் வட்டி வீத இடர்நேர்வு முகாமைத்துவத்தின் பொருட்டு புறக்குவிவான அளவீடொன்று பயன்படுத்தப்படுகின்றது. காலவரையறையை குறிக்கும் நேர்கோட்டிலிருந்து முறி விலை விளைவு வளையின் வேறுபாட்டினை புறக்குவிவு அளவிடுகின்றது. முறி விலையின் மாற்றத்திற்கான சராசரிக் காலவரையறையின் மேம்பாட்டினை இது அனுமதிக்கின்றது. புறக்குவிவு என்பது விளைவு மாற்றத்திற்கான காலப்பகுதி மாற்றமாகும். இது மாற்றப்பட்ட காலப்பகுதிக்கான ஊகத் தவறுகளை அளவிடுகின்றது. மறுசொல்லில் விளக்குவதாயின் இது, இதன் பிணைய விலைகளினால் வகுக்கப்பட்ட விளைவு தொடர்பான பிணைய விலைகளின் இரண்டாவது பெறுதியாகும்.

**கூறாக்கப்பட்ட நிலையான வருமானப் பிணையங்கள் பட்டியலின் புறக்குவிவு**

| பட்டியல் பிரிவு | எதிர்பார்க்கப்படும் நட்டம் (ஐ.அ.டொ. மில்.) | |
|---|---|---|
| | 2015 | 2014 |
| வர்த்தகம் மற்றும் விற்பனைக்குள்ளவை | **0.19** | 0.22 |

(iii) இடர்நேர்வேற்புப் பெறுமதி

இடர்நேர்வேற்புப் பெறுமதியானது நிதியியல் சந்தை அசைவுகளிலிருந்தான சாதாரண சந்தை நிலைமைகளின் கீழ் சொத்துப்பட்டியலின் கீழ் நோக்கிய இடர்நேர்வை தனி இலக்கத்தில் சுருக்குகின்றது. எனவே, இடர்நேர்வேற்புப் பெறுமதியானது, இலக்கிடப்பட்ட அசைவு மீதான உயர்ந்தபட்ச இழப்பாக இருப்பதனால், உண்மையான இழப்பு அதிகமாக இருப்பதற்குரிய முற்குறிப்பிடப்பட்ட நிகழ்தகவு குறைவாகும். இடர்நேர்வேற்புப் பெறுமதியானது, இடர்நேர்வுகள் மற்றும் நிலைமைகளுக்கிடையில் கூட்டக்கூடிய, பணத்தின் நியதிகளிலான ஒரு இலக்கத்தை எமக்குத் தருகின்றது. வங்கியானது 99 சதவீத நம்பக இடைவெளியில் 10 நாட்களுக்கான இடர்நேர்வேற்புப் பெறுமதியைக் கணிப்பதற்கு முறைமையைப் பயன்படுத்துகின்றது. இடர்நேர்வுப் பெறுமதியினை மதிப்பிடுவதற்கான வரலாற்று முறைமை சில சமயங்களில் வரலாற்று உருவகப்படுத்தல் உருவமைப்பாகக் குறிப்பிடப்படுகின்றது. வரலாற்று முறையினைப் பயன்படுத்தி 5 சதவீத நாளாந்த இடர்நேர்வுப் பெறுமதியினைக் கணிப்பதற்கான ஒரு உதாரணமாக கடந்த நாளாந்த வருவாய்கள், உயர்விலிருந்து தாழ்ந்தநிலைவரையில் வருவாய்களைத் தரப்படுத்தல் மற்றும் வருவாய்களில் ஆகக் குறைந்த 5 சதவீதத்தினை அடையாளம் காணல் என்பன கணிக்கப்படுகின்றன. வருவாய்களின் இம்மிகக் குறைந்த 5 சதவீத உயர்ந்த தொகை என்பது 1- நாள் 5 சதவீத இடர்நேர்வுப் பெறுமதியாகும்.

| பட்டியல் பிரிவு | இடர்நேர்வேற்புப் பெறுமதி (ஐ.அ.டொ. மில்.) | |
|---|---|---|
| | 2015 | 2014 |
| வர்த்தகம் மற்றும் விற்பனைக்குள்ளவை | **69.82** | 116.13 |

(iv) **வர்த்தகப்படுத்தல் மற்றும் திறந்த நிலைமை வரையறைகள்**

தனிப்பட்ட வணிகர்களுக்காக "வணிகப்படுத்தல் அதிகாரம்" என்ற முறை மூலம் வங்கியானது ஒரு நாளுக்குள்ளேயான மற்றும் ஓரிரவு நிலை வரையறை மீது குறிப்பிட்ட வணிக வரையறைகளை வழங்கியுள்ளது.

**(ஆ) உள்நாட்டு நாணய வட்டி வீத கூருணர்திறன்**

உள்நாட்டுத் திறைசேரி உண்டியல்கள் இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்படும் கடன்களைக் குறிப்பதால் அவை இ.ம. வங்கியின் நிதி நிலைமை பற்றிய கூற்றில் கடன்தீர் செலவில் பதிவு செய்யப்படுகின்றன. வட்டி வருமானமொன்றை ஈட்டும் நோக்கத்துடன் வங்கி திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்யாததால் இந்தப் பட்டியல் ஒரு முதலீட்டுப்பட்டியல் அல்ல. பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டைப் பேணுதல் என்னும் அதன் மையக் கருப்பொருட்கள் தொடர்பாக நாணயத் தொழிற்பாட்டுக் கொள்கைகளை மேற்கொள்கையில் திரவத்தன்மையை உள்நாட்டுச் சந்தையில் ஏற்படுத்துவதற்காக அல்லது திரவத்தன்மையை உள்நாட்டுச் சந்தையிலிருந்து உள்ளீர்ப்பதற்காக வங்கி திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்கின்றது அல்லது விற்பனை செய்கின்றது. ஆதலால், வங்கியின் பட்டியலிலுள்ள திறைசேரி உண்டியல்கள் அதன் நாணயச் கொள்கைத் தொழிற்பாடுகளினால் நிர்ணயிக்கப்படுகின்றன. அத்துடன், பணச் சந்தையில் மீள்கொள்வனவு வீதம் மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதம் ஆகியவை வங்கியின் நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் போது அதனால் நிர்ணயிக்கப்படும் கொள்கை வீதங்களாகும். மேலும், சந்தையிலிருந்து ரூபாய் திரவத்தன்மையை ஏற்படுத்துவதில் அல்லது திரவத்தன்மையை உள்ளீர்ப்பதில் வங்கியின் நடவடிக்கைகள் பொதுவான ரூபாய் சந்தை வட்டி வீதங்களில் கணிசமான தாக்கத்தைக் கொண்டுள்ளன. இதன்படி, வங்கியின் திறைசேரி உண்டியல்களின் பட்டியலில் இருந்தும் அவ்வாறே வட்டி வீதங்களின் மாற்றங்களிலிருந்தும் எழுகின்ற திறைசேரி உண்டியல் பட்டியலிலிருந்து ஈட்டப்படும் வட்டி வருமானத்தின் மாற்றங்கள் வங்கியின் நாணயக் கொள்கை நடவடிக்கைகளின் விளைவாக உருவாவதேயன்றி முதலீட்டுத் தீர்மானங்கள் காரணமாக அல்ல. எனவே, வங்கியானது உள்நாட்டு நாணயச் சொத்துக்களிலிருந்து உருவாகின்ற வட்டி வீதக் கூருணர்திறனைக் கவனத்திற் கொள்வதில்லை.

42.2 வட்டி வீத இடர்நேர்வு (தொடர்ச்சி)

**(இ) சொத்துக்களும் பொறுப்புக்களும் பின்வரும் கால கட்டத்தினுள் முதிர்ச்சியடையும் அல்லது மீள் விலையிடப்படும்**

| வெளிநாட்டு நாணய வட்டி வீத கூருணர்திறன் வீச்சிடை | நிறை யேற்றிய சராசரி வட்டி வீதம் % | 2015 மொத்தம் ரூ.000 | 6 மாதமும் அதற்குக் குறைவான ரூ.000 | 6 - 12 மாதங்கள் ரூ.000 | 1 - 2 ஆண்டுகள் ரூ.000 | 2 - 5 ஆண்டுகள் ரூ.000 | 5 ஆண்டுகளுக்கு மேல் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|
| **வட்டி கூருணர்திறன் வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 0.31 | 557,474,685 | 557,474,685 | - | - | - | - |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் மற்றும் விற்பனைக்குள்ள முதலீடுகள் | 1.54 | 376,041,221 | 51,900,181 | 50,000,041 | 51,436,286 | 138,190,639 | 84,514,074 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | 0.04 | 10,523,672 | 10,523,672 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணர்திறன் வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 944,039,578 | 619,898,538 | 50,000,041 | 51,436,286 | 138,190,639 | 84,514,074 |
| **வட்டி கூருணரற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | | |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | | 73,112,678 | - | - | - | 138,622 | 72,974,056 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | | 4,145 | 2,259 | - | 1,886 | - | - |
| ஏனைய பெறத்தக்கவை | | 5,075 | 5,075 | - | - | - | - |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் | | 11,792,926 | 11,792,926 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணரற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 84,914,824 | 11,800,260 | - | 1,886 | 138,622 | 72,974,056 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 1,028,954,402 | 631,698,798 | 50,000,041 | 51,438,172 | 138,329,261 | 157,488,130 |
| **வட்டி கூருணர்திறன் வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | | |
| ப.நா.நி. | 0.00 | 99,720,675 | 37,825,083 | 27,509,152 | 34,386,440 | - | - |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | 0.23 | 68,887,459 | 68,887,459 | - | - | - | - |
| இந்திய ஒதுக்குவங்கியின் பரஸ்பர பரிமாற்றம் | 2.45 | 158,766,606 | 158,766,606 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணர்திறன் வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 327,374,740 | 265,479,148 | 27,509,152 | 34,386,440 | - | - |
| **வட்டி கூருணரற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | | |
| வங்கிகளும், ஏனைய நிதியியல் நிறுவனங்களும் | | 11,750,164 | 11,750,164 | - | - | - | - |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | | 24,280,307 | 9,568,328 | 6,609,542 | 1,610,234 | 5,831,868 | 660,335 |
| ப.நா.நிதியம் | | 151,923,669 | - | - | - | - | 151,923,669 |
| வெளிநாட்டு நாணயத்திலான வர்த்தக வங்கிகளின் மூலதனம் | | 1,124,395 | - | - | - | - | 1,124,395 |
| ஏனைய வெளிநாட்டு பொறுப்புக்கள் | | 58,331,218 | 58,331,218 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணரற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 247,409,753 | 79,649,710 | 6,609,542 | 1,610,234 | 5,831,868 | 153,708,399 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 574,784,493 | 345,128,858 | 34,118,694 | 35,996,674 | 5,831,868 | 153,708,399 |
| **வெளிநாட்டு நாணய வட்டி வீத கூருணர்திறன் வீச்சிடை** | | 616,664,838 | 354,419,390 | 22,490,889 | 17,049,846 | 138,190,639 | 84,514,074 |

42.2 வட்டி வீத இடர்நேர்வு (தொடர்ச்சி)

| வட்டி கூருணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் | நிறை யேற்றிய சராசரி வட்டி வீதம் % | 2015 மொத்தம் ரூ.000 | 6 மாதமும் அதற்குக் குறைவான ரூ.000 | 6 - 12 மாதங்கள் ரூ.000 | 1 - 2 ஆண்டுகள் ரூ.000 | 2 - 5 ஆண்டுகள் ரூ.000 | 5 ஆண்டுகளுக்கு மேல் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|
| இலங்கை அரச பிணையங்கள் | 6.58 | 102,731,967 | 58,490,040 | 44,241,927 | - | - | - |
| திறைசேரி உண்டியல் மற்றும் முறி நேர்மாற்று மீள்கொள்வனவு | 7.50 | 135,000 | 135,000 | - | - | - | - |
| வங்கிகளுக்கான கடன்கள் | 8.39 | 886,357 | 215,559 | 190,756 | 285,486 | 183,562 | 10,994 |
| ஏனைய சொத்துக்கள் - அலுவலர் கடன்கள் | 3.64 | 5,133,899 | 39,486 | 40,127 | 80,721 | 260,253 | 4,713,312 |
| - ஏனையவைகள் | 8.41 | 4,313,154 | 760,877 | 338,215 | 360,205 | 2,327,611 | 526,246 |
| **மொத்த வட்டி கூருணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 113,200,377 | 59,640,962 | 44,811,025 | 726,412 | 2,771,426 | 5,250,552 |
| **வட்டி கூருணரற்ற உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | | |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | | 151,131,671 | 151,131,671 | - | - | - | - |
| ஏனைய சொத்துக்கள் - ஏனையவைகள் | | 1,717,398 | 1,717,398 | - | - | - | - |
| உரிமை மூலதன பிணையங்களிலான முதலீடுகள் - விற்பனைக்குள்ளவை | | 41,095 | - | - | - | - | 41,095 |
| **மொத்த வட்டி கூருணரற்ற உள்நாட்டு நாணய சொத்துக்கள்** | | 152,890,164 | 152,849,069 | - | - | - | 41,095 |
| **மொத்த உள்நாட்டு நாணயச் சொத்துக்கள்** | | 266,090,541 | 212,490,031 | 44,811,025 | 726,412 | 2,771,426 | 5,291,647 |
| **வட்டி கூருணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | | |
| மீள் கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 6.42 | 23,650,000 | 23,650,000 | - | - | - | - |
| துணைநில் வைப்பு வசதி | 6.00 | 81,815,000 | 81,815,000 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 105,465,000 | 105,465,000 | - | - | - | - |
| **வட்டி கூருணரற்ற உள்நாட்டு நாணயப் பொறுப்புக்கள்** | | | | | | | |
| வங்கிகள், நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | | 181,726,732 | 181,726,732 | - | - | - | - |
| அரச, அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | | 428,142 | 428,142 | - | - | - | - |
| ஊழியர் நலத் திட்டங்களின் நிலுவைகள் | | 7,212 | 7,212 | - | - | - | - |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | | 491,699,948 | 491,699,948 | - | - | - | - |
| ஏனைய செலுத்த வேண்டியவை | | 6,850,998 | 6,850,998 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணரற்ற உள்நாட்டு நாணயப் பொறுப்புக்கள்** | | 680,713,032 | 680,713,422 | - | - | - | - |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 786,178,032 | 786,179,032 | - | - | - | - |
| **உள்நாட்டு நாணய வட்டி வீத கூருணர்திறன் வீச்சிடை** | | 7,735,377 | (45,824,038) | 44,811,025 | 726,412 | 2,771,426 | 5,250,552 |

**42.2 வட்டி வீத இடர்நேர்வு (தொடர்ச்சி)**

**(இ) சொத்துக்களும் பொறுப்புக்களும் பின்வரும் கால கட்டத்தினுள் முதிர்ச்சியடையும் அல்லது மீள்விலையிடப்படும்.**

2014 திசெம்பர் 31இல் உள்ளவாறு ஒப்பீட்டுத் தரவுகள் பின்வருமாறு:

| வெளிநாட்டு நாணய வட்டி வீத கூருணர்திறன் வீச்சிடை | நிறையேற்றிய சராசரி வட்டி வீதம் % | 2014 மொத்தம் ரூ.000 | 6 மாதமும் அதற்குக் குறைவான ரூ.000 | 6 - 12 மாதங்கள் ரூ.000 | 1 - 2 ஆண்டுகள் ரூ.000 | 2 - 5 ஆண்டுகள் ரூ.000 | 5 ஆண்டுகளுக்கு மேல் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|
| **வட்டி கூருணர்திறன் வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 0.85 | 487,070,771 | 487,070,771 | - | - | - | - |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் மற்றும் விற்பனைக்குள்ள முதலீடுகள் | 1.53 | 452,887,850 | 75,510,725 | 18,112,850 | 68,712,816 | 175,644,118 | 114,907,341 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | 0.04 | 10,285,892 | 10,285,892 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணர்திறன் வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 950,244,513 | 572,867,388 | 18,112,850 | 68,712,816 | 175,644,118 | 114,907,341 |
| **வட்டி கூருணரற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | | |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | | 69,530,137 | - | - | - | 126,356 | 69,403,781 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | | 1,580,237 | 1,498,615 | 81,575 | 47 | - | - |
| பெறத்தக்கவை | | 7,105,914 | 7,105,914 | - | - | - | - |
| இலாபம் அல்லது நட்டத்தினூடான சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் | | 16,796,957 | 16,796,957 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணரற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 95,013,245 | 25,401,486 | 81,575 | 47 | 126,356 | 69,403,781 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 1,045,257,758 | 598,268,874 | 18,194,425 | 68,712,863 | 175,770,474 | 184,311,122 |
| **வட்டி கூருணர்திறன் வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | | | | | | | |
| ப.நா.நி. | 0.00 | 163,520,370 | 32,704,074 | 35,974,481 | 62,137,741 | 32,704,074 | - |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | 0.05 | 57,230,304 | 57,230,304 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணர்திறன் வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 220,750,674 | 89,934,378 | 35,974,481 | 62,137,741 | 32,704,074 | - |
| **வட்டி கூருணரற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | | |
| வங்கிகளும், ஏனைய நிதியியல் நிறுவனங்களும் | | 11,678,483 | 11,678,483 | - | - | - | - |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | | 19,207,822 | 1,329,279 | 1,520,530 | 3,981,616 | 10,594,288 | 1,782,109 |
| ப.நா.நி. | | 144,490,763 | - | - | - | - | 144,490,763 |
| வெளிநாட்டு நாணயத்திலான வர்த்தக வங்கி மூலதனம் | | 805,215 | - | - | - | - | 805,215 |
| ஏனைய வெளிநாட்டு பொறுப்புக்கள் | | 71,340,944 | 71,340,944 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணரற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 247,523,227 | 84,348,706 | 1,520,530 | 3,981,616 | 10,594,288 | 147,078,087 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 468,273,901 | 174,283,084 | 37,495,011 | 66,119,357 | 43,298,362 | 147,078,087 |
| **வெளிநாட்டு நாணய வட்டி வீத கூருணர்திறன் வீச்சிடை** | | 729,493,839 | 482,933,010 | (17,861,631) | 6,575,075 | 142,940,044 | 114,907,341 |

**42.2 வட்டி வீத இடர்நேர்வு (தொடர்ச்சி)**

**(இ) சொத்துக்களும் பொறுப்புக்களும் பின்வரும் கால கட்டத்தினுள் முதிர்ச்சியடையும் அல்லது மீள்விலையிடப்படும்.**

2014 திசெம்பர் 31இல் உள்ளவாறு ஒப்பீட்டுத் தரவுகள் பின்வருமாறு:

| வட்டி கூருணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் | நிறை யேற்றிய சராசரி வட்டி வீதம் % | 2014 மொத்தம் ரூ.000 | 6 மாதமும் அதற்குக் குறைவான ரூ.000 | 6 - 12 மாதங்கள் ரூ.000 | 1 - 2 ஆண்டுகள் ரூ.000 | 2 - 5 ஆண்டுகள் ரூ.000 | 5 ஆண்டுகளுக்கு மேல் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|
| இலங்கை அரச பிணையங்கள் | 5.69 | 121,793,452 | 121,793,452 | - | - | - | - |
| திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் நேர்மாற்று மீள்கொள்வனவு | 8.00 | 2,650,000 | 2,650,000 | - | - | - | - |
| வங்கிகளுக்கான கடன்கள் | 7.83 | 1,489,372 | 397,073 | 273,406 | 300,351 | 518,542 | - |
| ஏனைய சொத்துக்கள் - அலுவலர் கடன்கள் | 3.62 | 4,668,501 | 173,804 | 176,791 | 362,695 | 1,163,133 | 2,792,078 |
| - ஏனையவைகள் | 7.72 | 3,439,413 | 911,543 | 425,961 | 733,009 | 1,213,403 | 155,497 |
| **மொத்த வட்டி கூருணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 134,040,738 | 125,925,872 | 876,158 | 1,396,055 | 2,895,078 | 2,947,575 |
| **வட்டி கூருணரற்ற உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | | |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | | 143,897,971 | 143,897,971 | - | - | - | - |
| ஏனைய சொத்துக்கள் - ஏனையவைகள் | | 1,912,071 | 1,912,071 | - | - | - | - |
| உரிமை மூலதன பிணையங்களிலான முதலீடுகள் - விற்பனைக்குள்ளவை | | 41,095 | - | - | - | - | 41,095 |
| **மொத்த வட்டி கூருணரற்ற உள்நாட்டு நாணய சொத்துக்கள்** | | 145,851,137 | 145,810,042 | - | - | - | 41,095 |
| **மொத்த உள்நாட்டு நாணயச் சொத்துக்கள்** | | 279,891,875 | 271,735,914 | 876,158 | 1,396,055 | 2,895,078 | 2,988,670 |
| **வட்டி கூருணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | | |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 6.42 | 321,220,000 | 321,220,000 | - | - | - | - |
| துணைநில் வைப்பு வசதி | 6.00 | 7,032,000 | 7,032,000 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 328,252,000 | 328,252,000 | - | - | - | - |
| **வட்டி கூருணரற்ற உள்நாட்டு நாணயப் பொறுப்புக்கள்** | | | | | | | |
| வங்கிகள், நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | | 161,009,323 | 161,009,323 | - | - | - | - |
| அரச, அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | | 311,950 | 311,950 | - | - | - | - |
| ஊழியர் நலத் திட்டங்களின் நிலுவைகள் | | 2,209,782 | 2,209,782 | - | - | - | - |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | | 416,895,362 | 416,895,362 | - | - | - | - |
| ஏனைய செலுத்தப்பட வேண்டியவை | | 8,867,823 | 8,867,823 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணரற்ற உள்நாட்டு நாணயப் பொறுப்புக்கள்** | | 589,294,240 | 589,294,240 | - | - | - | - |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 917,546,240 | 917,546,240 | - | - | - | - |
| **உள்நாட்டு நாணய வட்டி வீத கூருணர்திறன் வீச்சிடை** | | (194,211,262) | (202,326,128) | 876,158 | 1,396,055 | 2,895,078 | 2,947,575 |

**42.3 வெளிநாட்டு நாணய இடர்நேர்வு**

வங்கியின் வெளிநாட்டு ஒதுக்கங்களின் முகாமைத்துவத் தொழிற்பாடுகளின் கீழ் வைத்திருக்கப்படுகின்ற வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள் மூலமாக வெளிநாட்டு நாணய நடவடிக்கைகள் பிரதானமாக உருவாகின்றன. வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மாற்றங்கள் உருவாகக்கூடிய போக்கின் காரணமாக வங்கியானது செலாவணி இடர்நேர்வுக்கு உள்ளாவதற்கான வாய்ப்பு உள்ளது. நாணயச் சபையினாலும் வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவக் குழுவினாலும் வங்கியின் பன்னாட்டு ஒதுக்கங்களில் பல்வேறு நாணய வகைகளும் வைத்திருக்கப்பட வேண்டிய வீதத் தொகைகள் தீர்மானிக்கப்பட்டுள்ளன. நாணயங்களை ஒதுக்கீடு செய்தல் தொடர்பான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுகின்ற போது அரச கடன்களை மீளச் செலுத்துவதன் தேவைப்பாடு தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்படுகின்றது. இதற்கிணங்க வங்கியானது பிரதானமான நாணய வகைகள் பலவற்றை, அதாவது ஐக்கிய அமெரிக்கா டொலர், ஸ்டேர்லிங் பவுண், அவுஸ்திரேலிய டொலர், யப்பான் யென், யூரோ மற்றும் நியூசிலாந்து டொலர் ஆகியவற்றை வைத்திருக்கின்றது. வெளிநாட்டு நாணயங்களின் நிலைமைகள் வரையறுக்கப்பட்ட எல்லைகளை அடைகின்ற போது கண்காணிப்புக்கு உள்ளாக்கப்படுகிறது.

**42.3 வெளிநாட்டு நாணய இடர்நேர்வு (தொடர்ச்சி)**

**வெளிநாட்டு நாணயங்களுக்கான தேறிய இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை**

2015 திசெம்பர் 31இல் உள்ளவாறு முக்கிய நாணயங்களுக்கான இலங்கை மத்திய வங்கியின் தேறிய இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை பின்வருமாறு:

| | நாணயம் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **2015 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **ஐ. அமெரிக்க டொலர்** | **யூரோ** | **யப்பானிய யென்** | **ஸ்ரேலிங் பவுண்** | **சிஎஉ** | **அவுஸ்தி ரேலிய டொலர்** | **ஏனைய நாணயங்கள்** | **அனைத்து நாணய வகைகளின் மொத்தம்** |
| | **ரூ.000** | **ரூ.000** | **ரூ.000** | **ரூ.000** | **ரூ.000** | **ரூ.000** | **ரூ.000** | **ரூ.000** |
| **வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | | | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | **176,922,656** | **(43,264,954)** | **(14,336,028)** | **88,586,921** | **-** | **126,101,239** | **223,464,851** | **557,474,685** |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் மற்றும் விற்பனைக்குள்ள முதலீடுகள் | **203,115,851** | **52,346,338** | **19,947,895** | **23,753,864** | **-** | **28,241,778** | **60,428,420** | **387,834,146** |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | **1,886** | **-** | **148** | **-** | **-** | **-** | **2,111** | **4,145** |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | **-** | **-** | **-** | **-** | **83,636,350** | **-** | **-** | **83,636,350** |
| ஏனைய பெறத்தக்கவை | **2,374** | **2,357** | **-** | **-** | **344** | **-** | **-** | **5,075** |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | **380,042,767** | **9,083,741** | **5,612,015** | **112,340,785** | **83,636,694** | **154,343,017** | **283,895,382** | **1,028,954,401** |
| விகிதம் | **36.93%** | **0.88%** | **0.55%** | **10.92%** | **8.13%** | **15.00%** | **27.59%** | **100%** |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | **12,046,056** | **376** | **-** | **1,766** | **-** | **43** | **-** | **12,048,241** |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | **249** | **-** | **-** | **-** | **-** | **-** | **24,280,059** | **24,280,308** |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | **68,613,251** | **274,208** | **-** | **-** | **-** | **-** | **-** | **68,887,459** |
| ப.நா. நிதியம் | **-** | **-** | **-** | **-** | **251,644,344** | **-** | **-** | **251,644,344** |
| ஏனையவை | **209,792,285** | **7,483,464** | **-** | **-** | **-** | **-** | **648,393** | **217,924,142** |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | **290,451,841** | **7,758,048** | **-** | **1,766** | **251,644,344** | **43** | **24,928,452** | **574,784,494** |
| விகிதம் | **50.53%** | **1.35%** | **0.00%** | **0.00%** | **43.78%** | **0.00%** | **4.34%** | **100%** |
| **தேறிய வெளிநாட்டு நாணய இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை** | **89,590,926** | **1,325,693** | **5,612,015** | **112,339,019** | **(168,007,650)** | **154,342,974** | **258,966,930** | **454,169,907** |

காசும் காசிற்குச் சமமானவைகளும் வேறுபட்ட நாணயங்களின் வாங்கல் மற்றும் விற்றலுடன் தொடர்புபட்ட வெளிநாட்டு கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்கியிருந்ததுடன் இவற்றின் வர்த்தகத் திகதிகள் நடப்பு நிதியாண்டில் இடம்பெற்றதுடன் பெறுமதித் திகதி அடுத்த நிதியாண்டாக இருக்கும். அக்கொடுக்கல்வாங்கல்கள் பின்வருமாறு:

| | **இலங்கை ரூபா** | **ஐ. அமெரிக்க டொலர்** | **யூரோ** | **ஸ்ரேலிங் பவுண்** | **யப்பானிய யென்** | **அவுஸ்தி ரேலிய டொலர்** |
|---|---|---|---|---|---|---|
| | **ரூ.000** | **ரூ.000** | **ரூ.000** | **ரூ.000** | **ரூ.000** | **ரூ.000** |
| **2015 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | | | | | | |
| கொள்வனவு | 364,801,652 | 17,874,539 | (985) | (62,622) | 67,254 | (6,352,618) |
| விற்பனை | (60,385,247) | (351,208,306) | 5,375,438 | 19,321,868 | (67,106) | 30,444 |
| வெளிநாட்டுச் செலாவணி முன்னோக்கிய | 7,732 | - | - | - | - | - |
| ஒப்பந்தக் கணக்கு - பிரிவிற்கு அணித்தாக முன்னோக்கி ஒப்பந்தக் கணக்கு | 10,597,957 | - | - | - | - | - |
| **2014 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | | | | | | |
| கொள்வனவு | 315,836,566 | (18,113,664) | 7,961,856 | (62,622) | 5,274,559 | (6,351,590) |
| விற்பனை | (24,459,676) | (304,517,720) | 5,375,438 | 19,321,868 | 4,875,603 | 29,416 |
| வெளிநாட்டுச் செலாவணி முன்னோக்கிய ஒப்பந்தக் கணக்கு - பிரிவிற்கு அணித்தாக | (1,667) | - | - | - | - | - |
| முன்னோக்கி ஒப்பந்தக் கணக்கு | (297,639) | - | - | - | - | - |

**42.3 வெளிநாட்டு நாணய இடர்நேர்வு (தொடர்ச்சி)**

2014 திசெம்பர் 31இல் உள்ளவாறு முக்கிய நாணயங்களுக்கான இலங்கை மத்திய வங்கியின் தேறிய இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை பின்வருமாறு

| | நாணயம் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஐ. அமெரிக்க டொலர் | யூரோ | யப்பானிய யென் | ஸ்ரேலிங் பவுண் | சிஎஉ | அவுஸ்தி ரேலிய டொலர் | ஏனைய நாணயங்கள் | அனைத்து நாணய வகைகளின் மொத்தம் |
| **2014 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **ரூ.000** | **ரூ.000** | **ரூ.000** | **ரூ.000** | **ரூ.000** | **ரூ.000** | **ரூ.000** | **ரூ.000** |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | (313,660,985) | (21,842,412) | 7,381,899 | 56,016,904 | - | 112,362,714 | 646,812,651 | 487,070,771 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் மற்றும் விற்பனைக்குள்ள முதலீடுகள் | 227,526,935 | 53,915,502 | 23,868,150 | 44,810,723 | - | 60,990,957 | 58,572,540 | 469,684,807 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 47 | - | 37,832 | - | - | - | 1,542,358 | 1,580,237 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | - | - | - | - | 79,816,029 | - | - | 79,816,029 |
| ஏனைய வெளிநாட்டுப் பெறத்தக்கவை | 426 | - | 558,018 | 6,547,106 | 364 | - | - | 7,105,914 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | (86,133,577) | 32,073,090 | 31,845,899 | 107,374,733 | 79,816,393 | 173,353,671 | 706,927,549 | 1,045,257,758 |
| விகிதம் | -8.24% | 3.07% | 3.05% | 10.27% | 7.64% | 16.58% | 67.63% | 100% |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | 310,860 | 2,455 | - | 2,239,371 | - | 9,125,797 | - | 11,678,483 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 26,868 | - | - | - | - | - | 19,180,954 | 19,207,822 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | 57,016,104 | 214,200 | - | - | - | - | - | 57,230,304 |
| ப.நா.நிதியம் | - | - | - | - | 308,011,133 | - | - | 308,011,133 |
| ஏனையவை | 71,303,530 | - | - | - | - | - | 842,629 | 72,146,159 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | 128,657,362 | 216,655 | - | 2,239,371 | 308,011,133 | 9,125,797 | 20,023,583 | 468,273,901 |
| விகிதம் | 27.47% | 0.05% | 0.00% | 0.48% | 65.78% | 1.95% | 4.27% | 100% |
| **தேறிய வெளிநாட்டு நாணய இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை** | (214,790,939) | 31,856,435 | 31,845,899 | 105,135,362 | (228,194,740) | 164,227,874 | 686,903,966 | 576,983,857 |

42.4 நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கழிவுறப்படாத காசுப்பாய்ச்சல்களின் ஒப்பந்த முதிர்ச்சிகள்

| | 6 மாதங் களுக்குக் குறை வானவை ரூ.000 | 6 மாதங்கள் - 1 ஆண்டுகள் ரூ.000 | 1-2 ஆண்டுகள் ரூ.000 | 2-5 ஆண்டுகள் ரூ.000 | 5 ஆண்டு களுக்கு மேல் ரூ.000 | மொத்தம் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|
| **2015 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | | | | | | |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 557,474,685 | - | - | - | - | 557,474,685 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடான சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் | 43,171,272 | - | - | - | - | 43,171,272 |
| விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீடுகள் | 29,321,065 | 52,530,133 | 56,153,333 | 145,590,515 | 85,886,120 | 369,481,166 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | 10,523,672 | - | - | 138,622 | 72,974,056 | 83,636,350 |
| ஏனைய பெறத்தக்கவை | 5,075 | - | - | - | - | 5,075 |
| **மொத்த கழிவுறப்படாத வெளிநாட்டு நிதியியல் சொத்துக்கள்** | 640,495,769 | 52,530,133 | 56,153,333 | 145,729,137 | 158,860,176 | 1,053,768,548 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | 104,889,169 | - | - | - | - | 104,889,169 |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | 151,131,671 | - | - | - | - | 151,131,671 |
| வங்கிகளுக்கான கடன்கள் | 237,733 | 207,777 | 304,647 | 194,165 | 11,852 | 956,174 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான உரிமை மூலதன முதலீடுகள் | - | - | - | - | 41,095 | 41,095 |
| ஏனைய சொத்துக்கள் | 2,675,835 | 524,731 | 709,055 | 3,125,543 | 5,270,055 | 12,305,219 |
| **மொத்த கழிவுறப்படாத உள்நாட்டு நிதியியல் சொத்துக்கள்** | 258,934,408 | 732,508 | 1,013,702 | 3,319,708 | 5,323,002 | 269,323,328 |
| **மொத்த கழிவுறப்படாத நிதியியல் சொத்துக்கள்** | 899,430,177 | 53,262,641 | 57,167,035 | 149,048,845 | 164,183,178 | 1,323,091,876 |
| **வெளிநாட்டு நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | 13,012,853 | 294,833 | 186,752 | 121,023 | 413,161 | 14,028,622 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | 68,887,459 | - | - | - | - | 68,887,459 |
| ப.நா.நிதியம் | 44,702,372 | 20,631,864 | 34,386,440 | - | 151,923,668 | 251,644,344 |
| ஏனையவை | 216,799,748 | - | - | - | 1,124,394 | 217,924,142 |
| **மொத்த கழிவுறப்படாத வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | 343,402,432 | 20,926,697 | 34,573,192 | 121,023 | 153,461,223 | 552,484,567 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | 181,726,732 | - | - | - | - | 181,726,732 |
| அரச, அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | 428,142 | - | - | - | - | 428,142 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 105,607,860 | - | - | - | - | 105,607,860 |
| ஊழியர் நலத் திட்டங்களின் நிலுவைகள் | 7,212 | - | - | - | - | 7,212 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | 491,699,948 | - | - | - | - | 491,699,948 |
| ஏனைய செலுத்தத்தக்கவை | 6,910,166 | - | - | - | - | 6,910,166 |
| **மொத்த கழிவுறப்படாத உள்நாட்டு நிதியியல் பொறுப்புக்கள்** | 786,380,060 | - | - | - | - | 786,380,060 |
| **மொத்த கழிவுறப்படாத நிதியியல் பொறுப்புக்கள்** | 1,129,782,492 | 20,926,697 | 34,573,192 | 121,023 | 153,461,223 | 1,338,864,627 |
| **தேறிய கழிவுறப்படாத நிதியியல் சொத்துக்கள்/ (பொறுப்புக்கள்)** | (230,352,315) | 32,335,944 | 22,593,843 | 148,927,822 | 10,721,955 | (15,772,751) |

| | 6 மாதங்களுக்குக் குறைவானவை ரூ.000 | 6 மாதங்கள் - 1 ஆண்டுகள் ரூ.000 | 1-2 ஆண்டுகள் ரூ.000 |
|---|---|---|---|
| **2015 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | | | |
| பெறுதி நிதியியல் சொத்துக்கள் | 181,916,705 | 122,504,814 | - |
| பெறுதி நிதியியல் பொறுப்புக்கள் | 189,611,926 | 122,520,743 | - |

**வெளிநாட்டு நாணய மாற்று வீதங்கள்**

வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுடன் தொடர்புடைய அனைத்து எதிர்கால காசுப்பாய்ச்சல்களும், அறிக்கையிடல் திகதியிலுள்ள செலாவணி வீதத்தை பயன்படுத்தி அறிக்கையிடும் நாணயத்திற்கு மாற்றப்பட்டன.

42.4. நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கழிவுறப்படாத காசுப்பாய்ச்சல்களின் ஒப்பந்த முதிர்ச்சிகள்

(இ) 2014 திசெம்பர் 31இல் உள்ளவாறு, நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கழிவுறபப்படாத காசுப்பாய்ச்சல்களின் ஒப்பந்த முதிர்ச்சிகள் பின்வருமாறு:

| | 6 மாதங் களுக்குக் குறை வானவை ரூ.000 | 6 மாதங்கள் - 1 ஆண்டுகள் ரூ.000 | 1-2 ஆண்டுகள் ரூ.000 | 2-5 ஆண்டுகள் ரூ.000 | 5 ஆண்டு களுக்கு மேல் ரூ.000 | மொத்தம் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|
| **2014 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | | | | | | |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 487,070,771 | - | - | - | - | 487,070,771 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடான சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் | 61,745,564 | - | - | - | - | 61,745,564 |
| விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீடுகள் | 36,824,108 | 21,440,653 | 74,839,842 | 186,893,880 | 112,714,585 | 432,713,068 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | 10,285,892 | - | - | 126,356 | 69,403,781 | 79,816,029 |
| ஏனைய பெறத்தக்கவை | 789 | - | - | - | - | 789 |
| **மொத்த கழிவுறப்படாத வெளிநாட்டு நிதியியல் சொத்துக்கள்** | 595,927,124 | 21,440,653 | 74,839,842 | 187,020,236 | 182,118,366 | 1,061,346,221 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | 126,146,447 | - | - | - | - | 126,146,447 |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | 143,897,971 | - | - | - | - | 143,897,971 |
| வங்கிகளுக்கான கடன்கள் | 397,073 | 343,377 | 337,628 | 545,564 | 1,404 | 1,625,046 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான உரிமை மூலதன முதலீடுகள் | - | - | - | - | 41,095 | 41,095 |
| ஏனைய சொத்துக்கள் | 3,172,290 | 736,309 | 1,319,793 | 2,505,689 | 2,964,554 | 10,698,635 |
| **மொத்த கழிவுறப்படாத உள்நாட்டு நிதியியல் சொத்துக்கள்** | 273,613,781 | 1,079,686 | 1,657,421 | 3,051,253 | 3,007,053 | 282,409,194 |
| **மொத்த கழிவுறப்படாத நிதியியல் சொத்துக்கள்** | 869,540,905 | 22,520,339 | 76,497,263 | 190,071,489 | 185,125,419 | 1,343,755,415 |
| **வெளிநாட்டு நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | 4,973,823 | 673,045 | 726,957 | 260,896 | 374,477 | 7,009,198 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | 57,230,304 | - | - | - | - | 57,230,304 |
| ப.நா.நிதியம் | 32,704,074 | 35,974,481 | 62,137,740 | 32,704,074 | 144,490,763 | 308,011,132 |
| ஏனையவை | 71,340,944 | - | - | - | 805,214 | 72,146,158 |
| **மொத்த கழிவுறப்படாத வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | 166,249,145 | 36,647,526 | 62,864,697 | 32,964,970 | 145,670,454 | 444,396,792 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | 416,630,260 | - | - | - | - | 416,630,260 |
| அரச, அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | 311,950 | - | - | - | - | 311,950 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 331,665,172 | - | - | - | - | 331,665,172 |
| ஊழியர் நலத் திட்டங்களின் நிலுவைகள் | 2,209,782 | - | - | - | - | 2,209,782 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | 416,895,362 | - | - | - | - | 416,895,362 |
| ஏனைய செலுத்தத்தக்கவை | 8,939,293 | - | - | - | - | 8,939,293 |
| **மொத்த கழிவுறப்படாத உள்நாட்டு நிதியியல் பொறுப்புக்கள்** | 1,176,651,819 | - | - | - | - | 1,176,651,819 |
| **மொத்த கழிவுறப்படாத நிதியியல் பொறுப்புக்கள்** | 1,342,900,964 | 36,647,526 | 62,864,697 | 32,964,970 | 145,670,454 | 1,621,048,611 |
| **தேறிய கழிவுறப்படாத நிதியியல் சொத்துக்கள்/ (பொறுப்புக்கள்)** | (473,360,059) | (14,127,187) | 13,632,566 | 157,106,519 | 39,454,965 | (277,293,196) |

| | 6 மாதங்களுக்குக் குறைவானவை ரூ.000 | 6 மாதங்கள் - 1 ஆண்டுகள் ரூ.000 | 1-2 ஆண்டுகள் ரூ.000 |
|---|---|---|---|
| **2014 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | | | |
| பெறுதி நிதியியல் சொத்துக்கள் | 212,727,267 | 91,893,999 | 731 |
| பெறுதி நிதியியல் பொறுப்புக்கள் | 210,190,966 | 90,813,211 | - |

**42.5 திரவத்தன்மை இடர்நேர்வு**

நிதியியல் சாதனங்களுக்கான கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதியங்களைக் குறுகிய கால அறிவித்தலின் மீது பெற்றுக் கொள்கின்ற போது நிறுவனமொன்று முகம் கொடுக்கின்ற இடர்ப்பாடு திரவத்தன்மை இடர்நேர்வாகும். நிறுவனம் தனது நிதிச் சொத்துக்களை விரைவாக, சந்தைப் பெறுமதியைவிட மிகக் குறைந்த விலைக்கு விற்பனை செய்ய வேண்டி நேரிடுவதும் திரவத்தன்மை இடர்நேர்வொன்றாகும்.

(அ) வங்கியின் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களின் உள்ளமைப்பைத் தீர்மானிக்கின்ற போது முக்கியமாக திரவத்தன்மை தொடர்பாகவே கவனம் செலுத்தப்படுகிறது. தேவையான சந்தர்ப்பங்களில் தலையீடு செய்கின்ற போது மற்றும் அரச கடன்கள் மற்றும் ப.நா.நி. கடன்களை மீளச் செலுத்துதல் போன்ற கடப்பாடுகளைத் தீர்ப்பதற்காக வெளிநாட்டு ஒதுக்கங்களை ஒழிக்கின்ற போது இது ஒரு உள்ளார்ந்த தேவைப்பாடாகும். நிதியங்களை விரைவாக அடைவதை உறுதி செய்து கொள்ளும் நோக்கத்துடன் வங்கியானது பின்வரும் அளவீடுகளை மேற்கொள்கிறது:

- வைத்திருக்கப்பட்ட பிணையங்களின் திரவத்தன்மை இயல்புகளை அடிப்படையாகக் கொண்ட திரவச் சொத்து வீதங்கள்.
- ஒரு இணைத்தரப்பினருடன் ஒரு நாணயத்தில் வைத்திருக்கப்படக்கூடிய ஒதுக்குகளின் உச்சமட்ட விகிதத்தின் மீதான வரையறை

(ஆ) உள்நாட்டு நாணய நடவடிக்கைகளின் போது, குறிப்பாக திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் போது உருவாகின்ற திரவத்தன்மை இடர்நேர்வு மட்டத்தைக் குறைக்கும் பொருட்டு இலங்கை மத்திய வங்கியானது, திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் போன்ற சந்தைப்படுத்தக்கூடிய அதிக திரவத்தன்மையுடனான கருவிகளை மேலதிகப் பிணையங்களாகப் பயன்படுத்துகிறது. வங்கியானது, மீள்கொள்வனவு/நேர்மாற்று மீள்கொள்வனவு, மத்திய வங்கிப் பிணையங்கள் மற்றும் ஐ.அ.டொலர்/ரூபா பரஸ்பர பரிமாற்றல்கள் போன்ற நிதிக் கருவிகளைப் பயன்படுத்தி முறைமையினுள் நிதியங்களை உட்செலுத்துவதன் மூலம் அல்லது அதிலிருந்து மீளப்பெறுவதன் மூலம் வங்கி முறைமையின் நாளாந்த திரவத்தன்மை நிலையைக் கட்டுப்படுத்துகிறது.

**43. சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் முதிர்ச்சித் தோற்றப்பாடு**

2015 திசெம்பர் 31இலுள்ளவாறு

| | 12 மாதங்களுக்குக் குறைவானவை ரூ.000 | 12 மாதங்களுக்கு மேலானவை ரூ.000 | மொத்தம் ரூ.000 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 557,474,685 | - | 557,474,685 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடான சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் | 35,779,665 | - | 35,779,665 |
| விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீடுகள் | 77,913,482 | 274,141,000 | 352,054,482 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 2,259 | 1,886 | 4,145 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | 10,523,672 | 73,112,678 | 83,636,350 |
| ஏனைய வெளிநாட்டு பெறத்தக்கவை | 5,075 | - | 5,075 |
| இலங்கை அரச பிணையங்கள் | 102,866,967 | - | 102,866,967 |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | 151,131,671 | - | 151,131,671 |
| வங்கிகளுக்கான கடன்கள் | 406,315 | 480,042 | 886,357 |
| ஏனைய சொத்துக்கள் | 2,896,103 | 8,268,349 | 11,164,452 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான உரிமை மூலதன முதலீடுகள் | - | 41,095 | 41,095 |
| தங்கம் | 97,723,836 | - | 97,723,836 |
| இருப்புக்கள் | - | 3,419,964 | 3,419,964 |
| ஏனைய பெறத்தக்கவைகள் மற்றும் மீள்கொடுப்பனவுகள் | 9,487,315 | 4,860,496 | 14,347,811 |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | - | 15,422,315 | 15,422,315 |
| அருவச் சொத்துக்கள் | - | 240,610 | 240,610 |
| **மொத்தச் சொத்துக்கள்** | 1,046,211,045 | 379,988,435 | 1,426,199,480 |
| | | | |
| **பொறுப்புக்கள்** | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | 12,048,241 | - | 12,048,241 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 16,177,870 | 8,102,438 | 24,280,308 |
| ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம் | 68,887,459 | - | 68,887,459 |
| ப.நா. நிதியம் | 65,334,235 | 186,310,109 | 251,644,344 |
| ஏனையவை | 217,924,142 | - | 217,924,142 |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | 181,726,732 | - | 181,726,732 |
| அரச, அரச நிறுவனங்களின் நிலுவைகள் | 428,142 | - | 428,142 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 105,465,000 | - | 105,465,000 |
| ஊழியர் நலத் திட்டங்களின் நிலுவைகள் | 7,212 | - | 7,212 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | 491,699,948 | - | 491,699,948 |
| ஏனைய செலுத்தத்தக்கவை | 6,850,998 | - | 6,850,998 |
| பிற்போடப்பட்ட கொடைகள் | 34 | 72 | 106 |
| ஓய்வூதியம் மற்றும் ஏனைய தொழிலுக்குப் பின்னரான நன்மைகள் திட்டங்கள் | - | 10,942,541 | 10,942,541 |
| நானாவிதப் பொறுப்புக்கள் மற்றும் அட்டுறுக்கள் | 175,377 | 23,948 | 199,325 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | 1,166,725,390 | 205,379,108 | 1,372,104,498 |
| **தேறிய** | (120,514,345) | 174,609,327 | 54,094,982 |

2014 திசெம்பர் 31இலுள்ளவாறு

| | 12 மாதங்களுக்குக் குறைவானவை ரூ.000 | 12 மாதங்களுக்கு மேலானவை ரூ.000 | மொத்தம் ரூ.000 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 487,070,771 | - | 487,070,771 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடான சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் | 61,495,307 | - | 61,495,307 |
| விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீடுகள் | 48,925,225 | 359,264,275 | 408,189,500 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 1,580,190 | 47 | 1,580,237 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | 10,285,892 | 69,530,137 | 79,816,029 |
| ஏனைய வெளிநாட்டு பெறத்தக்கவை | 7,105,914 | - | 7,105,914 |
| இலங்கை அரச பிணையங்கள் | 124,443,452 | - | 124,443,452 |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | 143,897,971 | - | 143,897,971 |
| வங்கிகளுக்கான கடன்கள் | 670,479 | 818,893 | 1,489,372 |
| ஏனைய சொத்துக்கள் | 3,600,170 | 6,419,815 | 10,019,985 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான உரிமை மூலதன முதலீடுகள் | - | 41,095 | 41,095 |
| தங்கம் | 100,190,635 | - | 100,190,635 |
| இருப்புக்கள் | - | 3,620,480 | 3,620,480 |
| ஏனைய பெறத்தக்கவைகள் மற்றும் மீள்கொடுப்பனவுகள் | 12,610,671 | 14,764,723 | 27,375,394 |
| சொத்து, பொறி மற்றும் பொறிகள் | - | 14,686,696 | 14,686,696 |
| அருவச் சொத்துக்கள் | - | 306,084 | 306,084 |
| **மொத்தச் சொத்துக்கள்** | 1,001,876,677 | 469,452,245 | 1,471,328,922 |
| **பொறுப்புக்கள்** | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | 11,678,483 | - | 11,678,483 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 2,849,809 | 16,358,013 | 19,207,822 |
| ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம் | 57,230,304 | - | 57,230,304 |
| ப.நா. நிதியம் | 68,678,555 | 239,332,578 | 308,011,133 |
| ஏனையவை | 71,340,944 | 805,215 | 72,146,159 |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | 161,009,323 | - | 161,009,323 |
| அரச, அரச நிறுவனங்களின் நிலுவைகள் | 311,950 | - | 311,950 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 328,252,000 | - | 328,252,000 |
| ஊழியர் நலத் திட்டங்களின் நிலுவைகள் | 2,209,782 | - | 2,209,782 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | 416,895,362 | - | 416,895,362 |
| ஏனைய செலுத்தத்தக்கவை | 8,867,823 | - | 8,867,823 |
| பிற்போடப்பட்ட கொடைகள் | 409 | 106 | 515 |
| ஓய்வூதியம் மற்றும் ஏனைய தொழிலுக்குப் பின்னரான நன்மைகள் திட்டங்கள் | - | 3,599,035 | 3,599,035 |
| நானாவிதப் பொறுப்புக்கள் மற்றும் அட்டுறுக்கள் | 168,389 | 28,991 | 197,380 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | 1,129,493,133 | 260,123,938 | 1,389,617,071 |
| **தேறிய** | (127,616,456) | 209,328,307 | 81,711,851 |

### 44. ஓய்வூதியமும் தொழில்நிலைக்குப் பின்னரான ஏனைய நன்மைகள் திட்டங்களும்

அனைத்து ஊழியர்களும் உள்ளடங்கக் கூடியவாறான குறித்துரைக்கப்பட்ட ஆறு நலவுரிமைத் திட்டங்கள் வங்கியினால் தொழிற்படுத்தப்படுகின்றன. ஊழியர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் 1998 சனவரி 01ஆந் திகதிக்கு முன்னர் வங்கியில் சேர்ந்த ஊழியர்கள், 10 வருட பணிக் காலத்தைப் பூர்த்தி செய்ததன் பின்னர் இதற்குத் தகுதி பெறுகின்றனர். புதிய ஊழியர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் 1998 சனவரி 01ஆந் திகதிக்கு பின்னர் வங்கியில் சேர்ந்த ஊழியர்கள், 10 வருட பணிக்காலத்தைப் பூர்த்தி செய்ததன் பின்னர் இதற்குத் தகுதி பெறுகின்றனர். ஊழியர் ஓய்வூதியத் திட்டங்களானது பங்களிப்பில்லாத ஓய்வூதியத் திட்டமாக இருப்பதுடன் இதன் நன்மைக் கிரயச் செலவுகளை முழுமையாகவே வங்கி ஏற்கின்றது. ஆண் ஊழியர்களுக்கான விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டமும் பெண் ஊழியர்களுக்கான விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டமும் 1998 சனவரி 01ஆம் திகதிக்கு முன்னர் வங்கியில் பணிக்குச் சேர்ந்த ஊழியர்களுக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ளது. இத் திட்டத்திற்குத் தகுதி பெற்ற 1994 ஒகத்து 01இற்கு முன்னர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஊழியர்கள் மாதாந்த அடிப்படைச் சம்பளத்தில் 5 சதவீதத் தொகையொன்றைப் பங்களிப்புச் செய்வதுடன் 1994 ஒகத்து 01 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவர்கள் மாதாந்த அடிப்படைச் சம்பளத்தில் 10 சதவீதத்தினை பங்களிப்புச் செய்வர்.

வங்கியில் ஐந்து ஆண்டு கால பணியைப் பூர்த்தி செய்தவர்களான, ஊழியர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவைப் பெறத் தகுதி பெறாத ஊழியர்களுக்காக பணிக் கொடை நன்மைகள் வங்கியினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இப்பொறுப்புபைப் பூர்த்தி செய்வதற்காக காப்புறுதி மதிப்பீட்டைப் பயன்படுத்தி கணிப்பீடு செய்யப்பட்ட, அதற்குச் சமமானதொரு தொகை நிதி நிலைமைகள் பற்றிய கூற்றில் முன்கொண்டு செல்லப்படுகின்றது.

தொழில்நிலைக்குப் பிந்திய மருத்துவ நலத் திட்டத்தின் கீழ், ஓய்வு பெற்ற ஊழியர்களால் அவர்கள் பெயரில் அல்லது அவர்களது துணைவர் பெயரில் மற்றும் ஊழியர்களது விதவைகள்/விதுரர்களாலும் ஏற்கப்படுகின்ற ஒரு சில மருத்துவச் செலவுகள் மீளளிக்கப்படுகின்றன.

ஊழியர் ஓய்வூதியத் திட்டம், விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டங்கள், விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம், பணிக் கொடைகள் திட்டம் மற்றும் மருத்துவ நலத் திட்டம் என்பனவற்றின் குறித்துரைக்கப்பட்ட நன்மைகளைப் பகிர்ந்தளித்தல் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய நடைமுறைப் பணிச் செலவுகள் தொடர்பான காப்புறுதி மதிப்பீட்டைச் செய்வதற்காக சுயாதீனமான காப்புறுதி மதிப்பீட்டாளரான கே.ஏ.பண்டிற், ஆலோசகர் மற்றும் காப்புறுதி மதிப்பீட்டாளர் (மும்பாய்) ஆண்டுக் காலத்தில் பணியின் பொருட்டு வங்கியினால் அமர்த்தப்பட்டார்.

ஊழியர் ஓய்வூதியத் திட்டங்கள் விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத்திட்டம் மற்றும் விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத்திட்டம்

என்பனவற்றின் நிதியங்கள் தனித்தனியாக முகாமைப்படுத்தப்படுவதுடன் தனித்தனியாக ஏடுகளும் பேணப்படுகின்றன. எனினும், பணிக்கொடைத் திட்டமும் மருத்துவ நன்மைகள் திட்டமும் வங்கியின் கணக்கேடுகளிலிருந்து வேறாக்கப்படவில்லை. மேலும் முதலீடுகளும் முதலீட்டு வருமானமும் வங்கி ஏடுகளில் இந்நிதியத்திற்காக தனித்தனியாக பதிவு செய்யப்படுகின்றதுடன், முதலீடுகளிலிருந்து உழைக்கப்பட்ட வருமானம் இந்நிதியத்திற்கு மாற்றல் செய்யப்படுவதுடன் பங்கிடப்படாமல் மீளமுதலிடப்படுகின்றன.

அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியில் திட்டச் சொத்துக்களின் மொத்தச் சந்தைப் பெறுமதி ரூ.36,912.71 மில்லியனாக (2014 - ரூ.32,323.71 மில்லியன்) அமைந்து ரூ.45,682.71 மில்லியன் (2014 - ரூ.35,922.75 மில்லியன்) கொண்ட தற்போதைய அனைத்து நன்மைகள் கடப்பாடுகளினதும் மொத்தத்திலும் பார்க்க குறைவாகக் காணப்பட்டதன் மூலம் ரூ.8,770 மில்லியன் (2014 - ரூ.3,599.04 மில்லியன்) கொண்ட பற்றாக்குறை தோன்றியது.

| 2015<br>நன்மைப் பொறுப்புக்கள் / (சொத்துக்கள்) | ஊழியர் ஓய்வூதியத் திட்டம்<br>ரூ.000 | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய<br>ரூ.000 | விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்<br>ரூ.000 | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்<br>ரூ.000 | பணிக் கொடைத் திட்டம்<br>ரூ.000 | மருத்துவ நலன்கள் திட்டம்<br>ரூ.000 | மொத்தம் 2015<br>ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|
| நன்மைக் கடப்பாட்டின் நடைமுறைப் பெறுமதி | 35,175,579 | 1,014,927 | 6,045,158 | 1,134,387 | 144,614 | 2,168,049 | 45,682,714 |
| திட்டச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதி | (26,120,059) | (2,259,968) | (5,225,759) | (1,747,311) | (178,188) | (1,381,429) | (36,912,714) |
| **நன்மைப் பொறுப்பு/ (சொத்து) நடைமுறையல்லாதவை** | 9,055,520 | (1,245,041) | 819,399 | (612,924) | (33,574) | 786,620 | 8,770,000 |

ஓய்வூதியமும் தொழில்நிலைக்குப் பின்னரான ஏனைய நன்மைகள் திட்டங்கள் (குறிப்பு 44) பின்வரும் காரணங்களின் காரணமாக மதிப்பீட்டாளரின்படி தேறிய பொறுப்புக்களிலிருந்து வேறுபடுகின்றது.

அ) விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் எஞ்சிய மீதியை வங்கிக்குப் பகிர்ந்தளிப்பதற்கான சாத்தியம் குறைவாக இருப்பதன் காரணமாக இந்நிதியத்தின் தேறிய சொத்து நிலைமை கணக்குகளில் பிரதிபலிக்கப்படவில்லை.

ஆ) வங்கியானது வெவ்வேறான நிதியத்தில் (உள்ளக ரீதியாக நிர்வகிக்கப்பட்ட) தொடர்பான சொத்துக்களை வைத்திருக்காததன் காரணமாக பணிக்கொடை மற்றும் மருத்துவ நன்மைத் திட்டம் இரண்டிற்குமாக ஏட்டுப் பெறுமதி மொத்தப் பெறுமதியினைக் காட்டுமேயன்றி, மதிப்பீட்டாளரினால் மதிப்பிடப்பட்ட தேறிய பொறுப்புக்களைக்காட்டாது.

ஓய்வூதியம், விதவைகள் அநாதைகள் நிதியம் மற்றும் விதுரர்கள் அநாதைகள் நிதியம் என்பவற்றின் திட்டச் சொத்துக்களானவை, ரூ. 283 மில்லியன் பெறுமதி கொண்ட பிணைகளற்ற முதலீட்டை உள்ளடக்கியுள்ளன. இம்முதலீடுகளை மீள அறவிடமுடியாத போது, வங்கியின் தேறிய பொறுப்புக்கள் ரூ. 278 மில்லியனால் அதிகரிக்கும். பணிக்கொடைகள் மற்றும் மருத்துவ நலன்கள் திட்டங்கள் ஆகிய நிதியங்களின் சொத்துக்கள் ரூ. 129 மில்லியன் பெறுமதி கொண்ட பிணைகளற்ற முதலீட்டை உள்ளடக்கியுள்ளன. இம்முதலீடுகளை மீள அறவிடமுடியாத போது, ஒதுக்கப்பட்ட சொத்துக்களின் பெறுமதி அதே பெறுமதியால் குறைக்கப்படும்.

| நன்மைப் பொறுப்பு/ (சொத்து)களிலான அசைவு | ஊழியர் ஓய்வூதியத் திட்டம்<br>ரூ.000 | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய<br>ரூ.000 | விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்<br>ரூ.000 | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்<br>ரூ.000 | பணிக் கொடைத் திட்டம்<br>ரூ.000 | மருத்துவ நலன்கள் திட்டம்<br>ரூ.000 | மொத்தம் 2015<br>ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|
| 2015 சனவரி 01இல் உள்ளவாறு | 4,609,763 | - | (874,652) | (869,130) | 97,453 | 635,601 | 3,599,035 |
| நன்மைகளுக்கான செலவு | 852,981 | 1,014,927 | (87,465) | (86,913) | (200,806) | 115,379 | 1,608,103 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொகை | 4,922,631 | (103,601) | 1,815,056 | 356,027 | 105,625 | 161,340 | 7,257,078 |
| செலுத்தப்பட்ட பங்களிப்பு | (1,329,855) | (2,156,367) | (33,540) | (12,908) | (35,846) | (125,700) | (3,694,216) |
| **2015 திசெம்பர் 31இல் உள்ளவாறான நடைமுறையல்லாதவை** | 9,055,520 | (1,245,041) | 819,399 | (612,924) | (33,574) | 786,620 | 8,770,000 |
| **நன்மைகளுக்கான செலவுகள்** | | | | | | | |
| நன்மைக் கடப்பாடுகளின் மீது வட்டிச் செலவினம் | 460,977 | - | (87,465) | (86,913) | 9,746 | 63,561 | 359,906 |
| நடைமுறைப் பணிச் செலவினங்கள் | 392,004 | - | - | - | 28,390 | 51,818 | 472,212 |
| கடந்த பணிகளுக்கான செலவு | - | 1,014,927 | - | - | - | - | 1,014,927 |
| கட்டுப்படுத்தல்கள் | - | - | - | - | (238,942) | - | (238,942) |
| **நன்மைகளுக்கான செலவுகள்** | 852,981 | 1,014,927 | (87,465) | (86,913) | (200,806) | 115,379 | 1,608,103 |
| **திட்டமிடப்பட்ட சொத்துக்கள் மீதான உண்மையான வருமானம்** | 2,116,753 | 103,601 | 431,654 | 156,161 | 18,660 | 125,149 | 2,951,978 |
| **சராசரி நிலுவையின் சதவீதமாக திட்டமிடப்பட்ட சொத்தின் உண்மையான வருவாய்** | 8.40% | 8.40% | 8.40% | 9.35% | 12.00% | 9.44% | 8.53% |
| **செலுத்தப்பட்ட நன்மைகள் மீது ஈட்டிய மிகை வட்டி** | 516,650 | 516,650 | 137,995 | 140,097 | 9,609 | (13,165) | 894,787 |

44. ஓய்வூதியமும் தொழில்நிலைக்குப் பின்னரான ஏனைய நன்மைகள் திட்டங்களும் (தொடர்ச்சி)

| | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் ரூ.000 | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய ரூ.000 | விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் ரூ.000 | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் ரூ.000 | பணிக் கொடைத் திட்டம் ரூ.000 | மருத்துவ நலன்கள் திட்டம் ரூ.000 | மொத்தம் 2015 ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|
| **திட்டச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதியிலான மாற்றங்கள்** | | | | | | | |
| ஆண்டின் ஆரம்பத்தில் திட்டச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதி | **24,273,554** | **-** | **5,054,224** | **1,594,306** | **132,733** | **1,268,894** | **32,323,711** |
| திட்டச் சொத்துக்களின் உண்மை வருவாய் | **2,116,573** | **103,601** | **431,654** | **156,161** | **18,660** | **125,149** | **2,951,798** |
| பெறப்பட்ட பங்களிப்புக்கள் | **1,329,855** | **2,156,367** | **33,540** | **12,908** | **35,846** | **125,700** | **3,694,216** |
| செலுத்தப்பட்ட நன்மைகள் | **(1,599,923)** | **-** | **(293,659)** | **(16,064)** | **(9,051)** | **(138,314)** | **(2,057,011)** |
| **ஆண்டின் இறுதியில் திட்டச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதி** | **26,120,059** | **2,259,968** | **5,225,759** | **1,747,311** | **178,188** | **1,381,429** | **36,912,714** |

2014

| | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் ரூ.000 | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய ரூ.000 | விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் ரூ.000 | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் ரூ.000 | பணிக் கொடைத் திட்டம் ரூ.000 | மருத்துவ நலன்கள் திட்டம் ரூ.000 | மொத்தம் 2014 ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|
| **நன்மைப் பொறுப்புக்கள்/(சொத்து)** | | | | | | | |
| நன்மைகள் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதி | 28,883,317 | - | 4,179,572 | 725,176 | 230,186 | 1,904,495 | 35,922,746 |
| திட்டச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதி | (24,273,554) | - | (5,054,224) | (1,594,306) | (132,733) | (1,268,894) | (32,323,711) |
| **நன்மைப் பொறுப்புக்கள்/(சொத்துக்கள்) நடைமுறையல்லாதவை** | 4,609,763 | - | (874,652) | (869,130) | 97,453 | 635,601 | 3,599,035 |
| **நன்மைப் பெறுப்புக்களின்/(சொத்துகளின்) அசைவு** | | | | | | | |
| 2014 சனவரி 01இல் | 5,508,804 | - | (492,159) | (734,320) | 78,253 | 575,761 | 4,936,339 |
| நன்மைகளுக்கான செலவு | 1,163,340 | - | (49,216) | (73,432) | 35,846 | 125,700 | 1,202,238 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொகை | (1,105,279) | - | (310,474) | (52,502) | 3,064 | (22,412) | (1,487,603) |
| செலுத்தப்பட்ட பங்களிப்பு | (957,102) | - | (22,803) | (8,876) | (19,710) | (43,448) | (1,051,939) |
| **2014 திசெம்பர் 31இல் நடைமுறையல்லாதவை** | 4,609,763 | - | (874,652) | (869,130) | 97,453 | 635,601 | 3,599,035 |
| **நன்மைகளுக்கான செலவுகள்** | | | | | | | |
| நன்மைக் கடப்பாடுகள் மீதான வட்டிச் செலவு | 550,881 | - | (49,216) | (73,432) | 7,825 | 57,576 | 493,634 |
| நடைமுறைப் பணிச் செலவு | 612,459 | - | - | - | 28,021 | 68,124 | 708,604 |
| **நன்மைச் செலவினம்** | 1,163,340 | - | (49,216) | (73,432) | 35,846 | 125,700 | 1,202,238 |
| **திட்டமிடப்பட்ட சொத்துக்கள் மீதான உண்மையான வருமானம்** | 3,269,674 | - | 773,111 | 205,286 | 10,476 | 175,870 | 4,434,417 |
| **சராசரி நிலுவையின் சதவீதமாக திட்டமிடப்பட்ட சொத்தின் உண்மையான வருவாய்** | 14.32% | - | 16.18% | 13.74% | 8.78% | 14.31% | 14.56% |
| **செலுத்தப்பட்ட நன்மைகள் மீது ஈட்டிய மிகை வட்டி** | 1,934,458 | - | 526,475 | 191,404 | 7,236 | 36,563 | 2,696,136 |
| **திட்டமிட்ட சொத்துக்களின் சந்தைப் பெறுமதியில் ஏற்பட்ட மாற்றங்கள்** | | | | | | | |
| ஆண்டின் தொடக்கத்தில் திட்டமிட்ட சொத்துக்களின் சந்தைப் பெறுமதி | 21,381,994 | - | 4,504,946 | 1,394,026 | 105,787 | 1,188,883 | 28,575,636 |
| திட்டமிட்ட சொத்துக்களின் மீதான உண்மை வருமானம் | 3,269,674 | - | 773,111 | 205,286 | 10,476 | 175,870 | 4,434,417 |
| பெறப்பட்ட பங்களிப்பு | 957,102 | - | 22,803 | 8,876 | 19,710 | 43,448 | 1,051,939 |
| செலுத்தப்பட்ட நன்மைகள் | (1,335,216) | - | (246,636) | (13,882) | (3,240) | (139,307) | (1,738,281) |
| **ஆண்டின் இறுதியில் திட்டமிட்ட சொத்துக்களின் சந்தைப் பெறுமதி** | 24,273,554 | - | 5,054,224 | 1,594,306 | 132,733 | 1,268,894 | 32,323,711 |

அனைத்துத் திட்டங்களுக்குமான ஊழியர் நன்மைகளின் கடப்பாடுகளைத் தீர்மானிக்கின்ற போது பயன்படுத்தப்பட்ட முக்கியமான எடுகோள்கள் பின்வருமாறு காட்டப்படுகின்றன:

| | 2015 | 2014 |
|---|---|---|
| கழிவு வீதம் | **10.00%** | 10.00% |
| சொத்துக்களின் மீதான எதிர்பார்க்கப்பட்ட திரும்பல் வீதம் | **10.00%** | 10.00% |
| எதிர்காலச் சம்பள அதிகரிப்பு | **8.50%** | 8.50% |
| எதிர்கால ஓய்வூதிய அதிகரிப்பு | **7.50%** | 7.50% |
| தேய்வு வீதம் | **2.00%** | 2.00% |
| எஞ்சியுள்ள சராசரி பணி ஆண்டுகள் | | |
| இ.ம. வங்கி ஓய்வூதியம் | **27 ஆண்டுகள்** | 27 ஆண்டுகள் |
| இ.ம. வங்கி ஓய்வூதியம் - புதிய | **41 ஆண்டுகள்** | - |
| விதவை அனாதை ஓய்வூதியத் திட்டம் | **27 ஆண்டுகள்** | 27 ஆண்டுகள் |
| விதுரர் அநாதை ஓய்வூதியத் திட்டம் | **27 ஆண்டுகள்** | 27 ஆண்டுகள் |
| பணிக் கொடைத் திட்டம் | **20 ஆண்டுகள்** | 21 ஆண்டுகள் |
| இ.ம. வங்கி மருத்துவ நலத் திட்டம் | **32 ஆண்டுகள்** | 31 ஆண்டுகள் |
| ஓய்வுபெறும் வயது | **60 ஆண்டுகள்** | 60 ஆண்டுகள் |

| உணர்திறன் பகுப்பாய்வு 0.5% இல் (31.12.2015) | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் ரூ.000 | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய ரூ.000 | விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் ரூ.000 | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் ரூ.000 | பணிக் கொடைத் திட்டம் ரூ.000 | மருத்துவ நலன்கள் திட்டம் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|
| நடைமுறை கருதுகோள்களின் மீது எறிவுசெய்யப்பட்ட நன்மைக் கடப்பாடுகள் | **35,175,579** | **1,014,927** | **6,045,158** | **1,134,387** | **144,614** | **2,168,049** |
| கழிவிடல் வீதத்தில் "+" இன் மாற்றத்தின் தாக்கம் | (1,146,319) | (120,470) | (247,454) | (42,079) | (10,955) | (85,410) |
| கழிவிடல் வீதத்தில் "-" இன் மாற்றத்தின் தாக்கம் | 1,999,463 | 139,811 | 404,884 | 88,676 | 2,337 | 92,659 |
| தேய்வு வீதத்தில் "+" இன் மாற்றத்தின் தாக்கம் | 1,731,920 | - | 381,994 | 79,073 | 22,306 | 93,769 |
| தேய்வு வீதத்தில் "-" இன் மாற்றத்தின் தாக்கம் | (1,609,201) | - | (349,387) | (72,601) | (34,318) | (86,443) |
| சம்பள உயர்வு வீதத்தில் "+" இன் மாற்றத்தின் தாக்கம் | 288,377 | 101,499 | 27,900 | 10,406 | 2,403 | 13,434 |
| சம்பள உயர்வு வீதத்தில் "-" இன் மாற்றத்தின் தாக்கம் | (280,104) | (91,618) | (27,109) | (10,122) | (11,069) | (14,269) |

## 45. சந்தைப் பெறுமதி வெளிப்படுத்தல்கள்

### (அ) சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் சந்தைப் பெறுமதி

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் சந்தைப் பெறுமதி என்பது புரிந்துணர்வும் விருப்பமுமுள்ள தரப்பினர்களிடையே நடைபெறுகின்ற சுதந்திரமான கொடுக்கல்வாங்கலின் போது, சொத்தொன்றைப் பரிமாறிக் கொள்வதற்கு அல்லது பொறுப்பொன்றைத் தீர்த்து வைப்பதற்கு ஏற்புடைத்தான பணத் தொகையாகும். விற்பனை செய்பவருக்கு எதிராக விலை அசைவொன்று ஏற்படாத விதத்தில் குறிப்பிடத்தக்கதொரு கொடுக்கல்வாங்கலை உள்ளீர்த்துக் கொள்ள முடியுமானவாறு ஒழுங்கமையப் பெற்றதும் திரவத்தன்மையுடன் கூடியதுமான சந்தையில் நிதியியல் சாதனமொன்று விற்பனை செய்யப்படுகின்ற போது குறிப்பிடப்பட்ட நியாயப்பெறுமதி சந்தைப் பெறுமதியாகும்.

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் சந்தைப் பெறுமதியினை மதிப்பீட்டு தொழில் நுணுக்கத்தின்படி தீர்மானிப்பதற்கும் வெளிப்படுத்துவதற்குமாக வங்கி பின்வரும் படிமுறையினைப் பயன்படுத்துகிறது:

மட்டம் 1: ஒத்த தன்மையான சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களுக்காக தீவிரமான சந்தைகளில் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட (சீராக்கப்படாத) விலைகள்.

மட்டம் 2: பதிவு செய்யப்பட்ட சந்தைப் பெறுமதி மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தினை கொண்டுள்ள அனைத்து உள்ளீடுகளுக்குமான ஏனைய தொழில் நுணுக்கங்கள் ஒன்றில் நேரடியாக அல்லது மறைமுகமாக அவதானிக்கப்படுகின்றன.

மட்டம் 3: பதிவு செய்யப்பட்ட சந்தைப் பெறுமதி மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தினைக் கொண்டுள்ள உள்ளீடுகளைப் பயன்படுத்தும் தொழில் நுணுக்கம் அவதானிக்கத்தக்க சந்தைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை.

பின்வரும் அட்டவணை சந்தைப் பெறுமதிப் படிமுறையில் பதிவு செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் பகுப்பாய்வொன்றினைத் தருகின்றது:

| 2015 திசெம்பர் 31 | மட்டம் 1<br>ரூ.000 | மட்டம் 2<br>ரூ.000 | மட்டம் 3<br>ரூ.000 | மொத்தம்<br>ரூ.000 |
|---|---|---|---|---|
| **நிதியியல் சொத்துக்கள்** | | | | |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் | **35,779,665** | **-** | **-** | **35,779,665** |
| விற்பனைக்கு கிடைக்கக்கூடிய முதலீடுகள் | **352,054,482** | **-** | **-** | **352,054,482** |
| பெறுதிகள் | **-** | **4,145** | **-** | **4,145** |
| | **387,834,147** | **4,145** | **-** | **387,838,293** |
| **வெளிநாட்டு நாணயம் நிதியல்லாச் சொத்துக்கள்** | | | | |
| தங்கம் | **97,723,836** | **-** | **-** | **97,723,836** |
| | **97,723,836** | **-** | **-** | **97,723,836** |
| **ஏனைய நிதியல்லாச் சொத்துக்கள்** | | | | |
| காணி | **-** | **-** | **5,879,064** | **5,879,064** |
| கட்டடம் | **-** | **-** | **7,930,666** | **7,930,666** |
| | **-** | **-** | **13,809,730** | **13,809,730** |
| **நிதியியல் பொறுப்புக்கள்** | | | | |
| உள்ளடக்கப்பட்ட பெறுதிகள் - நாணயத் தேர்வுகள் | **-** | **-** | **10,290,162** | **10,290,162** |
| பெறுதிகள் | **-** | **13,990,146** | **-** | **13,990,146** |
| | **-** | **13,990,146** | **10,290,162** | **24,280,308** |

| 2014 திசெம்பர் 31 | மட்டம் 1<br>ரூ.000 | மட்டம் 2<br>ரூ.000 | மட்டம் 3<br>ரூ.000 | மொத்தம்<br>ரூ.000 |
|---|---|---|---|---|
| **நிதியியல் சொத்துக்கள்** | | | | |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் | 61,495,307 | - | - | 61,495,307 |
| விற்பனைக்கு கிடைக்கக்கூடிய முதலீடுகள் | 408,189,500 | - | - | 408,189,500 |
| பெறுதிகள் | - | 1,580,237 | - | 1,580,237 |
| | 469,684,807 | 1,580,237 | - | 471,265,044 |
| **வெளிநாட்டு நாணயம் நிதியல்லாச் சொத்துக்கள்** | | | | |
| தங்கம் | 100,190,635 | - | - | 100,190,635 |
| | 100,190,635 | - | - | 100,190,635 |
| **ஏனைய நிதியல்லாச் சொத்துக்கள்** | | | | |
| காணி | - | - | 5,833,100 | 5,833,100 |
| கட்டடம் | - | - | 7,814,883 | 7,814,883 |
| | - | - | 13,647,983 | 13,647,983 |
| **நிதியியல் பொறுப்புக்கள்** | | | | |
| உள்ளடக்கப்பட்ட பெறுதிகள் - நாணயத் தேர்வுகள் | - | - | 16,350,511 | 16,350,511 |
| பெறுதிகள் | - | 2,758,520 | - | 2,758,520 |
| | - | 2,758,520 | 16,350,511 | 19,109,031 |

**காணி மற்றும் கட்டடம்**

**மதிப்பிடப்படும் முறை**

தலைமை அலுவலகக் கட்டடத்தின் உயர்ந்த வர்த்தகத் தன்மையினைப் பரிசீலனையில் கொண்டு தலைமை அலுவலகத்தினை மதிப்பீடு செய்வதற்கு கழிவிடப்பட்ட காசுப்பாய்ச்சல் முறை பயன்படுத்தப்பட்டது. மற்றைய கட்டடங்கள் குறிப்பிட்ட மேம்பாடுகளுக்குப் பதிலாக நடைமுறைச் செலவுகளைக் கழிப்பதன் மூலமும் தேய்மானத்திற்காக கிட்டத்தட்ட ஏற்படும் தொகையினைக் கழிப்பதன் மூலமும் மதிப்பிடப்படுகிறது.

தற்போதைய சந்தைப் பெறுமதியைப் பெறுவதன் மூலம் காணி மதிப்பிடப்படுகிறது.

**மதிப்பிடலுக்குப் பயன்படுத்தப்பட்ட எடுகோள்கள்**

காணி மற்றும் கட்டடத்தின் உணர்திறன் பகுப்பாய்விற்குப் பயன்படுத்தப்பட்ட முதன்மை எடுகோள்கள் கீழே காட்டப்படுகின்றன:

| | |
|---|---|
| கழிவிடல் வீதம் | 6.5% |
| வாடகை அதிகரிப்பு | 5% |
| வெளிச்செல்லல் | 45% |

45. சந்தைப் பெறுமதி வெளிப்படுத்தல்கள் (தொடர்ச்சி)

**தலைமை அலுவலக காணி மற்றும் கட்டடத்திற்கான உணர்திறன் பகுப்பாய்வு**

| கழிவிடல் வீதம் | வாடகை அதிகரிப்பு | வெளிச் செல்லல் | காணி ரூ.000 | கட்டடம் ரூ.000 |
|---|---|---|---|---|
| 5% | 5% | 45% | 3,548,316 | 6,386,765 |
| 6% | 5% | 45% | 2,906,605 | 5,231,722 |
| 7% | 5% | 45% | 2,453,546 | 4,416,242 |
| 7% | 4% | 45% | 2,297,649 | 4,135,637 |
| 6% | 4% | 45% | 2,714,813 | 4,886,508 |
| 6% | 5% | 45% | 2,906,605 | 5,231,722 |
| 6% | 6% | 45% | 3,112,269 | 5,601,906 |
| 6% | 5% | 40% | 3,170,842 | 5,707,333 |
| 6% | 5% | 45% | 2,906,605 | 5,231,722 |
| 6% | 5% | 50% | 2,642,368 | 4,756,111 |

**கூட்டுறுதிச் சொத்துக்கள் - நியூயோர்க்**
**மதிப்பீட்டு முறை**

சுயாதீனமான மதிப்பிட்டாளர் விற்பனை ஒப்பீட்டு அணுகுமுறையினை விதந்துரைத்திருக்கின்றார். இது பதிலீட்டுக் கோட்பாட்டின் அடிப்படையில் சொத்துக்களை மதிப்பிடுகிறது. அதாவது இம்மதிப்பீட்டினை சந்தைப் பங்கேற்பாளர் இதேபோன்ற சொத்திற்கான கையேற்பாளராக செலுத்துதல் வேண்டும்.

**விற்பனை ஒப்பீட்டு அணுகுமுறை**

**2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது**

| | |
|---|---|
| அளவு (வாடகைக்கு விடத்தக்க சதுர அடி) | 12,726 |
| | **ஐ.அ.டொலர்** |
| பிரயோகிக்கப்பட்ட சதுர அடிக்கான அலகுப் பெறுமதி | 550 |
| சொத்தின் சந்தைப் பெறுமதி | 6,999,300 |
| **சொத்தின் சந்தைப் பெறுமதி (ஏறத்தாழ)** | **7,000,000** |

**விற்பனை ஒப்பிட்டு அணுகுமுறையில் பயன்படுத்தப்பட்ட பிரமாணங்கள் தொடர்பான உணர்திறன் பகுப்பாய்வு - நியூயோர்க் சொத்து**

| பிரமாணம் | விபரணம் | பிரணமாத்தில் மாற்றம் | சீராக்கம் | கூட்டுப் பெறுமதியிலான தாக்கம் (ஐ.அ.டொலர்) |
|---|---|---|---|---|
| நிதியிடல் | கொடுக்கல்வாங்கல்களுக்கான காசு நிதியிடல் கழிவிடல் என்பது கொள்வனவு விலை எதிர் கடன்/ஈடு வைக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் மீது பொதுவாகப் பெறப்படுவதாகும். | காசுக் கொள்வனவு | 5% கொண்ட கீழ் நோக்கிய சீராக்கம் | -350,000 |
| | | கடன் கொள்வனவு | 5% கொண்ட மேல் நோக்கிய சீராக்கம் | +350,000 |
| சந்தை நிலைமைகள் | உண்மைச் சொத்துச் சந்தை நிலைமைகளைக் குறிக்கிறது. உதாரணமாக சந்தை நிலைமைகள் 2013இன் நிலைமைகளுடன் ஒப்பிடுகையில் 2014இல் சாதகமாக உள்ளன. | சாதகமான நிலைமைகள் | 5-10% கொண்ட மேல் நோக்கிய சீராக்கம் | -350,000 இலிருந்து -700,000 |
| | | சாதகமற்ற நிலைமைகள் | 5-10% கொண்ட கீழ் நோக்கிய சீராக்கம் | +350,000 இலிருந்து +700,000 |
| அளவு | பாரிய அலகுகளின் பொருளியல் சிக்கனம் ஒப்பீட்டு அடிப்படையில் சிறிய அலகுகளுடன் ஒப்பிடுகையில் கூடுதலாக இருப்பதனால் அவை பொதுவாக கழிவுடன் விற்பனை செய்யப்படுகின்றன | பாரிய சொத்துக்கள் | 5% கொண்ட கீழ் நோக்கிய சீராக்கம் | -350,000 |
| | | சிறிய சொத்துக்கள் | 5% கொண்ட மேல் நோக்கிய சீராக்கம் | +350,000 |
| தரை உயரம் | பொதுவாக தரைமட்ட உயர அதிகரிப்பு, கூட்டுறுதித் தொகுதி அலகின் விலையை உயர்த்தும் | அதிகரிக்கின்ற தரை மட்டம் | தரையொன்றிற்கு 1% கொண்ட மேல் நோக்கிய சீராக்கம் | -70,000 |
| | | குறைவடைகின்ற தரை மட்டம் | தரையொன்றிற்கு 1% கொண்ட கீழ் நோக்கிய சீராக்கம் | +70,000 |

**பெறுதிகள்**

பெறுமதி மதிப்பீட்டு மாதிரிகள் முன்னோக்கிய விலைகளை (சந்தையில் கிடைக்கத்தக்கதாகவுள்ள முன்னோக்கிய புள்ளிகளுக்கு மேலதிக நிறைகளை அறிவிப்பதன் மூலம் கணக்கிடப்பட்டது) பயன்படுத்தியதுடன் பெறுமதித் திகதியிலுள்ளவாறு தொடர்பான நாணயங்களில் பூச்சிய நறுக்கு விளைவு வளைகோட்டினை அடிப்படையாகக் கொண்டு கழிவின் வீதம் கணிக்கப்பட்டது. சாதனமானது அளவின் உள்ளடக்கத்தினை மதிப்பிடுமிடத்து சீராக்கங்கள் முன்னோக்கிய விலைகளுக்கும்/அல்லது அளவுவீதத்தின் தளத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் வட்டிவீதங்களுக்கும் செய்யப்படுகிறது.

**உள்ளடக்கப்பட்ட பெறுதிகள் - நாணயத் தேர்வுகள்**

உள்ளடக்கப்பட்ட பெறுதிச் சாதனங்களின் சந்தைப் பெறுமதி பிளாக் ஸ்கூல்ஸ்சின் மாதிரியைப் பயன்படுத்திக் கணிக்கப்பட்டது.

| | மட்டம் 3 | |
|---|---|---|
| | **2015 ரூ.000** | **2014 ரூ.000** |
| சனவரி 1இல் உள்ளவாறு நிலுவை | 16,350,511 | 10,162,977 |
| பெறுதிப் பொறுப்புக்கள் | (6,060,349) | (6,187,534) |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு நிலுவை | 10,290,162 | 16,350,511 |
| வருவாய்களில் உள்ளடக்கப்பட்ட மொத்தத் தேறல் செய்யப்படாத இலாபங்கள் | 6,159,141 | 1,239,699 |

பயன்படுத்தப்பட்ட குறிப்பிடத்தக்களவிற்கு அவதானிக்கப்படாத உள்ளீடு

| | |
|---|---|
| கழிவிடல் வீதம் | 10% |
| தளம்பல் | 5% |

| உணர்திறன் பகுப்பாய்வு | கழிவிடல் வீதம் | | தளம்பல்கள் | |
|---|---|---|---|---|
| | 9% | 11% | 4% | 6% |
| | **ரூ.000** | **ரூ.000** | **ரூ.000** | **ரூ.000** |
| உள்ளடக்கப்பட்ட பெறுதிகள் - நாணயத் தேர்வுகள் | 10,661,010 | 9,954,694 | 9,734,797 | 11,145,607 |

| உள்ளடக்கப்பட்ட தேர்வுகளிலுள்ள பிற்போடப்பட்ட சொத்து | 2015 ரூ.000 | 2014 ரூ.000 |
|---|---|---|
| சனவரி 1இல் உள்ளவாறு நிலுவை | 25,832,842 | 27,578,100 |
| ஆண்டு காலப்பகுதியில் பதிவழிக்கப்பட்ட தீர்ப்பவுக் கட்டணம் | (12,540,716) | (8,635,798) |
| ஆண்டு காலப்பகுதியில் இனங்காணப்பட்ட பிற்போடப்பட்ட சொத்துக்கள் | - | 6,890,540 |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு நிலுவை | 13,292,126 | 25,832,842 |

**(ஆ) மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகள்**

உடன்படிக்கைகளின் குறுகிய கால இயல்பின் காரணமாக மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுகளின் அறிக்கையிடப்பட்ட பெறுமதி சந்தைப் பெறுமதியை அண்மித்ததாக இருக்கும் எனக் கருதப்படுகிறது. 2015 திசெம்பர் 31இல் மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட இலங்கை அரச பிணையங்களின் ஏட்டுப் பெறுமதி ரூ.23,650 மில்லியனாக இருந்ததுடன் (2014 - ரூ.321,220 மில்லியன்) துணைநில் வைப்பு வசதி ரூ.81,815 மில்லியனாக (2014 - ரூ. 7,032) காணப்பட்டது. மீள் விற்பனைக்கான உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட இலங்கை அரச பிணையங்களின் ஏட்டுப் பெறுமதி 2015 திசெம்பர் 31இல் ரூ.135 மில்லியனாக இருந்தது (2014 - ரூ.2,650 மில்லியன்).

**(இ) சுற்றோட்டத்திலுள்ள நாணயம்**

சுற்றோட்டத்திலுள்ள நாணயங்களின் சந்தைப் பெறுமதியானது, நிதிக் கூற்றில் அறிக்கையிடப்பட்டுள்ளவாறு அவற்றின் முகப்புப் பெறுமதியாகக் கருதப்படுகிறது.

**(ஈ) வைப்புக்கள்**

கோரப்படுகின்ற போது செலுத்தப்பட வேண்டுமாதலால் வைப்புக்களின் ஏட்டுப் பெறுமதியானது சந்தைப் பெறுமதியை அண்மித்ததாக இருக்குமெனக் கருதப்படுகிறது.

**(உ) சந்தைப் பெறுமதி மற்றும் சந்தைப் பெறுமதி படிநிலைகளை நிர்ணயித்தல்**

| | எடுத்துச் செல்லப்படும் தொகை | | சந்தைப் பெறுமதி | |
|---|---|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | 2015<br>ரூ.000 | 2014<br>ரூ.000 | 2015<br>ரூ.000 | 2014<br>ரூ.000 |
| வெளிநாட்டு நாணய வர்த்தகம்/ விற்பனைக்கான பிணையங்கள் | **387,834,147** | 469,684,807 | **387,834,147** | 469,684,807 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | **4,145** | 1,580,237 | **4,145** | 1,580,237 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | **102,866,967** | 124,443,452 | **102,799,824** | 124,072,219 |
| வங்கிகளுக்கான கடன்கள் | **886,357** | 1,489,372 | **839,898** | 1,398,678 |
| ஏனைய சொத்துக்கள் | **11,164,452** | 10,019,985 | **7,973,781** | 7,624,184 |
| **வெளிநாட்டு நாணய நிதியல்லாச் சொத்துக்கள்** | | | | |
| ஒதுக்கப்பட்ட தங்கம் | **97,723,836** | 100,190,635 | **97,723,836** | 100,190,635 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | **24,280,308** | 19,207,822 | **24,280,308** | 19,207,822 |

**46. ஒப்பீட்டு ரீதியான தகவல்கள்**

அ) முன்னர் அறிக்கையிடப்பட்டவாறு

| | 2014<br>ரூ.000 |
|---|---|
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | - |
| **ஏனைய பொறுப்புக்கள்** | |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | 416,895,362 |

| தற்போதைய சமர்ப்பிப்பு: | 2015<br>ரூ.000 | 2014<br>ரூ.000 |
|---|---|---|
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | **491,699,948** | 416,895,362 |

2014இன் ஏனைய பொறுப்புக்களின் மீது உள்ளடக்கப்பட்ட ரூ.416.90 மில்லியன் கொண்ட சுற்றோட்டத்திலுள்ள நாணயம் சிறந்த சமர்ப்பிப்பிற்காக உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களின் கீழ் உள்ளக்கப்பட்டிருக்கிறது.

ஆ) முன்னர் அறிக்கையிடப்பட்டவாறு

| | 2014<br>ரூ.000 |
|---|---|
| **உள்நாட்டு நாணய நிதியியல்லாச் சொத்துக்கள்** | |
| ஏனைய பெறத்தக்கவைகள் மற்றும் முற்கொடுப்பனவுகள் | 27,446,864 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | |
| ஏனைய செலுத்தத்தக்கவைகள் | 8,939,293 |

| தற்போதைய சமர்ப்பிப்பு: | 2015<br>ரூ.000 | 2014<br>ரூ.000 |
|---|---|---|
| **உள்நாட்டு நாணய நிதியியல்லாச் சொத்துக்கள்** | | |
| ஏனைய பெறத்தக்கவைகன் மற்றும் முற்கொடுப்பனவுகள் | **14,347,811** | 27,375,394 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | |
| ஏனைய கொடுப்பனவுகளும் | **6,850,998** | 8,867,823 |

ரூ.71.47 மில்லியன், 2014இல் ஏனைய பெறத்தக்கவைகள் மற்றும் முற்கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய செலுத்தக்கவைகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது. ஆனால் ப.க.நி 01இன் ஏற்பாடுகளின் படி சிறந்த சமர்ப்பிற்காக 2015ம் ஆண்டு தேறிய தொகை காட்டப்பட்டுள்ளது.

## 47. தொடர்புடைய தரப்பினர்கள்

### 47.1 அரச மற்றும் அரசினால் நிர்வகிக்கப்படுகின்ற நிறுவனங்களுடனான கொடுக்கல்வாங்கல்கள்

மத்திய வங்கியின் வழமையான வியாபாரத்தின் போது தொடர்புடைய தரப்பினர்களோடு கொடுக்கல்வாங்கலில் ஈடுபடுகின்றது. தொடர்புடைய தரப்பினரால் இலங்கை அரசாங்கம் (அரசு வங்கியின் உரிமையாளர் என்ற ரீதியில்), பல்வேறு அரச திணைக்களங்கள், அரசின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட நிறுவனங்கள் என்பன உள்ளடங்குகின்றன. பன்னாட்டு கணக்கீட்டு நியமங்கள் 24 - திருத்தப்பட்ட தொடர்புடைய தரப்பினரின் வெளிப்படுத்தல்களுக்கமைய வங்கியினால் அரசுடனும் அரசின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட நிறுவனங்களுடனும் மேற்கொள்ளப்பட்ட தனித்தனியாக முக்கியத்துவம் வாய்ந்ததும் தனித்தனியாக முக்கியத்துவமில்லாத ஏனைய ஒன்றுசேர்ந்த கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் ஏற்பாடுகளின் விபரங்கள் பின்வருமாறு:

| கொடுக்கல்வாங்கலின் இயல்பு | 2015 ரூ.000 | 2014 ரூ.000 |
|---|---|---|
| **கொடுக்கல்வாங்கல்கள்:** | | |
| அரச பிணையங்களின் உடனடி விற்பனை | **66,059,197** | - |
| மீள்கொள்வனவு/விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு/விற்பனை செய்யப்பட்ட இ.ம.வ. மற்றும் அரச பிணையங்கள் | **8,558,487,853** | 3,723,185,303 |
| திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டில் நாணயத் தாள்களை அச்சிடுவதற்கான செலவினம் (இ) | **1,954,763** | 851,816 |
| திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான பொருட்கள், பணிகள் மற்றும் வரிகளுக்கான கொடுப்பனவுகள்(ஈ) | **762,417** | 603,729 |
| இவ்வாண்டில் அரசிற்கு செலுத்தப்பட்ட மிகை (குறிப்பு 30) | **-** | 8,500,000 |
| ஆண்டினுள் மொத்த வெளிநாட்டு செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் (ஊ) | | |
| விற்பனை | **234,753,399** | 54,983,877 |
| கொள்வனவு | **-** | 103,109,164 |
| ஐ.அ.டொலர்/ இல. ரூபா பெறுதிகள் | **836,162,191** | 509,122,447 |
| இவ்வாண்டுப்பகுதியில் கைவிடப்பட்ட சொத்துக்கள் தொடர்பில் பெறப்பட்ட நிதியம் | **114,971** | - |
| ஆலோசனை, தொடர்பூட்டல், மதியுரை மற்றும் தொழில்சார் நிபுணத்துவக் கட்டணங்கள் (எ) | **155,428** | 1,520,927 |
| **நிலுவைகள்:** | | |
| மத்திய வங்கியினால் வைத்திருக்கப்படுகின்ற இலங்கை அரச பிணையங்கள் (ஏ) | **102,731,967** | 121,793,452 |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் (குறிப்பு 9) | **151,131,671** | 143,897,971 |
| சுசகன கட்டம் 1 மற்றும் 2 இன் கீழ் வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் மாகாண அபிவிருத்திக் கொடுகடன் திட்டம், சௌபாக்கிய கடன் திட்டம், வடக்கின் எழுச்சிக் கடன் திட்டம் (கட்டம் II), கிழக்கில் பொருளாதார நடவடிக்கைகளை மீள ஆரம்பித்தல் (கட்டம் II) மற்றும் வடக்கு மற்றும் கிழக்கில் சேதமடைந்த வீடுகளைத் திருத்துதல் | **352,864** | 1,003,594 |
| குறிப்பிட்ட நோக்கங்களுக்காக வைத்திருக்கப்பட்ட அரச பிணையங்கள் | **4,292,385** | 3,367,765 |
| அ.நே.மொ.தீ. நிலுவைகள் - வங்கிகள் நிதியியல் நிறுவனங்களுடன் | **115,013,766** | 104,511,467 |
| இலங்கை வங்கி இலண்டனுடனான நொஸ்ரோ கணக்கு நிலுவைகள் | **195,999** | 137,486 |
| திறைசேரி மற்றும் ஏனைய அமைச்சுக்களிடமிருந்து பெறத்தக்கவை | **1,378,695** | 1,399,832 |
| பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திலிருந்து பெறத்தக்கவை | **3,146** | 283,114 |
| திறைசேரிக்கு கொடுபடத்தக்கவை (குறிப்பு 20) | **8,203,776** | - |
| தேசிய கொள்கைத் திட்டமிடல் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சிற்கு கொடுபடத்தக்கவை (குறிப்பு 20) | **49,479,048** | 69,275,720 |
| அரச மற்றும் அரச முயற்சிகளுடனான நடைமுறைக் கணக்கு நிலுவைகள் திசெம்பர் 31இல் உள்ளவாறு | **176,637** | 30,023 |
| ஏனைய நிலுவைகள் (ஒ) | **1,124,350** | 989,624 |

**அ)** நாணய விதிச் சட்டத்தின் 28 - 33 பிரிவுகளினால் அதிகாரம் அளிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைத் திணைக்களமானது இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையால் உரிமம் வழங்கப்பட்ட வங்கிகள் மீதான மேற்பார்வைத் தொழிற்பாட்டினையும் ஒழுங்குபடுத்தலையும் மேற்கொண்டு வருகிறது. 2015 திசெம்பர் 31இல் உள்ளவாறு இலங்கை அரசாங்கத்தினால் நிதியிடப்பட்ட அல்லது குறிப்பிடத்தக்க செல்வாக்கைக் கொண்ட 3 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும்4 சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் இந்தத் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் வந்தன.

இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லாத நிதி நிறுவனங்களை மேற்பார்வை செய்யும் திணைக்களமானது வங்கியல்லாத நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் தொழிற்பாட்டையும் ஒழுங்குபடுத்துகையையும் மேற்கொண்டு வருகிறது. இதற்கிணங்க, அரச கட்டுப்பாட்டிலுள்ள தொடர்புடைய நிறுவனங்கள் அல்லது அரசினால் நிதியிடப்பட்ட வங்கியல்லாத நிதி நிறுவனங்கள் இத்திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழுள்ளன.

**ஆ)** நாணய விதிச் சட்டத்தின் 113ஆம் பிரிவின் பிரகாரம் நிதிச் சபையும் இலங்கை மத்திய வங்கியும் பொதுப்படுகடன் முகாமைத்துவ தொழிற்பாட்டினை ஆற்ற அதிகாரம் பெற்றுள்ளன. இதற்கிணங்க, அரசாங்கத்தின் முகவர் என்ற வகையில் பொதுப்படுகடன் திணைக்களமானது, வரவு செலவுத்திட்ட தேவைப்பாடுகளை பூர்த்தி செய்து கொள்வதற்காக உள்நாட்டுச் சந்தைக்குப் பிணையங்களை வழங்குவதோடு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன் பணிகளையும் மேற்கொள்கின்றது. பொதுப்படுகடன் திணைக்களமானது பொதுப்படுகடன் முகாமைத்துவம் மற்றும் கடன் சந்தை அபிவிருத்தி என்பவற்றைக் கையாளுகின்றது. அரசாங்கத்தினுடைய நிதித் தேவைகளை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையிலும் அதனுடைய பணம் செலுத்துதல் கடப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கும் அரசாங்கக் கடனை இது முகாமைத்துவம் செய்கிறது.

**இ)** நாணய விதிச் சட்டத்தின் 49ஆம் பிரிவின்படி இலங்கையில் நாணய விநியோகத்தை மேற்கொள்ளும் அதிகாரத்தையும் ஏக உரிமையையும் வங்கி கொண்டுள்ளது. இதற்கிணங்க இ.ம. வங்கியின் நாணயத் திணைக்களம் இலங்கையிலே சட்ட ரீதியான நாணயத்தை விநியோகிக்கும் ஒரே அதிகாரத்துவம் உடையதாகத்

தொழிற்படுகின்றது. நாணயத் தாள்களை அச்சிடுதலானது, 40 சதவீதப் பங்குகளை அரசாங்கம் சொந்தமாகக் கொண்டுள்ள டிலாறூ லங்கா கரண்சி அன்ட் செக்குரிட்டி (பிறைவேட்) லிமிடெட் எனும் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகிறது.

ஈ) வங்கியின் சாதாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது வங்கியானது அரச நிறுவனங்கள் அல்லது அரசாங்கத்தின் குறிப்பிடத்தக்களவு செல்வாக்கு அல்லது கட்டுப்பாடுள்ள நிறுவனங்களுடன் பல்வேறுபட்ட பண்டங்கள் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகிறது.

உ) மத்திய வங்கியானது, குறிப்பு 49இல் விளக்கப்பட்டுள்ளவாறு, பொதுவாக நம்பிக்கைப் பொறுப்பாளராகவும் பிற காப்பாளர் தகுதிகளிலும் கடமை புரிவதனால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை அரசாங்கம், நம்பிக்கைப் பெறுப்புக்கள், ஓய்வூதிய நலத் திட்டங்கள் மற்றும் பிற நிறுவனங்களின் சார்பில் வைத்திருக்க அல்லது வழங்க முன் வருகின்றது.

ஊ) நாணய விதிச்சட்டத்தின் படி, வங்கியின் பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம் உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் அபிவிருத்தியையும் வர்த்தக வங்கிகளின் ஓரிரவுக்கான தேறிய வெளிநாட்டுச் செலாவணி திறந்த நிலையினையும் கண்காணிக்கின்றது. உள்நாட்டின் வெளிநாட்டுச் சந்தைச் செலாவணி அபிவிருத்தியைக் கண்காணிக்கின்ற போது வங்கியானது சந்தையின் இரு புறத்திலுமிருந்து இலங்கை ரூபாவின் செலாவணி வீதத்தின் மிகை மாற்றமுறும் தன்மையினை மிதமான நிலைக்குக் கொண்டு வருகின்றது. அத்தகைய கண்காணிப்பு நடவடிக்கையின் பெறுபேறுகளாக வெளிநாட்டுச் செலாவணியின் கொள்வனவு மற்றும் விற்பனைத் தொகைகள் விளங்குகின்றன.

எ) இத்தொகையானது சனாதிபதி செயலகத்தால் நடாத்தப்பட்ட தொடர்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக வங்கியால் செலுத்தப்பட்ட கட்டணங்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் விசாரணைகளுக்குச் செலுத்தப்பட்ட தொழில்சார் நிபுணத்துவக் கட்டணம் என்பவற்றை பிர திநிதித்துவப்படுத்தப்படுகின்றது. இச்செலவுகள் நிர்வாக செலவுகளின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஏ) உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களமானது வங்கியின் நிதிக் கொள்கையை அமுல்படுத்தும் நேரடித் தொழிற்பாட்டை, பிரதானமாக 1949ஆம் ஆண்டு 58ஆம் இலக்க திருத்தப்பட்டவாறான நாணய விதிச் சட்டத்தின் 90 - 92ஆம் பிரிவின் படியாக, திறந்த சந்தை நடவடிக்கைகளினூடாக செயற்படுத்துவதுடன் நாணய விதிச் சட்டத்தின் 93 - 98 பிரிவுகளின் படியான நிதி ஒதுக்குத் தேவைப்பாடுகளையும் அமுல்படுத்துவதுடன், அரசாங்கம் பங்குடமைகளைக் கொண்டுள்ள வணிக நிறுவனங்களினதும் வேறும் சில நிதி நிறுவனங்களினதும், அரச நிறுவனங்களினதும் வங்கியாகவும் தொழிற்படுகிறது. 2015 திசெம்பர் 31ஆம் திகதியன்று இந்தத் தொழிற்பாட்டின் நிமித்தமாக எழும் திரண்ட நிலுவைகள், குறிப்பு 21 மற்றும் 22இல் தரப்பட்டுள்ளன. முதலீட்டுப் பட்டியலிலிருந்து உழைக்கப்பட்ட வட்டி குறிப்பு 31 இல் தரப்பட்டுள்ளது.

ஐ) வங்கியானது எவ்விதக் கட்டணங்களையும் அறவிடாது, அரச கட்டுப்பாட்டிலுள்ள வங்கியொன்றின் காப்பாளர் நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறது.

ஒ) வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட சுற்றறிக்கையின்படி, வேளாண்மைக்கான 10 சதவீதமான குறைந்தபட்ச முற்பண வரையறையினைப் பேணாத வங்கிகள், வங்கியின் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும் மீள்நிதியிடல் நிதியத்திற்கு அப்பற்றாக்குறையாகவுள்ள தொகையினை செலுத்துதல் வேண்டும். 2015 திசெம்பர் 31இல் உள்ளவாறு மீள்நிதியிடல் திட்டத்தின் கீழ் ரூ.200.45 மில்லியன் மீதியாகக் காணப்பட்டதுடன், மக்கள் வங்கி - ரூ.99.42 மில்லியன் (2014 - ரூ. 184.24 மில்லியன்) இலங்கை வங்கி - ரூ.21.21 மில்லியன் (2014 - ரூ 38.28 மில்லியன்) பிரதேச சங்வர்த்தன வங்கி - ரூ.64.63 மில்லியன் (2014 - ரூ.122.32 மில்லியன்) மற்றும் லங்காபுத்திர அபிவிருத்தி வங்கி ரூ.15.19 மில்லியன் (2014 - ரூ.22.94 மில்லியன்) தொகையைப் பெற்றதுடன், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் ரூ.90.83 மில்லியன் வட்டியைப் பெற்றது.

ஓ) ஏனைய கொடுக்கல்வாங்கல்களும் மீதிகளும் தனிப்பட்டவர்கள், அரசாங்கம் மற்றும் அரசாங்கத் திணைக்களங்களுடன் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்களையும் மீதிகளையும் உள்ளடக்குகிறது.

### 47.2 பிரதம முகாமைத்துவ ஆளணியினருடனான கொடுக்கல்வாங்கல்கள்

ஆளுநர், துணை ஆளுநர்கள், உதவி ஆளுநர்கள் மற்றும் உள்ளகக் கணக்காய்வுப் பணிப்பாளர் (அவ்வாறான அங்கத்தவர்கள் ஏதேனுமொரு வங்கி நிறுவனத்தில் பணிப்பாளராக, அலுவலராக, ஊழியராக அல்லது பங்குரிமையாளராயிருத்தலை நாணய விதிச் சட்டம் வரையறுக்கின்றது) உள்ளடங்கலாக நாணயச் சபையின் அங்கத்தவர்கள் வங்கியின் முக்கிய முகாமைத்துவ ஆளணியினராவர். பிரதம முகாமைத்துவ ஆளணியினருடனான கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு:

### 47.3 பிரதம முகாமைத்துவ ஆளணியினருக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவு

| | 2015<br>ரூ.000 | 2014<br>ரூ.000 |
|---|---|---|
| குறுகிய கால ஊழியர் நலன்கள் | **107,904** | 67,816 |

மேற்படி பணிக் கொடைகளுக்கு மேலதிகமாக பிரதம முகாமைத்துவ ஆளணியினருக்கு அவர்களுடான தொழில் ஒப்பந்தங்களுக்கமைய கம்பனியினால் காசல்லாத நன்மைகளும் வழங்கப்படுகின்றன.

### 47.4 பிரதம முகாமைத்துவ ஆளணியினருடனான ஏனைய கொடுக்கல்வாங்கல்கள்

| | 2015<br>ரூ.000 | 2014<br>ரூ.000 |
|---|---|---|
| பிரதம முகாமைத்துவ ஆளணியினருக்கான கடன்கள் | **46,600** | 47,310 |

அனைத்துக் கடன்களும் கடன் வகை மற்றும் மாதாந்த மீளச் செலுத்துகையைப் பொறுத்து 2 சதவீதம் தொடக்கம் 7 சதவீதம் வரையிலான வட்டி வீத வீச்சிடையுடன் கூடிய போதியளவு பாதுகாப்பினைக் கொண்டுள்ளன.

### 47.5 தொழில் நிலைக்குப் பிந்திய நலவுரிமைத் திட்டங்களுடனான கொடுக்கல்வாங்கல்கள்

| | 2015<br>ரூ.000 | 2014<br>ரூ.000 |
|---|---|---|
| செலுத்தப்பட்ட மற்றும் செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புக்கள் | **68,382** | 39,925 |

குறிப்பு 44இல் தரப்பட்டுள்ளவாறு ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வூதியத் திட்டத்திற்கும் பின்னரான திட்டங்களுக்கு வங்கி பல்வேறு தொகைகளையும் ஊழியர் சேம நிதியத்திற்கு ரூ.559.38 மில்லியன் (2014இல் ரூ.406.49 மில்லியன்) பங்களிப்புச் செய்துள்ளது. வழமையான வியாபார காலப்பகுதியில் வங்கியானது அதன் தொழில்நிலைக்குப் பின்னய திட்டங்களுக்கு வங்கித்தொழில் மற்றும் நிதியியல் பணிகளை வழங்கியது. அத்தகைய திட்டங்களுடனான மீதிகளின் தொகை குறிப்பு 24இல் தரப்பட்டுள்ளது.

## 48. எதிர்பாராப் பொறுப்புக்களும் மூலதனக் கடப்பாடுகளும்

### 48.1 நிதி உத்தரவாத ஒப்பந்தங்கள்

வங்கியானது அரசாங்கத்தின் அல்லது அதன் முகவராண்மைகளினதும் நிறுவனங்களினதும் முகவராகச் செயற்பட்டு, பொதுத் திறைசேரியினால் இ.ம. வங்கிக்கு வழங்கப்பட்டுள்ள பதில் உத்தரவாதங்களைப் பயன்படுத்தி பல்வேறு தரப்பினர்களுக்கும் உத்தரவாதங்களை வழங்குகின்றது. 2015 திசெம்பர் 31இல் உள்ளவாறு அத்தகைய தீர்க்கப்படாத பிணைகள் எதுவும் இருக்கவில்லை.

### 48.2 கொடுகடன் உத்தரவாதங்கள்

பங்கேற்பு நிதி நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்ற வெளிவாரியான கடன் தொகைகளின் மூலம் சிறிய மற்றும் மத்தியதர தொழில் முயற்சிகளுக்கு நிதியிடல், இத் தொழில் முயற்சிகளுக்கு வழங்கப்படுகின்ற கடன்களுக்கான உத்தரவாதப் பத்திரங்களை வெளியிடல், உத்தரவாதப் பத்திர தவணைப் பணங்களைச் சேகரித்தல், கடன் உத்தரவாதப் பத்திர நிதியத்தின் நிர்வாகம் மற்றும் செலுத்தத் தவறுதல்கள் நடைபெறாதென்பதை உறுதி செய்தல், கடன் நிதியம் உரிய விதத்தில் பயன்படுத்தப்படுகின்றதென்பதை உறுதி செய்வதற்காக கடன் வழங்கியதன் பின்னர் கடன் விசாரணைகளை நடத்துதல் ஆகிய மூலம் வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது மீள்நிதியிடல் கடன் வசதித் தொழிற்பாடுகளில் ஈடுபடுகின்றது. ஆண்டினுள் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் தொடர்ந்து மீள்நிதியிடல் கடன் வசதிகள் வழங்கப்பட்டனவென்பதோடு, இத் திட்டத்தின் கீழ் கடன் வழங்குகின்ற பங்கேற்புக் கடன் நிறுவனங்களில் உருவாகின்ற நட்டங்கள் தொடர்பாக வங்கியானது கடன் உத்தரவாதப் பத்திரங்களை ஏற்பாடு செய்தது. இது கடன்பெறுநர்களின் செலுத்தத் தவறுதல்களுக்கான ஒரு உத்தரவாதப்பத்திரமல்லவென்பதோடு நட்டங்களுக்காக மட்டுமேயாகும். அதாவது, பங்கேற்புக் கடன் நிறுவனங்களின் மூலம் கடன்களை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதன் பின்னர் உருவாகின்ற நட்டங்களுக்காக மாத்திரம் உரிமைகள் கோரப்படுதல் வேண்டும். இவ் ஏற்பாடுகளின் கீழ் எழக்கூடிய எதிர்பாராப் பொறுப்புக்களுக்கான தொகைகள் பின்வருமாறு:

**உள்நாட்டு வர்த்தக வங்கிகள் - கடன் உத்தரவாதங்கள் தொடர்பானது:**

| | உத்தர வாத மளிக்கப் பட்ட நாணயம் | வெளிநின்ற உத்தரவாதங்களின் தொகை 2015 ரூ.000 | 2014 ரூ.000 |
|---|---|---|---|
| **தொடர்புடைய தரப்பினர்கள்** | ரூபா | | |
| - வங்கி நிதியிட்டுள்ள செயற்றிட்டங்கள் | | **2,310,793** | 96,517 |
| - அரசாங்கம் நிதியிட்டுள்ள செயற்றிட்டங்கள் | | **3,978,055** | 3,865,444 |
| **ஏனையோர்** | ரூபா | | |
| - வங்கி நிதியிட்டுள்ள செயற்றிட்டங்கள் | | **220,609** | 19,220 |
| - அரசாங்கம் நிதியிட்டுள்ள செயற்றிட்டங்கள் | | **315,680** | 1,718,847 |
| **மொத்தக் கடன் உத்தரவாதங்கள்** | | **6,825,138** | 4,700,028 |

### 48.3 நம்பகமான செயற்பாடுகள்

நாணய விதிச் சட்ட ஏற்பாடுகளின் கீழ் வங்கியானது நம்பகமான செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. இவ் வகையான இயலுமையில் செயற்படுவதானது பல்வேறு தரப்பினரது சார்பாக நிதியங்களை வைத்திருக்க அல்லது இடம்பெறச் செய்கின்றது. ஆனாலும் அச் செயற்பாடுகளின் நிமித்தமாக எழும் எந்தப் பொறுப்பையும் வங்கி எதிர்பார்க்கவில்லை.

### 48.4 சட்ட ரீதியான உரிமைக் கோரல்கள்

சட்ட உரிமையுடன் ரூ.35 மில்லியன் கோரல் சம்மந்தப்பட்ட ஈடுபாடுடையோரின் நிறுவனங்களால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கொன்றில் வங்கியொரு எதிர்த்தரப்பாகவுள்ளது. வங்கியினால் இவ்வழக்கு எதிர்த்து வாதாடப்படுவதுடன் நிதிக் கூற்றுக்களில் எவ்வித ஒதுக்குகளும் மேற்கொள்ளப்படவில்லை.

வங்கி 03 வழக்குகளின் வழக்காளியாக இருந்ததுடன் சட்ட ரீதியாக ரூ.21.8 மில்லியன் நட்ட ஈடாகக் கோரியதுடன், இதற்கான நிதிக் கூற்றுக்களில் எவ்வித ஒதுக்கங்களும் மேற்கொள்ளப்படவில்லை

மேலும் 2015 திசெம்பர் 31இல் வங்கிக்கெதிரான பல சட்ட நடவடிக்கைகள் எஞ்சியிருந்தன. குறிப்பிடத்தக்க ஏதேனும் நட்டங்கள் ஏற்படுவது சாத்தியமற்றதென்ற அபிப்பிராயத்தை வங்கி கொண்டுள்ளதால், எவ்வித ஒதுக்குகளும் மேள்கொள்ளப்படவில்லை.

### 48.5 கடப்பாடுகள்

(அ) 2015 திசெம்பர் 31ஆம் திகதியுள்ளவாறு, ஆதனங்கள், பொறிகள் மற்றும் கருவிகளின் கையேற்புத் தொடர்பில் வங்கி ரூ.405.53 மில்லியன் (2014 - 488.15 மில்லியன்) இனை மூலதனக் கடப்பாடாகக் கொண்டிருந்தது.

(ஆ) 2015 திசெம்பர் 31ஆம் நாளன்று வெளிநின்ற முன்னோக்கிய செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் பின்வருமாறு காணப்பட்டன.

| **முன்னோக்கிய செலாவணி ஒப்பந்தங்கள்** | | **2015 ரூ.000** | **2014 ரூ.000** |
|---|---|---|---|
| முன்னோக்கிய செலாவணி விற்பனை | | | |
| | அவுத்தி.டொலர் | **11,000** | - |
| | ஸ்ரேலிங் பவுண் | **35,000** | - |
| | யூரோ | **3,000** | 50,000 |
| | ஐ.அ.டொலர் | **2,160,805** | 2,239,119 |
| முன்னோக்கிய செலாவணி கொள்வனவுகள் | | | |
| | அவுத்தி.டொலர் | **1,000** | - |
| | ஸ்ரேலிங் பவுண் | **35,000** | - |
| | யூரோ | **14,000** | - |
| | ஐ.அ.டொலர் | **25,000** | - |

### 48.6 பிணையிடப்பட்ட சொத்துக்கள்

பிணையங்கள் தீர்ப்பனவு செயன்முறைக்கு வசதியளிக்கும் பொருட்டு அவுத்திரேலிய டொலர் 35 மில்லியன் - ஏட்டுப் பெறுமதி, அவுத்திரேலியா டொலர் 36.29 மில்லியன் (2014 - அவுத்திரேலிய டொலர் 35 மில்லியன் ஏட்டுப் பெறுமதி அவுத்திரேலிய டொலர் 36.54) வங்கியினால் யூரோ கிளியர் வங்கியினால் பிணையிடப்பட்டதுடன் ஐ.அ.டொலர் 30 மில்லியன் (2014 - ஐ.அ.டொலர் 30 மில்லியன்) கொண்ட கொடுகடன் வசதி பெறப்பட்டது. பிணையிடப்பட்ட பிணையங்கள் யூரோ கிளியரில் தனியான கணக்கில் வைத்திருக்கப்படுகின்றன.

அப்பிணையங்கள் நிதியியல் நிலைமைக் கூற்றுக்களில் “விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியியல் சொத்துக்கள்” என காட்டப்பட்டுள்ளன. வங்கி இக்கொடுக்கல்வாங்கல்களை “யூரோ முறைமையில் பங்கேற்கின்றவர்களினால் மேற்கொள்ளப்படும் பிணையிடப்பட்ட கடப்பாடுகளை நிருவகிக்கின்ற பிணைய உடன்படிக்கை” இனையும் “யூரோ கிளியர் முறைமையிலுள்ள பங்கேற்பாளர்களுக்கான கொடுகடன் வழங்கலை நிருவகிக்கின்ற பொது நிபந்தனைகள்” யும் அடிப்படையாகக் கொண்ட நியதிகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 48.7 முறிக் கடன்பாடுகள்

இவ்வாண்டுக் காலப்பகுதியில் வங்கியானது 30 அடிப்படைப் புள்ளிகளைக் கொண்ட தரகு அடிப்படையில் ஊழியர் சேம நிதியத்திலிருந்து கடன்பட்டது. 2015 திசெம்பர் 31இல் வெளிநின்ற முறிகளின் முகப்புப் பெறுமதி பூச்சியமாக இருந்தது (2014இல் ரூ.191,781.43 மில்லியனாகக் காணப்பட்டது).

## 49. நம்பிக்கை மற்றும் கட்டுக்காப்பு நடவடிக்கைகள்

மத்திய வங்கி பொதுவாக நம்பிக்கைப் பொறுப்பாளராகவும் நம்பகத் தகுதிகளிலும் கடமை புரிவதனால் சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்களை அரசாங்கம், நம்பிக்கைப் பொறுப்புக்கள், ஓய்வூதிய நலத் திட்டங்கள் மற்றும் பிற நிறுவனங்களின் சார்பில் வைத்திருக்க அல்லது வழங்க முன்வருகின்றது. வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான நம்பிக்கைப் பொறுப்பு நடவடிக்கைகள் பின்வருமாறு:

**அ)** வங்கியானது, இலங்கை அரசாங்கத்தின் சார்பில், வெளிநாட்டு நிதி உதவியின் கீழான அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் கடன் முறைகளின் கீழ் கிடைக்கும் பல்வேறு வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் கொடைகளின் பகிர்வையும் மீள்செலுத்துதலையும் கையாள்கின்றது. மேலும், பல்வேறு வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் கொடைகளின் கீழ் இணைக்கிணை நிதியத்தினை இலங்கை அரசாங்கத்தின் சார்பில் பெற்று அத்தகைய நிதிகளை வழங்கும் முகவராண்மைகளது வேண்டுகோளின்படி திறைசேரி உண்டியல்களில் முதலிடுகின்றது.

**ஆ)** வங்கியே ஊழியர் சேம நிதியத்தின் கட்டுக்காப்பாளர் ஆகும். இச் சட்டத்தின்படி பங்களிப்புக்கள் மற்றும் மிகைக் கட்டணங்களை சேகரித்தல், முதலீடுகளிலிருந்து வருமானமீட்டல், ஊழியர் சேம நியதித்தில் பதிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களது முறையான கணக்குகளைப் பேணி வருதல், மிகையான நிதிகளை முதலீடு செய்தல், அங்கத்தவர்களுக்கு நலக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல் நாணயச் சபையின் செயற்பாடுகளில் அடங்கும்.

**இ)** மத்திய வங்கியினால் உரிமம் வழங்கப்பட்ட வங்கியியல் நிறுவனங்களிற்கும், 1972ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் வங்கித்தொழிலை மேற்கொள்ளும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஏற்படையதான தன்னார்வ வைப்புக் காப்புறுதித் திட்டமாக விளங்கும் வைப்புக் காப்புறுதித் திட்டத்தினை வங்கியே நிருவகிப்பதுடன் 2010 ஒத்தோபர் 01ஆம் நாள் தொடக்கம் நிதிகள், 2010 செத்தெம்பர் 28ஆம் நாளிடப்பட்ட 1673/11 இலக்க அரச வர்த்தமானியின்படி உருவாக்கப்பட்ட இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்திற்கு மாற்றீடு செய்யப்பட்டுள்ளது.

**ஈ)** 2010 செத்தெம்பர் 28ம் நாளிடப்பட்ட 1673/11 இலக்க அரச வர்த்தமானியின்படி வங்கி 2010 ஒத்தோபர் 01 ஆம் நாள் தொடக்கம் இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம் என்ற பெயரில் வைப்பாளர்களின் நிதியினைப் பாதுகாக்கும் தேசிய நல நடவடிக்கையொன்றாக கட்டாய வைப்புக் காப்புறுதித் திட்டமொன்றினை ஏற்படுத்தியது.

அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் என்பன இத்திட்டத்தின் அங்கத்தவர்களாக இருத்தல் வேண்டும். இதன்படி 77 நிறுவனங்கள் இத்திட்டத்தின் உறுப்பினர்களாகவுள்ளனர். காப்புறுதி செய்யப்படவுள்ள வைப்புக்கள் மேலே சொல்லப்பட்ட அரச வர்த்தமானி அறிவித்தல் 5.2 இன்படி விசேட விலக்கல்களுடன் காப்புறுதி செய்யப்பட்ட அனைத்துக் கடன்பாட்டுக் கருவிகளும் நீங்கலான அங்கத்துவ நிறுவனங்களின் கேள்வி, தவணை மற்றும் சேமிப்பு வைப்புப் பொறுப்புக்களை உள்ளடக்கும். வைப்புக் காப்புறுதி நிதியமானது, சுய விருப்பு வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் முதலீடான ரூ.350.20 மில்லியன் மாற்றல் மற்றும் கைவிடப்பட்ட சொத்தாக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிலிருந்து சேகரிக்கப்பட்டவற்றிலிருந்து செய்யப்பட்ட ரூ.1,168.31 மில்லியன் மாற்றல்களின் மூலமும் உருவாக்கப்பட்டது. 2015 திசெம்பர் 31இல் நிதியத்தின் அளவு ரூ.25.40 பில்லியனாகவும் (தற்காலிகமானவை) தற்பொழுது, வைப்பாளரொருவருக்கு, நிறுவனமொன்றுக்கு கொடுபடத்தக்க இழப்பீட்டுத்தொகை ரூ.0.3 மில்லியனுக்கு அல்லது வெளிநாட்டு நாணய வைப்புக்களாக இருக்குமிடத்து அதற்குச்சமனான தொகைக்கு மட்டுப்படுத்தப்படல் வேண்டும். இழப்பீட்டுக் கொடுப்பனவிற்கு நாணயச் சபையோ அல்லது இலங்கை மத்திய வங்கியோ பொறுப்பேற்கமாட்டாது என்பதுடன் ஏதேனும் அனுமதிக்கப்பட்ட கடன்பாடுகள் மற்றும் பெறப்பட்ட உதவுதொகைகள் உட்பட வைப்புக் காப்புறுதி நிதியத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியம் அல்லது ஒதுக்கப்பட்ட நிதியத்திற்கு ஏற்றவாறு மட்டுப்படுத்தப்படும். நிதியத்தில் செலவு வைக்கப்பட்டுள்ள தொகைக்கு மேலதிக ஏதாவது பொறுப்பு காணப்படுமானால் நாணயச் சபையோ இலங்கை மத்திய வங்கியோ பொறுப்பேற்க மாட்டாது.

வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தில் நிறுவப்பட்டுள்ள வைப்புக் காப்புறுதிப் பிரிவு நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டவாறான பணிப்புரைகள்/ஒழுங்குவிதிகள் மற்றும் கொள்கைகளின் நியதிகளுக்கிணங்க வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரின் அறிவுறுத்தல்கள் மற்றும் மேற்பார்வையின் கீழ் இப்பிரிவு, இத்திட்டத்தின் தொழிற்பாடுகளுக்கும் முகாமைத்துவத்திற்கும் பொறுப்பாக இருப்பதுடன் வங்கியின் நிதியியல் கூற்றுக்களிலிருந்தும் தனித்தனியாக ஏடுகளையும், கணக்குகளையும் பேணல் வேண்டும். அத்துடன் கணக்காய்வாளர் நாயகம் இப்பிரிவின் கணக்காய்வாளராக இருத்தல் வேண்டும்.

2013 நவெம்பர் 22 ஆம் திகதியிலிருந்து இத்திட்டம் “இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித்திட்டம்” என மீளப்பெயரிடப்பட்டதுடன் வைப்பு காப்புறுதித் திட்டம் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித்திட்டம்” என மீளப்பெயரிடப்பட்டது.

**உ)** நாணயச் சபையினால் பொறுப்பளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ், பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் விடயத்தில் வங்கியானது ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேற்பார்வைத் தொழிற்பாடுகள் மற்றும் தொடர்புடைய விடயங்களைக் மேற்கொள்கின்றது. இத் தொழிற்பாடுகளை நிறைவேற்றும் அதேவேளையில் தவறும் நிதிக் கம்பனிகள் சார்பாக வேறுபட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகின்றதுடன் கடன் தீராற்றலற்ற முறிவு நிலைக்குப் பொறுப்பாகவுள்ள ஆட்களினுடைய சொத்துக்களை கையகப்படுத்தல் உட்பட பிணையத்தின் ஒரு வடிவமாக நாணயச் சபையைக் கொண்டு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

**ஊ)** வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட சுற்றறிக்கையின்படி, வேளாண்மைக்கான குறைந்தபட்ச முற்பணமான 10 சதவீதம் வரையறையினைப் பேணாத வங்கிகள், மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும் மீள்நிதியிடல் நிதியத்திற்கு அப்பாற்றாக்குறையினை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டன. பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், இலங்கை வங்கி, மக்கள் வங்கி, பிரதேச சங்வர்த்தன வங்கி மற்றும் லங்கா புத்திர அபிவிருத்தி வங்கி என்பனவற்றினூடாகத் திரட்டப்பட்ட அத்தகைய தொகையை விஸ்கம் மீள்நிதியிடல் திட்டத்தின் கீழ் வேளாண்மைக்கு மீள்நிதியிடலாக வழங்கியது. 2015 திசெம்பர் 31இல் வெளிநின்ற மொத்த சேகரிப்பு ரூ.40.11 மில்லியனாக (2014 - 188.93 மில்லியன்) காணப்பட்டது. 2015 திசெம்பர் 31இல் மீள்நிதியிடல் திட்டத்தின் கீழ் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் ரூ.200.45 மில்லியனைக் கடனாக வழங்கியதுடன், (2014 - ரூ.367.78) வழங்கப்பட்ட கடன்களுக்கான வட்டியாக ரூ.90.82 மில்லியனைப் பெற்றுக் கொண்டது. மேலும், முதலீட்டிலிருந்து ரூ.188.18 மில்லியனை (2014 - 188.18 மில்லியன்) உழைத்துக் கொண்டது.

## 49. நம்பிக்கை மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் (தொடர்ச்சி)

**எ. பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், வங்கியின் நாணயச் சபையின் சார்பில் இலங்கை அரசாங்கம் மற்றும் வெளிநாட்டுக் கொடையாளர்களின் நிதியிடல் செயற்றிட்டங்கள் தொடர்பாக, இலங்கை அரசாங்கத்தின் பிரத்தியேக முகவராகத் தொழிற்படுகிறது. இலங்கை மத்திய வங்கியினால் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களையும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் நடைமுறைப்படுத்துகிறது.**

முடிவடைந்த செயற்றிட்டங்கள்

| செயற்றிட்டத்தின் பெயர் | நிதியத்தின் மொத்த ஒதுக்கு (மில்.) | | கடனின் நோக்கம் | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களுக்கு வழங்கப்பட்ட மீள் நிதியம் (ரூ. மில்.) | அடிப்படைப் பண்புகள் | உத்தர வாதங்கள் மற்றும் காப்பீடுகள் | பொதுவான நிபந்தனைகள் | சிறப்பு நிபந்தனைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம் | ஐ.அ.டொலர் | 24.50 | தேயிலை சிறு உடமையாளர் வருமானத்தினை அதிகரித்தல் மற்றும் செயற்றிட்டப் பிரதேசங்களில் இயற்கைச் சூழலை மேம்படுத்துதல் | 2,550.90 | திறைசேரி துணைச் செயலாளருக்கு மாற்றல் செய்வதற்காக அட்டவணை யிடப்பட்ட நாளன்று பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களிட மிருந்து அறவீடுகளைச் சேகரித்தல் | | | |
| இரண்டாவது நீண்ட காலப் பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டம் | சிஎஉ | 11.56 | நீண்ட கால பயிர் துறையினை வர்த்தகப்படுத்தல், உற்பத்தியை அதிகரித்தல், நாற்றுமேடை அபிவிருத்தி, அறுவடைக்குப் பின்னரான கையாளல், பதனிடல் மற்றும் சந்தைப்படுத்தல் | 1,453.11 | | | | |
| பெருந்தோட்டத்துறை சீர்திருத்த செயற்றிட்டம் | ஐ.அ.டொலர் | 40.00 | உற்பத்தித்திறனையும் இலாபத் தன்மையினையும் அதிகரிப்பதற்காக பெருந்தோட்டத் துணைத் துறையில் கொள்கை மற்றும் நிறுவன ரீதியான சீர்திருத்தங்களுக்கு உதவியளித்தல் மற்றும் இலங்கையின் பெருந்தோட்டத் தொழில் துறையில் போட்டி அநுகூலங்களைப் பேணுதல் | 5,200.00 | | | | |
| சுசகன நிதி மற்றும் குத்தகைக் கம்பனி | இல.ரு | 352.69 | சுனாமியினால் பாதிக்கப்பட்ட தொழில் முயற்சிகளை மீளத் தொடங்குவதற்கான கடன் வசதிகள் | 351.06 | | | | |
| சிறிய வியாபாரங்களை மீள எழுச்சிப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் | இல.ரு | 2,656.00 | சுனாமியினால் பாதிக்கப்பட்ட சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளை மீளத் தொடங்குவதற்கான கடன் வசதிகள் | 2,663.40 | | | | |
| சிறிய வியாபாரங்களை மீள் எழுச்சிப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் - சுழலும் நிதியம் | இல.ரு | 150.00 | சுனாமியினால் பாதிக்கப்பட்ட சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளை மீளத் தொடங்குவதற்கான கடன் வசதிகள் | 122.72 | | | | |
| தேர்ச்சி அபிவிருத்தி செயற்றிட்டம் | இல.ரு | 94.31 | உயர்தர தொழிற்படையை உருவாக்குவதற்காகவும் தேர்ச்சி பொருத்தப்பாடின்மையை நீக்குவதற்காகவும் தேர்ச்சிப் பயிற்சியின் தரம் மற்றும் பொருத்தப்பாட்டை மேம்படுத்தல் | 94.59 | | | | |
| நகர சுற்றாடல் உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டம் | ஐ.அ.டொலர் | 4.00 | நகரத்திலும் நகர்ப் புறங்களிலும் வசிக்கும் மக்களின் சூழல் வசதிகள், நலம் மற்றும் சுகாதார நிலைமைகளை மேம்படுத்துதல் | 369.15 | | | | |
| வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமான வீடமைப்பு புகலிடச் செயற்றிட்டம் | ஐ.அ.டொலர் | 25.00 | நாட்டிலுள்ள குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு வீடுகளைக் கட்ட, புதுப்பிக்க, வாழிடங்களை விரிவாக்க உதவுதல் | 1,362.00 | | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நகர அபிவிருத்தி குறைந்த வருமான வீடமைப்புச் செயற்றிட்டம் | சிஎஉ | 15.10 | வீடமைப்பினை முன்னேற்றுவதற்காக குறைந்த வருமான குடியிருப்பாளர்களுக்கு மூலதனத்தினை வழங்குதல் | 1,915.76 | | | | |
| வடமேல் மாகாண நீர் மூலவள அபிவிருத்திச் செயற்றிட்டம் | ஐ.அ.டொலர் | 1.80 | செயற்றிட்டப் பிரதேசத்தில் வசிக்கும் மக்களின் பொருளாதார, சமூக, ஊட்டச்சத்து நலனோம்புகைகளை மேம்படுத்துதல் | 102.76 | | | | |
| மாத்தளை பிரதேச பொருளாதார மேம்பாட்டுச் செயற்றிட்டம் | சிஎஉ | 2.00 | சிறிய தொழில் முயற்சியாளர்களின் வருமானத்தினை நிரந்தரமாக உயர்த்துதல் மற்றும் வலுப்படுத்தல் | 249.06 | | | | |
| மத்திய மலைநாட்டு நீண்ட கால பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டம் | சிஎஉ | 11.56 | மத்திய மலைநாட்டுப் பகுதியில் நீண்ட காலப் பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்க கடன் வசதி வழங்குதல் | 642.00 | | | | |
| வேளாண்மை புத்தாக்க செயற்றிட்டம் | சிஎஉ | 17.05 | வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் ஐந்து எல்லை மாவட்டங்களிலுமுள்ள சிவில் குழப்பங்களினால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்விற்கும் சொத்துக்களின் புனரமைப்பிற்கும் உதவுதல் | 843.00 | | | | |
| சிறுஉடமையாளர் தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம் | ஐ.அ.டொலர் | 12.60 | சிறு உடமையாளர் தேயிலை துறையினை அபிவிருத்தி செய்யதல் மற்றும் தேயிலைக்கான வசதிகளை புனரமைத்தல் | 645.93 | | | | |
| வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் | யென் | 1,368.00 | வருமான உருவாக்க நடவடிக்கைகளுக்காக வழமையான கொடுகடன் வழிப்படுத்தல்களை மேற்கொள்வதற்காக காத்திரமான கொடுகடன் வழங்கல் பொறிமுறை யொன்றினை ஏற்படுத்துதல் | 1,402.45 | | | | |
| சிறு வேளாண்மையாளர் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம் | ஐ.அ.டொலர் | 17.40 | குறைந்த வருமானம் பெறும் மக்களிடையே தொழில் உருவாக்கத்தினையும் சேமிப்புப் பழக்கத்தினையும் மேம்படுத்தலும் செலவுச் சிக்கனமானதும் உறுதியானதுமான நுண்பாக கொடுகடன் விநியோக முறைமையை நிறுவுதலும் | 345.69 | | | | |
| கேகாலை ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் | சிஎஉ | 1.50 | வருமானத்தை உருவாக்கும் நடவடிக்கைகளினை மேம்படுத்துவதன் மூலம் செயற்றிட்டப் பிரதேசங்களிலுள்ள மக்களின் வாழக்கை நிலைமைகளைத் தரமுயர்த்துதல் | 148.00 | | | | |
| தென் மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் | சிஎஉ | 27.90 | தென் மாகாணத்திலுள்ள மக்களின் வாழக்கைத் தரத்தினை மேம்படுத்துதல் | 564.00 | | | | |
| ஐரோப்பிய முதலீட்டு வங்கியின் ஒப்பந்தம் பீ | யூரோ | 10.00 | சுனாமியால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளை மீளக் கட்டியெழுப்புதல் | 1,553.27 | | | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுசகன | இல.ரு | 3,000.00 | சுனாமியினால் பாதிக்கப்பட்ட நுண்பாக சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளை மீளத் தொடங்குவதற்கு கொடுகடன் வசதிகளை வழங்குதல் | 2,750.00 | நிதித் திணைக்களத்திற்கு மாற்றல் செய்வதற்காக அட்டவணை யிடப்பட்ட திகதியின்படி பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களிடமிருந்து அறவீடுகளைச் சேகரித்தல் | | | | |
| சுசகன கட்டம் II | இல.ரு | 500.00 | சுனாமியினால் பாதிக்கப்பட்ட நுண்பாக சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளை மீளத் தொடங்குவதற்கு கொடுகடன் வசதிகளை வழங்குதல் | 105.54 | | | | | |
| வடக்கின் எழுச்சி | இல.ரு | 2,000.00 | வட மாகாணத்தில் வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, நுண்பாக மற்றும் சிறிய தொழில்முயற்சிகளுக்கு கொடுகடன் வசதிகளை விரிவாக்குதல் | 2,000.00 | அட்டவணை யிடப்பட்ட திகதியின்படி பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களிடமிருந்து அறவீடுகளைச் சேகரித்தல் மற்றும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் தொடர்பான கணக்குகளுக்கு மாற்றல் செய்தல் | | | | |
| கிழக்கு மாகாணத்தின் பொருளாதாரச் செயற்பாடுகளை மீளமைத்தல் கடன் திட்டம் | இல.ரு | 1,000.00 | கிழக்கு மாகாணத்தில் சிறிய மற்றும் நடுத்தரளவு துறைகளின் நடவடிக்கைகளுக்கு கடன்களை வழங்குதல் | 1,000.00 | | | | | |
| இரண்டாவது நீண்ட காலப் பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | இல.ரு | 1,200.00 | நாட்டின் நீண்ட காலப் பயிர்த் துறையை அபிவிருத்தி செய்வதற்காக கொடுகடன் வசதிகளை வழங்குதல் | 1,199,82 | | | | | |
| மாத்தளை பிரதேச பொருளாதார மேம்பாட்டுச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | இல.ரு | 77.00 | மாத்தளை மாவட்டத்தில் கிராமிய மற்றும் பண்ணைக் குடும்பங்களின் வருமானத்தினை உயர்த்துவதற்கும் பண்ணையல்லாத தொழில்முயற்சிகளை உருவாக்குவதற்காக நடுத்தரளவு தொழில் முயற்சியாளர்களுக்கு நிதியங்களை வழங்குவதற்கும் அத்துடன் ஏற்கனவேயிருக்கும் செயற்றிட்டங்களை விரிவாக்குவதற்கும் | 77.00 | | | | | |
| சப்பிரகமுவா மாகாண ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | இல.ரு | 100.00 | சப்பிரகமுவா மாகாணத்தில் புதிய வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் | 100.00 | | | | | |
| கட்டுமானத் துறை அபிவிருத்திச் செயற்றிட்டம் | யூரோ | 9.00 | சுனாமிக்குப் பின்னைய மீள்கட்டுமானங்களில் கட்டுமானம் மற்றும் பொதுப் பணிகளில் வினைத்திறனுடன் பங்கேற்பதற்காக தனியார் உள்நாட்டு வியாபாரங்களின் நிதியியல் மற்றும் தொழில்நுட்ப இயலுமைகளை உறுதிப்படுத்துதல் | 1,399.73 | | | | | |
| சப்பிரகமுவா மாகாண ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் - கட்டம் II | இல.ரு | 70.00 | சப்பிரகமுவா மாகாணத்தில் புதிய வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் | 70.00 | | | | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுனாமிக்குப் பின்னைய கரையோர மூலவள முகாமைத்துவச் செயற்றிட்டம் | சிஎஉ | 2.09 | சுனாமி அனர்த்தத்தினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட சமூகங்கள் அவர்களுடைய சொத்துக்களை மீளப்பெறுவதற்கும் அவர்களுடைய வழமையான பொருளாதார நடவடிக்கைகளுக்கான அடித்தளத்தை மீளக்கட்டியெழுப்பும் அதேநேரம் புதிய இலாபமுள்ள வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளுக்கு பன்முகப்படுத்துவதற்கும் உதவி வழங்குதல் | 190.77 | | | | | |
| விஸ்கம் (வேளாண்மைத் துறை அபிவிருத்திக்கான சிறப்புக் கடன் திட்டம்) | இல.ரூ | 1,325.60 | நாட்டில் வர்த்தக வேளாண் வியாபாரத்தின் முதலீடு, பன்முகப்படுத்தல் மற்றும் முன்னேற்றத்திற்கான கொடுகடனின் கிடைப்பனவினை உறுதிப்படுத்தல் | 881.00 | பங்களிக்கும் வங்கிகளால் கட்டாய தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்படும் போது நிதியங்கள் திருப்பி அளிக்கப்படும் | | | | |
| மாகாண அபிவிருத்தி கொடுகடன் திட்டம் | இல.ரூ | 2,900.00 | நாட்டில் சிறிய நடுத்தர தொழில்முயற்சியின் துறையில் நடுத்தர மற்றும் நீண்ட கால செயற்றிட்டங்களுக்கு கொடுகடன் வசதிகளை வழங்குதல் | 2,900.00 | நிதித் திணைக்களத்திற்கு மாற்றல் செய்வதற்காக அட்டவணை யிடப்பட்ட திகதியின்படி பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களிடமிருந்து அறவீடுகளைச் சேகரித்தல் | | | | |
| வரண்ட வலய வாழ்வாதார உதவி மற்றும் பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் | இல.ரூ | 252.95 | அநுராதபுரம், மொனராகலை, குருணாகல் மற்றும் பதுளை மாவட்டங்களில் வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளுக்கு வசதிகளை வழங்குதல் | 252.95 | | | | | |
| கிழக்கு மாகாணத்தின் பொருளாதாரச் செயற்பாடுகளை மீளமைத்தல் கடன் திட்டம் - கட்டம் II | இல.ரூ | 1,078.27 | கிழக்கு மாகாணத்தில் வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, நுண்பாக மற்றும் சிறிய தொழில்முயற்சிகளுக்கு கொடுகடன் வசதிகளை விரிவாக்குதல் | 1,000.00 | | | | | |
| கிழக்கு மாகாணத்தின் பொருளாதாரச் செயற்பாடுகளை மீளமைத்தல் கடன் திட்டம் - கட்டம் III | இல.ரூ | 1,000.00 | கிழக்கு மாகாணத்தில் வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, நுண்பாக மற்றும் சிறிய தொழில்முயற்சிகளுக்கு கொடுகடன் வசதிகளை விரிவாக்குதல் | 1,428.47 | | | | | |
| வடக்கு மற்றும் கிழக்கில் சேதடைந்த வீடுகளைத் திருத்துதல் | இல.ரூ | 600.00 | வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் போரின் போது சேதமடைந்த வீடுகளைத் திருத்துவதற்கான கொடுகடன் வசதிகளை வழங்குதல் | 600.00 | | | | | |
| தேசிய வேளாண் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | ஐ.அ.டொலர் | 32.90 | சந்தை/ பெறுமதிச் சங்கிலித் தொடர் அபிவிருத்தியில் நன்மைபெறுநர்களின் வருமானத்தினை அதிகரிப்பதன் மூலம் சிறு உடமை உற்பத்தியாளர்கள் மற்றும் நிலமற்றோரின் குறிப்பாக இளைஞர்களுக்கு உதவியளிப்பதற்கும் தமது வருமானத்தினை மேம்படுத்தும் விதத்தில் தொழில்பெறும் விதத்தில் நிதியினையும் பயிற்சியையும் வழங்குவதற்கும் | 113.13 | | | | | |

நடைபெற்று வரும் செயற்றிட்டங்கள்

| செயற்றிட்டத்தின் பெயர் | நிதியத்தின் மொத்த ஒதுக்கு (மில்.) | | கடனின் நோக்கம் | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களுக்கு வழங்கப்பட்ட மீள் நிதியம் (ரூ. மில்.) | அடிப்படைப் பண்புகள் | உத்தர வாதங்கள் மற்றும் காப்பீடுகள் | பொதுவான நிபந்தனை | சிறப்பு நிபந்தனை |
|---|---|---|---|---|---|---|---|---|
| தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | இல.ரு | 1,100.00 | நாட்டின் தேயிலைத் துறையை அபிவிருத்தி செய்வதற்காக கொடுகடன் வசதிகளை வழங்குதல் | 947.00 | | உத்தரவாதமோ காப்பீடோ இல்லை | நிதியில் கூற்றுக்கள் வெளிக் கணக்காய் வாளரால் கணக்காய்வு செய்யப்பட வேண்டும் | தொடர்பான அனைத்துத் தரப்பின ரினதும் உடன்படிக் கையில்லா மல் உடன் படிக்கையின் உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் மாற்றப் படவோ திருத்தப் படவோ இரத்துச் செய்யப் படவோ மாட்டாது |
| சிறிய பெருந்தோட்டத் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி செயற்றிட்டம் | சிஎஉ | 2.60 | மொனராகலை, கண்டி, கேகாலை மற்றும் நுவரெலியா ஆகிய இடங்களிலுள்ள குறைந்த வருமானம் பெறும் சமூகத்தினரின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல் | 424.50 | | | | |
| வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் II (பிரபோதினி) | யென் | 2,381.00 | செயற்றிட்ட அமைவிடத்தில் மாத வருமானம் ரூ.15,000 இற்கும் குறைவாகக் கொண்ட குடியிருப்பாளர் அலகுகளின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல் | 3,213.20 | | | | |
| வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் II (பிரபோதினி) - சுழலும் நிதி II | இல.ரு | 2,764.84 | செயற்றிட்ட அமைவிடத்தில் மாத வருமானம் ரூ.15,000 இற்கும் குறைவாகக் கொண்ட குடியிருப்பாளர் அலகுகளின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல் | 4,079.90 | | | | |
| சுய வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு முயற்சிக் கடன் திட்டம் | இல.ரு | 250.00 | நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட தொழில் பயிற்சி நிறுவனத்தில் சித்தியடைந்து பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு சுய வேலை வாய்ப்புச் செயற்றிட்டங்களை தொடங்குவதற்கு நிதியியல் உதவிகளை வழங்குதல் | 232.39 | | | | |
| சிறிய வேளாண்மையாளர்கள், நிலமற்றோர் கொடுகடன் திட்டம் - சுழலும் நிதியம் | இல.ரு | 345.69 | சிறு வேளாண்மையாளர்கள் மற்றும் சிறு அளவு வேளாண்மையல்லா கிராமிய தொழில்முயற்சி நிறுவனங்களினாலும் வேளாண்மை உற்பத்தியை செறிவுபடுத்துவதற்கு ஊக்குவித்தல் | 1,475.35 | அட்டவணை யிடப்பட்ட திகதியின்படி பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களிடமிருந்து அறவீடுகளைச் சேகரித்தல் மற்றும் செயற்றிட்டம் முடிவடைகையில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் தொடர்பான கணக்குகளுக்கு மாற்றல் செய்தல் | | | |
| வரண்ட வலய வாழ்வாதார உதவி மற்றும் பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் - சுழலும் நிதியம் | இல.ரு | 252.95 | அநுராதபுரம், மொனராகலை, குருணாகல் மற்றும் பதுளை மாவட்டங்களில் வருமானமீட்டும் நடவடிக்கைகளுக்கு வசதியளித்தல் | 250.34 | | | | |
| வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | இல.ரு | 1,031.28 | குறைந்த வருமானக் குடும்பங்களின் பொருளாதார நிலைமைகளை உறுதிப்படுத்துதல் | 3,426.23 | | | | |
| சௌபாக்கிய | இல.ரு | 14,124.00 | நுண்பாக சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சிகள் மற்றும் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட நுண்பாக சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்கு கொடுகடன் வழங்குதல் | 14,124.00 | | | | |
| வடக்கின் எழுச்சி - கட்டம் II | இல.ரு | 2,154.25 | வட மாகாணத்தில் வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, நுண்பாக மற்றும் சிறிய தொழில்முயற்சிகளுக்கு கொடுகடன் வசதிகளை விரிவாக்குதல் | 2,361.00 | | | | |

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், கட்டுப்பாடு நடவடிக்கைகளின் கீழ் வைத்திருந்த மிகை நிதியங்களை மீள்கொள்வனவுகள் முதலீடுகளில் முதலீடு செய்கின்றது. 2015 திசெம்பர் 31இல் உள்ளவாறான, ரூ.1.40 பில்லியன் பெறுமதி கொண்ட மீள்கொள்வனவுகள் பிணைகள் அற்றவையெனக் கண்டறியப்பட்டது. இந்நிதியானது வேறுபட்ட திட்டங்கள் மற்றும் செயற்றிட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியங்களின் மூலம் இத்திணைக்களத்தால் உருவாக்கப்பட்டதாகும். இந்நிதிகளின் மூலம் செய்ய வேண்டிய உடனடி மீள் கொடுப்பனவுகள் எதுவும் இருக்கவில்லை. இம்முதலீடுகளை மீளப்பெற முடியாவிட்டால், இது திணைக்களத்தின் எதிர்காலச் செயற்பாடுகளையும் மற்றும் நடைமுறையிலுள்ள செயற்றிட்டங்களின் விரிவாக்கத்தையும் பாதிக்கும். மேலும், புதிய செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாது. இம் முதலீடுகளை மீளப் அறவிட முடியாவிட்டால், இது நிதி மூலத்தை அதற்குச் சமனான தொகையால் குறைக்கும்.

## 50. ஏனைய நிறுவனங்களிலுள்ள நலவுரித்துக்கள்

பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்பட்ட கடன் திட்டங்களான சுசகன, சுசகன கட்டம் II, மாகாண ரீதியான அபிவிருத்திக் கடன் திட்டம், சௌபாக்கியா கடன்திட்டம், வடக்கின் எழுச்சி கடன்திட்டம் (கட்டம் II), கிழக்கு மாகாணத்தின் பொருளாதாரச் செயற்பாடுகளை மீளமைத்தல் (கட்டம் II) மற்றும் வடக்குக்கிழக்கிலுள்ள சேதமடைந்த வீடுகளை திருத்துதல் என்பனவற்றிற்கு வங்கியினால் நிதியிடப்பட்டதுடன் மீதிமூலதனமும் வரவேண்டிய வட்டியும் வங்கியின் சொத்துக்களாக பதியப்பட்டதுடன் வருமானம் வங்கியின் வருமானமாக எடுத்துக்கொள்ளப்பட்டது.

வங்கியின் நிருவாகச் செலவுகளை ஈடுசெய்வதற்காக, இலங்கை அரசாங்கத்தினால் நிதியிடப்பட்டு பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும் செயற்றிட்டங்களிலிருந்து குறிப்பிட்ட சதவீத வருமானத்தினை ஈட்டிக் கொண்டது.

பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் தொழிற் படுத்தப்படுகின்ற செயற்றிட்டங்களுக்காக வங்கியினால் வழங்கப்பட்ட கொடுகடன் உத்தரவாதங்களிலிருந்து தோன்றுகின்ற எதிர்பாராத பொறுப்புக்கள் குறிப்பு 48.2இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

## 51. நிதி நிலைமை பற்றிய கூற்றுத் திகதிக்குப் பின்னரான நிகழ்வுகள்

நிதிக் கூற்றுக்களைச் சீர்செய்தல் அல்லது நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டியதாயுள்ள திடமான நிகழ்வுகள் எதுவும் நிதி நிலைமை பற்றிய கூற்றுத் திகதிக்குப் பின்னர் நடைபெறவில்லை.

## 2. வங்கி மேற்பார்வை

வங்கிகளின் தொடர்ச்சியான மேற்பார்வையினையும் பரீட்சிப்புக்களையும் மேற்கொள்வதற்கான குறித்துரைக்கப்பட்ட அதிகாரங்கள் மற்றும் கடமைகளுடன் கூடிய விதத்தில் நாணய விதிச் சட்டத்தின் 28ஆம் பிரிவின் கீழ் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் நிறுவப்பட்டது. மேலும், வங்கித்தொழில் ஒழுங்குவிதிகளும் மேற்பார்வையும் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளின் மூலம் நிருவகிக்கப்படுகின்றன. வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் முக்கிய தொழிற்பாடுகளாக நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட முன்மதியுடைய ஒழுங்குவிதிகள், வழிகாட்டல்கள் மற்றும் ஒப்புதல்கள் போன்றவற்றை தயாரித்து வழங்குதல், உரிமம்பெற்ற வங்கிகளின் தொடர்ச்சியான மேற்பார்வையினையும் காலாந்தரப் பரீட்சிப்புக்களையும் நடாத்துதல் மற்றும் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவ ஆதரவுத் திட்டத்தின் நிருவாகம் என்பன காணப்படுகின்றன. மேலும், திணைக்களம், வங்கித்தொழில் துறையின் விழிப்புணர்வு மற்றும் இயலளவைக் கட்டியெழுப்புதல் போன்றவற்றின் மீதான பல்வேறு ஏனைய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தது. 2015 இறுதியிலுள்ளவாறு, நாணய விதிச் சட்டம் மற்றும் வங்கித்தொழில் சட்டத்தின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை அதிகார வரம்பிற்குள்வருகின்ற வங்கிகள், 25 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளையும் 7 உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளையும் உள்ளடக்கியிருந்தன. இவ்வங்கிகளின் பட்டியல் இணைப்பு II-1இல் தரப்பட்டுள்ளது. 2015 ஆண்டுக் காலப்பகுதியில் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தினால் ஆற்றப்பட்ட முக்கிய தொழிற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள் கீழே தொகுத்துத் தரப்பட்டுள்ளன:

### 2.1 முன்மதியுடைய ஒழுங்குவிதிகள், ஒப்புதல்கள் மற்றும் கொள்கை வடிவமைப்புக்களை வழங்குதல்

#### 2.1.1 முன்மதியுடைய ஒழுங்குவிதிகளையும் வழிகாட்டல்களையும் வழங்கல்

விடுக்கப்பட்ட முன்மதியுடைய ஒழுங்குவிதிகள் இவ்வறிக்கையின் பகுதி IIIஇல் தரப்பட்டுள்ளன. முக்கியமான முன்மதியுடைய ஒழுங்குவிதிகளின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது:

**(அ) பாசல் III திரவத்தன்மை நியமங்களின் கீழ் திரவத்தன்மை காப்பீட்டு வீதம்**

2015 ஏப்பிறல் 1 தொடக்கம், உரிமம்பெற்ற வங்கிகள் 60 சதவீதம் திரவத்தன்மை காப்பீட்டு விகிதத்தினைப் பேணுவதற்கும் 2019 சனவரி 1ஆம் திகதியளவில் படிப்படியான முறையில் 100 சதவீதம்வரை வீதத்தை அதிகரிப்பதற்கும், பாசல் IIIஇல் விதந்துரைக்கப்பட்டவாறு கண்காணிப்பு கருவிகளை பயன்படுத்தி திரவத்தன்மை நிலைமையை கண்காணிப்பதற்கும் வேண்டப்பட்டன.

**(ஆ) ஏற்றுமதியாளர்களுக்கான கடன்களின் அறவீடு**

2014 ஒத்தோபர் 16இல் மீளப்பெறப்பட்ட முன்னைய சுற்றறிக்கைகள், கடன்வசதிகளின் பிந்திய அறவீடுகளுக்கு பொருந்தக்கூடிய அதிகரிக்கப்பட்ட வட்டி வீதங்கள் 1,000 அடிப்படைப் புள்ளிகளிலிருந்து 500 அடிப்படைப் புள்ளிகளுக்கு குறைக்கப்படுகின்ற திருத்தமொன்றுடன் 2015 யூன் 01 இலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் மீள வழங்கப்பட்டன.

**(இ) உந்து ஊர்திகள் தொடர்பான கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம்**

உந்து ஊர்திகள் தொடர்பிலான கடன் வழங்கலிலிருந்து தோன்றுகின்ற வங்கிகளின் மிகையான வெளிப்படுத்தல்களிலிருந்தான சாத்தியமான முறைமை முழுவதுக்குமான இடர்நேர்வினை தடுப்பதற்கான பேரண்ட முன்மதியுடைய வழிமுறையொன்றாக, உந்து ஊர்திகளின் கொள்வனவு அல்லது பயன்பாட்டு நோக்கத்திற்காக வழங்கப்படும் கடன்களின் அதிகபட்சத் தொகைமீது, அத்தகைய ஊர்திகளின் பெறுமதியில் 70 சதவீதமான உச்சஎல்லையை விதித்து 2015 செத்தெம்பர் 14இல் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு ஒரு பணிப்புரை வழங்கப்பட்டதுடன், இப்பணிப்புரை 2015 திசெம்பர் 01 இலிருந்து நடைமுறைக்கிடப்பட்டது.

#### 2.1.2 ஒழுங்குவிதிகளின் மீளாய்வு

2015இல், வங்கி மேற்பார்வைத் திணைக்களமானது கம்பனி நல்லாட்சி, பங்கு உரிமையாண்மை வரையறை, உரிமம்பெற்ற வங்கிகளின் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடு, வேளாண்மை துறைக்கான கட்டாயக் கடன்வழங்கல், வங்கி பணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன்வசதி மற்றும் வங்கிகளின் கணக்காய்வாளர்களை தெரிவு செய்வதற்கான பொருத்தமான தகுதிப் பிரமாணம் என்பவற்றின் மீது வழங்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளை மீளாய்வு செய்வதனை ஆரம்பித்தது. மேலும், குறைந்தபட்ச மூலதன தேவைப்பாடு மற்றும் முடுக்கி விகிதம் போன்ற பாசல் IIIஇன் நடைமுறைக்கிடல் தொடர்பில் வழங்கப்பட்ட ஆலோசனைப்பத்திரம் மீதான வங்கிகளின் கருத்துக்கள் பெறப்பட்டதுடன் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் மூலதன நியமங்களின் நடைமுறைக்கிடலின் தாக்கம் தொடர்பான முன்னேற்பாட்டு மதிப்பீட்டை நடாத்தியது.

#### 2.1.3 நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட அனுமதிகள்

**(அ) கிளைகள் மற்றும் ஏனைய வங்கித்தொழில் பிரிவுகள்**

34 புதிய கிளைகளையும் 1 மாணவர் சேமிப்புப் பிரிவையும் 3 நடமாடும் வங்கித்தொழில் பிரிவுகளைத் திறப்பதற்கும் 99 கிளைகளை வேறு இடங்களில் அமைப்பதற்கும் 240 தன்னியக்கக் கூற்றுப் பொறிகளை நிறுவுவதற்கும் இலங்கையில் யப்பானிய வங்கியொன்றின் பிரதிநிதித்துவ அலுவலகமொன்றை நிறுவுவதற்கும் ஒப்புதல்கள் வழங்கப்பட்டன. புதிய கிளைகளை திறப்பதற்கான ஒப்புதல்கள் தொடர்பான வங்கிகளின் நிதியியல் செயலாற்றம், முன்மொழியப்பட்ட கிளைகளுக்கான நிதியியல் எறிவுகள் மற்றும் பிரதேச செயலகத்தின் வங்கித்தொழில் அடர்த்தி போன்றவற்றினை கருத்திற் கொண்டு வழங்கப்பட்டன. 2015 காலப்பகுதியில், இந்தியாவிலுள்ள பெங்களூர், மியன்மாரில் ஓர் பிரதிநிதித்துவ அலுவலகம் மற்றும் மாலைதீவு குடியரசில் ஒரு துணை வங்கி போன்றவற்றை திறப்பதற்காக 3 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு ஒப்புதல்கள் வழங்கப்பட்டன. 2015இன் இறுதியில் 3,538 கிளைகளும் 3,045 மாணவர் சேமிப்புப் பிரிவுகளும் 2,714 தன்னியக்கக் கூற்றுப் பொறிகளும் தொழிற்பாட்டிலிருந்தன.

**(ஆ) ஏனைய ஒழுங்குமுறைப்படுத்தல் ஒப்புதல்கள்**

டிஎவ்சிசி பாங்க் பிஎல்சி மற்றும் அதன் துணை வங்கியான டிஎவ்சிசி வர்த்தன வங்கி பிஎல்சி என்பனவற்றிற்கான ஒருங்கிணைப்புக்கு ஒப்புதல் வழங்கப்பட்டதுடன் 2015 ஒத்தோபர் 01 இலிருந்து டிஎவ்சிசி பாங்க் பிஎல்சியானது ஓர் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியாக தனது வியாபாரத்தினை நடாத்துவதற்கான புதிய உரிமம் வழங்கப்பட்டது.

மேலும், உயர்ந்தபட்ச தொகையினை விஞ்சும் விதத்திலான கடன் வசதிகளை வழங்குவதற்கான 5 ஒப்புதல்கள், வெளிநாட்டு கடன்பாடுகளுக்கான 2 ஒப்புதல்கள் மற்றும் 6 வங்கிகளுக்கு அடுக்கு II மூலதனத்தின்கீழ் தொகுதிக்கடன்களை கவனத்தில் கொள்வதற்கான அனுமதி என்பவற்றை வங்கி மேற்பார்வைத் திணைக்களம் வழங்கியிருந்தது.

### 2.2 தொடர்ச்சியான மேற்பார்வையினை மேற்கொள்ளல்

(i) வங்கி மேற்பார்வைத் திணைக்களம், வங்கிகளின் நிதியியல் நிலைமைகளை மதிப்பிடுவதற்காகவும் அவசியமான சரிசெய்யும் நடவடிக்கைகளைத் தொடங்கும் பொருட்டு தடையேற்படுத்தும் பிரச்சனைகளுக்கு நேரகாலத்துடன் எச்சரிக்கைவிடுக்கும் சமிக்ஞைகளை அடையாளம் காண்பதற்காகவும் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் வங்கிகளைத் தொடர்ந்தும் மேற்பார்வை செய்தது. தொடர்ச்சியான மேற்பார்வையானது வெப்-இனை

அடிப்படையாகக்கொண்ட பின்நெட்டினூடாக வங்கிகளால் சமர்ப்பிக்கப்பட்ட காலாந்தர நிதியியல் மற்றும் செயலாற்றத் தகவல்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன. நிதியியல் மற்றும் முன்மதியுடைய தகவல்கள் உள்ளடங்கலாக பின்நெட்டினூடாக கிட்டத்தட்ட 27 நியதிக் கூற்றுக்கள் ஒவ்வொரு வங்கிக்காகவும் சமர்ப்பிக்கப்பட்டன. 2015இல், சைபர் தாக்குதலினை அறிக்கையிடுவதற்காக ஒரு புதிய கூற்று முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இச்செயன்முறையானது வங்கிகளுக்கான உள்ளக மேற்பார்வைத் தரமிடலுக்கு உள்ளீடுகளை வழங்கியதுடன், இணங்கிக் கொள்ளப்பட்ட கால இலக்கிற்குள் வங்கிகளின் நியதிச்சட்ட பரீட்சிப்புக்களின்போது அடையாளம் காணப்பட்ட மேற்பார்வைக் கரிசனைகளைத் தீர்ப்பதுதொடர்பான முன்னேற்றங்களையும் கண்காணித்தது. மேலும், மூலதன போதுமாந்தன்மை, குறைந்தபட்ச மூலதன தேவைப்பாடு, திரவத்தன்மை மற்றும் கம்பனி நல்லாட்சி போன்ற விடயங்களிலுள்ள பிரச்சனைகளை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.

(ii) மேலும், சொத்தின் தரம், திரவத்தன்மை, வருவாய்கள், மூலதன போதுமாந்தன்மை மற்றும் வளர்ச்சி போன்றவற்றை உள்ளடக்கும் வங்கித்தொழில் துறையின் செயலாற்றம் தொடர்பான காலாந்தர அறிக்கைகளின் வடிவமைப்புக்களானவை பல்வேறு ஆரோக்கியமற்ற சொத்துக்கள் மற்றும் பொறுப்பு குமிழிகள் மற்றும் திரட்சிகளின் இடர்நேர்வுக்கு வங்கித்தொழில் முறைமை அல்லது குறிப்பிட்டதொரு வங்கி உள்ளாகும் தன்மை போன்ற பேரண்ட முன்மதியுடைய மதிப்பீடுகளை உள்ளடக்குவதற்காக திருத்தப்பட்டன.

### 2.3 காலாந்தர பரீட்சிப்புக்களை நடாத்துதல்

(i) முன்னைய ஆண்டின் தொடர்ச்சியாக இடம்பெற்ற 12 பரீட்சிப்புக்கள் உட்பட 2015ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் 45 பரீட்சிப்புக்களை நடாத்தியது. தொடர்பான வங்கிகளின் முகாமைத்துவத்துடன் இடம்பெற்ற வழமையான கலந்துரையாடல்களின் மூலமாக 2015இல் 30 வங்கிகளின் பரீட்சிப்புக்கள் நிறைவடைந்ததுடன் நாணயச் சபைக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்ட வேளையில் 15 பரீட்சிப்புக்கள் நிறைவடையும் செயற்பாட்டில் இருக்கின்றன. பரீட்சிப்புக்களின்போது எழுந்த முக்கிய கரிசனைகள் குறைந்த வினைத்திறன், கம்பனி நல்லாட்சி தொடர்பான பிரச்சனைகள், முறைமை மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் மற்றும் சட்டரீதியிலான கூற்றுக்களை சமர்ப்பிப்பதிலான குறைபாடுகள் போன்றவற்றை உள்ளடக்கியிருந்தன. மேலும், முன்மதியுடைய தன்மையுடைய குறிப்பிட்ட பிரச்சனைகள் மீது வரையறுக்கப்பட்ட செயற்பரப்புடனான பல பரீட்சிப்புக்கள் நடாத்தப்பட்டதுடன் தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவம், அடிப்படை பாதுகாப்பு நியமங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப முறைமைகள் போன்ற விடயங்களை வலுப்படுத்துவதற்கான விதந்துரைப்புக்கள் வங்கிகளுக்கு தொடர்பூட்டப்பட்டன.

(ii) ஆண்டின் பின்னரைக் காலப்பகுதியில், வங்கி மேற்பார்வைத் திணைக்களம் ஒரு புதிய இடர்நேர்வு அடிப்படையிலான பரீட்சிப்பு/ மேற்பார்வை அணுகுமுறையினை பின்பற்றுவதற்காக ஆராய்ந்தது. இவ்வணுகுமுறையானது வங்கிகளின் நிலைத்திருக்கும் தன்மையின் மீதான இடர்நேர்வுகளை அடையாளம் காணுவதில் கவனம் செலுத்துகின்றது. பரீட்சிப்பு பகுப்பாய்வு மற்றும் அதில் கண்டறியப்பட்ட விடயங்கள் என்பன வினைத்திறன், இடர்நேர்வு குறிகாட்டிகளின் அடிப்படையிலான ஆற்றல்வாய்ந்த தன்மை மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகளின் போதுமாந்தன்மை போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டிருந்தன. மேற்பார்வைக் கரிசனைகளானவை பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் அத்தகைய கரிசனைகளுக்கான சபையின் ஒட்டுமொத்த பொறுப்புகளுடன் பொருத்தமான சபைத் துணைக்குழுக்களுக்கு தொடர்பூட்டப்பட்டன. இந்த அணுகுமுறையானது நீண்ட கால நிலைத்திருக்கும் தன்மையிலான கூடிய கவனத்துடன் அனைத்து வங்கிகளினதும் மேம்பட்ட வினைத்திறன், ஆற்றல்வாய்ந்த தன்மை மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ முறைமை போன்றவற்றினூடாக வங்கித்தொழில் முறைமையின் உறுதிப்பாட்டினை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அணுகுமுறையானது 2015இன் பின்னரைக்காலப்பகுதியில் நடாத்தப்பட்ட பரீசிப்புக்களில் பின்பற்றப்பட்டது.

### 2.4 இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தினை நிருவகித்தல்

(i) 2015 திசெம்பர் 31இல் உள்ளவாறு, திட்டமானது 77 உறுப்பு நிறுவனங்களையும் ஏறத்தாழ ரூ.25 பில்லியன் பெறுமதியான மொத்த நிதியையும் (கணக்காய்வு செய்யப்படாதது) உள்ளடக்கியிருந்தது. நிதியமானது ரூ.18 பில்லியன் அரச பிணையங்களில் முதலிடப்பட்டவற்றையும், திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தின்கீழ் மீள் சீரமைப்பிற்காக ஒரு உறுப்பு நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட ரூ.6 பில்லியன் பெறுமதியான கடன் உள்ளடங்கலாக கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகளையும் கொண்டிருந்தது. உடனடியாக முற்போந்த நிதியாண்டின் இறுதியில் 14 சதவீதம் அல்லது அதற்கு மேலான மூலதனப் போதுமை விகிதத்தைப் பேணிய உரிமம் பெற்ற வங்கிகள் அனைத்துத் தகுதியான வைப்புக்களின் மொத்தத் தொகையின் மீதும் ஆண்டொன்றிற்கு 0.10 சதவீதமான கட்டுப்பணத்தைச் செலுத்துவதற்கு தேவைப்படுத்தப்பட்டதுடன் ஏனைய அனைத்து வங்கிகளுக்கும் ஆண்டொன்றிற்கு 0.125 சதவீதக் கட்டுப்பணம் விதிக்கப்பட்டது. உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு ஏற்புடைத்தான கட்டுப்பணம் ஆண்டொன்றிற்கு 0.15 சதவீதமாக இருந்தது. ஆண்டு காலப்பகுதியில் உறுப்பு நிறுவனங்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட கட்டுப்பணம் மற்றும் தண்டப் பணத்தின் பெறுமதி ரூ.5.6 பில்லியனாக இருந்தது.

(ii) 2015 வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழிவு ஒப்புதலளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, 2015 சனவரி 01 இலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் நிறுவனமொன்றுக்கு வைப்பாளர் ஒருவருக்கான வைப்புக் காப்புறுதிப் பாதுகாப்பின் அளவு ரூ.200,000 இலிருந்து ரூ.300,000 இற்கு அதிகரிக்கப்பட்டது.

**அட்டவணை II-1** இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தின் நிதியியல் தொடர்பான முக்கிய விடயங்கள்

| விடயம் | ரூபா. மில்லியன் | |
|---|---|---|
| | 31.12.2014 இல் உள்ளவாறு | 31.12.2015 இல் உள்ளவாறு* |
| நிதியத்தின் அளவு | 18,549 | 25,419 |
| மொத்த வருமானம் | 6,572 | 7,374 |
| மொத்தச் செலவு | 249 | 504 |
| ஆண்டுக்கான இலாபம் (வரிக்கு முன்னர்) | 6,323 | 6,870 |
| அரச பிணையங்களிலான முதலீடுகள் | 12,562 | 18,123 |
| கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் | 6,009 | 6,227 |
| விற்பனைக்கு கிடைக்கத்தக்க ஒதுக்குகள் | 1,129 | 259 |

* தற்காலிகமானவை

### 2.5 வங்கித்தொழில் துறையின் விழிப்புணர்வு மற்றும் இயலளவைக் கட்டியெழுப்புதல்

**(அ) இயலளவைக் கட்டியெழுப்புதல்**

வங்கி மேற்பார்வைத் திணைக்களமானது கம்பனி நல்லாட்சி, இடர்நேர்வு முகாமைத்துவம், வங்கி பரீட்சிப்பு, திறைசேரி

தொழிற்பாடுகள், நிதியியல் நிறுவனங்களிலான முறைகேடுகள், மற்றும் வங்கித்தொழில் துறை மற்றும் நிதி தொடர்பிலான சட்ட ஒழுங்குகள் போன்ற விடயங்களில் அறிவினை மேம்படுத்துவதன் மூலமாக தொழிற்துறையின் இயலளவை கட்டியெழுப்புவதற்கு அதன் பங்களிப்பை தொடர்ந்தும் வழங்கியது. 2015ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் மூத்த அலுவலர்கள் இலங்கை மத்திய வங்கியின் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம் மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஏனைய வெளிவாரி நிறுவனங்கள் போன்றவற்றின் வளவாளர்களாக கடமையாற்றியிருந்தனர். பாசல் III திரவத்தன்மை நியமங்களின் கீழான திரவத்தன்மை உள்ளடக்க விகிதத்தின் செயல்முறை கணிப்பீடு தொடர்பான அறிவினை பகிர்ந்து கொள்ளும் அமர்வொன்று உரிமம்பெற்ற வங்கிகளின் அலுவலர்களுக்காக ஒழுங்குபடுத்தப்பட்டது.

**(ஆ) வங்கிகளின் முகாமைத்துவத்தினர் மற்றும் கணக்காய்வாளர்களுடனான கூட்டங்கள்**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம் வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுடனான ஆளுநரின் கூட்டங்களுக்கான செயலகமாகத் தொடர்ந்தும் பணியாற்றியதுடன் இது இலங்கைப் பொருளாதார மற்றும் வங்கிதொழில் துறை போன்றவற்றின் அபிவிருத்திகள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை முன்னேற்றங்களுடன் தொடர்புபட்ட விடயங்களில் மத்திய வங்கியும் வங்கித்தொழில் துறையும் கருத்துக்களைப் பகிர்ந்துகொள்வதற்கான அரங்கமாக தொழிற்படுகின்றது. மேலும், முறையான மேற்பார்வை மற்றும் திருத்த நடவடிக்கைகளை உரிய நேரத்தில் நடைமுறைப்படுத்தல் போன்றவற்றை உறுதிப்படுத்துவதற்காக, வங்கி தொடர்பான குறித்துரைக்கப்பட்ட விடயங்களை கலந்துரையாடுவதற்காக வங்கியின் பணிப்பாளர் சபை, மூத்த முகாமைத்துவத்தினர் மற்றும் வெளியக கணக்காய்வாளர்களுடன் பல கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

**(இ) பொதுமக்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்**

2015 காலப்பகுதியில் பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கு மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்ட நிதியியல் நிறுவனங்கள் தொடர்பிலும் தடைசெய்யப்பட்ட திட்டங்களின் ஆபத்துக்கள் தொடர்பில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்துடன் இணைந்து வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தினால் பொதுமக்களுக்கான விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதன்படி, இதன்படி பல செய்தித்தாள்களில் அனைத்து மூன்று மொழிகளிலும் 2 பொதுமக்களுக்கான அறிவித்தல்கள் வெளியிடப்பட்டன. வெளியிடப்பட்டன. மேலும், மூத்த பிரசைகளுக்கான விசேட வட்டிவீத திட்டத்தின் தொழிற்பாட்டு நிபந்தனைகள் தொடர்பில் பொதுமக்களுக்கு தெரியப்படுத்துவதற்காக 2 பத்திரிகை வெளியீடுகள் வெளியிடப்பட்டன.

**(ஈ) வழக்குகளைக் கையாளல்**

2015இன் முன்னரை காலப்பகுதியில், பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கி லிமிடெட்டின் விடயங்கள், செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் தொடர்பான விடயங்கள் மற்றும் தடைசெய்யப்பட்ட திட்டங்கள் தொடர்பிலான விசாரணைகள் உள்ளடங்கலான வழக்காடல்கள் சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் ஏனைய சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் முகவர்களின் உதவியுடன் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தினால் கையாளப்பட்டன. 2015 யூனில் சட்டம் மற்றும் இணங்குவிப்பு திணைக்களம் நிறுவப்பட்டமையுடன் இவ்வழக்குகளின் கையாளல் இலங்கை மத்திய வங்கியின் சட்டம் மற்றும் இணங்குவிப்பு திணைக்களத்திற்கு மாற்றப்பட்டன.

**இணைப்பு II-1 உரிமம் பெற்ற வங்கிகளின் பட்டியல்**

**உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்**

1. அமானா பாங்க் பிஎல்சி
2. அக்சிஸ் பாங்க் லிமிடெட்
3. இலங்கை வங்கி
4. கார்கில்ஸ் பாங் லிமிடெட்
5. சிற்றி பாங்க் என்.ஏ
6. கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
7. டொயிஷ் பாங்க் ஏஜி
8. டிஎவ்சிசி பாங்க் பிஎல்சி
9. ஹபீப் பாங்க் லிமிடெட்
10. அட்டன் நஷனல் பாங்க் பிஎல்சி
11. ஐசிஐசிஐ பாங்க் லிமிடெட்
12. இந்தியன் பாங்க்
13. இந்தியன் ஓவசீஸ் பாங்க்
14. எம்சிபி பாங்க் லிமிடெட்
15. நஷனல் டெவலப்மென்ற் பாங்க் பிஎல்சி
16. நேஷன்ஸ் ரஸ்ட் பாங்க் பிஎல்சி
17. பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் பிஎல்சி
18. மக்கள் வங்கி
19. பப்ளிக் பாங்க் பெர்காட்
20. சம்பத் பாங்க் பிஎல்சி
21. செலான் பாங்க் பிஎல்சி
22. ஸ்ரான்டட் சார்ட்டட் பாங்க்
23. ஸ்ரேற் பாங்க் ஒவ் இந்தியா
24. த ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பரேசன் லிமிடெட்
25. யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி

**உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்**

26. இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
27. லங்காபுத்ர டெவலப்மென்ற் பாங்க் லிமிடெட்
28. தேசிய சேமிப்பு வங்கி
29. பிரதேசிய சங்வர்த்தன பாங்க்
30. சணச டெவலப்மென்ற் பாங்க் பிஎல்சி
31. சிறிலங்கா சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
32. அரச ஈட்டு முதலீட்டு வங்கி

### 3. வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம்

இலங்கை மத்திய வங்கியின் பயிற்சிக்கான ஒரு மையமான வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையத்திடம் குறிப்பாக நிதியியல் துறை ஆர்வலர்களின் இயலாற்றலினை கட்டியெழுப்புவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள், ஆய்வரங்குகள் மற்றும் செயலமர்வுகளை வடிவமைத்து நடத்துகின்ற பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. 2015ஆம் ஆண்டில் வங்கித்தொழில் கற்கைகள் ஆய்வுநிலையத்தின் கவனமானது அதன் நிகழ்ச்சித்திட்டங்களின் தரம் மற்றும் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலைய உட்கட்டமைப்பு வசதிகள் போன்ற நியதிகளில் ஓர் உயர்ந்த மட்டத்தில் உயர்த்துவதன் மீது குவிந்திருந்தது. மத்திய வங்கி, வர்த்தக வங்கிகள், நிதியியல் துறை, அரச நிறுவனங்களிலிருந்தான பங்குபற்றுநர்களும் பொதுமக்களும் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையத்தினால் நடத்தப்பட்ட உள்நாட்டு அதேபோல் வெளிநாட்டு நிகழ்ச்சித்திட்டங்களினால் பயனடைந்தனர்.

நிதியியல் நிறுவனங்களின் மைய நடவடிக்கைகள் மற்றும் துணைப் பணிகள் ஆகியன தொடர்பில் அவற்றின் பயிற்சித் தேவைகளை பூர்த்திசெய்யும் நோக்குடன் 2015இல், வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம் வங்கித்தொழில் தொழிற்பாடுகள் மற்றும்

ஒழுங்குவிதிகள், நிதியியல் முகாமைத்துவம், பொருளாதாரம், கிராமியத் துறை அபிவிருத்தி, மனிதவளம் மற்றும் பொது முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம், மொழிகள் மற்றும் தொடர்பூட்டல் தேர்ச்சி ஆகிய துறைகளில் பரந்தளவு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது. 2015ஆம் ஆண்டுப் பகுதியில், 70 கலண்டர் நிகழ்ச்சித்திட்டங்கள், 35 சிறப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் (பல்வேறு நிறுவனங்களிலிருந்து எழுந்த கேள்வி அடிப்படையில்), 07 டிப்ளோமா மற்றும் சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டங்கள், 04 பன்னாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடங்கலாக மொத்தம் 116 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது. அறிவுமிக்க பொருளாதாரத்தினை உருவாக்கும் நோக்குடன், நாட்டின் நிதியியல் மற்றும் பொருளாதார அறிவினை மேம்படுத்தும் சமூகப் பொறுப்புடன் இணங்கிச்செல்லும் விதத்தில், 2015இல், அறிவினைப் பகிர்ந்து கொள்ளும் நிகழ்வுகளாக 7 பகிரங்க விரிவுரைகள், 3 பல்கலைக்கழக மாணவர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் 13 மாணவர்கள் மற்றும் பொருளியல் ஆசிரியர்களுக்கான பாடசாலை நிகழ்ச்சித்திட்டங்கள் என்பனவும் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையத்தினால் நடாத்தப்பட்டன. இந்நிகழ்வுகளில் 115 வெளிநாட்டுப் பங்கேற்பாளர்கள் உட்பட மொத்தமாக 4,838 பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர். அதேவேளை, சிங்கள மற்றும் தமிழ் மொழிமூலமான உயர்தர பொருளியல் மாணவர்களை இலக்காகக் கொண்டு முறையே "தக்சிலாவ" மற்றும் "அறிவூற்று" என்று தலைப்பிடப்பட்ட 2 தொலைக்காட்சித் தொடர்கள் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையத்தின் அதிகாரவரம்பின் கீழ் 2015இல் ஒளிபரப்பப்பட்டன.

ஆண்டுக் காலப்பகுதியில், வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம், மத்திய வங்கியின் மாகாண அலுவலகங்கள், பிரதேச அலுவலகங்கள் கண்காணிப்புத் திணைக்களம் மற்றும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் பிரதேச மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டங்களைத் தொடர்ச்சியாக நடாத்தியது. 2015ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், மைய வங்கித்தொழில் நடவடிக்கைகளிலிருந்து துணைப் பணிகள் வரையான விடயப் பரப்புக்களை உள்ளடக்கி மொத்தமாக 9 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

நடுத்தர காலத்தில் இலங்கை மற்றும் எல்லைகளுக்கு அப்பாலும் சிறந்த அறிவினை பகிரும் மிகச் சிறந்த நிலையமாக வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையத்தினை உருவாக்கும் நோக்குடன், 2015இன் பிற்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பயிற்சித் தேவைப்பாட்டு அளவீட்டில் கண்டறியப்பட்ட முடிவுகளை உள்ளடக்கும் விதத்தில் 2016ஆம் ஆண்டிற்கான அதன் கலண்டர் நிகழ்ச்சித் திட்டத்தினை 2015 இறுதியில் வடிவமைத்தது.

## 4. தொடர்பூட்டல்

வெளிவாரித் தொடர்பூட்டல் மற்றும் உள்ளூர் தொடர்பூட்டல் அணுகுமுறைகள், பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நூலகமும் தகவல்மையமும் போன்றவழிகளில், மத்திய வங்கியின் ஆர்வலர்களுக்கு தகவல்பரப்புதலினூடாக 2015 காலப்பகுதியில் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும் வகையில் வகையபொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டை பேணுதல் மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை பேணுதல் போன்ற மத்திய வங்கியின் பணிக்கான தொடர்ச்சியான பங்களிப்பை வழங்கியது.

### வெளிவாரித் தொடர்பூட்டல்

வங்கியின் கம்பனி வெப்தளமான www.cbsl.gov.lk ஆனது பிரதான தொடர்பூட்டல் நுழைவாயிலாக காணப்பட்டதுடன் மத்திய வங்கியின் செயற்பாடுகள் மீதான தகவல் மூலம் என்ற வகையில் அதன் பிரபல்யமானது கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் உள்ளவாறு, விஜயங்களின் எண்ணிக்கை 2014இனை விட 2015இல் 67 சதவீதத்தால் அதிகரித்ததன் மூலம் சான்றுபடுத்தப்பட்டுள்ளது. மின்னஞ்சல் அலேட் முறைமை மற்றும் குறுஞ்செய்தி அலேட் முறைமை போன்றவற்றுக்கான வாடிக்கையாளர்களும் அதிகரித்தனர்.

**அட்டவணை II-2 வெளியகத் தொடர்பூட்டல்களின் விபரங்கள்**

| ஊடக வகை | 2014 | 2015 |
|---|---|---|
| இ.ம.வ வெப்தள விஜயம் | 89.6 மில்லியன் | 145.18 மில்லியன் |
| முகநூல் | 567 பதிவுகள் | 524 பதிவுகள் |
| டுவிட்டர் | 567 டுவிடுகள் | 524 டுவிடுகள் |
| யூ ரியூப் | 51 காணொளிகள் | 33 காணொளிகள் |
| மின்னஞ்சல் அலேட் முறைமை வாடிக்கையாளர்கள் | 1,800 (ஆண்டின் இறுதியில்) | 2,392 (ஆண்டின் இறுதியில்) |
| குறுஞ்செய்தி அலேட் முறைமை வாடிக்கையாளர் | 913 | 1,073 |

2015 காலப்பகுதியில், தொடர்பூட்டல் திணைக்களமானது 1,529 பத்திரிகை வெளியீடுகள் (நாணக் கொள்கை மீளாய்வு, வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம், பணவீக்கம் போன்ற 187 முக்கிய வெளியீடுகள் உள்ளடங்கலாக), 23 வர்த்தமானி அறிவித்தல்கள் மற்றும் 100 அறிவித்தல்கள் (விளம்பரங்கள் உள்ளடங்கலாக) போன்றவற்றை வழங்கியதன் மூலம் அதன் கிரமமான பாரம்பரிய தொடர்பூட்டலினை மேற்கொண்டது.

2015 காலப்பகுதியில், வங்கியுடன் தொடர்புடைய பல்வேறு முக்கிய கொள்கை விடயங்கள் தொடர்பாக ஒன்பது ஊடக மாநாடுகள் நடாத்தப்பட்டன. மேலதிகமாக, இலங்கை மத்திய வங்கி குண்டுவெடிப்பில் பாதிக்கப்பட்டவர்களின் 19ஆவது நினைவு, இந்திய ஒதுக்கு வங்கியின் ஆளுநர் முனைவர் ரகுராம் ராஜன் அவர்களின் "உலகலாவிய நிதியியல் முறைமையும் அவற்றுக்கான ஒழுங்குவிதிகளும்" எனும் தலைப்பிலான இலங்கை மத்திய வங்கியின் 65வது ஆண்டு நிறைவு சொற்பொழிவு போன்ற நிகழ்வுகளுக்கு வசதியளித்தது.

தொடர்பூட்டல் திணைக்களமானது 2015இல் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த பன்னாட்டு மாநாடு மண்டபத்தில் நடைபெற்ற "கொழும்பு பன்னாட்டு புத்தகக் கண்காட்சி" எனும் தேசிய மட்ட நிகழ்ச்சியில் வங்கியினை பிரதிநிதித்துவப்படுத்தியது.

### உள்ளக தொடர்பூட்டல்

தகவல் தொழில்நுட்ப திணைக்களத்தின் புதிய உள்ளக இணையத்தளமான "மன்சல" (கருத்து: இணைத்தல், ஒத்துழைத்தல், தொடர்பூட்டல்) முழுமையான செயற்பாட்டிற்கு வந்த வேளையில் தொடர்பூட்டல் திணைக்களத்தால் தொழிற்படுத்தப்பட்ட உள்ளக இணையத்தளமான "cbsl daily" தொழிற்பாடுகளை நிறுத்தியது. ஆண்டுக் காலப்பகுதியில் வங்கியின் அலுவல்சார் உள்ளக செய்திமடலான "கவுளுவ" (கருத்து யன்னல்)இன் மூன்று தொகுதிகள் வெளியிடப்பட்டன. பொருளாதாரம் தொடர்பான நடப்பு விடயங்கள் மற்றும் வங்கி தொடர்பான விடயங்கள் பற்றி மூத்த முகாமைத்துவத்திற்கு உடனுக்குடன் தெரியப்படுத்தும் நோக்குடன் மும்மொழிகளிலும் வெளியிடப்பட்ட பதினைந்து தேசிய தாளிலிருந்தும் சேகரிக்கப்பட்ட 3,692 செய்தி நறுக்குகள், கட்டுரைகள் மற்றும் பொதுமக்களின் கருத்துக்கள் என்பனவற்றை ஊடகக் கண்காணிப்பு பிரிவு 2015இல் சமர்ப்பித்தது.

### பொதுமக்கள் விழிப்புணர்வு

பொருளாதார மற்றும் நிதியியல் அறிவு தொடர்பாக பொதுமக்களின் விழிப்புணர்வினை பரப்பும் முயற்சிக்கு வசதியளிப்பது தொடர்பூட்டல் திணைக்களத்தின் உயர் முன்னுரிமைப்படுத்தல் விடயங்களில் ஒன்றாக காணப்படுகிறது. பிரசித்தி பெற்ற தொலைக்காட்சிச் சேவை ஒன்றின் மூலம் பாடசாலைகளுக்கிடையிலான வினா விடை போட்டிச் செயற்றிட்டமொன்றினை மேற்கொள்வதன் ஒரு பகுதியாக பாடசாலைகளைத் தெரிவுசெய்வதற்கான எழுத்துப் பரீட்சையில் நாட்டின் முழு மாவட்டங்களிலிருந்தான 317 சிங்கள மொழி மூலமும் 204 தமிழ் மொழி மூலமான பாடசாலைகள் பங்குபற்றியமை "இகோன் ஐகோன் கட்டம் 3" நிகழ்ச்சித்திட்டம் 1 இன் பிரதானமானதொரு

அம்சமாகக் காணப்பட்டது. மேலும் தொடர்பூட்டல் திணைக்களமானது கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டவாறு, 3,668 பங்குபற்றுனர்களுக்காக 56 கல்வி மற்றும் விழிப்புணர்வு செயற்றிட்டங்களை ஒருங்கிணைத்த வேளையில் இலங்கை மத்திய வங்கியின் தலைமை அலுவலகத்திற்கு அப்பால் 14 செயற்றிட்டங்களை ஒருங்கிணைத்திருந்தது.

அட்டவணை II-3 2015 இல் நடாத்தப்பட்ட பொதுமக்கள் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சிகளின் விபரங்கள்

| நிறுவனம் | செயற்றிட்டங்களின் எண்ணிக்கை | பங்குபற்றுனர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| பாடசாலைகள் | 44 | 3136 |
| பல்கலைக்கழகங்கள் | 2 | 230 |
| இலங்கை ஆயுதப் படைகள் மற்றும் பாதுகாப்பு பல்கலைக்கழகம் | 3 | 138 |
| வெளிநாட்டு பங்கேற்பினர்கள் (தேசிய பாதுகாப்பு கல்லூரி) | 3 | 56 |
| தூதுவர்கள் மற்றும் வெளிநாட்டுச் சேவை அலுவலர்கள் | 2 | 57 |
| பாடசாலை ஆசிரியர்கள் | 2 | 51 |
| மொத்தம் | 56 | 3668 |

தொடர்பூட்டல் திணைக்களமானது, பொருளாதார ஆராய்ச்சி திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட 3 கல்விச் செயற்றிட்டங்களுக்கு வசதியளித்ததுடன், இலங்கை மத்திய வங்கியின் வங்கித்தொழில் கற்கைகள் ஆய்வுநிலையத்தினால் மேற்கொள்ளப்பட்ட அறிவூற்று தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக வளவாளர்களையும் வழங்கியது. ஆண்டுக் காலப்பகுதியில் தொடர்பூட்டல் திணைக்களமானது ரூ.5.54 மில்லியன் பெறுமதியான மத்திய வங்கியின் வெளியீடுகளின் விற்பனையை கையாண்டதுடன் 21,909 பல்வேறு வெளியீடுகளின் பிரதிகளை பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு இலவசமாக வழங்கியது.

### தமிழ் மொழிபெயர்ப்புப் பணிகள்

பத்திரிகை வெளியீடுகள் உள்ளடங்கலாக இலங்கை மத்திய வங்கியின் அனைத்து முக்கிய வெளியீடுகளை தமிழ் மொழியில் வெளியிடுவதற்கு இயலச்செய்தமையின் மூலம், தமிழ் மொழிபெயர்ப்பு பிரிவானது தகவல்களை மும்மொழியிலும் சமமாக வழங்குவது எனும் திணைக்களத்தின் பணிக்கு தனது பங்களிப்பை வழங்கியது.

### வங்கியின் முக்கிய நிகழ்வுகளை புகைப்படமெடுக்கும் வசதிகள்

புகைப்படம் எடுக்கும் பிரிவானது நிழற்படம் மற்றும் கட்புல காட்சிகளிலான காட்சி உள்ளடங்கலினூடாக மத்திய வங்கியினை வர்ணமயமாக உலகிற்கு வெளிப்படுத்துவதனை நோக்காகக் கொண்டிருந்தது. இப்பிரிவானது வங்கியின் 145 நிகழ்ச்சிகளுக்கு பணி வழங்கியதுடன் தொகுத்தல், அச்சிடல் மற்றும் புகைப்படங்களுக்கு சட்டமிடுதல், கட்புலக்காட்சிகளின் தொகுப்பு, அல்பங்கள் மற்றும் இறுவட்டுக்களை தயாரித்தல் போன்ற அனைத்துத் தொடர்பான பணிகளையும் வழங்கியதன் மூலம் உயர் தொழில்சார் நிபுணத்துவத் தரத்தினை பேணியது.

### அச்சகம்

2015 காலப்பகுதியில் அச்சகத்தினால் 467 எண்ணிக்கையிலான அச்சிடல் ஒப்படைகள் பொறுப்பேற்கப்பட்டிருந்தன. இவ் ஒப்படைகள், "நியூ சேவை", "சட்டகன", "புலட்டின்", "சென்தேவ", "மாகாண செய்திகள்" போன்ற காலாந்தர வெளியீடுகளையும் "நிதி உளவறிதல் பிரிவு ஆண்டறிக்கை (2013 மற்றும் 2014)", "இலங்கை மத்திய வங்கியின் உதவி ஆளுநர் திரு.பி. சமரசிறி அவர்களின் ஆர்திக விட்யா மூலதர்ம அன்ட் பிரதிபட்தி" , இலங்கை மத்திய வங்கியின் உதவி ஆளுநர் திரு.சி.பி.எ. கருணாதிலக அவர்களின் "பொருளியல் கோட்பாட்டுக்கோர் அறிமுகம்", உயர் அலுவலர் ஆய்வுத் தொகுதி 44 இல.1 மற்றும் 2, பன்னாட்டு ஆராய்ச்சி மாநாட்டுக்கான நூல்கள் மற்றும் வங்கியின் 65வது ஆண்டு நிறைவு சொற்பொழிவு நூல் போன்ற நூல்களையும் உள்ளடக்கியிருந்தன. மேலும், வங்கியின் பல்வேறு படிவங்கள், காகிதாதிகள் போன்றவற்றையும் அச்சிட்டு வழங்கியது.

### நூலகமும் தகவல்நிலையமும்

நூலகமும் தகவல் நிலையமும், 29,498 நூல்கள், 18,819 அறிக்கைகள், 1,935 இறுவட்டுக்கள் மற்றும் 40,000ற்கும் அதிகமான சஞ்சிகை வெளியீடுகள் போன்ற சேகரிப்புக்களுடன் வங்கி அலுவலர்களுக்கும் அதேபோன்று அனுமதிக்கப்பட்ட வெளிவாரியான பாவனையாளர்களுக்கும் அதன் பணிகளை வழங்கியது. பொருளாதாரம், முகாமைத்துவம் மற்றும் நிதியியல் போன்ற தகவல்களின் பரந்தளவான அறிவினை வழங்கும் "சயன்ஸ் டிரெக்ட்" மற்றும் "ஈகோன்லிட்" போன்ற இரண்டு இணைய வழி அதேநேர தரவுத் தளங்களுக்கான சந்தாத்தொகையை நூலகம் மற்றும் தகவல் நிலையம் தொடர்ந்தும் செலுத்தியது. மேலும், மத்திய வங்கித்தொழில் நடவடிக்கைகளுடன் தொடர்பான விடயங்களில் தகவல்களைப் பெறுவதற்காக நூலகமும் தகவல்நிலையமும் மேலும் பல இணையவழி அதேநேர தரவுத் தளங்களுக்குச் சந்தாக்களைச் செலுத்தியது.

நூலகம் மற்றும் தகவல் நிலையத்தால் சந்தா செலுத்தப்பட்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சஞ்சிகைகளின் மொத்த எண்ணிக்கையானது முறையே 96 மற்றும் 25 ஆக காணப்பட்டது. நூலகம் மற்றும் தகவல்நிலையமானது அண்மையில் புதிதாக சேர்க்கப்பட்டவை (அதாவது புதிய நூல்கள்), நடைமுறை விடயங்களின் உள்ளடக்கம், பன்னாட்டுச் செய்தி அலேட், தொடர்புடைய விடயங்களிலான பொருளாதாரம், வங்கியியல் மற்றும் நிதியியல் மீதான உள்ளூர் பத்திரிகை அறிக்கைகள் போன்ற இலத்திரனியல் வெளியீடுகளைத் தொகுப்பதனை தொடர்ந்து மேற்கொண்டதுடன் அவற்றை உள்ளக இணையமூடாகப் பரப்பியது. தெரிந்தெடுக்கப்பட்ட தகவல் பணிகளை பரப்பும் பணிகளும் பேணப்பட்டன.

நூலகம் மற்றும் தகவல் நிலையமானது இலங்கையின் பொருளாதார மற்றும் வங்கித்தொழில் நூலக வலையமைப்பான "Ebanklibnetsl" இனை மின்னஞ்சல் மூலம் தகவல்களைப் பரப்புவதனூடாக, நாட்டிலுள்ள 24 அங்கத்துவ நூலகங்களுக்கு பெறுமதிமிக்கப் பணிகளை வழங்கியது. மேலும், மூலவளங்களையும் அனுபவங்களையும் உலகளாவிய மத்திய வங்கிகளுக்கிடையில் பகிர்ந்து கொண்டதனூடாக, நூலகம் மற்றும் தகவல்நிலையமானது உலகளாவிய மத்திய வங்கி மற்றும் நிதியியல் நிறுவனங்களின் நூலக மற்றும் தகவல் தொழில்சார் நிபுணத்துவ வலையமைப்பில் (CBFA பட்டியல்) ஒரு செயற்படும் அங்கத்தவர் என்ற நிலையைப் பெற்றுக்கொண்டது. நூலகத்தின் உள்ளக இணையத்தளத்தினூடாக வங்கி அலுவலர்கள் இலத்திரனியல் நூலக சேவையினை அணுகுவதற்கான வசதியை வழங்கியதன் மூலம் தொடர்ந்தும் பேணப்பட்டது.

## 5. நாணயம்

1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டம், இலங்கையில் சட்ட ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நாணயத்தினை வெளியிடுகின்ற ஏக உரிமையினையும் அதிகாரத்தினையும் நாணயச் சபையிடம் ஒப்படைத்திருக்கிறது. இலங்கை மத்திய வங்கியின் நாணயத் திணைக்களம் நாணயச் சபையிடம் சட்ட ரீதியாக ஒப்படைக்கப்பட்ட இப்பொறுப்புக்கள் தொடர்பான தொழிற்பாடுகளைக் கையாள்கிறது. நாணயத் திணைக்களம் பொதுமக்களின் கேள்வியைப் பூர்த்திசெய்வதற்காக நாணயத் தாள்களை அச்சிடல், நாணயக் குத்திகளை வார்த்தல், நாணயத் தாள்களையும் குத்திகளையும் வெளியிடுதல், உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிலிருந்து நாணய வைப்புக்களை ஏற்றுக்கொள்ளுதல், பொருத்தமற்ற நாணயத் தாள்களையும் குத்திகளையும் சுற்றோட்டத்திலிருந்து புறக்கீடு செய்தல், சட்ட ரீதியான நாணயம் என்ற ரீதியில் நாணய விதிச் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறும் சந்தர்ப்பங்களில் அதனைக் கையாள சட்டத்தினை நடைமுறைப்படுத்துபவர்களுக்கு உதவுதல் மற்றும் தரத்தினைப் பேணும் விதத்தில் நாணயத்தினை சரியாகப் பயன்படுத்துவது தொடர்பில்

பொதுமக்களின் அறிவினை உயர்த்துவதற்காக பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் ஆகியவற்றுடன் தொடர்பான முக்கியமான பணிகளை மேற்கொண்டது.

### 5.1 நாணய வெளியீடு

#### (அ) சுற்றோட்டத்திலுள்ள நாணயம்

2015ஆம் ஆண்டுப் பகுதியில் நாணயத் திணைக்களம் நாட்டிலுள்ள நாணயத்திற்கான கேள்வியை ஈடுசெய்யும் விதத்தில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் நாணயத் தொழிற்பாடுகளினூடாக புதிய நாணயத் தாள்களையும் குத்திகளையும் வெளியிடுவதன் மூலமும் பொருத்தமான நாணயத் தாள்களையும் (பயன்படுத்தக்கூடியவை) குத்திகளையும் மீளவழங்குவதன் மூலமும் நாணயத் தாள்களையும் குத்திகளையும் சுற்றோட்டத்திற்கு வெளியிடுகின்றது. இதன்படி, அட்டவணை II-4இல் தரப்பட்டுள்ளவாறு 2015.12.31இல் சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் பெறுமதி ரூ.491.1 பில்லியனாக அமைந்து 2014.12.31 இனைவிட 18 சதவீத அதிகரிப்பினைப் பதிவுசெய்தது.

**அட்டவணை II-4 சுற்றோட்டத்திலுள்ள நாணயங்கள் (ஆண்டு இறுதியிலுள்ளவாறு)**

| விடயம் | பெறுமதி (ரூ. பில்.) | | | | | சதவீத மாற்றம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
| தாள்கள் | 287.1 | 311.2 | 332.4 | 408.8 | 482.0 | 14.8 | 8.4 | 6.8 | 23.0 | 17.9 |
| குத்திகள்* | 5.6 | 6.3 | 6.8 | 7.5 | 9.1 | 8.9 | 13.5 | 7.5 | 10.7 | 21.3 |
| **மொத்தம்** | **292.7** | **317.5** | **339.2** | **416.3** | **491.1** | **14.7** | **8.5** | **6.8** | **22.7** | **18.0** |

(*ஞாபகார்த்த நாணயக் குத்திகள் நீங்கலாக)

#### (ஆ) உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினூடாக நாணய வெளியீடு

2015ஆம் ஆண்டுப் பகுதியில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினூடாக நாணயத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட நாணயத் தாள்களும் குத்திகளும் முறையே ரூ.503.4 பில்லியனாகவும் ரூ.1.6 பில்லியனாகவும் காணப்பட்டன (அட்டவணை II-5).

**அட்டவணை II-5 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட நாணயத் தாள்கள் மற்றும் குத்திகள்**

| விடயம் | பெறுமதி (ரூ. பில்.) | | | சதவீத மாற்றம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 2013 | 2014 | 2015 | 2013 | 2014 | 2015 |
| தாள்கள் | 401.9 | 431.8 | 503.4 | 13.1 | 7.4 | 16.6 |
| குத்திகள் | 0.5 | 0.8 | 1.6 | (27.7) | 41.1 | 112.8 |
| **மொத்தம்** | **402.4** | **432.6** | **505.0** | **13.0** | **7.5** | **16.7** |

2015ஆம் ஆண்டுப் பகுதியில் நாணயக் குத்திகளின் பற்றாக்குறை தொடர்பான பொதுமக்களின் கரிசனைகளைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, கூடுதலான நாணயக் குத்திகளைச் சுற்றோட்டத்திற்கு விடுவதற்கு நாணயத் திணைக்களம் பல்வேறு வழிமுறைகளையும் மேற்கொண்டது. இதன்படி, இலங்கை வங்கியின் புறக்கோட்டைக் கிளையிலுள்ள பொதுமக்களுக்கான கருமபீடத்தினூடாகவும் ஏனைய உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினூடாகவும் வழங்கப்பட்ட நாணயக் குத்திகள் இவ்வாண்டுப் பகுதியில் அதிகரித்ததுடன் மக்கள் வங்கியின் கிளை வலையமைப்பினூடாக தீவு முழுவதும் பொதுமக்களுக்கு நாணயத் தாள்களையும் குத்திகளையும் வழங்குவதற்கு ஏற்றவிதத்தில் அவ்வங்கியுடனான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது. இதன் விளைவாக, 2015இல் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு நாணயத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட நாணயக் குத்திகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 112.8 சதவீதத்தினால் அதிகரித்தன.

#### (இ) உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிலிருந்து நாணய வைப்புக்களை ஏற்றுக்கொள்ளுதல்

நாணயத் தொழிற்பாடுகளில், நாணயத் திணைக்களம் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிலிருந்து, முக்கியமாக, இலங்கை மத்திய வங்கியினால் விதிக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகளைப் பேணுவதற்காக நாணய வைப்புக்களை ஏற்றுக்கொள்கிறது. வைப்புக்கள் முக்கியமாக அட்டவணை II-6இல் தரப்பட்டுள்ளவாறு பயன்படுத்தத்தக்க (பொருத்தமானவை) மற்றும் பயன்படுத்த முடியாத (பொருத்தமற்றவை) என இரண்டு வடிவங்களிலும் காணப்பட்டன. 2015இல் நாணயத் திணைக்களத்துடனான உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் நாணய வைப்புக்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 21.1 சதவீதத்தினால் அதிகரித்தன.

**அட்டவணை II-6 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் வைப்புச் செய்யப்பட்ட நாணயம்**

| விடயம் | பெறுமதி (ரூ. பில்.) | | | சதவீத மாற்றம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 2013 | 2014 | 2015 | 2013 | 2014 | 2015 |
| தாள்கள் | 381.0 | 354.7 | 429.6 | 15.0 | (6.9) | 21.1 |

குறிப்பு: உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் இலங்கை மத்திய வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட நாணயக் குத்திகளின் பெறுமதி குறிப்பிடத்தக்களவானவையல்ல. உதாரணமாக: 2015ஆம் ஆண்டுப் பகுதியில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் வைப்புச் செய்யப்பட்ட நாணயக் குத்திகளின் மொத்தப் பெறுமதி ரூ.266,000 மட்டுமே.

#### (ஈ) தூய நாணயத்தாள் கொள்கை

உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் வைப்புச் செய்யப்பட்ட பயன்படுத்த முடியாத நாணயத் தாள்கள் அழிக்கப்பட்ட வேளையில் பயன்படுத்தத்தக்க நாணயத் தாள்கள் சுற்றோட்டத்திற்கு மீளவிடப்பட்டன. 2015இல் நாணயத் திணைக்களம் ரூ.16.46 பில்லியன் முகப்புப் பெறுமதியினைக் கொண்ட 115.68 மில்லியன் பயன்படுத்த முடியாத நாணயத் தாள்களை அழித்தது.

நாணயத் தாள்களின் பயனுறு ஆயுட்காலத்தினை நீடிப்பதற்காகவும் நாணயத் தாள்களை அச்சிடும் செலவுகளைக் குறைப்பதற்காகவும் உண்மையான நாணயத் தாள்களை அடையாளம் காணும் விதத்தில் பாதுகாப்புப் பண்புகள் தெளிவாக புலனாகக்கூடிய தன்மையினை உறுதிப்படுத்துவதற்காகவும் இலகுவான செயன்முறை மற்றும் நாட்டுமக்களின் கௌரவமிக்கத் தோற்றப்பாட்டினை உருவாக்குவதற்காகவும் நாணயத் திணைக்களம் சிறந்த நாணயக் கையாளல் நடைமுறைகளை ஊக்குவித்தது. இதன்படி, நாணய பிரித்தெடுத்தல் மற்றும் கையாளல் பயிற்சிகள் மற்றும் வினைத்திறன்மிக்க நாணய முகாமைத்துவத் தொழிற்பாடுகளுக்கான தடைகள் என்பன தொடர்பிலான பிரச்சனைகளைக் கலந்துரையாடுவதற்காக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் காசு முகாமையாளர்களுடன் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

#### (உ) நாணயப் பரிமாற்றல் பீடம்

நாணயத் திணைக்களம் பொதுமக்கள் விரும்புகின்ற நாணய இனங்களை அவர்களுடன் பரிமாறிக்கொள்ளும் நோக்கத்திற்காக இலங்கை வங்கியின் புறக்கோட்டைக் கிளையில் நாணயப் பரிமாற்றல் பீடமொன்றிற்குத் தொடர்ந்தும் வசதியளித்தது. 2015ஆம் ஆண்டுப் பகுதியில் ரூ.1,645.3 மில்லியன் பெறுமதியான நாணயத் தாள்களும் ரூ.275.6 மில்லியன் பெறுமதியான நாணயக் குத்திகளும் இப்பீடத்தினூடாக பரிமாறிக் கொள்ளப்பட்டன.

#### (ஊ) ஞாபகார்த்த நாணயக் குத்திகளின் வெளியீடு

2015ஆம் ஆண்டுப் பகுதியில் நாணயத் திணைக்களம் நான்கு ஞாபகார்த்த நாணயக் குத்திகளை வெளியிட்டது. இவை, சிறிமத் அநகாரிக தர்மபாலாவின் 150ஆவது பிறந்த நாள் மற்றும் பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் அவர்களின் இலங்கைக்கான விஜயம் (பாப்பாண்டவரின் விஜயம் 2015) மற்றும் கொழும்பு மாநகர சபையின் 150ஆவது ஆண்டு நிறைவு என்பனவற்றின் ஞாபகார்த்தத்தினைக்

குறிக்கும் சுற்றோட்டத்திற்கு உட்படுத்தப்படாத ரூ.500 பெறுமதியான மூன்று நாணயக் குத்திகளையும் இலங்கை வங்கியின் 75ஆவது ஆண்டு நிறைவினைக் குறிக்கும் சுற்றோட்டத்திற்கு உட்படுத்தப்படாத ரூ.5 நாணயக் குத்தியையும் உள்ளடக்குகிறது. மேலும், இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்கள் மற்றும் கொழும்பு பொருளாதார வரலாற்று அரும்பொருட்காட்சிச்சாலை என்பனவற்றினூடாக 62,168 ஞாபகார்த்த சேகரிப்பு விடயங்கள் விற்பனை செய்யப்பட்டன.

### 5.2 நாணய அச்சிடல் மற்றும் வார்த்தல்

பொருளாதாரத்தில் நாணயத் தாள்களுக்கான கேள்வியை ஈடுசெய்யும் பொருட்டும் சுற்றோட்டத்திலுள்ள நாணயத் தாள்களின் தரத்தினை உறுதிப்படுத்தும் விதத்திலும் போதுமானளவு எதிர்பாராத இருப்புக்களை உறுதிப்படுத்தும் பொருட்டும் நாணயத் திணைக்களம் 630 மில்லியன் நாணயத் தாள்களை அச்சிடுவதற்கான ஒழுங்குகளைச் செய்தது. இதற்குப் புறம்பாக 2015இல் 215 மில்லியன் நாணயக் குத்திகளை வார்ப்புச் செய்வதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

### 5.3 முறைமை மேம்படுத்தல்கள்

நாணயத் தொழிற்பாடுகளின் வினைத்திறனை அதிகரிப்பதற்காக, தேவையான பொறிகளையும் கருவிகளையும் கொள்வனவு செய்கின்றமையின் மூலம் தன்னியக்கச் செயற்பாடுகளை அதிகரிப்பதற்கு நாணயத் திணைக்களம் மேலும் வழிமுறைகளை மேற்கொண்டது. பயன்படுத்த முடியாத நாணயத் தாள்களை குறைந்தபட்ச மனித தலையீட்டுடன் அழித்துவிடுவதற்காக முழுமையாக தன்னியக்கப்படுத்தப்பட்ட நாணயத் தாள்களை தூளாக்கிவிடும் பொறியொன்றினைக் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

### 5.4 சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட உதவி

போலி நாணயம் தொடர்பில் நாணய விதிச் சட்டத்தின் ஏற்பாடுகள் மீறப்பட்டுள்ளமை தொடர்பாக சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளுக்கு உதவும் விதத்தில் நாணயத் திணைக்களம் 2015இல் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டது;

(அ) நாணயத் திணைக்களம் போலி நாணயத் தாள்களைத் தயாரிக்கும் முயற்சி தொடர்பில் பொலிஸின் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் போலி நாணயப் பணியகத்துடனும் சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளுடனும் நெருங்கிய விதத்தில் ஒத்துழைத்தது. 2015இல் கண்டுபிடிக்கப்பட்ட போலி நாணயத் தாள்களின் எண்ணிக்கை 6,410 ஆகக் காணப்பட்டது.

(ஆ) நீதிமன்றங்களில் வழக்கு விசாரணைகளுக்கு வசதியளிக்கும் விதத்தில் போலி நாணயத் தாள்களுக்கான முடிவுச் சான்றுகளாக ஆளுநரின் கையொப்பத்துடன் கூடிய 192 சான்றிதழ்கள் புறக்குறிப்பீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டன.

(இ) போலி நாணயத் தாள் வழக்குகளில் சாட்சியமளிப்பதற்காக 15 நீதிமன்ற வழக்குகளில் கலந்து கொண்டது.

### 5.5 பொதுமக்கள் விழிப்புணர்வு

நாணயத் தாள்களின் பாதுகாப்புப் பண்புகள், போலி நாணயத் தாள்களினை இனங்காணல், நாணயத் தாள்கள் மற்றும் குத்திகளினைக் கவனமாகக் கையாள்தல் என்பன தொடர்பில் பொதுமக்கள் மற்றும் அரச அலுவலர்களுக்கு அறிவூட்டும் பொருட்டு நாணயத் திணைக்களம் அதன் பொதுமக்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை கீழே குறிப்பிடப்பட்டவாறு தொடர்ந்தது.

(அ) தூய நாணயத் தாள் கொள்கை மற்றும் நாணயத் தாள்களின் பாதுகாப்புப் பண்புகள் என்பன தொடர்பில் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம், பல்வேறுபட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மற்றும் தேசிய பள்ளிக்கூடங்கள் என்பனவற்றில் 33 ஆய்வரங்குகள்/ செயலமர்வுகளை நடத்தியது.

(ஆ) கொட்டுகொட, பண்டாரவளை, பெலிகல் ஓயா மற்றும் பன்னிப்பிட்டிய ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட நான்கு பொருட்காட்சிகளில் நடமாடும் நாணய அரும்பொருட்காட்சிச்சாலை காட்சிப்படுத்தப்பட்டது.

(இ) மத்திய வங்கியின் மூன்று நாணய அரும்பொருட்காட்சிச்சாலைகளும் முக்கியமாக பள்ளிக்கூடங்கள், சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரை முக்கியமாக உள்ளடக்கிய 13,000 பேரின் விஜயத்திற்கு வசதியளித்ததுடன் தூய நாணயத் தாள் கொள்கை மற்றும் நாணயத் தாள்களை போலியாகத் தயாரிப்பதன் விளைவுகள் போன்றன தொடர்பில் பொதுமக்களுக்கு அறிவூட்டுவதற்காக தகவல் விடயங்களும் துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

### 5.6 நாணயத் தாள்களை மீளத் தயாரிப்பதற்கான ஒப்புதல்கள்

2015ஆம் ஆண்டுப் பகுதியில், விளம்பரங்களில் நாணயத் தாள்கள் மீளத் தயாரிப்பதற்காக, அத்தகைய மீளத் தயாரிப்பதற்கான நாணயச் சபையின் ஒப்புதலளிக்கப்பட்ட கொள்கை நியதிகளுக்கிணங்க மூன்று ஒப்புதல்கள் வழங்கப்பட்டன.

## 6. திணைக்கள மட்டத்திலான பிரதேச அலுவலகங்கள்

நாணய விதிச்சட்டத்தின் 33ஆவது பிரிவின் நியதிகளில் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கி ஐந்து திணைக்கள மட்டத்திலான பிரதேச அலுவலகங்கள் 2015 செத்தெம்பரில் நிறுவப்பட்டன. இத்திணைக்கள மட்டத்திலான பிரதேச அலுவலகங்களை ஏற்படுத்துகையில், மத்திய, சப்பிரகமுவா மற்றும் ஊவா மாகாணங்கள் திணைக்கள மட்டத்திலான பிரதேச அலுவலகம் - மலைநாட்டின்கீழ் கொத்தணி முறையில் இணைக்கப்பட்டன. வசதிகளுக்கான ஏற்பாடு மற்றும் நிருவாக வசதிகள் போன்றவற்றினைக் கருத்திற்கொண்டு இரண்டு திணைக்கள மட்டத்திலான பிரதேச அலுவலகங்களை உருவாக்குவதற்காக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களும் வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களும் கொத்தணி முறையில் இணைக்கப்பட்டன. மேல் மற்றும் தென் மாகாணங்கள் இரு தனித்தனியான திணைக்கள மட்டத்திலான பிரதேச அலுவலகங்களாக உள்ளன.

நாணய விதிச் சட்டத்தின் 7ஆம் பிரிவின் நியதிகளில், வட மாகாணத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் இலங்கை மத்திய வங்கியின் பங்களிப்பினை அதிகரிக்கும் நோக்குடன் கிளிநொச்சியில் புதிய பிரதேச அலுவலகமொன்று அறிவியல் நகரில் 2015 மேயில் நிறுவப்பட்டது. அபிவிருத்தி கொடுகடனை ஊக்குவிக்கும் பொருட்டும் மற்றைய இலங்கை மத்திய வங்கி தொழிற்பாடுகளுக்கு, குறிப்பாக நுவரெலியா மற்றும் பதுளை மாவட்டங்களில் குவிந்துள்ள பெருந்தோட்டத்துறை ஊழியர்களைப் பரிசீலனையில் கொண்டு ஊழியர் சேம நிதியத்துடன் தொடர்பான நடவடிக்கைகளுக்கு வசதியளிக்கும் பொருட்டும் 2016 சனவரியில் இலங்கை மத்திய வங்கி நுவரெலியாவில் பிரதேச அலுவலகமொன்றினைத் திறந்தது. இவ்விரண்டு பிரதேச அலுவலகங்களும் திறக்கப்பட்டமையுடன் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்களின் மொத்த எண்ணிக்கை ஏழிற்கு அதிகரித்தது. மற்றைய ஐந்து பிரதேச அலுவலகங்களும் மாத்தறை, அநுராதபுரம், மாத்தளை, திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலமைந்துள்ளன.

பிரதேச அலுவலகங்களின் மேற்பார்வை அவற்றின் புவியியல் சார்ந்த அமைவிடத்தின் அடிப்படையில் திணைக்கள மட்டத்திலான பிரதேச அலுவலகங்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

### 6.1 அபிவிருத்தியுடன் தொடர்பான நடவடிக்கைகள்

2015இல் மாத்தறை, அநுராதபுரம், மாத்தளை, யாழ்பாணம், திருகோணமலை மற்றும் கிளிநொச்சி ஆகிய இடங்களிலமைந்துள்ள ஆறு பிரதேச அலுவலகங்களும் அவற்றின் அதிகார வரம்பிற்குள்வரும் பிரதேசங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததுடன்

முக்கியமாக சுமுகமானதும் உரிய நேரத்திலானதுமான நிதியியல் உதவிகளை வசதிப்படுத்துதல் மூலம் கொடுகடன், வேளாண்மை, விலங்குவளர்ப்பு மற்றும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறைகளை ஊக்குவித்தல் என்பவற்றின் வசதியளிப்பதன் மூலம் கொடுகடன் வழங்கும் பொறிமுறையின் வினைத்திறனை அதிகரிப்பதன்மீது கவனம் செலுத்தப்பட்டது. பிரதேச அலுவலகங்கள், வர்த்தக வங்கிகள், அபிவிருத்தி கொடுகடன் நிறுவனங்கள் மற்றும் ஏனைய அரச முகவர்கள் ஆகியோருடன் ஒருங்கிணைந்து செயற்பட்டதனூடாக கடன் நன்மைபெறுநர்கள் மற்றும் அபிவிருத்திக் கொடுகடனின் சாத்தியமான கடன்பாட்டாளர்கள் தமது கடன் செயற்றிட்டங்களை செயற்படுத்துவதற்கு அவர்களுக்கு உதவியளித்தது. நிதியியல் அறிவு, தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி, தொழில்நுட்ப முன்னேற்றம் மற்றும் சிறந்த தொழில்முயற்சியாண்மை நடைமுறைகள் ஆகிய துறைகள் தொடர்பிலான அவசியமான அறிவு கடன்பாட்டாளர்களுக்கும் அதேபோன்று அடிமட்ட சனசமூகத்தினை அடிப்படையாகக் கொண்ட அமைப்புக்களின் உறுப்பினர்களுக்கும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களினூடாகவும் செயலமர்வுகளினூடாகவும் வழங்கப்பட்டன. பிரதேச அலுவலகங்கள் சந்தை இணைப்புக்களை ஒழுங்கு செய்தல், வாங்குநர் விற்பவர் கலந்துரையாடல்கள் மற்றும் பண்டிகைக் காலத்தில் வர்த்தகக் கண்காட்சிகள் என்பனவற்றினூடாக இக் கடன்பாட்டாளர்களின் சந்தைப்படுத்தல் முயற்சிகளுக்கும் உதவின. பல்வேறு காரணிகளின் காரணமாக தவணைக்கடன்களை மீளச் செலுத்துவதில் இடர்பாடுகளை எதிர்நோக்கிய கடன்பாட்டாளர்களுக்கு கொடுகடன் ஆலோசனைப் பணிகளும் வழங்கப்பட்டன. இவ்வாண்டுப்பகுதியில், பல்வேறு வசதிப்படுத்தல் பணிகளை வழங்குகின்ற 70 கொடுகடன் பயிற்சிப்பட்டறைகள் 7,138 தொழில் முயற்சியாளர்களுக்கு வழங்கப்பட்டன. தொழில் முயற்சியாளர்களுக்கு நிதிக்கிடைப்பினை ஊக்குவிக்கும் விதத்தில் 1,975 கொடுகடன் இணைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டன. மேலும், நிதியியல் அறிவு, புதிய தொழில்நுட்பங்களை பிரயோகித்தல், சிறந்த நடைமுறைகள் மற்றும் தேர்ச்சி அபிவிருத்தி ஆகிய துறைகளை உள்ளடக்கி ஏறத்தாழ 100 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் இதில் ஏறத்தாழ 5,800 தொழில்முயற்சியாளர்கள் பங்கேற்றனர்.

மாகாண ஆளுநர்கள், மூத்த அரச அலுவலர்கள், மாகாண அரச அதிகாரிகள் மற்றும் அப்பிராந்தியத்திலுள்ள நிதியியல் நிறுவனங்களின் அலுவலர்கள் ஆகியோரின் பங்கேற்புடன் திணைக்கள மட்டத்திலான பிரதேச அலுவலகம் - மலைநாடு மற்றும் திணைக்கள மட்டத்திலான பிரதேச அலுவலகம் - வட மத்திய மாகாணம் மற்றும் வட மேல் மாகாணங்கள் முறையே கண்டியிலும் குருநாகலிலும் இரண்டு கூட்டங்களை நடத்தின. இக்கூட்டங்களின் நோக்கம் யாதெனில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக மாகாணங்களின் நிதியியல் மற்றும் வங்கித் தொழில் தேவைகள் பற்றி கலந்துரையாடுதல் மற்றும் அவற்றை அடையாளம் காணுதல், நிதியியல் வசதிகளைப் பெற்றுக் கொள்வதுடன் தொடர்பான பிரச்சனைகள் மற்றும் மாகாணங்களில் நிதியியல் உள்ளடக்க மட்டத்தினை அதிகரித்தல் என்பனவாகும்.

### 6.2 மத்திய வங்கியின் பிரதேச பிரசன்னத்தினை பிரதிநிதித்துவப்படுத்தல்

தொடர்பான பிரதேசங்களில் இலங்கை மத்திய வங்கியின் பல்வேறுபட்ட நிகழ்ச்சித்திட்டத்தினை மேற்கொள்வதற்கு தீவிரமாக ஆதரவளிப்பதன் மூலம் பிரதேச அலுவலகங்கள் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச பிரசன்னத்தினை பிரதி நிதித்துவப்படுத்துகின்றன. இவ்வாண்டுப் பகுதியில் பிரதேச அலுவலகங்கள் தூய நாணயத்தாள் தொடர்பான நாடளாவிய விழிப்புணர்வினை கட்டியெழுப்புதல், போலி நாணயத்தாள்களை அடையாளம் காணுதல், அதிகாரமளிக்கப்படாத நிதியியல் நிறுவனங்கள், தடை செய்யப்பட்ட திட்டங்கள், அரச பிணையங்கள் சந்தை, செலாவணிக்கட்டுப்பாட்டு ஒழுங்குகள், மற்றும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பனவற்றினை 122 நிகழ்ச்சித்திட்டங்களை உள்ளடக்கிய நடாத்தின. மொத்தமாக 13,010 ஆட்கள் இந்நிகழ்ச்சித்திட்டங்களில் கலந்து கொண்டனர். ஊ.சே. நிதிய உறுப்பினர்களுக்கு உறுப்பினர் பணிகளை வழங்குவதில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டதுடன் இப்பணிகளிலிருந்து 33,679 உறுப்பினர்கள் நன்மையடைந்தனர். மேலும், இவ்வாண்டுப்பகுதியில் தொழில்தருநர்களின் நன்மைகருதியும் அதேபோன்று ஊ.சே.நிதிய உறுப்பினர்களின் நன்மை கருதியும் 12 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் 1,213 பேர் இந்நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கேற்றுக் கொண்டனர். பிரதேச அலுவலகங்கள் இலங்கை மத்திய வங்கியின் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம் இப்பிராந்தியத்தில் 9 பிராந்திய நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்கு உதவியளித்ததுடன் மேல் மாகாணத்திற்கு வெளியேயுள்ள வங்கிக்கிளைகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களைச் சேர்ந்த ஏறத்தாழ 440 அலுவலக உறுப்பினர்கள் இந்நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து நன்மையடைந்தனர்.

## 7. உள்நாட்டுத் தொழிற்பாடுகள்

### 7.1 உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் நடவடிக்கைகள்

நாணய விதிச் சட்டத்தில் குறிப்பிட்டவாறு உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்திடம் பல தொழிற்பாடுகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவையாவன (அ) திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை நடத்துதல் (ஆ) வர்த்தக வங்கிகளின் ஒதுக்குகளை ஒழுங்குமுறைப்படுத்தல் (இ) அரசாங்கம், அரசாங்க முகவர்கள் மற்றும் அரசாங்கத்தின் சார்பில் தொழிற்படுகின்ற ஏனைய நிறுவனங்களின் அலுவல்சார் வைப்பகத்தின் வங்கியாளராகத் தொழிற்படுதல் (ஈ) அரசாங்கத்திற்கு தற்காலிக முற்பணங்களை நெறிப்படுத்தல் (உ) நேரடி வணிகர்கள் மற்றும் நேரடி பங்கேற்பாளர்களுக்கான கணக்குகளைப் பேணுதல் (ஊ) பங்கேற்பாளர்களுக்கு ஒரு நாளுக்குள்ளேயான கொடுகடனினை வழங்குதல் மற்றும் (எ) தேவையான வேளைகளில் வங்கித்தொழில் நிறுவனங்களுடன் கொடுகடன் தொழிற்பாடுகளில் ஈடுபடுதல்.

### 7.2 நாணயக் கொள்கையினை நடைமுறைப்படுத்தல்

துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் என்பனவற்றினால் உருவாக்கப்பட்ட துணைநில் வட்டிவீத வீச்சிற்குள் நாணயச் சபையினால் தீர்மானிக்கப்பட்ட பொருத்தமானதொரு மட்டத்தில் குறுங்கால வட்டி வீதங்களை பேணுவதன் மூலம் திணைக்களம் நாணயக் கொள்கையினை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தியது. இதற்கு குறுங்கால வட்டி வீதங்களின் உறுதித்தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக வங்கிகளுக்கிடையிலான சந்தையின் திரவத்தன்மைக் கிடைப்பனவினை முகாமைப்படுத்தியதன் மூலம் வசதியளிக்கப்பட்டது.

நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தல் நீடித்த விலை உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் குறுங்கால வட்டி வீதங்களில் விரும்பத்தக்க மாற்றங்களை செய்வதுடன் தொடர்புபட்டதாக இருக்கிறது. இந்நோக்கத்திற்காக உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் முக்கிய நாணய தொழிற்பாட்டுக் கருவியான திறந்த சந்தைத் தொழிற்பாடுகளில் தங்கியிருக்கிறது. மேலும், துணைநில் வசதிகளும் நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகளும் கூட விரும்பத்தக்க மட்டத்தினை நோக்கி குறுங்கால வட்டி வீதங்களை வழிப்படுத்தும் மிக இன்றியமையாத பங்கினை ஆற்றின. ஒதுக்குக் கணிப்பீட்டினையும் பேணல் காலத்தினையும் இரண்டு வார காலப்பகுதிக்கு அதிகரித்தமையின் மூலம் வர்த்தக வங்கிகள் அவற்றின் நாளாந்த திரவத்தன்மையினை காத்திரமான முறைகளில் முகாமைப்படுத்துவதற்கு உதவியதுடன் அத்தகைய வழிகளின் மூலம் அழைப்புச் சந்தை வட்டி வீதங்களின் தளம்பல் குறைக்கப்பட்டது. இவ்வாண்டுப் பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட நாணய வழிமுறைகள் வருமாறு;

- இலங்கை மத்திய வங்கியின் கொள்கை வட்டிவீத வீச்சிற்குள் ஓரிரவு வட்டி வீதங்களை உறுதிப்படுத்துவதற்கு உதவும் விதத்தில், 2014 செத்தெம்பரில் விதிக்கப்பட்ட 5.00 சதவீதம் கொண்ட சிறப்பு துணைநில் வைப்பு வசதி வீதம் 2015 பெப்புருவரியில் புறக்கீடு செய்யப்பட்டமை.
- குறைந்த செலவினைக் கொண்ட நிதி மற்றும் பொருளாதார வளர்ச்சித் தோற்றப்பாட்டுடன் இசைந்து செல்லத்தக்கதாக வட்டிவீத

நடத்தையினூடாக கொடுகடன் பாய்ச்சலையும் முதலீடுகளையும் அதிகரிப்பதன் மூலம் பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் நோக்குடன் 2015 ஏப்பிறலில் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் 8.00 சதவீதத்திலிருந்து 7.50 சதவீதத்திற்கும் துணைநில் வைப்பு வசதி வீதம் 6.50 சதவீதத்திலிருந்து 6.00 சதவீதத்திற்கும் கீழ் நோக்கித் திருத்தப்பட்டமையின் மூலம் துணைநில் வட்டிவீத வீச்சு 150 அடிப்படைப் புள்ளியாகப் பேணப்பட்டமை.

- உந்து ஊர்திகளின் இறக்குமதியுடன் தொடர்பான வெளிநாட்டு செலாவணியின் மிகையான வெளிப்பாய்ச்சலைக் கட்டுப்படுத்தும் பொருட்டு உந்து ஊர்திகளின் இறக்குமதிக்காக திறக்கப்படும் நாணயக் கடிதத்தின் மீதான காசு அளவிற்கு 2015 ஒத்தோபரில், ஒரு மாத காலப்பகுதிக்கு 2015 ஒத்தோபர் 30 இலிருந்து 2015 திசெம்பர் 01ஆம் நாள்வரை 100 சதவீத காசு அளவுத்தேவைப்பாடு விதிக்கப்பட்டமை.
- பொருளாதாரத்தில் எதிர்கால பணவீக்கத்திற்கு தூண்டுதலளிக்கக் கூடிய விதத்தில் நாணயக் கூட்டுக்களில் நியாயமற்ற விதத்தில் ஏற்படக்கூடிய விரிவாக்கத்தினை தடைசெய்யும் பொருட்டு 2016 சனவரி 16ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 2015 திசெம்பர் 30இல் நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டு விகிதம் 6.00 சதவீதத்திலிருந்து 7.50 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டமை.

### 7.3 சந்தை அபிவிருத்திகள்

மத்திய வங்கியினால் திறைசேரி உண்டியல்கள் கொள்வனவு செய்யப்பட்டமையின் காரணமாக முன்னைய ஆண்டில் நிலவிய உயர்ந்த மிகையான ஒதுக்குகள் 2015 சனவரியிலும் அதே போக்கினை காட்டின. இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணி விற்பனை, இலங்கை மத்திய வங்கியின் உடமையிலிருந்த திறைசேரி உண்டியல்களின் உரிய காலத்திற்கு முன்னரான இளைப்பாறல் மற்றும் முதிர்ச்சி என்பனவற்றின் முக்கிய காரணமாக மிகையான ஒதுக்குகள் 2015 சனவரி இறுதியிலிருந்து 2015 ஓகத்து இறுதிவரை படிப்படியாக வீழ்ச்சியடையத் தொடங்கின. அதன்பின்னர், மிகையான ஒதுக்குகள் தொடர்ந்தும் அதிகரித்ததெனினும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கணிசமானளவு குறைவாகவே காணப்பட்டன. இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணி விற்பனை, இலங்கை அபிவிருத்தி முறிகளின் பெறுகைகள் இலங்கை மத்திய வங்கியினால் கொள்வனவு செய்யப்பட்டமை மற்றும் இலங்கை மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல் கொள்வனவு என்பனவற்றின் காரணமாக அவ்வப்போது அதிகரிப்புக்கள் காணப்பட்டன. எனினும் 2015 நவெம்பரிலிருந்து மிகையான ஒதுக்குகள் அதிகரிக்கத் தொடங்கியதுடன் ஆண்டின் இறுதிவரை உயர்வாக இருந்தமைக்கு இலங்கை மத்திய வங்கியால் நாட்டிற்கான முறிகளின் பெறுகைகள் கொள்வனவு செய்யப்பட்டமையே முக்கிய காரணமாகும். எனினும், நாணயத்திற்கான பண்டிகைக் கால கேள்வியின் காரணமாக திசெம்பரில் மிகை ஒதுக்குகளில் வீழ்ச்சி காணப்பட்டது.


2015 ஏப்பிறல் நடுப்பகுதிவரை சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதத்தில் சில தளம்பல்கள் காணப்பட்டன. ஆண்டின் முதல் இரண்டு மாதங்கள் சிறப்பு துணைநில் வைப்பு வசதி வீதம் அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர் காணப்பட்ட அதே போக்கினை, அதாவது, மாதத்தின் முதல் ஒரு சில நாட்கள் உயர்ந்த அழைப்பு பணவீதங்களைக் காட்டியதுடன் மாதத்தின் எஞ்சிய பகுதி முழுவதும் தாழ்ந்த வீதங்களைக் காட்டின. சிறப்பு துணைநில் வைப்பு வசதி வீதம் அகற்றப்பட்டதன் பின்னர் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம் அதிகரித்து, 2015 ஏப்பிறல் நடுப்பகுதியில் கொள்கை வட்டி வீதங்கள் 50 அடிப்படைப் புள்ளிகளினால் கீழ் நோக்கித் திருத்தப்படும் வரை ஏறத்தாழ 6.70 சதவீதத்தில் நிலைபெற்றிருந்தது. இதன் விளைவாக, சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்பு வீதமும் அதே எண்ணிக்கையான அடிப்படைப் புள்ளிகளினால் குறைவடைந்ததுடன் ஆண்டின் பின்னரைப் பகுதியில் சந்தைத் திரவத்தன்மையில் பொதுவான குறைப்பொன்று ஏற்பட்டதுடன் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதங்கள் மீது மேல் நோக்கிய அழுத்தமொன்று கட்டியெழுப்பப்பட்டது. எனினும், பின்னரைப் பகுதியில் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம் துணைநில் வட்டிவீத வீச்சின் கீழ்மட்டத்திற்கு பெருமளவு அண்மித்ததாக நிலைபெற்றிருந்தது.

நாளாந்த அழைப்புச் சந்தை அளவு ரூ.0.33 பில்லியனுக்கும் ரூ.31.47 பில்லியனுக்குமிடையிலான வீச்சில் காணப்பட்டதுடன் ஒரு சில வங்கிகள் அழைப்புக் கடன்பாடுகளை விடாப்பிடியாக நாடியமைக்கு அத்தகைய வங்கிகள் கொடுகடன் வளர்ச்சியின் ஒரு பகுதியை அழைப்புக் கடன்பாடுகளினூடாக நிதியிடப்பட்டமையே காரணமாகும். அழைப்புக் கடன்பாட்டின் பகிர்ந்தளிப்பு நியதிகளில் மொத்தக் கடன்பாட்டின் ஏறத்தாழ 65.13 சதவீதத்திற்கு 4 வங்கிகள் வகைகூறின.

அழைப்பு வீதத்துடன் நெருக்கமாக இணைந்திருப்பதுடன் அதற்கு இசைவான விதத்தில் நகர்கின்ற சந்தை மீள்கொள்வனவு வீதம் சந்தையில் காணப்பட்ட அமைப்பியல் மற்றும் வரி விதிப்பு பிரச்சினைகளின் காரணமாக இடையிடையே தளம்பல்களை எடுத்துக்காட்டியது. இதன்படி, இவ்வாண்டுப் பகுதியில் அழைப்பு வீதத்திற்கும் சந்தை மீள்கொள்வனவு வீதத்திற்குமிடையிலான எல்லை பூஜ்ஜியத்திலிருந்து 131 அடிப்படைப் புள்ளி வரையிலான வீச்சில் காணப்பட்டது.

நாணயக் கொள்கை நிலையுடன் இசைந்து செல்லும் விதத்தில், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் ஒரு சில திறந்த சந்தைத் தொழிற்பாட்டு ஏலங்கள் நடாத்தப்பட்டன. இலங்கை மத்திய வங்கி மீள்கொள்வனவு ஏலங்களை உள்ளடக்கத்தக்க விதத்தில் போதுமான அரச பிணையங்களை கொண்டிருப்பதனாலும் ஏலங்கள் நாளாந்த அடிப்படையில் நடாத்தப்படாமையினாலும் அரச பிணையங்கள் கடன்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பிணையங்களைக் கடன் பெறுவதற்கான தேவைப்பாடு இருக்கவில்லை.

வரைபடம் II-1 ஒட்டுமொத்த திரவத்தன்மை மற்றும் கொள்கை வட்டிவீத வீச்சு




#### 7.3.1 திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்

##### அ) திரவத்தன்மை எதிர்வுகூறல்

தேவையான நாணயத் தொழிற்பாட்டு வகையினை நிர்ணயிப்பதற்காக உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் நாளாந்த அடிப்படையில் சந்தைத் திரவத்தன்மை எதிர்வுகூறலை மேற்கொண்டது. இவ்வெதிர்வுகூறலானது, அரசாங்கம் மற்றும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினுடனான மத்திய வங்கியின் கொடுக்கல்வாங்கல்களான, இலங்கை மத்திய வங்கியினால் கையாளப்பட்ட அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடன் பெறுகைகள் மற்றும் மீள்கொடுப்பனவுகள், அரசாங்கத்தின் வெளிநாட்டு நாணய முறிகளின் பன்னாட்டு மற்றும் உள்நாட்டு வழங்கல்கள், உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் நாணய எடுப்பனவுகள் மற்றும் வைப்புக்கள், இலங்கை மத்திய வங்கியின்

திறைசேரி உண்டியல் உடைமைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் இலங்கை மத்திய வங்கியின் தலையீடுகள் போன்ற பல காரணங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது. எதிர்வுகூறலின் பெறுபேறுகளின் அடிப்படையில் பின்வரும் திறந்த சந்தை தொழிற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

**ஆ) ஓரிரவு ஏலங்கள்**

**(i) மீள்கொள்வனவு ஏலங்கள்**

2015இல், ஒட்டுமொத்த நாணயக் கொள்கை நிலை மற்றும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஒட்டுமொத்த திரவத்தன்மையில் ஏற்பட்ட சடுதியான வீழ்ச்சி என்பனவற்றை பரிசீலனையில் கொள்கையில் கிரமமான அடிப்படையில் மீள்கொள்வனவு ஏலங்களை நடாத்துவதற்கு குறைந்த தேவையே காணப்பட்டது. இதன்படி, 2015இல் ஓரிரவு மீள்கொள்வனவு ஏலங்கள் 7 தடவைகள் மாத்திரமே நடாத்தப்பட்டன. சராசரியாக ஓரிரவு ஏலத்திற்காக நாளொன்றிற்கு ரூ.21.3 பில்லியன் முன்வைக்கப்பட்டதுடன் இதில் ரூ.12.6 பில்லியன் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த அளவானது மிகையான நாட்கள் மீதான உண்மையான மிகை ஒதுக்குகளில் 3.3 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தியது. ஓரிரவு மீள்கொள்வனவு ஏலங்களில் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் 5.91 சதவீதத்திற்கும் 6.14 சதவீதத்திற்குமிடையில் வேறுபட்டுக் காணப்பட்டது.

**(ii) நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள்**

2015ஆம் ஆண்டு முழுவதும் சந்தைத் திரவத்தன்மை மிகையாக தொடர்ந்தும் காணப்பட்டமையினால் சந்தையில் மத்திய வங்கியினது தலையீட்டிற்கான தேவை குறைவாகவே காணப்பட்டது. எனினும் ஓரிரவு வட்டி வீதங்களின் மீது ஏற்படக்கூடிய ஏதேனும் மேல் நோக்கிய அழுத்தத்தினை தளர்த்துவதற்காக ஒரு சில தடவைகள் நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள் நடாத்தப்பட்டன. இதன்படி, உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம் அத்தகைய 8 ஏலங்களை நடத்தியவிடத்து சராசரியாக நாளொன்றிற்கு ரூ.13.8 பில்லியன் முன்வைக்கப்பட்டதுடன் நாளொன்றிற்கு ரூ.5.5 பில்லியன் கொண்ட தொகை ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஓரிரவு நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களின் சராசரி நிறையேற்றப்பட்ட விளைவு வீதம் 6.15 சதவீதத்திற்கும் 6.30 சதவீதத்திற்குமிடையில் வேறுபட்டுக் காணப்பட்டது.

**இ) குறுங்கால ஏலங்கள்**

**(i) மீள்கொள்வனவு ஏலங்கள்**

குறுங்கால ஏலங்கள் அதேநாள் தீர்ப்பனவு அடிப்படையில் ஒரு வாரம் வரையிலான திரவத்தன்மையினை ஈர்த்துக் கொள்ளும் உபாயமொன்றாக நடாத்தப்படுகிறது. எனினும் குறுங்கால மீள்கொள்வனவு ஏலங்கள் 2015இல் 17 நாட்கள் மட்டுமே நடாத்தப்பட்டன. சராசரியாக நாளொன்றிற்கு ரூ. 28.2 பில்லியன் முன்வைக்கப்பட்டதுடன் நாளொன்றிற்கு ரூ.22.4 பில்லியன் குறுங்கால மீள்கொள்வனவு விளைவு ஏலங்களிலிருந்து ஈர்த்துக் கொள்ளப்பட்ட வேளையில் சராசரி நிறையேற்றப்பட்ட விளைவு வீதம் 5.86 சதவீதத்திற்கும் 6.28 சதவீதத்திற்குமிடையிலான வீச்சில் வேறுபட்டுக் காணப்பட்டது.

**(ii) நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள்**

சந்தை தொடர்ச்சியான அடிப்படையில் மிகையாகக் காணப்பட்டமையினால் இவ்வாண்டுப்பகுதியில் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் குறுங்கால நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களை நடாத்தவில்லை.

**ஈ) நீண்ட கால ஏலங்கள்**

**(i) மீள்கொள்வனவு ஏலங்கள்**

நீண்ட கால மீள்கொள்வனவு ஏலங்கள் 2015இல் சனவரி, பெப்புருவரி மற்றும் திசெம்பர் மாதங்களில் மட்டுமே நடாத்தப்பட்டன. உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் 14 நீண்ட கால ஏலங்களை நடாத்தியது. நீண்ட கால மீள்கொள்வனவு ஏலங்களின் காலப்பகுதி 10 நாட்களுக்கும் 77 நாட்களுக்குமிடையில் காணப்பட்டபோதும் வர்த்தகப்படுத்தல் நடவடிக்கைகள் 34 நாட்களுக்கும் குறைவான காலத்திற்கு பெருமளவிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

**(ii) நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள்**

உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் 2015இல் நீண்ட கால நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள் எதனையும் நடாத்தவில்லை.

**உ) உடனடிக் கொடுக்கல்வாங்கல்கள்**

இலங்கை மத்திய வங்கி அதன் சொந்த சொத்துப்பட்டியலிலுள்ள திறைசேரி உண்டியல்களை விற்பனை செய்வதன் மூலம் நிரந்தர அடிப்படையில் மிகையான ஒதுக்குகளை ஈர்த்துக்கொள்வதற்காக அது உடனடி விற்பனை ஏலங்களை நடாத்தியது. 2015இல் 29 உடனடி விற்பனைகளினூடாக ஈர்த்துக் கொள்ளப்பட்ட மொத்தத் தொகை ரூ.128 பில்லியனாகும். சராசரியாக ஏலமொன்றிற்கு ரூ.5.2 பில்லியன் முன்வைக்கப்பட்ட வேளையில் ஏலமொன்றிற்கு ரூ.4.4 பில்லியன் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

### 7.3.2 துணைநில் வசதிகள்

வங்கிகளுக்கிடையிலான பணச் சந்தை மற்றும் நாளாந்த திறந்த சந்தை ஏலங்களினூடாக தமது குறுங்கால திரவத்தன்மை தேவைப்பாடுகளை முழுமையாக முகாமைத்துவப்படுத்த முடியாத பங்கேற்கும் நிறுவனங்களுக்கு துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் என்பனவற்றினூடாக ஆண்டு முழுவதும் துணைநில் வசதிகள் வழங்கப்பட்டன. உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் 2015இல் பங்கேற்கும் நிறுவனங்களுக்கு துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன் வழங்கல் விகிதம் என்பனவற்றில் துணைநில் வசதிகளைத் தொடர்ச்சியாக வழங்கியது. நாளாந்தம் மிகையான திரவத்தன்மை நிலைமையினைப் பிரதிபலித்த துணைநில் வசதியின் கீழான துணைநில் வைப்பு வசதிக் கொடுக்கல்வாங்கல்கள் இவ்வாண்டுப் பகுதியில் ஏறத்தாழ ரூ.75.0 பில்லியன் கொண்ட நாளாந்தச் சராசரியினையும் ரூ.17,990 பில்லியன் கொண்ட மொத்தப் பெறுமதியினையும் கொண்டிருந்தன. துணைநில் கடன் வழங்கல் வசதியின் கீழான கடன் வழங்கலின் மொத்தத் தொகை 2015இல் ரூ.23 பில்லியனாகக் காணப்பட்டது.

### 7.3.3 நியதி ஒதுக்குத் தேவைப்பாடு

நியதி ஒதுக்குத் தேவைப்பாடு என்பது இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்கு விதிகளின் நியதிகளுக்கிணங்க, ஒவ்வொரு வர்த்தக வங்கியும் அவற்றின் மொத்த ரூபா வைப்புப் பொறுப்புக்களில் ஒரு பகுதியினை மத்திய வங்கியுடனான ஒதுக்குக் கணக்கில் பேணுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்ற குறைந்தபட்ச ஒதுக்குத் தொகையொன்றாகும். உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டின் பேணலை நிருவகித்தல் மற்றும் வர்த்தக வங்கிகளின் இணங்குவிப்புக்களை கண்காணித்தல் ஆகிய இரண்டிற்கும் பொறுப்பாக இருந்தது. நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டின் பொருந்தக்கூடிய வீதம் 2015 முழுவதும் 6 சதவீதமாக இருந்தது. எனினும், பொருளாதாரத்தில் எதிர்கால பணவீக்கத்திற்கு தூண்டுதலளிக்கும் விதத்தில் நாணயக் கூட்டுக்களால் ஏற்படும் நியாயமற்ற விரிவாக்கத்தினை தடுக்கும் நோக்குடன் நியதி ஒதுக்குத் தேவைப்பாடு 2016 சனவரி 16ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 2015 திசெம்பரில் 7.5 சதவீதத்திற்கு 1.50 சதவீதத்தால் மேல்நோக்கித் திருத்தப்பட்டது. இதன்

விளைவாக, 2016இன் ஆரம்பத்தில் பணச் சந்தையிலிருந்து இலங்கை மத்திய வங்கியினால் ஏறத்தாழ ரூ.52 பில்லியன் கொண்ட மிகையான திரவத்தன்மை ஈர்த்துக்கொள்ளப்பட்டது.

#### 7.3.4 வங்கி வீதம்

நாணய விதிச் சட்டத்தின் 87ஆம் பிரிவின் கீழ் குறித்துரைக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான குறுங்கால முற்பணங்கள் மீதான மத்திய வங்கியின் வட்டி வீதம் (வங்கி வீதம்) 15 சதவீதத்தில் மாற்றமின்றிக் காணப்பட்டது. எனினும், இவ்வீதத்தில் மத்திய வங்கியிலிருந்தான கடன்பாடுகளுக்கு எவ்வங்கியும் நாடாமையினால், இவ்வட்டி வீதமானது கோட்பாட்டு ரீதியான வீதமாக மட்டுமே காணப்பட்டது.

### 7.4 வர்த்தக வங்கிகள் மற்றும் அரசிற்கான வங்கியாளர்

#### 7.4.1 நிதியியல் நிறுவனங்களின் கணக்குகள்

வினைத்திறன் மிக்க வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவு முறைமையினை உறுதிப்படுத்துவதற்காக உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வங்கிகளுக்கும் நடைமுறைக் கணக்கு வசதிகளை தொடர்ச்சியாக வழங்கியதன் மூலம் வர்த்தக வங்கிகளுக்கான வங்கியாளர் என்ற மத்திய வங்கியின் வகிபாகத்தினைச் செயற்படுத்துவதற்கு வசதியளித்தது. 2015 இறுதியில் இலங்கை மத்திய வங்கி 25 வர்த்தக வங்கிகளுக்கும் 8 முதனிலை வணிகர்களுக்குமான கணக்குகளைப் பேணியது. இக்கணக்குகள் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு அடிப்படையில் தொழிற்படுத்தப்பட்டன.

#### 7.4.2 அரச கணக்குகள்


உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம், அரச திணைக்களங்கள், அரச முகவர்கள், நிறுவனங்கள் மற்றும் நியதிச் சபைகள் என்பனவற்றின் கணக்குகளைப் பேணியதுடன் அவற்றிற்குத் தேவையான வங்கித்தொழில் வசதிகளையும் வழங்கியதன் மூலம் அரசிற்கான வங்கியாளர் என்ற அதன் வகிபாகத்தினையும் ஆற்றியது. இலங்கை மத்திய வங்கியினால் பேணப்பட்ட கணக்குகளின் மொத்த எண்ணிக்கை 2015 இறுதியில் 59 ஆகக் காணப்பட்டது. இதன்படி, உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம், அரசாங்கத்தின் சார்பில் இவ்வாண்டுப் பகுதியில் ரூ.16,495.46 பில்லியன் பெறுமதியான 20,976 கொடுக்கல்வாங்கல்களைக் கையாண்டது. அத்தகைய கொடுக்கல்வாங்கல்களில் 90 சதவீதத்திற்கும் கூடுதலானவை திறைசேரிக் கணக்குகளுக்கான துணைச் செயலாளர், பொதுப்படுகடன் திணைக்கள நடைமுறைக்கணக்கு, உள்நாட்டரசிறை ஆணையாளர் பெறுமதிசேர் வரி மீளளிப்புக் கணக்கு மற்றும் சனாதிபதி நிதியக் கணக்கு என்பனவற்றிற்கு உரியனவாக இருந்தன. இவ்வாண்டுப் பகுதியில் அரசின் கோரிக்கைக்கிணங்க ஒரு கணக்கு மூடப்பட்டது.

நாணய விதிச் சட்டத்தின் 89ஆவது நியதிகளுக்கிணங்க, இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்ட நிதியாண்டில் மதிப்பிடப்பட்ட அரச அரசிறையில் 10 சதவீதம் என்ற உச்சமட்ட வரையறைகளுக்குட்பட்டு, கட்டணங்களெதுவுமின்றி அரசாங்கத்திற்கு தற்காலிக முற்பணங்களை வழங்குகிறது. 2015இன் ஆரம்பத்தில், 2015ஆம் ஆண்டிற்காக மதிப்பிடப்பட்ட உயர்ந்த அரச அரசிறையின் அடிப்படையில், தற்காலிக முற்பணங்களின் உச்சஎல்லை ரூ.13.1 பில்லியனால் ரூ.159.4 பில்லியனுக்கு அதிகரித்தது. எனினும், 2015 பெப்புருவரியில் நாடாளுமன்றத்தினால் ஒப்புதலளிக்கப்பட்ட திருத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் காரணமாக தற்காலிக முற்பணங்கள் ரூ.153.2 பில்லியனுக்கு கீழ் நோக்கித் திருத்தப்பட்டன. 2015 இறுதியிலுள்ளவாறு தற்காலிக முற்பணங்கள் 2014 இறுதியின் ரூ.143.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.151.1 பில்லியனாகக் காணப்பட்டன. இதேபோன்று, அரசிற்கான தற்காலிக முற்பணங்களின் உச்சஎல்லை, 2016இற்காக மதிப்பிடப்பட்ட அரச அரசிறையின் அடிப்படையில் 2016இன் ஆரம்பத்தில் ரூ.31.9 பில்லியனைக் கொண்ட மேலதிக முற்பணங்களை வழங்கியதன் காரணமாக 2016இல் ரூ.185.1 பில்லியனுக்கு அதிகரித்தது.

### 7.5 ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதி ஏற்பாடு

உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் பங்கேற்கும் நிறுவனங்களுக்கு ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதி ஏற்பாட்டினை வழங்குவதன் மூலம் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் சுமுகமானதும் வினைத்திறன்மிக்கதுமான தொழிற்பாட்டினை உறுதிப்படுத்தியது. இவ்வசதியானது திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளின் பிணையங்களுக்கெதிராக கட்டணமெதுவுமின்றி வழங்கப்பட்டதுடன் அவை அதேநாளில் சந்தை விலைகளில் ஏற்படக்கூடிய ஏதேனும் வேறுபாடுகளை ஈர்த்துக் கொள்வதற்கேதுவாக போதுமான இலாபமொன்றுடன் அவற்றின் நடைமுறைச் சந்தை விலைகளில் மதிப்பிடப்பட்டன.

வரைபடம் II-2 2015 இல் வரையப்பட்ட ஒரு நாளிற்குரிய வசதி ஏற்பாடுகள்




இவ்வாண்டுப் பகுதியில் எடுப்பனவு செய்யப்பட்ட ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதியின் மொத்தப் பெறுமதியும் சராசரி நாளாந்தப் பெறுமதியும் முறையே ரூ.5,594 பில்லியனாகவும் ரூ.23.3 பில்லியனாகவும் விளங்கின. இது ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதியின் பயன்பாடு முன்னைய ஆண்டின் முறையே மொத்தத் தொகையான ரூ.5,144 பில்லியன் மற்றும் சராசரியான ரூ. 21.3 பில்லியனை விட அதிகரித்திருந்தமையினைக் காட்டியது.

### 7.6 பணத் தரகர்களின் மேற்பார்வை

பணத்தரகர்கள் பணம், வெளிநாட்டுச் செலாவணி மற்றும் அரச பிணையங்கள் சந்தை என்பனவற்றின் இடையேற்பாட்டாளர்கள் என்ற வகிபாகத்துடன் செயலாற்றினர். (அவர்கள் அவர்களது சந்தையில் விலை கண்டறிதல் செயன்முறையில் குறிப்பிடத்தக்க வகிபாகத்தினை ஆற்றியதுடன் இதன் காரணமாக அவர்கள் சந்தைப் பகுப்பாய்வு மற்றும் கொள்கை நடவடிக்கைகளுக்கான இன்றியமையாத தகவல் மூலமாகவும் விளங்குகின்றனர்.) 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 10ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்பட்ட 2013ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பணத்தரகர் ஒழுங்குவிதி, பொருளாதாரத்தில் தொழிற்படுகின்ற பல்வேறுவகையான நிதியியல் நிறுவனங்கள் மீதான கண்காணிப்பு நடவடிக்கைகள் உள்ளடக்கப்படுவதனை அதிகரிக்கும் நோக்குடன் 2013 பெப்புருவரி 15இல் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. 2013இல் இவ்வொழுங்குவிதியின் கீழ் மொத்தமாக ஒன்பது கம்பனிகளுக்கு அதிகாரச்சான்றிதழ் வழங்கப்பட்டதுடன் “அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகர்கள்” எனவும் குறித்துரைக்கப்பட்டன. அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகர்களின் எண்ணிக்கை 2015இல் மாற்றமின்றியிருந்தது. உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் இவ்வாண்டுப் பகுதியில் 6 பணத்தரகர் கம்பனிகள் தொடர்பில் 6 தலத்திலான பரீட்சிப்புக்களை நடாத்தியதுடன் இக்கம்பனிகளின் பணிப்பாளர்களுடன் 4 கூட்டங்களையும் நடாத்தியது.

#### பணத் தரகர்களின் பட்டியல்

1. பார்ட்லீட் மெக்லய் அன்ட் றோய் (பிறைவேற்) லிமிடட்
2. பெர்ஸ்ட் அலையன்ஸ் மணி புறோக்கர்ஸ் (பிறைவேற்) லிமிடட்

3. ஜோர்ச் ஸ்ருவர்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் (பிறைவேற்) லிமிடட்
4. எம்விஎஸ் மணி புறோக்கர்ஸ் லிமிடட்
5. நவரா பொறெக்ஸ் அன்ட் மணி புறோக்கர்ஸ் லிமிடட்
6. பிக்கொட் சாப்மான் அன்ட் கம்பனி (பிறைவேற்) லிமிடட்
7. எஸ்எம்பி மணி புறோக்கர்ஸ் (பிறைவேற்) லிமிடட்
8. தப்றொபேன் இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பிறைவேற்) லிமிடட்
9. விஷ்வின் மணி அன்ட் எக்ஸ்சேன்ஜ் புறோக்கர்ஸ் லிமிடட்

## 8. பொருளாதார ஆராய்ச்சி

1949ஆம் ஆண்டின் நாணய விதிச் சட்டத்தின் 25ஆம் பிரிவுக்கமைய 1950இல் இலங்கை மத்திய வங்கி நிறுவப்பட்ட அதே காலத்தில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் நிறுவப்பட்டுள்ளது. பணம் மற்றும் வங்கித்தொழில் மற்றும் பொதுவான ஈடுபாடுமிக்க ஏனைய பொருளாதார விடயங்களின் கொள்கைகள் மற்றும் வழிமுறைகளை வடிவமைத்தல், நடைமுறைப்படுத்தல் மற்றும் நிறைவேற்றுதல் என்பவற்றில் நாணயச் சபைக்கும், ஆளுநருக்கும் வழிகாட்டுவதற்காகவும் அதேபோன்று பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குவதற்காகவும் பொருளாதார ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காகவும் பொருளாதார மற்றும் சமூகப் புள்ளிவிபரங்களைத் தயாரிக்கின்ற தொழிற்பாடுகள் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் நிலைத்திருக்கக்கூடிய உயர் பொருளாதார வளர்ச்சியை வசதிப்படுத்துவதற்கு பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டினைப் பேணல் மற்றும் நாட்டின் வெளிநாட்டு அதிர்வுகளுக்குத் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையை மேம்படுத்துவதற்காக வெளிநாட்டுத்துறை உறுதிப்பாட்டினைப் பேணல் போன்ற தனது முக்கிய பொறுப்புக்களை நிறைவேற்றியுள்ளது. மேலும் அரசாங்கத்திற்குப் பொருளாதார மதியுரையாளராக இலங்கை மத்திய வங்கியின் வகிபாகத்தை நிறைவேற்றுதலில், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது ஏற்கனவே உருவாக்கப்பட்ட இறைக் கொள்கை வழிமுறைகளின் தாக்கத்தினை ஆய்வு செய்யும் அதேவேளையில், பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினைப் பேணுவதற்காகத் தேவையான இறைக் கொள்கை வழிமுறைகள் மற்றும் எழுச்சி பெற்றுவரும் பொருளாதாரப் பிரச்சனைகள் மீதான கொள்கை மதியுரை மற்றும் ஏற்பாடுகளைத் தொடர்ந்தும் வழங்கியது. இதற்கு மேலாக பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் அதன் நியதிச் சட்ட மற்றும் ஏனைய வெளியீடுகளை உரிய நேரத்தில் கிரமமான அடிப்படையில் வெளியிட்டது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது வினைத்திறன் மிக்க தொடர்பூட்டல் தேவையை நிறைவேற்றுவதில், இலங்கை மத்திய வங்கி இணையத்தளத்தில் இற்றைப்படுத்துவதன் மூலமும் கிரமமான பத்திரிகை வெளியீடுகளினூடாகவும் அனைத்து ஆர்வலர்கள் அதேபோன்று பொதுமக்களுக்கு தகவல்களை பரப்புவதில் தொடர்ந்தும் ஈடுபட்டது. 2015 காலப்பகுதியில் சமகாலத்திற்குரிய உள்நாட்டு, பிராந்திய மற்றும் உலகளாவிய பிரச்சனைகளுக்கான அனைத்தையுமுள்ளடக்கிய ஆராய்ச்சிகளை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தொடர்ந்தும் நடாத்தியது.

### 8.1 உயர்ந்த மற்றும் நீடித்த பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்காக விலை உறுதிப்பாட்டினைப் பேணல்.

பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டினைப் பேணும் நோக்குடன் ஆண்டின் தொடக்கத்தில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது எதிர்பார்க்கப்பட்ட பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் பணவீக்க மற்றும் நாணய விரிவாக்கத்திற்கான விரும்பிய பாதையினை அறிவித்தது. அதன் பின்னர் ஏதேனும் கொள்கைத் தலையீடுகளில் தேவைப்படுகின்ற வேறுபாடுகளை உறுதிப்படுத்துவதற்காக ஆண்டு முழுவதும் பொருளாதாரத்தின் போக்குகள் மற்றும் அபிவிருத்திகளை நெருக்கமாகக் கண்காணித்தது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது, பேரண்டப் பொருளாதார புள்ளிவிபரங்களை தொகுத்தல், மற்றும் தோற்றம் பெற்றுவரும் நாணய மற்றும் பேரண்டப் பொருளாதார நிலைமைகளை மீளாய்வு செய்து நாணயச் சபையின் கவனத்திற்கு நாணயக் கொள்கை நிலையின் எதிர்கால வழிகாட்டல் மீதான பரிந்துரைகளை மேற்கொள்கின்ற நாணயக் கொள்கை குழுவிற்கு அனைத்தையுமுள்ளடக்கிய பகுப்பாய்வினை வழங்குதல் போன்ற அதன் பொறுப்புக்களை நிறைவேற்றியுள்ளது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது வெளியீட்டு இடைவெளி அளவீடுகளைக் கணிக்கும் அதேவேளையில் முதன்மை மற்றும் மையப் பணவீக்கங்களை எதிர்வு கூறுவதனைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. நாணயச் சபையானது, உண்மை, வெளிநாட்டு, இறை மற்றும் நாணயத் துறைகளின் அபிவிருத்திகளிலிருந்து எழுப்பப்படும் இடர்களின் கணிப்பீட்டுடன் பணவீக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சி மீதான அதன் அபிவிருத்திகளின் சாத்தியமான தாக்கங்களை தொடர்ந்தும் பதிவேற்றியது. அதேவேளை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது எதிர்கால கொள்கை தயாரிப்பினை வலுப்படுத்துவதற்கான இலங்கைக்கான இயங்கியல் எழுமாற்று பொதுச் சமநிலை மாதிரி ஒன்றினைக் கட்டியெழுப்புவதற்கு உதவும் வகையில் பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்து இலங்கை மத்திய வங்கிக்கு வருகை தந்த தொழில்நுட்ப உதவித் தூதுக்குழுவினை ஒருங்கிணைத்தது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் மற்றும் ஏனைய திணைக்களத்தின் அலுவலர்களை உள்ளடக்கிய ஒரு இலக்கு குழுவுடன் மாதிரிப்படுத்தல் மற்றும் எதிர்வுகூறல் மீது கணனிமயப்படுத்தல் பயிற்சிகள் மற்றும் மாதிரிப்படுத்தல் தலைப்புக்கள் மீதான தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் என்பவற்றை பயன்படுத்தி தூதுக்குழு பணியாற்றியது. முகாமைத்துவத்துடன் தேவையான இயலளவு மற்றும் திறமைகளை கட்டியெழுப்புவதற்காக தனிப்பட்ட மாதிரிப்படுத்தல் கருவிகள் மற்றும் உபாயங்கள் என்பனவற்றை தூதுக்குழு கலந்துரையாடியது. தொழில்நுட்ப உதவித் தூதுக்குழுவின் இரண்டாவது வருகை 2016 பெப்புருவரியில் இடம்பெற்றது. மேலும், படுகடன் நிலைத்துநிற்கும் பகுப்பாய்வு ஒன்றினை நடாத்துவதற்கும், இலங்கைக்கான நிதியியல் நிகழ்ச்சித் திட்டத்தை தயாரிப்பதற்குமாக இரு உள்ளகக் குழுமங்கள் நிறுவப்பட்டன. இத்தகைய பகுப்பாய்வுகளுடன் தொடர்புபட்ட முன்னேற்பாட்டு வேலை ஆண்டு காலத்தில் நிறைவு செய்யப்பட்டன. மேலும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது, மே 2014இல் அறிமுகப்படுத்திய புதிய கடன்கள் மற்றும் வைப்புக்களுக்கான சராசரி நிறையேற்றப்பட்ட வட்டி வீதங்களைத் தொகுப்பதில் தொடர்ந்தும் ஈடுபடுகின்றது. வேளாண்மைத் துறையின் உற்பத்திச் செலவு சுட்டெண்ணின் முன்னேற்பாட்டு அறிக்கை தொகுக்கப்பட்டதுடன் திணைக்கள செயலமர்வொன்றில் அலுவலர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. அதே நேரத்தில், தொடர் நிறையேற்றப்பட்ட முறைமை அடிப்படையிலான தொழிலாளர் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணைக் கணிப்பிடுதலுடன் தொடர்புபட்ட வேலை ஆண்டுக் காலத்தில் நிறைவு செய்யப்பட்டது. நாணயக் கொள்கை நிலை மீதான நாணயச் சபையின் தீர்மானங்கள் பத்திரிகை வெளியீட்டினூடாக சந்தைக்கு பரவச்செய்யப்பட்டிருந்தன. இத்தகைய பத்திரிகை வெளியீடுகள் கொள்கை நம்பகத்தன்மையை பேணுவதற்கு உதவுகின்ற அதேவேளை பணவீக்க எதிர்பார்க்கைகளை முகாமை செய்தல் மற்றும் பொதுமக்களின் நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்குமான கொள்கை பகுத்தறிதலை வினைத்திறனாக வெளியிடுதல் போன்றவற்றுக்கு பயனுள்ளவையாகவிருந்தன. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் கொள்கை முன்மொழிவுகள் மற்றும் அத்தகைய கொள்கைகளின் உரியகாலத்திலான அமுலாக்கம் பணவீக்கத்தை தொடர்ச்சியாக ஏழாவது ஆண்டாக ஒற்றை இலக்க மட்டத்திற்கு நிலைப்படுத்துவதற்கு உதவியிருந்ததுடன் உயர்ந்த பொருளாதார வளர்ச்சியை அடைந்து கொள்வதற்கான தூண்டும் காரணியான தனியார் துறைக்கான கொடுகடன் பாய்ச்சலை பகிர்ந்தளிப்பதற்கு சார்பு ரீதியில் குறைந்த வட்டி வீதங்களை பேணுவதற்கும் உதவியிருந்தது.

### 8.2 வெளிநாட்டுத் துறை உறுதிப்பாட்டினைப் பேணல்

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது நாட்டின் வெளிநாட்டுத் துறை உறுதிப்பாட்டினைப் பேணுவதற்கு ஆதரவளிக்கும் வகையில் வெளிநாட்டுத் துறை அபிவிருத்திகளை கண்காணிப்பதனையும், மதிப்பிடுவதையும் தொடர்ந்தும் மேற்கொண்டிருந்தது. நாணயக் கொள்கைக் குழு மற்றும் நாணயச் சபைக்கு சரியான கொள்கை

தீர்மானம் மேற்கொள்வதனை வசதியளிப்பதற்கு சென்மதி நிலுவை மீதான மாதாந்த அபிவிருத்திகள் மற்றும் வெளிநாட்டுத்துறை புள்ளிவிபரங்கள் மற்றும் பகுப்பாய்வுகளை வழங்கியிருந்தது. ஆண்டு காலத்தில் நிலையான அமைச்சரவை நியமன மீளாய்வுக் குழுவின் தேவைப்பாட்டிற்கிணங்க துணைநில் அமைச்சரவையினால் சமர்ப்பிக்கப்பட்ட 5 கடன் முன்மொழிவுகள் மீதான அவதானிப்புக்கள் மற்றும் அரசினால் பெறப்பட்ட 23 வெளிநாட்டுக் கடன்கள் மீதான நாணய நடைமுறைப்படுத்தல் மதிப்பீடுகள் என்பன நிறைவு செய்யப்பட்டன. வெளிநாட்டு ஒதுக்குகளின் அடி மட்டத்தை அடையாளங் காண்பதற்கான ஒரு கருத்துப் பத்திரம் வரைவு செய்யப்பட்ட அதேவேளையில், வெளிநாட்டுத்துறை புள்ளிவிபரத் தொகுப்பின் மேம்பாடு மற்றும் மாற்றங்களை உள்ளடக்கிய ஒரு நூலேடு தயாரிக்கப்பட்டதுடன் இது 2016இல் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது வெளிநாட்டுத்துறை புள்ளிவிபரங்களைத் தொகுத்தல் மற்றும் பரப்புதல் தொடர்பில் 2015ஆம் ஆண்டு காலத்தில் மேலும் முன்னேற்றமடைந்தது. அத்தகைய முக்கிய முன்னேற்றங்கள் சென்மதி நிலுவை புள்ளிவிபரங்கள் மற்றும் காலாண்டு அடிப்படையிலான சென்மதி நிலுவை கைந்நூல் 6 வடிவமைப்பின் (பன்னாட்டு நாணய நிதிய சென்மதி நிலுவை கைந்நூல் 6) கீழ் பன்னாட்டு முதலீட்டு நிலைமை புள்ளிவிபரங்களை வெளியிடல், உலக வங்கிக்கு காலாண்டு வெளிநாட்டுப் படுகடன் புள்ளிவிபரங்களை சமர்ப்பித்தல், 2013 மற்றும் 2014ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைக்கப்பட்ட நேரடி முதலீட்டு அளவீடுகளில் பங்குபற்றுதல் மற்றும் மாதாந்த அடிப்படையிலான பன்னாட்டு ஒதுக்கு தரவு முன்வரவை வெளியிடுதல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. இத்தகைய புதிய அபிவிருத்திகளுடன், பன்னாட்டு நாணய நிதியத்தின் சிறப்பு தரவு பரப்புதல் நியமத்திற்கு அங்கத்துவம் வகிப்பதில் இலங்கை அனைத்து வெளிநாட்டுத்துறை புள்ளிவிபரங்களின் தேவைப்பாட்டினையும் நிவர்த்தி செய்துள்ளது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது, ஏறத்தாழ 1200 தனியார் கம்பனிகளின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் போன்ற தகவல்களைச் சேகரிக்கின்ற வருடாந்த பன்னாட்டு முதலீட்டு அளவீடுகள், வெளிநாட்டுச் செலாவணியின் உள்முக மற்றும் வெளிமுக பணவனுப்பல்கள் மீதான மாதாந்த அளவீடுகள், வெளிநாட்டுப் படுகடன் மீதான காலாண்டு அளவீடுகள் மற்றும் பணிகள் துறைகள் மீதான அளவீடுகள் என்பனவற்றை உள்ளடக்கிய பல்வேறு அளவீடுகளை நடாத்தியது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் இலங்கைக்கான சுற்றுலா சென்மதிக் கணக்கு முறைமையின் நடைமுறைப்படுத்தலை ஒருங்கிணைத்திருந்ததுடன் ஆண்டு காலத்தில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மற்றும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் என்பவற்றின் அலுவலர்களுடன் கலந்துரையாடல்களும் நடைபெற்றன.

### 8.3 முன்கூட்டிய கொள்கை, மதியுரைகளை வழங்குதல்

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது முன்கூட்டிய கொள்கை மதியுரைகளை வழங்கும் நோக்கில் இறைக்கொள்கை வடிவமைத்தலை வெளிப்படுத்துவதற்காக எடுத்துக்காட்டப்படும் துறைகளில் முகாமைத்துவத்திற்கு பல்வேறு கொள்கைப் பத்திரங்களை சமர்ப்பித்துள்ளது. முன்னைய ஆண்டுகளைப் போலவே நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 116(1) இன் நியதிகளின்படி மாண்புமிகு நிதியமைச்சரால் வெளியிடப்படும் வரவு செலவுத் திட்டத் தயாரிப்பு செயற்பாட்டிற்காக மாண்புமிகு நிதியமைச்சரால் பயன்படுத்தப்படுகின்ற பொருளாதாரம் மற்றும் கொள்கைப் பிரேரணைகள் மீதான ஒரு விரிவான நம்பகத்தன்மையுடைய பகுப்பாய்வினை உள்ளடக்கிய செத்தெம்பர் 15 அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. மேலதிகமாக நாட்டின் நடுத்தர கால இறை நிலைமைகளின் மேம்பாட்டிற்குத் தேவைப்படுகின்ற முன்கூட்டிய மதியுரை வழிமுறைகளை எடுத்துக்காட்டும் துறைகளில் பல்வேறு அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டன. மேலும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது பொருளாதார அபிவிருத்தி மற்றும் உள்நாட்டு நாணய மற்றும் விலை உறுதிப்பாட்டின் மீதான சாத்தியமான இடர்நேர்வுகளை எடுத்துக்காட்டும் வகையில் நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 64(2) மற்றும் (3) இன் தேவைப்பாட்டிற்கிணங்க மாண்புமிகு நிதியமைச்சருக்கு 4 அறிக்கைகளை சமர்ப்பித்தது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தால் ஆண்டு காலப்பகுதியில் அரசினால் எழுப்பப்பட்ட பல்வேறு விடயங்களின் மீதான அவதானிப்புக்கள் வழங்கப்பட்டன. திணைக்களத்தின் மூத்த அலுவலர்கள் ஆண்டு காலத்தில் வங்கியின் பல்வேறுபட்ட குழுக்கள் மற்றும் சபைகள் அதேபோன்று வெளியக நிறுவனங்களிலும் பணியாற்றினர். தேசிய தரவுக் குழுமம், சாத்திய அடிப்படையிலான தீர்மானம் மேற்கொள்ளலுக்கான தேசிய தகவல் மீதான குழுமம், நடுத்தர வகுப்பு வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி மீதான ஆய்வுக்குழு, செல்லுபடியான காலத்தை நீடிக்கும் ஓய்வு பெற்ற சுயாதீன வலு மீதான தொழில்நுட்ப பொருளாதார பகுப்பாய்வின் துணைக்குழுமம், திறந்த இயங்குதள இலத்திரனியல் கட்டண சேகரிப்பு முறைமை ஒன்றை தொழிற்படுத்துவதற்கான வழிகாட்டல் ஒன்றின் அபிவிருத்தி மீதான குழுமம், இலங்கைக்கும் ஐக்கிய அமெரிக்காவுக்கும் இடையிலான முன்மொழியப்பட்ட திறந்த வர்த்தக உடன்படிக்கை மீதான மீளாய்வு குழுமம், சுற்றுலா செய்மதிக்கணக்கு அபிவிருத்தி மீதான குழுமம் மற்றும் அரச நிதியியல் புள்ளிவிபர ஒருங்கிணைப்புக் குழுமம் போன்ற வெளியே பிரதிநிதித்துவப்படுத்திய குழுமங்கள் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளது. மேலும் கெக்ரர் கொப்பெக்கடுவ அக்ரேறியன் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மற்றும் இலங்கை நீடித்த வலு அதிகாரசபை என்பனவற்றின் சபை உறுப்பினர்களாக இரு அலுவலர்கள் கடமையாற்றினர். நாணயக் கொள்கைக் குழுக் கூட்டங்களை ஒருங்கிணைப்பதற்கு மேலதிகமாக, சந்தை நடவடிக்கைகள் குழுமம், உள்நாட்டுப் படுகடன் முகாமைத்துவக் குழுமம், நிதியியல்துறை உறுதிப்பாட்டுக் குழுமம் மற்றும் வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவ குழுமம் போன்ற இலங்கை மத்திய வங்கியின் பல்வேறுபட்ட உள்ளக குழுமங்களை இணைப்பதற்கு பங்குபற்றியதுடன் அவற்றிற்கான உள்ளீடுகளையும் திணைக்களம் வழங்கியுள்ளது.

### 8.4 உரிய நேரத்தில் நியதிச் சட்ட மற்றும் ஏனைய வெளியீடுகளைத் தயாரித்தல்.

இலங்கை மத்திய வங்கியின் நியதிச் சட்டம் மற்றும் ஏனைய அறிக்கைகளைத் தயாரிப்பது பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் பிரதான பொறுப்பாகும். முன்னைய ஆண்டுகளைப் போலவே 2014 இற்கான மத்திய வங்கியின் ஆண்டறிக்கையை மூன்று மொழிகளிலும் ஏனைய திணைக்களங்களின் உதவியுடன் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தயாரித்திருந்ததுடன் இதனைக் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் மாண்புமிகு நிதியமைச்சரிற்கு வழங்கியிருந்தது. இதற்கு மேலாக "அண்மைக்கால பொருளாதார அபிவிருத்திகள்: 2015இன் முக்கிய பண்புகள் மற்றும் 2016 இற்கான வாய்ப்புக்கள்" என்ற பொருளாதாரத்தின் நடுத்தர ஆண்டு மீளாய்வுகளை 2015 நவெம்பரில் வெளியிட்டது.

பொதுமக்களின் நன்மை கருதி பொருளாதாரத்தை வேறுபட்ட தோற்றப்பாடுகளின் முக்கிய பொருளாதார தரவுகள் மற்றும் தகவல்களைப் பரப்புதல் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் முக்கிய பொறுப்புகளில் ஒன்றாகும். இத்தகைய தேவையை நிறைவேற்றுவதில், நாணயக் கொள்கை நடவடிக்கைகளின் வெளிப்படையான தன்மையை மேம்படுத்துவதற்கும், பொருளாதாரத்தின் அண்மைய அபிவிருத்திகளை தொடர்பூட்டுவதற்காகவும் நாணயத்துறை செயலாற்றம் மீதான 12 பத்திரிகை வெளியீடுகளையும், வெளிநாட்டுத்துறை செயலாற்றம் மீதான 11 பத்திரிகை வெளியீடுகளையும் விடுவித்திருந்தது. மேலும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது மாதாந்த புள்ளிவிபரக் குறிப்பு அதேபோன்று ஏனைய பொருளாதார மற்றும் நிதியியல் குறிகாட்டிகள் என்பவற்றை நாளாந்த, வாராந்த, மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த அடிப்படையில் வெளியிட்டதுடன் தகவல் பரப்பும் செயன்முறையை மேலும் வலுப்படுத்துவதற்காக ஆண்டு காலப்பகுதியில் பயன்தரு பொருளாதாரம் மற்றும் நிதியியல் தரவுகளை உள்ளடக்கிய பேரண்டப் பொருளாதார வரைபடைத் தொகுப்பையும் தொடர்ந்தும் மத்திய வங்கியின் இணையத்தளத்தில் வெளியிட்டது. அதேவேளை மத்திய வங்கியின் கொள்கை அறிக்கையான "வழிகாட்டல் 2015: 2015 இற்கும் அதற்கு அப்பாலுமான நாணய மற்றும் நிதியியல் துறை கொள்கைகளை" 2015 சனவரி 02இல் பொதுமக்களுக்கு அறிவித்திருந்தது.

### 8.5 கொள்கை ஆய்வுகளில் ஈடுபடுதலும் சமகால பிரச்சனைகள் மீதான பொதுமக்கள் விழிப்புணர்வினை மேம்படுத்தலும்

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது, நாணயக் கொள்கைக் குழு மற்றும் நாணயச் சபையினால் நாணயக் கொள்கை மீதான முற்கூட்டிய தீர்மானம் மேற்கொள்ளலை வசதிப்படுத்துவதற்காக கிரமமான அடிப்படையில் அனைத்தையுமுள்ளடக்கிய பொருளாதார மற்றும் நாணய பகுப்பாய்வுகளைத் தயாரிப்பதில் தொடர்ந்தும் ஈடுபட்டது. நாணயச் சபைக்கு நாணயக் கொள்கை பரிந்துரைப்புக்களை வசதிப்படுத்துவதற்கு பணவீக்கத்தின் கேள்வி மற்றும் நிரம்பல் பக்க பகுப்பாய்வு, முக்கிய பேரண்டப் பொருளாதார துறைகளின் அபிவிருத்தி மற்றும் பிரச்சனைகள் மற்றும் மூலதன மற்றும் நிதியியல் சந்தைகளின் அபிவிருத்திகள் என்பனவற்றை உள்ளடக்கிய பணவீக்கத்தின் அபிவிருத்திகள், உள்நாட்டுப் பொருளாதாரம் மீதான அதன்தாக்கம் மற்றும் பூகோள பொருளாதார அபிவிருத்திகளின் பகுப்பாய்வினை வழங்குவதற்காக பொருளாதாரத்தின் நிலை மீதான இற்றைப்படுத்தல்களை நாணயக் கொள்கைக் குழு தொடர்ந்தும் மேற்கொண்டது.

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினுள் ஆராய்ச்சி மற்றும் அறிவாற்றலைப் பகிர்ந்துகொள்ளும் நடவடிக்கைகளை வசதிப்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட ஆராய்ச்சி மதியுரை குழுமம் 2015 இலும் அதன் செயற்பாடுகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்களின் ஆராய்ச்சித் திறனை மேம்படுத்தும் நோக்கில் ஆராய்ச்சி மதியுரை குழுமத்தினால் ஆராய்ச்சி முறைமை பயிற்சிப்பட்டறை வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது. பயிற்சிப்பட்டறையில் பங்குபற்றிய பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் அலுவலர்கள் திணைக்களத்தினுள் ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதுவதற்கு வழிகாட்டவும் வசதிப்படுத்தவும் மேற்பார்வையாளர்களாக ஒதுக்கப்பட்டனர். நிறைவு செய்யப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள் 2016ஆம் ஆண்டு காலத்தில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் கருத்தரங்குகளில் கலந்துரையாடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2012இல் நிறுவப்பட்ட பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் பேரண்டப் பொருளாதார மாதிரிப் பிரிவானது, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் அலுவலர்களுக்கு ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சாதகமான ஆராய்ச்சி சூழலையும் தொழில்நுட்ப மென்பொருளையும் வழங்குகின்றது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்களின் இரண்டு ஆராய்ச்சிக் கட்டுரைகளை உள்ளடக்கிய மத்திய வங்கியின் ஆராய்ச்சி சஞ்சிகையான அலுவலர் ஆய்வின் 44வது தொகுதியை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் வெளியிட்டிருந்தது. மேலும் “இலங்கையின் நாணயக் கொள்கை” என்ற ஒரு கல்வி நூலேடு வரையப்பட்டதுடன் 2016இல் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளையில் துருக்கியில் நடைபெற்ற பன்னாட்டு ஆராய்ச்சி மாநாட்டில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர் ஒருவரால் ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது. தென்கிழக்காசிய மத்திய வங்கிகளினால் ஒழுங்கமைக்கப்பட்ட “தளம்பலுடன் வாழ்தல்” மீதான பயிற்சிப்பட்டறையில் இன்னொரு அலுவலர் கலந்துகொண்டதுடன், “இலங்கையின் மூலதன பாய்ச்சல் மற்றும் மத்திய வங்கி கொள்கைகளுக்கான அவற்றின் தாக்கம்” என்ற ஆராய்ச்சிக் கட்டுரை நிறைவு செய்யப்பட்டது. ஆண்டு காலப்பகுதியில் தோற்றம் பெற்றுவரும் பிரச்சனைகள் தொடர்பிலான அறிவாற்றலை மேம்படுத்தவும், பரிமாற்றிக்கொள்ளவும் 16 திணைக்களச் செயலமர்வுகள் நடாத்தப்பட்டன. மேலும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது மனிதவளத் திணைக்களத்துடனும் பயிற்சி மற்றும் அபிவிருத்தி திணைக்களத்துடனும் இணைந்து பல்வேறு துறைகளின் நிபுணர்களை அழைத்து தங்கள் அறிவாற்றலையும் அனுபவத்தினையும் வங்கி அலுவலர்களிடம் பகிர்ந்து கொள்வதற்காக “மாதாந்த பொருளாதார அரங்கத்தினை” ஒழுங்கு செய்தது.

மத்திய வங்கிக்கு உள்ளேயும் வெளியேயும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது பொருளாதாரம் மீதான அறிவினை மேம்படுத்துவதனையும் அதன் அலுவலர்களது நிபுணத்துவத்தினை பகிர்ந்தளிப்பதனையும் தொடர்ந்தும் மேற்கொண்டது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் அலுவலர்கள் வங்கித்தொழில் கற்கை நிலையம் மற்றும் பல்கலைக்கழகம், பாடசாலைகள் மற்றும் பல்வேறுபட்ட ஏனைய அரச மற்றும் தனியார்துறை நிறுவனங்கள் போன்ற கல்வி நிறுவனங்கள் என்பவற்றில் வளவாளர்களாகக் கடமையாற்றினர். இதற்கு மேலாக பொருளாதார ஆராய்ச்சி திணைக்கள அலுவலர்கள் வங்கிக்கு வருகைதந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தூதுக் குழுவினருக்கு மத்திய வங்கி மற்றும் பேரண்டப் பொருளாதார அபிவிருத்தி மீதான சமர்ப்பிப்புக்களை மேற்கொண்டனர். மேலும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் மூத்த அலுவலர்கள் ஆராய்ச்சிப் பிரேரணை மற்றும் ஆராய்ச்சிக் கட்டுரைகளைத் தயாரிப்பதற்கு மத்திய வங்கியின் பட்டப்பின் படிப்பு ஆர்வலர்களுக்கு தொடர்ந்தும் உதவிவந்தது. அதன்படி, 2015 ஆம் ஆண்டு காலத்தில் 17 ஆராய்ச்சிக் கட்டுரைகளும் 29 ஆராய்ச்சி முன்மொழிவுகளும் மதிப்பிடப்பட்டன. அதேவேளையில் உயர்தர மாணவர்களுக்கு நன்மையளிக்கும் வகையில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் பல்வேறு அலுவலர்களும் “தக்சிலாவ” தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டத்தில் வளவாளர்களாகத் தமது பணியை மேற்கொண்டனர். அதேபோன்ற ஒரு நிகழ்ச்சித்திட்டம் முதன் முதலாக தமிழ் மொழியில் “அறிவூற்று” என்ற பெயரில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்களின் பங்குபற்றலுடன் நடாத்தப்பட்டது. மேலும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது இலங்கை வங்கியாளர் நிறுவனத்தின் “வங்கிகளுக்கிடையிலான வினாடி வினா போட்டி” நிகழ்ச்சித் திட்டத்தை நடாத்துவதற்கும் உதவி புரிந்தது.

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் ஆய்வாளர்கள் மத்திய வங்கியுடன் தொடர்புடைய விடயங்கள் மீதான கோட்பாடு மற்றும் நடைமுறைச் சான்றான ஆய்வுகளை சமர்ப்பிப்பதற்கானதொரு களத்தை வழங்கிய அதேவேளை நடைமுறை விடயங்கள் தொடர்பில் ஆய்வுகளை மேம்படுத்தும் நோக்கில் சர்வதேச ஆய்வு மாநாட்டை தொடர்ச்சியாக எட்டாவது ஆண்டாக 2015இலும் வெற்றிகரமாக ஒருங்கமைத்திருந்தது. இவ்வருட மாநாடானது “உலக பொருளாதார சவால்களும் தோற்றம் பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்களின் பேரினப்பொருளாதார கொள்கை உருவாக்கத்திலான விளைவுகள்” எனும் பரந்த தொனிப்பொருளின் கீழ் நடைபெற்றது. பிராந்தியத்தில் சர்வதேச மாநாடு என்ற வகையில் பிரசித்தி அடைந்துவரும் இம்மாநாடானது கல்விசார், மத்திய வங்கிகள், அரச நிறுவனங்கள், கொள்கை நிறுவனங்கள் மற்றும் ஆய்வு நிறுவனங்களின் சிறப்புக்குரிய அங்கத்தவர்களை ஒன்று சேர்த்திருந்ததுடன் 2015இன் சர்வதேச ஆய்வு மாநாடானது 100 இற்கும் மேற்பட்ட ஆய்வு முன்மொழிவுகளை கவர்ந்திருந்தது. கவனமானதும் மிகநுண்ணிய மீளாய்வு செயன்முறைக்கும் பின்னர் பிரான்ஸ், போத்துக்கல், நெதர்லாந்து, இந்தியா அதேபோன்று பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்திலிருந்து மூன்று ஆய்வாளர்கள் என்போரை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் நாணயக் கொள்கை மற்றும் பேரினப் பொருளாதார பிரச்சினைகள் அதேபோன்று நிதியியல் துறை பிரச்சினைகள் போன்ற விடயங்களில் எட்டு ஆய்வுக் கட்டுரைகள் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இவ்வருட மாநாடானது மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட சிறந்த ஆய்வுக் கட்டுரைக்கான டி.எஸ்.விஜேசிங்க ஞாபகார்த்த விருதினையும் கொண்டிருந்தது. அதேநேரம், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் 2014இல் நடைபெற்ற சர்வதேச ஆய்வு மாநாட்டின் கட்டுரைகளையும் வெளியிட்டிருந்தது.

### 8.6 பன்னாட்டு அமைப்புக்களுடனான தொடர்புகளை வலுப்படுத்தல்.

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது இலங்கை மத்திய வங்கி மற்றும் அரசின் சார்பாக பன்னாட்டு நாணய நிதியம், தென்கிழக்காசிய மத்திய வங்கிகளின் நிலையம், சியென்ஸா குழுமம் மற்றும் சார்க் நிதியம் போன்ற பன்னாட்டு பல்புடை நிதியியல் அமைப்புக்களுடனான உறவுகளைத் தொடர்ந்தும் பேணியது. மேலும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது, உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஏனைய முகவர்களுடன் அவற்றின் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்கு நிதியமைச்சிற்கு உதவியது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் அலுவலர்கள் சார்க் நிதிய குழுக் கூட்டம், சார்க் நிதிய ஆளுநர்களின் மாநாடு, சார்க் நிதிய ஒருங்கிணைப்பாளர்

கூட்டம் மற்றும் அரசுகளுக்கிடையிலான திறன்வாய்ந்த குழு போன்ற சார்க் நிதிய செயற்பாடுகளில் பிராந்திய மத்திய வங்கிகளிலிருந்தான ஏனைய ஒருங்கிணைப்பாளர்களை ஒருங்கிணைப்பதிலும் ஒத்துழைப்புச் செய்தனர். மேலும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது சார்க் நிதிய தரவுத்தளம், இலத்திரனியல் செய்திக்கடிதத்தின் அரையாண்டு மற்றும் ஏனைய சார்க் நிதிய அறிக்கைகளுக்கான தரவுகள், தகவல்கள் மற்றும் பதிவிடல் என்பவற்றை வழங்குகின்ற அதேவேளையில், சார்க் நிதிய ஊழிய பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டங்களுக்கான பழக்கப்படுத்தல்களையும் மற்றும் பயிற்சித் திட்டங்களையும் ஒருங்கிணைத்தது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது பன்னாட்டு நாணய நிதிய உறுப்புரை IV இற்கான ஆலோசனை தூதுக்குழு மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்தின் நான்காவது நிகழ்ச்சித்திட்டத்திற்கு பின்னைய கண்காணிப்பு தூதுக்குழு சிறப்புத் தரவு பரப்புதல் நியம தூதுக்குழு, அரச நிதியியல் புள்ளிவிபரத் தூதுக்குழு, நாணய புள்ளிவிபர தூதுக்குழு மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்தின் தெற்காசிய பிராந்திய பயிற்சி மற்றும் தொழில்நுட்ப உதவி மையத்தின் தூதுக்குழு போன்ற பன்னாட்டு முகவர்களின் பிரதிநிதிகளின் வருகைக்கு வசதியளித்தது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள ஊழியர்கள் கொள்கை கலந்துரையாடலுக்கு ஒத்துழைக்கின்ற பன்னாட்டு கூட்டங்கள், அரங்கங்கள் மற்றும் மாநாடுகளில் கிரமமாக மத்திய வங்கியைப் பிரதிநிதித்துவப்படுத்தினர். இதன்படி, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் அலுவலர்கள் தென்கிழக்காசிய மத்திய வங்கிகளின் பொருளாதாரங்களின் நாணய பரிமாற்றல் பொறிமுறை அதேபோன்று மூலதன ஒதுக்கு முகாமைத்துவம் மீதான தென்கிழக்காசிய மத்திய வங்கிகளின் பயிற்சிப்பட்டறையில் கலந்துகொண்டனர். மேலும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினால் “பணியிலுள்ள வியாபாரத்தின் வெளிநாட்டு புள்ளிவிபர மேம்பாடு” என்ற ஒரு பன்னாட்டுப் பயிற்சிப்பட்டறை ஒழுங்கு செய்யப்பட்டதுடன் வெளிநாட்டுத்துறை புள்ளிவிபரங்களை மேம்படுத்துவதற்கான தொழில்நுட்ப உதவியும் பெறப்பட்டது.

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது பன்னாட்டு நாணய நிதியம் மற்றும் உலக வங்கி போன்ற பன்னாட்டு அமைப்புக்கள் அதேபோன்று பன்னாட்டு முதலீட்டாளர்கள், நாட்டிற்கான பன்னாட்டு முதலீட்டாளர்கள், நாட்டிற்கான பன்னாட்டு தரமிடல் முகவர்கள் மற்றும் ஆலோசகர்கள், தூதுவர்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய ஆர்வலர்களுக்கு கிரமமான அடிப்படையில் பொருளாதார இற்றைப்படுத்தல்கள் மற்றும் பேரண்டப் பொருளாதார புள்ளிவிபரங்களைத் தொடர்ந்தும் வழங்கியது, அதேவேளை, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது பன்னாட்டு நாணய நிதியத்தின் நெருக்கமான கண்காணிப்பின் கீழ் வெற்றிகரமான பரீட்சை மாதிரியொன்று நடாத்தப்பட்டதைத் தொடர்ந்து பொதுத் தரவு பரப்புதல் நியமத்திலிருந்து நவெம்பர் 2015இல் ஆரம்பிக்கும் வகையில் சிறப்புத் தரவு பரப்புதல் நியமத்திற்கு இலங்கை அங்கத்துவம் வகிப்பதற்கு வசதியளித்தது. சிறப்புத் தரவு பரப்புதல் நியமம் ஏற்றுக்கொள்ளப்பட்டதிலிருந்து முக்கியமாக தரவு தொகுத்தலின் நிலையான தன்மை தரவுகளின் தரமேம்பாடு மற்றும் வெளிப்படையான தன்மையின் ஊடாக இலங்கை நன்மையடையும். பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் மூன்று நாட்டிற்கான பன்னாட்டுத் தரமிடல் முகவர்கள் முறையே பிட் ஜ் தரமிடல், ஸ்டான்டட் அன்ட் புவர் தரமிடல் மற்றும் மூடிஸ் தரமிடல் சேவை என்பவற்றுடன் நெருக்கமாகப் பணியாற்றியது. மேலும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் கொள்கை தொடர்பான விசாரணைகளுக்கு பதிலிறுத்துதல் மற்றும் அனைத்து ஆவணப்படுத்தல் உதவிகளை வழங்குதல் என்பவற்றுடன் 2015 மே மற்றும் ஒத்தோபரில் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறி வழங்கலின் ஏழாவது மற்றும் எட்டாவது வழங்கலுக்கான பொருளாதார இற்றைப்படுத்தலுடன் கூடிய விரிவுரைகளைத் தயாரித்தல் என்பனவற்றையும் பொறுப்பேற்றது.

## 9. ஊழியர் சேம நிதியம்

அரசுசார் மற்றும் தனியார் துறை ஊழியர்களுக்கு ஓய்வூதிய நன்மைகளை வழங்கும் பொருட்டு இலங்கையின் மிகப்பெரிய ஓய்வூதிய நிதியமான ஊழியர் சேம நிதியம் 1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சேம நிதிச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளின்படி, நிதியத்தின் அனைத்து நிருவாக அதிகாரங்களும் செயற்பாடுகளும் தொழில் ஆணையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள வேளையில் நிதிய முகாமைத்துவத்தின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் என்பன நிதியத்தின் கட்டுக்காப்பாளர் என்ற முறையில் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. நாணயச் சபை அதன் செயற்பாட்டினை ஆற்றுவதில் ஒரு தொழிற்பாட்டு சக்தியாக தொழிற்படுவதற்காக ஊழியர் சேம நிதியத் திணைக்களத்திற்கு அதிகாரங்களை வழங்கியுள்ளது.

### 9.1 திணைக்களத்தின் தொழிற்பாடுகள்

உறுப்பினர் பங்களிப்புக்களையும் மேலதிகக் கட்டணங்களையும் சேகரித்தல், பொதுக் கணக்குகளையும் உறுப்பினர் கணக்குகளையும் பேணுதல், உறுப்பினர் கணக்குகளுக்கு வட்டியை வரவு வைத்தல், நிதியத்தின் நன்மைபெறுநர்களுக்கு நன்மைகளை கொடுப்பனவு செய்தல், மிகையான நிதியங்களை முதலீடு செய்தல் மற்றும் நாணயச் சபையும் தொழில் ஆணையாளரும் அவர்களின் கடமைகளையும் தொழிற்பாடுகளையும் ஆற்றுகையில் உறப்படுகின்ற செலவினங்களை விதித்தல் ஆகிய பொறுப்புக்கள் ஊ.சே. நிதியத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. 2015இல் ஊ.சே. நிதியத் திணைக்களம் நாணயச் சபையின் ஒப்புதலளிக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் பணிப்புரைகளின்படி மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததுடன் தொழில் ஆணையாளருடனும் நெருங்கிய ஒத்துழைப்புடன் செயற்பட்டது.

### 9.2 நடவடிக்கைகளின் செயலாற்றம்

#### (அ) உறுப்புரிமை, உறுப்பினர் நிலுவைகள் மற்றும் மீளளிப்புக்கள்

2015 இறுதியில் உறுப்பினர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை ஏறத்தாழ 16.0 மில்லியனாக மதிப்பிடப்பட்டது. இது, 2014ஆம் ஆண்டின் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 15.8 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 1.3 சதவீத அதிகரிப்பாக காணப்படுகிறது (அட்டவணை II -7).

2015 இறுதியில் நிதியத்தின் மொத்தப் பெறுமதியானது 2014 இறுதியின் ரூ.1,486.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.1,664.9 பில்லியனுக்கு 12.0 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு முதலீடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட வருமானம் மற்றும் பெறப்பட்ட தேறிய பங்களிப்பு (பங்களிப்புக்களிலிருந்து மீளளிப்புக்களைப் கழித்ததன் பின்னர்) ஆகிய இரண்டுமே காரணங்களாகும். உறுப்பினர் வட்டி உட்பட உறுப்பினர்களுக்கான மொத்தப் பொறுப்பு 2015 இறுதியில் ரூ.1,625.5 பில்லியனாக விளங்கி 2014 இறுதியில் காணப்பட்ட ரூ.1,445.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 12.5 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தது (அட்டவணை II.7). தேறிய பங்களிப்பு முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூ.24.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.24.7 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்த வேளையில், 2015இல் உறுப்பினர்களுக்கும் அவர்களது சட்டரீதியான வாரிசுகளுக்கும் வழங்கப்பட்ட மொத்த மீளளிப்புக்கள் ரூ.77.8 பில்லியனாகக் காணப்பட்டது. இது 2014இனைவிட 19.5 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும். இதற்கு உறுப்பினர் நிலுவைகளுக்கு எதிராக வீடமைப்பு மற்றும் மருத்துவ தேவைகளுக்காக 30 சதவீதம் கொண்ட மீளப்பெறுகை வசதியின் கீழ் பெறப்பட்ட மீளப்பெறுகைகளே முக்கிய காரணமாகும். நிதியத்தின் தேறிய வருமானம் முன்னைய ஆண்டின் ரூ.150.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2015இல் ரூ.156.9 பில்லியனுக்கு அதிகரித்து 4.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவு செய்தது.

**அட்டவணை II-7 நிதியத்தின் தெரிந்தெடுக்கப்பட்ட முக்கிய குறிகாட்டிகள்**

| விடயம் | 2014 | 2015 (அ) | மாற்றம் (%) |
|---|---|---|---|
| உறுப்பினர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை (மில்) | 15.8 | 16.0 | 1.3 |
| பங்களிப்புச் செலுத்தும் உறுப்பினர் கணக்குகள் (மில்) | 2.4 | 2.4 | - |
| பங்களிப்புச் செலுத்தாத உறுப்பினர் கணக்குகள் (மில்) | 13.4 | 13.6 | 1.5 |
| பங்களிப்புச் செலுத்தும் தொழில்தருநர்கள் | 69,683 | 72,917 | 4.6 |
| மொத்தப் பங்களிப்புக்கள் (ரூ.பில்.) | 90.0 | 102.5 | 13.9 |
| மொத்த மீளளிப்புக்கள் (ரூ.பில்.) | 65.1 | 77.8 | 19.5 |
| மீளளிப்புக்களின் எண்ணிக்கை | 127,951 | 127,107 | (0.7) |
| தேறிய வருமானம் (ரூ.பில்.) | 150.7 | 156.9 | 4.1 |
| உறுப்பினர்களுக்கான மொத்த பொறுப்பு (ரூ.பில்.) | 1,445.5 | 1,625.5 | 12.5 |
| நிதியின் மொத்தப் பெறுமதி (ரூ.பில்.) | 1,486.9 | 1,664.9 | 12.0 |

(அ) தற்காலிகமானவை — மூலம்: ஊசேநி திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

**(ஆ) நிதியங்களின் முதலீடும் வருமானமும்**

**(i) முதலீட்டுச் சொத்துப்பட்டியல்:**

நிதியத்தின் மொத்த முதலீட்டுச் சொத்துப்பட்டியல் (ஏட்டுப்பெறுமதி) 2014இன் ரூ.1,437.7 பில்லியனிலிருந்து 2015இல் ரூ.1,604.2 பில்லியனுக்கு 11.6 சதவீதத்தினால் அதிகரித்தது (அட்டவணை II-8). நிதியத்தின் முதலீட்டுக் கொள்கையானது உறுப்பினர்களுக்கு நீண்ட கால நேர்க்கணிய உண்மை வீத வருமானத்தினை வழங்குவதன் மீது தொடர்ந்தும் கவனத்தினைச் செலுத்திய வேளையில் நிதியத்தின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டதுடன் மீளளிப்புக் கொடுப்பனவுகளையும் நிதியத்தின் ஏனைய செலவுகளையும் ஈடுசெய்யக்கூடிய விதத்தில் திரவத்தன்மையும் போதுமான மட்டத்தில் பேணப்பட்டது.

முதலீட்டுச் சொத்துப்பட்டியல் அரச பிணையங்களிலான 92.7 சதவீதத்தினையும் பங்குரிமை மூலதனங்களிலான 5.5 சதவீதத்தினையும் கம்பனித் தொகுக்கடன்கள், வர்த்தகப் பத்திரம் மற்றும் நம்பிக்கைச் சான்றிதழ்கள் என்பனவற்றிலான 1.6 சதவீதத்தினையும் உள்ளடக்கியிருந்தது. எஞ்சிய 0.2 சதவீதம் நாளாந்த திரவத்தன்மை தேவைப்பாடுகளை ஈடுசெய்வதற்காக அரச பிணையங்கள் தொடர்பான நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் போன்ற உயர்ந்த திரவத்தன்மை சொத்துக்களாகக் காணப்பட்டன. அரச பிணையங்கள் சொத்துப்பட்டியலின் முதிர்ச்சித் தோற்றப்பாடு விளைவு வீதங்களுடன் அட்டவணை II-9இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை II-8 முதலீட்டுச் சொத்துப்பட்டியல்**

| முதலீட்டின் வகை | 2014 | | 2015(அ) | |
|---|---|---|---|---|
| | தொகை (ரூ. பில்) | பங்கு (%) | தொகை ரூ. பில் | பங்கு (%) |
| திறைசேரி முறிகள் மற்றும் உண்டியல்கள் | 1,287.5 | 89.6 | 1,487.0 | 92.7 |
| அரசிற்கான ரூபாக் கடன்கள் | 23.1 | 1.6 | - | - |
| உரிமை மூலதனம் | 96.6 | 6.7 | 87.6 | 5.5 |
| கம்பனிப் படுகடன்கள் | 22.4 | 1.5 | 25.5 | 1.6 |
| நேர்மாற்று மீள்கொள்வனவுகள் | 8.1 | 0.6 | 4.1 | 0.2 |
| **மொத்தம்** | **1,437.7** | **100.0** | **1,604.2** | **100.0** |

(அ) தற்காலிகமானவை — மூலம்: ஊசேநி திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை II-9 அரச பிணையங்கள் சொத்துப்பட்டியலின் முதிர்ச்சித் தோற்றப்பாடு (2015 இறுதியிலுள்ளவாறு)**

| முதிர்ச்சிக் காலம் | முதிர்ச்சிப் பெறுமதி (ரூ. பில்) (அ) | பங்கு (%) | நிறையேற்றப் பட்ட சராசரி விளைவு (%) |
|---|---|---|---|
| 1 ஆண்டுக்குக் குறைந்தது | 49.8 | 3.1 | 9.60 |
| 1 - 2 ஆண்டுகள் | 181.1 | 11.2 | 10.78 |
| 3 - 4 ஆண்டுகள் | 168.4 | 10.4 | 10.01 |
| 5 ஆண்டுகளுக்கும் கூடியது | 1,215.0 | 75.3 | 11.13 |
| **மொத்தம்** | **1,614.3** | **100.0** | **10.93** |

(அ) தற்காலிகமானவை — மூலம்: ஊசேநி திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

**(ii) முதலீட்டு வருமானம்:**

2015இல் நிதியம் ஈட்டிய மொத்த முதலீட்டு வருமானம் ரூ.171.5 பில்லியனாக விளங்கி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 5.1 சதவீதமான அதிகரிப்பினைப் பதிவுசெய்தது (அட்டவணை II-10). நிதியத்திற்கான வருமானத்தின் முக்கிய மூலமாக (வருமானத்தின் 83.4 சதவீதம்) வட்டி வருமானம் காணப்பட்டது. வட்டி வருமானம் 2014இன் ரூ.127.5 பில்லியனிலிருந்து 2015இல் ரூ.143.1 பில்லியனுக்கு 12.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. மேலும், மூலதன இலாபங்கள் மற்றும் பங்கிலாபம் இரண்டினையும் உள்ளடக்கிய பங்குரிமை மூலதனச் சொத்துப்பட்டியலிருந்து உருவாக்கப்பட்ட வருமானம் 2014இல் உழைக்கப்பட்ட ரூ.5,598 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2015இல் ரூ.4,065 மில்லியனுக்கு 27.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. எனினும், கழிவிடப்பட்ட திறைசேரி முறிகளிலிருந்தான கடன் தீர்ப்பனவு இலாபம் 2014இன் ரூ.25.9 பில்லியனிலிருந்து 2015இல் ரூ.26.6 பில்லியனுக்கு 2.7 சதவீதத்தினால் அதிகரித்தது (அட்டவணை II-10).

**அட்டவணை II-10 முதலீடு மீதான வருமானம்**

| வருமானத்தின் மூலம் | 2014 | | 2015(அ) | |
|---|---|---|---|---|
| | தொகை (ரூ. மில்) | பங்கு (%) | தொகை (ரூ. மில்) | பங்கு (%) |
| வட்டி | 127,499 | 78.1 | 143,055 | 83.4 |
| கடன் தீர்ப்பனவு இலாபம் | 25,897 | 15.9 | 26,591 | 15.5 |
| அரச பிணையங்களிலிருந்தான மூலதன இலாபம் | 4,082 | 2.5 | 1,171 | 0.7 |
| சந்தைப்படியான இலாபம் இழப்புக்கள் | 89 | 0.1 | (394) | (0.2) |
| பங்குரிமை மூலதனத்திலிருந்தான மூலதன இலாபம் | 2,277 | 1.4 | 553 | 0.3 |
| பங்கு இலாபங்கள் | 3,321 | 2.0 | 3,512 | 2.0 |
| சொத்துக்களின் பெறுமதியிழப்பு | - | - | (2,956) | (1.7) |
| மொத்தம் | 163,165 | 100.0 | 171,532 | 100.0 |

(அ) தற்காலிகமானவை — மூலம்: ஊசேநி திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

**(iii) செலவினம்:**

நிதியத்தின் மொத்தத் தொழிற்பாட்டுச் செலவினம் 2014இன் ரூ.1,043 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2015இல் ரூ.1,191 மில்லியனுக்கு 14.2 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் மொத்த வருமானத்தின் விகிதமாக இது 2014இன் 0.64 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2015இல் 0.69 சதவீதத்திற்கு சிறிதளவில்

அதிகரித்தது (அட்டவணை II-11). இவ்வாண்டுகளில், நிதியமானது அதன் தொழிற்பாட்டுச் செலவினத்தினை மொத்த வருமானத்தின் 1 சதவீதத்திற்கும் குறைவான மட்டத்தில் பேணக்கூடியதாக இருந்தது.

**அட்டவணை II-11 தொழிற்பாட்டுச் செலவினங்கள்**

| விடயம் | தொகை (ரூ.மில்.) | | மாற்றம் (%) |
|---|---|---|---|
| | 2014 | 2015(அ) | |
| ஆளணிச் செலவினங்கள் | 579 | 749 | 29.4 |
| நிர்வாகச் செலவினங்கள் | 421 | 397 | (5.7) |
| ஏனைய செலவினங்கள் | 43 | 45 | 4.7 |
| **மொத்தம்** | **1,043** | **1,191** | **14.2** |
| **மொத்த வருமானத்தின் % ஆக மொத்தச் செலவினங்கள்** | **0.64** | **0.69** | |

(அ) தற்காலிகமானவை

மூலம்: ஊசேநி திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

**(இ) உறுப்பினர் நிலுவைகள் மீதான வட்டிக் கொடுப்பனவு**

2015ஆம் ஆண்டிறுதியில் நிதிய உறுப்பினர்களுக்கான வட்டிக் கொடுப்பனவாக பகிர்ந்தளிப்பதற்கு கிடைக்கத்தக்கதாக இருந்த தொகை 2014இன் ரூ.141.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.154.4 பில்லியனாகக் காணப்பட்டது (அட்டவணை II-12).

**அட்டவணை II-12 உறுப்பினர்களுக்கான வட்டிக் கொடுப்பனவு**

| விடயம் | தொகை (ரூ.மில்லியன்) | | மாற்றம் (%) |
|---|---|---|---|
| | 2014 | 2015(அ) | |
| மொத்த வருமானம் | 163,873 | 171,855 | 4.9 |
| மொத்த தொழிற்பாட்டு செலவினங்கள் | (1,043) | (1,191) | 14.2 |
| வருமான வரி | (12,169) | (13,727) | 12.8 |
| ஆண்டுக்கான தேறிய வருமானம் | 150,662 | 156,937 | 4.2 |
| முன்னைய ஆண்டுக்கான திருத்தம் | - | - | - |
| முன்னைய ஆண்டுக்கான பிடித்துவைத்தல் இலாபம் | 141 | 311 | 120.6 |
| நடைமுறை ஆண்டுக்கான மீளளிப்புக்கள் மீதான வட்டிக் கொடுப்பனவு | (3,201) | (2,833) | (11.5) |
| பங்கு இலாப ஏற்பாடுகள் | (6,000) | - | (100.0) |
| பகிர்ந்தளிப்புக்காக கிடைக்கத்தக்கதாகவுள்ள தேறிய வருமானம் (நடைமுறை ஆண்டுக்கான மீளளிப்புக்கள் மீதான வட்டி கொடுப்பனவுக்கு பின்) | 141,602 | 154,416 | 9.0 |
| ஒதுக்குகளில் இருந்து / (இற்கு) மாற்றல்கள் | (4,000) | - | (100.0) |
| ஒதுக்குகளில் இருந்து / (இற்கு) மாற்றல்களுக்கு பின் பகிர்ந்தளிப்புக்காக கிடைக்கத்தக்கதாகவுள்ள தேறிய வருமானம் | 137,602 | 154,416 | 12.2 |
| உறுப்பினர் நிலுவைகள் மீது செலுத்தப்பட்ட வட்டி | (137,291) | (154,200) | 12.3 |
| பிடித்துவைத்தல் இலாபம் | 311 | 216 | (30.5) |
| உறுப்பினர் நிலுவைகள் மீது செலுத்தப்பட்ட வட்டி வீதம் (%) | 10.5 | 10.5 | |

மூலங்கள் : ஊசேநி இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானவை

**அட்டவணை II-13 உறுப்பினர் நிலுவைகள் மீது செலுத்தப்பட்ட வட்டி வீதம்**

| ஆண்டு | வழங்கப்பட்ட வட்டிவீதம் (%) | பயனுறு வட்டிவீதம் (%)[1] |
|---|---|---|
| 2005 | 9.00 | 9.13 |
| 2006 | 10.10 | 10.30 |
| 2007 | 11.20 | 11.40 |
| 2008 | 13.20 | 13.44 |
| 2009 | 13.75 | 13.92 |
| 2010 | 12.50 | 12.65 |
| 2011 | 11.50 | 11.58 |
| 2012 | 11.50 | 11.62 |
| 2013 | 11.00 | 11.14 |
| 2014 | 10.50 | 10.60 |
| 2015 (அ) | 10.50 | 10.57 |

(அ) தற்காலிகமானவை

மூலம்: ஊசேநி திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

[1] பயனுறு வட்டி வீதம் = (உறுப்பினர்களுக்கு செலுத்தப்பட்ட வட்டி)/ [(ஆண்டின் ஆரம்பத்திலுள்ள உறுப்பினர் நிலுவை + வட்டியை செலவு வைப்பதற்கு முன்னரான ஆண்டிறுதியிலுள்ள உறுப்பினர் நிலுவை)/2]

**9.3 உறுப்பினர் பணிகள்**

**(அ) உறுப்பினர் கணக்குக் கூற்றுக்கள்**

2015ஆம் ஆண்டின் முதலரைப் பகுதிக்கான உறுப்பினர் கணக்குக் கூற்றுக்கள் அவர்களது தொழில்தருநர்களினூடாக வழங்கும் பணி 2016 சனவரியிலிருந்து ஆரம்பமானது. 2015ஆம் ஆண்டின் பின்னரைப் பகுதிக்கான கணக்குக் கூற்றுக்களை 2016 யூலையில் வழங்குவதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் பணியின் வினைத்திறனை அதிகரிப்பதற்காக அரையாண்டு உறுப்பினர் கணக்குக் கூற்றுக்களை அச்சிட்டு அஞ்சல்படுத்தும் பணிகள் தொடர்பான கட்டுப்பாடுகளுடன் வெளியிலிருந்து பணி வழங்குவோரிடம் ஒப்படைக்கப்பட்டன.

**(ஆ) வீடமைப்புக் கடன் வசதி**

வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி, அரச ஈட்டு முதலீட்டு வங்கி, இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் கூட்டுறவு கிராமிய வங்கிகள் ஆகிய பங்கேற்கும் கடன் வழங்கும் நிறுவனங்களிடமிருந்து வீடமைப்புக் கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கு உறுப்பினர்களுக்கு வசதியளிக்கும் குறிக்கோளுடன் 1988இல் அறிமுகப்படுத்தப்பட்ட வீடமைப்புக் கடன் திட்டம் 2015இலும் தொடர்ந்ததுடன் ஊழியர் சேம நிதிய உறுப்பினர்களுக்கு இன்றியமையாத பணிகளை வழங்குகின்றது.

இத்திட்டத்தின் கீழ் ஊழியர் சேம நிதியம் ரூ.5,489 மில்லியன் கொண்ட வீடமைப்புக் கடன்களின் ஒப்புதலுக்காக பங்கேற்கும் கடன் வழங்கல் நிறுவனங்களுக்கு உறுப்பினர்களின் ஊழியர் சேம நிதிய நிலுவைகளுக்கெதிராக அவர்களுக்கு 13,132 உத்தரவாதச் சான்றிதழ்களை வழங்கியது (அட்டவணை II-14). மேலும், 2015இல் தொடர்பான உறுப்பினர் கணக்குகளிலிருந்து ஏறத்தாழ ரூ.2,522 மில்லியன் கழிக்கப்பட்டு, 2014ஆம் ஆண்டுப் பகுதியில் நிலுவையிலிருந்த கடன்களை தீர்ப்பனவு செய்வதற்காக பங்கேற்கின்ற கடன் வழங்கல் நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

அட்டவணை II-14 வீடமைப்புக் கடன் வசதி

| ஆண்டு | வழங்கப்பட்ட சான்றிதழ்கள் (எண்ணிக்கை) | ஒப்புதலளிக்கப்பட்ட கொடுகடன் (ரூ.மில்) | கடன் வழங்கல் நிறுவனங்களுக்கு செலுத்திய தொகை (ரூ.மில்) |
|---|---|---|---|
| 2005 | 14,600 | 2,766 | 900 |
| 2006 | 15,136 | 3,049 | 1,078 |
| 2007 | 12,969 | 2,872 | 1,240 |
| 2008 | 12,519 | 3,008 | 1,192 |
| 2009 | 10,383 | 2,680 | 1,552 |
| 2010 | 13,848 | 4,512 | 2,093 |
| 2011 | 20,041 | 6,355 | 1,896 |
| 2012 | 11,234 | 3,973 | 2,019 |
| 2013 | 16,268 | 6,914 | 2,178 |
| 2014 | 17,786 | 8,021 | 2,394 |
| 2015 (அ) | 13,132 | 5,489 | 2,522 |
| மொத்தம் | **157,916** | **49,639** | **19,064** |

(அ) தற்காலிகமானவை

மூலம்: ஊசேநி திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

**(இ) ஊழியர் சேம நிதிய நடமாடும் பணிகள் நிகழ்ச்சித்திட்டம்**

ஊ.சே.நிதியச் செயற்பாடுகள் மீதான விழிப்புணர்வினை மேம்படுத்துவது ஒருங்கிணைக்கப்பட்ட மாதிரியொன்றினை நோக்கி நகர்வதற்கு வசதியளிக்குமொன்றாக இருப்பதனால் இது திணைக்களத்தின் பிரதான இலக்காக கருதப்படுகிறது. இதன்படி, 2015ஆம் ஆண்டுப்பகுதியில் மேற்குறிப்பிட்ட இலக்கினை எய்துவதற்கான முக்கிய பொறிமுறையாக பல நடமாடும் பணிகள் ஒழுங்கு செய்யப்பட்டன.

2015இல் ஊ.சே. நிதியத் திணைக்களம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, சண்டலங்காவ மற்றும் அட்டன் உள்ளிட்ட பல வேறுபட்ட பிரதேசங்களில் ஆறு நடமாடும் பணிகளை மேற்கொண்டது.

இந்நடமாடும் பணிகள் தொழில் திணைக்களத்தினதும் ஆட்பதிவுத் திணைக்களம், பதிவாளர் நாயகத்தின் திணைக்களம், பொலிஸ் திணைக்களம் மற்றும் தொடர்பான மாவட்ட/ பிரதேச செயலகங்கள் போன்ற ஏனைய அரச நிறுவனங்களினதும் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்டன.

இந்நடமாடும் பணிகளில், கொழும்பிலுள்ள பொதுமக்களுக்குப் பொதுவாகக் கிடைக்கக்கூடிய அனைத்துப் பணிகளும் ஊழியர் சேம நிதிய உறுப்பினர்களுக்கு, அவர்களுடைய சொந்த இடம் அல்லது வேலைத்தலத்திலேயே வழங்கப்பட்டன. அத்தகைய பணிகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருந்தன:

(i) ஊழியர் சேம நிதிய நிலுவைக் கூற்றுக்களை வழங்குதல்.

(ii) ஊழியர் சேம நிதிய உறுப்பினர்களின் விபரங்களையும் கணக்குகளையும் திருத்துதல்.

(iii) உறுப்பினர்களின் விபரங்களை மீளப் பதிவு செய்தல்.

(iv) அதேநேர உறுப்பினர் பணிகளை அதாவது குறுஞ்செய்தி சேவை, இணையத்தள விசாரணை வசதி போன்றவற்றை மேம்படுத்துதல்.

(v) தேசிய அடையாள அட்டையினையும் தொடர்பான ஏனைய பணிகளையும் ஆட்பதிவுத் திணைக்களத்தின் மூலம் வழங்குதல்.

(vi) பதிவாளர் நாயகத் திணைக்களத்தினால் பிறப்புச் சான்றிதழ்/ வயது ஊகச் சான்றிதழ்கள்/ வெற்று அறிக்கைகள் மற்றும் அது தொடர்பான பணிகளை வழங்குதல்

(vii) பொதுவான ஊழியர் சேம நிதிய நடைமுறைகள் தொடர்பில் ஆலோசனைகளை வழங்குதல்

இவற்றிற்குப் புறம்பாக, நடமாடும் பணிகளுடன் சேர்த்து உறுப்பினர்கள், தொழில்தருநர்கள் மற்றும் ஏனைய ஆர்வலர்களுக்கு சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரங்கள், வீடியோக் காட்சிகள் மற்றும் காட்சிப்படுத்தலுடன் கூடிய விரிவுரைகள் போன்ற கலந்த தொடர்பூட்டல் ஊடகங்களைப் பயன்படுத்தி ஊ.சே. நிதியத்தினால் வழங்கப்படும் பணிகள் தொடர்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களும் நடாத்தப்பட்டன.

ஒவ்வொரு நடமாடும் பணி நிகழ்ச்சித்திட்டத்திற்கும் முன்னதாக, நடமாடும் பணிகளின் பயனுறுதியினை உயர்த்தும் நோக்குடன் தொடர்பான தொழில்தருநர்கள், முகாமையாளர்கள், மற்றும் தொடர்பான தொழில்தருநர்களின் நிருவாக அலுவலக உறுப்பினர்களுக்காக சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

**(ஈ) இளைப்பாறுவதற்கு முன்னதான மீளளிப்புத்திட்டம்**

2012ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க ஊழியர் சேம நிதிய (திருத்தம்) சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகள் மற்றும் அதன் பின்னர் நாடாளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட நடைமுறைகள் என்பனவற்றின் அடிப்படையில் 30 சதவீத ஊழியர் சேம நிதிய இளைப்பாறுவதற்கு முன்னதான மீளளிப்புத் திட்டத்தின் கீழான கொடுப்பனவுகள் 2015 யூலையிலிருந்து ஆரம்பமாயின.

ஊழியர் சேம நிதிய (திருத்தம்) சட்டத்தின்படி,

அ) பத்து ஆண்டுகளுக்கும் குறையாததொரு காலப்பகுதிக்கு நிதியத்திற்கு பங்களிப்பினைச் செய்துள்ள,

ஆ) தற்பொழுது தொழிலில் இருக்கின்ற ஊழியர்கள் மற்றும்

இ) அவரின் தனிப்பட்ட கணக்கில் மூன்று இலட்சத்திற்குக் குறையாததொரு தொகை வரவு வைத்திருக்கின்ற ஒவ்வொரு ஊழியர்களும் வீடமைப்பு அல்லது மருத்துவச் சிகிச்சை நோக்கத்திற்காக மேற்குறிப்பிட்ட நன்மையைப் பெற உரித்துடையவராவர்.

2015 இறுதியில் இத்திட்டத்தின் கீழ், 10,000இற்கு மேற்பட்ட தகைமையுடைய ஊழியர்களுக்கு ரூ.8.5 பில்லியன் செலுத்தப்பட்டது.

**(உ) பிரதிமை ஸ்கான் செய்யும் செயற்றிட்டம்**

கிட்டத்தட்ட காகிதங்களற்ற தொழிற்பாட்டு முறையினை நிறுவுவதன் மூலம் ஊழியர் சேம நிதியத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பணிகளின் வினைத்திறனை மேம்படுத்தும் நோக்குடன் பிரதிமை ஸ்கான் செய்யும் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இச்செயற்றிட்டத்தின் நான்கு முக்கிய கட்டங்கள் வருமாறு,

(i) தற்போதுள்ள ஆவணங்களை இலத்திரனியல் வடிவமைப்பிற்கு மாற்றுதல்

(ii) ஆவணங்களை அதேநேரத்தில் ஸ்கான் செய்தல்

(iii) இ - பதிவேட்டு அறைகளை நிறுவுதல் மற்றும்

(iv) தற்போதுள்ள ஊழியர் சேம நிதியக் கணனி முறைமையுடன் ஆவண முகாமைத்துவ முறைமையினை இணைத்தல்.

பிரதிமை ஸ்கான் செய்யும் செயற்றிட்டத்தின் கட்டம் I 2015இல் வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டமையானது ஊழியர் சேம நிதிய திணைக்களத்தில் தொழிற்பாட்டு வினைத்திறனை கணிசமானளவிற்கு உயர்த்தியது. அனைத்து முதன்மைக் கோப்புப் பதிவேடுகளும், படிவம் 'டி' மற்றும் மீள்பதிவு ஆவணங்களும் ஸ்கான் செய்யப்பட்டு, சுட்டெண் இடப்பட்டு, டிஜிட்டல் ஆவண முகாமைத்துவ முறைமையில் தரவேற்றப்பட்டவிடத்து இங்கு ஆவணங்களை மீளப்பெறல் கோவையினை இற்றைப்படுத்தல், அறிவித்தல்களை வழங்குதல் மற்றும் ஏனைய அனைத்து தொடர்புபட்ட தொழிற்பாடுகள் என்பன ஏறத்தாழ 300 ஊழியர் சேம நிதிய அலுவலர்களுக்கு சமகாலத்தில் அவர்களின் சொந்தக் கணனிகளுக்கு கிடைக்கச் செய்யப்பட்டன.

ஊழியர் சேம நிதியத்தின் பாரம்பரிய முறையினைக் கொண்ட பதிவேட்டு அறை செயற்றிட்டத்தின் கட்டம் 1 இன் போது இ - பதிவேட்டிற்கு

மாற்றப்பட்டது. கையினால் செய்யப்படும் செயன்முறைகளில் பெரும்பாலானவை தன்னியக்கப்படுத்தப்பட்டமையினால் அலுவலர்கள் ஈடுபடுத்தப்படுவது பெருமளவிற்குக் குறைவடைந்தது. இம்மாற்றமானது நேரத்தினையும், இடத்தினையும் மனிதவளங்களையும் கணிசமளவிற்கு சேமிக்கவும் வழிவகுத்தது.

செயற்றிட்டத்தின் கட்டம் I நடைமுறைப்படுத்தப்பட்டதன் மூலம் அடையப்பட்ட தொழிற்பாட்டு ரீதியான வினைத்திறன் மற்றும் செயற்றிட்டத்தினால் ஏற்படுத்தப்பட்ட தன்னியக்கச் செயன்முறையினை அடிப்படையாகக் கொண்ட வரவேற்கத்தக்க கூடியளவு முன்னேற்றம்கண்ட தொழில்நுட்பங்களின் வாயிலாக திணைக்களத்திற்கு கிடைக்கத்தக்கதாகவிருந்த வாய்ப்புக்கள் என்பனவற்றைப் பரிசீலனையில் கொண்டு மற்றைய அடிக்கடி மீளப்பெறும் வன்பொருள் பதிவேடுகளை டிஜிட்டல்படுத்தும் நோக்குடன் பிரதிமைப்படுத்தல் ஸ்கானிங் செயற்றிட்டத்தின் கட்டம் IIஇனை ஊழியர் சேம நிதியம் ஏற்கனவே தொடங்கிவிட்டது. பிரதிமைப்படுத்தல் ஸ்கானிங் செயற்றிட்டமானது குறித்துரைக்கப்பட்ட விலைக்கோரல் நடைமுறைகளைப் பின்பற்றி தனிப்பட்ட வா்த்தகரொருவருக்கு வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளும் விதத்தில் வழங்கப்பட்டதுடன் இது 2016 தொடக்கத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

**(ஊ) பிரதேச மட்டத்தில் முழுமையானளவில் ஊழியர் சேம நிதியப் பிரிவுகளை நிறுவுதல்**

ஏழு முழுமையான பிரதேச ஊழியர் சேம நிதியப் பிரிவுகள் மாத்தறை, மாத்தளை, அநுராதபுரம், திருகோணமலை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் நிறுவப்பட்டதன் மூலம் அனைத்து ஊழியர் சேம நிதியம் தொடர்பான பணிகளும் பிரதேச மட்டத்தில் கிடைக்கச் செய்யப்பட்டன. இவ்வகையான பிரதேச தொழிற்பாடுகளின் அறிமுகம் தன்னியக்கப்படுத்தப்பட்ட ஆவண முகாமைத்துவ முறைமை அறிமுகப்படுத்தப்பட்டமையின் மூலம் சாத்தியமாயிற்று.

பிரதேச மட்டங்களில் ஊழியர் சேம நிதியப் பணிகளுக்கு கணிசமானளவு கேள்வி காணப்படுவதனை ஊழியர் சேம நிதியத் திணைக்களம் உணர்ந்திருப்பதுடன் பிரதேச மட்டத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள பணிகள் தூர இடங்களிலுள்ள உறுப்பினர்களுக்கான அநுகூலங்களையும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. திணைக்களம் நாட்டின் மற்றைய பகுதிகளுக்கு அதன் தொழிற்பாடுகளை விரிவாக்க ஏற்கனவே திட்டமிட்டிருக்கின்றது. 2016 சனவரியில் நுவரெலியாவில் ஊழியர் சேம நிதியப் பிரிவினை நிறுவியமையானது இத்திட்டமிடப்பட்ட விரிவாக்கத்தின் பெறுபேறேயாகும்.

**(எ) உறுப்பினர்களுக்கு விரைவானதும் வசதிமிக்கதுமான பணிகளை உருவாக்குதல்**

இவ்வாண்டுப்பகுதியில் ஊழியர் சேம நிதியத் திணைக்களம் மீளளிப்பு விண்ணப்பங்கள் தொடர்பான நிலைமை மற்றும் பிரச்சனைகள் தொடர்பில் திணைக்களத்திற்கும் உறுப்பினர்களுக்குமிடையே பரஸ்பர இணைப்பொன்றினை உருவாக்குவதற்காக ஊழியர் சேம நிதிய உறுப்பினர்களுக்கென பிரத்தியேகமான குறுந்தகவல் வசதிகளை திணைக்களம் அறிமுகப்படுத்தியது. இவ்வசதி 2015இல் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

இப்பணியினை பெற்றுக்கொள்ள விரும்பும் உறுப்பினர்கள் மீளளிப்பு விண்ணப்பப் படிவத்துடன் தொழில் திணைக்களத்திற்கு அவர்களின் செல்லிடத் தொலைபேசி இலக்கத்தினையும் வழங்குதல் வேண்டும் என்பதுடன் ஊழியர் சேம நிதியத் திணைக்களத்தின் மீளளிப்பு கொடுப்பனவு செயற்பாடு தொடர்பான வேறுபட்ட கட்டங்களையும் விண்ணப்பம் கடந்து செல்லும்போது அவரால் தகவல்களையும் தொடர்பான அறிவுறுத்தல்களையும் பெற்றுக் கொள்ளமுடியும்.

இத்திட்டமானது மீளளிப்புச் செயன்முறையின் வினைத்திறனை அதிகரிக்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்டிருப்பதுடன் இதன் விளைவாக இது விண்ணப்பச் செயன்முறை நேரம், நாளாந்த உறுப்பினா் விஜயம் மற்றும் தொடர்பான பிரச்சனைகள் மீதான விசாரணை என்பனவற்றை குறைத்து நேரகாலத்துடன் கண்டறியப்பட்டு தீர்க்கப்படுவதன் மூலம் அனைத்து ஆர்வலர்களின் செலவினமும் குறைக்கப்படுகிறது.

சிறிய மற்றும் நடுத்தர தொழில்தருநா்களின் பங்களிப்புக்கள் சமா்ப்பிக்கப்படுவதனை இலகுபடுத்தும் பொருட்டு பங்களிப்புகளைச் சேகரிப்பதும் 'சி' படிவமும் மக்கள் வங்கியின் கிளைகளினூடாக வசதிப்படுத்தப்பட்டன. மேல் மாகாணத்திலுள்ள மக்கள் வங்கியின் கிளை வலையமைப்பினூடாக பங்களிப்புக்களையும் 'சி' படிவத்தினையும் சேகரிக்கும் முன்னோடித் திட்டமொன்று இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்டது.

**(ஏ) ஊழியர் சேம நிதியக் கொடுப்பனவுகளுக்கான இ-கூற்று முறைமை**

கைகளினால் செய்யப்படும் கொடுப்பனவு முறைமைகளுக்கு (சி மற்றும் சி3 படிவங்கள்) பதிலாக உறுப்பினா் பங்களிப்பு விபரங்களை இலத்திரனியல் ரீதியில் (இ-கூற்றுக்கள்) சமா்ப்பிப்பதற்கு தொழில்தருநா்களை ஊக்குவிப்பதற்காக, ஊழியர் சேம நிதியத் திணைக்களம் பல்வேறு வழிமுறைகளை மேற்கொண்டது. மொத்தமாக பத்திரங்களற்ற தீா்வொன்றான இ-கூற்றுக்களை சமா்ப்பிப்பது, செலவினையும் தாமதங்களையும் குறைத்து செயற்பாடுகளின் வினைத்திறனை அதிகரித்து உறுப்பினா்களுக்குச் சிறந்த பணிகள் கிடைப்பதற்கும் வசதியளிக்கிறது. ஊழியர் சேம நிதியப் பங்களிப்புக்களின் விபரங்களுடன் சேர்த்து ஊழியர் சேம நிதியப் பங்களிப்புக்களை மேற்கொள்வதற்கான கணனிவழி உடனடி முறைமையின் கிடைப்பனவானது வியாபாரத்தினைச் செய்யுங்கள் சுட்டெண்ணின் கீழான இலக்கினை எய்துவதற்கான தேவைப்பாடுகளிலொன்றாக விளங்குகிறது. இது நாட்டிற்கு வெளிநாட்டு முதலீடுகளைக் கவா்வதற்கு மிக இன்றியமையாததாகும்.

2013ஆம் ஆண்டிலிருந்து 50 அல்லது அதற்கு மேற்பட்ட ஊழியா்களைக் கொண்ட அனைத்து தொழில்தருநா்களும் இ-கூற்றுக்களை நிரப்புவது கட்டாயமானதாகும். எனினும் இது 2015 வரை கடுமையாகப் பின்பற்றப்படவில்லை. 50 அல்லது அதற்கு மேற்பட்ட ஊழியா்களைக் கொண்டுள்ள தொழில்தருநா்கள் இ-கூற்றுக்களை நிரப்புவது 2015 ஓகத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் கட்டாயமானதாக இருக்கும். ஊழியர் சேம நிதியத் திணைக்களம் இ-கூற்று முறைமையின் கீழ் உரிமம் பெற்ற வா்த்தக வங்கிகளை சேகரிக்கும் முகவா்களாக நியமிப்பதன் மூலம் அவா்களின் பணிகளையும் பெற்றுக் கொண்டிருக்கிறது. இது வாடிக்கையாளா்களுக்கான பெறுமதிகூட்டப்பட்டதொரு பணியாகும்.

**(ஐ) ஊழியர் சேம நிதிய உறுப்பினா்களின் மீள்பதிவு**

ஊழியர் சேம நிதிய உறுப்பினா்களுக்கு வினைத்திறன்மிக்க பணியினை வழங்கும் நோக்குடன் அவா்களின் பெயரினை அவா்களின் தேசிய அடையாள அட்டையில் காணப்படுகின்றவாறு மீள்பதிவு செய்து கொள்வதற்காகவும் தேசிய அடையாள அட்டை இலக்கத்தினை தனித்துவமான அடையாள இலக்கமாக அவா்களுக்கு வழங்குவதற்காகவும் ஊழியர் சேம திணைக்களமும் தொழில் திணைக்களமும் சிறப்புச் செயற்றிட்டமொன்றினை மேற்கொண்டன. இது இரண்டு நிறுவனங்களும் பொதுவான உறுப்பினா் மையத் தரவுத் தளமொன்றினைப் பயன்படுத்துவதனை இயலச்செய்யும்.

2015 இறுதியில் ஏறத்தாள 1.7 மில்லியன் செயற்படும் ஊழியர் சேம நிதிய உறுப்பினா்களின் (பங்களிக்கும் உறுப்பினா்கள்) தேசிய அடையாள அட்டை விபரங்கள் சேகரிக்கப்பட்டன. இவற்றில் 79 சதவீதமான உறுப்பினா்களுக்கு (1.3 மில்லியன் கணக்குகள்) தனித்துவமான அடையாள அட்டை இலக்கங்கள் வழங்கப்பட்ட வேளையில் மீதி உறுப்பினா்கள் தொடா்பில் சேகரிக்கப்பட்ட தகவல்களுக்கும் ஏற்கனவேயிருந்த தகவல்களுக்குமிடையே வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையின் காரணமாக அவா்களின் தொழில்தருநா்களிடமிருந்து சரிபாா்ப்புக்கள் பெறப்பட்டதன் பின்னா் செயற்படுத்தப்படும்.

புதிதாக இணைகின்ற ஊழியர் சேம நிதிய உறுப்பினா்களை அதேநேர அடிப்படையில், தேசிய அடையாள அட்டை விபரங்களின் கீழ்

பதிவுசெய்வது 2010 நவெம்பரில் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கிணங்க ஒவ்வொரு மாதமும் முதல் தடவையாக ஊழியர் சேம நிதியத்தினால் பங்களிப்புக்கள் பெறப்படுகின்ற புதிய அனைத்து உறுப்பினர்களினதும் தேசிய அடையாள அட்டை விபரங்களைப் பதிவதற்கான மாதாந்த கண்காணிப்பு முறைமையொன்று செயற்பாட்டிற்கிடப்பட்டது. இதன்படி, இவ்வாண்டுப் பகுதியில் 152,532 உறுப்பினர்கள் பதிவுசெய்யப்பட்டதுடன் 167,747 உறுப்பினர்கள் தொடர்பான தகவல்கள் புதிய உறுப்பினர் பதிவேட்டுக்கு இற்றைப்படுத்தப்பட்டன.

## 10. செலாவணிக் கட்டுப்பாடு

1953ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 2(2) ஆம் பிரிவின் நியதிகளில் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளைக் கொண்டு நடத்தும் நோக்கத்திற்காக செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் நிறுவப்பட்டது. இதற்கமைய, செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம், செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஒப்படைக்கப்பட்டதும் அதிகாரமளிக்கப்பட்டதுமான அதிகாரங்களையும் கடமைகளையும் தொழிற்பாடுகளையும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு பணிப்புரைகளை விடுத்தல், வர்த்தமானி அறிவித்தல்களை விடுத்தல், குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல்களுக்கான ஒப்புதல்களை வழங்குதல், பல்வேறுபட்ட வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களைக் கண்காணித்தல் மற்றும் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் மீறல்களை புலனாய்வு செய்தல் என்பனவற்றினூடாக நிறைவேற்றி வருகின்றது. 2015ஆம் ஆண்டுப் பகுதியில் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் ஆற்றப்பட்ட முக்கிய நடவடிக்கைகளின் சுருக்கம் கீழே தரப்படுகிறது.

### 10.1 வர்த்தமானி அறிவித்தல்களை விடுத்தல்

2015இல் ஆண்டுப் பகுதியில், வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களை மேலும் தளர்த்தும் நோக்குடன், பல்வேறு கொள்கைத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. இதன்படி, வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், வதியும் இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்குகள் என்பன மீதான புதிய பணிப்புரைகள், அத்தகைய கணக்குகளின் உடமையாளர்கள் இலங்கைக்கு வெளியேயுள்ள அத்தகைய கணக்குகளுக்கு கட்டுப்பாடின்றி நிதிகளை அனுப்புவதனை அனுமதிக்கின்ற விதத்தில் 2016இன் தொடக்கப் பகுதியில் விடுக்கப்பட்டன.

அத்தகைய தளர்த்தல்களை வசதிப்படுத்தும் விதத்தில் கீழே சுருக்கித் தரப்பட்டவாறு 2015ஆம் ஆண்டுப் பகுதியில் மூன்று புதிய வர்த்தமானி அறிவித்தல்கள் விடுக்கப்பட்டன. வர்த்தமானி அறிவித்தல்கள் இவ்வறிக்கையின் பகுதி IIIஇல் தரப்பட்டுள்ளன.

**அ)** வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், வதியும் இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்குகள் என்பனவற்றை வைத்திருக்கும் இலங்கையில் வதியும் ஆட்களுக்குப் பின்வருவனவற்றை மேற்கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது (2015 திசெம்பர் 29ஆம் திகதியிடப்பட்ட 1947/13 இலக்கம் கொண்ட வர்த்தமானி)

- அத்தகைய கணக்குகளிலுள்ள நிலுவைகளைப் பயன்படுத்தி இலங்கைக்கு வெளியே வழங்கப்பட்ட பிணையங்களைக் கொள்வனவு செய்வதற்கும் உடமையில் வைத்திருப்பதற்கும் மாற்றல் செய்வதற்கும்;
- ஒதுக்குகளை மூலதன மயப்படுத்துவதன் மூலம் அல்லது பங்குகளின் மீதான நன்மைகளாக இருக்கும் நடப்பாண்டு இலாபங்கள் அல்லது மேற்குறிப்பிட்ட ஏற்பாட்டு நியதிகளில் ஆரம்பத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருக்கின்ற பங்குகளின் துணைப் பிரிப்புக்கள் அல்லது உடைப்புக்கள் என்பனவற்றைப் பயன்படுத்தி வழங்கப்பட்ட பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கும் உடமையில் வைத்திருப்பதற்கும் மற்றும் மாற்றல் செய்வதற்கும்

**ஆ)** வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு மற்றும் வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்கினைப் பேணும் இலங்கையில் வதியும் ஆட்கள் அத்தகைய கணக்குகளிலுள்ள நிலுவைகளிலிருந்து இலங்கைக்கு வெளியே வதியும் ஆட்களுக்குப் பின்வருவனவற்றிற்கு கொடுப்பனவுகளைச் செய்வதற்கான அனுமதி (2015 திசெம்பர் 29ஆம் திகதியிடப்பட்ட இல. 1947/14 கொண்ட வர்த்தமானி)

- மேலே (அ) இல் குறிப்பிடப்பட்ட வர்த்தமானியில் அனுமதிக்கப்பட்டவாறு பிணையங்களைக் கொள்வனவு செய்வதற்கு
- வேறு ஏதேனும் மூலதனத் தன்மை கொண்ட சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்கு அல்லது நடைமுறைக் கணக்கு கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதற்கு

**இ)** பின்வருவன தொடர்பில் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 6அ.ஆ இன் கீழான தேவைப்பாடுகளைப் பிரயோகிப்பதிலிருந்து இலங்கையில் வதியும் ஆட்களுக்கு விலக்கல்களை வழங்குதல் (2015 திசெம்பர் 29ஆம் திகதியிடப்பட்ட இல.1947/15 கொண்ட வர்த்தமானி)

- மேலே (அ)இல் குறிப்பிடப்பட்ட வர்த்தமானியில் வழங்கப்பட்ட அனுமதிகளின் நியதிகளில் கொள்வனவு செய்யப்பட்ட, வைத்திருக்கப்பட்ட, மாற்றல் செய்யப்பட்ட பிணையங்கள்
- மேலே (ஆ)இல் குறிப்பிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் வழங்கப்பட்ட அனுமதியின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட வேறு ஏதேனும் மூலதனத்தன்மை கொண்ட சொத்துக்கள்

### 10.2 ஒப்புதல்கள்/ அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்

**அ)** **ஒப்புதல்கள்:** ஐ.அ.டொலர் 65.66 மில்லியனை வெளிநாடுகளில் முதலீடு செய்வதற்கு பதினொரு கம்பனிகளுக்கும் வெளிநாடுகளிலிருந்து ஐ.அ.டொலர் 280 மில்லியனைக் கடன்படுவதற்கு மூன்று கம்பனிகளுக்கும் ஒப்புதல்கள் வழங்கப்பட்டன.

**ஆ)** **அனுமதிப்பத்திரங்கள்:** 2015இல் வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனிகளுக்கு மூன்று புதிய நாணய மாற்று அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன. இதன்படி, 2015 திசெம்பர் 31இல் உள்ளவாறு அதிகாரமளிக்கப்பட்ட நாணய மாற்றுநர்களின் மொத்த எண்ணிக்கை 78ஆக விளங்கி 6 உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளையும் 2 உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளையும் சிறப்பு அங்காடியொன்றையும் சுற்றுலா விடுதியொன்றையும் 68 ஏனைய வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனிகளையும் உள்ளடக்கியிருந்தது.
மேலும், வெளிநாட்டு நாணயங்களை விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்ட நாணய மாற்றுநர்களின் மொத்த எண்ணிக்கை 2015இன் இறுதியில் 14ஆக விளங்கி 6 உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளையும் 2 உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளையும் ஒரு சிறப்பு அங்காடியையும் 5 வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனிகளையும் உள்ளடக்கியிருந்தது.

### 10.3 புலம்பெயர்வோர் நிதியமாற்றல்

2015ஆம் ஆண்டுப் பகுதியில், 2013 யூன் 12ஆம் திகதிக்குப் பின்னர் இன்னொரு நாட்டில் நிரந்தர வதிவிட வசதியைப் பெற்றுக்கொண்டுள்ள இலங்கையர்களுக்கு புலம்பெயர் படிகளை விடுவிக்கும் பொருட்டு 335 புலம்பெயர்வோர் தடுத்து வைத்தல் கணக்குகளைத் திறப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. மேலும்,

2013 யூன் 12இற்கு முன்னர் இன்னொரு நாட்டில் நிரந்தர வதிவிட வசதியைப் பெற்றுக்கொண்ட 464 புலம்பெயர்ந்த இலங்கையர்களுக்கு வதிவற்றோர் தடுத்து வைக்கப்பட்ட கணக்குகளினூடாக இலங்கைக்கு வெளியே நிதியங்களை அனுப்ப அனுமதி வழங்கப்பட்டது.

### 10.4 கண்காணிப்பு/ புலனாய்வுகள்

செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகாமை தொடர்பில் 2015ஆம் ஆண்டுப் பகுதியில் 203 புலனாய்வுகள் நடத்தப்பட்டதுடன் அத்தகைய மீறல்கள் தொடர்பில் சேகரிக்கப்பட்ட தண்டப் பணமான ரூ.26.36 மில்லியன் திரட்டிய நிதியத்திற்கு மாற்றல் செய்யப்பட்டது. பெரும்பாலான புலனாய்வுகள் வதிவோரினால் வதிவற்றோருக்குச் செய்யப்பட்ட அதிகாரமளிக்கப்படாத கொடுப்பனவுகள், வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் நிபந்தனைகளை அனுமதிக்கப்பட்ட நிறுவனங்கள் மீறியமை மற்றும் பொதுவான அனுமதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளுக்கு மாறாக பிணையங்களை வழங்குதல் மற்றும் மாற்றல் செய்தல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

### 10.5 பொதுமக்கள் விழிப்புணர்வு

வங்கிகள், பொதுமக்கள், வெளிநாட்டுப் பணிகளிலுள்ள அலுவலர்கள் மற்றும் ஏனைய ஈடுபாடுள்ள தரப்பினர்கள் ஆகியோரை இலக்காகக் கொண்டு, இலங்கை மத்திய வங்கியின் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையத்தின் ஒத்துழைப்புடன் எட்டு செலாவணிக் கட்டுப்பாட்டு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. மேலும், பின்தங்கிய இடங்களிலுள்ளவர்களுக்கு வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாடு தொடர்பில் அடிப்படை விடயங்கள் பற்றிய அறிவூட்டும் நோக்குடனும், வங்கிகள், கம்பனிகள் மற்றும் முதலீட்டாளர்கள் உள்ளிட்ட வேறுபட்ட ஆர்வலர்களிடையே மூலதனக் கணக்கு கொடுக்கல்வாங்கல்களின் அண்மைய தளர்த்தல் தொடர்பில் செலாவணிக் கட்டுப்பாட்டுக் கல்வி மற்றும் அறிவினை மேம்படுத்துவதற்காகவும் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்களில் ஏழு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. மேலும், 2014 சனவரி 01இல் ஆரம்பிக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் அலுவலக ரீதியான இணையத்தளம் செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் தொடர்பான பொதுமக்களின் விழிப்புணர்வினை அதிகரிப்பதற்காக பொருத்தமான விதத்தில் இற்றைப்படுத்தப்பட்டு வருகிறது.

## 11. வசதிகள் முகாமைத்துவம்

2015இல் வசதிகள் முகாமைத்துவத் திணைக்களமானது தொழில் வினைத்திறனை மேம்படுத்தல் மற்றும் வங்கியின் நன்மதிப்பினை உயர்த்துதல் என்பனவற்றின் பொருட்டு இரம்மியமான சூழலை ஏற்படுத்தும் நோக்குடன் இலங்கை மத்திய வங்கியின் கட்டடங்களின் அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு வேலைகளை தொடர்ந்தது. வங்கி அலுவலர்களினதும் வாகனங்களினதும் பாதுகாப்பு மற்றும் செலவுச் சிக்கனம் என்பனவற்றை உறுதிப்படுத்தும் நோக்குடன் வங்கியின் வாகனங்களின் ஓடும் வினைத்திறனை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.

2015இல் வசதிகள் முகாமைத்துவத் திணைக்களமானது மின்வலு, குளிரூட்டல், நீர்வழங்கல், போக்குவரத்து மற்றும் காப்புறுதி போன்ற அனைத்து இன்றியமையாத பணிகளிலும் தொழிற்பாட்டு நம்பகத்தன்மையினை உயர்ந்த மட்டத்தில் பேணியது திணைக்களமானது அத்தகைய பணிகளை வழங்குவதில் 100 சதவீதத்துக்கு கிட்டிய நம்பகத்தன்மையை அடையக்கூடியதாக இருந்தமையானது வங்கியின் தடங்கலற்ற தொழிற்பாடுகளை அடைவதற்கு பங்களித்தது.

அலுவலகங்களின் நிபுணர்சார் குழுவால் செயற்றிட்டம், மதிப்பீடு மற்றும் முகாமைத்துவம் செய்யப்பட்ட செயற்றிட்டத்தை செலவுச் சிக்கனமாக்க வழிவகுத்த அதேவேளை புகழ்வாய்ந்த ஒப்பந்தக்காரர்களுக்கு செயற்றிட்டங்களைக் கையளித்தமை மற்றும் நெருக்கமான கண்காணிப்பு என்பன உரிய திகதியில் செயற்றிட்டங்களைப் பூர்த்தி செய்வதற்கும் தேவைப்பட்ட தரத்தை அடைவதற்கும் உதவியது.

ஆண்டு காலப்பகுதியில் வசதிகள் முகாமைத்துவத் திணைக்களம் மத்திய வங்கியின் கிளிநொச்சியில் வடபிராந்திய அலுவலகத்தின் கட்டடத்தொகுதியின் நிர்மாண வேலைகளை நிறைவு செய்தது. மேலும், வசதிகள் முகாமைத்துவத் திணைக்களமானது, 2016 சனவரியில் பொதுமக்களுக்காக திறந்து வைக்கப்பட்ட நுவரெலியா பிராந்திய அலுவலகத்தை நிறுவுவதற்கான 2015இன் இறுதியில் அரசாங்கத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பழைய கட்டடத்தின் மீள்நிர்மாண வேலையையும் மேற்கொண்டது. 2015இல் “வைட்வேய்ஸ் கட்டடத்தின்” வரலாற்றுப் பெருமையினையும் பாரம்பரியப் பெறுமானங்களையும் மீண்டுமடைந்து கொள்ளும் விதத்தில் திருத்த வேலைகள் நிறைவு செய்யப்பட்டன. வங்கியானது பார்வையாளர்களுக்கு சிறந்த அனுபவத்தை வழங்குவதற்காக கேட்போர்கூடத்தை மேம்படுத்தி அழகுபடுத்தும் செயற்றிட்டத்தை நிறைவு செய்தது. மேலும், வசதிகள் முகாமைத்துவத் திணைக்களமானது 2015ஆம் ஆண்டில், இலங்கை மத்திய வங்கியின் தலைமை அலுவலகத்தின் பாதுகாப்பு மற்றும் சீரான செயற்பாட்டிற்கான அமைப்பின் உறுதித்தன்மையை மதிப்பிடல் போன்ற பல செயற்றிட்டங்களை நிறைவுசெய்ததுடன் பல்மாடி வாகனத் தரிப்பிடத்தின் மேம்பாடு மற்றும் இலங்கை மத்திய வங்கி பணிமனையில் வலுப்பயன்பாட்டை அதிகரித்தல் போன்ற பல்வேறு செயற்றிட்டங்களும் நிறைவு செய்யப்பட்டன.

2015இல் வசதிகள் முகாமைத்துவத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட மற்றைய கட்டுமான வேலைகள் விரும்பத்தகாத அனர்த்த நிகழ்வொன்றின் போது இலங்கை மத்திய வங்கியின் வியாபார நடவடிக்கையை உறுதிப்படுத்துவதற்கு பயன்படுத்துவதற்காக இராஜகிரியவிலுள்ள வங்கித் தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலைய வளாகத்தில் அமைக்கப்பட்ட அனர்த்த மீட்பு அமைவிட புதிய கட்டடத் தொகுதியின் கட்டட நிர்மாணத் துறையை உள்ளடக்கியிருந்தது. கதிர்காமத்திலுள்ள விடுமுறை விடுதியில் ஒன்பது மேலதிக அலகுகளை நிர்மாணித்தல் மற்றும் வாகனத்தரிப்பிடத்தின் 10ஆவது தளத்தில் உடற்பயிற்சிக் கூடம் மற்றும் அநுராதபுர விடுமுறை விடுதியில் நிர்மாணம் போன்றவற்றின் வேலை நடைபெற்று வருகின்றது. மேற்குறிப்பிட்ட செயற்றிட்டங்களை 2016இல் நிறைவு செய்யத்திட்டமிடப்பட்டுள்ளது.

வங்கியின் வழமையான போக்குவரத்து தொழிற்பாடுகளுக்கு புறம்பாக இலங்கை மத்திய வங்கியின் அனுசரணையுடன் நடாத்தப்பட்ட பல்வேறு பன்னாட்டு மாநாடுகள் மற்றும் வங்கியால் ஒழுங்கமைக்கப்பட்ட சம்பிரதாய நிகழ்வுகளுக்கு தடங்கலற்ற போக்குவரத்து வசதிகளை திணைக்களம் வழங்கக்கூடியதாக இருந்தது.

## 12. நிதித் திணைக்களம்

நிதித் திணைக்களம், நாணய விதிச்சட்டத்தின் தொடர்பான ஏற்பாட்டு நயதிகள் மற்றும் பன்னாட்டு கணக்கீட்டு நியமங்கள்/ பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள் என்பனவற்றிற்கிணங்க இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் அறிக்கையிடல் தொழிற்பாடுகளை மேற்கொள்கிறது. நிதித் திணைக்களத்தின் தொழிற்பாடுகள் மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்களைத் தயாரித்தல், மத்திய வங்கியின் வருடாந்த வரவுசெலவு திட்டத்தினை தயாரித்தல் மற்றும் கண்காணித்தல், மத்திய வங்கியின் உள்ளக மற்றும் வெளிவாரி நிதியியல் கொடுக்கல் வாங்கல்களுக்காக கொடுப்பனவு முறைமையையொன்றைப் பேணுதல், நிதியியல் கொடுக்கல்வாங்கல்களின் உள்ளக அறிக்கையிடலுக்கான முறைமைகளைப் பேணுதல், 13 உள்ளக நிதியங்களைப் பேணுதல், மத்திய வங்கியின் நிலையான சொத்துப் பதிவேட்டினைப் பேணுதல் மற்றும் அலுவலர் கடன்களின் தரவுத்தளத்தைப் பேணுதல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

### 12.1 நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பு

i. **மாதாந்த ஐந்தொகை:** நாணய விதிச்சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கிணங்க, 2014 திசெம்பர் மற்றும் 2015 சனவரி - நவெம்பர் காலப்பகுதிக்கான மாதாந்த ஐந்தொகைகள் தயாரிக்கப்பட்டு 2015ஆம் ஆண்டுப்பகுதியில் அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்டன.

ii. **காலாண்டு ரீதியான அறிக்கைகள்:** காலாண்டு நிதியியல் செயலாற்றம், நிதியியல் தொழிற்பாடுகளின் நிலைமை மற்றும் பேரண்டப் பொருளாதாரத்தின் தாக்கம் என்பன 2015இல் நாணயச் சபைக்கு அறிவிக்கப்பட்டன.

iii. **ஆண்டு நிதியியல் கூற்றுக்கள்:** 2002 தொடக்கம் இந்நோக்கத்திற்காக பன்னாட்டு கணக்கீட்டு நியமங்களும் பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்களும் பின்பற்றப்பட்டன. 2015ஆம் ஆண்டுப் பகுதியில் தொடர்பான கணக்கீட்டு நியமங்களுடனும் தேவைப்பாடுகளுடனும் இணங்கிச் செல்வதற்காக நிதித் திணைக்களம் கணக்கீட்டு முறைகளையும் நடவடிக்கை முறைகளையும் தொடர்ச்சியான அடிப்படையில் இற்றைப்படுத்தி வருகின்றது. 2015ஆம் ஆண்டிற்கான மத்திய வங்கியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் ஆளுநரினாலும் முதன்மை கணக்காளரினாலும் கையொப்பமிடப்பட்டு ஆண்டறிக்கையின் பகுதி IIஇன் தொடக்கத்தில் காட்டப்பட்டிருக்கிறது.

### 12.2 வருடாந்த வரவு செலவுத்திட்டத்தினையும் நடவடிக்கையினை அடிப்படையாகக் கொண்ட வரவு செலவுத்திட்டத்தினையும் தயாரித்தல்

2016ஆம் ஆண்டிற்கான மத்திய வங்கியின் வருடாந்த வருமானம் மற்றும் செலவின வரவு செலவுத்திட்டமும் மூலதன வரவு செலவுத்திட்டமும் மத்திய வங்கியின் ஒவ்வொரு திணைக்களத்தினதும் உபாயத் திட்டத்தின் கீழான நடவடிக்கைத் திட்டத்துடன் இசைந்து செல்லும் விதத்தில் தயாரிக்கப்பட்டன. இவ்வரவு செலவுத்திட்டத்துடன் சேர்த்து மத்திய வங்கியின் நடவடிக்கையினை அடிப்படையாகக் கொண்ட செலவு மற்றும் செயற்பாட்டினை அடிப்படையாகக் கொண்ட செலவு என்பனவற்றினைக் காட்டும் விதத்தில் நடவடிக்கையினை அடிப்படையாகக் கொண்ட மற்றும் தொழிற்பாட்டினை அடிப்படையாகக் கொண்ட வரவு செலவுத்திட்டமும் தயாரிக்கப்பட்டது. இது தொடர்பான செயன்முறைகள் 2015 ஓகத்தில் ஆரம்பிக்கப்பட்டு 2015 திசெம்பரில் இறுதிப்படுத்தப்பட்டன. நாணயச் சபையின் ஒப்புதல் 2015 திசெம்பரில் பெறப்பட்டதுடன் வரவு செலவுத்திட்டம் 2016இன் முதல் நாளன்று திணைக்களங்களுக்கு கிடைக்கச் செய்யப்பட்டது. வரவு செலவுத்திட்டக் கட்டுப்பாட்டின் காத்திரமான கண்காணிப்பினைக் கருத்திற்கொண்டு 2015ஆம் ஆண்டிற்கான காலாண்டு ரீதியான வரவு செலவுத்திட்டச் செயலாற்றக் கூற்றுக்கள் திணைக்களங்களுக்கும் நாணயச் சபைக்கும் சமர்ப்பிக்கப்பட்டன.

### 12.3 உள்ளக மற்றும் வெளிவாரி நிதியியல் கொடுக்கல் வாங்கல்களுக்கான கொடுப்பனவு முறைமை

i. ஊழியர் ஊதியங்கள், அலுவலர் கடன்கள், தொழிற்பாட்டுச் செலவினங்கள் போன்ற ஊழியர்களுக்கான அனைத்து உள்ளகக் கொடுப்பனவுகளும் 2015இல் நேர இலக்குகளுக்குள் செய்யப்பட்டன.

ii. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வழங்குநர்களுக்கான அனைத்து வெளிவாரிக் கொடுப்பனவுகளும் மத்திய வங்கியின் துணைநில் சட்டங்களின்கீழ் குறிப்பிடப்பட்ட நடவடிக்கை முறைகளுக்கேற்ப மேற்கொள்ளப்பட்டன. 2015ஆம் ஆண்டுப் பகுதியில் மொத்த கொடுப்பனவுகள் 4,599ஆகக் காணப்பட்டதுடன் இது 4,344 உள்நாட்டு வழங்குநர்களையும் 255 வெளிநாட்டு வழங்குநர்களையும் உள்ளடக்கியிருந்தது.

iii. 2015ஆம் ஆண்டுப் பகுதியில் பொது திறைசேரி மற்றும் தொடர்பான செயற்றிட்டங்களுக்காக ஏறத்தாழ 2,915 பகிர்ந்தளிப்புக்களும் வெளிநாட்டுக் கடன்களின் மீள்கொடுப்பனவு மீதான 558 தவணைக் கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்டன.

### 12.4 உள்ளக நிதியங்களின் முகாமைத்துவம்

நிதித் திணைக்களம், அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியம் பெற்றவர்களின் 6 ஓய்வூதிய நிதியங்கள், 3 மருத்துவ நன்மைகள் நிதியங்கள் மற்றும் 4 சிறப்பு நிதியங்கள் என்பவற்றை உள்ளடக்கி 13 உள்ளக நிதியங்களை முகாமைப்படுத்தியது. காசுப் பாய்ச்சலை முகாமைப்படுத்தல், நிதியங்களின் முதலீடுகள், தீர்ப்பனவுகளையும் கொடுப்பனவுகளையும் மேற்கொள்ளுதல், கணக்குகளின் பதிவேடுகளைப் பேணுதல் மற்றும் வருடாந்த நிதியியல் கூற்றுக்களைத் தயாரித்தல் என்பன இது தொடர்பான முக்கிய தொழிற்பாடுகளாகக் காணப்பட்டன. நிதியங்கள் முக்கியமாக அரச பிணையங்கள், வங்கி வைப்புக்கள் மற்றும் உயர் வட்டிவீதங்களைக் கொண்ட கம்பனித் தொகுதிக் கடன்கள் என்பனவற்றில் முதலீடு செய்யப்பட்டன. 2015ஆம் ஆண்டிற்கான இவ்வனைத்து நிதியங்களினதும் முதலீடுகள் மீதான வருமானத்தின் சராசரி வீதம் 7.31ஆகக் காணப்பட்டது. 2014ஆம் ஆண்டிற்கான இந்நிதியங்களின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் இந்நிதியங்களின் விதிகளுக்கிணங்க நாணயச் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

**அட்டவணை II-15** நிதிய முகாமைத்துவத்தின் செயலாற்றம்

(தொகை ரூ.மில்லியனில்)

| நிதியம் | உட் பாய்ச்சல் | வெளி பாய்ச்சல் | முதலீடுகள் | ஆண்டு இறுதியில் முதலீடுகள் | ஆண்டு சராசரி விளைவு (%) |
|---|---|---|---|---|---|
| ஓய்வூதிய நிதியங்கள் | 21,137.60 | 3,681.54 | 17,450.12 | 41,562.90 | 7.31 |
| மருத்துவ நிதியங்கள் | 58.97 | 4.52 | 54.05 | 1,428.99 | 7.95 |
| சிறப்பு நிதியங்கள் | 1,632.10 | 25.64 | 1,603.60 | 2,812.48 | 7.18 |
| மொத்தம் | 22,828.67 | 3,711.70 | 19,107.77 | 45,804.37 | 7.31 |

### 12.5 நிலையான சொத்துக்களின் பதிவேடுகளைப் பேணுதல்

நிதித் திணைக்களம் பொதுப் பேரேட்டு முறைமையின் நிலையான சொத்து மாதிரியிலுள்ள நிலையான சொத்து பதிவேட்டில் மத்திய வங்கியின் நிலையான சொத்துக்களின் அனைத்துப் பதிவேடுகளையும் பேணுகின்றது. 2015இல் புதிய கொள்வனவுகள் மற்றும் அமைவிடங்கள், அமைவிடங்களின் மாற்றங்கள், மீள்மதிப்பீடுகள், தேய்மானங்கள் மற்றும் அகற்றல்கள் போன்ற அனைத்து மாற்றங்களும் இப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டன. 2015இல் இப்பதிவேடானது 1,922 விடயங்களின் கொள்வனவுடனும் 377 பொருட்களின் அகற்றல்களுடனும் இற்றைப்படுத்தப்பட்டது.

### 12.6 அலுவலர் கடன்களின் தரவுத் தளத்தைப் பேணுதல்

நிதித் திணைக்களம், 2015ஆம் ஆண்டுப்பகுதியில் கடன்களின் அறவிடல் பதிவு செயன்முறையினை வசதிப் படுத்துவதற்காகவும் ஊழியர்களுக்கும் முகாமைத்துவத்திற்கும் தகவல்களை வழங்குவதற்காகவும் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் உதவியுடன் இலங்கை மத்திய வங்கி ஊழியர்களின் கடன் தரவுத் தளத்தை தொடர்ச்சியாகப் பேணியது.

### 12.7 ஏனைய தொழிற்பாடுகள்

#### i) கொள்வனவுச் செயன்முறை

மத்திய வங்கியின் ஒழுங்குவிதிகளின்படி, நிதித் திணைக்களத்தின் அலுவலர்கள், பொருட்கள் மற்றும் பணிகளின் கொள்வனவிற்கான அனைத்து தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள் மற்றும் விலைக்கோரல் சபைகளிலும் அளவீட்டுச் சபைகளிலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இக்கொள்வனவுகள் தொடர்பாக, 2015ஆம் ஆண்டுப்பகுதியில் ஏறத்தாழ 237 விலைக்கோரல் சபைகளிலும் அனைத்து தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களிலும் கலந்து கொண்டனர்.

#### ii) முதலீட்டு மேற்பார்வைக் குழு

நிதித் திணைக்களம் முதலீட்டு மேற்பார்வைக் குழுவிற்கு செயலக வசதிகளை வழங்கியது. மத்திய வங்கியின் பல

திணைக்களங்களினாலும் முகாமைப்படுத்தப்படும் பல நிதியங்களின் முதலீடுகள் பற்றி ஆலோசனை வழங்கவும் கண்காணிப்பதற்குமாக இக்குழு உருவாக்கப்பட்டது. நிதித் திணைக்களத்தினை மேற்பார்வை செய்கின்ற உதவி ஆளுநர் தலைமை தாங்கும் இக்குழுவில் தொடர்பான நிதிய முகாமைத்துவ திணைக்களங்களின் தலைவரும் மற்றைய அலுவலர்களும் பிரதிநிதித்துவம் பெற்றிருக்கின்றனர். 2015 ஆண்டுப் பகுதியில் குழு 12 கூட்டங்களை நடாத்தியதுடன் முதலீடுகள் தொடர்பான உறுதிப்படுத்தல்களைப் பெறுவதற்காக நாணயச் சபைக்கு காலாண்டு ரீதியில் அறிக்கையிட்டது. 2015 இறுதியில் முகாமைத்துவத்தின் கீழான நிதியத்தின் மொத்தப் பெறுமதி ரூ.65.9 பில்லியனாகக் காணப்பட்டது. முதலீட்டு மேற்பார்வைக் குழுவிற்குப் பதிலாக 2016இல் முதலீட்டுக் குழுவொன்று உருவாக்கப்பட்டதுடன் இதற்கு துணை ஆளுநர் தலைமை தாங்குவார். புதிய ஒழுங்குகளின் கீழ், ஊழிய சேம நிதியம் நீங்கலாக அனைத்து உள்ளக நிதியங்களினதும் முதலீடுகளை மையப்படுத்தப்பட்ட விதத்தில் முகாமைப்படுத்துவதற்காக தனியான முதலீட்டு பிரிவொன்று நிதித் திணைக்களத்தில் நிறுவப்படும்.

## 13. நிதியியல் உளவறிதல் பிரிவு

2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளின்படி ஏற்படுத்தப்பட்ட நிதியியல் உளவறிதல் பிரிவு 2007ஆம் ஆண்டிலிருந்து இலங்கை மத்திய வங்கியில் தொழிற்பட்டு வருகிறது. நிதியியல் உளவறிதல் பிரிவின் முக்கிய தொழிற்பாடுகள் பணம் தூயதாக்கல், பயங்கரவாதத்திற்கு நிதியிடல் மற்றும் நிதியியல் கொடுக்கல்வாங்கல் சட்டத்தில் வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ள சட்டத்திற்கு மாறான ஏனைய நடவடிக்கைகள் என்பனவற்றுடன் சாத்தியமான தொடர்புகளைக் கொண்டுள்ள விடயங்களைக் கண்டறியும் நோக்குடன் நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் மீதான தகவல்களைச் சேகரித்தல் மற்றும் பெற்றுக்கொள்ளுதல், மேற்குறிப்பிட்டவற்றுடன் தொடர்பான சந்தேகத்திற்குரிய நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய புலனாய்வுகளையும் அத்தகைய புலனாய்வுகளின் தகவல்களையும் விபரங்களையும் பொருத்தமான நடவடிக்கைகளுக்காக சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் அத்துடன் அல்லது ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரிகளிடம் பரப்புதல் என்பனவற்றை உள்ளடக்கியிருக்கிறது. 2015ஆம் ஆண்டுப் பகுதியில் நிதியியல் உளவறிதல் பிரிவின் முக்கிய தொழிற்பாடுகளும் ஏனைய நடவடிக்கைகளும் வருமாறு.

### 13.1 பரஸ்பர மதிப்பீட்டினை மேற்கொள்ளல்

நிதியியல் நடவடிக்கை செயலணிக் குழுவின் திருத்தப்பட்ட விதந்துரைப்புக்களுக்கு இசைவான விதத்தில், இலங்கை மீதான மூன்றாவது சுற்று பரஸ்பர மதிப்பீடு, பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடுதலை ஒழித்தல் என்பன தொடர்பில் நிதியியல் நடவடிக்கைச் செயலணிக் குழுவின் நியமங்களுக்கெதிரான இலங்கையின் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் கட்டமைப்பினை மதிப்பிடும் நோக்குடன் பணம் தூயதாக்கல் மீதான ஆசிய பசுபிக் குழுமத்தினால் 2014/15 காலப்பகுதியில் நடாத்தப்பட்டது. இலங்கை அதன் முதலாவது பரஸ்பர மதிப்பீட்டினை 2006இல் மேற்கொண்டிருந்தது. இலங்கை தொடர்பான இவ்விரண்டாவது பரஸ்பர மதிப்பீட்டில் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் மீதான சட்ட மற்றும் நிறுவன ரீதியான கட்டமைப்பு அதேபோன்று தொடர்பான நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தலிலுள்ள பயனுறுதன்மை என்பன ஆசிய பசுபிக் குழும உறுப்பினர் நாடுகள் மற்றும் ஆசிய பசுபிக் குழும செயலகம் என்பனவற்றிலிருந்தான 8 நிபுணர்களைக் கொண்ட குழுவினால் மதிப்பிடப்பட்டது. பரஸ்பர மதிப்பீட்டு செயற்முறையின் உச்சக் கட்டமாக மேலே குறிப்பிடப்பட்ட மதிப்பீட்டினைக் கொண்ட குழு இலங்கைக்கு நேரடியான விஜயத்தினை மேற்கொண்டதுடன் அரச மற்றும் தனியார் துறைகள் இரண்டினையும் பிரதிநிதித்துவப்படுத்தும் 50இற்கும் மேற்பட்ட நிறுவனங்களுடன் கலந்துரையாடல்களையும் மேற்கொண்டது. 2015 யூலையில் நியூசிலாந்தில் நடைபெற்ற ஆசிய பசுபிக் குழுமத்தின் பொதுக் கூட்டத்தில் பரஸ்பர மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டதுடன் "விரைவுபடுத்தப்பட்டதும் உயர்த்தப்பட்டதுமான பின்தொடர்" செயன்முறைகளின் கீழ் இலங்கை அதிகாரிகளினால் நடைமுறைப்படுத்தப்படவேண்டிய தொடர்ச்சியான நடவடிக்கைகளையும் ஆசிய பசுபிக் குழுமம் விதந்துரைத்திருக்கிறது. மேலும், பரஸ்பர மதிப்பீட்டில் அடையாளம் காணப்பட்ட பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் என்பனவற்றில் காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றங்களை ஆசிய பசுபிக் குழுமத்திற்கு ஆண்டிற்கு இரு தடவை அறிக்கையிடுமாறு நிதியியல் உளவறிதல் பிரிவு தேவைப்படுத்தப்பட்டது.

### 13.2 தகவல்களை சேகரித்தல், புலனாய்வு செய்தல் மற்றும் பரப்புதல்

உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள், பங்குத்தரகர்கள் மற்றும் காப்புறுதிக் கம்பனிகள் என்பன ரூ.1.0 மில்லியன் மற்றும் அதற்கு மேற்பட்ட அல்லது அதற்குச் சமமான வெளிநாட்டு நாணயங்களில் காசுக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் இலத்திரனியல் நிதிய மாற்றல்களை (உள்நாடு மற்றும் வெளிநாடு இரண்டும்) நிதியியல் உளவறிதல் பிரிவினூடாக அதேநேர கணனி வழி தரவுகளை முகாமைத்துவ முறைமையான "லங்காவின்" இற்கு தொடர்ந்தும் அறிக்கையிடுகின்றன. 2013 சனவரியிலிருந்து நிதியியல் உளவறிதல் பிரிவின் அதிகாரவரம்பிற்குள் வரும் அதிகாரமளிக்கப்பட்ட நாணய மாற்றுனர்களும் அதிகாரமளிக்கப்பட்ட நாணய மாற்றுனர் துறையினை கண்காணித்து ஒழுங்குமுறைப்படுத்துபவரான செலாவணிக் கட்டுப்பாட்டாளருக்கு கீழ்மட்ட தொகையினை விஞ்சுகின்ற அவர்களின் காசுக் கொடுக்கல்வாங்கல் பற்றி அறிவிக்கின்றனர். இதன்படி, 2015ஆம் ஆண்டுப் பகுதியில் 6.09 மில்லியனுக்கு மேற்பட்ட காசு/ நிதிய மாற்றல்களும் 783 சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்களும் அறிவிக்கப்பட்டிருந்தன. நிதியியல் பகுப்பாய்வுகளை மேற்கொண்டதன் பின்னர் 426 சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்கள் மேலதிக புலனாய்வுகளுக்காக சட்டத்தினை நடைமுறைப்படுத்துகின்ற மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளன.

### 13.3 அறிக்கையிடும் நிறுவனங்களின் பரீட்சிப்புக்கள்

2015ஆம் ஆண்டுப் பகுதியில் நிதியியல் உளவறிதல் பிரிவு முக்கியமாக வங்கித்தொழில் மற்றும் நிதியியல் கம்பனிகளை உள்ளடக்கிய அறிக்கையிடும் நிறுவனங்கள் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியிடல் என்பன தொடர்பில் அவை இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மை பற்றியும் நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டம் மற்றும் நிதியியல் உளவறிதல் பிரிவினால் விடுக்கப்பட்ட ஏனைய விதிகள் மற்றும் பணிப்புரைகள் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாமை பற்றியும் மதிப்பிடுவதற்காக அறிக்கையிடும் நிறுவனங்களின் மீது 10 பரீட்சிப்புக்களை நடாத்தியது. மேலும், நிதியியல் உளவறிதல் பிரிவு அடையாளம் காணப்பட்ட ஆரம்ப அறிக்கையிடல் குறைபாடுகள் மீது வழிகாட்டல்களை வழங்குவதற்காக அறிக்கையிடும் நிறுவனங்களுடன் 10 தனித்தனியான கூட்டங்களை நடாத்தியது.

### 13.4 ஏனைய நடவடிக்கைகள்

i. **இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையினை நோக்கிய நகர்வு:**

இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறை நிதியியல் நடவடிக்கை செயலணிக் குழுவின் 40 விதந்துரைப்புக்களை காத்திரமான முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு முக்கிய தூணாக விளங்குகிறது. பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் என்பன தொடர்பான சூழ்நிலையில் காணப்படும் உலகளாவிய போக்கு இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட ஒழுங்குமுறைப்படுத்தல் அணுகுமுறைக்கு பயன்படுத்தப்படுகிறது.

இவ்வாண்டுப் பகுதியில் நிதியியல் உளவறிதல் பிரிவு இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையின் கீழ் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியிடல் இடர்நேர்வுகளை அடையாளம் கண்டு தணிப்பதற்கு நிதியியல் நிறுவனங்களைத் தேவைப்படுத்தும் வாடிக்கையாளரை நெருக்கமாக கண்காணிக்கின்ற விதிகளை அனைத்து ஆர்வலர்களின் ஆலோசனையுடன் வரைந்தது.

ii. **நிறுவன ரீதியாக இயலளவினைக் கட்டியெழுப்புதல் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்:**

பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் தொடர்பான கொடுக்கல்வாங்கல்களைக் கண்டுபிடித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் அறிக்கையிடல் மீதான விழிப்புணர்வினை அதிகரிக்கும் தொடர்ச்சியான முயற்சியாக இவ்வாண்டுப்பகுதியில் 15 விழிப்புணர்வு/ பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளிலிருந்து 980 இற்கு மேற்பட்ட பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர். இது, நிதியியல் நிறுவனங்கள் மற்றும் இலங்கை பொலிஸிற்கு வருகை தந்த பங்கேற்பாளர்களுக்காக திருகோணமலையிலும், அம்பாந்தோட்டையிலும் நடாத்தப்பட்ட இரண்டு பாரியளவு இயலளவைக் கட்டியெழுப்புகின்ற மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களினை உள்ளடக்குகிறது. மேலும் 2015இல் நிதியியல் உளவறிதல் பிரிவு வங்காளதேசத்திலிருந்து வருகைதந்த அலுவலர்குழுவிற்கு பரஸ்பர மதிப்பீட்டினை மேற்கொள்கையில் தொழில்நுட்ப அறிவினையும் வழங்குவதற்கான சிறப்பு நிகழ்ச்சித்திட்டமொன்றினை நடாத்தியது. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் என்பனவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்திய ஏறத்தாழ 190 இணங்குவிப்பு அலுவலர்களுக்காக பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கான நிதியிடல் ஒழித்தல் மீதான வருடாந்த மாநாடும் இவ்வாண்டுக் காலத்தில் நடாத்தப்பட்டது.

iii. **பன்னாட்டு உறவுகள்:**

அ) எக்மன்ட் குழுமம்: நிதியியல் உளவறிதல் பிரிவு புலனாய்வுகளை மேற்கொள்ளவும், உறுப்பு நாடுகளின் ஒத்துழைப்புடன் அவற்றின் புலனாய்வுகள் மீதான சான்றுகளைத் திரட்டிக் கொள்வதற்காகவும் தகவல்களைப் பரிமாற்றிக் கொள்வதற்காகவும் உலகளாவிய ரீதியில் 151 உறுப்பினர் நாடுகளை உள்ளடக்கிய நிதியியல் உளவறிதல் சங்கத்திடமிருந்து உதவிகளைப் பெற்றுக்கொண்டது. 2015ஆம் ஆண்டில் வெளிநாட்டு எக்மன்ட் குழுவின் உறுப்பினர்களுடனான நிதியியல் உளவறிதல் பிரிவின் தகவல் பரிமாற்ற நிகழ்வுகளின் மொத்த எண்ணிக்கை 19 ஆகக் காணப்பட்டது.

ஆ) பணம் தூயதாக்கல் தொடர்பான ஆசிய பசுபிக் குழுமம்: ஆசிய பசுபிக் குழுமத்தின் நிறுவன உறுப்பினரென்ற முறையில், இலங்கை, 2015 யூலையில் ஒக்கலாந்து, நியூசிலாந்தில் நடைபெற்ற 18ஆவது ஆண்டுக் கூட்டத்திலும் 2015 நவெம்பரில் நேபாளத்தில் நடைபெற்ற 18ஆவது ஆண்டு வரைமுறை சார்ந்த கோட்பாடுகள் மற்றும் தொழில்நுட்ப கருத்தரங்குகளிலும் கலந்து கொண்டது. இலங்கை 2016/2018 காலப்பகுதிக்கான ஆசிய பசுபிக் குழுமத்தின் இனிவரும் இணைத்தலைமை நாடு என்ற முறையில் ஆசிய பசுபிக் குழுமத்தின் வருடாந்த மாநாட்டில் 2017இல் கொழும்பில் நடாத்துவதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டு வருகின்றது.

iv. **புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையொப்பமிடல்:**

நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளில் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்களை புலனாய்வு செய்தல் மற்றும் வழக்குத் தொடர்தல் ஆகிய நோக்கங்களுக்காக தகவல் மற்றும் புலனாய்வுகளை பகிர்ந்து கொள்வதனை வசதிப்படுத்துமொரு பொறிமுறையாக நிதியியல் உளவறிதல் பிரிவு இவ்வாண்டுப் பகுதியில் கெய்றிஸ் குடியரசின் நிதியியல் உளவறிதல் பிரிவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றினை செய்து கொண்டது. இதன்படி, இத்தகைய புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் மொத்த எண்ணிக்கை 2015 இறுதியில் 28 இற்கு அதிகரித்தது.

## 14. நிதியியல் துறை ஆராய்ச்சி

திணைக்களமானது நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுத் திணைக்களம் என்ற பெயரில் 2006இல் நிறுவப்பட்டது. இது 2011இல் நிதியியல் உறுதிப்பாட்டு கற்கைகள் திணைக்களம் என மீளப் பெயரிடப்பட்டதுடன், நிதியியல் உறுதிப்பாடு தொடர்பான ஆய்வுகள் மற்றும் ஆராய்ச்சிகளுக்கான தேவையினைப் பரிசீலனையில் கொண்டு இது மீண்டும் 2014இல் “நிதியியல் துறை ஆராய்ச்சித் திணைக்களம்” எனப் பெயரிடப்பட்டது. தேவையான தொழில்நுட்ப இயலாற்றல் மற்றும் மனித வளங்கள் ஆகியவற்றின் நியதிகளில் திணைக்களமானது இன்னமும் ஆரம்பக் கட்டத்திலேயே காணப்படுகின்றது. இதன்படி, 2015ஆம் ஆண்டுப் பகுதியில் நிதியியல் துறை ஆராய்ச்சித் திணைக்களம் நிதியியல் துறை அபிவிருத்தித் தேவைகள் மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு என்பனவற்றை முக்கிய கவனத்தில் கொண்டு ஆரம்பக்கட்ட ஆராய்ச்சி நடவடிக்கைகளைத் தொடங்கியது. இதன்படி, இவ்வாண்டுப் பகுதியில் நிதியியல் துறை ஆராய்ச்சித் திணைக்களத்தின் நடவடிக்கைகள், குறித்துரைக்கப்பட்ட நிதியியல் துறை விடயங்கள் மீதான ஆராய்ச்சி, நிதியியல் துறை அபிவிருத்தி மற்றும் உறுதிப்பாடு மீதான காலாந்தர அறிக்கைகள் மற்றும் மத்திய வங்கி ஆண்டறிக்கையின் அத்தியாயம் 8 இனைத் தொகுத்தல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

### (அ) குறித்துரைக்கப்பட்ட நிதியியல் துறை விடயங்கள் மீதான ஆராய்ச்சி

நிதியியல் துறை ஆராய்ச்சித் திணைக்களம் உள்ளகக் கொள்கை நோக்கங்களுக்காக இவ்வாண்டுப் பகுதியில் நான்கு முக்கிய துறைகளான குத்தகைக்குவிடுதல் மற்றும் தவணைக் கொள்வனவு நடவடிக்கைகள் என்பனவற்றினை முதன்மைப்படுத்தி வங்கிகள் மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் கடன்வழங்கல் நடவடிக்கைகள், நிதியியல் துறையின் பெறுமதி இழந்த சொத்துக்கள், வங்கியல்லா நிதியியல் துறையின் கடன்வழங்கல் நடவடிக்கைகளைப் பன்முகப்படுத்தல் மற்றும் வங்கிகள் மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களிலிருந்து தனியார் துறையினால் பெற்றுக்கொள்ளப்பட்ட கொடுகடன் என்பன தொடர்பில் பத்து ஆராய்ச்சி ஆய்வுகளை மேற்கொண்டது.

### (ஆ) நிதியியல் துறை அபிவிருத்தி மற்றும் உறுதிப்பாடு மீதான காலாந்தர அறிக்கைகள்

(i) ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட நிதியியல் நிறுவனங்களில் பெறுமதியிழந்த சொத்துக்களைக் கையாள்வதற்காக சொத்து முகாமைத்துவக் கம்பனியொன்றினை நிறுவுதல், அரச பிணையங்களிலான கொடுக்கல்வாங்கல்களுக்கான முறித் தீர்வகமொன்றினை ஏற்படுத்தல் என்பனவற்றிற்கான முன்மொழிவுகள் தீர்மானத்தினை எடுப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இதன்படி முன்மொழிவுகள் 2016 இற்கான தேசிய வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்டன.

(ii) நாணயக் கொள்கைக் குழுவிற்கு வழங்கப்பட்ட நிதியியல் துறை இடர்நேர்வு மதிப்பீட்டு மாதாந்த அறிக்கைகளும் நாணயச் சபைக்கான நிதியியல் துறை அபிவிருத்தி மீதான காலாண்டு அறிக்கைகளும் நியம செயலாற்ற குறிகாட்டிகளின் தொடர்களினாலும் நிதியியல் துறை ஆராய்ச்சித் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்ட அழுத்தப் பரீட்சிப்புக்களினாலும் எடுத்துக்காட்டப்பட்டவாறு நிதியியல் துறையில் காணப்பட்ட போக்குகளையும் அபிவிருத்திகளையும் எடுத்துக்காட்டின. திணைக்களம் நிதியியல் துறைத் தரவுகளைத் தொகுத்தல், கிரமமான அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் மற்றும் வெளியீடுகளுக்குப் பங்களித்தல் என்பன மூலம் மத்திய வங்கியின் மற்றைய

திணைக்களங்களின் இதையொத்த நடவடிக்கைகளுக்கும் பங்களித்தது.

(iii) விழிப்புணர்வினை மேம்படுத்தும் நோக்குடனும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டில் காத்திரமான தன்மையினை ஏற்படுத்தக்கூடிய பிரச்சனைகள் மீதான விவாதத்தினை ஊக்குவிப்பதற்காகவும் 2004இலிருந்து இதன் 11ஆவது தொடரான நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு மீளாய்வு - 2015, 2016 சனவரியில் வெளியிடப்பட்டது. நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு மீளாய்வு - 2015, நிதியியல் முறைமை உறுதிப்பாடு மற்றும் இடர்நேர்வு தணிப்பு வழிமுறைகளின் ஒட்டுமொத்த மதிப்பீடு, உலகளாவிய மற்றும் உள்நாட்டுப் பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள், உள்நாட்டு நிதியியல் சந்தைகளின் செயலாற்றம், வங்கித்தொழில் துறைச் செயலாற்றம் மற்றும் இடர்நேர்வுகள், மற்றைய நிதியியல் நிறுவனங்களின் அபிவிருத்தி மற்றும் இடர்நேர்வுகள் மற்றும் முக்கிய கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் தொழிற்பாடு என்பனவற்றை உள்ளடக்கியிருக்கிறது.

(iv) அண்மைய பொருளாதார அபிவிருத்தி - 2015இல் உள்ள அத்தியாயம் 8 - "நிதியியல் துறை அபிவிருத்தி மற்றும் உறுதிப்பாடு" 2015இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் நிதியியல் முறைமையின் முக்கிய துணைத் துறைகளின் செயலாற்றத்தினையும் இலங்கை மத்திய வங்கியின் தொடர்பான திணைக்களங்கள், பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் இலங்கை காப்புறுதிச் சபை என்பனவற்றினால் சமர்ப்பிக்கப்பட்ட தனிப்பட்ட அறிக்கைகளின் அடிப்படையில் நிதியியல் துறை ஆராய்ச்சித் திணைக்களத்தினால் சேகரிக்கப்பட்ட நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு மீதான அவற்றின் உள்ளார்ந்த தாக்கங்களையும் எடுத்துக்காட்டின.

**(இ) மத்திய வங்கியின் ஆண்டறிக்கையிலுள்ள அத்தியாயம் 8இன் தொகுப்பு**

திணைக்களம், தொடர்பான திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட தனிப்பட்ட அறிக்கைகளை தொகுத்ததன் மூலம் மத்திய வங்கி ஆண்டறிக்கை 2014இல் உள்ள "நிதியியல் துறை அபிவிருத்தி மற்றும் உறுதிப்பாடு" என்ற அத்தியாயம் 8 இனை தொகுத்தது. இவ்வத்தியாயமானது நிதியியல் நிறுவனங்கள், நிதியியல் சந்தை மற்றும் நாட்டின் நிதியியல் உட்கட்டமைப்பு என்பனவற்றின் மீதான அனைத்தையுமுள்ளடக்கிய பகுப்பாய்வினை, குறிப்பாக, இம்மூன்று துறைகளினதும் தொடர்பான செயலாற்றங்கள், இடர்நேர்வுகள் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவம், மூலவளங்களின் கிடைப்பனவு மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அபிவிருத்திகள் மீதான வலியுறுத்தல்களுடன் நாட்டின் ஒட்டுமொத்த நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு மீது ஒவ்வொரு துறையும் கொண்டிருக்கும் சாத்தியமான தாக்கங்களின் மதிப்பீடொன்றுடன் சேர்த்து வழங்குகின்றது.

**(ஈ) ஏனைய நடவடிக்கைகள்**

திணைக்களம் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் குழுவின் செயலகமாகத் தொடர்ந்தும் பணியாற்றுகின்றது. இக்குழுவானது நிதியியல் துறையினைப் பாதிக்கின்ற இடர்நேர்வுகளை அடையாளம் காண்பதற்காகவும் இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கான வழிமுறைகள் பற்றி கலந்துரையாடுவதற்காகவும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை ஒருங்கிணைப்பதற்காகவும் நிதியியல் முறைமை ஆராய்ச்சித் திணைக்களத்திற்குப் பொறுப்பாகவுள்ள துணை ஆளுநரின் தலைமையில் திணைக்களங்களுக்கிடையேயான ஒரு அமைப்பாகக் காணப்படுகிறது. நிதியியல் துறை ஆராய்ச்சித் திணைக்களம் 2015இல் நிதியியல் துறை இயலாற்றலைக் கட்டியெழுப்புவது மீதான வெளிநாட்டு தூதுக்குழுக்களையும் ஒருங்கிணைத்தது.

## 15. மனித வளங்கள்


இலங்கை மத்திய வங்கியின் குறிக்கோள்களை எய்துவதற்குப் பங்களிக்கக்கூடிய உயர்ந்த உற்பத்தித்திறனும் செயலூக்கமும் போட்டித்தன்மையும் கொண்ட ஊழியர் குழுக்களின் கிடைப்பனவினை உறுதிப்படுத்தும் குறிக்கோளுடன் மனித வளங்கள் திணைக்களம் ஏற்கனவேயுள்ள அலுவலர்களின் செயலூக்கம், புதிய அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்தல், செயலாற்ற முகாமைத்துவம், பதவி உயர்வு, வேலைச் சுழற்சி, மனக் குறைபாடுகளைக் கையாளுதல், ஊழியர் ஊதியங்கள் போன்ற பல்வேறு நடவடிக்கைகளையும் 2015இல் மனித வளங்கள் திணைக்களம் மேற்கொண்டது. வங்கியின் தொழில்துறைச் சமாதானத்தினையும் ஒட்டுமொத்த பணி வினைத்திறனையும் மேம்படுத்தும் நோக்குடன் இலங்கை மத்திய வங்கியின் முகாமைத்துவம், ஊழியர்கள் மற்றும் தொழிற்சங்கங்களுடன் சுமுகமான உறவுமுறைகளைப் பேணுவதற்கு மனித வளங்கள் திணைக்களம் பல்வேறு வழிமுறைகளையும் மேற்கொண்டது. இவ்வாண்டுப் பகுதியில் இலங்கை மத்திய வங்கியின் ஓய்வூதியக்காரர்களின் நலன்புரியிலும் கவனம் செலுத்தப்பட்டது. வங்கியின் மனிதவள அமைப்பு மற்றும் தொடர்பாக ஆண்டுக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் சுருக்கம் கீழே தரப்படுகிறது.

### 15.1 மனித வளங்கள் கட்டமைப்பு


2015 திசெம்பர் இறுதியிலுள்ளவாறு இலங்கை மத்திய வங்கி ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை 1,422 ஆக விளங்கி 638 உயர் பதவி அலுவலர்களையும் 623 உயர் பதவி அல்லாத அலுவலர்களையும் 161 சிற்றூழியர்களையும் உள்ளடக்கியுள்ளது. வகுப்பு அடிப்படையிலான, பால் அடிப்படையிலான மற்றும் வயது அடிப்படையிலான அலுவலர் உள்ளமைப்பு பின்வரும் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.

**வரைபடம் II-3** **2015.12.31 இல் உள்ளவாறு அலுவலர்களின் உள்ளமைப்பு**


**(அ) ஊழியர்களின் உள்ளமைப்பு: வகுப்பு ரீதியாக**




**(ஆ) ஊழியர்களின் உள்ளமைப்பு: பால் ரீதியாக**




**(இ) ஊழியர்களின் உள்ளமைப்பு: வயது ரீதியாக**




### 15.2 ஊழியர்களின் கல்வி மற்றும் தொழில்சார் நிபுணத்துவத் தகைமைகள்

2015இல் வங்கி பெரும்பாலும் உயர் பதவி மற்றும் உயர் பதவி அல்லா வகுப்புக்களில் பன்முகத்தன்மையும் திறனும் வாய்ந்த ஊழியர் குழுவொன்றினைக் கொண்டிருந்தது. 2015 திசெம்பர் இறுதியில் இலங்கை மத்திய வங்கியின் ஊழியர்கள் கொண்டிருந்த கல்விசார் மற்றும் தொழில்சார் நிபுணத்துவத் தகைமைகளின் விபரங்கள் அட்டவணை II-16 இல் காட்டப்பட்டுள்ளது.

ஊழியர்களின் தகைமைகள், தேர்ச்சிகள், தகுதிவாய்ந்த தன்மைகள் மற்றும் அனுபவம் என்பனவற்றினைப் பரிசீலனையில் கொண்டு, அவர்களது தொழிற்பாடுகளை வினைத்திறனுடனும் உற்பத்தித்திறன் வாய்ந்த விதத்திலும் ஆற்றும் விதத்தில் அவர்கள் இலங்கை மத்திய வங்கியில் 34 திணைக்களங்களிலும் 7 பிரதேச அலுவலகங்களிலும் பதவி அமர்த்தப்பட்டிருக்கின்றனர்.

### 15.3 மனித வள முகாமைத்துவம்

**(அ) ஆட்சேர்ப்பு**

இவ்வாண்டுப் பகுதியில் மனித வளங்கள் திணைக்களம் முகாமைத்துவப் பயிலுநர்கள், வங்கித்தொழில் உதவியாளர்கள் (பயிலுநர்கள்) மற்றும் கனிஷ்ட தனிப்பட்ட உதவியாளர்கள் (சிங்களம் மற்றும் ஆங்கிலம்) ஆகியோரின் ஆட்சேர்ப்பு தொடர்பான செயன்முறைகளை இறுதிப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. மேலும், 2015இல் இலங்கை மத்திய வங்கியின் பிந்திய ஆட்சேர்ப்பின் கொள்கையின் கீழ் கனிஷ்ட தனிப்பட்ட உதவியாளர்கள் (தமிழ் சுருக்கெழுத்து - தட்டச்சு) ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டனர்.

மேலும், மனித வளத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் வசதிகள் முகாமைத்துவத் திணைக்களம், பாதுகாப்புப் பணிகள் திணைக்களம், அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களம் மற்றும் செயலகத் திணைக்களம் என்பனவற்றிற்காக வெளிமூலங்களிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்வதற்கு வசதியளித்தது.

**(ஆ) செயலாற்ற முகாமைத்துவம்**

வங்கியின் செயலாற்ற முகாமைத்துவ முறைமை 4 படிமுறைகளை அதாவது ஊழியர்களின் வேலை விபரணங்களைத் தயாரித்தல் மற்றும் மீளாய்வு செய்தல், தனிப்பட்ட ஊழியர்களுக்கான இலக்குகளை நிர்ணயித்தல், ஊழியர்களின் செயலாற்றத்தினைக் கண்காணித்தல் மற்றும் செயலாற்றத்தினை மதிப்பிடல் என்பனவற்றை உள்ளடக்கியிருக்கிறது. செயலாற்ற மதிப்பீட்டுச் செயன்முறையின் கீழ், ஒவ்வொரு ஊழியரினதும் செயலாற்றமட்டமானது மதிப்பீட்டு பிரமாணத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு பொதுவான மற்றும் தொழில்நுட்பத் தகைமைகளின் அடிப்படையில் எய்தப்பட்ட செயலாற்றத்திற்குத் தரமிடல்களை வழங்குவதன் மூலம் மதிப்பிடப்படுகிறது. ஊழியர்களின் இறுதிச் செயலாற்றம் பதவி உயர்வுப் பிரமாணத்தின் தேவைப்பாடுகளில் ஒன்றாக பயன்படுத்தப்படுகிறது.

மனித வளத் திணைக்களம் இவ்வாண்டுப் பகுதியில் திட்டமிட்டவாறு ஊழியர்களின் செயலாற்ற மதிப்பீட்டுச் செயன்முறைகளை மேற்கொண்டது. மேலும், மனித வளத் திணைக்களம், திணைக்களங்களினது நடுவாண்டு செயலாற்ற மீளாய்வுச் செயன்முறைகளையும் 2015இற்காக திணைக்களங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஊழியர்களின் இலக்குகளையும் மீளாய்வு செய்தது.

**(இ) பதவி உயர்வுகள்**

இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் பதவி உயர்வு திட்டத்தின் கீழ், 2015இல் 397 ஊழியர்களுக்குத் தர பதவி உயர்வுகள் வழங்கப்பட்டன. இதன்படி, பிரயோகிக்கத்தக்க பதவி உயர்வு பிரமாணங்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் உயர் பதவி வகுப்பிலுள்ள 139 அலுவலர்களுக்கும் உயர் பதவி அல்லா வகுப்பிலுள்ள 190 அலுவலர்களுக்கும் 68 சிற்றூழியர்களுக்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டது.

**(ஈ) வேலைச் சுழற்சி**

அலுவலர்கள் வங்கியின் வேறுபட்ட துறைகளிலும் அனுபவத்தினைப் பெறுவதற்கான வாய்ப்புக்களை வழங்கும் அதேவேளையில் வங்கியானது அதன் ஒட்டுமொத்த குறிக்கோள்களையும் மிக வினைத்திறனுடன் அடைவதனை வசதிப்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கி வருடாந்த வேலைச் சுழற்சி முறைமையினை நடைமுறைப்படுத்தியது. இதற்கமைய, 2015இல் மனித வளத் திணைக்களம் வருடாந்த வேலைச் சுழற்சித் திட்டத்தின் கீழ் 74 உயர் பதவி அலுவலர்களுக்கும் 74 உயர் பதவி அல்லாத அலுவலர்களுக்கும் 77 சிற்றூழியர்களுக்கும் 2015 ஒத்தோபர் 01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் மாற்றல்களை வழங்கியது.

அட்டவணை II - 14　2015.12.31இல் உள்ளவாறு மத்திய வங்கியின் அலுவலர்களின் கல்வி/ தொழில்சார் நிபுணத்துவத் தகைமைகள்

| வகைகள் | கல்வி/ தொழில்சார்நிபுணத்துவ தகைமைகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | பட்டப்பின் படிப்பு, முதற்பட்டம் மற்றும் தொழில்சார் நிபுணத்துவ தகைமைகள் | பட்டப்பின் படிப்பு மற்றும் முதற் பட்டம் | பட்டப்பின் படிப்பு மற்றும் தொழில்சார் நிபுணத்துவ தகைமைகள் | முதற்பட்டம் மற்றும் தொழில்சார் நிபுணத்துவ தகைமைகள் | முதற் பட்டம் | தொழில்சார் நிபுணத்துவ தகைமைகள் |
| அலுவலர் தரம் | 69 | 165 | 12 | 79 | 178 | 18 |
| அலுவலர் தரமல்லாத | 4 | 10 | 6 | 15 | 52 | 32 |
| மொத்தம் | **73** | **175** | **18** | **94** | **230** | **50** |

மூலம்: மனிதவள அபிவிருத்தி

(உ) தொழில்துறை சௌகரியம்

2015இல் மனித வளத் திணைக்களம் முகாமைத்துவத்திற்கும் தொழிற்சங்கங்களுக்குமிடையில் நெருக்கமான கலந்துரையாடல்களைப் பேணுவதற்கான வசதி ஏற்பாட்டாளர் என்ற அதன் வகிபாகத்தினைத் தொடர்ந்தும் ஆற்றியது. இதற்கமைய, இவ்வாண்டுப் பகுதியில் பல கலந்துரையாடல்கள் ஒழுங்குசெய்யப்பட்டன.

(ஊ) மனக்குறைகளைக் கையாளுதல்

2015ஆம் ஆண்டுப் பகுதியில் மனித வளத் திணைக்களம் தற்போதைய ஊழியர்களினதும் ஓய்வூதியம் பெறுவோரினதும் மனக்குறைகளை வெற்றிகரமாகத் தீர்த்து வைத்தது.

## 15.4 புதிய திணைக்களங்கள்/ பிரதேச அலுவலகங்கள் நிறுவப்பட்டமை

முகாமைத்துவத் தேவைப்பாடுகளைப் பொறுத்து புதிய திணைக்களத்தினை நிறுவுவதில் மனித வளத் திணைக்களம் ஒரு கருவியாகச் செயற்பட்டது.

1. இதற்கமைய, வங்கியின் இடர்நேர்வு முகாமைத்துவம், சட்டம் மற்றும் இணங்குவிப்புத் தொழிற்பாடுகளை உயர்த்தும் நோக்குடன் 2015 பெப்புருவரி 09ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களங்கள் நிறுவப்பட்டன.
2. வங்கி ஊழியர்களுக்கு கூடியளவிற்கு உபாயம் நிறைந்த பயிற்சி வாய்ப்புக்களை வழங்கும் நோக்குடன் 2015 யூலை 30ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களம் நிறுவப்பட்டது.
3. பிராந்தியங்களின் அபிவிருத்தியில் கவனம் செலுத்துகின்ற அரசாங்கத்தின் நோக்கத்துடன் இசைந்து செல்லும் விதத்தில் நாட்டின் ஒன்பது மாகாணங்களுக்காக திணைக்கள மட்டத்திலான பிரதேச அலுவலகங்கள் 2015 ஒத்தோபர் 22ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் நிறுவப்பட்டன. திணைக்கள மட்டத்திலான பிரதேச அலுவலகங்கள் மேல் மாகாணம், தென் மாகாணம், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் மற்றும் மலைநாடு, வட மத்திய மற்றும் வட மேல் மாகாணம் போன்ற மாகாணங்களைப் பொருத்தமான விதத்தில் ஒருங்கிணைத்தமையின் மூலம் உருவாக்கப்பட்டன.
4. நுண்பாக நிதி நிறுவனங்களுக்கான மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கிடைக்கச் செய்யப்பட வேண்டியதன் தேவையினை பரிசீலனையில் கொண்டு 2015 ஒத்தோபர் 22ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் நுண்பாக நிதி நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களம் நிறுவப்பட்டது.

## 15.5 திணைக்களங்கள் மூடப்பட்டமை

1. ஆளுநர் செயலகத் திணைக்களம் 2015 பெப்புருவரி 09ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் மூடப்பட்டதுடன் ஆளுநர் செயலகத் திணைக்களத்தின் நடவடிக்கைகள் செயலகத் திணைக்களத்திற்கு மாற்றல் செய்யப்பட்டன.
2. பிரதேச அலுவலகங்கள் கண்காணிப்புத் திணைக்களம் 2015 ஒத்தோபர் 22ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் மூடப்பட்டது.

## 15.6 2015ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் ஆளுநர் வெளிநாட்டில் பங்குபற்றிய கூட்டங்கள்

1. பெப்புருவரியில் வாசிங்டனில் நடைபெற்ற ப.நா.நிதியம் மற்றும் உலக வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர்களுடனான கூட்டத்திலும் ஐக்கிய அமெரிக்காவின் நியூயோர்க்கிலும் பொஸ்டனிலும் நடைபெற்ற முதலீட்டாளர் கூட்டங்களிலும் கலந்து கொண்டார்
2. மாச்சில் சிங்கப்பூர், ஐக்கிய அமெரிக்காவின் லொஸ் ஏன்ஜல்ஸ் மற்றும் சான் பிரான்சிஸ்கோ ஆகிய இடங்களில் நடைபெற்ற முதலீட்டாளர் கூட்டங்களில் கலந்து கொண்டார்.
3. யூனில் யப்பானில் இடம்பெற்ற அலுவல்சார் கூட்டங்களில் மாண்புமிகு நிதியமைச்சருடன் கலந்து கொண்டார்.
4. யூலையில் ஒக்லாந்து, நியூசிலாந்தில் இடம்பெற்ற பணம் தூயதாக்கல் மீதான ஆகிய பசுபிக் குழுமத்தின் 18ஆவது ஆண்டுக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.
5. செத்தெம்பரில் "ஆசிய நிதியின் எதிர்காலம்: அபிவிருத்திக்கான நிதியிடல் 2015" தொடர்பில் இந்தோனேசியாவில் நடைபெற்ற ப.நா. நிதியம் - இந்தோனேசிய வங்கியின் கூட்டு மாநாட்டில் கலந்து கொண்டதுடன், செத்தெம்பரில் வங்கிகள் மற்றும் இலங்கை நிதியியல் நிறுவனங்களின் அலுவலர்களுடன் இணைந்து டுபாய் மற்றும் அபுதாபியில் நடைபெற்ற கூட்டத்தில் வங்கி முதன்மை நிறைவேற்று அலுவலர்களின் தூதுக் குழுவிற்கு தலைமை தாங்கி அக்கூட்டங்களில் கலந்து கொண்டார்.
6. ஒத்தோபரில், மாலைதீவின் நாணய அதிகாரசபையின் ஆளுநரினது அழைப்பின் பேரில் மாலைதீவில் நடைபெற்ற டிலாறூ பிராந்திய மாநாட்டில் முக்கிய உரையொன்றினை ஆற்றியதுடன் சிங்கபூருக்கு மாண்புமிகு பிரதமர் விஜயம் செய்வதற்கு முன்னதாக இருபுடை ஒத்துழைப்பு விடயங்கள் பற்றி கலந்துரையாடுவதற்காக சிங்கப்பூரினைத் தளமாகக் கொண்ட சிங்கப்பூரிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகருடைய கூட்டத்தினை நடத்தியதுடன் மாண்புமிகு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைத் தலைவராகக் கொண்ட மிக முக்கிய பிரமுகர்கள் தூதுக்குழுவின் உறுப்பினராக சிங்கப்பூரில் நடத்தப்பட்ட அலுவல்சார் கூட்டங்களிலும் கலந்து கொண்டார்.
7. நவெம்பரில் சிங்கப்பூரில் இடம்பெற்ற மத்திய சேம நிதிய சபை மற்றும் வீடமைப்பு அபிவிருத்திச் சபை உறுப்பினர்களுடனான கூட்டத்திற்கு இலங்கை மத்திய வங்கியிலிருந்தான அலுவலர் குழுவிற்கு தலைமைதாங்கிச் சென்றார். சிங்கப்பூரில் இடம்பெற்ற முதலீட்டாளர்கள் மற்றும் மத்திய சேம நிதிய சபை மற்றும் வீடமைப்பு அபிவிருத்திச் சபை அலுவலர்களுடனான கூட்டத்தில் மாண்புமிகு பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கவுடன் சேர்ந்து

கலந்து கொண்டார். திருவனந்தபுரத்திலுள்ள இந்திய ஒதுக்கு வங்கியின் பிராந்திய அலுவலகத்திற்கு கேரளவிற்கான பிராந்திய பணிப்பாளரின் அழைப்பின் பேரில் இந்தியாவின் கேரளவிலுள்ள இந்திய ஒதுக்கு வங்கியின் லக்ஷடீப் இற்கு விஜயம் செய்ததுடன் பிலிப்பைன்ஸ் மணிலாவில் நடைபெற்ற தென்கிழக்காசியா மத்திய வங்கி ஆளுநர்களின் 51ஆவது மாநாட்டிலும் தென்கிழக்காசிய மத்திய வங்கிகளின் ஆளுநர்கள் சபையின் 35ஆவது கூட்டத்திலும் கலந்து கொண்டார்.

8. திசெம்பரில், சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் லீ குவான் யூ ஸ்கூல் ஒவ் பப்ளிக் பொலிசியில் இடம்பெற்ற நாணய மற்றும் நிதியியல் நிறுவனங்களின் இணைந்த அலுவலர்களின் கூட்டத்தில் பிரதான பேச்சாளராக பங்கு பற்றினார். பிட்ஜ் ரேடிங் இனதும் சிங்கப்பூரிலுள்ள சிங்கபூர் கோப்பரேஷன் ஒவ் என்டபிறைஸினதும் அலுவலர்களின் கூட்டங்களில் கலந்து கொண்டார். சவுதி அரேபிய வங்கித்தொழில் துறையின் அலுவலர்களுடனான கூட்டங்களிலும் கலந்துரையாடல்களிலும் கலந்து கொள்வதற்காக சவூதி அரேபிய இராச்சியத்திற்கு இலங்கை வங்கித்தொழில் துறையின் அலுவலர்களுக்கு தலைமைதாங்கிச் சென்றதுடன் இந்தியா, சென்னையிலுள்ள இந்திய ஒதுக்கு வங்கியின் பிராந்திய பணிப்பாளரின் அழைப்பின் பேரில் சென்னையிலுள்ள இந்திய ஒதுக்கு வங்கியின் பிராந்திய அலுவலகத்திற்கும் அலுவலர் பயிற்சிக் கல்லூரிக்கும் விஜயம் செய்தார்.

### 15.7 நியமனங்கள்

1. திரு. ஈ. ஏ. ஹெட்டியாராய்ச்சி, பணிப்பாளர், அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களம் 2015 பெப்புருவரி 9ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் தகவல் தொழில்நுட்பவியல் திணைக்களத்திற்குப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து 2015 செத்தெம்பர் 21ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வசதிகள் முகாமைத்துவத் திணைக்களத்திற்கு பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

2. திருமதி. ஆர். பீ. வீரசிங்க, பணிப்பாளர், கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் 2015 பெப்புருவரி 9ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களத்திற்கு பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து 2915 செத்தெம்பர் 21ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் திணைக்கள மட்ட பிரதேச அலுவலகம் - மேல் மாகாணத்திற்குப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

3. திரு. எச். எம். எக்கநாயக்க, பணிப்பாளர், நிதியியல் துறை ஆராய்ச்சித் திணைக்களம் 2015 பெப்புருவரி 9ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பாதுகாப்புப் பணிகள் திணைக்களத்திற்குப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

4. திருமதி. சி.எம்.டி.என்.கே. செனிவிரத்ன, கண்காணிப்பாளர், நாணயத் திணைக்களம் 2015 பெப்புருவரி 9ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பொதுப் படுகடன் திணைக்களத்தின் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து அவர் 2015 செத்தெம்பர் 21ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் தகவல் தொழில்நுட்பவியல் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

5. திரு. எம். ஜே. எஸ் அபேசிங்க பணிப்பாளர் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் 2015 பெப்புருவரி 9ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். அதன் பின்னர் அவர் 2015 செத்தெம்பர் 21 நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் திணைக்கள மட்ட பிரதேச அலுவலகம் - தென் மாகாணத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

6. திருமதி. ஆர். ஏ. எஸ். எம். தயாரத்ன, பணிப்பாளர் தகவல் தொழில்நுட்பவியல் திணைக்களம் 2015 பெப்புருவரி 9ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

7. திரு. எஸ். ஜே. ஏ. கந்தகம, பணிப்பாளர், தொடர்பூட்டல் திணைக்களம் 2015 பெப்புருவரி 9ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

8. திருமதி. கே. எம். ஏ. என் டவுலாகல, நிதி அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்த இவர் 2015 பெப்புருவரி 9ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். அதன் பின்னர் அவர் 2015 செத்தெம்பர் 21ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் திணைக்கள மட்டத்திலான பிரதேச அலுவலகம் - வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். அதன் பின்னர் 2015 நவெம்பர் 05ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் நாணயச் சபையின் துணைச் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

9. திரு. என். டபிள்யு. ஜி. ஆர். டி. நாணயக்கார, கண்காணிப்பாளர், பொதுப்படுகடன் திணைக்களம் 2015 பெப்புருவரி 09ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் நிதியியல் துறை ஆராய்ச்சித் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

10. திரு. பி. டபிள்யு. டி. என். ஆர். றொட்ரிகோ, கண்காணிப்பாளர், ஊழியர் சேம நிதியத் திணைக்களம் 2015 பெப்புருவரி 9ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

11. திரு. ஆர். ஏ. ஏ. ஜயலத், பணிப்பாளர் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம், 2015 பெப்புருவரி 9ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் ஊழியர் சேம நிதியத் திணைக்களத்தின் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

12. திரு. ஜே. பி. ஆர். கருணாரத்ன, பணிப்பாளர், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களம் 2015 பெப்புருவரி 9ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் நாணயத் திணைக்களத்திற்கு கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

13. திரு. சி. என். விஜயசேகர, பதில் பணிப்பாளர், வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம் 2015 பெப்புருவரி 9ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்திற்கு பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். அதன் பின்னர் அவர் 2015 பெப்புருவரி 28ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் அதே திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

14. திரு. ஏ. ஏ. எம். தாசிம், பதில் பணிப்பாளர், பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம், 2015 பெப்புருவரி 9ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் தொடர்பூட்டல் திணைக்களத்திற்குப் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். பின்னர் 2015 பெப்புருவரி 28ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் அதே திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

15. திருமதி கே. தசநாயக்க, பணிப்பாளர், ஆளுநரின் செயலகத் திணைக்களம், 2015 பெப்புருவரி 10ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

16. திரு. கே. எம். எம். சிறிவர்தன, நிதி அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்த இவர் 2015 மே 1ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டதுடன் பின்னர் 2015 நவெம்பர் 1ஆம் நாளிலிருந்து அதே திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

17. திரு. பி. வி. எல். நந்தசிறி, முதன்மைக் கணக்காளர், நிதித் திணைக்களம் 2015 யூன் 9ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும்

விதத்தில் சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

18. திரு. பி. ஏ. விஜயரத்ன, மேலதிக முதன்மைக் கணக்காளர், நிதித் திணைக்களம் 2015ஆம் யூன் 9ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பதில் முதன்மைக் கணக்காளராக நியமிக்கப்பட்டார். பின்னர் அவர் 2015 திசெம்பர் 9ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் அதே திணைக்களத்தின் முதன்மைக் கணக்காளராக நியமிக்கப்பட்டார்.

19. திருமதி. கே. குணதிலக, பணிப்பாளர், மனித வளத் திணைக்களம், 2015 யூன் 19ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

20. திரு. ஏ. எம். என். குணவர்தன, பணிப்பாளர், உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம், 2015 யூன் 19ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் மனித வளத் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

21. திரு. கே. எம். அபேகோன், மேலதிகப் பணிப்பாளர், மனித வளத் திணைக்களம், 2015 ஓகத்து 3ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

22. திரு. டி. எம். ரூபசிங்க, செலாவணிக் கட்டுப்பாட்டாளர், 2015 செத்தெம்பர் 21ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் திணைக்கள மட்ட பிரதேச அலுவலகம் - மலைநாட்டுப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். அதன் பின்னர் அவர் 2015 நவெம்பர் 05ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் மேற்குறிப்பிட்ட பதவிக்கு மேலதிகமாக திணைக்கள மட்ட பிரதேச அலுவலகம் - வட மத்திய மற்றும் வட மேல் மாகாணங்களுக்கான பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

23. திரு. யு. எச். ஈ. சில்வா, பணிப்பாளர், வசதிகள் முகாமைத்துவத் திணைக்களம் 2015 செத்தெம்பர் 21ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

24. திரு. யு. பி. அலவத்தகே, கற்கை விடுப்பிற்கு பின்னர் கடமைக்கு மீண்ட இவர் 2015 செத்தெம்பர் 21ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

25. திரு. எம். ஐ. சுபியான், செயலாளர், செயலகத் திணைக்களம் 2015 செத்தெம்பர் 21ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் திணைக்கள மட்ட பிரதேச அலுவலகம் - வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

26. திருமதி. ரி. எம். ஜே. வை. பி. பர்னாந்து, பணிப்பாளர், வங்கி மேற்பார்வைத் திணைக்களம் 2015 செத்தெம்பர் 21ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் செலாவணிக் கட்டுப்பாட்டாளராக நியமிக்கப்பட்டார்.

27. செல்வி. எஸ். எச். குணவர்தன, மேலதிகக் கண்காணிப்பாளர், நாணயத் திணைக்களம் 2015 செத்தெம்பர் 21ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

28. திரு. ரி. எச். பீ. சரத்சந்திர, மேலதிகப் பணிப்பாளர், பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் 2015 செத்தெம்பர் 21ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பொதுப்படுகடன் திணைக்களத்தின் பதில் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

29. திரு. பீ. டபிள்யு, ஜினசேன, மேலதிகச் செயலாளர், செயலகத் திணைக்களம் 2015 செத்தெம்பர் 21ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களத்திற்கு பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

30. திரு. எம். எஸ். கே. தர்மவர்தன, மேலதிகக் கண்காணிப்பாளர், ஊழியர் சேம நிதியத் திணைக்களம் 2015 செத்தெம்பர் 21ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

31. முனைவர் எம். இசட். எம். ஆசிம், மேலதிகக் கண்காணிப்பாளர், பொதுப்படுகடன் திணைக்களம் 2015 செத்தெம்பர் 21ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் புள்ளிவிபரத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

32. திரு. கே. எச். ஏ. எஸ். ஆரியரத்ன, மேலதிகப் பணிப்பாளர், புள்ளிவிபரவியல் திணைக்களம் 2015 செத்தெம்பர் 21ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் செயலகத் திணைக்களத்தின் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

33. திரு. ரி. டி. எச். கருணாரத்ன, மேலதிகக் கண்காணிப்பாளர், ஊழியர் சேம நிதியத் திணைக்களம் 2015 செத்தெம்பர் 21ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் நாணயத் திணைக்களத்தின் மேலதிகக் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார். அவர் பின்னர் 2015 ஒத்தோபர் 1ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் தொடர்பூட்டல் திணைக்களத்தின் மேலதிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

34. திரு. ரி. எம். இசட். முத்தாலிவ், மேலதிகப் பணிப்பாளர், தொடர்பூட்டல் திணைக்களம் 2015 ஒத்தோபர் 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் நிதியியல் துறை ஆராய்ச்சித் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

35. திரு. டி. ஏ. ஜி. கே. விஜேதுங்க, பணிப்பாளர் பிரதேச அலுவலகங்கள் கண்காணிப்புத் திணைக்களம் 2015 ஒத்தோபர் 22ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் நுண்பாக நிதி நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

36. திரு. வி. பாஸ்கரன், மேலதிகப் பணிப்பாளர், பிரதேச அலுவலகங்கள் கண்காணிப்புத் திணைக்களம் 2015 ஒத்தோபர் 22ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் நுண்பாக நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

**15.8 விடுவிப்பிலுள்ள அலுவலர்கள்**

1. திரு. எஸ். ஆர். ஆட்டிகல, உதவி ஆளுநர், நிதி அமைச்சிற்குப் பதில் செயலாளராக கடமையாற்றுவதற்கு
2. திருமதி. எஸ் குணரத்ன, உயர் பதவி அலுவலர் தரம் IV, பன்னாட்டு நாணய நிதியத்திற்கு மாற்று நிறைவேற்றுப் பணிப்பாளராக
3. முனைவர். ஆர். ஏ. பெரேரா, உயர் பதவி அலுவலர் தரம் IV, அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சிற்கு
4. திருமதி டி. எஸ். டபிள்யு. சமரதுங்க, உயர் பதவி அலுவலர் தரம் III (2), பொருளாதார அலுவல்கள் பணிப்பாளராக நிதி அமைச்சிற்கு
5. முனைவர் பி. கே. ஜி. ஹரிச்சந்திரா, உயர் பதவி அலுவலர் தரம் III (2), பொருளாதார ஆராய்ச்சிப் பணிப்பாளராக நிதி அமைச்சிற்கு
6. திரு. எஸ். ஜி. எஸ். டி. ஜெயசேகர, உயர் பதவி அலுவலர் தரம் II, பாதுகாப்பு அமைச்சிற்கு
7. திரு. எஸ். ஜே. கே. குறுகே, உயர் பதவி அலுவலர் தரம் II, பாதுகாப்பு அமைச்சிற்கு
8. திருமதி. எச். எஸ். எஸ். சில்வா, உயர் பதவி அலுவலர் தரம் II, நிருவாக உதவியாளராக பன்னாட்டு நாணய நிதியத்திற்கு
9. திரு. என். பீ. ஜனகன், உயர் பதவி அலுவலர் தரம் I, நிதி அமைச்சிற்கு
10. திரு. எஸ். என். டபிள்யு. கருணாதாச, ஓட்டுநர், வலு மற்றும் புதுப்பிக்கக்கூடிய சக்தி அமைச்சிற்கு

## 15.9 ஓய்வுபெறல்கள்

1. முனைவர், டபிள்யு. எம். ஹேமச்சந்திர, உதவி ஆளுநர் 2015 செத்தெம்பர் 12ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.
2. திரு. சி. பீ. பத்பேரிய, மேலதிப் பணிப்பாளர், தகவல் தொழில்நுட்பத் திணைக்களம், 2015 பெப்புருவரி 02ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.
3. திரு. எல். டி. டி. வை. பெரேரா, மேலதிகப் பணிப்பாளர், உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம் 2015 ஏப்பிறல் 07ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.
4. திரு. எச். சிரியாரத்ன, மேலதிகப் பணிப்பாளர், வசதிகள் முகாமைத்துவத் திணைக்களம் 2015 ஏப்பிறல் 19ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.
5. திரு. எச். பி. ஜி. எஸ். ரத்னசிறி, மேலதிகப் பணிப்பாளர், நிதியியல் துறை ஆராய்ச்சித் திணைக்களம் 2015 மே 23ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.
6. திரு. ரி. டபிள்யு. ஆரியரத்ன, மேலதிகப் பணிப்பாளர், அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களம் 2015 நவெம்பர் 06ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.
7. திரு. ஏ. ஜே. எல். பீரிஸ், மேலதிகப் பணிப்பாளர், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் 2015 திசெம்பர் 17ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

## 16. தகவல் தொழில்நுட்பம்

வங்கியின் அனைத்துச் தொழிற்பாடுகளுக்குமான தகவல் தொழில்நுட்ப வசதிகளை ஒழுங்குசெய்து வழங்குவதற்காக தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது 1981இல் நிறுவப்பட்டது. ஆண்டு காலப்பகுதியில், தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் தொழிற்பாடுகள் நான்கு பரந்துபட்ட துறைகளுடன் தொடர்பானதாக இருந்தது. அவையாவன, (அ) செலவுச் சிக்கனமான தகவல் தொழில்நுட்பத் தீர்வுகளை வழங்குதல்; (ஆ) வங்கியில் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பினைத் தொடர்ச்சியாக மேம்படுத்தல்; (இ) தேசியக் கொடுப்பனவு முறைமை உட்கட்டமைப்பினை வசதிப்படுத்தல்; மற்றும் (ஈ) தகவல் தொழில்நுட்ப இடர்முகாமைத்துவம்.

### (அ) செலவுச் சிக்கனமான தகவல் தொழில்நுட்பத் தீர்வுகளை வழங்குதல்

தகவல் தொழில்நுட்பத் தீர்வுகளை வழங்குவதற்காக வங்கியின் பொருளாதாரக் கொள்கை ஆலோசனைக் கொத்தணிக்கான 6 செயற்றிட்டங்கள், நிதியியல் துறை ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைக் கொத்தணிக்கான 8 செயற்றிட்டங்கள் மற்றும் திறனாற்றலைக் கட்டியெழுப்புதல் மற்றும் துணை கொத்தணிக்கான 14 செயற்றிட்டங்கள் உட்பட மொத்தமாக 33 புதிய செயற்றிட்டங்களைத் தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் திட்டமிட்டிருந்தது. ஆண்டிறுதியில் 23 செயற்றிட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருந்த வேளையில் 7 செயற்றிட்டங்கள் பயன்படுத்துநர் திணைக்களங்களால் பரீட்சிக்கப்பட்டுக் கொண்டிருந்தன மற்றும் 3 செயற்றிட்டங்கள் மென்பொருள்களை அபிவிருத்தி செய்யும் கட்டத்திலிருந்தன. இவ்வாண்டுக் காலப்பகுதியினுள் மேற்கொள்ளப்பட்ட செயற்றிட்டங்களிடையே பின்வரும் எட்டு முக்கிய முறைமை அபிவிருத்திகள் காணப்பட்டன.

i) அதேநேர அடிப்படையில் நாணய இன அடிப்படையில் நாணய இருப்பு சம்பந்தமான தகவல்களை விரைவாகவும் துல்லியமாக வழங்க மற்றும் வைப்பறைகளுக்கிடையிலான நாணய நகர்வினை முகாமை செய்ய நாணய இருப்பு முகாமைத்துவ முறைமை.

ii) பல்வேறு வகைப்பட்ட, ஊழியர் கொடுப்பனவுகளை மேற்கொள்ள வங்கியின் மனிதவள முகாமைத்துவ முறைமையான இஎச்ஆர்நெற் இற்கு நான்கு மாதிரிகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் மேலதிக நான்கு மாதிரிகளின் அபிவிருத்தியினை ஆரம்பித்தல்.

iii) இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையினூடாக (சிலிப்ஸ்) ஊழியர் சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவு துணை அமைப்புக்களின் கொடுப்பனவுச் செய்முறையைக் கையாள்வதற்கான ஒரு ஒருங்கிணைக்கப்பட்ட கொடுப்பனவு முறைமை. இம்முறைமை ஒரு நாளுக்கு ஒரு மில்லியன் பரிவர்த்தனைகளை மேற்கொள்ளக்கூடிய ஆற்றல் கொண்டது.

iv) பொதுப்படுகடன் திணைக்களத்திற்காக படுகடன் உபகரணங்கள் சார்ந்த தகவல் களஞ்சியத்திற்கு வசதியளிப்பதற்காக ஒரு பொதுப்படுகடன் தரவுத்தளம், முறைமை அபிவிருத்தி நிறைவுற்று பாவனையாளர் பரீட்சிப்பிற்காக வழங்கப்பட்டுள்ளது.

v) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வை மற்றும் வங்கி மேற்பார்வைத் திணைக்களங்களின் தேவைக்கேற்ப புதிய கூற்றுக்களை உள்ளடக்கிய "பின்நெற்" பயன்பாட்டினை மேம்படுத்தல். இதன் விளைவாக, பின்நெற் ஆண்டிறுதியில் ஏறத்தாழ 250 வெவ்வேறு வகையான கூற்றுக்களை வசதிப்படுத்தியது.

vi) ஊழியர் சேம நிதிய உறுப்பினர் பங்களிப்புச் சேகரிப்புக்களை அதேநேரத் தரவு உறுதிப்படுத்தலுடன் துரிதப்படுத்த ஊழியர் சேம நிதிய இணையப் பணியினை நேர்த்திப்படுத்தல் மற்றும் உறுப்பினர்களுக்கான வீட்டுக்கடன் மற்றும் பணம் மீளளிப்பு விண்ணப்பங்களின் நிலையை அறிவிக்க குறுந்தகவல் பணி அறிவிப்பு வசதி.

vii) பல்வேறுபட்ட திணைக்களங்களிலிருந்தான தரவுகளுக்குப் பொதுவான படிவத்தினை கட்டியெழுப்புவதற்கும் அதனிலிருந்து பாரிய அளவிலான சமூக மற்றும் பொருளாதாரத் தரவுகளை கொள்கை ஆராய்ச்சித் தேவைகளுக்காக ஒரு மத்திய அமைவிடத்திலிருந்து வழங்குவதற்காகவும் பொது இலத்திரனியல் ஆராய்ச்சித் தரவுத் தளம்.

viii) மத்திய வங்கியின் ஊழியர் ஆட்சேர்ப்பினை வசதிப்படுத்த விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களை இணையம் மூலம் சமர்ப்பிக்கக் கூடிய வசதிகளுடன் கூடிய விதத்தில் மத்திய வங்கிக்கு அலுவலர் ஆட்சேர்ப்பிற்கு வசதிப்படுத்த வெப்தள ஆட்சேர்ப்பு முறையினை வசதிப்படுத்தியது. இது மனித வளத் திணைக்களத்திற்கு விண்ணப்பங்களைப் செயற்படுத்துவதன் மூலம் குறிப்பிடத்தக்களவு நேரச் சேமிப்பினை ஏற்படுத்துகின்ற இணையத்தை அடிப்படையாகக் கொண்டதொரு ஆட்சேர்ப்பு முறைமையாகும்.

### (ஆ) தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பினை தொடர்ச்சியாக மேம்படுத்தல்கள்

தகவல் முறைமைகளின் தாக்குப்பிடிக்கக்கூடிய திறனினை வலுவூட்டுகின்ற அதேவேளை தொழில்நுட்பத்தில் ஏற்படுகின்ற பிந்திய மேம்பாடுகளுக்கு இணையான தரத்தினை பேணுவதற்காக 2015ஆம் ஆண்டு காலப்பகுதியில் வங்கியின் தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பினை தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் தொடர்ந்தும் மேம்படுத்தியது. அதற்கேற்ப, ஆண்டு காலப்பகுதியில் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

i. **தகவல் தொழில்நுட்ப முறைமைகளின் மேம்படுத்தல்கள்**

- 4 கள கட்டுப்படுத்திகள் 3 அஞ்சல் சேமிப்பிகள் மற்றும் ஏனைய முறைமை மத்திய சேமிப்பிகளைத் தரமுயர்த்தியதன் மூலம் உள்ளகக் கள உட்கட்டமைப்பினை மேம்படுத்தியமை.
- காத்திரமான தகவல்களைப் பகிர்ந்து கொள்வதனை வசதிப்படுத்துவதற்கும் வங்கியின் உள்ளகப் பணியாற்றல் சூழலின் இயலாற்றலை விரிவாக்குவதன் மூலம் தலைமை அலுவலகம் அதேபோன்று பிரதேச அலுவலகங்களுக்குமிடையே இணைப்பினை ஏற்படுத்துவதற்குமாக வியாபாரத்திற்கான பகிர்தல் மையம் மற்றும் ஸ்கைப் போன்ற ஏனைய ஆதரவு தகவல் தொழில்நுட்பப் பணிகள் தரமுயர்த்தப்பட்டன. நிருவாக மற்றும் தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பின் தவறுகளைக் கண்டறிந்து கூடியளவிற்கு உத்வேகப்படுத்தும் பொருட்டு மேம்பட்ட கண்காணிப்புத் தளமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

ii. **வலையமைப்பு உட்கட்டமைப்பின் மேம்படுத்தல்**

- கிளிநொச்சி பிராந்திய அலுவலகத்தில் 2015 மே மாதம் தரவு வலையமைப்பு பொருத்தப்பட்டது. இது அங்குள்ள ஊழியர்கள் மத்திய வங்கியின் நிறுவன வலையமைப்பு மற்றும் ஊழியர் சேம நிதிய முறைமையினைப் பயன்படுத்துவதை இயலச்செய்தது.
- வங்கியின் தலைமை அலுவலகத்தில் இழைய முதுகெலும்பு பூர்த்தி செய்யப்பட்டதுடன் விரைவான பழுதுபார்த்தலை வசதிப்படுத்தவும் நம்பகத்தன்மையை அதிகரிக்கும் பொருட்டு ஆண்டு காலப்பகுதியில் நடைமுறையிலுள்ள வலையமைப்பு உட்கட்டமைப்பு மீள்ஒழுங்கு செய்யப்பட்டது.
- அதிகரித்துவரும் தேவையினைப் பூர்த்திசெய்யவும் அதிவேக இணைய உலாவினை வசதிப்படுத்தவும் இணைய குத்தகை இணைப்பின் அகலப்பட்டை இரட்டிக்கப்பட்டதுடன் வங்கியின் தலைமையகத்திலுள்ள பொது வை-பை இணைய இணைப்பின் தரமும் உயர்த்தப்பட்டது.

**(இ) தேசியக் கொடுப்பனவு முறைமை உட்கட்டமைப்பினை வசதிப்படுத்தல்**

ஆண்டு காலப்பகுதியில், தேசிய கொடுப்பனவு முறைமையுடன் தொடர்புபட்ட பின்வரும் செயற்றிட்டங்களுக்கு தொழில்நுட்ப மதியுரை மற்றும் நிபுணத்துவத்தை வழங்கியதன் மூலம் தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் தொடர்ந்தும் தனது வசதிப்படுத்துநர் வகிபாகத்தினைப் பேணியது:

i) லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டின் பொது அட்டை மற்றும் கொடுப்பனவு முறைமையின் கீழுள்ள பொது தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி, பொது இலத்திரனியல் நிதிப் பரிமாற்றல் ஆழி, பொது செல்லிடக் கொடுப்பனவு ஆழி மற்றும் பொது பொஸ் ஆழி ஆகியவற்றின் தொழில்நுட்ப ஆய்வு குழுக்களில் பணியாற்றியது.

ii) இலங்கை வங்கியாளர் நிறுவகம், தேர்தல்கள் திணைக்களம் மற்றும் கொடுகடன் தகவல் பணியகம் ஆகியவற்றின் வேண்டுகோளிற்கிணங்க அவற்றின் தொழில்நுட்ப ஆய்வுக் குழுக்களில் பணியாற்றியது.

iii) உள்நாட்டுப் படுகடன் சந்தையினை வலுவூட்டுவதற்காக கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையினால் ஆரம்பிக்கப்பட்ட இலத்திரனியல் விற்பனைத் தளம் மற்றும் மத்திய இணைத்தரப்பு முறைமைச் செயற்றிட்டத்தினை நிறுவுவதற்காக தொழில்நுட்ப வழிவகை அறிவினை வழங்கியதுடன் செயற்குழுவிலும் பணியாற்றியது.

**(ஈ) தகவல் தொழில்நுட்ப இடர்நேர்வு முகாமைத்துவம்**

தகவல் தொழில்நுட்பப் பாதுகாப்பினை வலுப்படுத்துவதற்கும் மற்றும் அச்சுறுத்தல்களைக் குறைப்பதற்கும் தகவல் தொழில்நுட்ப இடர்நேர்வினை முகாமைத்துவம் செய்வதும் எந்தவொரு நிறுவனத்திற்கும் மிக முக்கியமானதாகும். ஆண்டுக் காலப்பகுதியில் தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது தகவல் தொழில்நுட்ப இடர்நேர்வினைச் சிறந்த நடைமுறைகளுக்கு அமைவாக முன்கூட்டியே முகாமைத்துவம் செய்வதற்காக பல்வேறுபட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டது.

i) ஐஎஸ்ஓ27001 நியமத்திற்கு இணங்குவிக்கும் விதத்தில் தேவையான தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய புதிய அனர்த்த மீட்புத் தளத்தினை அமைக்கின்றமை. வங்கியின் தகவல் பாதுகாப்பு முகாமைத்துவத்தினை மேம்படுத்துவதற்காக தகவல் தொழில்நுட்பப் பாதுகாப்புப் பரிசோதனை கூடம் மேற்கூறப்பட்ட அனர்த்த மீட்புத்தளத்தின் ஒரு அங்கமாகும்.

ii) சிறப்புத் தேர்ச்சி பெற்ற தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள்/வங்கி ஊழியர்கள் மூலம் வங்கியின் முக்கியமான தகவல் முறைமைகளின் பாதிக்கும் தன்மையினைத் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்தல்.

iii) கிட்டத்தட்ட எந்த பாதுகாப்பு மீறலும் இல்லாத நிலையினை அடைவதற்காக உள்ளக மற்றும் வெளியகப் பாதுகாப்பு அச்சுறுத்தல்களைக் குறைப்பதற்காக பாதுகாப்பான வலையமைப்பைப் பேணுவதற்காகத் தொடர்ச்சியான கண்காணிப்பு.

iv) முக்கியமான தகவல் தொழில்நுட்ப முறைமைகளின் அனர்த்த மீட்பு ஆயத்தநிலையினை பரீட்சிப்பதற்காக அனைத்துப் ஆர்வலர்களின் பங்குபற்றலுடன் அனர்த்த மீட்புத்தளத்தில் ஆண்டு காலப்பகுதியில் இரு தடவைகள் தடங்கலற்ற வியாபாரத் திட்டம் வெற்றிகரமாக பரீட்சிக்கப்பட்டது.

## 17. உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம்

உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடுகள் 1951ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கை மத்திய வங்கியில் தொழிற்பாட்டிலிருந்து வருகின்றன. உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் பணி மற்றும் வேலையின் செயற்பரப்பு, பொறுப்புக்கூறும் தன்மை, சுயாதீனம் மற்றும் பணிப்பாளர் மற்றும் அலுவலர்களின் பொறுப்பாண்மை மற்றும் அதிகாரம் என்பன உள்ளகக் கணக்காய்வுச் சாசனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. உலகளாவிய நியமங்கள் மற்றும் தொழில்துறையின் மிகச் சிறந்த நடைமுறைகள் என்பவற்றுடன் இசைந்து செல்லும் விதத்தில் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம் கணக்காய்வுகளை மேற்கொண்டது. 2015ஆம் ஆண்டுக் காலத்தில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

### 17.1 கணக்காய்வு ஒப்படைகளை மேற்கொள்ளுதல்

**அ) வருடாந்த கணக்காய்வுத் திட்டம்**

ஆண்டுக்கான வருடாந்த கணக்காய்வுத் திட்டமானது இலங்கை மத்திய வங்கியின் இற்றைப்படுத்தப்பட்ட அனைத்தையுமுள்ளடக்கிய கணக்காய்வின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது. இது தொடர்பில், நடவடிக்கை அடிப்படையிலான செலவிடல் முறையில் உள்ளடக்கப்பட்ட நடவடிக்கைகள் தொகுக்கப்பட்டு மதிப்பிடப்பட்டதுடன் இலங்கை மத்திய வங்கியின் மையக் குறிக்கோள்கள், மையக் குறிக்கோள்களுக்கான துணைக் குறிக்கோள்கள், முகவர் தொழிற்பாடுகள் மற்றும் ஏனைய தொழிற்பாடுகள், மையக் குறிக்கோள்கள் மற்றும் மையக் குறிக்கோள்களுக்கான துணைக் குறிக்கோள்கள் தொடர்பான முன்னுரிமைச் செயற்பாடுகள் போன்றவை உள்ளடங்கலான முக்கிய நடவடிக்கைகள் வருடாந்த கணக்காய்வுத் திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்டன. தகவல் முறைமைக் கணக்காய்வுகளும் வருடாந்தக் கணக்காய்வுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. வருடாந்த கணக்காய்வுத் திட்டமானது நாணயச் சபையின் மதியுரைக் கணக்காய்வுக் குழுவின் ஒப்புதலுடன் நடைமுறைப்படுத்தப்பட்டது.

### ஆ) உள்ளகக் கணக்காய்வு நடைமுறை

ஒவ்வொரு கணக்காய்வு ஒப்படைகளும் திட்டமிடல், செயற்படுத்தல், தொடர்பூட்டல் மற்றும் தீர்மானம் எடுத்தல் நடவடிக்கைகள் போன்ற நான்கு தொடர்ச்சியான படிமுறைகள் மூலம் மேற்கொள்ளப்பட்டன. செயற்படுத்தல் நிலையில், கணக்காய்வுச் சான்றுகள் சேகரிக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டன. உலகளாவிய நியமங்களுடன் இணங்கிச்செல்லும் விதத்தில், கணக்காய்வு பெறுபேறுகளைத் தொடர்பூட்டுவதற்காக நான்கு படிச் செயன்முறை பின்பற்றப்பட்டது. இந்நான்கு படிமுறைகளும் கணக்காய்வு அவதானிப்புக்களினை செல்லுபடியாக்குவதற்காக முடிவுறுத்தல் கூட்டங்களை நடாத்துதல், கணக்காய்வு அவதானிப்புக்களினை எழுத்து வடிவில் தொடர்பூட்டல், வரைபு கணக்காய்வு அறிக்கையினை வழங்கல் மற்றும் இறுதி அறிக்கையினை வழங்கல் போன்றனவாகும். உடன்படப்பட்ட கணக்காய்வு விதந்துரைப்புக்கள் செய்முறை உரிமையாளரால் நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்துவதற்காக கிரமமான அடிப்படையில் பின்தொடர்தல் கணக்காய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன.

உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களமானது முறைமைகள் (தகவல் முறைமைகள் உள்ளடங்கலாக) மற்றும் திணைக்களங்களின் உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் கைநூல்கள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுக்கு அவை இணங்கியொழுகுதல் தொடர்பாக மீளாய்வு செய்தது. இதன்படி, உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களமானது பல திணைக்களங்களுக்கான கணக்காய்வினை மேற்கொண்டதுடன் உள்ளகக் கட்டுப்பாட்டு பலயீனங்கள், முறைமைக் குறைபாடுகள் போன்றவற்றை குறித்துக் காட்டிய வேளையில் அத்தகைய அவதானிப்புக்களுடன் இணைந்துள்ள இடர்நேர்வுகளை குறைப்பதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளையும் விதந்துரைத்தது. இதன்படி, அத்தகைய விதந்துரைப்புக்கள் திணைக்களங்களால் செயற்படுத்தப்படும் வேலைகளின் வினைத்திறனை மேம்படுத்த வழிவகுப்பதுடன், வங்கியின் சாத்தியமான மோசடி இடர்நேர்வுகள், விரயம் மற்றும் ஏனைய மூலப்பொருள் இழப்புக்கள் போன்றவற்றை குறைக்கும்.

மேலும், மூத்த முகாமைத்துவத்தின் வேண்டுகோளின்படி, இலங்கை மத்திய வங்கியின் திணைக்களங்களால் மேற்கொள்ளப்படும் முதலீட்டு நடவடிக்கைகள், நிதிய முகாமைத்துவ செயற்பாடுகள், தகவல் முறைமைக் கட்டுப்பாடு, ஏனைய உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் கைந்நூல்கள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுடனான இணக்கப்பாடு போன்றவற்றை கவனத்தில் கொண்ட மீளாய்வுகள் நடாத்தப்பட்டன. இத்தகைய மீளாய்வுகளில் அனேக திணைக்களங்களின் நடவடிக்கைகள் உள்ளடக்கப்பட்டிருந்தன. ஆய்வில் கண்டறியப்பட்ட விடயங்களையும் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட விதந்துரைப்புக்களையும் கருத்திற்கொண்டு, உள்ளகக் கட்டுப்பாடுகளையும் முறைமைகளுக்கான திருத்தங்களையும் மேம்படுத்தும் பொருட்டு நிதியங்களின் முதலீட்டிற்காக தனியான பிரிவொன்றினை உருவாக்குவதற்கான ஒப்புதலை நாணயச் சபை வழங்கியதுடன், தொடர்பான திணைக்களங்கள் அத்தகைய விதந்துரைப்புக்களை ஏற்கனவே நடைமுறைப்படுத்திவிட்டன. உதாரணமாக இலங்கை மத்திய வங்கி முதலீடுகளுக்காக தனியான பிரிவொன்று ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ளது.

### இ) கணக்காய்வுகளை மேற்கொள்வதில் அடையப்பட்ட முன்னேற்றங்களை அறிக்கையிடல்

கணக்காய்வு ஒப்படைகளை மேற்கொள்வதில் காணப்படும் முன்னேற்றம் மதியுரைக் கணக்காய்வுக் குழு மற்றும் நாணயச் சபைக்கு காலாண்டு அடிப்படையில் அறிக்கையிடப்பட்டது. நடவடிக்கை அறிக்கைகள் அரையாண்டு அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டன.

### 17.2 விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பயிற்சியளித்தல் ஏற்பாடுகள்

இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களம் மற்றும் பன்னாட்டு தொழிற்பாட்டு திணைக்களம் போன்றவை உள்ளகக் கணக்காய்வுத் திணைக்கள அலுவலா்களுக்கு அறிவு பகிரும் கூட்டத் தொடர்களை நடாத்தின. மேலும், உள்ளகக் கணக்காய்வு திணைக்கள அலுவலர்களின் நன்மைக்காக காட்சிப்படுத்தலுடன் கூடிய உள்ளக விரிவுரைகள் மற்றும் அறிவினைப் பகிரும் கூட்டத்தொடர்கள் கிரமமாக மேற்கொள்ளப்பட்டன. மனிதவளத் திணைக்களத்தினால் கேட்டுக்கொள்ளப்பட்டமைக்கமைவாக 2015இல் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம் உள்ளகக் கணக்காய்வு மற்றும் தொடர்புடைய விடயங்களில் பட்டதாரிகள், பட்டதாரி மாணவர்கள் மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் மாணவர்களுக்கு பயிற்சிகளை வழங்கியது.

### 17.3 நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வுக் குழு

மதியுரைக் கணக்காய்வுக் குழுவானது நாணயச் சபையின் உறுப்பினரொருவரையும் இரண்டு வெளிவாரி தொழில்சார் கணக்காய்வு நிபுணர்களையும் உள்ளடக்கியிருக்கிறது. நாணயச் சபைக்கான செயலாளர் மதியுரைக் கணக்காய்வுக் குழுவிற்கு செயலாளராகவும் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் மதியுரைக் கணக்காய்வுக் குழுவின் உதவிச் செயலாளராகவும் இருப்பார். உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம் மதியுரை கணக்காய்வுக் குழுவிற்கான செயலகப் பணி வசதிப்படுத்தல்களை வழங்கியது. மேலும், கணக்காய்வாளர் நாயகத் திணைக்களத்திலிருந்தான ஒரு பிரதிநிதி மதியுரைக் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களுக்கு அவதானிப்பாளராக கலந்து கொள்வார்.

விஞ்ஞாபனத்திலுள்ளவாறு ஆண்டுக் காலத்தில் ஆறு மதியுரைக் கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. உள்ளகக் கணக்காய்வு ஒப்படைகளை மேற்கொள்வது தொடர்பில் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் முன்னேற்றமானது உள்ளகக் கணக்காய்வு அறிக்கைக்கான முகாமைத்துவ பதிலுறுப்புக்களுடன் சேர்த்து மதியுரைக் கணக்காய்வுக் குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டதுடன் மதியுரைக் கணக்காய்வுக் குழுவின் அடைவுகள் மற்றும் கூட்டங்களில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் என்பன நாணயச் சபைக்கு அறிக்கையிடப்பட்டன.

### 17.4 வெளிவாரிக் கணக்காய்விற்கு வசதியளித்தல்

கணக்காய்வாளர் நாயகம் இலங்கை மத்திய வங்கியில் வெளிவாரிக் கணக்காய்வினை மேற்கொள்வதுடன் வெளிவாரிக் கணக்காய்விற்கான வசதிப்படுத்துனராக நாணயச் சபையின் செயலாளரூடாக உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம் தொழிற்படுகிறது. பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்களின் நியதிகளுக்கிணங்க, நிதியியல் கூற்றுக்களின் கணக்காய்வு நோக்கத்திற்காக கணக்காளர் நாயகத்தினால் பட்டயக் கணக்காளர்களான ஏர்னஸ்ட் அன்ட் யங் கணக்காய்வில் ஈடுபடுத்தப்பட்டது. இதற்கிணங்க தேவையான தகவல்களைச் சேகரிப்பதற்கும் கண்டறியப்பட்ட விடயங்களைப் பகுப்பாய்வு செய்வதற்கும் கடிதத் தொடர்புகளைக் கையாள்வதற்கும் நாணயச் சபையின் செயலாளருக்கு உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம் தொழில்நுட்ப உள்ளீடுகளை வழங்கியது.

## 18. பன்னாட்டுத் தொழிற்பாடுகள்

நாணய விதிச்சட்டத்தின் நியதிகளின்படி, இலங்கை மத்திய வங்கி நாட்டின் அலுவல்சார் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளினை முகாமைப்படுத்துவதற்கு பொறுப்பாக இருக்கிறது. நாணய விதிச்சட்டத்திற்கு இணங்க, நாணயச் சபையானது பன்னாட்டு ஒதுக்குகளினை முகாமைத்துவம் செய்தல் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைகளின் கண்காணிப்பு ஆகிய பொறுப்புக்களை பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்திற்கு கையளித்தது.

நாணய விதிச்சட்டமானது, பன்னாட்டு ஒதுக்குகளின் பேணல் மற்றும் உள்ளமைப்பு, ரூபாவின் பன்னாட்டு உறுதிப்பாட்டினைப் பேணுவதற்கான நடவடிக்கைகள், இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணி தொழிற்பாடுகளின் செயற்பரப்பு மற்றும் பன்னாட்டு ஒதுக்கு முகாமைத்துவம் தொடர்பான நாணயச் சபையின் அதிகாரம் மற்றும் பொறுப்புக்கள் என்பனவற்றை உள்ளடக்கும் விதத்தில் பன்னாட்டு ஒதுக்கு முகாமைத்துவத்திற்குத் தேவையான சட்டக் கட்டமைப்பினை வழங்குகின்றது. இவ்விடயத்தில் சொத்துவகைகள், இணைத்தரப்பினர்கள், சாதனங்கள் மற்றும் வழங்குநர்கள் என்பன தொடர்பான அம்சங்களை நாணய விதிச்சட்டத்தின் 67ஆவது பிரிவு கையாள்கிறது. ஒதுக்கு முகாமைத்துவத்தின் பாதுகாப்பு, திரவத்தன்மை மற்றும் வருமானக் குறிக்கோள்கள் என்பனவற்றை அதிகரிப்பதற்காக, நாணயச் சபை ஒதுக்கு முகாமைத்துவ நடவடிக்கையின் செயற்பரப்பினை மேலும் விரிவாக்குவதற்கு பணிக்கலாம்.

### 18.1 பன்னாட்டு ஒதுக்கு முகாமைத்துவம்

பாதுகாப்பு, திவத்தன்மை மற்றும் வருமானக் குறிக்கோள்கள் என்பனவற்றினைப் பரிசீலனையில் கொண்டு வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவக் குழுவின் மேற்பார்வையின் கீழ் நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவ வழிகாட்டல்களுக்கு இணங்க பன்னாட்டு ஒதுக்குகளின் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பன்னாட்டு ஒதுக்குகள் பல முக்கிய நாணயங்களில் குறிந்துரைக்கப்படுவதுடன் அவை முக்கியமாக நிலையான வருமானப் பிணையங்கள், பணச்சந்தை சாதனங்கள் மற்றும் தங்கம் என்பனவற்றில் முதலீடு செய்யப்பட்டன. நிலையான வருமான பிணையங்களின் சொத்துப்பட்டியல் உயர்ந்த வீதங்களைக் கொண்ட அரச பிணையங்கள், அரச உத்தரவாதப் பிணையங்கள், அரச முகவர்கள் மற்றும் உயர் தேசிய நிறுவனங்களின் பிணையங்கள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது. ஒதுக்கு முகாமைத்துவ நோக்கங்களுக்காக பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்தின் கொடுக்கல்வாங்கல்கள் மத்திய வங்கிகள், உயர் வீதத்தினைக் கொண்ட வர்த்தக வங்கிகள் மற்றும் முதலீட்டு இல்லங்கள் என்பனவற்றுடன் மேற்கொள்ளப்பட்டதுடன், இவை இணைத்தரப்பினரின் வலுவான தன்மை மற்றும் நம்பகத்தன்மை என்பனவற்றினை பரிசீலனையில் கொண்டு முகாமைத்துவத்தினால் ஒப்புதலளிக்கப்பட்ட இணைத்தரப்பினர்களாக காணப்பட்டன. வெளிநாட்டு ஒதுக்கு சொத்துப்பட்டியலின் சொத்துக்கள் மற்றும் நாணய உள்ளமைப்பினை தீர்மானிப்பதற்கு பரிசீலனையில் கொள்ளப்பட்ட முக்கிய காரணங்களாக திரவத் தேவைப்பாடுகள், படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள், இடர்நேர்வு முகாமைத்துவ அளவுகள், வருமான உருவாக்க இயலாற்றல்கள் மற்றும் நாணயச் சபையின் குறித்துரைக்கப்பட்ட பணிப்புரைகள் என்பன உள்ளடங்கியிருந்தன.

2015ஆம் ஆண்டு உலகம் முழுவதிலுமுள்ள மத்திய வங்கிகளினால் தூண்டிவிடப்பட்ட முக்கியமான சம்பவங்களின் ஆதிக்கத்தினைக் கொண்டிருந்தது. ஆண்டானது ஐரோப்பிய மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட கணியம்சார் இலகுபடுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாகவும் சனவரியில் இந்திய ஒதுக்கு வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட அட்டவணையிடப்படாத வட்டிவீத வெட்டொன்றுடனும் ஆரம்பமானது. நடுவாண்டுப்பகுதியில் ப.நா.நிதியம் 2016 ஒத்தோபரிலிருந்து சிறப்பு எடுப்பனவு உரிமைக் கூடையில் றென்மின்பியினை உள்வாங்குவதென்ற பரந்தளவில் எதிர்பார்க்கப்பட்ட அதன் தீர்மானத்தினை அறிவித்தது. கடந்த ஒன்பது ஆண்டுகளில் முதல் தடவையாக பெடரல் றிசேர்வ் வங்கி வட்டிவீதத்தினை உயர்த்தியமை ஐ.அமெரிக்காவில் சிறந்த பொருளாதாரச் சூழல் காணப்படுவதற்கான சமிக்ஞைகளை காட்டியதுடன் இவ்வாண்டு முடிவடைந்தது.

2015ஆம் ஆண்டுப்பகுதியில், சீனாவில் உருவான நிகழ்வுகளின் காரணமாக நிதியியல் சந்தைகளில் குறிப்பிடத்தக்க தளம்பல்கள் காணப்பட்டன. முதற்காலாண்டுப் பகுதியில் சீனாவின் பொருளாதாரத்தில் காணப்பட்ட மெதுவான போக்கு மசகெண்ணையையும் பங்குரிமை மூலதனங்களுடன் சேர்த்து பண்டச்சந்தைகளையும் பாதித்ததுடன், தோற்றம்பெற்ற உலகளாவிய வளர்ச்சியின் மீது இது கொண்டிருந்த தாக்கமும் கரிசனைக்குரியதாக இருந்தது. மூன்றாம் காலாண்டுப்பகுதியானது "கறுப்புத் திங்கட்கிழமை" யுடன் சேர்ந்து சந்தை விலைகள் பெருமளவு வதிபாகத்தினை ஆற்றுவதற்கு அனுமதிக்கின்ற விதத்தில் சீன மக்கள் வங்கி யுவானை மதிப்பிறக்கம் செய்ய தீர்மானித்தமை, யப்பானிய பங்குச்சந்தை சிதைந்து போனமை என்பன சீனாவின் பங்குச்சந்தைகள் 8.5 சதவீதம் குறைவடைவதற்கும் அதன் தாக்கத்தின் காரணமாக டோக்கியோ, இலண்டன் மற்றும் நியூயோக் வங்கிப் பரிவர்த்தனைகள் 4-5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து சந்தைகளில் சலசலப்பைத் தோற்றுவித்ததுடன் முடிவடைந்தது.

2014இல் ஆரம்பமான மசகெண்ணை சரிவுப்போக்கு தொடர்ந்தது. பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பு அதன் உற்பத்தியை கட்டுப்படுத்தக்கூடும் என்ற சில சந்தை மனப்பாங்குகள் காணப்பட்டபோதும் அது சாத்தியமாகாததன் காரணமாக எண்ணெய் விலைகள் பல ஆண்டுகளிலும் இல்லாதளவு மட்டத்திற்கு குறைவடைந்தன. மறுபுறத்தில் தங்கம் எண்ணெய் அளவிற்கு மோசமான நிலையினை அடையாதபோதும் தொடர்ந்து மூன்றாவதாண்டாக கீழ்நோக்கிய போக்கினையே கொண்டிருந்தது.

ஐக்கிய அமெரிக்காவினைப் போன்று அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்கள் வட்டிவீத உயர்வினை பரிசீலனையில் கொண்டிருப்பதனால் முதலீட்டாளர்கள் தமது முதலீடுகளை தோற்றம்பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்களிலிருந்து ஒப்பீட்டு ரீதியில் குறைந்த இடர்நேர்வுகளைக் கொண்ட முதலீடுகளுக்காக அபிவிருத்தியடைந்த சந்தைகளுக்கு நகர்த்துவதற்கு எதிர்பார்க்கின்றனர். மேலும், சீனாவின் பங்குச்சந்தைகளிலிருந்து கசியக்கூடிய சாத்தியமான தாக்கங்களின் கரிசனையின் காரணமாக உந்தப்பட்ட நிதியியல் சந்தை தளம்பல்களினால் உருவாக்கப்பட்ட நிச்சயமற்ற தன்மையின் காரணமாக மிகப்பாதுகாப்பான இடங்களை முதலீட்டாளர்கள் நாடுகின்றமையானது ஆசியச்சந்தைகளிலிருந்து மூலதனம் வெளிப்பாய்வதற்கு வழிவகுக்கிறது. இத்தகைய சவால் நிறைந்த உலகளாவிய சூழ்நிலையில் 2015ஆம் ஆண்டுப்பகுதியில் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் வெளிநாட்டு நாணய வர்த்தகம், பணச்சந்தை முதலீடுகள் மற்றும் மூலதன இலாபங்கள் மற்றும் நிலையான வருமான பிணையங்களிலிருந்து பெறப்பட்ட நறுக்கு வருமானம் என்பனவற்றினூடாக ஐ.அ.டொலர் 111.4 மில்லியன் கொண்ட வருமானத்தினைப் பெற்றுக்கொண்டது.

2015இல் இலங்கை மத்திய வங்கியும் இந்திய றிசேர்வ் வங்கியும் இரண்டு நாணய பரஸ்பரபரிமாற்றல் உடன்படிக்கைகளில் கையொப்பமிட்டமையானது இலங்கை ஐ.அ.டொலர் 1,500 மில்லியனை எடுப்பனவு செய்வதனை இயலுமைப்படுத்தியது. இவ்வுடன்படிக்கையின் கீழ் பிராந்திய ஒத்துழைப்பிற்கான தெற்காசிய நாடுகள் அமைப்பின் உறுப்பினர் நாடுகளின் மத்திய வங்கிகளுக்கான நிதியிடல் வசதியின் கீழ் 2015 ஏப்பிறலில் இலங்கை மத்திய வங்கிக்கு ஐ.அ.டொலர் 400 மில்லியனும் சிறப்பு நாணய பரஸ்பர பரிமாற்றல் உடன்படிக்கையின் கீழ் மேலதிகமாக ஐ.அ.டொலர் 1,100 மில்லியனும் கிடைத்தன. இவ்வசதிகள் இலங்கை மத்திய வங்கி நிதியியல் சந்தையில் அதன் நிலைமையினை மேலும் வலுப்படுத்திக் கொள்வதற்கு உதவியதுடன் பேரண்டப் பொருளாதார அடிப்படைகளுடன் இசைந்த விதத்தில் செலாவணி வீதத்திற்கு பெருமளவு உறுதிப்பாட்டைக் கொண்டு வந்ததுடன் முக்கிய வர்த்தகப் பங்காளர்களின் மற்றைய நாணயங்களின் நகர்விற்கும் வசதியளித்தது.

### 18.2 முதலீட்டு நடவடிக்கைகளைப் பகுப்பாய்வு செய்தல் மற்றும் வசதிப்படுத்தல்

2015இல் சந்தை மற்றும் கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவம் உட்பட பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் நடுஅலுவலகத் தொழிற்பாடுகள் இடர்நேர்வு முகாமைத்துவ திணைக்களத்திற்கு மாற்றல் செய்யப்பட்டன. இதற்கமைய பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களமானது ஒதுக்கு முகாமைத்துவம் தொடர்பான பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக முதலீட்டுப்பகுப்பாய்வு மற்றும் வசதிப்படுத்தல் பிரிவு ஒன்றினை ஏற்படுத்தியது.

### (அ) செயலாற்ற அளவுமுறை

பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம், மொத்த வருமானம், சொத்து மற்றும் நாணய பகிர்ந்தளிப்பு என்பனவற்றை முக்கியமாக வலியுறுத்துகின்ற விதத்தில் ஒதுக்குமுகாமைத்துவ நடவடிக்கைகளின் செயலாற்றத்தினை மாதாந்த, காலாண்டு மற்றும் ஆண்டு ரீதியாக மதிப்பிடுவதுடன் அதனை வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவ குழுவிற்கும் நாணயச் சபைக்கும் ஒதுக்கு நிலைமை மற்றும் அதன் போக்கு என்பனவற்றின் பகுப்பாய்வுடன் சேர்த்து சமர்ப்பிக்கின்றது. மேலும், நாணயச் சபையினால் ஒப்புதளிக்கப்பட்ட உபாய சொத்து ஒதுக்கீட்டின்படி, நிலையான வருமான பிணைகளின் முதலீடுகள் ஊடாக உருவாக்கப்பட்ட வருமானம் நிறையேற்றப்பட்ட செயற்படாத முகாமைத்துவ சொத்துப்பட்டியலுக்கெதிரான அடிப்படை அளவீட்டுக்குறியீடாக விளங்குகிறது. வருமான ஒப்பீடுகளுக்குப் புறம்பாக வணிகர்களினால் எடுகோள் கொள்ளப்படுகின்ற மேலதிக இடர்நேர்வு மேலதிக வருமானத்தினை போதுமானளவிற்கு எதிரீடு செய்கின்றதா என்பதனைக் காட்டுவதன் மூலம் அடிப்படை அளவுக்குறியீட்டினை மேற்கொள்ளும் தீவிரமான முகாமைத்துவ உபாயத்தின் காத்திரமான தன்மையினை நிர்ணயிக்க உதவுகிறது.

### (ஆ) திறைசேரி முகாமைத்துவ முறைமையின் நிருவாகம்

பிரதான பயன்படுத்துநர் என்ற நிலைக்குப் புறம்பாக, பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் திறைசேரி முகாமைத்துவ முறைமையுடன் தொடர்பான பணிமனைகளைப் பேணும் நடவடிக்கைகள் மற்றும் பயன்படுத்துநர்கள் திணைக்களங்கள், மென்பொருள் பங்கேற்பாளர் மற்றும் உள்ளூர் பங்காளர் என்போரிடையே பொருத்தமான இணைப்புக்களை உருவாக்குதல் என்பன உள்ளிட்ட நிருவாக தொழிற்பாடுகளுக்கு பொறுப்பாக இருக்கிறது. மேலும் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் திறைசேரி முகாமைத்துவ முறைமையானது சுவிப்ற், அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை மற்றும் பொதுப்பேரேடு போன்ற உள்ளக முறைமைகளுடனும் திறைசேரி முகாமைத்துவ முறைமையின் வினைத்திறன்மிக்க தொழிற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்காக புளும்போர்க் மற்றும் றொயிட்டர் போன்ற வெளிவாரி இடைமுகங்களுடனும் முழுமையாக இணைக்கப்பட்டிருப்பதனை உறுதிப்படுத்துகிறது.

### (இ) புதிய உற்பத்தி சாதனம் மற்றும் சந்தை ஆராய்ச்சிகள்

பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் உள்ளக நோக்கங்களுக்காவும் அதேபோன்று முகாமைத்துவப் பயன்பாட்டிற்காகவும் புதிய உற்பத்திச் சாதனங்கள், கோட்பாடுகள் மற்றும் சந்தை ஆராய்ச்சி தொடர்பில் பல்வேறு பகுப்பாய்வுகளையும் மேற்கொண்டு வருகின்றது. 2015ஆம் ஆண்டுப்பகுதியில் பல இணைத்தரப்பினர்கள் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்திற்கு விஜயம் செய்து புதிய உற்பத்திச்சாதனங்கள் பற்றி கலந்துரையாடியதுடன் அவர்களது சந்தை உள்விடயங்கள் பற்றி பன்னாட்டு தொழிற்பாட்டுத் திணைக்களத்தின் அலுவலர்களுடன் விடயங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

### (ஈ) நிதியல்லா இடர்நேர்வு மற்றும் இணங்குவிப்புக்களைக் கண்காணித்தல்.

இவ்வாண்டுப் பகுதியில், பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் இந்தியாவுடனான இரண்டு இருபுடை நாணய பரஸ்பர பரிமாற்றல் ஒழுங்குகளுக்கு வசதியளித்தது. மேலும் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் வெளிநாட்டு இணைத்தரப்பினரின் தேவைப்பாடுகளின் அடிப்படையில் உங்கள் வாடிக்கையாளர்களை தெரிந்து கொள்ளுங்கள்/ வாடிக்கையாளரை நெருக்கமாகக் கண்காணியுங்கள் தொடர்பில் சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களத்திற்கு தேவையான தகவல்களை வழங்கியது. பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் புதிதாக ஏற்படுத்தப்பட்ட நிதியல்லா இடர்நேர்வு முகாமைத்துவக்குழுவிற்கான தொடர்பான இடர்நேர்விற்கான நடவடிக்கைகள் மற்றும் அறிக்கைகளுடன் சேர்த்து ஒதுக்கு முகாமைத்துவ நடவடிக்கைகள் தொடர்பான நிதியல்லா இடர்நேர்வு தோற்றப்பாட்டினை 2015இன் முதலாம் காலாண்டிலிருந்து காலாண்டு அடிப்படையில் தயாரித்ததுடன் கண்காணித்தும் வருகிறது.

## 18.3 உள்நாட்டில் வெளிநாட்டுச் செலாவணிச்சந்தை அபிவிருத்திகள்

செலாவணி வீதத்தின் மிகையான தளம்பல்களைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக கண்காணித்தமையின் மூலம் 2015இல் அதன் நடவடிக்கைகளை ஒழுங்குமுறைப்படுத்தியது. இலங்கை மத்திய வங்கி வெளிநாட்டுச் செலாவணி வீதத்தினை நிர்ணயிக்கையில் உள்நாட்டின் செலாவணிச் சந்தை பெருமளவு பங்கினை ஆற்றுவதனை அனுமதித்தன் மூலம் செலாவணி வீதத்தினை நிர்ணயிப்பதில் பெருமளவு நெகிழ்ச்சித் தன்மையினை உள்வாங்கிக்கொள்வதற்கு 2015 செத்தெம்பர் 4ஆம் நாளன்று தீர்மானித்தது. தற்பொழுது உயர்வடைந்து வருகின்ற இறக்குமதிகள் கேள்வியிலிருந்து தோன்றுகின்ற இலங்கை ரூபா மீதான அழுத்தத்தினைக் குறைப்பதற்காக இம்முயற்சிகள் எடுக்கப்பட்டன. 2015ஆம் ஆண்டுப்பகுதியில் வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் செலாவணியின் தேறிய நிலைமையின் வரையறை ஐ.அ.டொலர் 189 மில்லியனாக மாற்றமின்றியிருந்தது. இவ்வாண்டுப்பகுதியில் வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல்களின் அளவு 2014இன் ஐ.அ.டொலர் 15.5 பில்லியனிலிருந்து 13.6 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது (அட்டவணை II-17). எனினும் உடன் மற்றும் முன்னோக்கிய அடிப்படையிலான கொடுக்கல்வாங்கல்கள் சிறிதளவில் அதிகரித்த வேளையில் நாளைய மற்றும் காசு அடிப்படையிலான கொடுக்கல்வாங்கல்கள் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தன. மேலும், இலங்கை மத்திய வங்கியின் தலையீடு ஐ.அ.டொலர் 3,249.53 மில்லியன் கொண்ட தேறிய விற்பனை நிலைமையினை எடுத்துக்காட்டியது (அட்டவணை II-18).

**இணைப்பு II-17 வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களின் அளவு - 2015**

ஐ.அ.டொலர் மில்லியன்

| மாதம் | உடன் | நாளை | காசு | முன்னோக்கிய | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| சனவரி | 81.00 | 147.55 | 75.35 | 654.51 | 958.41 |
| பெப்புருவரி | 159.10 | 144.53 | 93.30 | 484.65 | 881.58 |
| மாச்சு | 247.40 | 82.50 | 71.75 | 655.16 | 1,056.81 |
| ஏப்பிறல் | 204.35 | 93.40 | 69.50 | 602.30 | 969.55 |
| மே | 248.05 | 70.75 | 71.00 | 515.53 | 905.33 |
| யூன் | 463.10 | 95.25 | 166.75 | 511.94 | 1,237.04 |
| யூலை | 268.90 | 105.10 | 106.05 | 515.34 | 995.39 |
| ஓகத்து | 378.49 | 110.50 | 128.00 | 522.61 | 1,139.60 |
| செத்தெம்பர் | 493.87 | 186.35 | 140.55 | 476.62 | 1,297.39 |
| ஒத்தோபர் | 457.83 | 257.03 | 219.05 | 609.31 | 1,543.21 |
| நவெம்பர் | 369.00 | 191.65 | 186.75 | 563.17 | 1,310.57 |
| திசெம்பர் | 498.93 | 135.75 | 48.48 | 614.96 | 1,298.11 |
| **மொத்தம்** | **3,870.00** | **1,620.35** | **1,376.53** | **6,725.60** | **13,592.48** |

மூலம்: பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

**இணைப்பு II-18** மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணியின் கொள்வனவு மற்றும் விற்பனை - 2015

ஐ.அ. டொலர் மில்லியன்

| மாதம் | கொள்வனவுகள் | விற்பனைகள் | தேறிய கொள்வனவுகள்/ (விற்பனைகள்) |
|---|---|---|---|
| சனவரி | - | 173.81 | (173.81) |
| பெப்புருவரி | 49.40 | 122.00 | (72.60) |
| மாச்சு | 18.10 | 101.65 | (83.55) |
| ஏப்பிறல் | 60.50 | 159.50 | (99.00) |
| மே | 8.80 | 157.83 | (149.03) |
| யூன் | 15.00 | 506.97 | (491.97) |
| யூலை | - | 352.58 | (352.58) |
| ஓகத்து | - | 447.25 | (447.25) |
| செத்தெம்பர் | - | 523.80 | (523.80) |
| ஒத்தோபர் | 27.60 | 305.55 | (277.95) |
| நவெம்பர் | - | 306.00 | (306.00) |
| திசெம்பர் | - | 272.00 | (272.00) |
| மொத்தம் | 179.40 | 3,428.93 | (3,249.53) |

மூலம்: பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திை ணக்களம், இலங்கை மத்திய வங்கி

## 19. சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களம்

இணங்குவிப்புத் தொழிற்பாட்டின் வகிபாகமானது அண்மைக்காலங்களில் தடங்கலற்ற வியாபாரம் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவம் போன்றவற்றின் நோக்கில் முக்கியமானதொரு அம்சமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இடர்நேர்வு முகாமைத்துவத்தின் இறையொன்றாக இது அபிவிருத்தியடைந்திருப்பதனால், நெருக்கடிகளை அணுகவிடாமற் செய்வதில் இது ஆற்றுகின்ற தடுக்கும் வகிபாகத்தின் காரணமாக அதன் சொந்த இயலாற்றலில் மதிப்புப் பெற்றிருக்கின்றது, இதனால் நிதியியல் துறையிலுள்ள கரிசனைகளையும் சவால்களையும் வினைத்திறனாக நிவர்த்தி செய்யும் பொருட்டு, வங்கிகள் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களில் வலுவான இணங்குவிப்பு தொழிற்பாட்டை நிறுவ வேண்டியதன் அவசியத்தினை பன்னாட்டு நியமங்களை நிர்ணயிங்கின்ற பல நிறுவனங்களும் வற்புறுத்தியிருக்கின்றன. பன்னாட்டு அரங்கிலான அபிவிருத்திகளை கவனத்திற்கொண்டு, இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது நாணய விதிச் சட்டத்தின் 33ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் 2015 பெப்புருவரியில் சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களத்தினை நிறுவியது. நிர்வாக ஒழுங்குகள் இறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர், திணைக்களமானது 2015 யூனிலிருந்து தொழிற்படத் தொடங்கியது. சட்டத் திணைக்களம் 2006இல் மூடப்பட்டது.

இலங்கை மத்திய வங்கிக்கு எதிராக அனேக வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்பட்டமையினால் 2015ஆம் ஆண்டானது இலங்கை மத்திய வங்கிக்கு மிகவும் சவால் நிறைந்த ஆண்டாக காணப்பட்டது. எனினும், இத்தகைய பிரச்சனைகள் திணைக்களத்தினால் வெற்றிகரமாக கையாளப்பட்டன. மேலும், இலங்கை மத்திய வங்கி சார்பில் பல சட்ட மன்றங்களில் பிரதிநிதித்துவப்படுத்தியமைக்கு மேலதிகமாக, சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களமானது, இலங்கை மத்திய வங்கி தனது நோக்கங்களை அடையக்கூடிய பொருத்தமான சட்ட கட்டமைப்பொன்றை உருவாக்குவதனை வசதிப்படுத்துதலை நோக்கி பணியாற்றியதுடன் சட்ட விடயங்கள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கிக்கு ஆலோசனை வழங்கும் அதன் பணியினையும் தொடர்ந்தும் மேற்கொண்டது. மேலும், மத்திய வங்கியிலுள்ள பல திணைக்களங்கள் சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களத்தின் உள்ளீடுகளுடன் இணைந்து உப விதிகளை வழங்கக்கூடியதாகவிருந்தன. உதாரணமாக, அநேக பணிப்புரைகள் மற்றும் வர்த்தமானி அறிவுறுத்தல்களுக்கான அவதானிப்புக்களை வழங்கியமை மற்றும் பல பணிப்புரைகள் தொடர்பில் சட்ட தீர்வுகளை பெற்றுக் கொடுத்தல் போன்றவற்றின் மூலம் திணைக்களமானது வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் செலாவணி கட்டுப்பாடுகள் தளர்த்தல்கள் செயன்முறைக்கு உதவக்கூடியதாக இருந்தது.

ஆண்டுக் காலப்பகுதியில், நிதியியல் முறைமை உறுதிப்பாடு, நிதியியல் சந்தை தொழிற்பாடுகளும், கொடுப்பனவு முறைமைகளும் மற்றும் நாட்டின் நிதியியல் முறைமைக்கு பொருத்தமான சட்டங்களை நடைமுறைப்படுத்தல் போன்றவற்றுடன் தொடர்புடைய சட்ட மற்றும் நடைமுறைக்கிடல் பிரச்சனைகளை காத்திரமான முறையில் நிவர்த்தி செய்யும் நோக்குடன், திணைக்களமானது ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரசபைகள், அமைச்சுக்கள் மற்றும் அரசாங்க திணைக்களங்கள் என்பனவற்றுடனான இணை ஒத்துழைப்புடன் ஒரு பூரணமான தொழிற்பாட்டினை வழங்கியது. இதன் விளைவாக, சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களமானது நிதியியல் நிறுவனங்கள் அதேபோன்று நிதியியல் முறைமை போன்றவற்றுடன் தொடர்பான பிரச்சனைகளை தீர்க்கக்கூடியதாக இருந்ததுடன் முதன்மை வணிகர்கள் உள்ளடங்கலாக நிதியியல் நிறுவனங்களை பலப்படுத்துவதற்கான பொருத்தமான தீர்வு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளக்கூடியதாகவிருந்தது. இத்திணைக்களத்தினால் நுண்பாக நிதியியல் மசோதா இறுதிப்படுத்தப்பட்டமையானது நாட்டிற்குள் அனைவரும் நிதியியல் வசதிகளை பெற்றுக்கொள்வதனை விரிவுபடுத்துவதனை நோக்காகக் கொண்டிருந்தது.

சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன், அரசாங்கத்தின் சார்பில் முகவர் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் மத்திய வங்கியின் தொடர்பான திணைக்களங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் துணைப் பணிகளை வழங்கும் திணைக்களங்கள் போன்றவற்றினூடாக, இலங்கை மத்திய வங்கியானது நாட்டினதும், அதன் அலுவலர்களினதும் தேவைகளைப் பூர்த்திசெய்யக் கூடியதாகவிருந்தது. தற்போது, சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களமானது இலங்கை மத்திய வங்கிக்கான இணங்குவிப்புக் கைந்நூல் ஒன்றினை அறிமுகப்படுத்தல் மற்றும் நிதியியல் அரங்கிலான புதிய அபிவிருத்திகளுடன் இணைந்துசெல்லும் விதத்தில் நிதியியல் துறையின் தொடர்பான சட்ட திருத்தங்களை தயாரித்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கிறது.

## 20. கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்

நிதிகளின் மாற்றல்களுக்கான முறைமைகளை நிறுவுவதற்கும் தொழிற்படுத்துவதற்கும் கொடுப்பனவுக் கடப்பாடுகளைத் தீர்ப்பனவு செய்வதற்கும் பங்கேற்கும் நிறுவனங்களுக்கு முறைமை விதிகளை விடுப்பதற்கும் மத்திய வங்கிக்கு அதிகாரங்களை வழங்குகின்ற நாணய விதிச் சட்டத்தின் 62அ பிரிவின் கீழ் மத்திய வங்கியிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக 2002இல் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் நிறுவப்பட்டது. மேலும் 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டம் இயற்றப்பட்டதுடன் இச்சட்டத்தின் கீழும் மத்திய வங்கியின் பொறுப்புக்களை ஆற்றுகின்ற கடப்பாடு, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் முக்கிய தொழிற்பாடுகளாக அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைகளின் தொழிற்பாடு, நிதியியல் கொடுக்கல்வாங்கல்களுக்காக பின்னரங்க அலுவலகப் பணிகளை வழங்குதல், சுவிப்ற் தொடர்பூட்டல் முறைமையின் முகாமைத்துவம், ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் கீழான கொடுக்கல்வாங்கல்களுக்கு வசதியளித்தல், தேசிய கொடுப்பனவு ஆழியின் அபிவிருத்திக்கு வசதியளித்தல், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை என்பன காணப்படுகின்றன. 2015ஆம் ஆண்டுப் பகுதியில் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தினால் ஆற்றப்பட்ட முக்கிய தொழிற்பாடுகளின் சுருக்கம் கீழே தரப்படுகிறது.

### 20.1 அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் தொழிற்பாடு

அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் சுமுகமான தொழிற்பாட்டினை உறுதிப்படுத்துவதற்காகவும் நேர முக்கியத்துவம் வாய்ந்த பாரிய பெறுமதியினைக் கொண்ட பங்கேற்பாளர்களுக்கிடையேயான

கொடுப்பனவுகளை அதேநேர மொத்த அடிப்படையில் தீர்ப்பனவு செய்வதுடன் பங்கேற்கும் நிறுவனங்களுக்கு ஒரு நாளுக்குள்ளேயான கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையினைத் தொழிற்படுத்துகிறது. திரவ வசதி ஏற்பாடுகளுக்கும் வசதியளிப்பதற்காகவும் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் பங்கேற்கும் நிறுவனங்களாக மத்திய வங்கி, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், வங்கியல்லா முதனிலை வணிகர் கம்பனிகள், ஊழியர் சேம நிதியம் மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் மத்திய வைப்பக முறைமை காணப்படுகின்றன.

2015இன் இறுதியிலுள்ளவாறான பங்கேற்கும் நிறுவனங்களின் எண்ணிக்கை 36ஆகக் காணப்பட்டது. இவ்வாண்டுப் பகுதியில் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையினால் தீர்ப்பனவு செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் மொத்த எண்ணிக்கை ரூ.84,432 பில்லியன் மொத்தப் பெறுமதிகொண்ட 322,234 ஆகக் காணப்பட்டது. சராசரியாக நாளொன்றிற்கு ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியாக பங்கேற்பாளர்களுக்கு ரூ.23.28 பில்லியன் விடுவிக்கப்பட்டது. பங்கேற்கும் நிறுவனங்களின் பங்கேற்புடன் தூரத்திலமைந்துள்ள அனர்த்த மீட்பு அமைவிடத்திலிருந்து ஆண்டிற்கு இரு தடவைகள் முறைமைக்கான தடங்கலற்ற வியாபாரப் பயிற்சி மேற்கொள்ளப்பட்டது. பன்னாட்டு ரீதியான சிறந்த நடைமுறைகள் பின்பற்றப்பட்டமையின் காரணமாக இவ்வாண்டுப் பகுதியில் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் கிடைப்பனவு 99.98 சதவீத மட்டத்தில் பேணப்பட்டது.

### 20.2 மத்திய வங்கியின் நிதியியல் கொடுக்கல்வாங்கல்களுக்கான பின்னரங்க அலுவலகப் பணிகள்

#### (அ) வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களுக்கான பின்னரங்க அலுவலகப் பணிகள்

2015ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், மத்திய வங்கியின் பன்னாட்டு ஒதுக்கு முகாமைத்துவத்திற்கு வசதியளிப்பதற்காக வழங்கப்பட்ட பின்னரங்க அலுவலகப் பணிகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருந்தன:

i. வெளிநாட்டுச் செலாவணி வர்த்தகப்படுத்தல் மற்றும் நிதியிடல், பணச் சந்தை நடவடிக்கைகள், நிலையான வருமானப் பிணையங்கள், தங்க வர்த்தகம், ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம் மற்றும் மீள்கொள்வனவு / நேர்மாற்று மீள்கொள்வனவு என்பனவற்றுடன் தொடர்பான ஐ.அ.டொலர் 486.9 பில்லியன் தொகை கொண்ட 17,588 கொடுக்கல்வாங்கல்கள் 2015இல் தீர்ப்பனவு செய்யப்பட்டமை.

ii. நீடிக்கப்பட்ட வணிகப்படுத்தல் அறை நடவடிக்கைகளின் காரணமாக பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்திலிருந்து உருவாக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்வதற்கு வசதியளிக்கும் பொருட்டு 2015ஆம் ஆண்டு முழுவதும் முறைமாற்று அடிப்படையில் பணியாற்றுகின்ற முறை தொடர்ந்து இடம்பெற்றமை.

#### (ஆ) திறந்த சந்தைத் தொழிற்பாடுகளுக்கான பின்னரங்க அலுவலகப் பணிகள்

திறந்த சந்தைப் பங்கேற்பாளர்களின் திரவத்தன்மை தேவைப்பாடுகளின் முகாமைத்துவத்திற்கு வசதியளிக்கும் விதத்தில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் முதனிலை வணிகர்களுடனான திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் பின்னரங்க அலுவலகத் தொழிற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. 2015ஆம் ஆண்டுப் பகுதியில் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் ரூ.750 பில்லியன் பெறுமதியான 545 மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களையும் ரூ.17,990 பில்லியன் பெறுமதியான 5,413 துணைநில் வைப்பு வசதி கொடுக்கல்வாங்கல்களையும் ரூ.23 பில்லியன் பெறுமதியான 35 துணைநில் கடன் வசதி கொடுக்கல்வாங்கல்களையும் மேற்கொண்டதன் மூலம் வசதியளித்தது.

### 20.3 சுவிப்ற் தொடர்பூட்டல் முறைமையின் முகாமைத்துவம்

உலகளாவிய ரீதியில் வங்கிகளுக்கிடையிலான நிதியியல் தொலைத் தொடர்பூட்டல்களுக்கான சங்கம் என்பது, பாதுகாப்பானதும் பத்திரமானதுமான சூழ்நிலையொன்றில் நிதியியல் கொடுக்கல்வாங்கல்களின் கொடுப்பனவு அறிவுறுத்தல்களையும் தொடர்பான மற்றைய தகவல்களையும் பரிமாறிக் கொள்வதற்கான தொடர்பூட்டல் தளமொன்றாகும்.

2015ஆம் ஆண்டுப் பகுதியில், மத்திய வங்கியின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களுக்கு வசதியளிக்கும் விதத்தில் அனுப்பப்பட்ட மற்றும் பெறப்பட்ட மொத்த சுவிப்ற் செய்திகள் முறையே 1,460,270 ஆகவும் 804,852 ஆகவும் காணப்பட்டன. சுவிப்ற் முறைமையானது அதன் வாடிக்கையாளர்களுக்கு மேம்பட்ட வசதிகளுடன் கூடியளவு வினைத்திறன்மிக்க பணிகளை வழங்குவதற்காக புதிய பதிப்புடன் (பதிப்பு 7.1.10) பணிகள் வழங்குவோரினால் தரமுயர்த்தப்பட்டது. இதற்கமைய, சுவிப்ற்றினால் அறிமுகப்படுத்தப்பட்ட பன்னாட்டு நியமங்களுடன் இசைந்து செல்வதற்காக மத்திய வங்கியும் புதிய பதிப்பினை வெற்றிகரமாக நிறுவியது.

### 20.4 ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் கீழான கொடுக்கல்வாங்கல்களை வசதிப்படுத்தல்

2015ஆம் ஆண்டுப் பகுதியில் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் 9 உறுப்பினர் நாடுகளிடையேயான பன்னாட்டு வர்த்தகக் கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவிற்குத் தொடர்ந்தும் வசதியளித்தது. ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய பொறிமுறையினூடாக மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் மொத்த எண்ணிக்கை 6,663 ஆகவும் கொடுக்கல்வாங்கல்களின் பெறுமதி ரூ.448.6 பில்லியனாகவும் காணப்பட்டது. ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய பொறிமுறையின் கீழ் செய்யப்பட்ட தேறிய தீர்ப்பனவுகளின் பெறுமதி ரூ.375.1 பில்லியனாகக் காணப்பட்டது. ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியப் பணிப்பாளர் சபையின் 44ஆவது கூட்டம் 2015 யூனில் வங்காளதேசத்தில் நடைபெற்றதுடன் துணை ஆளுநரும் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களப் பணிப்பாளரும் முறையே பணிப்பாளர் சபையின் பணிப்பாளரொருவராகவும் மாற்றுப் பணிப்பாளராகவும் ஆளுநரைப் பிரதிநிதித்துவப்படுத்தினர்.

### 20.5 தேசிய கொடுப்பனவு ஆழியின் அபிவிருத்தியினை வசதிப்படுத்தல்

பல் இலத்திரனியல் கொடுப்பனவு வழிப்படுத்தல்களினூடாக அதேநேர அடிப்படையில் சில்லறைக் கொடுப்பனவுகளைத் தீர்ப்பனவு செய்வதற்கான பொதுவான உட்கட்டமைப்பொன்றினை நிறுவும் பொருட்டு லங்கா கிளியர் (பிறைவேற்) லிமிடெட்டினால் மேற்கொள்ளப்பட்ட பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆழியின் இரண்டாவது கட்டமான பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியினை நடைமுறைப்படுத்துவதற்கான உதவியினை கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் வழங்கியது. பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழி 2015 ஓகத்து 21ஆம் திகதி நடைமுறைக்கிடப்பட்டதுடன், 2015 இறுதியில் ஆறு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் இரண்டு நிதிக் கம்பனிகளும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியில் உறுப்புரிமையினைப் பெற்றுக் கொண்டன.

### 20.6 கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் ஒழுங்குவிதிகள் மற்றும் மேற்பார்வை

இலத்திரனியல் கொடுப்பனவு முறைமைகளின் பாதுகாப்பினையும் வினைத்திறனையும் உறுதிப்படுத்துவதற்காக கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் அதன் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. இதன்படி, 2015 ஆண்டுப் பகுதியில் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்தினால் பின்வரும் முக்கிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அ) 2013ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க கொடுப்பனவு அட்டைகள் மற்றும் செல்லிடக் கொடுப்பனவு முறைமைகள் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளின்படி, கொடுப்பனவு அட்டைகள் பணி வழங்குவோராகத் தொழிற்படுவதற்கு 03 நிதியியல் நிறுவனங்களுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டன. 2015 இறுதியில் பணி வழங்குவோரின் எண்ணிக்கை 33 இற்கு அதிகரித்தது.

ஆ) லங்கா கிளியர் (பிறைவேற்) லிமிடெட்டினால் நடைமுறைக்கிடப்பட்ட பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆழியின் பயன்பாட்டினை ஊக்குவிப்பதற்காக, 04 சுற்றறிக்கைகள் விடுக்கப்பட்டன;

i) 2015ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைச் சுற்றறிக்கையானது பொதுவான இலத்திரனியல் நிதியமாற்றல் ஆழியினூடாக மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல்வாங்கல்களின் உச்சஎல்லையினை ரூ.5 மில்லியனாகவும் இணையத்தள வங்கித்தொழில், செல்லிட வங்கித்தொழில் மற்றும் பொதுவான இலத்திரனியல் நிதியமாற்றல் ஆழியின் தொடர்பான உறுப்பினரின் தன்னியக்கக் கூற்றுப் பொறி என்பனவற்றினூடாக மேற்கொள்ளப்படுகின்ற நிதியமாற்றல்கள் தொடர்பில் விதிக்கப்படக்கூடிய உயர்ந்தபட்சக் கட்டணத்தினைக் கொடுக்கல்வாங்கலொன்றிற்கு ரூ.50 ஆகவும் கருமபீடங்களிலும் பொதுவான இலத்திரனியல் நிதியமாற்றல் ஆழியின் ஏனைய உறுப்பினர்களின் தன்னியக்கக் கூற்றுப் பொறியினூடாக மேற்கொள்ளப்படும் நிதியமாற்றல்களுக்கான உயர்ந்தபட்சக் கட்டணத்தினைக் கொடுக்கல்வாங்கலொன்றிற்கு ரூ.100 ஆகவும் விதித்தது.

ii) 2015ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுச் சுற்றறிக்கையின்படி இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையினூடாக மேற்கொள்ளப்படுகின்ற நிதியமாற்றல்களுக்காக வாடிக்கையாளரிடமிருந்து விதிக்கப்படக்கூடிய உயர்ந்தபட்சக் கட்டணம் கொடுக்கல்வாங்கலொன்றிற்கு ரூ.50 ஆக விதித்தது.

iii) 2015ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் சுற்றறிக்கையின்படி அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையினூடாக நிதியங்களை மாற்றல் செய்வதற்காக வாடிக்கையாளரிடமிருந்து விதிக்கப்படக்கூடிய உயர்ந்தபட்சக் கட்டணம் கொடுக்கல்வாங்கலொன்றிற்கு ரூ.1,000 ஆக இருக்குமென்பதுடன் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் மீது மத்திய வங்கியினால் விதிக்கப்பட்ட கட்டணம் ரூ.600 இலிருந்து ரூ.450 இற்குக் குறைக்கப்பட்டது.

iv) 2015ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை சுற்றறிக்கையின்படி பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆழியின் தேசிய முக்கியத்துவத்தினை கருத்திற் கொண்டு அதனை நடைமுறைப்படுத்துவதற்கு உதவும் பொருட்டு பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆழியில் இணைவதற்கு பின்வரும் நேரந்தவறாத தன்மை விதிக்கப்பட்டது;

1. தன்னியக்கக் கூற்றுப் பொறி கொடுக்கல் வாங்கல்களுக்கான கொடுப்பனவு அட்டைகளின் வழங்குநர்களாகவும் அத்துடன்/ அல்லது கையேற்பாளர்களாகவும் தொழிற்படுகின்ற மற்றும் சொந்தமான தன்னியக்கக் கூற்றுப் பொறிகளையும் கொண்டிருக்கும் உரிமம் பெற்ற வங்கிகள் 2016 மாச்சு 31 அளவில் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியில் இணைந்து கொள்ளுதல் வேண்டும்.

2. அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளும் 2016 செத்தெம்பர் 30 அளவில் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியில் இணைந்து கொள்ளுதல் வேண்டும்.

3. விற்பனை மையத்திலான கொடுக்கல்வாங்கல்களுக்கான கொடுப்பனவு அட்டைகளின் வழங்குநராக அத்துடன்/ அல்லது கையேற்பாளராக தொழிற்படுகின்ற உரிமம் பெற்ற வங்கிகள் 2016 திசெம்பர் 31 அளவில் பொதுவான விற்பனை மைய ஆழியில் இணைந்து கொள்ளுதல் வேண்டும்.

4. செல்லிடக் கொடுப்பனவுப் பணிகளை வழங்குகின்ற உரிமம் பெற்ற வங்கிகள் 2017 செத்தெம்பர் 30 அளவில் பொதுவான செல்லிட ஆழியில் இணைந்து கொள்ளுதல் வேண்டும்.

இ) நாளாந்தச் சில்லறைக் கொடுப்பனவுக் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதற்கு பாதுகாப்பானதும் நம்பிக்கைக்குரியதுமான கொடுப்பனவு முறைமையொன்றினை உறுதிப்படுத்தும் பொருட்டு கொடுகடன் அட்டை மற்றும் செல்லிடக் கொடுப்பனவு வழிகாட்டல்களுக்கும் ஏனைய ஒழுங்குவிதிகளுக்கும் பணி வழங்குவோர் இணங்கியொழுகுவதனை பரீட்சிப்பதற்காக தலத்திலான பரீட்சிப்பொன்றும் தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பும் மேற்கொள்ளப்பட்டன.

ஈ) லங்கா செட்டில் பங்கேற்பாளர்கள் அவசர காலத்தின் போது தடங்கலற்ற வியாபாரத் தொழிற்பாடுகளுக்கு அவர்கள் ஆயத்தமாகவுள்ளமையினை உறுதிப்படுத்தும் பொருட்டு லங்கா செட்டில் பங்கேற்பாளர்களினதும் லங்கா கிளியர் (பிறைவேற்) லிமிடெட்டினதும் தடங்கலற்ற வியாபாரத் திட்டங்கள் மதிப்பிடப்பட்டன.

### 20.7 தேசிய கொடுப்பனவுச் சபை

2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளின்படி கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களம் 2006இல் ஏற்படுத்தப்பட்ட தேசிய கொடுப்பனவுச் சபையின் நிறைவேற்று அலகொன்றாகத் தொழிற்படுகின்றது. தேசிய கொடுப்பனவுச் சபையானது கொடுப்பனவு முறைமைகள் மீதான தொழில் துறை ஆலோசனை மற்றும் கண்காணிப்புக் குழுவாகும். கூடியளவு வங்கிகள் மற்றும் செல்லிடக் கொடுப்பனவு பணி வழங்குவோரைப் பிரதிபலிக்கும் விதத்தில் 2015இல், தேசிய கொடுப்பனவுச் சபையின் உறுப்புரிமை 29இற்கு அதிகரித்துள்ளது. புதிய தொழில்நுட்பங்களின் பிரயோகம், புதிய கொடுப்பனவுச் சாதனங்கள் மற்றும் முறைமை உறுதிப்பாடு மற்றும் வாடிக்கையாளர் பாதுகாப்பினை முக்கிய கவனத்தில் கொண்ட ஒழுங்குவிதிகள் என்பனவற்றை உள்ளடக்குகின்ற கொடுப்பனவு முறைமைகளின் நடுத்தர கால அபிவிருத்திகளுக்கான வழிகாட்டலைத் தயாரிப்பதற்கான ஆலோசனை செயன்முறைகளை தேசிய கொடுப்பனவுச் சபை ஆரம்பித்திருக்கிறது. தயாரிப்பிலுள்ள வழிகாட்டல் நாணயச் சபையின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுவதற்காக 2016இன் 1ஆம் காலாண்டிற்குள் இறுதிப்படுத்தப்படவுள்ளது.

### 20.8 பொதுமக்கள் விழிப்புணர்வு

நாட்டில் தொழிற்படுகின்ற கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் மீதான தகவல்களையும் புள்ளிவிபரங்களையும் பரப்புவதற்காக கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் "கொடுப்பனவுச் செய்தித்திரட்டு" என்ற காலாண்டு வெளியீட்டினை வெளியிட்டு வருகின்றது. மேலும், கொடுப்பனவு முறைமைகள் மற்றும் ஏனைய தொடர்பான விடயங்கள் பற்றி பொதுமக்கள் மற்றும் வங்கித்தொழில் சமூகத்திற்கு அறிவூட்டுவதற்காக, தேவையின் அடிப்படையில், 10 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியது.

## 21. கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்பு

கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் உபாயத் திட்டங்கள் தயாரிக்கப்படுவதனை ஒருங்கிணைத்தல், உபாயத் திட்ட நடைமுறைக்கிடல் செயற்பாட்டின் முன்னேற்றத்தினை கண்காணித்தலும்

அறிக்கையிடலும் மற்றும் கொள்கை மீளாய்வுகள் மற்றும் மத்திய வங்கியின் நடைமுறை முக்கியத்துவ விடயங்கள் மீதான கற்கைகளினை நடாத்துதல் ஆகிய பொறுப்புக்களைக் கொண்டுள்ளது.

### 21.1 உபாயத் திட்டமிடல் மற்றும் கண்காணிப்புச் செயற்பாட்டினை ஒருங்கிணைத்தல்

2015 சனவரி 01 ஆம் நாளன்று வேலை தொடக்கி வைத்தல் நிகழ்வில் ‘7k+@2020.sl’ எனும் தொனிப்பொருளின் கீழ் 2015 – 2020ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான உபாயத் திட்டம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. அதன் பின்னர், திணைக்களங்களின் இலக்குகள் மற்றும் உபாயங்கள், உபாய நோக்கங்களை அடைவதற்குப் பின்பற்ற வேண்டிய பொறிமுறைகள் அத்துடன் உபாயத் திட்டத்தின் நடைமுறைக்கிடலின் முனனேற்றத்தை அளவிடப் பயன்படுத்தப்படும் முக்கிய செயலாற்றக் குறிகாட்டிகள் போன்றவை தொடர்பில் வங்கி அலுவலர்கள் மத்தியில் விழிப்புணர்வினை உருவாக்குவதற்காக 2015 – 2020ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான உபாயத் திட்டத்தின் பிரதிகள் விநியோகிக்கப்பட்டன.

உபாயத் திட்டத்தின் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்கு ஒவ்வொரு காலாண்டும் திணைக்களங்களுடன் செயலாற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டு அதன் முன்னேற்ற அறிக்கை உபாயத் திட்ட மீளாய்வுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் காலாந்தர அறிக்கைகள் நாணயச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டன. உபாயத் திட்ட மீளாய்வுக் குழு மற்றும் நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட விதந்துரைப்புக்களும் கருத்துக்களும் திணைக்களங்களிற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தொடர்பூட்டப்பட்டன. 2015இல், திணைக்களங்கள் மற்றும் மாகாண அலுவலகங்கள் 2015 - 2020 இற்கான உபாயத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட வேலைகளில் 97.7 சதவீத அடைவினை பதிவு செய்தன.

2016 - 2018 இற்கான உபாயத் திட்டமிடலினைத் தயாரிக்கும் வேலைகள் 2015இன் பின்னரைப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது. புதிய உபாயத் திட்டமிடலின் கட்டமைப்பு மாற்றப்பட்டது. 2016 - 2018 இற்கான உபாயத் திட்டமிடலானது நடுத்தரக் காலத்திற்காக வங்கியால் அடையாளங் காணப்பட்ட முக்கிய உபாய முன்னுரிமைப்படுத்தல்களில் கவனம் செலுத்தும். இதன், காத்தரமான விளைவுகள், வங்கியின் பணி மற்றும் கடப்பாடுகளின் அடிப்படையில் உபாய இலக்குகள் மற்றும் நோக்கங்களை அடைவதற்காக நடைமுறைக்கிடப்படக்கூடிய புதிய கொள்கைகள், செயற்றிட்டங்கள் மற்றும் முன்னெடுப்புகள் போன்றவற்றை மட்டும் உள்ளடக்குகின்றது. 2016 - 2018 இற்கான உபாயத்திட்டமிடலின் தொனிப்பொருளானது ஆளணி மூலதன அபிவிருத்தி மற்றும் இயலாற்றலினை கட்டியெழுப்புதல் ஆகும். மேலும், அனைத்து திணைக்களங்களும் மேற்கொள்ளப்படவேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் உள்ளடக்கிய வியாபார திட்டங்களை தயாரிக்கின்றன.

### 21.2 கொள்கை ஆய்வுகளை நடத்துதல்

ஆண்டுக் காலப்பகுதியில், கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களமானது நுண்பாக நிதியியல் நிறுவனங்களை ஒழுங்குபடுத்தும் ஓர் கட்டமைப்பினை அபிவிருத்தி செய்வதிலும் ஈடுபட்டது. நுண்பாக நிதியியல் மசோதா ஒன்றினை தயாரிக்கும் இச்செயல்முறை பூர்த்தியடைந்து பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. “இலங்கையில் நிதியியல் உள்ளடக்கத்திற்கான உபாயமொன்றினை அபிவிருத்தி செய்தல்” மீதான கொள்கை தொடர்பான ஆய்வொன்று தயாரிக்கப்பட்டது. பாதுகாப்பு சட்டமொன்றிற்கான தேவைப்பாடு, ஓய்வூதிய நிதியத்திற்கான ஒழுங்குவிதிகள் மற்றும் அரச பிணையங்களுக்கான இலத்திரனியல் வர்த்தகம் மற்றும் தீர்ப்பனவு முறைமை என்பவை மீதான முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டன. மேலும், கொள்கை தொடர்பான ஆவணங்களின் சேர்க்கைகளினை வழங்கும் இலத்திரனியல் கொள்கை மற்றும் நடைமுறை நூலகத்தில் தற்பொழுது காணப்படும் 805 ஆவணங்களுடன் நூலகம் தொடர்ச்சியாக இற்றைப்படுத்தப்பட்டது.

## 22. பொதுப்படுகடன்

நாணய விதிச் சட்டத்தின் 113ஆவது பிரிவின் நியதிகளில் பொதுப்படுகடனின் முகாமைத்துவத்திற்கான அரசின் முகவராக இலங்கை மத்திய வங்கியின் சட்ட ரீதியான பொறுப்புக்களை ஆற்றுவதற்காக இலங்கை மத்திய வங்கி தொடங்கப்பட்ட 1950 ஓகத்து 28ஆம் நாளன்று பொதுப்படுகடன் திணைக்களம் நிறுவப்பட்டது. பொதுப்படுகடன் திணைக்களத்தின் முக்கிய தொழிற்பாடுகளாக ஒதுக்கீட்டுச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு அரசாங்கத்தின் மொத்தக் கடன்பாட்டுத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கான நிதிகளைத் திரட்டுதல், படுகடன் தீர்ப்பனவுக் கடப்பாடுகளை உரிய நேரத்தில் தீர்ப்பனவு செய்தல், லங்கா செகுயர் முறைமையினூடாக அரச பிணையங்களின் தீர்ப்பனவுகள் சுமுகமாகத் தொழிற்படுவதற்கு வசதியளித்தல் மற்றும் மத்திய வைப்பக முறைமையில் அரச பிணையங்களின் உரித்துப் பதிவினை அதேநேர அடிப்படையில் பேணுதல் என்பன விளங்கின. மேலும், பொதுப்படுகடன் திணைக்களம் உள்நாட்டுத் திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் மற்றும் பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் என்பனவற்றின் நியதிகளில் அரச பிணையங்களின் முதலீட்டாளர்களினது பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காகவும் முதனிலை வணிகர் முறைமையின் உறுதிப்பாட்டிற்காகவும் படுகடன் சந்தைகளின் அபிவிருத்திகளிலும் முதனிலை வணிகர்களின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைகளிலும் ஈடுபட்டது.

### 22.1 ஒதுக்கீட்டுச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு அரசின் மொத்தக் கடன்பாட்டுத் தேவையினைப் பூர்த்தி செய்வதற்கு நிதிகளைத் திரட்டுதல்

2015இல் அரசாங்கத்தின் மொத்தக் கடன்பாட்டுத் தேவைப்பாடுகளுக்கு நிதியிடுவதற்காக பொதுப்படுகடன் திணைக்களம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலங்களிலிருந்து முக்கியமாக திறைசேரி உண்டியல், திறைசேரி முறிகள், இலங்கை அபிவிருத்தி முறிகள் மற்றும் நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் என்பனவற்றினூடாக நிதிகளைத் திரட்டியது. குறிப்பிட்ட சாதனங்களின் கீழான அத்தகைய நிதியிடல் நடவடிக்கைகளின் சுருக்கம் கீழே தரப்படுகிறது.

அ) **திறைசேரி உண்டியல்கள்:** 2015இல் வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களின் மொத்த முகப்புப் பெறுமதி ரூ.1,589.5 பில்லியனாக விளங்கியது. இவ்வழங்கல்கள் முக்கியமாக வாராந்த முதலாந்தர ஏலங்களினூடாகவே மேற்கொள்ளப்பட்டன. 2015ஆம் ஆண்டிற்கான மொத்த திறைசேரி உண்டியல்களின் முதிர்ச்சிப் பெறுமதி ரூ.1,676.5 பில்லியனாக விளங்கியது. இதன்படி, நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலம் வரையிலான திறைசேரி முறிகளை வழங்கியமையினூடாகவும் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளிலிருந்து பெறப்பட்ட நிதியினூடாகவும் திரட்டப்பட்ட நிதிகளைப் பயன்படுத்தி ரூ.662.6 பில்லியன் பெறுமதி கொண்ட திறைசேரி உண்டியல்கள் இளைப்பாறவிடப்பட்டன. 2015இல் திறைசேரி உண்டியல்களிலிருந்தான தேறிய வெளிநாட்டு வெளிப்பாய்ச்சல் ஐ.அ.டொலர் 381.7 மில்லியனாகக் காணப்பட்டது.

ஆ) **திறைசேரி முறிகள்:** 2015இல் வழங்கப்பட்ட மொத்தத் திறைசேரி முறிகளின் முகப்புப் பெறுமதி ரூ.869.9 பில்லியனாகக் காணப்பட்டது. 2014இல் 6 முதனிலை ஏலங்களினூடாகத் திரட்டப்பட்ட ரூ.27.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2015 காலப்பகுதியில் 37 முதனிலை ஏலங்களினூடாக ரூ.712.3 பில்லியன் திரட்டப்பட்டது. இவ்வாண்டுப் பகுதியில் ரூ.511.7 பில்லியன் பெறுமதியான திறைசேரி முறிகள் முதிர்ச்சியடைந்தன. 2015இல் திறைசேரி முறிகளிலிருந்தான வெளிநாட்டு நிதிகளின் தேறிய வெளிப்பாய்ச்சல் ஐ.அ.டொலர் 711.8 மில்லியனாகக் காணப்பட்டன.

இ) **இலங்கை அபிவிருத்தி முறிகள்:** 2015இல் ஐ.அ.டொலர் 2,491.4 மில்லியன் பெறுமதியான இலங்கை அபிவிருத்தி முறிகள் வழங்கப்பட்டன. இவ்வாண்டுப் பகுதியில் மொத்தமாக ஐ.அ.டொலர் 835.6 மில்லியன் பெறுமதியான இலங்கை அபிவிருத்தி முறிகள் முதிர்ச்சியடைந்தன.

ஈ) **நாட்டிற்கான பன்னாட்டு முறிகள்:** 2015இல் ஆண்டிற்கான அரசின் ஒட்டுமொத்தக் கடன்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்துடன் இசைந்து செல்லும் விதத்தில், யூனில் நடாத்தப்பட்ட ஒரு ஏலத்தில்

ஐ.அ.டொலர் 650 மில்லியனும் நவெம்பரில் நடாத்தப்பட்ட மற்றைய ஏலத்தில் ஐ.அ.டொலர் 1,500 மில்லியனுமாக இரண்டு ஏலங்களில் மொத்தமாக ஐ.அ.டொலர் 2,150 மில்லியன் கொண்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் வழங்கப்பட்டன. அரசாங்கம் 2015 சனவரியில் ஐ.அ.டொலர் 500 மில்லியனை மீளச் செலுத்தியது.

2015இல் நிலவிய தாழ்ந்ததும் உறுதியானதுமான வட்டி வீதச் சூழலைக் கருத்திற் கொள்கையில் நிதியிடல் உபாயங்கள் வெளிநின்ற உள்நாட்டுப் படுகடன் இருப்புக்களின் முதிர்ச்சிக்கான சராசரிக் காலத்தினை 2014 இறுதியின் 5.75 ஆண்டுகளிலிருந்து 2015 இறுதியில் 6.28 ஆண்டுகளுக்கு விரிவாக்கும் விதத்தில் நீண்ட காலப் படுகடன் சாதனங்களைத் தீவிரமாக வழங்குவதற்கு பொதுப்படுகடனை இயலச் செய்தது. 2015 மாச்சிலிருந்து சந்தைக்கான அனைத்து அரச பிணையங்களின் வழங்கலும் ஏலங்களினை அடிப்படையாகக் கொண்டிருந்தன. மேலும், முதலாந்தரச் சந்தையில் நீண்ட காலத் திறைசேரி முறிகள் கிரமமான முறையில் வெற்றிகரமாக வழங்கப்பட்டதன் மூலம் விளைவு வளையி நீட்டப்பட்டது.

### 22.2 பொதுப்படுகடனைத் தீர்ப்பனவு செய்தல்

இவ்வாண்டுப் பகுதியில் செய்யப்பட்ட மொத்தப் படுகடன் கொடுப்பனவுகள் ரூ.1,303.2 பில்லியனாக விளங்கி அரசாங்கத்தின் ரூ.918.1 பில்லியன் கொண்ட உள்நாட்டுப் படுகடனையும் ரூ.385.1 பில்லியன் கொண்ட வெளிநாட்டுப் படுகடனையும் உள்ளடக்கியிருந்தது.

### 22.3 அரச பிணையங்களின் தீர்ப்பனவிற்கு வசதியளித்தல்

லங்கா செகுயர் முறைமையின் தடங்கலற்ற அதேநேர தொழிற்பாடுகளை உறுதிப்படுத்துகின்றமையின் மூலம் அரச பிணையங்களின் முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவிற்கு பொதுப்படுகடன் திணைக்களம் தொடர்ந்தும் வசதியளித்தது. லங்கா செகுயரிலுள்ள பத்திரங்களற்ற பிணையங்களின் உடைமைகளது மொத்தப் பெறுமதி 2015 திசெம்பர் இறுதியில் ரூ.4,363.2 பில்லியனாகக் காணப்பட்டது. லங்கா செகுயரின் பங்கேற்பாளர்கள் 33 வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களையும் (25 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் 8 முதனிலை வணிகர் கம்பனிகள்) 3 நேரடிப் பங்கேற்பாளர்களையும் உள்ளடக்கியிருந்தது.

### 22.4 அரச பிணையங்களில் உரித்துப் பதிவினைப் பேணுதல்

பொதுப்படுகடன் திணைக்களத்தில் பேணப்படும் மத்திய வைப்பக முறைமையிலுள்ள அரச பிணையங்களின் உரித்துப் பதிவினை அதேநேர அடிப்படையில் இற்றைப்படுத்தும் வசதி, அரச பிணையங்களுக்கான இரண்டாந்தரச் சந்தை நடவடிக்கைகளை சுமுகமாக நடாத்துவதற்கு உதவியளித்தது. மத்திய வைப்பக முறைமையில் கணக்குகளை வைத்திருப்போருக்கு அவர்களது உடைமைகள், கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பில் காலாந்தரக் கூற்றுக்களை அனுப்புகின்ற செயன்முறையானது மத்திய வைப்பக முறைமையிலுள்ள கணக்கு உடமையாளர்களுக்கு மின்னஞ்சலூடாக காலாந்தரக் கூற்றுக்களை தன்னியக்கமாக அனுப்புவதுடன் 2015இல் மேலும் முன்னேற்றமடைந்தது. பொதுப்படுகடன் திணைக்களம் 2015இல் மத்திய வைப்பக முறைமையில் கணக்கு வைத்திருப்போருக்கு இலத்திரனியல் வடிவத்தில் 2,955 கூற்றுக்கள், 24,722 உடமைகளின் அரையாண்டுக் கூற்றுக்கள், 64,596 கொடுக்கல்வாங்கல் மாதாந்தக் கூற்றுக்கள் மற்றும் 49,274 கொடுப்பனவுக் கூற்றுக்கள் அஞ்சல் மூலமாகவும் அனுப்பி வைத்தது. மேலும், மத்திய வைப்பக முறைமையின் கணக்கு உடமையாளர்கள் இணையத்தளமூடாக அதேநேர அடிப்படையில் அவர்களது கணக்கு விபரங்களைப் பார்வையிடுவதற்கான வசதியும் வழங்கப்பட்டது. மத்திய வைப்பக முறைமையில் பதிவுசெய்யப்பட்ட கணக்கு உடமையாளர்களின் மொத்த எண்ணிக்கை 2015 திசெம்பர் இறுதியில் 89,696 ஆகக் காணப்பட்டது.

### 22.5 படுகடன் சந்தை அபிவிருத்தி

நாணயச் சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறு, 2015 மாச்சிலிருந்து சந்தையில் திரட்டப்பட்ட முழு நிதியும் ஏலங்களினூடாகவே திரட்டப்பட்டது. ஆகவே, விளைவு வீதங்கள் சந்தை விசைகளினூடாகவே முழுமையாகத் தீர்மானிக்கப்பட்டன. இதன் மூலம் உத்வேகமிக்க அரச பிணையங்கள் சந்தையொன்றை உருவாக்குவதற்கு இன்றியமையாத காரணியான அரச பிணையங்களுக்கான கூடிய பிரசன்னமிக்க திரவத்தன்மை நீண்ட கால அளவுக்குறியீட்டு விளைவு வளையி பெறப்பட்டது.

### 22.6 அரச பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களின் ஒழுங்குவிதிகள்

தீவிரமான சந்தைப் பங்கேற்பாளராகவும் சந்தை உருவாக்குவோராகவும் செயற்படுவதன் மூலம் அரச பிணையங்களுக்கான உறுதியானதும் நம்பகத்தகுந்ததுமான கேள்வி மூலங்களைக் கட்டியெழுப்புவதனூடாக அரச பிணையங்கள் சந்தையை வலுப்படுத்தியதன் மூலம் அரச பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்கள் நிதியியல் சந்தையில் தவிர்க்க முடியாத வகிபாகத்தினை ஆற்றினர். பொதுப்படுகடன் முறைமையின் உறுதிப்பாட்டினை அரச பிணையங்களிலுள்ள முதலீட்டாளர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் நோக்குடன் பொதுப்படுகடன் திணைக்களம், உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் மற்றும் பதிவுசெய்யப்பட்ட பங்கு மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் என்பனவற்றின் நியதிகளில் மேற்பார்வை நடவடிக்கைகளை மேற்கொண்டது. 2015இல் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகளின் சுருக்கம் கீழே தரப்படுகிறது.

#### (அ) முன்மதியுடைய ஒழுங்குவிதிகள்

(i) முதனிலை வணிகர் முறைமையின் உறுதிப்பாட்டினையும் அரச பிணையங்களிலுள்ள முதலீட்டாளர்களின் பாதுகாப்பினையும் பலப்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கும் பணிப்புரைகளுக்கும் ஒவ்வொரு முதனிலை வணிகர்களும் இணங்கியொழுகுவதனை மதிப்பிடல்.

(ii) 2015 ஒத்தோபர் 28ஆம் நாளன்று, முதனிலை வணிகர் கம்பனிகள் ரூ.1,000 மில்லியனுக்குக் குறையாத பெறுமதி இழக்காத மைய மூலதனத்தினையும் 10 சதவீதமான குறைந்தபட்ச இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதத்தினையும் பேண வேண்டுமென்பதனைத் தேவைப்படுத்துகின்ற குறைந்தபட்ச மைய மூலதன மற்றும் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதம் - திருத்தம் மீதான பணிப்புரை விடுக்கப்பட்டது.

(iii) வாடிக்கையாளர்களின் நலன்களுக்கும் முதனிலை வணிகர் முறைமைக்கும் அரச பிணையங்கள் தொழில்துறைக்கும் தீங்குபயக்காத விதத்தில் முதனிலை வணிகர்கள் தமது வியாபாரத்தினைக் கொண்டு நடாத்த வேண்டுமென்பதனைத் தேவைப்படுத்துகின்ற இரண்டு குறித்துரைக்கப்பட்ட பணிப்புரைகள் அவர்களுக்கு விடுக்கப்பட்டன.

#### (ஆ) முதனிலை வணிகர்களின் பரீட்சிப்புக்கள்

முதனிலை வணிகர்கள் பல்வேறு இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மை (சந்தை, திரவத்தன்மை, தொழிற்பாடுகள் போன்றவை) மற்றும் ஏதேனும் எஞ்சியுள்ள இடர்நேர்வுகளைத் தணிப்பதற்குப் போதுமான மூலவளங்கள் பற்றி தலப்பரீட்சிப்புக்களின் போது மதிப்பிடப்பட்டன. இதன்படி, 2015இல் இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட பதின்மூன்று தலப்பரீட்சிப்புக்கள் நிறைவடைந்தன. அத்தகைய பரீட்சிப்பு அறிக்கைகளில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள எஞ்சிய மேற்பார்வை கரிசனைகளைச் சரிசெய்வதற்காக காலவரையுடன் கூடிய நடவடிக்கைத் திட்டங்கள் நடைமுறைக்கிடப்பட்டன. ஒழுங்குமுறைப்படுத்தல் கரிசனைகளை சரிசெய்வதில் அடையப்பட்ட முன்னேற்றங்கள், தொடர்பான முதனிலை வணிகர்களிடமிருந்து பெறப்பட்ட காலாண்டு அறிக்கைகளினூடாக கண்காணிக்கப்பட்டன.

**(இ) தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு**

தனிப்பட்ட முதனிலை வணிகர்களினதும் அதேபோன்று முழுமையான தொழில்துறையினதும் நிதியியல் ஆற்றல் மற்றும் தொழிற்பாட்டுச் செயலாற்றத்தின் அதேநேரக் கண்காணிப்புப் பொறிமுறையான பின்நெட் முறைமையினூடாக முதனிலை வணிகர்களின் தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பில் பொதுப்படுகடன் திணைக்களம் தொடர்ந்தும் ஈடுபட்டது. அத்தகைய கண்காணிப்பு நடவடிக்கையில் கண்டறியப்பட்டவற்றின் அடிப்படையில், தேவையான வேளைகளில் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் பொருத்தமான சரிசெய்யும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. முதனிலை வணிகர்களின் நிதியியல் அறிக்கையிடலின் காத்திரமான தன்மையினை உயர்த்தும் நோக்குடன் பின்நெட் முறைமைக்கு பல மேம்படுத்தல்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

**(ஈ) முதனிலை வணிகர்களின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுடனான கூட்டங்கள்**

2015இல் பொதுப்படுகடன் திணைக்களம் ஆளுநர் மற்றும் பொதுப்படுகடனின் பதிவாளர்/ கண்காணிப்பாளருடனான முதனிலை வணிகர்களின் முதன்மை நிறைவேற்று அலுவலகங்களின் ஐந்து கூட்டங்களை ஒழுங்குசெய்தது. இக்கூட்டங்கள் பொருளாதாரம் மற்றும் நாணய அபிவிருத்தி, பொதுப்படுகடன் தொழில்துறையின் செயலாற்றம் மற்றும் அரச பிணையங்களிலுள்ள முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தை நடவடிக்கைகளின் செயலாற்றத்தில் தாக்கமொன்றினைக் கொண்டிருக்கக்கூடிய மற்றைய துறைகள் தொடர்பாகவும் சந்தை அபிவிருத்தி தொடர்பாகவும் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளக்கூடிய அரங்கமாகவும் செயற்பட்டது.

### 22.7 நாட்டிற்கான பன்னாட்டுத் தரமிடல் மீளாய்வுப் பணியினை ஒருங்கிணைத்தல்

நாட்டிற்கான பன்னாட்டு தரமிடலின் கிடைப்பனவினை உறுதிப்படுத்தும் நோக்குடன் இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களம் பன்னாட்டு தரமிடல் முகவர்களான பிட்ஜ் றேட்டிங் லிமிடெட், மூடிஸ் இன்வெஸ்டர் சேர்விஸ் மற்றும் ஸ்டான்டட் அன்ட் புவர் என்பனவற்றுடன் இலங்கைக்கான அவற்றின் தரமிடலைப் மதிப்பிடுவதில் இணைப்புக்களை மேற்கொண்டது. பொதுப்படுகடன் திணைக்களம் தரமிடல் முகவர்களுடன் அவர்களது 2015ஆம் ஆண்டிற்கான வருடாந்த தரமிடலை மீளாய்வு செய்வதற்கு வசதியளித்த வேளையில் இலங்கைக்கான அவர்களது தரமிடல் பணிகளையும் மதிப்பீடு செய்தது.

**இணைப்பு II-2 — அரச பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்கள் (ஆங்கில அகர வரிசைப்படி)**

| | |
|---|---|
| 1. | அக்குயிட்டி செக்குறிட்டீஸ் லிமிடெட் |
| 2. | இலங்கை வங்கி |
| 3. | கப்பிட்டல் அலையின்ஸ் லிமிடெட் |
| 4. | கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி |
| 5. | என்ட்ரஸ்ட் செக்குறிட்டீஸ் பிஎல்சி |
| 6. | பெர்ஸ்ட் கப்பிட்டல் ரெசறீஸ் பிஎல்சி |
| 7. | நற்வெல்த் செக்குறிட்டீஸ் லிமிடெட் |
| 8. | என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ட் கம்பனி லிமிடெட் |
| 9. | மக்கள் வங்கி |
| 10. | பான் ஏசியா பாங்கிங் கோப்பரேஷன் பிஎல்சி |
| 11. | பேப்பற்சுவல் ரெஷறீஸ் லிமிடெட் |
| 12. | சம்பத் வங்கி பிஎல்சி |
| 13. | செலான் வங்கி பிஎல்சி |
| 14. | த ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பிரேசன் லிமிடெட் |
| 15. | யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி |
| 16. | வெல்த் ட்ரஸ்ட் செக்குறிட்டீஸ் லிமிடெட் |

## 23. பிரதேச அபிவிருத்தி

கிராமியக் கொடுகடன் திணைக்களத்தினையும் அபிவிருத்தி நிதித் திணைக்களத்தினையும் ஒருங்கிணைத்தமையின் மூலம் 2002 சனவரியில் நிறுவப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் 2015இல் பல்வேறு மீள்நிதியிடல் திட்டங்களையும் வட்டி உதவுதொகைத் திட்டங்களையும் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களையும் தொடர்ந்தும் இணைத்து, வசதியளித்து நடைமுறைப்படுத்தியதுடன் கொடுகடன் துணைநிரப்பல் பணிகளையும் வழங்கியது. திணைக்களத்தின் முக்கிய குறிக்கோள்கள் யாதெனில் சமச்சீரான வளர்ச்சியை எய்துவதற்கான முயற்சிக்கு ஆதரவளிப்பதும் நாட்டில் அனைத்து மக்களும் வங்கித்தொழில் வசதிகளைப் பெற்றுக்கொள்ள இயலுமைப்படுத்துவதுமேயாகும்.

இதன்படி, பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் முன்னாலுள்ள சவால்களை முறியடிப்பதற்கு உத்வேகம் மிக்க கடன் திட்டங்களில் நன்மைபெறுவோரினை உறுதிப்படுத்தும் நோக்குடன் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினூடாகத் தேவையான மக்களுக்கும் வியாபாரத் தொழில் முயற்சிகளுக்கும் குறிப்பாக, வேளாண்மை, விலங்கு வளர்ப்பு மற்றும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர அளவுத் தொழில்முயற்சிகளுக்கும் தாங்கக்கூடிய மட்டத்திலான நிதிகளைத் தொடர்ந்தும் வழங்கியது. திணைக்களம் விழிப்புணர்வினை அதிகரிக்கின்ற மற்றும் தேர்ச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை, குறிப்பாக, முறைசார்ந்த நிதியியல் துறைக்கு வெளியேயுள்ளவர்களுக்காக நடத்தியதுடன் நிதியின் கிடைப்பனவினையும் நாட்டின் அனைத்து மக்களும் வங்கித்தொழில் வசதிகளைப் பெற்றுக்கொள்ள இயலுமைப்படுத்துவதனையும் அதிகரிப்பதற்காக அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களையும் பயன்படுத்தியது.

மேலும், பொருளாதாரத்தின் தற்போதைய அபிவிருத்திகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் 2015இல் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் வட்டி வீதங்கள் மீதான திருத்தம், உற்பத்திச் செயற்திட்டங்களுக்கான கடன் வரையறைத் தகைமையை உயர்த்தல் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிக் கடன் திட்டங்களின் உயர்ந்தபட்ச சலுகைக் காலம் என்பனவற்றின் மீதான விசேட கவனத்துடன் பல்வேறு கொள்கை வழிமுறைகளை அறிமுகப்படுத்தியது.

### 23.1 கொடுகடன்/ கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களின் நடைமுறைப்படுத்தல்

2015ஆம் ஆண்டுப் பகுதியில், பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் 13 கொடுகடன் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு இணைக்கப்பட்டன (அட்டவணை II 19). இத்திட்டங்களில் 4 வேளாண்மை மற்றும் விலங்கு வளர்ப்புத் துறைகளை இலக்காகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட வேளையில் 5 கொடுகடன் திட்டங்கள் சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்கானவையாகக் காணப்பட்டன. மற்றைய 4 கொடுகடன் தொடர்களும் நுண்பாக நிதித் துறையினை இலக்காகக் கொண்டு திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்பட்டன. இக்கொடுகடன் திட்டங்களுக்கும் கொடுகடன் துணை நிரப்பு பணிகளுக்கும் இலங்கை அரசாங்கத்தினாலும் இலங்கை மத்திய வங்கியினாலும் கொடை முகவர்களினாலும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினாலும் நிதியிடப்பட்டன.

ஒட்டுமொத்தமாக, 2015இல் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினூடாக 141,298 பயன்பெறுநர்களுக்கு ரூ.16,678.8 மில்லியனைப் பகிர்ந்தளித்தது. இதில் 67.9 சதவீதக் கடன்கள் வேளாண்மை மற்றும் விலங்கு வளர்ப்புத் துறைகளை நோக்கி நெறிப்படுத்தப்பட்ட வேளையில் 19.3 சதவீதமும் 12.8 சதவீதமும் முறையே சிறிய நடுத்தர தொழில்முயற்சிகளுக்கும் நுண்பாக நிதித் துறைகளுக்கும் வழங்கப்பட்டன. இக்கடன் திட்டங்களின் மொத்த நன்மைபெறுநர்களில் 65.2 சதவீதம் கொண்ட பெரும்பாலான கடன்பாட்டாளர்கள் வேளாண்மைத் துறையினைச் சாந்தவர்களாகக் காணப்பட்ட வேளையில் 24.3 சதவீதத்தினரும் 10.5 சதவீதத்தினரும் முறையே நுண்பாக நிதித் துறையினையும் சிறிய

நடுத்தர தொழில்முயற்சியினையும் சார்ந்தவர்களாகக் காணப்பட்டனர். இவ்வாண்டுப் பகுதியில் 67.8 சதவீதக் கடன்கள் வட்டி உதவுதொகைத் திட்டங்களினூடாக வழங்கப்பட்ட வேளையில் 32.2 சதவீதம் மீள்நிதியிடல் கொடுகடன் திட்டங்களினூடாக பகிர்ந்தளிக்கப்பட்டன.

பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கடன் திட்டங்களின் கணக்குச் சுருக்கம் கீழே தரப்படுகிறது.

### 23.2 வேளாண்மை மற்றும் விலங்கு வளர்ப்புத் துறை

இன்றியமையாத உணவுப் பொருட்களின் உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல் ஆகிய உபாயம் மிக்க முக்கியத்துவத்தினைக் கருத்திற் கொண்டு, திணைக்களம் தொடர்ந்தும் சறுசற அல்லது புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம் மற்றும் வர்த்தக அளவு பாற்பண்ணை அபிவிருத்திக் கடன் திட்டம் ஆகிய இரண்டு முக்கிய திட்டங்களினூடாக கொடுகடன்களை வழங்கியது. மேலும், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் 2015 ஓகத்தில் இலங்கை அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட தேயிலைத் தொழிற்சாலைகளுக்கான தொழிற்படு மூலதனக் கடன் திட்டத்தின் வட்டி உதவுதொகைக் கூறினை நடைமுறைப்படுத்துவதில் ஈடுபட்டிருந்தது.

- இத்திட்டங்களினூடாக வேளாண்மை மற்றும் விலங்கு வளர்ப்புத் துறையிலுள்ள 92,081 நன்மைபெறுநர்களுக்கு மொத்தமாக ரூ.11,319.9 மில்லியன் கொண்ட தொகை பகிர்ந்தளிக்கப்பட்டது. இக்கடன்கள், திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்பட்ட அனைத்துக் கொடுகடன் திட்டங்களின் கீழும் வழங்கப்பட்ட மொத்தப் பகிர்ந்தளிப்பில் 67.9 சதவீதத்திற்கு வகைகூறின. அவற்றில், அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம், பகிர்ந்தளிக்கப்பட்ட கடன் பெறுமதிகளின் நியதிகளிலும் 2015இல் இக்கடன்களைப் பெற்ற நன்மைபெறுநர்களின் எண்ணிக்கை நியதிகளிலும் தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்தியது.
- இவ்வாண்டுப் பகுதியில், புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம் தனியாக 90,533 வேளாண்மையாளர்களிடையே அவர்களின் குறுங்காலத் தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக மொத்தமாக ரூ.7,137.5 மில்லியனைக் கொண்ட கடன்களைப் பகிர்ந்தளித்தது. இத்தொகையில், மொத்தமாக ரூ.4,240.6 மில்லியன் கொண்ட தொகை 2014/2015 பெரும்போகத்தில் 55,545 வேளாண்மையாளர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்ட வேளையில் மீதி ரூ.2,896.9 மில்லியன் 2015இல் சிறுபோக காலத்தில் 34,988 வேளாண்மையாளர்களிடையே வழங்கப்பட்டன.
- புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட வேளாண்மைக் கடன்களில் மிக உயர்ந்த தொகையினை அநுராதபுர மாவட்டம் (19.1 சதவீதம்) பெற்றதுடன் அதனைத் தொடர்ந்து, பொலனறுவை (12.4 சதவீதம்), அம்பாந்தோட்டை (9.6 சதவீதம்) மற்றும் பதுளை (8.7 சதவீதம்) ஆகிய மாவட்டங்கள் காணப்பட்டன.
- 2015 யூலையில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்திற்காக களஞ்சியசாலை பற்றுச்சீட்டு நிதியிடல் முறைமையினை அறிமுகப்படுத்தியது. இம்முறைமையின் கீழ், சிறுவேளாண்மையாளர்கள் அரசாங்கத்திற்குச் சொந்தமான களஞ்சியசாலைகளினால் வழங்கப்பட்ட களஞ்சியசாலை பற்றுச்சீட்டினைப் பிணையமாக வைத்து பதிவு செய்யப்பட்ட நிதியியல் நிறுவனங்களிடமிருந்து குறுங்காலக் கடன்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.
- பாற்பண்ணை தொடர்பான அனைத்து நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ள பண்ணை வேளாண்மையாளர்கள் மற்றும் பண்ணை தொழில்முயற்சியாளர்களின் நிதியிடல் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக நாடளாவிய ரீதியில் கடன்களை வழங்குவதற்காக வட்டி உதவுதொகைத் திட்டமொன்றாக தொழிற்படும் வர்த்தக அளவிலான பாற்பண்ணை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் கீழ் 1,424 கடன்பாட்டாளர்களிடையே ரூ.1,229.8 மில்லியன்

**அட்டவணை II-19** 2015இல் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கடன் வழங்கல் நிகழ்ச்சித்திட்டங்கள் - 2015

தொகை ரூ. மில்லியனில்

| | செயற்றிட்டத்தின் பெயர் | நிதியிடல் மூலம் | பணித் திட்டங்கள் | மொத்த நிதி ஒதுக்கீடு | 2015இல் நிதி வழங்கல் | வழங்கப் படவுள்ள மீதி நிதியம் | கடன் பெற்றோருக்கான ஆண்டு வட்டி வீதம் (ஆண்டு இறுதியில்) |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | **வேளாண்மை மற்றும் விலங்கு வளர்ப்புத்துறை** | | | | | | |
| 1.1 | தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | இலங்கை அரசாங்கம் | தீங்குப் பகுப்பாய்வு மற்றும் மிக முக்கிய கட்டுப்பாட்டு அளவு சான்றிதழைப் பெறும் விதத்தில் தேயிலைத் தொழிற்சாலைகளை நவீன மயப்படுத்துவதன் மூலம் ஏற்றுமதிச் சந்தையின் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு தேவையான உட்கட்டமைப்பினை அபிவிருத்தி செய்தல் மற்றும் தேயிலை சிறு உடைமையாளர்களின் வருமானத்தை நிலைத்து நிற்கும் அடிப்படையில் அதிகரித்தல். | 1,100 | 8.3 | **152.9** | 9% |
| 1.2 | புதிய அனைத்தையு முள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம் | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் சொந்த நிதியம் மற்றும் அரச வட்டி உதவு தொகை | நெல் மற்றும் குறுங்காலப் பயிர்களின் பயிற்செய்கையில் ஈடுபடுகின்ற நுண்பாக மற்றும் சிறியளவு வேளாண்மையாளர்களின் சமூக பொருளாதார நிலைமைகளை உயர்த்துதல் | நிதிக்கான கேள்வி அடிப் படையில் | 7,137.5 | **வி.கி.*** | 7% |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1.3 | வர்த்தக அளவிலான பாற்பண்ணை அபிவிருத்திக் கொடுகடன் திட்டம் | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் சொந்த நிதியம் மற்றும் அரச வட்டி உதவு தொகை | வர்த்தக அளவிலான பாற்பண்ணைகளை ஊக்குவிப்பதனூடாக பால் மற்றும் பால் உற்பத்தியின் தன்னிறைவை அடைவதற்கு உதவுதல் | நிதிக்கான கேள்வி அடிப் படையில் | 1,229.8 | **வி.கி.** | 6% |
| 1.4 | தேயிலைத் தொழிற்சாலைகளுக்கான தொழிற்படு மூலதனக் கடன் திட்டம் | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் சொந்த நிதியம் மற்றும் அரச வட்டி உதவு தொகை | பதிவுசெய்த தேயிலைத் தொழிற்சாலைகள் அவற்றின் தொழிற்படு மூலதனத் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்வதற்கு உதவுதல் | வட்டி உதவு தொகைக்காக ஒதுக்கப்பட்ட நிதியத்திற் கான கேள்வியின் அடிப்படையில் | 2,943.8 | **வி.கி.** | (ச.நி.மு. க.வ.வீ +1.0% - 2.0%) |
| 2. | **நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் துறைகள்** | | | | | | |
| 2.1 | சுயதொழில் வாய்ப்பு ஊக்குவிப்பு முயற்சிக் கடன் திட்டம் | இலங்கை அரசாங்கம் | நாட்டின் அங்கீகரிக்கப்பட்ட தொழில் பயிற்சி நிறுவனங்களில் பயிற்றப்பட்ட இளைஞருக்கு அவர்களின் சுயவேலை வாய்ப்புச் செயற்றிட்டங்களை நிறுவுவதற்கான நிதியியல் உதவி வழங்குதல் | 250 | 29.7 | **18.3** | 9% |
| 2.2 | “வடக்கின் எழுச்சி” கடன் திட்டம் - கட்டம் II | இலங்கை மத்திய வங்கி | வட மாகாணத்தில் கடன் பெறுவதற்கு வாய்ப்புள்ள நன்மைபெறுநர்களுக்கு அவர்களின் பொருளாதார நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்கு உதவி வழங்கல் | 2,157 | 203.6 | **முடிவுறுத்தப் பட்டது** | 9% |
| 2.3 | சுபீட்சக் கடன் திட்டம் (சௌபாக்கியா) | இலங்கை மத்திய வங்கி | எந்தவொரு நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு அல்லது விரிவாக்குவதற்கு அல்லது அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட எந்தவொரு நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு | 12,317 | 2,889.6 | **390** | 8% |
| 2.4 | சிறு உடைமையாளர் பெருந்தோட்ட தொழில் முயற்சியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | வே.அ.ப.நி* | மத்திய நாட்டுப் பிரதேசத்திலுள்ள ‘ஹடபிம’ மற்றும் ‘மகாவலி’ மீள்குடியேற்றத் திட்டங்களிலுள்ள குறைந்த வருமான சமூகத்தினதும் மொனராகலை மாவட்டத்தின் இடைநிலை வலயத்திலுள்ள வறிய சிறு உடமையாளர்களினதும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல் | 474 | 84.6 | **54** | 7% |
| 2.5 | வரண்ட வலய ஜீவனோபாய உதவி மற்றும் பங்குடைமை நிகழ்ச்சித் திட்டம் - சுழலும் நிதியம் | வே.அ.ப.நி* | மொனராகலை, குருணாகல், பதுளை மற்றும் அநுராதபுரம் போன்ற மாவட்டங்களில் வறிய வேளாண்மையாளர்களிற்கிடையிலான வறுமை ஒழிப்பும், வருமான உருவாக்கத்திற்கு உதவுதலும் | 253 | 11.7 | **2.2** | 10% |
| **3.** | **நுண்பாக நிதித் துறை** | | | | | | |
| 3.1 | சிறு வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | இலங்கை அரசாங்கம் | நன்மைபெறுவோரின் பொருளாதார நிலைமைகளையும் பொது நலன்புரிகளையும் மேம்படுத்துவதற்கு வறிய கிராம மக்களுக்கான வருமானத்தை ஈட்டும் செயற்பாடுகளுக்கு முறைசார் கொடுகடனை வழிமுறைப்படுத்தல் | 346 | 215.7 | **அறவிடப்படும் பணம் மீள சுழற்சிப்படுத்தப் படும்** | 12% - 14% |
| 3.2 | வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | இலங்கை அரசாங்கம் | முறைசார் வங்கித்தொழில் முறைமையுடன் குறைந்த வருமானமுடைய குழுக்களை இணைப்பதற்கு ஏற்பாடு செய்தல் மற்றும் வருமான உருவாக்க நடவடிக்கைகளை மேம்படுத்துவதனூடாக வறுமையை ஒழித்தல் | 1,031 | 505.1 | **அறவிடப்படும் பணம் மீள சுழற்சிப்படுத்தப் படும்** | 12% |
| 3.3 | வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் II | இலங்கை அரசாங்கம் ய.ப.ஒ.மு* | | 2,000 | 86.8 | **முடிவுறுத்தப் பட்டது** | 12% |
| 3.4 | வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் II - சுழலும் நிதியம் | இலங்கை அரசாங்கம் | | 2,764 | 1,331.7 | **அறவிடப்படும் பணம் மீள சுழற்சிப்படுத்தப் படும்** | 10% - ப.நி.நி. இடமிருந்து கடன் பெறுநருக்கு |

| | | |
|---|---|---|
| * வி.கி. | - | விபரம் கிடைக்கவில்லை |
| வே.அ.ப.நி. | - | வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியம் |
| ய.ப.ஒ.மு. | - | யப்பானிய பன்னாட்டு ஒத்துழைப்பு முகவராண்மை |
| க.வ.ப.மு. | - | கடன் வழங்கல் பங்கேற்பாளர் முகவர் |
| தீ.ப.மு.க.பு. | - | தீங்குப் பகுப்பாய்வு மற்றும் மிக முக்கிய கட்டுப்பாட்டுப் புள்ளி |
| ச.நி.மு.க.வ.வீ | - | சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன் வழங்கல் வீதம் |
| ப.நி.நி. | - | பங்கேற்கும் நிதியியல் நிறுவனம் |

பகிர்ந்தளிக்கப்பட்டது. மொத்தக் கடன் பகிர்ந்தளிப்பில் குருணாகல் மாவட்டம் (21.9 சதவீதம்) உயர்ந்த கடன் தொகையினைப் பெற்றதுடன் அதனைத் தொடர்ந்து முறையே புத்தளம் (12.1 சதவீதம்), அநுராதபுரம் (6.8 சதவீதம்) மற்றம் அம்பாந்தோட்டை (6.5 சதவீதம்) மாவட்டங்கள் காணப்பட்டன.

- பெரும்பாலான பண்ணை வேளாண்மையாளர்கள்/ தொழில்முயற்சிகளுக்கு வருமானத்தினை உருவாக்க 6 மாதங்களுக்கும் கூடுதலான காலம் தேவைப்பட்டமையால் வர்த்தக அளவு பாற்பண்ணை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் கீழான சலுகைக் காலம் செயற்றிட்டத்தின் தன்மையினைப் பொறுத்து தற்போது காணப்படும் 6 மாதங்களிலிருந்து உயர்ந்தபட்சம் 12 மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. நீடிக்கப்பட்ட சலுகைக் காலம் 2016 சனவரியிலிருந்து நடைமுறைக்குவரும்.
- புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட தேயிலைத் தொழிற்சாலைகளுக்கான தொழிற்படு மூலதனக் கடன் திட்டத்தினைப் பொறுத்தவரை, திணைக்களம், இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட நிதியிலிருந்து 2 ஆண்டுகளுக்கு 2 சதவீத வட்டி உதவுதொகையினை வழங்குவதன் மூலம் இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பாக இருக்கின்றது. இத்திட்டமானது பதிவுசெய்த தேயிலைத் தொழிற்சாலைகளின் தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு அவற்றிற்கு உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2015 திசெம்பர் இறுதியளவில், இத்திட்டத்தின் கீழ் 79 கடன்பாட்டாளர்களுக்கு ரூ.2,943.8 மில்லியன் கொண்ட மொத்தக் கடன்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.
- நடைமுறைப்படுத்துகின்ற முகவரென்ற ரீதியில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் இலங்கை அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட கொள்கைத் தீர்மானத்தின்படி, தேசிய வேளாண் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் நுண்பாக நிதிக் கூறுகளின் தொழிற்பாடுகளை மீளத் தொடங்குவதற்கு 2015 திசெம்பரில் நடவடிக்கைகளை முன்னெடுத்தது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதிக் குறிக்கோள் யாதெனில் சிறுஉடமை வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோரின், குறிப்பாக கிராம குடும்ப அலகுகளிலுள்ள பெண்கள் மற்றும் இளைஞர்களின் வறுமைக் குறைப்பிற்கும் வலுவான வாழ்வாதார மேம்பாடுகளுக்கும் பங்களிப்பதேயாகும். இது வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் நிதியிடப்பட்டது.

### 23.3 சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் துறை

- சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் உயர்ந்த உள்ளார்ந்த வளத்தினையும் நம்பிக்கையூட்டுகின்ற தன்மையினையும் ஊக்குவிக்கும் நோக்குடன், மத்திய வங்கி சௌபாக்கியா கடன் திட்டம், வடக்கின் எழுச்சிக் கடன் திட்டம் - சுழலும் நிதியம் - கட்டம் II, சுய வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு முன்முயற்சிக் கடன் திட்டம், சிறு உடமையாளர் பெருந்தோட்ட தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் வரண்ட வலைய வாழ்வாதார ஆதரவு மற்றும் பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் - சுழலும் நிதியம் ஆகிய ஐந்து கடன் திட்டங்களினூடாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறைக்கு சலுகை ரீதியான நிதியிடலைத் தொடர்ந்தும் வழங்கியது. இத்திட்டங்களினூடாக மொத்தமாக ரூ.3,219.3 மில்லியன் கொண்ட கடன்கள் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறையிலுள்ள வேளாண்மை, தயாரிப்பு மற்றும் பணிகளுடன் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள 14,832 நன்மைபெறுநர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன
- இத்திட்டங்களில், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் துறைக்கான முக்கிய மீள்நிதியிடல் திட்டமாகக் கருதப்படுகின்ற சௌபாக்கிய கடன்திட்டம் 12,317 தொழில்முயற்சியாளர்களிடையே ரூ.2,889.6 மில்லியன் கடனை வழங்கியது. இது, சிறிய நடுத்தர தொழில்முயற்சிகள் துறைக்கு மத்திய வங்கி கொடுகடன் திட்டங்களினூடாக வழங்கப்பட்ட பகிர்ந்தளிப்பில் 90 சதவீதத்தினை தனித்துப் பங்களித்தது. திட்டத்தின் கீழ் கடன்களை வழங்கும் பொழுது, புதிய மற்றும் நவீனத்துவம் மிக்க வியாபாரங்களிலும் பெண்கள் மற்றும் இளைஞர் தொழில்முயற்சியாளர்களிலும் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது.
- கொள்கை நோக்கில் பார்க்கையில், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறையினை மேலும் அபிவிருத்தி செய்யும் நோக்குடன், மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்படும் மீள்நிதியிடல் திட்டங்களை பிரபல்யப்படுத்துவதற்காக பல வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இவ்வழிமுறைகள் கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் பின்பற்றப்பட்ட குறிப்பிட்ட நியதிகளையும் நிபந்தனைகளையும் தளர்த்துதல், பிரத்தியேக சிறிய நடுத்தர தொழில்முயற்சிகள் வங்கித்தொழில் பிரிவினையும் சிறிய நடுத்தர தொழில்முயற்சிகள் நிலையங்களையும் ஏற்படுத்துவதற்குப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களை ஊக்குவித்தல் மற்றும் ஒத்த நோக்கம்/ நோக்கங்களுக்கான கடன் விண்ணப்பங்களின் வேறுபட்ட தொகுதிகளை செயன்முறைப்படுத்துவதற்கு ஏற்படும் தேவையற்ற நிருவாகச் செலவுகளைக் குறைப்பதற்காக ஒரே விதமான கடன் திட்டங்களை ஒருங்கிணைத்தல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.
- நீண்ட காலப் பயிர்களின் பயிர்ச் செய்கையில் காணப்பட்ட உள்ளார்ந்த வளம் மற்றும் வருமானத்தினை உருவாக்க எடுக்கும் நீண்ட காலம் என்பனவற்றைக் கருத்தில் கொண்டு, நீண்ட காலப் பயிர்களின் பயிர்ச்செய்கைக்காக சௌபாக்கிய கடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களின் உயர்ந்தபட்ச சலுகைக் காலம் 2015 நவெம்பர் தொடக்கம் 6 மாதங்களிலிருந்து 12 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டது.
- பொறிமயமாக்கலைப் பின்பற்றுவதன் மூலம் சாத்தியமானளவிற்கு குறைந்த எண்ணிக்கை கொண்ட ஊழியர்களுடன் தொழிற்படுவதற்கு பல தொழில்முயற்சிகளும் முயற்சிப்பதனால் சௌபாக்கியா கடன் திட்டத்தின் கீழ் தகைமை பெறுதவற்குத் தொழில்முயற்சியொன்று கொண்டிருக்க வேண்டிய ஊழியர்களின் குறைந்தபட்ச எண்ணிக்கை (அதாவது 5 ஆட்கள்) தொடர்பான தற்போதைய தேவைப்பாடு முழுமையாக அகற்றப்பட்டது. இதன்படி, 100 ஆட்களுக்குக் குறைவான சிறிய நடுத்தர தொழில்முயற்சிகள் சௌபாக்கிய கடன் திட்டத்தின் கீழ் கடன்களைப் பெற உரித்துடையனவாகும். அதேசமயம் செலவுச் சிக்கனத்தினைக் கருத்திற் கொண்டு சௌபாக்கிய கடன் திட்டத்தின் கீழ் தேவையான செயற்றிட்ட மதிப்பீட்டிற்கான தகைமைபெற்ற கடன் எல்லை ரூ.500,000 இலிருந்த ரூ.1 மில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது. இவ்வழிமுறைகள் இதுவரை காணப்பட்ட தேவையற்ற மேலதிக நிருவாகச் சுமைகளைக் குறைத்து கடன்களின் செய்முறைகளை விரைவுபடுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- வட மாகாணத்தின் வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, மீன்பிடி மற்றும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட கடன்களுக்கான மீள்நிதியிடலை வழங்குவதற்காக தொழிற்படுத்தப்பட்ட வடக்கின் எழுச்சிக் கடன் திட்டம் 6 ஆண்டுகளுக்கும் மேலாக வெற்றிகரமாக தொழிற்படுத்தப்பட்டதன் பின்னர் 2015 நவெம்பரிலிருந்து சௌபாக்கிய கடன் திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டது. வடக்கின் எழுச்சிக் கடன் திட்டம் - சுழலும் நிதியம் - கட்டம் II இன் கீழ் அதன் தொழிற்பாட்டுக் காலத்தில் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் கடன்கள் ரூ.203.6 மில்லியனாக விளங்கின.
- சுயவேலை வாய்ப்பு ஊக்குவிப்பு முயற்சிக் கடன் திட்டத்தின் கீழ், அங்கீகரிக்கப்பட்ட சிறப்பு தொழில்நுட்ப நிறுவனங்களிலிருந்து தொழில், தொழில் பயிற்சி தகைமைகளைப் பெற்ற இளைஞர்களுக்கு சிறியளவு தொழில்முயற்சிகளைத் தொடங்குவதற்கு ரூ.29.7 மில்லியன் கொண்ட கடன்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. எஞ்சிய சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிக் கடன் திட்டங்களான சிறுஉடமையாளர் பெருந்தோட்ட தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் வரண்ட வலைய வாழ்வாதார உதவி மற்றும் பங்குடமையாளர் நிகழ்ச்சித்திட்டம் - சுழலும் நிதியம் என்பன ஒன்றுசேர்ந்து 2015இல் 709 கடன்பாட்டாளர்களுக்கு ரூ.96.3 மில்லியனைப் பகிர்ந்தளித்தன.
- சந்தையில் நிலவும் குறைந்த வட்டி வீதங்களுடன் இசைந்துசெல்லும் விதத்தில் சிறுஉடமையாளர் பெருந்தோட்டத் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களுக்கு ஏற்புடைத்தான வட்டி வீதம் 2015 மேயிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 9 சதவீதத்திலிருந்து 7 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது.

### 23.4 நுண்பாக நிதித் துறை

மேலதிக வருமான உருவாக்க நடவடிக்கைகளை தொடங்குவதற்கு கடன்களை வழங்குவதன் மூலமும் நிதியியல் முகாமைத்துவத்தில் அவர்களுக்கு அறிவூட்டுவதன் மூலமும் குறைந்த வருமானம் ஈட்டுவோரின் வாழ்வாதாரத்தினை உயர்த்துவதற்காக நுண்பாக நிதிக் கடன் திட்டங்கள் தொடர்ந்தும் தொழிற்படுத்தப்படுகின்றன. வறுமை ஒழிப்பு நுண்பாக - நிதிச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம், வறுமை ஒழிப்பு நுண்பாக - நிதிச் செயற்றிட்டம் II, வறுமை ஒழிப்பு நுண்பாக - நிதிச் செயற்றிட்டம் II - சுழலும் நிதியம் மற்றும் சிறுவேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் என்பன இத்துறையினை இலக்காகக் கொண்டு வடிவமைக்கப்பட்ட முக்கிய கடன் திட்டங்களாகும்.

- இத்திட்டங்கள் ஒன்றுசேர்ந்து இவ்வாண்டுப் பகுதியில் 34,385 பயன்பெறுநரிடையே ரூ.2,139.5 மில்லியன் கொண்ட கடன்களைப் பகிர்ந்தளித்தன.
- சந்தையில் தற்பொழுது நிலவுகின்ற வட்டி வீதங்களுடன் இசைந்துசெல்லும் விதத்தில் வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் II மற்றும் வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் II - சுழலும் நிதியம் என்பனவற்றிற்கு ஏற்புடைத்தான வட்டி வீதம் 2015 நவெம்பரிலிருந்து ஆண்டிற்கு 12 சதவீதத்திலிருந்து 10 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது.

### 23.5 அடகுபிடித்தல் முற்பணங்களுக்கான கொடுகடன் உத்தரவாதம்

2014 யூன் 17ஆம் நாளன்று அறிமுகப்படுத்தப்பட்ட அடகுபிடித்தல் முற்பணங்களுக்கான கொடுகடன் உத்தரவாதத் திட்டம், நாணய அபிவிருத்தி மற்றும் உள்நாட்டு மற்றும் பன்னாட்டுச் சந்தைகளில் தங்க விலைகளில் ஏற்பட்ட அசைவு என்பனவற்றைப் பரிசீலனையில் கொண்டு 2015 இறுதியில் முடிவுறுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் பகிர்ந்தளிக்கப்பட்ட ரூ.29,248.1 மில்லியன் கொண்ட மொத்தத் தொகைக்கு பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் உத்தரவாதமளித்தது. 2015இல் பகிர்ந்தளிக்கப்பட்ட அடகுபிடித்தல் முற்பணம் ரூ.17,757.9 மில்லியனாகக் காணப்பட்டது.

### 23.6 தேர்ச்சி அபிவிருத்தி மற்றும் இயலாற்றலைக் கட்டியெழுப்புதல்

அனைத்து மக்களும் நிதியியல் பணிகளைப் பெற்றுக்கொள்ள இயலுமைப்படுத்துவதன் முக்கியத்துவத்தினை அங்கீகரிக்கும் விதத்தில், திணைக்களம் குறிப்பாக, நிதியியல் எழுத்தறிவு, தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி, தேர்ச்சி அபிவிருத்தி போன்றவற்றினை முக்கிய கவனத்தில் கொண்டு நன்மைபெறுநர்களுக்கும் ஏனைய ஆர்வலர்களுக்குமாக 278 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது. நிதியியல் எழுத்தறிவு நிகழ்ச்சித்திட்டங்களினூடாக முறைசார்ந்த நிதியியல் துறையுடனான இணைப்புக்களைக் கொண்டிருப்பதிலுள்ள அநுகூலங்கள், சிறந்த வங்கித்தொழில் பழக்கவழக்கங்கள், புதிய நிதியியல் சாதனங்கள் மற்றும் பணிகள், நிதியியல் ஒழுக்காறுகள் போன்றவற்றில் அறிவூட்டப்பட்டது. பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் சுய உதவிக்குழுக்களை உருவாக்குதல் மற்றும் நிதியியல் முகாமைத்துவம் மற்றும் சிறந்த நிதியியல் பழக்கவழக்கங்கள் பற்றி அவர்களுக்கு அறிவூட்டுதல் என்பனவற்றிலும் ஈடுபட்டிருந்தது. பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் அட்டவணை II-20இல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை II-20**
**2015ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்**

| நிகழ்ச்சித்திட்டத்தின் வகை | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| நிதியியல் அறிவூட்டல் | 101 |
| தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி | 57 |
| பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி | 20 |
| செயற்றிட்ட மதிப்பீட்டுச் செயலமர்வு | 58 |
| வானொலி நிகழ்ச்சித்திட்டங்கள் | 27 |
| ஏனையவை | 15 |

## 24. இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம்

இலங்கை மத்திய வங்கியின் இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களமானது வங்கியின் இடர்நேர்வு முகாமைத்துவத் தொழிற்பாட்டினை பலப்படுத்தும் நோக்குடன் 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 33ஆம் பிரிவின் கீழ் 2015 பெப்புருவரி 09இல் நிறுவப்பட்டது. இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் அமைக்கப்பட்டதன் மூலம் இலங்கை மத்திய வங்கி "மூன்று அடுக்கு பாதுகாப்பு" மாதிரி எனும் புதிய இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பினை நிறுவியது. இதில், இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் இரண்டாம் கட்ட பாதுகாப்பாக காணப்படுகிறது. இரண்டாம் கட்ட பாதுகாப்பு என்ற வகையில், இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களத்திடம் சுயாதீனமான இடர்நேர்வுத் தொழிற்பாடு ஒன்றினை செயற்படுத்தும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதில் அறிக்கையிடும் நடவடிக்கையானது பொதுவாக முதல் கட்ட பாதுகாப்புடன் பணியாற்றும் தொழிற்பாட்டுத் திணைக்களிலுமிருந்தும் விலகி சுயாதீனமாக விளங்கும். இதன்படி, இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களத்தின் பொறுப்பானது வெளிநாட்டு ஒதுக்குகளின் முதலீடுகளுடன் தொடர்புடைய இடர்நேர்வுகள், ஊழியர் சேம நிதியத் திணைக்களத்தின் முதலீடுகள் மற்றும் இலங்கை மத்திய வங்கியில் உள்ளக நிதியங்களின் முதலீடுகள் போன்ற

முதலாம் கட்ட பாதுகாப்பானது, தொழிற்பாட்டு திணைக்களத்தின் நாளாந்த தொழிற்பாடுகளின் ஒரு பகுதியாக பொருத்தமான உள்ளக கட்டுப்பாடுகள் நிறுவப்பட்டுள்ளதனை உறுதிசெய்கிறது. இரண்டாம் கட்ட பாதுகாப்பானது சுயாதீனமான இடர்நேர்வு முகாமைத்துவத் தொழிற்பாடுகளின் ஊடான மேற்பார்வை தொழிற்பாடாக, அதாவது இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களமாகக் காணப்படுவதுடன், மூன்றாம் கட்ட பாதுகாப்பானது வியாபார முன்னரங்குகள் மற்றும் மேற்பார்வை தொழிற்பாடுகள் போன்றவை தேவைப்படுத்தப்பட்ட தேர்ச்சி மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதனை உறுதிசெய்யும் கணக்காய்வாளர்களை உள்ளடக்குகின்றது.

சிறப்புக் குறிப்பு 16

## இலங்கை மத்திய வங்கியின் புதிய இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பு

உலகிலுள்ள மத்திய வங்கிகள் வெளிநாட்டுத் தரப்பினர்களுடன் அவர்களின் பல்வேறுபட்ட தொழிற்பாடுகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் காரணமாக பல்வேறு இடர்பாடுகளுக்குள்ளாகி இருக்கின்றன. எனவே, இடர்நேர்வுகளை முன்மதியுடன் முகாமை செய்யும் வகையில் மத்திய வங்கிகளுக்காக சுதந்திரமான மற்றும் மையப்படுத்தப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவ முறையை அபிவிருத்தி செய்வதற்கு மிகக்கூடிய கவனம் செலுத்தப்பட்டது. பயனுறுதியான இடர்நேர்வு முகாமைத்துவப் பொறிமுறையானது பல்வேறு காரணங்களால் மத்திய வங்கிகளுக்கு மிகவும் முக்கியமாளதாகக் காணப்படுகின்றது.

முதலாவதாக, பொதுவிலை உறுதிப்பாடு மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு ஆகிய மத்திய வங்கிகளின் குறிக்கோள்களை அடையும் பொருட்டு நாணயக் கொள்கையை வசதிப்படுத்துவதற்கு வங்கிகள் அவற்றின் நம்பகத்தன்மையைப் பேணுவதற்கு அதன் இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பால் வழங்கப்படும் இடர்நேர்வு பாதுகாப்பு என்ற முக்கிய கூறு தேவைப்படுகிறது.

இரண்டாவதாக, இடர்நேர்வுக் காரணிகள் மத்திய வங்கிகளின் ஐந்தொகையில் குறிப்பாக வங்கிகளின் மூலதன நிலைமையில் அழுத்தத்தை உருவாக்குவதால் வங்கியைப் பாதுகாப்பதற்குப் பயனுறுதி மிக்க இடர்நேர்வு முகாமைத்துவத் தொழிற்பாடானது மத்திய வங்கி போதிய மூலதனம் மற்றும் ஒதுக்குகளை வைத்திருப்பதனை உறுதிப்படுத்துகின்றது.

மூன்றாவதாக, செலாவணி வீதக் கொள்கை உட்பட நாணய மற்றும் நிதியியல் கொள்கைளை பயன்படுத்தி பொருளாதாரத்துக்கான இடர்நேர்வு முகாமையாளர்களாக மத்திய வங்கிகள் தொழிற்படுவதால், உரிய இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு பாதகமான அதிர்வுகளிலிருந்து பொருளாதாரத்தைப் பாதுகாப்பதால் இது நாட்டுக்கான கொடுகடன் மதிப்பை எடுத்துக்காட்டுகிறது.

நான்காவதாக, மத்திய வங்கிகள் அரச சொத்துக்களின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களாகக் கருதப்படுகிறது. இதனால் வெளிநாட்டு ஒதுக்குகள் அல்லது ஏனைய எந்தவொரு அரச நிதியங்கள் அல்லது பொதுமக்கள் நிதியங்களின் முகாமைத்துவத்திடம் ஒப்படைக்கப்பட்ட அரச நிறுவனமொன்றுக்கு முன்மதியான கொள்கைகள், வெளிப்படைத்தன்மை மற்றும் ஆளுகை என்பன முக்கிய காரணிகளாகும். இதற்கு, ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவப் பொறிமுறை நடைமுறையில் இருப்பது அவசியமாகும்.

இறுதியாக, மத்திய வங்கிக்கான எந்தவொரு இடர்நேர்வும் மதிப்புக்குரிய விடயமாக இருப்பதுடன் மத்திய வங்கியின் கொள்கை நம்பகத்தன்மைக்கு அத்தியாவசியமாகும்.

### மத்திய வங்கியின் இடர்நேர்வு முகாமைத்துவ தொழிற்பாட்டின் வளர்ச்சி

அண்மைக்காலம் வரை, குறிப்பாக 2008இல் தோற்றம் பெற்ற உலகளாவிய பொருளாதார மற்றும் நிதியியல் நெருக்கடிவரை இடர்நேர்வு முகாமைத்துவம் மத்திய வங்கியாளர்களால் கூடிய கவனம் செலுத்தப்பட்ட விடயமாக இருக்கவில்லை என்பதுடன் இலங்கை மத்திய வங்கியும் இதற்கு விதிவிலக்கல்ல. நெருக்கடிக்கு முன்னரான காலப்பகுதியில், இடர்முகாமைத்துவம் கல்விசார்ந்த ஒரு விடயமாக மட்டுமே கருதப்பட்டது. இதனால், அது தொடங்கியதிலிருந்தே இலங்கை மத்திய வங்கியின் இடர்நேர்வு முகாமைத்துவம் கூடியளவுக்கு பரவலாக்கப்பட்டதுடன் ஒவ்வொரு திணைக்களங்களுக்கும் அவற்றின் சொந்த இடர்நேர்வுகளை முகாமை செய்து மூத்த முகாமைத்துவத்திற்கு அறிவிக்கின்ற பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. உலகளாவிய இடர்நேர்வு ஆளுகையின் செயலிழப்புகளிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்கள் மத்திய வங்கியில் இடர்நேர்வு முகாமைத்துவம் மீது கவனஞ்செலுத்துவதில் பரந்தளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்கள், வழிகாட்டல்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளின் ஆதரவுடன் நிலைநிறுத்தப்பட்டது. 2000களின் முற்பகுதியில் மத்திய வங்கியின் இடர்நேர்வைக் கண்காணிக்கும் முக்கியத்தை இனங்கண்டபின், இலங்கை மத்திய வங்கி துணை ஆளுநர் தலைமையில் இடர்நேர்வு முகாமைத்துவ கூட்டங்களை நடாத்துவதன் மூலம் இடர்நேர்வு முகாமைத்துவ செயல்முறையைப் பின்பற்றியது. 2010 மேயில், இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவை நிறுவியதன்மூலம் இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கு அதிக முறைசார் ஒழுங்குமுறையொன்று ஏற்படுத்தப்பட்டது. இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவால் அவதானிக்கப்பட்ட இடர்நேர்வுகள் வட்டி வீத இடர்நேர்வு, வெளிநாட்டு நாணய இடர்நேர்வு மற்றும் திரவத் தன்மை இடர்நேர்வு ஆகிய நிதியியல் இடர்நேர்வுகளையும் மற்றும் கொள்கை இடர்நேர்வு, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள் இடர்நேர்வு, இடர்பாடுள்ள வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களிலிருந்து எழும் இடர்நேர்வு, பேரழிவு இடர்நேர்வு, தகவல் முறைமை இடர்நேர்வு, சுற்றுச்சூழல் இடர்நேர்வு, மனித மூலதன மற்றும் முகாமைத்துவ இடர்நேர்வு ஆகிய நிதியல்லா இடர்நேர்வுகளையும் உள்ளடக்குகிறது.

### மத்திய வங்கியின் புதிய இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு

மத்திய வங்கித் தொழிலில் இடர்நேர்வு முகாமைத்துவத் தொழிற்பாட்டில் உலகளாவிய போக்குகளுடன் இணைந்து செல்லும் வகையில் இலங்கை மத்திய வங்கிக்கான பலமான மற்றும் சுதந்திரமான இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பின் முக்கியத்துவம் மற்றும் தேவைப்பாடு என்பன இனங்காணப்பட்டதன் பின்னர், இலங்கை மத்திய வங்கியும் ஒருமுகப்படுத்தப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்புக்குள் படிப்படியாக நகரும் செயல்முறையில் ஈடுபட்டுள்ளது. ஆரம்ப நடவடிக்கையாக, மத்திய வங்கியின் இடர்நேர்வு முகாமைத்துவத் தொழிற்பாட்டை பலப்படுத்தும் நோக்கத்திற்காக நாணயச்சபையானது இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களத்தை 2015இல் ஏற்படுத்தியது. இதனால், இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களத்தின் கீழ் நிதியியல் இடர்நேர்வுளை முகாமை செய்வதற்கான ஒருமுகப்படுத்தப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவ முறைமை நிறுவப்பட்டுள்ள அதேவேளையில் நிதியல்லா இடர்நேர்வுகளை முகாமை செய்வதற்கு ஒவ்வொரு திணைக்களத்தின் கீழும் பன்முகப்படுத்தப்பட்ட பொறிமுறையொன்று நடைமுறையிலுள்ளது. எனவே, மத்திய வங்கியின் தற்போதைய இடர்நேர்வு முகாமைத்துவப் பொறிமுறையானது நிதியியல் இடர்நேர்வு முகாமைத்துவத்திற்காக ஒருமுகப்படுத்தப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் நிதியியல் அல்லாத இடர்நேர்வுகளுக்காகப் பன்முகப்படுத்தப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவம் என்பன காணப்படுவதால் இரட்டைத் தன்மை வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

மத்திய வங்கிச் செயற்பாடுகளில் வளர்ச்சியடைந்துவரும் சிக்கலான தன்மை மற்றும் மத்திய வங்கி தொழிற்படுகின்ற உள்நாட்டு மற்றும் பன்னாட்டு நிதியியல் சூழலின் அபிவிருத்தி என்பவற்றுடன் இணைந்த வகையில் வங்கியின் செயற்பாடுகள் பரந்தளவிலான நிதியல்லா இடர்நேர்வுகளுக்குள்ளாகின்றன. வங்கியின் தொழிற்பாடுகளுக்கான எந்தவொரு குறுக்கீடு அல்லது அதன் நன்மதிப்புக்கான சேதம் என்பன வங்கியின் வகிபாகம் மற்றும் பொறுப்புக்களை மோசமாகப் பாதிக்கும். எனவே, நிதியியல் அல்லா இடர்நேர்வை முகாமை செய்வது இடர்நேர்வுடன் ஒத்துச் செல்லும் வேலை நடைமுறைகள், விதிகள் மற்றும் வழிகாட்டல்கள் அதேபோன்று முழு வங்கியினதும் உரிய இடர்நேர்வின் ஆளுகையை உறுதிப்படுத்தும். இந்நோக்கில் நிதியியல் அல்லாத இடர்நேர்வுகளை மேற்பார்வை செய்வதற்கான கட்டமைப்பை உருவாக்கும் பொருட்டு நிதியியல் அல்லாத இடர்நேர்வு முகாமைத்துவக்குழு 2015 ஒத்தோபரில் ஏற்படுத்தப்பட்டது. நிதியியல் அல்லாத இடர்நேர்வு முகாமைத்துவக்குழு அதன் மட்டத்தில் நிதியல்லா இடர்நேர்வுகளை ஒருமுகப்படுத்த உதவுவதுடன் வங்கியின் நிதியியல் அல்லா இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மையின் ஒட்டுமொத்த வெளிப்பாட்டையும் இது வழங்கும்.

**பாதுகாப்பின் மூன்று வரிசைகள்**

இலங்கை மத்திய வங்கி புதிய இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பின் கீழ் "பாதுகாப்பின் மூன்று வரிசைகள்" என்ற இடர்நேர்வு முகாமைத்துவ மாதிரியைப் பின்பற்றுகிறது. "பாதுகாப்பின் முதல் வரிசையின்' பொறுப்பு தொடர்பான திணைக்களங்களின் பொறுப்பிலுள்ளது. "பாதுகாப்பின் முதல் வரிசை" இன் கீழ்வரும் இடர்நேர்வுகள் தொழிற்பாட்டுத் தன்மை வாய்ந்தமையால் அத்தகைய இடர்நேர்வுகள் எங்கு ஆரம்பிக்கின்றனவோ அங்கே கண்காணித்து கட்டுப்படுத்த வேண்டும். ஏனெனில் இக்குறித்த திணைக்களங்கள் அவற்றின் தொழிற்பாடுகள் தொடர்பாக அறிந்து வைத்துள்ளன. ' பாதுகாப்பின் முதல் வரிசை' உரிய உள்ளக இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் நடைமுறையிலிருப்பதை உறுதிப்படுத்தும். "பாதுகாப்பின் இரண்டாவது வரிசை" ஆன இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் நிதியியல் இடர்நேர்வுகளை அணுகுதல், கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடல் என்பவற்றுக்குப் பொறுப்பானதாகும். இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களமானது பன்னாட்டு ஒதுக்கு முதலீடுகள், மத்திய வங்கியால் முகாமை செய்யப்படும் உள்ளக நிதியங்களால் மேற்கொள்ளப்படும் முதலீடுகள், நாணயத் தொழிற்பாடுகள், அரச படுகடன் முகாமைத்துவம் மற்றும் ஊழியர் சேம நிதியத்தால் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் தொடர்பான நிதியியல் இடர்நேர்வு முகாமைத்துவத் தொழிற்பாட்டைப் பொறுப்பேற்கிறது. "பாதுகாப்பின் மூன்றாவது வரிசை" ஆக மத்திய வங்கியின் உள்ளக கணக்காய்வுத் திணைக்களம் காணப்படுகின்றது. "பாதுகாப்பின் மூன்றாவது வரிசை" ஆக இடர்நேர்வு உறுதிப்படுத்தல் தொழிற்பாட்டைச் செயலாற்றும் பொறுப்பு இலங்கை மத்திய வங்கியின் உள்ளக கணக்காய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**இடர்நேர்வு முகாமைத்துவச் செயல்முறை**

இடர்நேர்வு முகாமைத்துவச் செயல்முறை இடர்நேர்வு மதிப்பீடு, இடர்நேர்வுக் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடு மற்றும் அடிமட்டக் குறியீட்டுக்கெதிரான செயலாற்ற பகுப்பாய்வு மற்றும் அறிக்கையிடுதலில் ஈடுபடுகிறது. இடர்நேர்வு முகாமைத்துவச் செயல்முறை இடர்நேர்வை இனங்காணல் மற்றும் அளவிடலில் ஈடுபடும் இடர்நேர்வு மதிப்பீட்டுடன் ஆரம்பிக்கிறது. சந்தை இடர்நேர்வு திருத்தியமைக்கப்பட்ட காலம், உணர்திறன் பகுப்பாய்வு மற்றும் இடர்நேர்வுக்குள்ளாகக்கூடிய பெறுமதியின் அளவீடுகளூடாக கைப்பற்றப்படுகின்ற அதேவேளையில், கொடுகடன் இடர்நேர்வு எதிர்த்தரப்பினரின் கொடுகடன் தரமிடல்கள் அதுபோல் ஏனைய உள்ளக ரீதியாக அபிவிருத்தி செய்யப்பட்ட இடர்நேர்வு வழி அலகின் அடிப்படையில் தொடர்ச்சியான மதிப்பீடுகள் மூலம் அளவிடப்படுகின்றது. இவ்விடர் நேர்வுகள் நாணயச் சபையால் ஒப்புதலளிக்கப்பட்ட வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவ வழிகாட்டல்கள் மற்றும் எதிர்த்தரப்பினரின் கொடுகடன் முகாமைத்துவ முறைமைகளின் வழிகாட்டல்களினுள் வருவதை உறுதி செய்வதற்கு வெளிநாட்டு ஒதுக்கு முதலீடுகள் தொடர்பான இவ் இடர்நேர்வுகள் தொடர்ச்சியான அடிப்படையில் கண்காணிக்கப்பட்டு வருவதுடன் எந்தவொரு மீறுதல்களும் முகாமைத்துவத்திற்கு சுதந்திரமாக அறிவிக்கப்படும். நிதியல்லா இடர்நேர்வு தொடர்பாக இதேமாதிரியான இடர்நேர்வு முகாமைத்துவ செயல்முறை தொடர்பான திணைக்களங்களால் பின்பற்றப்படும். சார்பு ரீதியில் உயர் இடர்நேர்வுக்கு உள்ளாகக்கூடிய தெரிந்தெடுக்கப்பட்ட திணைக்களங்களின் நிதியல்லா இடர்நேர்வுகள் காலாண்டு அடிப்படையில் நிதியல்லா இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவுக்கு அறிவிக்கப்படுகிறது. எனினும், ஆபத்தான தன்மையிலான நிதியல்லா இடர்நேர்வுகள் ஏற்படுகின்ற போது இடர்நேர்வு உடைமையாளர்களால் நேரடியாகவும் உடனடியாகவும் அறிவிக்க முடியும். புதிய இடர்நேர்வு முகாமைத்துவ முறைமை, வங்கியிலுள்ள அனைத்து ஊழியர்களையும் இடர்நேர்வு அலுவலர்களாக ஈடுபடுத்தி வங்கியில் அனைத்து ஊழியர்களுக்கும் இடர்நேர்வு முகாமைத்துவத்தின் பொறுப்பை விரிவுபடுத்துவதன் மூலம் மத்திய வங்கியில் இடர்நேர்வு முகாமைத்துவ கலாசாரத்தை உருவாக்க உதவும். அறிவிக்கும் வழிமுறைகள் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ தொழிற்பாட்டை ஏற்பாடு செய்தல் ஆகிய இரு நியதிகளிலுமான உயர் நியமங்கள் இடர்நேர்வு முகாமைத்துவ செயல்முறையின் முக்கிய மூலங்களாகும்.

இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் இடர்நேர்வுகளை அடையாளம் காணுதல், மதிப்பிடல், கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடலாகும். மேலும், இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களத்திடம் பொதுப்படுகடன் முகாமைத்துவம் மற்றும் நாணயத் தொழிற்பாடுகள் போன்றவற்றுடன் தொடர்புடைய இடர்நேர்வுகளை முகாமை செய்கின்ற பொறுப்பும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவ்வகையான இடர்நேர்வுகள் பொதுப்படுகடன் தொடர்புடைய சந்தை இடர்நேர்வு (வட்டி வீத இடர்நேர்வு மற்றும் செலாவணி மாற்றுவீத இடர்நேர்வு) கடன் இடர்நேர்வு, திரவத்தன்மை இடர்நேர்வு மற்றும் மீண்டும் மீண்டும் ஏற்படக்கூடிய இடர்நேர்வு போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது. இதன்படி, வங்கியின் நிதியியல் இடர்நேர்வு முகாமைத்துவமானது இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களத்தில் மையப்படுத்தப்பட்டுள்ளதுடன் இது வங்கியின் குறிக்கோள்கள் முறையான இடர்நேர்வு ஆட்சிக் கட்டமைப்பிற்குள் அடையப்படுவதனை உறுதி செய்வதற்காக வலுவானதும் பரந்ததுமான இடர்நேர்வு கலாச்சாரமொன்று வங்கியில் பரவுவதற்கு பங்களிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களத்தின் செயற்பாடுகள் நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட விசாரணை நியதிகள் மற்றும் திணைக்களத்தின் இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பு என்பவற்றுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் தொலைநோக்கு மற்றும் பணி கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் நடுத்தரகால உபாயத்திட்டங்களை தயாரித்தல் போன்றவற்றுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதேநேரத்தில், அதிநவீன தகவல் தொழில்நுட்ப மாதிரிகளை கையாள்வதற்கான திறன்வாய்ந்த அலுவலர்கள் இல்லாமல் நிதியியல் இடர்நேர்வு முகாமைத்துவத்தினை கையாளுதல் பெரும்பாலும் சாத்தியமற்று காணப்படுவதால் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள இடர்நேர்வு முகாமைத்துவ செயற்பாடுகளை கட்டம் கட்டமான அடிப்படையில் மேற்கொள்ளும் நோக்குடன் இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை பெறுதல் மற்றும் திறன்களை விருத்தி செய்தல், செயன்முறை மற்றும் இயலுமை ஆற்றலை கட்டியெழுப்புதல் போன்ற செயற்பாடுகளில் இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் ஈடுபட்டுள்ளது. 2015 காலப்பகுதியில் இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களத்தின் முக்கிய தொழிற்பாடுகள் மற்றும் ஏனைய செயற்பாடுகள் போன்றவற்றின் முக்கிய விடயங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**(i) பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்திடமிருந்து நிதியியல் இடர்நேர்வினை முகாமை செய்யும் செயற்பாட்டைக் கையேற்றல்.**

இதுவரை, பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்தின் நடு அலுவலகத்தினால் கையாளப்பட்ட வெளிநாட்டு ஒதுக்குகளின் முதலீடுகளுடன் இணைந்திருக்கும் நிதியியல் இடர்நேர்வுகளை அடையாளம் காணுதல், மதிப்பிடுதல் மற்றும் கண்காணிக்கும் பணியானது அத்தகைய பணிகளை கையாள்வதற்கு தேவையான தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு மற்றும் திறன்களை இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் கொண்டிருப்பதால் அத்திணைக்களத்திற்கு மாற்றப்பட்டது. இதன்படி, சந்தை இடர்நேர்வு அதேபோன்று, இணைத்தரப்பு கொடுகடன் இடர்நேர்வு போன்றவற்றை முகாமை செய்யும் பொறுப்பு வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவ குழுவின் ஒப்புதலின் மூலம் ஆண்டின் இறுதியில் பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்திடமிருந்து இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களத்திற்கு மாற்றப்பட்டது.

சந்தை இடர்நேர்வானது இடர்நேர்வேற்புப் பெறுமதி மற்றும் மாற்றப்பட்ட காலவரையறை போன்றவற்றால் இணங்காணப்பட்டது. இடர்நேர்வேற்புப் பெறுமதி என்பது கொடுக்கப்பட்ட நம்பகவீச்சு மட்டத்தில் குறிப்பிட்ட காலப்பகுதிக்கான சொத்துப் பட்டியலின் ஒட்டுமொத்த பெறுமதி இழப்புக்களின் இடர்நேர்வு அளவீடாகும். மாற்றப்பட்ட காலவரையறையானது விளைவு வளையி மாற்றங்களுக்கான நிலையான வருமானம் மற்றும் பணச் சந்தை சொத்துப்பட்டியல்களின் உணர்திறனை மதிப்பிடுவதற்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது. இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களமானது பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்தினால் நடைமுறைக்கிடப்பட்ட இணைத்தரப்பு கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவத் முறைமையின் மூலம் இணைத்தரப்பு கொடுகடன் இடர்நேர்வினை முகாமை செய்வதனை தொடர்ந்து மேற்கொண்டது. இணைத்தரப்பு மதிப்பீடு மற்றும் அளவிடுதலானது நிதியியல் குறிகாட்டிகள், இணைத்தரப்பு கொடுகடன் தரமிடல்கள் மற்றும் அவற்றின் சந்தை வெளிப்பாடுகள் போன்றவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன. இதன்படி, ஆண்டுக்காலப்பகுதியில் அனேகமான இணைத்தரப்பு கொடுகடன் வரையறைகள் பிச், ஸ்டான்டட் அன்ட் புவர்ஸ் மற்றும் மூடிஸ் போன்றவற்றின் கொடுகடன் தரப்படுத்தல் மாற்றங்களுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் மீளாய்வு செய்யப்பட்டதுடன் மீளாய்வு செய்யப்பட்ட கொடுகடன் வரையறைகள் பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்தின் வியாபார வரையறையுடன் இணங்கிச்செல்லும் பொருட்டு பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டன. மேலும், ஆண்டுக் காலப்பகுதியில் இணைத்தரப்பு தெரிவுகள், வரையறை மீளாய்வுகளுடன் கூடிய கொடுகடன் இடர்நேர்வு மதிப்பீடுகள் என்பன வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவ குழுவிற்கு வழங்கப்பட்டன. கொடுகடன் வரையறைகளின் பின்பற்றுதலானது இணைத்தரப்பு கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவ முறைமை வழிகாட்டலுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

### (ii) நாளாந்த சந்தை தகவல்களின் பகுப்பாய்வு

இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் சந்தை திரவத்தன்மை, குறுங்கால வட்டி வீதங்களின் போக்கு, வெளிநாட்டு ஒதுக்குகளின் சொத்து ஒதுக்கீடு (நாணய ரீதியாகவும் உற்பத்தி ரீதியாகவும்), முகவர்களின் செயலாற்றம், அரச பிணையங்களுக்கான விளைவு வளையியின் போக்கு மற்றும் திறைசேரி நிதிய தேவைப்பாடு போன்றவற்றின் மீதான சந்தை தரவுகளையும் தகவல்களையும் பகுப்பாய்வு செய்வதுடன், நாளாந்த அடிப்படையில் ஆளுநருக்கு அறிக்கையிடுகின்றது. இத்தகைய பகுப்பாய்வுகள் உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம், பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம் மற்றும் பொதுப்படுகடன் முகாமைத்துவத் திணைக்களம் போன்றவற்றிலிருந்தான தகவல்களின் அடிப்படையிலானதாகும். மேலும், உலகலாவிய நிதியியல் சந்தைகள் தொடர்பிலான ஏதாவது முக்கிய அபிவிருத்திகளும் ஆளுநருக்கு அறிக்கையிடப்பட்டன.

### (iii) வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவ குழுவிற்கான பங்களிப்பு

குறிப்பாக ஆண்டின் இறுதியில், முன்னர் பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்தினால் கையாளப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவத் தொழிற்பாடுகள் மாற்றப்பட்டமையுடன் இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களமானது வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவ குழுவில் அவதானிப்பாளர் எனும் நிலையினை பெற்றுக் கொண்டதுடன் புதிய இடர்நேர்வு வழிமுறைகள், ஒதுக்கு முகாமைத்துவ சொத்துப்பட்டியலுள்ள சந்தை இடர்நேர்வு மற்றும் கொடுகடன் இடர்நேர்வு காரணிகள் மற்றும் தனியுரிமை வியாபாரம் போன்ற விடயங்கள் தொடர்பான சில காட்சிப்படுத்தலுடன் கூடிய விரிவுரைகளையும் மேற்கொண்டது. மேலும், ஆண்டுக் காலப்பகுதியில் இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவ குழுவிற்காக சில கலந்துரையாடல் பத்திரங்களை சமர்பித்திருந்தது.

### (iv) விசேட ஒப்படைகள்/ விடய பத்திரங்கள்

வங்கிகளின் திரவத்தன்மை, வெளிநாட்டு ஒதுக்குகளின் வியாபார செயற்பாடுகள், உள்நாட்டு நிதியங்களின் தொழிற்பாடுகள் மற்றும் இலங்கை மத்திய வங்கியால் தொகுக்கப்பட்ட வட்டி வீதங்கள் போன்ற விடயங்கள் தொடர்பான விசேட ஒப்படைகளும் விடய பத்திரங்களும் மேற்கொள்ளப்பட்டு ஆளுநருக்கு சமர்ப்பிக்கப்பட்டன.

### (v) நிதியல்லா இடர்நேர்வு முகாமைத்துவ குழுவிற்கான பங்களிப்பு.

ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்தளவான நிதியல்லா இடர்நேர்வுகளின் வெளிப்பாடுகளை கொண்டுள்ள திணைக்களங்களின் நிதியல்லா இடர்நேர்வுகளை மேற்பார்வை செய்யும் நோக்குடன் 2015 ஒத்தோபரில் இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் ஆளுநரின் தலைமையில் நிதியல்லா இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவொன்றினை ஆரம்பித்தது. இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் நிதியல்லா இடர்நேர்வுகளுடன் தொடர்பான இடர்நேர்வுகளை நிதியல்லா இடர்நேர்வு முகாமைத்துவ குழுவிற்கு அறிக்கையிடுவதற்காக புதியதொரு இடர்நேர்வு அணுகுமுறையினை வடிவமைத்திருந்ததுடன் உறுப்பு திணைக்களங்களிடமிருந்தான அத்தகைய தகவல்கள் தொகுக்கப்பட்டு நிதியல்லா இடர்நேர்வு முகாமைத்துவ குழுவிற்கான சுருக்க அறிக்கை தயாரிக்கப்பட்டது. இடர்நேர்வு முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர், கூட்டங்களை ஒழுங்குபடுத்துதல், அறிக்கை தயாரித்தல் மற்றும் ஏனைய உறுப்பு திணைக்களங்களிடமிருந்தான தகவல்களை இடர்நேர்வு அணுகுமுறைக்குள் தொகுத்தலும் இணைத்தலும் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவிற்கு சமர்ப்பித்தல் போன்ற வழிகளில் குழுவிற்கான செயலாளராக பணியாற்றினார்.

### (vi) தேவையான உட்கட்டமைப்புக்களை கட்டியெழுப்புதல்

திணைக்களத்தின் தேவையான உட்கட்டமைப்புக்களை நிவர்த்தி செய்வதற்காக, இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் புளும்பேர்க் இடமிருந்து பணிகளை பெற்றுக்கொண்டது. புளும்பேர்க் முறைமையானது சந்தை இடர்நேர்வு மதிப்பீடு மற்றும் இணைத்தரப்பு இடர்நேர்வு மதிப்பீடு போன்றவற்றிற்கு வசதியளித்ததுடன் சந்தைத் தரவுகள், உலகலாவிய செய்திகள் மற்றும் கொடுகடன் தரப்படுத்தல்கள் போன்ற அதேநேர நிதியியல் தகவல்களை பெற்றுக்கொள்வதற்கும் வசதியளித்தது. ரொய்ட்டர் செய்தி திரையும் நடைமுறை உலகளாவிய செய்திகளை வழங்கியது.

### (vii) திறன்களின் அபிவிருத்தியும் அறிவினை பகிர்ந்துகொள்ளும் செயற்பாடுகளிலான ஈடுபாடும்

அறிவினை பகிர்ந்துகொள்ளும் நோக்கில், இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களமானது இடர்நேர்வு முகாமைத்துவம் தொடர்பில் திணைக்களமட்டத்திலான காட்சிப்படுத்தல்களுடன் கூடிய விரிவுரைகள் மற்றும் கட்டுரையாக்கம் போன்றவற்றை தன் அலுவலர்கள் மூலம் முன்னெடுத்திருந்தது. திணைக்கள அலுவலர்களினால் மேற்கொள்ளப்பட்ட காட்சிப்படுத்தல்களுடன் கூடிய விரிவுரைகள் மற்றும் கலந்துரையாடல்கள் திணைக்களத்தின் அலுவலர்களுக்கிடையில் அறிவினை பகிர்ந்து கொள்வதற்கான தளமொன்றினை வழங்கின. மேலும், வெளிநாட்டு பயிற்சிகளில் கலந்துகொண்ட அலுவலர்களினால் அறிவானது பகிர்ந்துகொள்ளப்பட்டது. வெளிநாட்டு ஒதுக்கு முதலீட்டுடன் தொடர்புடைய இடர்நேர்வு முகாமைத்துவம் தொடர்பான அறிவினை மேம்படுத்தும் நோக்குடன், இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களமானது திணைக்கள அலுவலர்களினால் ஏனைய மத்திய வங்கிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட கற்கை விஜயங்களை ஒழுங்குபடுத்தியதற்கு மேலதிகமாக, வெளிநாட்டு நிபுணர்களினை வளவாளராகக் கொண்ட சில காட்சிப்படுத்தல்களுடன் கூடிய விரிவுரைகளை ஒழுங்குபடுத்தியதுடன் இது மிக விரிவான இடர்நேர்வு முகாமைத்துவ முறைமை அனுபவத்தைப் பெற்றுக்கொடுத்தது.

## 25. செயலகம்

செயலகத் திணைக்களமானது மத்திய வங்கி ஆரம்பிக்கப்பட்ட நேரத்தில் முதலில் நிறுவப்பட்ட திணைக்களங்களில் ஒன்றாகும். செயலகத் திணைக்களத்தின் முக்கிய தொழிற்பாடுகளாவன பொருட்கள் மற்றும் பணிகளின் கொள்வனவு; ஓய்வூதிய நிதியங்களை நிருவகித்தல்; விடுப்புத் தொடர்பாக கொள்கைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் ஏனைய பொது நிர்வாக விடயங்களை கையாளுதல்; பட்டபின் கற்கைகள், வெளிநாட்டுப் பயிற்சிகள் மற்றும் வெளிநாட்டுப் பயணங்கள்; போன்றவை தொடர்பான கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல், விழாக்களை ஒழுங்குபடுத்தல் போன்ற பொதுப்பணிகளை ஏற்பாடு செய்தல்; வழக்கற்றுப்போன மற்றும் பாவனைக்குதவாத சாதனங்கள் மீதான அளவீட்டுச் சபை தொடர்பான நடவடிக்கைகளை கையாளுதல்; மற்றும் ஆளுநருக்கு தேவையான பணிகளை வழங்குதல்.

**(அ) பொருட்கள் மற்றும் பணிகளின் கொள்வனவு:**

2015 காலப்பகுதியில் செயலகத் திணைக்களம் சரியான நேர திட்டமிடல்களுடன் பிரதானமாக விலைக்கோரல்களினூடாக ரூ.159.03 மில்லியன் பெறுமதியான மூலதனம் மற்றும் மூலதனமல்லாப் பொருட்கள் மற்றும் பணிகளைக் கொள்வனவு செய்தது. இலங்கை மத்திய வங்கிக்கு பொருட்கள் மற்றும் பணிகளின் நேரம் பிந்தாத வழங்கலை உறுதிசெய்யும் பொருட்டு, கொள்வனவுத் திட்டமிடல் 2015 இலும் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது. இதன் விளைவாக, செயலகத் திணைக்களம் ஆண்டிற்கு திட்டமிடப்பட்ட மொத்தக் கொள்வனவுத் தேவைப்பாடுகளில் 88 சதவீதத்தினை நிறைவு செய்யக்கூடியதாக இருந்தது. மேலும், செயலகத் திணைக்களம் பகிரங்கப் பொறுப்புக் காப்புறுதி உள்ளடங்கலான மத்திய வங்கியின் அனைத்துச் சொத்துக்களுக்கும் செலவுச் சிக்கனமானதும் அனைத்தையுமுள்ளடக்கியதுமான காப்புறுதியினைப் பெற்றுக் கொண்டது. மேலும், செயலகத் திணைக்களத்தின் அலுவலர்கள் தற்போதுள்ள நடைமுறைகளின் கீழ் ஏனைய திணைக்களங்களால் மேற்கொள்ளப்படும் பொருட்கள் பணிகளுக்கான கொள்வனவின் மீதான கேள்விச் சபை மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டுக்குழு போன்றவற்றில் பங்குபற்றினர்.

**(ஆ) ஓய்வூதிய நிதியங்களை நிருவகித்தல்:**

செயலகத் திணைக்களம் மத்திய வங்கியின் ஓய்வூதியத் திட்டம், விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம், விதுரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் மற்றும் மத்திய வங்கி ஓய்வூதிய நிதியம் என்பன தொடர்பான கொடுப்பனவு மற்றும் ஏனைய தொடர்பானவற்றையும் நிருவகிக்கிறது. இத்திட்டத்தின் கீழ் 2000 பயனாளிகள் தொடர்புபட்டிருந்தனர்.

**(இ) விடுப்புத் தொடர்பாக கொள்கைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் ஏனைய பொது நிர்வாக விடயங்களை கையாளுதல்:**

2015 காலப்பகுதியில் செயலகத் திணைக்களம் ஊழியர்களின் தனிப்பட்ட மற்றும் அலுவலக வெளிநாட்டுப் பயணங்களுக்காக 432 அனுமதிகளை வழங்கியுள்ளது. ஆண்டுக் காலப்பகுதியில் செயலகத் திணைக்களமானது வியாபார ஒன்றியங்கள், கழகங்கள், அமைப்புக்கள் மற்றும் நிறுவனங்களுக்கு வழங்கிய பணிகள் தொடர்பான விடயங்களை மேற்கொண்ட வேளையில் விடுப்பு விதிகள் மற்றும் ஏனைய நிர்வாக விதிகள் தொடர்பில் ஊழியர்களின் கோரிக்கைகளுக்கு முறையான பதிலிறுத்தல்களை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளையும் எடுத்தது.

**(ஈ) பட்டப்பின் கற்கைகள், வெளிநாட்டுப் பயிற்சிகள் மற்றும் வெளிநாட்டுப் பயணங்கள் போன்றவை தொடர்பான கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல்:**

2015 ஆண்டுக் காலத்தில், செயலகத் திணைக்களமானது 43 ஊழியர்களின் பட்டப்பின் கற்கைகளுக்கான கொடுப்பனவை வழங்கியிருந்ததுடன், 430 ஊழியர்களுக்கான குறுகியகால வெளிநாட்டு பயிற்சிகளுக்கான பயிற்சி படிகளையும் வழங்கியிருந்தது. மேலும், 2015இல், அங்கீகரிக்கப்பட்ட நிபுணத்துவ அமைப்புக்களிற்கு ஊழியர்களினால் மேற்கொள்ளப்பட்ட 177 சந்தாப்பணங்களை மீளளித்தது.

**(உ) வழக்கற்றுப்போன மற்றும் பாவனைக்குதவாத உபகரணங்கள் மீதான அளவீட்டுச் சபை தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், நிகழ்வுகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் அஞ்சல் அறைப் பணிகளை வழங்குதல்:**

ஆண்டுக் காலத்தில், இலங்கை மத்திய வங்கியின் கைநூலில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளுக்கு அமைய, வழக்கற்றுப்போன மற்றும் பாவனைக்குதவாத அலுவலக உபகரணங்களை அகற்றுவதற்காக அளவீட்டுடன் தொடர்பான நடவடிக்கைகள் இலங்கை மத்திய வங்கியின் தலைமைக் காரியாலயத்தில் நடாத்தப்பட்டன. 2015இல் செயலகத் திணைக்களம் புதுவருட ஆரம்ப வைபவம் மற்றும் நீண்டகால பணிக்கான விருது வழங்கும் வைபவம், 1996ஆம் ஆண்டு நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் இறந்தவர்களை நினைவுகூரும் வைபவம் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் 65ஆம் ஆண்டு நிறைவு கொண்டாட்ட வைபவம் போன்ற பல்வேறு ஞாபகார்த்த நிகழ்ச்சிகளினை ஒருங்கிணைத்து ஒழுங்குமுறைப்படுத்தியது. 2015இல், செயலகத் திணைக்களமானது அதன் அஞ்சல் அறை பணியூடாக நாட்டிற்குள்ளும் வெளிநாட்டிற்கும் 98,777 அஞ்சல்களையும் 13,103 விரைவு அஞ்சல்களையும் அனுப்புவதற்கு வசதிப்படுத்தியுள்ளது.

**(ஊ) ஆளுநருக்குத் தேவையான பணிகளை வழங்குதல்:**

ஆண்டுக் காலப்பகுதியில், செயலக திணைக்களமானது ஆளுநரின் தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் செயலாற்றத்தினை வசதிப்படுத்துவதற்காக செயலக மற்றும் உபசரணைப் பணி உதவிகளை வழங்கியது. வழங்கப்பட்ட செயலக உதவிகளாக நியமனங்கள் மற்றும் கூட்டங்களை அட்டவணைப்படுத்தல், காட்சியுடன் கூடிய விரிவுரைகள், பேச்சுக்கள், குறிப்புக்கள், கட்டுரைகள் போன்றவற்றினை தொகுத்தலும், தயாரித்தலும், நிதிச் சந்தை தகவல்கள் ஊடாக செய்திகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை வழங்குதல் போன்றவற்றை உள்ளடக்கியிருந்தன. உபசரணைப் பணிகள் ஆளுநரின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயணங்கள் மற்றும் ஆளுநர் மற்றும் உதவி ஆளுநர்களின் விருந்துபசாரப் பணிகள், ஆளுநர் மற்றும் வங்கியின் மிக முக்கிய நபர்களின் விஜயங்களுக்கான பணியினை வழங்குதல் போன்றவற்றை உள்ளடக்கியிருந்தது.

## 26. பாதுகாப்புப் பணிகள்

பாதுகாப்புப் பணிகள் திணைக்களமானது, இவ்வாண்டுக் காலப்பகுதியில் இலங்கை மத்திய வங்கியின் ஊழியர்கள், கட்டடங்கள், சொத்துக்கள் மற்றும் தருவிக்கப்பட்ட நாணயங்களை கொண்டு செல்லல் போன்றவற்றிற்கான பாதுகாப்பினை உறுதிப்படுத்தியது. பாதுகாப்புப் பணிகளின் வலுப்படுத்தலானது அடிப்படையாக இரண்டு முக்கிய துறைகளுடன் அதாவது கீழே சுருக்கிக் கூறப்பட்டவாறு முறைமைகளின் மேம்பாடு மற்றும் பயிற்சி முறைகள் என்பனவற்றுடன் தொடர்புபட்டதாகவுள்ளது.

### 26.1 முறைமைகளின் மேம்பாடு

**(அ) மையப்படுத்தப்பட்ட ஒருங்கிணைக்கப்பட்ட நுழைவு வழி கட்டுப்பாட்டு முறைமைகள்**

2015இல், வசதிகள் முகாமைத்துவ திணைக்களம் மற்றும் தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் ஆகியவற்றின் உதவியுடன் நவீனத்துவம் வாய்ந்த மையப்படுத்தப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்ட நுழைவு வழி கட்டுப்பாட்டு முறைமையினை நிறுவும் வேலைகளை பாதுகாப்புப் பணிகள் திணைக்களம் பூர்த்திசெய்ய முடிந்தது.

**(ஆ) தீ கட்டுப்பாட்டு முறைமை**

இலங்கை மத்திய வங்கியின் புதிய வாகனத் தரிப்பிடத்திற்கான தீ கட்டுப்பாட்டு முறைமைகளை நிறுவுதல் நிறைவு செய்யப்பட்டது.

மேலும், அனுராதபுரம் பிரதேச அலுவலகத்தில் தற்போதுள்ள பழைய முறைமைக்கு பதிலாக புதிய தீ எச்சரிக்கை முறைமை நிறுவப்பட்டது. 2015 இல், இராஜகிரியவிலுள்ள வங்கித்தொழில் கற்கைகள் நிலையத்தின் பின்புறப்பகுதிக்கான தீ கட்டுப்பாட்டு முறைமையை நிறுவுவதற்கான முன்னெடுப்புக்கள் ஆண்டுக்காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டன. தலைமை அலுவலகத்திலும் வேறு வெளிவளாகத்திலும் அமைந்திருக்கும் அனைத்து தீ அணைப்பு உபகரணங்களும் ஒழுங்குமுறையில் சோதனை செய்யப்பட்டு திருத்தப்பட்டு மற்றும் மீண்டும் அதே இடத்தில் வைக்கப்பட்டன.

**(இ) சிசிரிவி கண்காணிப்பு முறைமை**

இராஜகிரியவின் புதிய பின்புறம், தலைமையலுவலகத்திலுள்ள புதிய வாகன தரிப்பிடம், அனைத்து பிரதேச அலுவலகங்கள் மற்றும் விடுமுறைக்கால விடுதிகள் போன்றவற்றிற்கான சிசிரிவி கண்காணிப்பு முறைமையை நிறுவும் வேலைகள் ஆண்டுக் காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டன.

**(ஈ) தடங்கலற்ற வியாபாரத் திட்டம்**

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் மற்றும் தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் என்பவற்றினால் நடாத்தப்பட்ட தடங்கலற்ற வியாபாரத் திட்டப் பயிற்சிகளில் பாதுகாப்புப் பணிகள் திணைக்களமானது பங்குபற்றி ஒத்துழைப்பினை வழங்கியது.

**(உ) பாதுகாப்பு முறைமை மதிப்பீடு**

மத்திய வங்கியின் வேண்டுகோளின் படி பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்ட நிபுணத்துவ குழுவொன்று தொடர்பான புதிய தொழிநுட்பத்துடன் நிறுவப்பட்டுள்ள புதிய முறைமை தொடர்பாக விதந்துரைப்புக்களை மேற்கொள்வதற்காக தற்போதுள்ள பாதுகாப்பு முறைமை தொடர்பான மதிப்பீடொன்றினை ஆரம்பித்தது.

**26.2 பயிற்சிகள்**

**(அ) தீ தடுப்பு, தீ எதிர்ப்பு மற்றும் முதல் உதவி நிகழ்ச்சித்திட்டங்கள்**

தீ அணைப்புப் பணிகள் திணைக்களம், சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் மற்றும் அனர்த்த முகாமைத்துவ மையம் போன்றவற்றின் உதவியுடன் இலங்கை மத்திய வங்கியிலுள்ள அனைத்துத் திணைக்களங்களிலுமிருந்து 70 தீ அணைப்பு மேற்பார்வையாளர்களை தெரிந்தெடுத்து அவர்களுக்கு தீ தடுப்பு, தீ எதிர்ப்பு, முதலுதவி மற்றும் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான இரண்டு நாள் பரந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது. மேலும் 2015 ஏப்பிறலில் விமானப்படை மற்றும் கொழும்பு தீயணைப்பு படை போன்றவற்றின் உதவியுடன் தலைமையலுவலகத்திலுள்ள அனைத்து அலுவலர்களுக்கும் தீ எதிர்ப்பு மற்றும் தீ பயிற்சி மீதான செயன்முறை விளக்கம் வழங்கப்பட்டது. தீ எதிர்ப்பு துறையின் வினைத்திறனை அதிகரிக்கும் நோக்கில் மாலபே சினிக் மரிடைம் கம்பசினால் மேற்கொள்ளப்பட்ட முன்மாதிரியான தீ எதிர்ப்பு நிகழ்ச்சித்திட்டமொன்றை தொடர்வதற்காக மூன்று பாதுகாப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர்.

**(ஆ) திறன்கள் மற்றும் தகுதிகளைக் கட்டியெழுப்புதல்**

முக்கியமான அமைவிடங்கள் முக்கிய பிரமுகர்களைக் கையாளுதல், பாதுகாப்புக் கடமைகள் மற்றும் பொதுமக்களுடனான தொடர்புகள் போன்றவற்றில் பாதுகாப்பு அலுவலர்களின் திறன்கள் மற்றும் தகுதிகளை மேம்படுத்தும் பொருட்டு இரண்டு நாட்கள் வதிவிட நிகழ்ச்சித்திட்டமானது 30 பாதுகாப்பு அலுவலர்களுக்கு பெருந்தோட்ட முகாமைத்துவத்திற்கான தேசிய நிறுவனத்தில் நடாத்தப்பட்டது. பாதுகாப்பு அலுலர்களின் திறன்களை மேம்படுத்தும் நோக்கில், பாதுகாப்பு பணிகள் திணைக்களமானது அதன் அலுவலர்களுக்கு அநேக கல்வி செயற்றிட்டங்களை ஒழுங்குபடுத்தியது. அக்கல்வி செயற்றிடங்கள் பாதுகாப்பு , தகவல் தொழில்நுட்பம், நகர வேளாண்மை, நாணயத்தின் பாதுகாப்புப் பண்புகள் மற்றும் தலைமைத்துவம் போன்ற பண்புகளை உள்ளடக்கியிருந்தது. ஆண்டுக் காலப்பகுதியில் பாதுகாப்புப் பணிகள் திணைக்களத்தின் அலுவலர்களின் அறிவினை மேம்படுத்துவதற்காக மூன்று அலுவலர்களுக்கு பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவம் மீதான ஐந்து வெளிநாட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டன.

**(இ) கட்டுப்பாட்டு அறை முகாமைத்துவத்திற்கான விசேட பயிற்சி**

ஆண்டுக் காலப்பகுதியில் கட்டுப்பாட்டு அறை செயற்பாடுகளின் வினைத்திறன் மற்றும் காத்திரதன்மையினை மேம்படுத்துவதற்காக பாதுகாப்பு பணிகள் திணைக்களத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 29 பாதுகாப்பு அலுவலர்களுக்கு கட்டுப்பாட்டு அறை முகாமைத்துவம் தொடர்பான விசேட செயல்முறை மற்றும் கோட்பாட்டு பயிற்சியொன்று வழங்கப்பட்டது.

**(இ) ஆயுதங்களைக் கையாளுதல் மற்றும் நேரடித் தீயணைப்பு**

ஆண்டின் இறுதி காலாண்டுப் பகுதியில் இலங்கை தரைப்படையுடன் இணைந்து அனைத்து பாதுகாப்பு அலுவலர்களுக்கும் ஆயுதங்களைக் கையாளுதல் மற்றும் நேரடி தீயணைப்புப் பயிற்சிகள் நடாத்தப்பட்டன.

## 27. அலுவலர் பணிகள் முகாமைத்துவம்

அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களம் ஆண்டு முழுவதும் அனைத்து பயன்பெறுநர்களுக்கும் வினைத்திறனுடனும் பயனுறும் விதத்திலும் நலன்புரி வசதிகளைத் தொடர்ந்தும் வழங்கியது. இத்தகைய நலன்புரி வசதிகள் அலுவலர் வீடமைப்பு (ஈட்டு) கடன் திட்டம், சேம நிதியக் கடன் திட்டம் மற்றும் அலுவலர் நன்மைகள் திட்டம் என்பவற்றின் கீழ் கடன்களை வழங்குதல், தொழில்தருநர் பங்களிப்பு மருத்துவ நன்மைகள் திட்டத்தின் கீழ் செலவுகளை மீளளித்தல் மற்றும் உணவக வசதிகளை வழங்குதல் என்பவற்றை உள்ளடக்கியிருந்தன. மருத்துவ நன்மைகள் திட்டத்தின் கீழ் 2015இன் இறுதியில் உள்ளவாறு ஊழியர்கள், ஓய்வூதியம் பெறுவோர், விதவைகள்/ விதுரர்கள் மற்றும் அவர்களின் பதிவு செய்யப்பட்ட தங்கியிருப்போர் ஆகியோரை உள்ளடக்கி ஏறத்தாழ 10,500 இற்கும் மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட நன்மைபெறுநர்கள் பதிவு செய்யப்பட்டிருந்தனர்.

2015ஆம் ஆண்டு காலப்பகுதியில் அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களம் வீடமைப்புக் கடன்கள், சேம நிதியக் கடன்கள், ஊர்திக் கடன்கள், கணனிக் கடன்கள் மற்றும் அலுவலர் நன்மைகள் திட்டத்தின் கீழான ஏனைய கடன்களை உள்ளடக்கி 1,828 கடன்களை வழங்கியது. தொடர்பான அனைத்து ஆவணங்களுடனும் விண்ணப்பதாரரால் விண்ணப்பங்கள் சமர்பிக்கப்பட்ட பின்னர் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றினுள் இக்கடன்களை வழங்குவதற்கான வழிமுறைகளை அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது. திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட கடன் கண்காணிப்பு முறைமை ஊழியர்களுக்கான கடன்களின் பகிர்ந்தளிப்பினை வினைத்திறனுடன் மேற்பார்வை செய்வதனை இயலச்செய்தது.

இலங்கை மத்திய வங்கியின் உணவகம் மத்திய வங்கி அலுவலர்களுக்கு உணவு வழங்குவதனைத் தொடர்ந்தும் மேம்படுத்தியது. மேலும், உடன் பால் மற்றும் மூலிகைப்பானம் போன்றவற்றின் தேவையை அறிந்துகொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட அளவீட்டின் அடிப்படையில் அலுவலர் பணிகள் திணைக்களத்தின் தேநீர் வழங்கல்/ மூலிகைப்பானம் வழங்கல் என்பனவற்றுடன் இணைந்து காலை மற்றும் மாலை நேரங்களில் உடன் பால் வழங்கப்பட்டது. 2016ஆம் ஆண்டுப் பகுதியில் உணவகச் சூழலை மேம்படுத்துவதற்கும் உணவக வசதிகளை மேம்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களம் மருத்துவ நலன்புரித் திட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட அனைத்து நன்மைபெறுநர்களினாலும் உறப்பட்ட மருத்துவச் செலவினங்களைத் தொடர்ந்தும் மீளளித்தது.

2015இல் மருத்துவச் செலவின மொத்த மீளளிப்புத் தொகை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2 சதவீதத்தினால் அதிகரித்தது. நாணயச்சபையின் ஒப்புதலின் மூலம், 2016.01.01இன் ஆரம்பத்திலிருந்து மருத்துவ நன்மைகள் திட்டத்தின் கீழான செலவுகளின் வரையறை அதிகரிக்கப்பட்டது. பிரபல்யமான தனியார் வைத்தியசாலைகளிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளுதல் போன்ற வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்வதன் மூலம் மருத்துவ நிலையத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள மருத்துவ வசதிகள் பணிநேரங்களில் மத்திய வங்கி அலுவலர்களுக்கு கிடைக்கச் செய்யப்பட்டன. மேலும், மருத்துவப் பரிசோதனைகளும் ஆய்வுகூட வசதிகளும் நியாயமான கட்டணங்களில் மருத்துவ நிலையத்தில் வழங்கப்பட்டன. ஆண்டு காலப்பகுதியில், அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களம் மத்திய வங்கி அலுவலர்களின் முக்கிய நலப் பிரச்சனைகள் தொடர்பான அறிவினை அதிகரிப்பதற்காக மூன்று விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது.

## 28. புள்ளிவிபரவியல்

புள்ளிவிபரவியல் திணைக்களம் 2015இல் குறுங்கால முக்கிய பேரண்டப் பொருளாதார மாறிகளின் எதிர்வுகூறல் மற்றும் மதிப்பிடல்; விலை மற்றும் கூலிச் சுட்டெண்கள், இலங்கை சுபீட்சச் சுட்டெண் மற்றும் மாகாண ரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பனவற்றைத் தொகுத்தல்; நாணயக் கொள்கைத் தீர்மானங்களை வகுக்கும் செயன்முறைக்கு வசதியளிப்பதற்காக பொருளாதார ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த முன்னோக்கிய தரவுகளைச் சேகரிப்பதற்காக அளவீடுகளை நடத்துதல்; நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமையினூடாக தரவுகளைச் சேகரித்து செயன்முறைப்படுத்தல்; வெளியீடுகள் மற்றும் பத்திரிகை வெளியீடுகளூடாக புள்ளிவிபரங்களையும் தகவல்களையும் உரிய நேரத்தில் பரப்புதல் மற்றும் முக்கிய உலகளாவிய தரமிடலில் இலங்கையின் நிலையினை மேம்படுத்துவதற்காக பங்களித்தல் ஆகிய முக்கிய தொழிற்பாடுகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. மேலும், புள்ளிவிபரவியல் திணைக்களம் பொதுவான பொருளாதார ஆராய்ச்சித் தரவுத் தளத்தினை அபிவிருத்தி செய்வதிலும் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு அமைப்புக்களுடன் ஆண்டு முழுவதும் இயலாற்றலைக் கட்டியெழுப்பும் முன்முயற்சிக்கான மூலவள தொடர்பாளராகவும் தொழிற்பட்டது.

### 28.1 முக்கிய பேரண்டப் பொருளாதார மாறிகளை எதிர்வுகூறல்

பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டினைப் பேணுவது தொடர்பான இலங்கை மத்திய வங்கியின் பொதுவான இலக்கிற்கு வசதியளிக்கும் விதத்தில் புள்ளிவிபரவியல் திணைக்களம் நுகர்வோர் விலைப் பணவீக்கத்தினையும் குறுங்கால அடிப்படையில் பொருளாதார வளர்ச்சியையும் எதிர்வுகூறுகிறது. இப்பெறுபேறுகள் நாட்டின் நாணயக் கொள்கை வடிவமைப்பு நோக்கங்களைக் கருத்தில் கொண்டு நாணயக் கொள்கைக் குழுவிற்கும் நாணயச் சபைக்கும் சமர்ப்பிக்கப்பட்டன. மேலும், பணவீக்க எறிவுகள், திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட அளவீட்டில் கண்டறியப்பட்டவற்றினூடாக பிரதிபலிக்கப்பட்டவாறு உள்ளீடு மற்றும் வெளியீட்டு விலைகளில் ஏற்படும் அபிவிருத்திகளுடன் சேர்ந்து உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோர் விலைகளின் அசைவுகளை அடிப்படையாகக் கொண்ட பணவீக்கத்தின் மீது தாக்கத்தைக் கொண்டிருக்கும் மாறிகள் மீது பெறப்பட்ட மற்றும் உணரப்பட்ட மாற்றங்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் அடிக்கடி இற்றைப்படுத்தப்பட்டன.

எதிர்வுகூறப்படும் நேர பொறிமுறையினைப் பொறுத்து பரந்தளவிலான பணவீக்க எதிர்வுகூறல் முறைமைகள் பயன்படுத்தப்பட்டன. குறுங்கால பணவீக்க எதிர்வுகூறல்கள் முக்கியமாக அண்மைய விலைப் போக்குகளையும் சந்தை அபிவிருத்திகளுடன் இணைந்த எதிர்பார்க்கப்பட்ட குறுங்கால விலை அசைவுகளையும் அடிப்படையாகக் கொண்டிருந்தன. நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலம் வரையான எதிர்வுகூறல்கள் பொருளாதார அளவையியல் நுணுக்கங்களை அடிப்படையாகக் கொண்டிருந்த வேளையில் பணவீக்கத்தின் மீது வழங்கல் மற்றும் கேள்விப்பக்கத் தாக்கம் இரண்டையும் பிரதிபலிக்கும் புதிய மாறிகளைக் கண்டறியும் முயற்சிகள் தொடர்ந்தும் மேற்கொண்டன.

அதேவேளை, தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களம் 2015 நவெம்பரில் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் என்ற புதிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை வெளியிட்டது. தேசிய நுகர்வோர் நிலைச் சுட்டெண் விலை அபிவிருத்திகளின் உள்ளடக்கப் பிரதேசத்தினை முழுத் தீவிற்கும் விரிவுபடுத்தியது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் கொழும்பு நகர்ப்புறத்தில் அவதானிக்கப்பட்ட விலை நடத்தையினை மட்டுமே உள்ளடக்கியிருந்தது. புள்ளிவிபரவியல் திணைக்களம் கொள்கை வகுப்பு நோக்கங்களுக்காக தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் இரண்டிலும் ஏற்படுகின்ற விலை அபிவிருத்திகளைத் தொடர்ந்தும் கண்காணித்தது.

பொருளாதாரத்தின் ஒவ்வொரு துணை நடவடிக்கைகளுடனும் தொடர்பான முதலாந்தர மற்றும் இரண்டாந்தரத் தரவுகளைப் பயன்படுத்தி காலாண்டு மற்றும் வருடாந்த அடிப்படையில் மொ.உ.உற்பத்தியின் துறைவாரியான உள்ளமைப்புடன் வளர்ச்சி எதிர்வுகூறல்கள் தயாரிக்கப்பட்டன. பொருளாதாரத்தின் துணை நடவடிக்கைகளுடன் தொடர்பான குறிகாட்டிகள், குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்ட எதிர்வுகூறல்களைத் தொகுப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட வேளையில் எறிவுகளின் துல்லியமான தன்மையினை அபிவிருத்தி செய்வதற்கான மாதிரிகளை அடிப்படையாகக் கொண்ட எதிர்வுகூறல்கள் புள்ளிவிபரவியல் நுணுக்கங்களைப் பயன்படுத்தின. குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்ட எதிர்வுகூறல் முறை 2010ஆம் ஆண்டினை மீள்தளப்படுத்திய மொ.உ.உற்பத்தியினை அடிப்படையாகக் கொண்ட புதிய பகுப்பாய்வுடன் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டது.

### 28.2 விலை மற்றும் கூலிச் சுட்டெண்களைத் தொகுத்தல்

ஒன்பது மாகாணங்களுக்குமான மாகாண ரீதியான நுகர்வோர் விலைச் சுட்டெண்களும் தீவு முழுவதனையும் உள்ளடக்கிய கூட்டு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணும் திணைக்களத்தினால் மாதாந்த அடிப்படையில் தொகுக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டன. மாகாண மட்டங்களில் விலை அசைவுகளை ஒப்பிடுகின்ற நோக்கத்திற்காக, நாடளாவிய தரவுச் சேகரிப்பு முறைமையின் விலைத் தரவு, ஒரு சில மேலதிக மூலங்களிலிருந்தான தரவுடன் சேர்த்து மாகாண ரீதியான நுகர்வோர் விலைச் சுட்டெண்களைத் தொகுப்பதில் பயன்படுத்தப்பட்டது.

முதலாந்தரச் சந்தை மட்டங்களில் உற்பத்தியாளர் மற்றும் மொத்த விற்பனை விலைகளின் அசைவுகளை அளவிடுவதற்காக மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணும் மாதாந்த அடிப்படையில் தொகுக்கப்பட்டது. மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணிற்கான தரவு நாடளாவிய தரவுச் சேகரிப்பு முறைமையினூடாகவும் ஏனைய தொடர்பான அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களினூடாகவும் சேகரிக்கப்பட்டன.

விலைச் சுட்டெண்களுக்குப் புறம்பாக, புள்ளிவிபரத் திணைக்களம் பொருளாதாரத்தில் சம்பளங்கள் மற்றும் கூலிகளின் அசைவுகளை மதிப்பிடுவதற்காக கூலி வீதச் சுட்டெண்களையும் தொகுக்கின்றது. திணைக்களம் அரச துறை ஊழியர்களுக்கான பெயரளவு மற்றும் உண்மைக் கூலி வீதச் சுட்டெண்களையும் முறைசார்ந்த தனியார் துறை ஊழியர்களுக்கான உண்மைக் கூலி வீதச் சுட்டெண்களையும் கணிப்பிடுகின்றது. முறைசாரா தனியார் துறை கூலி அசைவுகள் நாடளாவிய தரவுச் சேகரிப்பு முறைமையினூடாக சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் முறைசாரா தனியார் துறை கூலி வீதச் சுட்டெண்களின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

புள்ளிவிபரவியல் திணைக்களம், கொழும்பு மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட விலைத் தரவுகளைப் பயன்படுத்தி கடந்த ஒரு சில ஆண்டுகளாக காணி விலைச் சுட்டெண்ணினை உருவாக்கி வருகின்றது. கொழும்பு, தெஹிவளை, ஹோமாகம, கடுவெல மற்றும் கெஸ்பாவா ஆகிய ஏறத்தாழ 50 துணைப் பிரிவுகளிலுள்ள வதிவிடங்கள், வர்த்தக மற்றும் கைத்தொழில் ஆதனங்கள் தொடர்பான தரவுகள் இந்நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்டன. ஒருமைத்தன்மையினைப் பேணும் பொருட்டு

வதிவிடங்கள், வர்த்தக மற்றும் கைத்தொழில் விலைத் தரவுகளுக்காக மூன்று தனித்தனியான சுட்டெண்கள் தொகுக்கப்பட்ட வேளையில் மூன்றினதும் இலகுவான சராசரி காணி விலைச் சுட்டெண்ணின் ஒட்டுமொத்தத் தன்மையினை எடுத்துக்காட்டியது. காணி விலைச் சுட்டெண் அரையாண்டு ரீதியில் தொகுக்கப்பட்டது.

### 28.3 இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணினைத் தொகுத்தல்

நாட்டினதும் அதன் ஒவ்வொரு மாகாணத்தினதும் ஒட்டுமொத்த சுபீட்சத்தின் நிலைமையினை மதிப்பிடும் பொருட்டு இலங்கை சுபீட்சச் சுட்டெண் இலங்கை மத்திய வங்கியினால் 2008இல் முதற்றடவையாக அறிமுகப்படுத்தப்பட்டது. பல்பரிமாணங்களைக் கொண்ட குறிகாட்டியொன்றாக விளங்கும் இலங்கை சுபீட்சச் சுட்டெண் நாட்டினதும் மாகாணங்களினதும் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திகளை பிரதிபலிப்பதுடன், பொருளாதாரம் மற்றும் வியாபாரச் சூழல், மக்களின் நலனோம்புகை மற்றும் சமூக பொருளாதார உட்கட்டமைப்பு ஆகிய மூன்று துணைச் சுட்டெண்களை உள்ளடக்கியுள்ளது. இலங்கை சுபீட்சச் சுட்டெண் திணைக்களத்தால் வருடாந்த அடிப்படையில் தொகுக்கப்படுவதுடன் இறுதியாக 2014ஆம் ஆண்டிற்காக தொகுக்கப்பட்டிருக்கிறது. திணைக்களம் துணைச் சுட்டெண்கள் கணிப்பதற்குப் பயன்படுத்தப்படும் மாறிகளில் ஏற்படும் முன்னேற்றங்களைத் தொடர்ச்சியாகக் கண்டறிந்து வருவதுடன் நாட்டின் ஒட்டுமொத்த சுபீட்சத்தினை விளக்குவதில் சுட்டெண்ணின் பிரதிநிதித்துவத்தன்மையை உயர்த்துவதற்காக முறையியல் சார்ந்த திருத்தங்களும் கருத்திலெடுக்கப்படுகின்றன.

### 28.4 மாகாண ரீதியாக மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் கணிப்பிடல்

2015இல் தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களம் மொ.உ.உற்பத்தியைத் தொகுக்கும் அடிப்படை ஆண்டினை 2002 இலிருந்து 2010 இற்கு திருத்தியிருக்கிறது. இதற்கமைய, தேசிய கணக்குகள் முறைமை 2008 இற்கு இணங்கும் விதத்தில் பல்வேறு முறையியல் சார்ந்த மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. எனவே, புள்ளிவிபரவியல் திணைக்களம் மாகாண மட்டத்தில் தொடர்பான குறிகாட்டிகளைப் பயன்படுத்தி மீள்அடிப்படையாகக் கொண்ட மொ.உ.உற்பத்தித் தொடர்களைப் பிரித்ததன் மூலம் பெயரளவு நியதிகளில் 2014ஆம் ஆண்டிற்கான மாகாண ரீதியான மொ.உ.உற்பத்தியைக் கணித்தது. 2014ஆம் ஆண்டிற்கான மாகாண ரீதியான மொ.உ.உற்பத்தி எண்தொகைகளும் புதிய தொடர்களை அடிப்படையாகக் கொண்ட 2013ஆம் ஆண்டிற்காக மீளத்தொகுக்கப்பட்ட எண்தொகைகளும் 2015 ஒத்தோபரில் வெளியிடப்பட்டன.

### 28.5 புள்ளிவிபரவியல் அளவீடுகள்

தற்போதைய பொருளாதார நிலைமைகளைக் கண்காணிப்பதற்கும் போக்குகளை எதிர்வுகூறுவதற்குமென வியாபார நிலைமைகளை முன்கூட்டியே கண்டறிவதற்கும் குறுங்காலச் சந்தை அபிவிருத்திகளைப் பெற்றுக் கொள்வதற்கும் 2014இல் ஆரம்பிக்கப்பட்ட காலாண்டு வியாபாரத் தோற்றப்பாட்டு அளவீடு 2015 ஆண்டுப் பகுதியிலும் தொடர்ந்து இடம்பெற்றது. வியாபாரத் தோற்றப்பாட்டு அளவீடு நேரகாலத்துடன் எச்சரிக்கைப்படுத்தும் குறிகாட்டியாகவும் பயன்படுகிறது. இவ்வளவீட்டின் இலக்கிடல் குடித்தொகை யாதெனில் பொருளாதாரத்தின் மூன்று முக்கிய நடவடிக்கைகளையும் (வேளாண்மை, கைத்தொழில், பணிகள்) உள்ளடக்குகின்ற பாரியளவு தொழில்முயற்சிகளாகும். மாதிரிகள் மொ.உ.உற்பத்திக்கான முக்கிய நடவடிக்கைகளின் பங்களிப்புக்களின் அடிப்படையில் அடுக்கடுக்கான முறையுடன் கூடிய பகுத்துணர்வு மாதிரி முறையினைப் பயன்படுத்தி தெரிவு செய்யப்பட்டன. இவ்வாண்டுப் பகுதியில் நான்கு சுற்று அளவீடுகள் தொடர்ச்சியாக நடாத்தப்பட்டதுடன், இவ்வளவீட்டின் பெறுபேறுகளின் அடிப்படையில் வியாபார நிலைமை, இலாபத்தன்மை, தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களின் கிடைப்பனவு, விற்பனைகள், கேள்வி மற்றும் இயலளவுப் பயன்பாடு ஆகிய வியாபார உள்ளமைப்புச் சுட்டெண்கள் கணிக்கப்பட்டன. பெறுபேறுகள் நாணயக் கொள்கைக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் அளவீட்டில் கண்டறியப்பட்ட விடயங்கள் மீதான விபரமான அறிக்கை காலாண்டு அடிப்படையில் மூத்த முகாமைத்துவத்திற்கு அவர்களது தகவல்களுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டன. இப்பெறுபேறுகள் பொதுமக்களின் தகவல்களுக்காக மொத்த வடிவத்தில் காலாண்டு அடிப்படையில் இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் வெளியிடப்பட்டன.

கொடுகடன் சந்தையின் கேள்வி மற்றும் வழங்கல் பக்க அபிவிருத்திகளைப் பெற்றுக்கொள்வதற்காக அரையாண்டு இடைவெளியுடன் 2014இன் பின்னரைப் பகுதியில் தொடங்கப்பட்ட கொடுகடன் நிலைமை அளவீடும் 2015ஆம் ஆண்டுப்பகுதியிலும் தொடர்ந்தது. இது கேள்விப்பக்க அபிவிருத்திகளைப் பெற்றுக் கொள்வதற்காக வடிவமைக்கப்பட்ட கொடுகடன் கேள்வி அளவீட்டினையும் கொடுகடன் சந்தைகளின் வழங்கல்பக்க அபிவிருத்திகளைப் பெற்றுக்கொள்வதற்காக வடிவமைக்கப்பட்ட கொடுகடன் வழங்கல் அளவீட்டினையும் உள்ளடக்குகிறது. நாட்டின் அனைத்து வங்கித்தொழில் நிறுவனங்களையும் உள்ளடக்கும் விதத்தில் கொடுகடன் வழங்கல் அளவீடு வடிவமைக்கப்பட்டது. கொடுகடன் கேள்வி அளவீட்டினைப் பொறுத்தவரையில் இலக்கிடப்பட்ட குடித்தொகையாக பொருளாதாரத்தின் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் விளங்கின. கொடுகடன் கேள்வி அளவீட்டிற்கான மாதிரிக் கட்டமைப்பானது ஊழியர் நம்பிக்கை நிதியத்திலிருந்து பெறப்பட்ட நிறுவனங்களின் பட்டியலொன்றினூடாக அபிவிருத்தி செய்யப்பட்டதுடன் அடுக்கடுக்கான எழுமாறான மாதிரியானது சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை மாதிரிக் கட்டமைப்புக்குள் அடுக்குகளாக்குவதன் மூலம் தெரிவு செய்யப்பட்டது. கொடுகடன் கேள்வி அளவீடானது மேல் மாகாணத்திற்குப் புறம்பாக, மத்திய வங்கி அதன் பிரதேச பிரசன்னத்தினைக் கொண்டிருக்கும் மாகாணங்களுக்கும் 2015இன் முன்னரைப் பகுதியிலிருந்து விரிவாக்கப்பட்டது. இவ்வளவீட்டின் பெறுபேறுகள் கொள்கைத் தீர்மான நோக்கங்களுக்காக அரையாண்டு அடிப்படையில் உள்ளக ரீதியாக முகாமைத்துவத்திற்கு கையளிக்கப்பட்டன.

கொள்வனவினை மேற்கொள்கின்ற தொழில்சார்நிபுணர்கள், வியாபாரக் கொள்கைகளை வகுப்போர் மற்றும் பொருளியல் பகுப்பாய்வாளர்களுக்கு கைத்தொழில்களின் நிலைமைகளை தெளிவாக விளக்கும் வகையில் உரிய நேரத்தில் துல்லியமான தரவுத்தொகுதியை வழங்கும் பொருட்டு இன்னொரு பாரிய அளவீடான, தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் 2015 மேயிலிருந்து மாதாந்த அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டது. தயாரிப்பு நடவடிக்கைகளின் தயாரிப்புத் துறைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் அளவீட்டைப் பொறுத்தவரை, மேல் மாகாணத்தில் முனைப்பாகச் செறிந்திருக்கும் பொருளாதாரத்தின் தயாரிப்புத் துறைக் கைத்தொழில்களின் கொள்வனவு முகாமையாளர்களே இலக்கிடல் குடித்தொகையாகும். மாதிரிப்படுத்தல் அலகுகளைத் தெரிவு செய்வதற்கான மாதிரிக் கட்டமைப்பு ஊ.சே. நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட நிறுவனங்களின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு தொகுக்கப்பட்டது. மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய தயாரிப்புக் கம்பனிகள் தேவையான மாதிரிக் கட்டமைப்பினை அபிவிருத்தி செய்வதற்காக ஆராயப்பட்டதுடன், எளிமையான எழுமாறான மாதிரிப்படுத்தல் முறைமையினைப் பயன்படுத்தி இம்மாதிரிக் கட்டமைப்பிலிருந்து மாதிரிக்காக 100 நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டன. பணிகள் நடவடிக்கைகள் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் அளவீட்டிற்கான 100 நிறுவனங்களின் மாதிரிகள் நியாயப்படுத்தபடக்கூடிய மாதிரிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டன. இவ்வளவீடானது ஒவ்வொரு மாதத்தினதும் இறுதி வாரத்தில் மேற்கொள்ளப்பட்டது. கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு, புதிய கட்டளைகள் உற்பத்தி, தொழில்நிலை, வழங்குநரின் விநியோக நேரம் மற்றும் கொள்வனவுகளின் இருப்பு என்பனவற்றின் துணைச் சுட்டெண்களுடனும் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள், புதிய வியாபாரங்கள், வியாபார நடவடிக்கை, தொழில்நிலை, நிலுவையிலுள்ள வேலைகள் மற்றும் நடவடிக்கைக்கான எதிர்பார்ப்புக்கள் என்பனவற்றிற்கான சுட்டெண்களுடன் மாதத்திற்கு மாத மாற்றங்களை மதிப்பிடுவதற்காக கணிக்கப்பட்டதுடன் இவை கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்ளும் செயன்முறைக்காக நாணயக் கொள்கைக் குழுவிற்கு அறிக்கையிடப்பட்டன.

2014இல் நிலவிய வீழ்ச்சியடைந்து செல்லும் வட்டி வீதங்களும் தங்க விலைகளின் தளம்பல்களும் உரிமம் பெற்ற வங்கிகள், நிதிக் கம்பனிகள் மற்றும் குத்தகைக் கம்பனிகள் நீங்கலாக மற்றைய அடகுபிடித்தல் நிறுவனங்களின் மீது அவை கொண்டிருக்கும் தாக்கத்தினை விபரமாக ஆராய வேண்டிய தேவையினை ஏற்படுத்தியிருக்கிறது. இதனால் புள்ளிவிபரவியல் திணைக்களம் அடகுபிடித்தல் மீதான அளவீடு - 2014 இனை அஞ்சல் அளவீடாக மேற்கொண்டது. இவ்வளவீட்டின் ஆரம்ப வேலைகள் 2014இல் மேற்கொள்ளப்பட்டதுடன் தரவுச் சேகரிப்பு, பகுப்பாய்வு மற்றும் அறிக்கை எழுதல் என்பன 2015ஆம் ஆண்டுப் பகுதியில் பூர்த்தி செய்யப்பட்டன. அளவீட்டில் கண்டறியப்பட்ட விடயங்கள் 2015இல் முகாமைத்துவத்திடம் சமர்ப்பிக்கப்பட்டன.

பணவீக்க எதிர்பார்ப்பு அளவீடு, 2006இல் அது அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து மாதாந்த அடிப்படையில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவ்வளவீடானது நிதியியல் நிறுவனங்கள், அரச துறை நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகள் என்பனவற்றிலிருந்தான ஏறத்தாழ 200 பதிலிறுப்பாளர்களை உள்ளடக்கியிருந்தது. பதிலிறுப்புக்கள் மின்னஞ்சலூடாகவும் பேட்டிகளினூடாகவும் சேகரிக்கப்பட்டன. பதிலிறுப்பாளர்கள் நடைமுறைப் பணவீக்க உள்ளுணர்வுகள் மற்றும் 12 மாதங்களுக்காக எதிர்பார்க்கப்படும் பணவீக்கம் என்பன மீதான கணியம்சார் மற்றும் தரம்சார், தகவல்கள் இரண்டையும் வழங்கினர். மாதாந்த அடிப்படையிலான அளவீட்டின் பெறுபேறுகள் நாணயக் கொள்கை குழுவிற்கும் கொள்கை வகுப்புச் செயன்முறைக்காகவும் சமர்ப்பிக்கப்பட்டன.

அரச துறை தொழில்நிலையின் அபிவிருத்திகளைக் கண்டறிவதற்காக அனைத்து அரச துறை நிறுவனங்களையும் உள்ளடக்கி வருடாந்த அரச துறை தொழில்நிலை அளவீடு மேற்கொள்ளப்பட்டது. காலாண்டு அரச துறை தொழில்நிலை அளவீடும் 1,000 இற்கும் கூடுதலாக அல்லது அதற்குச் சமமான தொழில்நிலை எண்ணிக்கையைக் கொண்ட அரசாங்க மற்றும் அரசு சார் அமைப்புக்களை உள்ளடக்கி மேற்கொள்ளப்பட்டது. காலாண்டு அரச துறை தொழில்நிலை அளவீடு ஊடாக சேகரிக்கப்பட்ட தகவல்கள் மாகாண ரீதியான மொ.உ.உற்பத்தித் தொகுப்பில் அரச பணிகள் துணைத் துறையின் பெறுமதிகூட்டல்களை மதிப்பிடுவதற்காக முன்னணி குறிகாட்டிகளாக திணைக்களத்தினால் பயன்படுத்தப்படுகின்றன. அளவீட்டில் கண்டறியப்பட்ட விடயங்களின் அடிப்படையில் ஆண்டு மற்றும் காலாண்டு பகுப்பாய்வு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன. மேலும் தொழிற்படை மற்றும் தொழில் சந்தை தொடர்பாகச் சேகரிக்கப்பட்ட தகவல்களும் நாட்டின் தொழில்நிலை, தொழிலின்மை, வெளிநாட்டு வேலை வாய்ப்பு, தொழில் உறவுகள், தொழில் சந்தைச் சீர்திருத்தங்கள் மற்றும் தொழிலாளர் உற்பத்தித்திறன் ஆகிய துறைகளின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

நுண்பாக கொடுகடன் துறையின் அபிவிருத்திகளை விளங்கிக் கொள்வதனையும் நுண்பாகக் கொடுகடன் பயனாளிகளின் நிதியியல் அறிவு மற்றும் நிதியியல் வசதிகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பானவற்றை மதிப்பிடுவதனையும் நோக்கமாகக் கொண்டு நுண்பாகக் கொடுகடன் மீதான அளவீடொன்று சிறப்புச் செயற்றிட்டமொன்றாக 2015இல் நடாத்தப்பட்டது. இவ்வளவீட்டின் அளவீட்டுக் குடித்தொகை இலங்கையிலுள்ள நுண்பாகக் கொடுகடன் பயனாளிகளாகக் காணப்பட்டதுடன் மாதிரியளவு 15 மாவட்டங்களிடையே சமமாகப் பகிரப்பட்ட 1,500 நுண்பாகக் கொடுகடன் பயனாளிகளாகக் காணப்பட்டது. மாதிரியானது லங்கா மைக்ரோ பினான்ஸ் பிரக்ரீசினியோர்ஸ் அசோசியேஷன் மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் உறுப்பினர் நிறுவனங்களிலிருந்தான நுண்பாகக் கொடுகடன் பயனாளிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்டது. இவ்வளவீடானது 2015 ஒத்தோபரிலிருந்து திசெம்பர் வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டது. அளவீட்டின் மேலதிக விடயங்களும் கண்டறியப்பட்ட விடயங்களும் இவ்விடயம் தொடர்பாக ஆண்டறிக்கையின் பகுதி 1 இலுள்ள சிறப்புக் குறிப்பிலே தரப்பட்டுள்ளன.

## 28.6 நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமை

நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமை 1978 தொடக்கம் தொழிற்பட்டு வருவதுடன் முறைமையானது புள்ளிவிபரச் சேகரிப்பாளர்களாகச் செயற்படுகின்ற பாடசாலை ஆசிரியர்களைக் கொண்ட நாடளாவிய வலையமைப்பினூடாகத் தொழிற்படுகின்றது. இப்புள்ளிவிபர சேகரிப்பாளர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பரந்துபட்டுள்ள 106 சந்தை நிலையங்களை உள்ளடக்கியுள்ளனர். இம்முறைமையின் கீழ் நுகர்வுப்பொருட்களின் சில்லறை விலைகள், வேளாண்மை மற்றும் மீன்பிடிப் பண்டங்களின் உற்பத்தியாளர் விலைகள், முறைசாரா தனியார் துறையின் நாளாந்தக் கூலிகள் மற்றும் வேளாண்மை மற்றும் மீன்பிடிப் பண்டங்களின் எதிர்கால உற்பத்தி மட்டங்களின் எறிவுகள் என்பன வாராந்த, மாதாந்த மற்றும் காலாண்டு அடிப்படையில் சேகரிக்கப்பட்டன. மேலும், இம்முறைமையானது புறக்கோட்டைச் சந்தை, மரடகஹகமுல்ல அரிசிச் சந்தை, தம்புள்ள மற்றும் நாரஹன்பிட்டியவுள்ள சிறப்பு பொருளாதார மையங்கள் மற்றும் நீர்கொழும்பு, பேலியகொடை மீன்சந்தைகள் என்பனவற்றிலிருந்து மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனைகள் மீதான தரவுகளை நாளாந்த மற்றும் வாராந்த அடிப்படையில் அறிக்கையிடுவதற்காக ஒரு சில ஆசிரியர்களல்லாத தரவுச் சேகரிப்பாளர்களையும் பயன்படுத்திக் கொண்டது. நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமையின் கீழ் சேகரிக்கப்பட்ட தரவுகளானவை விலைச் சுட்டெண்களைத் தொகுத்தல், விலை அசைவுகளை எதிர்வுகூறல், விலைகள் மீதான கொள்கை மாற்றங்களின் தாக்கத்தினை மதிப்பிடல் மற்றும் தேசிய செலவினம் மற்றும் வருமானத்தினை மதிப்பிடல் மற்றும் விலை மற்றும் கூலித் தரவுகளைப் பொதுமக்களுக்கு பரப்புதல் போன்ற பரந்த கொள்கை நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டன. முகாமைத்துவத் தகவல் முறைமையினை வலுப்படுத்தும் பொருட்டு 2015இல் திணைக்களம் தெரிந்தெடுக்கப்பட்ட சந்தைகளிலிருந்து பல்வேறு உணவுப் பண்டங்களினது மொத்த விற்பனை விலைகளையும் சில்லறை விலைகளையும் நாளாந்த அடிப்படையில் சேகரிக்கத் தொடங்கியது.

தரவுச் சேகரிப்பின் தரம் மற்றும் சரியான நேரம் என்பன திணைக்களம் புள்ளிவிபரச் சேகரிப்பாளர்களினால் அறிவிக்கப்பட்ட தரவுகள் தொடர்பில் தலத்திலான மற்றும் தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பினைத் தொடர்ச்சியாக மேற்கொண்டதன் மூலமும் நேரகாலத்துடன் எச்சரிக்கைப்படுத்தும் முறைமைக்காகப் பயன்படுத்தப்பட்ட தரவு படிவத்தினை திருத்தியதன் மூலமும் வலுவாக்கியது. தரவின் துல்லியமானது திணைக்களத்தின் அலுவலர்களினால் கொழும்பு மாவட்டத்திலுள்ள தெரிவு செய்யப்பட்ட சந்தைகளிலிருந்து சேகரிக்கப்பட்ட அடிப்படை விலைத் தரவுகளை மீண்டும் சோதித்தமையின் மூலம் மேலும் சரிபார்க்கப்பட்டன. தரவு முறைமையினை மேம்படுத்துவதற்கு தரவுச் சேகரிப்பாளர்களின் பின்னூட்டல் மிக இன்றியமையாததாகையால், அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்காகவும் நிகழ்ச்சித்திட்டத் தொழிற்பாடுகள் தொடர்பான பிரச்சனைகளைப் பற்றிக் கலந்துரையாடுவதற்காகவும் ஆசிரிய விலைச் சேகரிப்பாளர்களுக்காக இவ்வாண்டுப் பகுதியில் கொழும்பு, அநுராதபுரம், கண்டி, மாத்தளை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய ஐந்து பிரதேச ரீதியான ஆய்வரங்குகள் நடத்தப்பட்டன. ஆய்வரங்குகள் புள்ளிவிபரச் சேகரிப்பாளர்களின் இயலாற்றலை அபிவிருத்தி செய்வதனையும் நோக்கமாகக் கொண்டிருந்தன.

## 28.7 உலகளாவிய தரப்படுத்தல் இலங்கையின் நிலைமை முன்னேற்றம் கண்டு வருகின்றது

### *"வியாபாரம் செய்தலை இலகுபடுத்தும்" தரமிடல்*

புள்ளிவிபரவியல் திணைக்களம் இலங்கையின் "வியாபாரம் செய்தலை இலகுபடுத்தும்" தரமிடலை மேம்படுத்துவதற்காக அதன் முயற்சிகளைத் தொடர்ந்தும் வழங்கியது. இதன் விளைவாக, தற்பொழுது இடம்பெற்றுவரும் சீர்திருத்தங்களை முன்னேற்றப் பாதையில் இட்டுச்செல்வதற்காக தொடர்பான அரச நிறுவனங்களுடன் தொடர்ச்சியான கலந்துரையாடல்களில் ஈடுபட்டிருந்தமை; மிக அண்மைய அபிவிருத்திகளை பங்களிப்பாளர்களுக்குத் தெரியப்படுத்துவதற்காக அவர்களுடன் கூட்டங்களை ஒழுங்கு செய்தமை; வியாபாரம் செய்தலுடன் தொடர்பான துறைகளில் பணியாற்றுகின்ற அரச மற்றும் தனியார் அலுவலர்களுடன் கலந்துரையாடுவதற்கு உலக வங்கி தூதுக்குழுவிற்கு வசதிகளை ஏற்படுத்தியமை; வியாபாரம் செய்தல் தரமிடலை மேம்படுத்துவது தொடர்பான பன்னாட்டு ஆய்வரங்குகளில்

இலங்கையர்களின் பங்கேற்பினை ஒருங்கிணைத்தமை மற்றும் இத்தரமிடலின் கீழ் கண்டறியப்பட்ட மாறிகளை முக்கிய கவனத்தில் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள் தொடர்பில் உலக வங்கி குழுமத்திற்குச் சரியான நேரத்தில் மிக முக்கியமான தகவல்களைப் பரப்பியமை என்பனவற்றில் ஈடுபட்டிருந்தது. இலங்கையின் முயற்சிகள் 2015இல் வெளியிடப்பட்ட பிந்திய வியாபாரத்தினை செய்யுங்கள் அறிக்கையில் உள்ளூர் தொழில்முயற்சியாளர்களுக்கான வியாபாரத்தினைச் செய்யுங்கள் இனை இலகுபடுத்துவதனை நோக்கி இலங்கை எடுத்த முயற்சிகளின் காரணமாக எமது முக்கியமான விடயங்களின் அடிப்படையில் வியாபாரத்தினைத் தொடங்குதல் மற்றும் வியாபாரத்தினைச் செய்தல் தரமிடலின் கட்டுமானத்தினை அனுமதிக்கின்ற துணைத் துறைகளைக் கையாளுதல் தொடர்பான இரண்டு சீர்திருத்தங்களை உலக வங்கி உறுதிப்படுத்தியது. மேலும், இச்சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டதன் காரணமாக முன்னைய ஆண்டில் 113 ஆக இருந்த தரமிடலுடன் ஒப்பிடுகையில் நாட்டின் நிலைமை 107 இற்கு முன்னேற்றமடைந்தது.

அரசாங்கத்தின் முன்முயற்சிகள் மற்றும் முன்னுரிமைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில், முதலீட்டுச் சூழலை மேம்படுத்துகின்ற ஒட்டுமொத்தக் குறிக்கோளுடன் இசைந்து செல்லும் முறையில் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்காக புதிய தொழிற்பாட்டு முறைமையொன்று ஆண்டின் இறுதியில் உருவாக்கப்பட்டது. வியாபாரம் செய்தல் தரமிடலில் நாட்டினை மிக உயர்ந்த நிலைமைக்கு எடுத்துச்செல்லும் உபாய நடவடிக்கைகள் ஆராயப்படுவதுடன் இதில் புள்ளிவிபரவியல் திணைக்களம் முக்கிய ஆர்வலராக இருக்கிறது.

*ஏனைய உலகளாவிய தரமிடல்கள்*

உலகளாவிய அடிப்படையிலான ஆளுகைக் குறிகாட்டிகள், உலகளாவிய போட்டித்தன்மைச் சுட்டெண், பொருளாதாரச் சுதந்திரச் சுட்டெண், ஊழல் பூந்துணர்வுச் சுட்டெண், மானிட அபிவிருத்திச் சுட்டெண் மற்றும் உலகளாவிய சுட்டெண்ணின் பொருளாதார சுதந்திரம் ஆகிய உலகளாவிய சுட்டெண்கள் தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்படுவதுடன் இலங்கையின் தற்போதைய நிலைமைகள் தொடர்பான தகவல்கள் முகாமைத்துவத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. மேற்குறிப்பிட்ட சுட்டெண்களின் தொகுப்பாளர்களுக்குப் பேரண்டப் பொருளாதார தகவல்களும் தரவுகளும் வாராந்த மற்றும் மாதாந்த அடிப்படையில் தொடர்ச்சியாக வழங்கப்படுகின்றன. பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான அமைப்பு அலுவல்சார் ரீதியாக ஆதரவளிக்கப்பட்ட கொடுகடன் மீதான ஒழுங்குகளுக்கான பங்கேற்பாளர்களின் நாட்டு இடர்நேர்வுப் பகுப்பாய்வும் மதிப்பிடப்படவுள்ளதுடன் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான வெளிநிற்கும் பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதற்காக இருபுடை கலந்துரையாடல் செயன்முறையொன்றும் முன்மொழியப்பட்டுள்ளது.

### 28.8 புள்ளிவிபரங்களைப் பரப்புதல்

புள்ளிவிபரவியல் திணைக்களம் கொள்கை வகுப்போர், ஆராய்ச்சியாளர்கள், கல்வியாளர்கள், தொழில்சார்நிபுணர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு தற்போதைய அபிவிருத்திகள் தொடர்பான பரந்தளவிலான சமூகப் பொருளாதாரத் தரவுகளைப் பரப்புவதற்குப் பொறுப்பாக இருக்கின்றது. இவ்வாண்டுப் பகுதியில் திணைக்களம் தொடர்ந்து நான்காவது ஆண்டாக அனைத்து மூன்று மொழிகளிலும் அதன் இரண்டு முக்கிய ஆண்டு வெளியீடுகளான "இலங்கையின் பொருளாதார மற்றும் சமூகப் புள்ளிவிபரங்கள் - 2015 தொகுதி XXXVII" இனை 2015 ஏப்பிறலிலும், "இலங்கை சமூகப் பொருளாதார தரவு சிற்றேடு - 2015 - தொகுதி XXXVIII" இனை 2015 யூனிலும் வெளியிட்டதுடன், இலங்கையின் பொருளாதார மற்றும் சமூகப் புள்ளிவிபரங்கள் வெளியீட்டிற்கான குறுந்தகடொன்றையும் 2015இல் வெளியிட்டது. இதற்குப் புறம்பாக, இது 2015இல் வாராந்த மற்றும் மாதாந்தப் பொருளாதாரக் குறிகாட்டிகளையும் வெளியிட்டது. 2015 இலும் திணைக்களம் மத்திய வங்கி ஆண்டறிக்கை மற்றும் அண்மைக் காலப் பொருளாதார அபிவிருத்திகளின் இரண்டு அத்தியாயங்களுக்குப் பங்களித்ததுடன் மாதாந்த செய்தித்திரட்டிற்கும் கிரமமான பங்களிப்பை வழங்கியது. உள்ளகப் பகுதி இணையத் தளத்திலுள்ள (மன்சலவினூடாக அடையத்தக்கவை) திணைக்கள வெப்தளத்தில் ஸ்டாநெட்டில் புள்ளிவிபரத் தரவுகளை கிடைக்கச்செய்த பின்னர் உள்ளகத் தரவுப் பயன்படுத்துநர்கள் அனைவரினதும் நன்மை கருதி புள்ளிவிபரவியல் திணைக்களத்தினது புள்ளிவிபரங்களை மட்டுமன்றி பொருளாதார ஆராய்ச்சி, வங்கி மேற்பார்வை, உள்நாட்டுத் தொழிற்பாடுகள், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு மற்றும் நிதித் துறை ஆராய்ச்சி என்பனவற்றிலிருந்தான புள்ளிவிபரத் தரவுகளை உள்ளடக்கி இலத்திரனியல் தரவுத் தளமொன்றினை அபிவிருத்தி செய்தது. இதன் பின்னணியிலிருந்த முக்கிய குறிக்கோளானது கொள்கை ஆராய்ச்சி நோக்கங்களுக்கு உதவுவதாகக் காணப்பட்டதுடன் புள்ளிவிபரவியல் திணைக்களம் எஞ்சிய மற்றைய திணைக்களங்களும் தற்போதுள்ள தரவுத் தளத்தினைப் பெறும் விதத்தில் அதனை விரிவாக்குவதற்கு ஏற்கனவே நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது.

## 29. நுண்பாக நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்

2015 செத்தெம்பர் 25 அன்று நடைபெற்ற நாணயச் சபையின் 23/2015 இலக்கம் கொண்ட அதன் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் நியதிகளில், நுண்பாக நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களமானது 2015 ஒத்தோபர் 22 இலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் மத்திய வங்கியில் நிறுவப்பட்டது.

நுண்பாக நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் முக்கிய குறிக்கோள்களாக வரைவு நுண்பாக நிதி மசோதாவின் பகுதி VI மற்றும் VII இல் குறித்துரைக்கப்பட்டவாறான பொறுப்புக்களை ஆற்றுதல், நுண்பாக நிதியியல் நிறுவனங்களின் நல்லாட்சி, வெளிப்படையான தன்மை மற்றும் உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்தும் விதத்தில் நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட கொள்கைகளை நடைமுறைப்படுத்தல், கொள்கை வழிகாட்டலுக்காக நுண்பாக நிதியியல் துறையின் முக்கிய பிரச்சனைகளை அடையாம் காணுதல், ஆர்வலர்களுக்கு தகவல் பரப்புதல், இன்றியமையாத நுண்பாக நிதியியல் பிரச்சனைகள் மீது ஆழ்ந்த ஆராய்ச்சிகள் மற்றும் அளவீடுகளை மேற்கொள்ளுதல் மற்றும் வறுமை ஒழிப்புக்கான தேசிய உபாயத்திற்கு ஆதரவளிக்கும் கொள்கை வழிகாட்டலை வழங்குதல், நிதியியல் அறிவூட்டல் மற்றும் அடிமட்டத்திலுள்ளவர்களும் நிதியியல் வசதிகளைப் பெற்றுக்கொள்ள இயலுமைப்படுத்தல் போன்றவற்றை மேம்படுத்துதல் மற்றும் வினைத்திறனான ஒதுக்கீடு மற்றும் மூலவளங்களின் முகாமைத்துவம் போன்றவற்றினை வசதிப்படுத்துவதற்காக நுண்பாக நிதியியல் கம்பனிகளுக்கு பயிற்சிகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் அந்நிறுவனங்களை அலுவல்சார் நிதியியல் முறைமைக்குள் தொடர்புபடுத்தல் என்பன காணப்படுகின்றன.

### 29.1 நுண்பாக நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் செயற்பாடுகளும் பொறுப்புக்களும்

நுண்பாக நிதியியல் மசோதாவின் நியதிகளின்படி, நுண்பாக நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பிரதான தொழிற்பாடுகள், நுண்பாக நிதியில் கம்பனிகளுக்கான உரிமப்பத்திரம் வழங்குதல், நுண்பாக நிதியியல் கம்பனிகளுக்கான நாணயச்சபையின் ஒப்புதல் மற்றும் நுண்பாக நிதியியல் அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒப்புதல் போன்றவற்றின் மூலம் பணிப்புரைகள் மற்றும் வழிகாட்டல்களை தயாரித்தலும் வழங்குதலும், உரிமமளிக்கப்பட்ட நுண்பாக நிதியியல் கம்பனிகளின் தொடர்ச்சியான மேற்பார்வை மற்றும் காலந்தர தலத்திலான பரீட்சிப்புக்கள் போன்றவற்றை மேற்கொள்ளுதல், நாணயச் சபை சார்பில் நுண்பாக நிதியியல் கம்பனிகளின் உரிமத்தை இரத்துச்செய்தலும் முடிவுறுத்தலும் மற்றும் நுண்பாக நிதியியல் கம்பனிகள் தொடர்பான முன்னேற்றங்கள் மற்றும் பிரச்சனைகள் தொடர்பில் நாணயச் சபைக்கு அறிக்கையிடல் போன்றவற்றை உள்ளடக்குகிறது.

வரைபு நுண்பாக நிதியியல் மசோதாவானது பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் நுண்பாக நிதியியல் நிறுவனங்களின்

மேற்பார்வைத் திணைக்களத்தின் செயற்பாடுகள் காத்திரமானதன்மையுடன் ஆரம்பிக்கப்படும். இருப்பினும், நுண்பாக நிதியியல் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கான கோட்பாடுகளை உருவாக்கல், நியமங்கள் மற்றும் வழிகாட்டல்களை உருவாக்குதல், நுண்பாக நிதியியல் கம்பனிகளுக்கான ஒழுங்குகள் மற்றும் பணிப்புரைகளை உருவாக்கல், நுண்பாக நிதியியல் நிறுவனங்கள் மீதான அளவீட்டை மேற்கொள்ளுதல், திணைக்கள செயற்பாட்டு கைநூல் ஒன்றினை வரைதல் மற்றும் நுண்பாக நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம், அரசசார்பற்ற நிறுவன செயலகம் மற்றும் நுண்பாக நிதியியல் நிறுவனங்கள் போன்றவற்றின் அலுவலர்களுக்கான இயலாற்றலை கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டங்களை தயாரித்தல் போன்றவற்றுடன் தொடர்புடைய முதன்மை வேலைகளை நுண்பாக நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் ஏற்கனவே முன்னெடுத்திருக்கிறது.

## 30. வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களம், உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளை ஒழுங்குமுறைப்படுத்தி மேற்பார்வை செய்வதற்காக, 1979ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் கட்டுப்பாட்டுச் சட்டத்திற்குப் பதிலாக 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டம் இயற்றப்பட்டதன் மூலம் 1988ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்தின் தொழிற்பாடுகள் 2011.11.09 நாளிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் நிதிக் கம்பனிகள் சட்டத்திற்குப் பதிலாக 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் மூலம் தற்பொழுது ஆளுகை செய்யப்பட்டு வருகின்றது. 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் சட்டம் இயற்றப்பட்டதுடன் நிதிக் குத்தகைக்குவிடும் வியாபாரத்தினை ஒழுங்குமுறைப்படுத்துவதும் மேற்பார்வை செய்வதும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்தின் அதிகாரவரம்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் முக்கிய தொழிற்பாடுகள், பரீட்சிப்புக்கள் மற்றும் தொடர்ச்சியான கண்காணிப்புக்களூடாக உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளையும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளையும் மேற்பார்வை செய்தல், ஒழுங்குமுறைப்படுத்தல் ஒப்புதல்களை வழங்குதல், பணிப்புரைகளையும் முன்மதியுடைய தேவைப்பாடுகளையும் விடுத்தல், அதிகாரமின்றி நிதி வியாபாரங்களைக் கொண்டு நடத்துகின்ற மற்றும் வைப்புக்களை ஏற்றுக்கொள்கின்ற கம்பனிகளைப் புலனாய்வு செய்தல், பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல் மற்றும் பொதுமக்களின் முறைப்பாடுகளை கவனித்துக் கொள்ளல் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

2015 இறுதியில் 46 உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளும் 70 பதிவு செய்யப்பட்ட நிதிக் குத்தகைக்குவிடும் நிறுவனங்களும் காணப்பட்டன. இவ்வுரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளினதும் நிதிக் குத்தகைக்குவிடும் கம்பனிகளினதும் பெயர்கள் பின்னிணைப்பு II-3 இல் தரப்பட்டுள்ளன. 2015இல் விடுக்கப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் இவ்வறிக்கையின் பகுதி IIIஇல் தரப்பட்டுள்ளன.

### 30.1 உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் மேற்பார்வை

உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளினது மேற்பார்வையின் குறிக்கோள் யாதெனில் மேற்பார்வையிடப்பட்ட நிறுவனங்களினதும் (நுண்பாக முன்மதியுடைய மேற்பார்வை) ஒட்டுமொத்த உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளினது முறைமையினதும் (பேரண்ட - முன்மதியுடைய மேற்பார்வை) பாதுகாப்பினையும் ஆற்றல்வாய்ந்த தன்மையினையும் மேம்படுத்துவதேயாகும். மேற்பார்வைச் செயன்முறைகள் பரீட்சிப்புக்கள், தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணுதல் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளன. 2015இல் நிறுவனங்களின் வினைத்திறன் மற்றும் உறுதித்தன்மை என்பனவற்றைக் கவனத்தில் கொண்டு இடர்நேர்வினைக் கவனத்தில் கொண்ட மேற்பார்வைப் பொறிமுறையொன்று வடிவமைக்கப்பட்டது.

#### அ. பரீட்சிப்பு

2015இல் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் 34 உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் வருடாந்தப் பரீட்சிப்புக்களை மேற்கொண்டது. கடன் இழப்புக்களுக்கான ஒதுக்கம் போதுமானளவில் இல்லாமை, உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள தவறுகள், கம்பனி ஆளுகைப் பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகாமை, தொடர்பான தரப்பினரின் கொடுக்கல்வாங்கல்கள், ஒரு சில சாதனங்களில் குவிந்து காணப்படும் இடர்நேர்வு மற்றும் சில நிறுவனங்களில் காணப்படும் வியாபார தொடர்ந்து செல்லல் கரிசனைகள் என்பன பரீட்சிப்பின் போது கண்டறியப்பட்ட விடயங்களாகவுள்ளன. நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட பரீட்சிப்பு அறிக்கைகள் மற்றும் விதந்துரைப்புக்கள் என்பன குறித்த கால எல்லைக்குள் மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்ப்படுத்தல் நடவடிக்கைகளுடன் சேர்த்து தொடர்பான பணிப்பாளர் சபைகளுக்கு வழங்கப்பட்டதுடன் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் மேற்பார்வைக் கரிசனைகள் இணங்கப்பட்ட காலப்பகுதியொன்றினுள் கட்டுப்படுத்துவதற்கு எடுத்துவரும் வழிமுறைகளை உறுதிப்படுத்துவதற்காக பின்தொடர் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

#### ஆ. தொடர்ச்சியான கண்காணிப்பு

(i) உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட காலாந்தர கூற்றுக்களின் அடிப்படையில் கம்பனிகளின் நிதியியல் செயலாற்றங்களைப் பகுப்பாய்வு செய்வதன் மூலம் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டதுடன் கணக்காய்வு செய்யப்பட்ட அறிக்கைகள், முகாமைத்துவக் கடிதங்கள், வெளிவாரித் தரமிடல் மற்றும் பத்திரிகை அறிக்கைகள் என்பன உள்ளிட்ட நிதியியல் தகவல்கள் மீளாய்வு செய்யப்பட்டன.

(ii) நேர காலத்துடன் எச்சரிக்கைப்படுத்தும் குறிகாட்டிகள் மற்றும் மூலதனம், திரவத்தன்மை, ஏற்பாடுகள், கம்பனி ஆளுகை மற்றும் முகாமைத்துவம் என்பன மீதான உள்ளகத் தரமிடல் முறைமை என்பனவற்றினூடாக உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் சாத்தியமான இடர்நேர்வுகளை அடையாளம் காணும் விதத்தில் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டது. கண்டறியப்பட்ட விடயங்களின் அடிப்படையில், இணங்கப்பட்ட காலக் கட்டமைப்பொன்றிற்குள் மேற்பார்வைக் கரிசனைகளுக்குத் தீர்வு காணும் விதத்தில் பொருத்தமான சரிசெய்யும் நடவடிக்கைகளை எடுக்குமாறு கம்பனிகள் கேட்டுக் கொள்ளப்பட்டன.

#### இ. தீர்மான நடவடிக்கைகள்

2008ஆம் ஆண்டு திரவத்தன்மை நெருக்கடி காலப்பகுதியில் எதிர்மறையாகப் பாதிக்கப்பட்ட பல கம்பனிகள் மூலதனம் மற்றும் திரவத்தன்மையில் தொடர்ந்தும் பற்றாக்குறையினை எதிர்நோக்கின. கம்பனியினை மீளமைக்கும் நோக்குடன் கம்பனியொன்றின் பணிப்பாளர் சபை மீள உருவாக்கப்பட்டது. மேலும், முன்னேற்றத்தினைக் கண்காணிக்கும் பொருட்டு பணிப்பாளர் சபை, மூத்த முகாமைத்துவம் மற்றும் வெளிவாரிக் கணக்காய்வாளர்கள் ஆகியோருடன் கிரமமான முறையில் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இரண்டு பலவீனமான கம்பனிகளுக்கு மூலதனத்தினை உள்ளீடு செய்வதற்காக சாத்தியமான

வாய்ப்பினைக் கொண்ட முதலீட்டாளர்களுடன் மத்திய வங்கி கலந்துரையாடல்களை மேற்கொண்டது.

### 30.2 ஒழுங்குமுறைப்படுத்தல் ஒப்புதல்களை வழங்குதல்

அ. 2015ஆம் ஆண்டுப் பகுதியில், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களுக்கான மேற்பார்வைத் திணைக்களம் அமைப்பு அகவிதிகளின் திருத்தம், துணைக் கம்பனிகளை உருவாக்குதல், படுகடன் சாதனங்களை வழங்குதல், வங்கி மூலதனத்தினை அதிகரித்தல், வெளிமூலங்களிலிருந்து வியாபாரத் தொழிற்பாடுகளை பெற்றுக்கொள்ளுதல், புதிய பணிப்பாளர்களையும் நிறைவேற்றுத் தொழிற்பாடுகளை ஆற்றுகின்ற அலுவலர்களையும் நியமித்தல் மற்றும் 86 புதிய கிளைகளைத் திறத்தல் என்பனவற்றிற்காக உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கு ஒழுங்குமுறைப்படுத்தல் ஒப்புதல்களை வழங்கியது. மேலும், 2015இல் மூன்று ஒருங்கிணைப்புக்கள் நிறைவடைந்தன. அவையாவன பார்ட்லீட் பினான்ஸ் பிஎல்சி ஓரியன்ட் பினான்ஸ் பிஎல்சியுடன் இணைக்கப்பட்டமை. மேர்ச்சன்ட் பாங்க் ஒவ் சிறிலங்கா பிஎல்சி எம்சிஎஸ்எல் பினான்சியல் சேர்விஸஸ் லிமிடெட்டுடன் இணைக்கப்பட்டமை, மற்றும் எம்பிஎஸ்எல் சேவிங்ஸ் பாங்க் லிமிடெட் மற்றும் ரிகேஎஸ் பினான்ஸ் லிமிடெட் என்பன ஏசியன் பினான்ஸ் லிமிடெட்டுடன் இணைக்கப்பட்டமை என்பனவாகும்.

ஆ. மேலும், டிஎவ்சிசி வர்தன வங்கி பிஎல்சி, எம்சிஎஸ்எல் பினான்ஸ்சியல் சேர்விஸஸ் லிமிடெட், எம்பிஎஸ்எல் சேவிங்ஸ் பாங்க் லிமிடெட், பார்ட்லீட் பினான்ஸ் பிஎல்சி மற்றும் ஏசியன் பினான்ஸ் லிமிடெட் ஆகிய 5 நிதிக் குத்தகை உரிமங்கள் 2015இல் இரத்துச் செய்யப்பட்டன. இதற்கு அவற்றின் உபாய ரீதியான தீர்மானங்களே முக்கிய காரணமாகும்.

### 30.3 பணிப்புரைகளையும் முன்மதியுடைய தேவைப்பாடுகளையும் விடுத்தல்

அ. உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளினைத் திறத்தல், மூடிவிடுதல், வியாபாரத் தலங்களை மீளவமைத்தல் தொடர்பான பணிப்புரை: உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த நிதிக் குத்தகைக்குவிடும் கம்பனிகளினைத் திறத்தல், மூடுதல் மற்றும் வியாபாரத் தலங்களை வேறு இடங்களில் அமைத்தல் என்பன தொடர்பில் தற்போதுள்ள கொள்கைகளையும் நடைமுறைகளையும் வலுப்படுத்தி ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக புதியதொரு ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு வடிவமைக்கப்பட்டது. இப்பணிப்புரை 2016 சனவரியில் விடுக்கப்பட்டது.

ஆ. உந்து ஊர்திகளுக்கான கடன்கள் தொடர்பில் கடன்களுக்கான பெறுமதி விகிதம் மீதான பணிப்புரை: ஊர்திக் கடன்களுக்கான மிகையான வெளிப்படுத்தல்களிலிருந்து தோன்றுகின்ற சாத்தியமான முறையியல் ரீதியான இடர்நேர்வுகளைத் தணிக்கும் பொருட்டு, 2015 திசெம்பர் 1ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் உயர்ந்தபட்சக் கடன் வசதிகள் ஊர்திகளின் சந்தைப் பெறுமதியில் 70 சதவீதத்தினை விஞ்சக்கூடாது என்பதனை விபரிக்கின்ற பணிப்புரைகள் அனைத்து உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளுக்கும் விடுக்கப்பட்டன.

### 30.4 அதிகாரமின்றி நிதித் தொழிலை நடாத்துவதன் மீதான புலனாய்வுகள்

2015இல் நிதித் தொழில் சட்டத்தின் 42ஆம் பிரிவின் நியதிகளில் 11 புலனாய்வுகள் அத்தகைய ஆட்கள்/ நிறுவனங்கள் அதிகாரமின்றி நிதித் தொழிலையும் வைப்புக்களையும் ஏற்றுக்கொண்டிருக்கின்றனவா என்பதனைக் கண்டறியும் பொருட்டு மேற்கொள்ளப்பட்டன. ஒரு நிறுவனம் நிதித் தொழில் சட்டத்தினை மீறி இருப்பதாகத் தீர்மானிக்கப்பட்டதுடன், சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டது. மேலும், தொடர்பான நிறுவனங்கள் அதிகாரமளிக்கப்படாத நிதித் தொழில்களில் ஈடுபட்டிருக்கவில்லை என்பது கண்டறியப்பட்டமையினால் 2 புலனாய்வுகள் நிறுத்தப்பட்டன. 2015 இறுதியிலுள்ளவாறு 15 புலனாய்வுகள் செயற்பாட்டிலிருந்தன.

### 30.5 பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களும் பொதுமக்களின் முறைப்பாடுகளைக் கையாள்தலும்

அதிகாரமளிக்கப்படாத நிதியியல் நிறுவனங்களிலும் முதலீட்டுத் திட்டங்களிலும் முதலீடு செய்வதனால் ஏற்படும் இடர்நேர்வுகள் பற்றி பொதுமக்களுக்கு அறிவூட்டும் நோக்குடன் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் 14 பொதுமக்கள் விழிப்புணர்வுக் கூட்டங்களை நடத்தியதுடன் 18 இலத்திரனியல் ஊடக விளம்பரங்களையும் ஒலிபரப்புச் செய்தது. உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின் பட்டியலையும் பயன்மிக்க ஏனைய தகவல்களையும் கொண்ட ஏறத்தாழ 12,000 துண்டுப் பிரசுரங்கள் பொதுமக்களிடையே விநியோகிக்கப்பட்டன. மேலும், முக்கியமாக நியாயமற்ற வாடிக்கையாளர் நடைமுறைகள் மற்றும் பெறப்பட்ட கடன் தொடர்பாக நிவாரணங்களைப் பெறுதல் என்பன தொடர்பில் பொதுமக்களிடமிருந்து உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் பற்றி பெறப்பட்ட முறைப்பாடுகளுக்குத் தீர்வு காண்பதற்காக வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களம் விசாரணைகளை மேற்கொண்டது.

### 30.6 முறிவடைந்த நிதியியல் நிறுவனங்களின் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு வசதியளித்தல்

**(i) கோல்டன் கீ கிறடிற் கார்ட் கம்பனி லிமிடெட்**

- 2015.08.04 அன்று உயர் நீதிமன்றம் கோல்டன் கீ கிறடிட் கார்ட் கம்பனி லிமிடெட்டின் பல பிணைய வைப்பு உடமையாளர்களினால் தொடுக்கப்பட்ட எஸ்சி.எவ்ஆர் 191/2009 இலக்க வழக்கு விசாரணையினை முடிவுறுத்தியதுடன் கோல்டன் கீ கிறடிட் கார்ட் கம்பனி லிமிடெட்டின் பிணைய வைப்பு உடமையாளர்களுக்கு மீள்கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக 2015.08.03ஆம் திகதி மத்திய வங்கியினால் உயர் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட மாதிரிகளுக்கு செயல் வடிவம் கொடுப்பதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மத்திய வங்கிக்கு கட்டளையிட்டது.
- மாதிரிகளின்படி, பிணைய வைப்பு உடமையாளர்களின் எஞ்சியுள்ள வைப்புக்களில் 41 சதவீதமானவை திறைசேரியினால் வழங்கப்பட்ட முற்பண நிதியத்தினைப் பயன்படுத்தி 3 தொகுதிகளாக மேற்கொள்ளப்படும். அதாவது ரூ.2 மில்லியனுக்கும் குறைவான மீதிகளைக் கொண்டவை 1ஆவது தொகுதியாகவும், ரூ.2 - 10 மில்லியனுக்கிடைப்பட்ட மீதிகளைக் கொண்டவை 2 ஆவது தொகுதியாகவும் மற்றும் ரூ.10 மில்லியனுக்கு மேற்பட்டவை 3ஆவது தொகுதியாகவும் மேற்கொள்ளப்பட்டன. இதன்படி, 1ஆவது தொகுதிக் கொடுப்பனவாக வழங்குவதற்கு 2015.07.21 அன்று திறைசேரி ரூ.544.3 மில்லியனை வழங்கியதுடன் இவை 2015 யூலை மற்றும் ஓகத்து மாதங்களில் 2,536 பிணைய வைப்பு உடமையாளர்களுக்கான மீள்கொடுப்பனவாக வழங்கப்பட்டன.
- மேலும், 2ஆவது தொகுதிக் கொடுப்பனவிற்காக திறைசேரி 2015.12.14 அன்று ரூ.3,945.6 மில்லியனை வழங்கியதுடன் தொடர்பான பிணைய வைப்பு உடமையாளர்களுக்கான மீள்கொடுப்பனவுகள் 2015 திசெம்பரில் வழங்கப்பட்டன.

**(ii) ஏனைய அதிகாரமளிக்கப்படாத நிதியியல் நிறுவனங்கள்**

த பினான்ஸ் அன்ட் ஹரண்டி புறொப்பர்ட்டி டெவலப்பர்ஸ் பிறைவேற் லிமிடெட் மற்றும் எவ் அன்ட் ஜி றியல் எஸ்டேட் கம்பனி

**இணைப்பு II - 3**

**சட்டத்திற்கிணங்க உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் மத்திய வங்கியில் உரிமம் பெற்ற பதிவு செய்யப்பட்ட நிதிக் குத்தகைக்குவிடும் நிறுவனங்கள் (2015 இறுதியிலுள்ளவாறு)**

**உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்**

1. அபான்ஸ் பினான்ஸ் பிஎல்சி
2. அலயன்ஸ் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
3. ஏஎம்டபிள்யு கபிட்டல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
4. ஆர்பிகோ பினான்ஸ் கம்பனி பிஎல்சி
5. ஏசியா அசெற் பினான்ஸ் பிஎல்சி
6. அசோசியேட்டட் மோட்டார் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
7. பிம்புத் பினான்ஸ் பிஎல்சி
8. பிராக் லங்கா பினான்ஸ் பிஎல்சி
9. சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
10. சென்றல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி*
11. சிலோவ் பினான்ஸ் பிஎல்சி
12. சிற்றிசன்ஸ் டெவலப்மன்ட் பிசினஸ் பினான்ஸ் பிஎல்சி
13. சிட்டி பினான்ஸ் கோப்பிரேசன் லிமிடெட்
14. கொழும்பு ட்ரஸ்ட் பினான்ஸ் பிஎல்சி (முன்னர் கப்பிட்டல் அலயன்ஸ் பினான்ஸ் பிஎல்சி)
15. கொமர்ஷல் கிரடிட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
16. கொமர்ஷல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
17. ஈரிஜ பினான்ஸ் லிமிடெட்
18. எச்என்பீ கிரமீன் பினான்ஸ் லிமிடெட் (முன்னர் பிறைம் கிரமீன் மைக்கிறோ பினான்ஸ் லிமிடெட்)
19. ஐடியல் பினான்ஸ் லிமிடெட்
20. கன்றிச் பினான்ஸ் லிமிடெட்
21. எல்பீ பினான்ஸ் பிஎல்சி
22. எல்ஓஎல்சி பினான்ஸ் பிஎல்சி (முன்னர் லங்கா ஒறெக்ஸ் பினான்ஸ் பிஎல்சி)
23. மெல்ஸ்ரா றீகல் பினான்ஸ் லிமிடெட்
24. மர்க்கன்டைல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
25. மேர்ச்சன்ட் பாங்க் ஒவ் சிறிலங்கா அன்ட் பினான்ஸ் பிஎல்சி
26. மல்ரி பினான்ஸ் பிஎல்சி
27. நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி
28. ஒறியன்ட் பினான்ஸ் பிஎல்சி
29. பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
30. பீப்பிள்ஸ் மேர்ச்சன்ட் பினான்ஸ் பிஎல்சி
31. றிச்சேர்ட் பீரிஸ் பினான்ஸ் லிமிடெட்
32. சர்வோதய டெவலப்மன்ட் பினான்ஸ் லிமிடெட் (முன்னர், தேஷொடெய டெவலப்மன்ட் பினான்ஸ் கம்பனி லிமிடெட்)
33. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி
34. செரன்டிப் பினான்ஸ் லிமிடெட் (முன்னர், இந்திரா பினான்ஸ் லிமிடெட்)
35. சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி
36. சிங்கபுத்ர பினான்ஸ் பிஎல்சி
37. சியப்பதா பினான்ஸ் பிஎல்சி
38. சொவ்ற்லொஜிக் பினான்ஸ் பிஎல்சி
39. சம்மிற் பினான்ஸ் பிஎல்சி (முன்னர் ஜோர்ச் ஸ்டுவோர்ட் பினான்ஸ் பிஎல்சி)
40. ஸ்வர்ணமகால் பினான்ஷியல் சேர்விசஸ் பிஎல்சி
41. த பினான்ஸ் கம்பனி பிஎல்சி
42. த ஸ்டான்டட் கிரடிற் பினான்ஸ் லிமிடெட்
43. ரிகேஎஸ் பினான்ஸ் லிமிடெட்
44. ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பிஎல்சி
45. யு பீ பினான்ஸ் கம்பனி லிமிடெட்
46. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி

* இலங்கை மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட முகாமைத்துவ முகவரினால் முகாமைத்துவம் செய்யப்பட்டதுடன் மீள்கட்டமைப்புக்கு உள்ளாக்கப்படுகிறது. அதேவேளை, வைப்புக்களைத் திரட்டுதல் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

**பதிவு செய்யப்பட்ட நிதிக் குத்தகைக்குவிடும் நிறுவனங்கள்**

**(அ) உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்**

1. அமானா வங்கி பிஎல்சி
2. இலங்கை வங்கி
3. கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
4. டிஎவ்சிசி பாங்க் பிஎல்சி
5. அட்டன் நஷனல் பாங்க் பிஎல்சி
6. எம்சிபி பாங்க் லிமிடெட்
7. நஷனல் டெவலப்மன்ட் பாங்க் பிஎல்சி
8. நேஷன்ஸ் ட்ரஸ்ட் பாங்க் பிஎல்சி
9. பான் ஏசியா பாங்கிங் கோப்பரேசன் பிஎல்சி
10. மக்கள் வங்கி
11. சம்பத் பாங்க் பிஎல்சி
12. செலான் பாங்க் பிஎல்சி
13. யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி

**(ஆ) உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்**

1 இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
2. லங்காபுத்ர டெவலப்மன்ட் பாங்க் லிமிடெட்
3. பிரதேசிய சங்வர்தன பாங்க்
4. சணச டெவலப்மன்ட் பாங்க் பிஎல்சி
5. சிறிலங்கா சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்

**(இ) சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள்**

1. அசட்லைன் லீசிங் கம்பனி லிமிடெட்
2. கோபரேடிவ் லீசிங் கம்பனி லிமிடெட்
3. இசுறு லீசிங் கம்பனி லிமிடெட்
4. எல்ஓஎல்சி மைக்ரோ கிரடிட் லிமிடெட்
5. நியூவெஸ்ட் கப்பிட்டல் லிமிடெட்
6. எஸ்எம்பீ லீசிங் பிஎல்சி
7. யுனிசன்ஸ் கப்பிட்டல் லீசிங் லிமிடெட் (முன்னர், லாப் கப்பிட்டல் லிமிடெட்)

**(ஈ) சர்வோதய டெவலப்மன்ட் பினான்ஸ் லிமிடெட் தவிர்ந்த மேலே பட்டியலிடப்பட்டுள்ள உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்**

லிமிடெட் என்பனவற்றின் வைப்பாளர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட வழக்கின் அடிப்படையில் 2015.03.10ஆம் திகதியன்று உயர் நீதிமன்றம் த பினான்ஸ் அன்ட் ஹரண்டி புறொப்பர்ட்டி டெவலப்பர்ஸ் பிறைவேற் லிமிடெட் மற்றும் எவ் அன்ட் ஜி றியல் எஸ்டேட் கம்பனி லிமிட்டெ என்பனவற்றின் பணிப்பாளர் சபைக்கு இரண்டு கம்பனிகளினதும் வைப்பாளர்களினது சுதந்திரமான சங்கங்களிலிருந்து தலா 2 உறுப்பினர்களாக 4 உறுப்பினர்களை நியமிக்க உயர்நீதிமன்றம் ஒப்புதலளித்தது. மேலும், நீதிமன்றம் புதிய பணிப்பாளர் சபை மத்திய வங்கியினால் 2013.10.23 அன்று சமர்ப்பிக்கப்பட்ட நடவடிக்கைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் செயற்பாட்டினைத் தொடருமாறு கட்டளையிட்டது. இதன்படி, சபையானது மீள்கொடுப்பனவிற்கான ஒழுங்குகளைச் செய்வதில் தற்பொழுது ஈடுபட்டு வருகின்றது.

(iii) மேலும், இவ்வாண்டுப் பகுதியில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் 16 வழக்கு விசாரணைகள் தொடர்பிலான பணிகளை மேற்கொண்டிருந்ததுடன் 2 வழக்குகள் முடித்து வைக்கப்பட்டன.

## 31. பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களம்

வங்கியின் மனித மூலதன அபிவிருத்திகளில் உருவாகிவரும் தேவைகளை பூர்த்தி செய்தல் மற்றும் உலகலாவிய ரீதியில் நிதியியல் துறையின் நவீன தொழில்நுட்ப மேம்பாடுகளுக்கு ஏற்ப இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்களுக்கு வலுவூட்டுதல் மூலம் வங்கியின் பயிற்சி தொழிற்பாடுகளை வலுப்படுத்தும் நோக்குடன் பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களம் 2015 யூலையில் நாணயச் சபையினால் நிறுவப்பட்டது. வங்கியின் பயிற்சி இடைவெளியினை நிரப்புவதற்காக பயிற்சி தேவைப்பாடுகளை அடையாளம் காணுதலும் உபாயங்களை உருவாக்குதலும், வருடாந்த பயிற்சித்திட்டத்தினை தயாரித்தலும் நடைமுறைக்கிடலும், அறிவுத்திறன் இயலளவை கட்டியெழுப்புவதற்கு வசதிப்படுத்தல், வங்கி ஊழியர்களுக்காக வெளிநாட்டு/ உள்நாட்டு குறுகியகால பயிற்சிக்கான சந்தர்ப்பங்களை வழங்குதல் மற்றும் அலுவலர்களுக்கிடையே அறிவினை பகிர்ந்துகொள்வதற்கு வசதிப்படுத்தல் போன்றவை பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களத்தின் பிரதான தொழிற்பாடுகளாகும். ஊழியர்களின் ஒட்டுமொத்த தொழில் அபிவிருத்தியை உறுதிப்படுத்தும் நோக்குடன் பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களம் வங்கியின் பயிற்சி தொழிற்பாடுகளுக்கான வழிகாட்டியாக விளங்குகிறது.

### குறுங்காலப் பயிற்சி

வங்கி அலுவலர்களின் தகைமை இடைவெளிகளை குறைக்கும் நோக்குடன் பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களம் 1,508 பொருத்தமான குறுங்கால வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு பயிற்சி வாய்ப்புக்களை அவர்களுக்கு வழங்கியது. இத்தகைய பயிற்சி இடைவெளிகள் 2014இன் இறுதியில் மேற்கொள்ளப்பட்ட வருடாந்த தகைமைகள் திட்டமிடல் செயன்முறையினூடாக அடையாளம் காணப்பட்டன.

### குறுங்கால வெளிநாட்டுப் பயிற்சி

2015இல், பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களத்தினால் 309 குறுங்கால வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்கள், புகழ்பெற்ற வெளிநாட்டுப் பயிற்சி நிறுவனங்கள், இங்கிலாந்து வங்கி, டியூச்புண்டஸ் வங்கி, இந்தியறிசேர்வ் வங்கி, மலேசிய நெகரா வங்கி மற்றும் ஐக்கியஅமெரிக்காவின் பெடரல் றிசேர்வ் வங்கி போன்ற முக்கிய மத்திய வங்கிகள் போன்றவற்றினால் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், செயலமர்வுகள், ஆய்வரங்குகள் மற்றும் கற்றல் சுற்றுலா போன்ற முறைகளில் வழங்கப்பட்டன. மத்திய வங்கி அலுவலர்கள் பன்னாட்டு நாணய நிதியம் (ப.நா.நி), உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, தென்கிழக்காசிய மத்திய வங்கிகள், பன்னாட்டு தீர்ப்பனவிற்கான வங்கி போன்ற பன்னாட்டு நிதியிடல் முகவர்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் போன்றவற்றினால் வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புக்களிலும் பங்குபற்றியிருந்தனர். 2015இல் இலங்கை மத்திய வங்கியின் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட குறுங்கால வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புக்களின் விபரம் கீழே அட்டவணை II-21இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை II-21 குறுங்கால வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்கள் - 2015**

| துறை | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | வாய்ப்புக்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| நாணயக் கொள்கை, பொருளாதாரம் மற்றும் புள்ளிவிபரம் | 64 | 77 |
| நிதியியல் முறைமை உறுதிப்பாடு | 48 | 65 |
| இடர்நேர்வு முகாமைத்துவம், சட்டம் மற்றும் இணங்குவிப்பு | 31 | 42 |
| சொத்துப்பட்டியல் முகாமைத்தும் | 22 | 25 |
| மத்திய வங்கித் தொழில் | 6 | 16 |
| தகவல் தொழில்நுட்பம் மற்றும் கொடுப்பனவு முறைமை | 9 | 22 |
| நாணய முகாமைத்துவம் | 3 | 4 |
| மனிதவள முகாமைத்துவம் | 4 | 6 |
| நுண்பாக நிதி | 5 | 7 |
| ஏனையவை | 23 | 45 |
| **மொத்தம்** | **215** | **309** |

இலங்கை மத்திய வங்கி, பயிற்சித் திட்டங்களினூடாக பெறப்பட்ட அறிவினையும் வெளிப்படுத்தல்களையும் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட பல்வேறுவகையான ஒப்படைகளின் மூலம் தொடர்பான அலுவலர்களினால் பெறப்பட்ட குறுங்கால வெளிநாட்டுப் பயிற்சியின் செயல்திறனை தொடர்ந்து மதிப்பிட்டது. இந்நடவடிக்கைகள் முகாமைத்துவத்தினால் நியமிக்கப்பட்ட பயிற்சிக்கான துணைக் குழுவொன்றினால் கண்கானிக்கப்பட்டது. இதன்படி, 2015ஆம் ஆண்டு காலப்பகுதியில், குறுங்கால வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றிய அலுவலர்களினால் 159 அத்தகைய ஒப்படைகள் நிறைவு செய்யப்பட்டன. 2015ஆம் ஆண்டு காலப்பகுதியில் அலுவலர்களினால் நிறைவு செய்யப்பட்ட ஒப்படைகளின் விபரம் கீழேயுள்ள அட்டவணை II-22 இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை II-22** 2015இல் குறுங்கால வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்றவர்களினால் நிறைவு செய்யப்பட்ட ஒப்படைகள்

| வகை | ஒப்படைகளின் எண்ணிக்கை |
|---|---|
| நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைக்கான வழிகாட்டல்கள் | 12 |
| கட்டுரைகள் மற்றும் காட்சிப்படுத்தலுடன் கூடிய விரிவுரைகள் ஊடாக அறிவனைப் பகிர்ந்துகொள்ளுதல் மற்றும் பொதுமக்கள் விழிப்புணர்வு | 97 |
| முறைமைகள் மற்றும் செய்முறைகளை மேம்படுத்துவதற்கான முன்மொழிவுகள் | 50 |
| மொத்தம் | **159** |

### குறுங்கால உள்நாட்டுப் பயிற்சி

2015இல் பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களம், முக்கியமாக, சட்டம், சென்மதிநிலுவை, பொருளாதாரம் மற்றும் வர்த்தகம், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமை, மனித மூலதன முகாமைத்துவம், கணக்காய்வு, வங்கி மற்றும் நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை, நிதியியல் சந்தைகள் மற்றும் நுண்பாக நிதி போன்ற விடையங்களில் பிரதானமாக, வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம் மற்றும் ஏனைய புகழ்மிக்க உள்நாட்டு நிறுவனங்கள் போன்றவற்றில் வங்கி ஊழியர்களுக்கு 1,199 குறுங்கால உள்நாட்டு பயிற்சி வாய்ப்புக்களை வழங்கியது. வங்கித்தொழில் கற்கைகள் ஆய்வுநிலையம் மற்றும் ஏனைய நிறுவனங்களால் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றிய அலுவலர்களின் எண்ணிக்கை முறையே 669 ஆகவும் 530 ஆகவும் காணப்பட்டது.

### செயலமர்வுகள் மற்றும் அறிவினைப் பகிர்ந்து கொள்ளுதல்

வங்கி ஊழியர்களின் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் நோக்குடன், 2015இல் பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களம் வங்கித்தொழில் கற்கைகள் நிலையத்தின் ஒத்துழைப்புடன் தலைமைத்துவம், செயலூட்டம், தொடர்பூட்டல்திறன் மற்றும் அறிக்கை எழுதுதல் போன்ற விடயங்களை உள்ளடக்குகின்ற 4 செயலமர்வுகளை ஒழுங்கமைத்தது. மேலும், ஆண்டுக் காலப்பகுதியில் இலங்கை மத்திய வங்கி அலுவலர்களின் அறிவை அதிகரிப்பதனை வசதிப்படுத்துவதற்காக பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட மாதாந்தப் பொருளாதார அரங்கின் கீழ் பொருளாதாரம், வங்கித்தொழில் மற்றும் நிதியியல் போன்ற காலத்திற்கேற்ற தலைப்புக்களில் தொழில்துறை நிபுணர்களினால் 12 காட்சிப்படுத்தல்களுடன் கூடிய விரிவுரைகள் வழங்கப்பட்டன.

### பட்டப்பின் கற்கைகள்

2015 காலப்பகுதியில், பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களம், உயர்வகுப்பு அலுவலர்களின் பட்டப்பின் கற்கைகளுக்கு அனுசரணை வழங்குதலுக்குத் தொடர்ந்தும் வசதியளித்தது. 2015 ஆண்டுக் காலப்பகுதியில், பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களம் ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா அவுத்திரேலியா மற்றும் யப்பான் போன்ற நாடுகளிலுள்ள புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களில் 2 அலுவலர்கள் முனைவர் நிகழ்ச்சித்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கும் 19 அலுவலர்கள் முதுமானிப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களையும் தொடர்வதற்கு அனுசரணை வழங்கியது. 2015இல், அலுவலர் ஒருவர் உள்நாட்டு பல்கலைக்கழகத்தில் முனைவர் நிகழ்ச்சித்திட்டத்தினை ஆரம்பித்தார். அதேவேளை, ஆண்டுக் காலப்பகுதியில் முனைவர் நிகழ்ச்சித்திட்டத்தினை நிறைவுசெய்த அலுவலர் ஒருவரும் முதுமானிப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தினை நிறைவுசெய்த 21 அலுவலர்களும் இலங்கை மத்திய வங்கிப் பணிக்குத் திரும்பினர். இலங்கை மத்திய வங்கியின் புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2011 இலிருந்து 2015 வரையான காலப்பகுதியில் பட்டப்பின்படிப்பைத் தொடங்கிய மற்றும் நிறைவுசெய்த அலுவலர்களின் எண்ணிக்கையை கீழேயுள்ள அட்டவணை II-23 காட்டுகிறது.

**அட்டவணை II-23** இலங்கை மத்திய வங்கியின் புலமைப்பரிசில் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் (2011-2015) பட்டப்பின் படிப்பைத் தொடங்கிய மற்றும் நிறைவு செய்த அலுவலர்களின் எண்ணிக்கை

| கற்கைள் | 2011 | | 2012 | | 2013 | | 2014 | | 2015 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தொடங்கியோர் | நிறைவு செய்தோர் | தொடங்கியோர் | நிறைவு செய்தோர் | தொடங்கியோர் | நிறைவு செய்தோர் | தொடங்கியோர் | நிறைவு செய்தோர் | தொடங்கியோர் | நிறைவு செய்தோர் |
| முனைவர் பட்டம் | 2 | 2 | 4 | 2 | 6 | 0 | 5 | 2 | 3 | 1 |
| முதுமானிப் பட்டம் | 17 | 10 | 18 | 17 | 11 | 19 | 24 | 11 | 19 | 21 |